# கலைமலர்

## 2007 - 2008



## ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

## Teachers' College, Kopay.

செ. திருநாவுக்கரசு.
அல்லைப்பிட்டி.

# கலைமலர்

## 2007 - 2008

## ஆசிரியர் கலாசாலை,
## கோப்பாய்.

## மலர் 39

# கலைமலர்

## 2007 - 2008

## ஆசிரியர் கலாசாலை,
## கோப்பாய்.

## மலர் 39

நூலின் பெயர் :- கலைமலர்

ஆண்டு :- 2007 – 2008

காப்பாளர் :- கலாநிதி, பண்டிதர் செல்லையா திருநாவுக்கரசு

இதழாசிரியர் :- திரு. கணேசராசா ரவீந்திரராசா

துணை இதழாசிரியர் :- திருமதி நிரஞ்சினி பிரேமச்சந்திரன்

வெளியீடு :- முத்தமிழ் மன்றம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

அச்சுப்பதிப்பு :- பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம்,

676, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

# 'கலைமலரி'ன் சமர்ப்பணம்





## சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்காதுரந்தரி, கலாநிதி, பண்டிதை
## தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
## (07.01.1925 - 15.06.2008)

ஆற்றுவாரின்றி அலையுமீழத் தமிழ்ச்சிறார்க்கு
ஊற்றுவாயாயிருந்து உயிர்கொடுத்த உத்தமியே!
சாற்றுஞ் சமய சமூகப் பணிபுரிந்த அன்னையுன்போல்
வேற்றொருவ ருளரோ இவ்வி ரிநீ ருலகத்தேயம்மா!

தெய்வப்பணியும் திக்கற்றோர்க் குதவுபணியும் மேலாம்
உய்வதாம் நற்கருமங்கள் உதவுபணியும் உவந்து
ஐயங்கள் நீக்கி அறமே பெரிதென அன்பாலருளி
வையகம் போற்ற வாழ்ந்து வானுகஞ் சென்றீரோ அம்மா!

# கலாசாலைக் கீதம்

இராகம் – மோகனம் தாளம் – ஆதி

### பல்லவி

யாழ் நகர் மீதமர் கோப்பாய் அரசினர்
ஆசிரிய கலாசாலை வாழ்க!

### அனுபல்லவி

அறிவொளி பெருக்கியே வாழ்க!
ஆசிரிய மாணவர் வாழ்க!

### சரணங்கள்

அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் பான்மையை அறிவோம்!
அருந்தமிழ் அகநூல் அறிவுறு கணிதம்
ஆவன நிறைந்திடப் பயில்வோம்!
(யாழ்)

ஒழுக்கமும் நேர்மையும் உடலுறு பலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோம்!
ஓரிரண்டாண்டாய் ஓர்ந்திடும் கலைகள்
உலகினில் ஓங்கிடப் பயில்வோம்!
(யாழ்)

தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியில் காப்போம் எம்மானம்!
எண்டிசை புகழவெங் கலாசாலை வாழ
இயன்றநற் பணிகளைப் புரிவோம்!
(யாழ்)

அரசினர் ஆசிரியர் ஆற்று நல்லுதவி
அகிலத்தில் என்றென்றும் மறவோம்!
அதிபரும் ஏனைய ஆசிரியர் குழாமும்
ஆண்டவனால் என்றும் வாழ்க!
(யாழ்)



ஆக்கியவர்
பண்டிதர் த.இராசையா.

# கலைமலர்க் குழுவினர்

## பெருங்காப்பாளர்

*திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (கலாசாலை முதல்வர்)*

## காப்பாளர்

*திரு. செ.திருநாவுக்கரசு (முதுநிலை விரிவுரையாளர்)*

## ஆசிரிய மாணவர்குழு

| | |
|---|---|
| திரு. த.அன்பழகன் | தலைவர் |
| திரு. யே.தர்மதுரை | துணைத்தலைவர் |
| திரு. மு.நடராசா | செயலாளர் |
| திருமதி அ.நாளினி | பொருளாளர் |
| திரு. க.ரவீந்திரராசா | இதழாசிரியர் |
| திருமதி பி.நிரஞ்சினி | துணை இதழாசிரியர் |
| திரு. ச.ஈஸ்வரன் | இணைப்பாளர் |

## வகுப்புப் பிரதிநிதிகள்

செல்வி ந.ஜெயரூபி

திரு. நி.ஜெகானந்த சர்மா

செல்வி க.சுவர்ணா

செல்வி சி.சுகாசினி

செல்வி து.பதுமினி


செல்வி இ.நர்மதா



# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!



**மனோன்மணீயம்**
பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே!



**மகாகவி சுப்பிரமணியபாரதியார்**

குருபாதம் துணை



## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கிய ஆசியுரை

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு" என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு அமைய நிலவளம், தொழில்வளம், கல்விவளம் நிறைந்து விளங்க வேண்டியதே ஒரு நாட்டின் சிறப்பாகும். எங்கள் மண்ணில் கல்வி வளத்தைக் காக்கும் முக்கிய நிறுவனங்களில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் முதன்மை பெறுவது அனைவரும் அறிந்ததே. நல்லாசிரியப் பாரம்பரியத்தால் எழுச்சி பெற்றது யாழ்ப்பாணம். அப்பாரம்பரியத்தின் அடிநாதமாக விளங்குபவை ஆசிரிய கலாசாலைகள். கோப்பாய் ஆசிரிய கலாசாலை காலத்துக்குக் காலம் அறிவுசார் ஆசிரியப் பெருமக்களை உருவாக்கும் உன்னத நிறுவனமாகப் புகழ்பெற்று விளங்குகிறது. இப்புனித நிறுவனத்தினரால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் "கலைமலர்" என்ற அறிவுசார் மலர் இவ்வாண்டும் வெளியீடப்பெறுவது அறிந்து மிகுந்த ஆனந்தமடைகிறோம். கல்விசார் நூல்கள் ஆவணங்களாகச் சமூகத்துக்குப் பயன்படுவது வழக்கம். அவ்வகையில் கலாசாலையின் வெளியீடான இம்மலர் கல்வியுலகால் நன்கு வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை. ஆசிரிய கலாசாலை முதல்வர் உயர்திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களின் வழிகாட்டலில் நற்கைங்கரியங்கள் நாளும் நிறைவேறி வருவது சிறப்புக்குரியது.

'கலைமலர்' ~ மலர், நிறைந்த அறிவுக் களஞ்சியமாகப் பலரும் பயன்பெறப் பிரகாசிக்க வேண்டுமென இறையருளைப் பிரார்த்தித்து, நல்லாசிகளைச் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

**சுவாமிகள்,**
**இரண்டாவது குருமகா சன்னிதானம்,**
**நல்லை ஆதீனம், நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

## யாழ்ப்பாணம் கத்தோலிக்க ஆயர் அவர்களின் ஆசிச்செய்தி



"வாழக் கல்மின்" என்னும் மகுட வார்த்தைகளை அடிநாதமாகக் கொண்டு செழிப்புறச் செயற்படும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகம் தனது 85ஆவது அண்டு நிறைவில் 39ஆவது "கலைமலரை" வெளியிட்டு மகிழ்வுறுகின்ற இந்த நன்னாளிலே, உங்களுடன் இணைந்து நானும் எனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுகின்றேன்.

ஆசிரிய கலாசாலைச் சமூகம், தனது எண்ணங்களை, கருத்துக்குவியல்களை, சிந்தனைச் சிதறல்களை, ஆக்கங்களாக வெளிக்கொணரும் ஓர் ஊடகம்தான் இந்தக் 'கலைமலர்'. இறைவன் உங்களுக்கு அளித்திருக்கின்ற ஆற்றல்கள், திறமைகள், வளங்கள், வாய்ப்புக்கள், சூழ்நிலைகள் எல்லாவற்றையும் மாணவச் சமூகத்துடன் பகிர்ந்து, அவர்களையும் இறை உறவிலே வலுப்படுத்த "வாழக் கல்மின்" என்று கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகம் உங்களை வரவேற்று வழியனுப்பி வைக்கிறது.

இறைவனின் இரக்கத்திடம் இறந்தகாலத்தை ஒப்படையுங்கள்; இணையற்ற பேணுதலிடம் எதிர்காலத்தை ஒப்படையுங்கள்; இதயம் நிரம்பிய அன்பு வழிபாடாக நிகழ்காலத்தை ஆக்கிடு என்று இக்கலைமலருக்கு எனது இதயபூர்வமான ஆசியை வழங்குகின்றேன்.

**பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம்**
**யாழ் ஆயர்.**

# பிரதம ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

கல்வி மனிதனை மாண்புறுத்தும். அதுவே கேடில் விழுச்செல்வம். எனவேதான் கல்விச்செலவீடு உச்சலாபம் தரும் ஒரு தேசிய முதலீடாகக் கருதப்பட்டுப் பல நாடுகளும் கல்வித்துறையின் முன்னேற்றத்துக்காகக் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றன.

உலகில் சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை உலகக்கல்வி விஞ்ஞானப் பண்பாட்டு அமைப்பின் மூலம் (UNESCO) ஆசிரிய கல்வி விருத்தியில் அதிக அக்கறை கொண்டு சகல நாடுகளிலும் கல்வி மேம்பாட்டுக்காக உழைப்பதும் குறிப்பிடக்கூடியதாகும்.

"ஆசிரியர் எவ்வழி சமூகம் அவ்வழி." ஆசிரிய கல்வியை விருத்திசெய்து நாட்டில் நல்லாசிரியர்களை உருவாக்குவதில் அதிக அக்கறை செலுத்துவது எமது அனைவரினதும் பொறுப்பாகும்.

இன்று கல்வி பெறுவது ஒவ்வொருவரதும் அடிப்படை உரிமையாகும். எனவே, எல்லோரும் கல்விபெறும் உரிமையுடையவர்கள் என்ற கோட்பாட்டினைச் செயற்படுத்த ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்தல் அவசியமாகும். குறிப்பாக, இந்நாட்டில் தமிழ்மொழிமூல ஆசிரியர்கள் தம்மிடமுள்ள அறிவு, ஆற்றல், அனுபவம், கற்பித்தற் பயிற்சிகள் என்பவற்றை முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்படுத்துவது அவசியமாகும்.

ஆசிரிய கலாசாலைகள் ஆசிரிய வாண்மை விருத்திக் களமாகக் கருதப்படுகின்றன. வளமான ஆசிரிய கல்வி வழங்கப்பட்டு ஆசிரியர்கள் மிகச் சிறப்பாக கல்விப்பணியில் ஈடுபடும்பொழுது கல்வியின் சமூக இலக்குச் சிறப்பாக நிறைவேறும் வாய்ப்பு அதிகமாகிறது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை 1923ஆம் ஆண்டு நிறுவப்பட்டு இன்றுவரை 85 வருடகாலக் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டு செயற்படுவது அதன் சிறப்பாகும். கலாசாலைச் செயற்பாடுகளின் பதிவாகக் கருதத்தக்க "கலைமலர்" சஞ்சிகை ஆசிரிய வாண்மைக்கு ஆக்கமும் ஊக்கமும் தொடர்ந்து வழங்கும் என நம்புகிறேன்.

மேலும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன், இச்சஞ்சிகைக்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அதிபர், விரிவுரையாளர்கள் மற்றும் சகல ஊழியர்களுக்கும், குறிப்பாகப் பயிற்சி ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கே.முஹம்மட் தம்பி
பிரதம ஆணையாளர்,
ஆசிரியர் கல்வி,
கல்வி அமைச்சு.

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி



"வாழக் கல்மின்" என்ற மகுட வாசகத்தின் கீழ் கல்வி எனும் விளக்கில் பிரகாசிக்கும் சுடர்ஒளி நாற்றிசையும் பரவிடச் செய்யும் பணியினைச் சிரமேற்கொண்டு நடாத்தும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆண்டுதோறும் வெளியிடுகின்ற "கலைமலர்" சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதனையிட்டு உள்ளம் உவகையடைகின்றேன்.

வாண்மை விருத்திக்குரிய ஆசிரியத் தொழில் இறைச்சேவைக்கு நிகரானது. உடல், உள, சமூக, ஆன்மீக ஆரோக்கியத்திற்கு அடித்தளமிடுவதில் இக்கல்விச் சமூகத்தின் பணி அளவிடற்கரியது. கடின உழைப்பு, அர்ப்பணிப்பு என்பவற்றினூடாகவே இப்பணியை ஆற்ற முடியும். இவற்றினூடாகவே ஆசிரிய கலாசாலைகள் அறிவு, ஆற்றல், அர்ப்பணிப்பு ஆகியன ஒருங்குசேர்ந்த ஆசிரியர்களாக, ஆசிரிய மாணவர்களை உருவாக்கித் தருகின்றன.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை"

எனும் பொய்யாமொழிப் புலவரின் வாக்கிற்கிணங்க கல்விப்பெரும் செல்வத்தை அள்ளிவழங்கும் பணியை ஆசிரியர்கள் கிடைக்கப் பெற்றிருத்தல் அவர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் எனலாம். ஆண்டவன் அவர்களுக்களித்த இவ்வரிய பொக்கிஷத்தைப் பேணி அறிவுத்திறனை வளர்க்க வேண்டியது அவர்தம் கடமையாகும். இவ்வகையில் ஆசிரிய கலாசாலைகள் தம்பணியை ஆலமர விழுதுகள் போல நிழல்பரப்பும் பெருவிருட்சமாக வேரூன்றி நிலைத்திருப்பதற்குச் சிறந்த கல்விப்பணியை மேற்கொள்ளல் அவசியம்.

ஆத்மார்த்தமான இக்கல்விப் பணியினை ஆத்ம திருப்தியுடன் மேற்கொள்வதன் மூலமே நாளைய நற்பிரஜைகளை உருவாக்க முடியும். இதனைச் சகலரும் உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்பதே எனது வேணவா. இக்'கலைமலர்' சஞ்சிகை மலர்ந்து என்றென்றும் மணம்பரப்ப வேண்டும் என வாழ்த்துகின்றேன். வாழ்க.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

க. கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துரை.



கோப்பாய் ஆசிரிய கலாசாலை வருடந்தோறும் வெளியிடும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஆசிரிய வாண்மை விருத்திக்குப் பலவகையிலும் நேர்நிலையான ஒரு பயிற்சியை வழங்கும் பெருமையைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை தன்னகத்தே கொண்டிருக்கிறது என்றால் மிகையல்ல. ஆசிரியத்துவம் மிளிர்வதில் பெரும் பங்காற்றும் இக்கலாசாலை, நாடெங்கிலும் கற்பிக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானோருக்கு ஆசிரியப்பயிற்சி வழங்கியுள்ளது. இக்கலாசாலையில் பயிற்சி பெற்றவர்கள் பாடசாலைகளிலும் ஆசிரியரின் பண்பு எல்லைக்குள் நின்று கடமையாற்றுவதை அவதானிக்கலாம். அத்துடன் இவ்வாசிரியர்களின் வெளியீடுகளும் உச்சமாக உள்ளதைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. பல்துறைப் பயிற்சிகளையும் வழங்கும் இக்கலாசாலை அதிபரின் போலியற்ற தன்மையும், நேர்மையும் சக விரிவுரையாளர்கள், பயிற்சிபெறும் ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் எவர்மீதும் காழ்ப்பு அற்ற சினேகபூர்வமான நேர்நிலையான அணுகுமுறையுமே இக்கலாசாலையின் வெற்றி என்பதில் ஐயமில்லை. கலாசாலையில் பல்வேறு நிகழ்வுகளும் அவ்வப்பகுதியினருக்குப் பரவலாக்கப்பட்டு சிறப்பாக நடத்தப்படுகின்றது. பரவலாக்கலினால் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையில் கலாசாலை முகாமை செயற்படுகின்றது. ஆசிரிய மாணவர்களின் நலனே தமது நலன் எனச் செயற்படும் அதிபரும், முகாமைத்துவக் குழுவினரும், விரிவுரையாளர்களும் பயிற்சிபெறும் ஆசிரியர்களுக்கு ஒரு சிறந்த முகாமைத்துவப் பயிற்சியை வழங்குகின்றனர். ஆசிரிய மாணவர்கள் மகிழ்வுடன் பயிற்சிபெறும் இந்நிலையம், ஆசிரியர்களுக்கு வகைகூறல், எல்லோருடைய பங்களிப்பு, சமத்துவம், ஒளிவுமறைவின்றி வெளியே யாரும் அவதானிக்கக்கூடிய இயல்பு போன்ற சிறந்த ஆளுகைப் பண்புகளை வழங்கிவருகின்றது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலிருந்து பயிற்சிபெற்று வெளியேறும் ஆசிரியர்கள் பொறுமை, சகிப்புத்தன்மை என்பவற்றை அணிகலன்களாகக் கொண்டு தாம் கற்பிக்கும் பாடசாலை முகாமையுடன் இசைந்து மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்குப் பங்களிக்கின்றனர்.

நற்பிரஜைகளை உருவாக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் இக்கலாசாலை இனிவருங் காலங்களிலும் கல்விக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று பிரார்த்திப்பதுடன், அதிபர், பிரதிஅதிபர், விரிவுரையாளர்கள் யாவரும் தொடர்ந்து தம் பணிகளை அர்ப்பணித்து இன்னும் மேலோங்க வேண்டும் என்று வாழ்த்துவதுடன், இம்மலரை உருவாக்கும் ஆசிரிய மாணவர்கள், வழிகாட்டும் விரிவுரையாளர்கள், நெறிப்படுத்தும் அதிபர் ஆகியோருக்கு இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், கலாசாலை நீடுகாலம் தொண்டாற்ற என் பிரார்த்தனைகள்.

*'எவ்வெவர் தீமைகள் நோக்கார் கடமையே கண்ணாயினர்.'*

**திரு. வே.தி.செல்வரத்தினம்**
**மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

# யாழ்ப்பாணம் வலயக் கல்விப்பணிப்பாளின் வாழ்த்துரை.



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த மலராக வெளிவரும் "கலைமலர்" சஞ்சிகைக்கு ஆசி கூறுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஆசிரியர்கள், சமூகத்தின் கண் போன்றவர்கள்; இறைவனின் பிரதிநிதிகள். ஒரு சமூகத்தை நேராக்கி, சீராக்கிக் கட்டியெழுப்புவது அவர்களுடைய பொறுப்பாகும். அவ்வாறான ஆசிரியர்களை நல்ல முறையில் பயிற்றுவித்து சமுதாயத்திற்கு அனுப்பிவைக்கின்ற பெரும் பணியை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆற்றி வருகின்றது.

ஆசிரிய மாணவர்களால் உருவாக்கப்பட்ட இந்தச் சஞ்சிகை தகவல் தொழில்நுட்பம், விளையாட்டு, புதிய கல்விச் சீர்திருத்தம் போன்றவற்றோடு, பல்வேறு கலை அம்சங்களையும் கொண்டு வெளிவருவது சிறப்பானதாகும்.

வளர்ந்துவரும் விஞ்ஞானம் ~ தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியன கல்வியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய மாணவர் சமூகம் பல்வேறு விடயங்களை அறிந்து கொண்டே பாடசாலை செல்கின்றது. அவர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆசிரிய சமூகம் அறிவு, ஆற்றல், தேடல் போன்றவற்றில் தேர்ச்சி பெறவேண்டியுள்ளது. இந்த வகையிலே காலத்தின் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் இச்சஞ்சிகை அமைந்திருப்பது பாராட்டுதற்குரியது.

இந்தக் "கலைமலர்" காலமெல்லாம் சுகந்தமணம் பரப்பி, மேலும்மேலும் கலாசாலையை ஒளிரச்செய்ய வேண்டுமென்று வாழ்த்துக்கூறி, நல்லாசிகளையும் வழங்குகின்றேன்.

**திருமதி அ.வேதநாயகம்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

# எங்கள் கலாசாலை முதல்வர்



திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

B.A.,P.G.D.E, M.Phill (Edu). S.L.E.A.S - III

# கலாசாலை முதல்வரின் வாழ்த்துரை



ஆண்டாண்டு தோறும் அழகு தமிழில் ஆவணப்படுத்தப்படும் எம் கலாசாலையின் ஆண்டு மலரே "கலைமலர்". 2008ஆம் ஆண்டிற்கான "கலைமலர்" சிறப்புற மலர மனமார வாழ்த்துகின்றேன். வரலாற்றுச் சிறப்புமிக்க நம் கலாசாலையின் நாடளாவிய கல்விப்பணியை நீளநினைத்துப் போற்ற உதவும் ஆவணம் கலைமலர். 'அறிவைக் கையளித்தல்' மனிதரின் நீண்டகாலத் தேவையாகவும், தேடலாகவும் இருந்து வருகின்றது. சடங்குகள், மரபுகள், கலைகள், சமய நிறுவனங்கள் என்பவற்றினூடாக அறிவுக்கையளிப்பு நெடுங்காலமாக நடைபெற்று வருகின்றது. கல்விச்சாலைகளின் வளர்ச்சியால் அறிவுக் கையளிப்புப் பல்கிப் பெருகியது. இந்தவகையில் அறிவுக்கையளிப்பில் ஆசிரிய கலாசாலைகளின் பங்களிப்பு மகத்தானது. ஆரம்பக்கற்கைநெறி முதல் பல்துறைக்கற்கை நெறிகள் மூலம் ஆசிரிய மாணவர்கள் பூரண பயிற்சி பெறுகின்றனர். சமூகச் சவால்களுக்கு முகம் கொடுக்கவல்ல முழு மனிதர்களாகப் பயிற்றப்படுகின்றனர். ஏட்டுக்கல்வி மட்டுமன்றி, வாழ்க்கைக் கல்வியும் வாழ்க்கையுடன் போதிக்கவல்லோராய் வழிப்படுத்தப்படுகின்றனர். அவ்வழிப்படுத்தலின் ஒரு வெளிப்பாடே தமிழ்மணங்கமழும் 'கலைமலர்' வெளியீடும்.

"அனைவருக்கும் கல்வி" என்பது இன்று அகிலப்பண்பாக விரிவடைந்துள்ளது. கல்வியே நாட்டின் வளர்ச்சிக்கான மூதனமாகக் கொள்ளப்பட்டு, கல்விக்கான செலவை அகில உலகமும் மூலதனமாகக் கொண்டு செயற்படுகின்றது. முன்பு கல்வி வழங்குதல் "சலுகை" என்ற நிலையிலிருந்தது. இன்று கல்வி பெறுதல் அனைவருக்கும் உரிமை என்றாகிவிட்டது. இந்நிலையில் உரிமையுடன் கல்விபெற விளையும் சிறுவர்களுக்கு அவர்களின் தனித்துவங்கள் அறிந்து, வினைத்திறனுடன் கற்பித்தல் கட்டாயதேவையாகின்றது. வினைத்திறனுடன் கற்பித்தலை மேற்கொள்ள ஆசிரியருக்கு உளவியல், சமூகவியல் சார்ந்த அறிவுகளுடன், நாளும் புதியதேடல்களும் அவசியம். தமது துறைசார்ந்த புதிய தேடல்களுடன் சமூகத்தின் அன்றாட வளர்ச்சிகள் பற்றியும் தேடிக்கற்றுக் கற்பித்தல் வேண்டும். அத்தகைய தேடலுக்கான ஒரு நற்பயிற்சியாக "கலைமலர்" ஆக்கம் அமைந்துள்ளது.

நம் ஆசிரிய மாணவர்கள் நல்ல விடயங்களைத்தேடி, ஆய்வுசெய்து, தாம் கண்ட, கேட்ட அநுபவத்தையும் இணைத்துப் பயனுறு ஆக்கங்களை வழங்கியுள்ளனர். இத்தகைய ஆக்கங்களை வழங்கிய கட்டுரையாளர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். சமூகச் சவால்களை மையப்படுத்தி கவிதைகள், சிறுகதைகள் யாத்த இலக்கிய கர்த்தாக்களும் வாழத்துக்குரியவர்கள். விசுவாசத்துடனும், வினைத்திறனுடனும் இணைந்து உழைத்த நூற்குழுவினரின் பணியைப் போற்றுகிறேன். பலரதும் பங்களிப்பில் மலரும் 'கலைமலர்' பண்பாளரை உருவாக்க, நற்பணியாளரை மேம்படுத்த, படிப்போரை வளப்படுத்த உதவ வேண்டுமென இதய சுத்தியுடன் வாழ்த்தி, இறையருளை வேண்டி அமைகிறேன்.

திரு. த. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(அதிபர்)

# 'கலைமலர்'க் காப்பாளரின் வாழ்த்து



கோப்பாய் ஆசிரிய கலாசாலைக் குடும்பத்தினர் ஒருங்கிணைந்து **கலைமலர்** சஞ்சிகையின் 39வது இதழினை வெளிக்கொணர்ந்துள்ளனர். ஒரு சமூகத்தின் வழிகாட்டிகளாகச் செயற்படும் ஆசிரியர்கள், ஆசிரிய கலாசாலைகளில் இரண்டு ஆண்டுகள் பயிற்சிபெறும்போது எதையும் முன்மாதிரியாகச் செய்ய வேண்டிய கடப்பாடுடையவர்கள். கடந்த மூன்று தசாப்தங்களாகத் தொடருகின்ற உள்நாட்டுப் போரின் தாக்கங்களும், நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளும், ஆசிரிய மாணவர்களின் அறிவுத் தேடல்களுக்கும், அனுபவப் பெறுகைகளுக்கும், விழுமியத் தேட்டங்களுக்கும் இடையூறாக அமைந்துவிடாதிருப்பதில் நாம் கூடிய கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

ஆசிரியத்துவத்தின் மகத்துவம் எத்தகு இடர்நிறைந்த வேளைகளிலும் குன்றிவிடாதிருப்பதில் ஆசிரிய சமூகம் விழிப்புணர்வுடன் 'பீனிக்ஸ் பறவைகள்' போன்று செயற்பட வேண்டும். அதுவும் "கல்வியே கருந்தனம்" எனக்கருதி வாழும் யாழ்ப்பாண மரபின் அடித்தளம் சிதையவிடாத மனவுறுதி எம்மனைவரிடமும் காணப்படுதல் இன்றியமையாதது. இவற்றைக் கருத்திற் கொண்டுதான் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைப் பயிற்சிகள் ஓரளவுக்கு நிறைவாக வழங்கப்படுகின்றன. சகல துறைகளிலும் ஆசிரிய மாணவர்கள் அனுபவம் பெறுவதால், சமநிலை ஆளுமையில் வளர்ச்சி காணுகிறார்கள். தமது எதிர்காலக் கல்விச் செயற்பாடுகளைத் திறமையுடன் கையாளும் திறனைப் பெற்றுக்கொள்கிறார்கள். இத்தகைய திறனுருவாக்கத்தின் ஒரு கூறாகவே **கலைமலர்** சஞ்சிகைக்கான பன்முகப் படைப்புக்களை அவர்கள் அளித்திருப்பதும், அச்சஞ்சிகை வெளிவருவதில் பங்குகொண்டு உழைத்திருப்பதுமாகும்.

இம்முறை மிகக் கூடுதலான ஆசிரிய மாணவர்கள் தரம்வாய்ந்த தமது ஆக்கங்கள் மூலம் மலரை அணிசெய்துள்ளனர். விளம்பரங்கள் பெறக்கூடிய உகந்த சூழல் தற்கால யாழ்ப்பாணத்தில் இல்லையான போதிலும், குறைவான விளம்பரங்களையாவது பெற்றுத் தந்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மிகக்கூடுதலான நிதியுதவியினை நல்கித் தங்கள் ஆசிரிய கலாசாலை வாழ்வின் ஆவணமாகத் திகழும் **கலைமலரைப்** பொலிவுபெறச் செய்திருக்கிறார்கள். அவர்களது இம்முயற்சி வெற்றிபெற வாழ்த்துகின்றேன். எதிர்காலப் பயிற்சியாசிரியர்களுக்கும் இது ஒரு முன்மாதிரியாக அமையும் வண்ணம் **கலைமலர்** சிறப்புடனமைந்து வெளிவர எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பணிகளில் **கலைமலர்** சஞ்சிகையின் வெளியீடு காலத்தைவென்று நிற்கும் கலைப்பதிவாக மிளிரும் என நம்புகின்றேன்.

**கலாநிதி, பண்டிதர்**
**செ.திருநாவுக்கரசு**

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...



கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகம் வருடந்தோறும் வெளியிட்டுவரும் "கலைமலர்" சஞ்சிகையானது இவ்வாண்டும் தரமான பல்துறை ஆக்கங்களைத் தாங்கி 39வது இதழாக வெளிவருகின்றது.

மாணவர்களின் பல்வேறு ஆற்றல்களை வளர்ப்பதோடு, அந்த ஆற்றல்களின் வெளிப்பாடாகப் படைப்புக்கள் வெளிவருகின்றன. காலத்தின் தேவைக்கேற்ற வகையில் கவிதை, கட்டுரை, சிறுகதை, செவ்வி முதலான பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி வருவது இம்மலரின் சிறப்பம்சமாகும்.

இம்மலரானது நெருக்கடியான சூழ்நிலையிலும் பல வர்ணப்படங்களைத் தாங்கி எவ்வித குறையும் இன்றி புதுப்பொலிவுடன் வெளிவருகின்றமையையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மலர் குறுகிய காலத்தில் தரமான படைப்புக்களுடன் வெளிவருவதற்கு இக்கலாசாலையின் முதல்வர், காப்பாளர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் ஆகியோரின் பங்களிப்புக்கள் எமக்கு நிறைவாகவே கிடைத்தமையையிட்டு கலைமலர்க்குழு சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதழாசிரியர்,
திரு. கணேசராசா ரவீந்திரராசா

# கலாசாலை விரிவுரையாளர்கள்

01. திரு ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (முதல்வர்)

B.A., P.G.D.E., M.Phill (Edu), SLEAS III

02. திரு. செ.செந்தில்மணி (துணை முதல்வர்)

B.Sc., P.G.D.E., M.A. ( Tea Edu.), SLEAS III

03. திருமதி க.மகேந்திரன்

B.Sc Agric. (Hons) P.G.D.E, SLEAS III)

04. கலாகீர்த்தி திருமதி சா.சிவனேசன்

Dip in Bharatha Natiyam + Kathagali, Spl. Trd (Dance), SLEAS III

05. திரு. வே.கா.கணபதிப்பிள்ளை

B.Ed.(Spl), Spl Trd.(Phy Edu.), SLPS2 - I, SLEAS III

06. சங்கீதபூஷணம் திரு. செ.குமாரசாமி

Music Spl. Trd., P.G.D.E., SLEAS III

07. கலைவாரிதி, கலாநிதி செ.திருநாவுக்கரசு

பண்டிதர், சைவப்புலவர், B.A., P.G.D.E., Dip in (Manage.), M.A. (Tamil), M.Ed., SLPS 2 - 1, SLEAS III

08. செல்வி மலர் சின்னையா

B.A., Spl.Trd (So. St.), P.G.D.E, ME.d, Dip. in School Management, P.G. Dip. in Political Education, S.L.P.S - I, S.L.E.A.S - III

09. திரு. மா.சிவலிங்கம்

B.Sc., P.G.D.E. SLEAS III

10. திரு. வீ.கருணலிங்கம்

B.A., P.G.D.E., Spl. Trd (Art), M.Ed., SLTS

11. சங்கீதகலா வித்தகர் செல்வி வி.கந்தசாமி ஐயர்

B.A., P.G.D.E ., M.A (Culture), M.Ed.,SLTS

12. திருமதி அ.கருணாகரன்

Spl. Trd.(Phy. Ed.), SLTS

13. திரு. ச.புவனேஸ்வரன்

Dip in Phy. Ed., Spl Trd (Pri), SLTS

# கலாசாலைப் பகுதிநேர விரிவுரையாளர்கள்

01. **கவிமாமணி** திரு. கல்வயல் வே.குமாரசாமி
B.A.

02. **கலாபூசணம்** திரு. ப.சின்னராசா
மிருதங்க டிப்ளோமா.

03. திரு. க.அந்தோனிப்பிள்ளை
இறையியல் டிப்ளோமா, மறையியல் டிப்ளோமா, உளவளத்துணை டிப்ளோமா

04. திரு. மு.இராசரத்தினம்
B.A., P.G.D.E, பட்டப்பின் டிப்ளோமா (இந்துநாகரிகம்), முதுகலைமாணி (கல்வி).

05. திரு. ச.தம்பையா
Sp. Tr. (English)

06. திரு. இ.மருதலிங்கம்
B.A. P.G.D.E

07. திரு. சி.செல்லையா
B.A. P.G.D.E

08. **கலாநிதி** தா.அமிர்தலிங்கம்
B.A., M.A(Edu.), SLTS - I

09. செல்வி நா.வேலுப்பிள்ளை
Spl Tr. (B.Com), SLTS - I, H.C.C.

10. செல்வி த.யோகேஸ்வரி
Spl Trd. (Home Sci), முதன்மை ஆசிரியர்

11. திருமதி அ.சண்முகானந்தன்
B.A., P.G.D.E., M.A.,(Edu.), SLPS 1

12. **கலைவாரிதி** திருமதி ஸ்ரீ.இராமச்சந்திரன்
சங்கீதரத்தினம் டிப்ளோமா, Spl Trd. (Music), முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் (சங்கீதம்)

13. திரு. நா.சுவாமிநாதன்
Spl Trd. (Sci)

# அலுவலக உத்தியோகத்தர்கள்

1. திருமதி வ.கேதாரநாதன்
2. திரு. க.சோதிலிங்கம்
3. திரு. ந.சுப்பிரமணியம்
4. திரு. ஐ.உலகநாதன்
5. திரு. க.கேதீஸ்வரநாதன்
6. திரு. க.மனோகரன்
7. திரு. ஐ.ஞானச்சந்திரன்
8. திரு. ஐ.கதிர்காமநாதன்
9. திரு. ஐ.ரவிச்சந்திரன்
10. திரு. பே.தில்லைநாதன்
11. திரு. ச.தேவராசா
12. திரு. செ.செந்தில்குமார்
13. திரு. க.தயாரூபன்
14. திரு. த.பரமேஸ்வரன்
15. திருமதி சி.வளர்மதி
16. செல்வி சி.சிவா
17. செல்வி ஆ.விமலினி

## திருக்கோணேஸ்வரம் இராவணன் வெட்டு



நன்றி:- கலைமுகம் 2001 தை - பங்குனி

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர்கள் பணியில்



திரு. அ.பொன்னையா
(1924 - 1936)



திரு. ஆ.ஈ.சண்முகரெத்தினம்
(1936 - 1947)



செல்வி ஞானம் முருகேசு
(1947 - 31.12.1962)



திருமதி ரதிலக்ஷ்மி ஆனந்தக்குமாரசாமி
(01.01.1963 - 12.01.1985)



செல்வி சத்தியமலர் சின்னப்பு
(13.01.1985 - 11.11.1989)



திரு. வை.கா.சிவப்பிரகாசம்
(12.11.1989 - 11.01.1993)



திருமதி சிவா இராமநாதன்
(12.01.1993 - 11.08.1996)



கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை
(12.08.1996 - 20.05.1998)



திரு. மு.பரஞ்சோதி
(21.05.1998 - 02.01.2003)



திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(03.01.2003 -

# ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் – இலங்கை
முற்றத்திற் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை – நல்ல
பாதையிற் சேர்க்கும் பணி எமதே.

(முத்து)

அன்னைமடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாய் – அவன்
தன்னந்தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்.

(முத்து)

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் – உள்ளத்
தேவை அறிந்து பூர்த்தி செய்வோம் – அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்.

(முத்து)

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் – தினம்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே – ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்.

(முத்து)



ஆக்கம்:-
சங்கீதபூஷணம் பொன். வாமதேவன்

# “கலைமலர்” உன்புகழ் வாழ்க!

கால நதியினி லாடி யென்றுமே
‘கலை மல’ருன்புகழ் வாழ்க!
கோல யௌவனம் கொஞ்சும் மோகனம்
குறை வில் லாமலே திகழ்க!

நீல வானிலே நீந்தும் வெண்ணிலா
நிலமிசை தருமொளி யாக!
சீல நல்லறம் சிரிக்க மானுடச்
சிந்தனை விரித் தருள்புரிக!

காலைக் கதிரவன் சாலத் தனஞ்செயும்
காட்சியின் மாட்சியு மாவாய்!
வேலைத் தழுவிய வெற்றிச் செல்வியாய்
விளங்குக நீதியின் தாயாய்!

பாலைப் பொழிதரு பசுவைப் போலவே
பரிந்தறி வூட்டுமுன் பான்மை!
ஆலைக் கரும்பினை அமுதச் சர்க்கரை
ஆக்குவ துனதொழில் வாண்மை!

ஆண்டு தோறுநல் லழகின் படைப்பிலே
அறிவின் சிகரமா யுயர்க!
ஈண்டு நற்றமிழ் இதயம் மகிழ்ந்திட
இனிய பொருள்கண்டு வளர்க!

கல்வி பயிற்றுநம் கலையின் கோவிலில்
காலம் தோறும்நீ மலர்க!
காவிய ஓவியக் கலைஞர் அறிஞர்
கருத்தாம் மடியினில் தவழ்க!

புலரும் பொழுதினில் போயகல் பனித்துளி
போலவே தீமைகள் ஒழிப்பாய்!
அலரும் மலருக்கு ஆதவன் அருள்போல்
அனைவர்க்கும் நன்மைகள் அளிப்பாய்!

கலைகளி னரசி கலைமக ளுறையும்
“கலைமலர்” நின்பணி வாழ்க!
நிலைபெறா துலகில் நித்திய வடிவாய்
நீடூழி நீடூழி வாழ்க!

# யாழ்ப்பாணக்கோட்டையின் அன்றைய தோற்றம்



நன்றி : "ஈழகேசரி" ஆண்டு மலர் 1956

## 1950களில் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டுக்கோலம்



நன்றி : "ஈழகேசரி" ஆண்டு மலர் 1956


# ஈழத்துத்திருத்தலங்களின் அன்றைய தோற்றம்



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்



நல்லூர்க் கந்தசுவாமி கோயில்




தம்பலகாமம் கோணேஸ்வரர் கோயில்




கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரார் கோயில்

நன்றி : "ஈழகேசரி" ஆண்டு மலர் 1956


# ஈழத்தின் சமயத் தலங்கள்



மடுமாதா தேவாலயம்



பொலநறுவை வானவன் மாதேவி ஈஸ்வரம் (2ஆம் சிவாலயம்)



யாழ்ப்பாணம் சோனகதெரு பள்ளிவாசல்



அநுராதபுரம் தூபராமதாதுகோபம்

# திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம்



நன்றி : "தமிழர் தகவல்" 2005

# யாழ்ப்பாண வரலாற்றுச்சின்னங்கள்



நல்லூர் பூதத்தம்பி மந்திரி மனை



யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக்கோபுரம்



கீரிமலைக்கேணி



பண்ணைத்தாம்போதி

நன்றி : "ஈழகேசரி" ஆண்டு மலர் 1956

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அருகிவரும் இறைநம்பிக்கை | 01 |
| வளர்ந்தோரின் கற்றல் | 03 |
| "கலாகீர்த்தி" திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களுடன் ஒரு நேர்காணல் | 07 |
| பரதம் - ஒரு நோக்கு | 14 |
| குழந்தைக் கல்வியில் இசைப்பாடல்களின் வலு | 16 |
| திரு விவிலியம் காட்டும் கல்விச் சிந்தனைகள் | 19 |
| யாழ்ப்பாண ஓவியக் கலைஞர்கள் - சில குறிப்புகள் | 22 |
| கல்வயலாரின் கவிதைகள் | 27 |
| MAXIMISING THE TASK OF LISTENING IN ESL CONTEXTS | 29 |
| WHY IS COMPUTER EDUCATION FOR YOUNG CHILDREN A GROWING CONCERN? | 30 |
| சூழல் மாசடைதலும் சூழல் பாதுகாப்பின் அவசியமும் | 33 |
| உயிர் காத்த கடமை (சிறுகதை) | 35 |
| இறைவனுக்கு ஒரு விண்ணப்பம் (கவிதை) | 37 |
| அழியாத நினைவுகள் (கவிதை) | 38 |
| என்னுயிர்த் தமிழணங்கே! (கவிதை) | 39 |
| பசுமையான நினைவுகள் (கவிதை) | 40 |
| சுதந்திர பூமியில் நிச்சயம் சிரிப்போம் (கவிதை) | 41 |
| கற்பனைக் கனவில் வாழ்ந்தது போதும் (கவிதை) | 42 |
| நட்பைத் தேடி... (சிறுகதை) | 43 |
| THE VALUE OF ENGLISH EDUCATION | 45 |
| THE MAN (POEM) | 47 |
| தாயன்பு | 48 |
| நம்பிக்கை | 50 |
| உண்மையே இறைவன் | 51 |
| சிவ சின்னங்களுள் திருவைந்தெழுத்தின் சிறப்பு | 52 |
| யோகக் கலையில் பத்மாசனம் | 55 |
| வாழ்வை உயர்த்தும் நம்பிக்கை | 57 |
| குருவிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? | 58 |
| எளிமையான வாழ்வும் வளமும் | 60 |
| கூறலும் குறிப்பறிதலும் | 61 |
| நாகரிக மோகமும் இளைய சமுதாயமும் | 65 |
| தானத்திற் சிறந்தது வித்தியாதானம் | 67 |
| தமிழ்மொழியின் சிறப்பு | 69 |
| விபுலாநந்த அடிகள் தந்த யாழ்நூல் | 71 |
| சிரிப்பின் பயன்கள் | 74 |
| பாலர் அபிநயப்பாடல் போதிக்கும் முறைகள் | 76 |
| பரீட்சைகளை எதிர்கொள்ள... | 78 |
| வருங்கால சமுதாயத்தை வளமாக்குவோம் | 80 |
| உடலுக்கு உறுதிபயக்கும் வாக்குண்டாம்... | 83 |
| முன்பள்ளியின் அவசியம் | 86 |

| | |
|---|---|
| தமிழ்மொழி வளர்ச்சியில் நவீன தொழில்நுட்பத்தின் பங்கு | 88 |
| நீரிழிவு நோயைக் குணப்படுத்த... | 90 |
| வீட்டு வைத்தியம் - நாட்டு மருந்துகளும் மூலிகைகளும் | 91 |
| சித்த மருத்துவம் | 94 |
| விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்தும் மனிதனிடம் அமைதியில்லையே! | 95 |
| இலங்கையின் சூழற் பிரச்சினைகள் | 97 |
| உளநெருக்கீட்டுக்கு உள்ளான பிள்ளைகளும், அவர்களை வழிப்படுத்துவதில் ஆசிரியரின் பங்கும் | 99 |
| சிறுவர் உரிமைகளும் துஷ்பிரயோகங்களும் | 102 |
| குண்டுபோடுதல்; நிலைகளும் கடமைகளும் | 104 |
| தொழில்நுட்பக் கல்வியின் பயன்பாடுகள் | 106 |
| தகவல் தொழில்நுட்பமும் மனித சமூகமும் | 108 |
| பறக்கும் தட்டுக்களும் வேற்றுக் கிரகவாசிகளும் | 110 |
| யப்பானின் வெற்றி இரகசியம் 5S நடைமுறை | 111 |
| இணையம் பற்றி அறிவோம் | 114 |
| ஆரம்பக் கல்வியும் கணினியும் | 116 |
| இணையம் INTERNET | 118 |
| கணினி வைரஸ் என்பதனைப் பற்றி எளிமையாகப் புரிந்து கொள்ளுங்கள் | 119 |
| உயிரைக் கொல்லும் நோய் H.I.V எய்ட்ஸ் | 122 |
| பச்சைவீட்டு விளைவும் ஓசோன்படைச் சிதைவும் ஏற்படுத்தும் தாக்கங்கள் | 124 |
| MS Word இல் உங்கள் வேலைகளை விரைவாக்குவதற்குச் சில இலகுவான வழிகள் | 127 |
| விஞ்ஞானக் கருவிகள் | 128 |
| கணித பாடத்தில் டீன்ஸ் குற்றிகளும் அதன் பயன்பாடும் | 129 |
| EQ ஓர் அறிமுகம் - இது கணிதக் குறியீடு அல்ல | 134 |
| சித்திரக் கலையானது பாடசாலைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் | 136 |
| சித்திர அரும்புகள் | 140 |
| தற்காலத்து ஈழத்து இசையின் நிறைகளும் குறைகளும் | 144 |
| எமது பிரதேசத்தில் சிக்கன கடன்வழங்கும் நிறுவனத்தின் சமாசம் முதுகெலும்பாக இருக்கிறது | 146 |
| ஆசிரிய மாணவர்மன்ற அறிக்கை (2007-2008) | 147 |
| முத்தமிழ் மன்றம் ஆண்டறிக்கை (2007-2008) | 148 |
| ஆரம்பக்கல்வி மன்ற அறிக்கை (2007-2008) | 149 |
| உடலாளர் மன்றம் (2007-2008) | 150 |
| இந்துமா மன்ற அறிக்கை (2007-2008) | 151 |
| கிறிஸ்தவ மாணவர் மன்றம் (2007-2008) | 152 |
| நுண்கலைமன்ற அறிக்கை | 153 |
| மாணவர் விபரங்கள் | 154 |
| நிழற்படத் தொகுப்பு | |
| இவர்கள் நன்றிக்குரியவர்கள் | |



# அருகிவரும் இறைநம்பிக்கை

சிஸ்ரர் நெவிஸ் லடிஸ்லாஸ்,
B.A. (First class), Dip. in Education (Merit),
M.Phil (Edu.)
அதிபர் யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
பாடசாலை, யாழ்ப்பாணம்.

மனிதர்கள் அறிவு விளக்கம் பெற்றும் உறுதியான, இன்பமான வாழ்வு வாழ்வதற்குச் சமயம் அடிப்படையானது. இறைநம்பிக்கை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. இறை நம்பிக்கை ஒருவனுக்கு வாழ்க்கையில் ஓர் உயர்ந்த குறிக்கோளை அளிக்கின்றது; ஒரு பற்றுக்கோடாகவும் அமைகிறது. இறைக் கோட்பாடுகளுக்கு இசைவாக வாழ்தலே சமய வாழ்க்கை. மக்களை நெறிப்படுவத்துவதற்கு உறுதுணையாக அமைவது சமயம். இறைநம்பிக்கை தனிமனிதனது வாழ்க்கையை மாத்திரமன்றி, முழுச்சமூகத்தையும் நெறிப்படுத்துகின்றது.

சமயக் கோட்பாடுகளுக்கு அமைவாக மக்கள் தம் வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொண்டால் சமுதாயம் உயர்வடைகிறது; அதனால் நாடே உயர்வடைகிறது. பொன்னும் பொருளும் வாழ்க்கையின் உறுதிப் பொருட்கள் அல்ல என எவனொருவன் உணருகிறானோ அவனே சிறந்த சமயி ஆகின்றான். மனிதன், பொருள் என்ற பொருளாதாரத் தேட்டத்தையும், அருள் என்ற ஆன்மீகத் தேட்டத்தையும் அடையும் முயற்சிக்கு சமயங்கள் காலந்தோறும் துணை நிற்கின்றன. மனித வரலாற்றையும், வாழ்க்கையையும் விளங்கிக்கொள்ளச் சமயங்களை விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

இத்தகைய சமயக்கல்வி பாடசாலைகளில் வழங்கப்படுகின்றது. உயர்ந்த அறிவுடனும், வல்லமையுடனும் ஒரு மனிதன் வாழ்வதற்கு, அவனது ஆரம்ப வாழ்வே அடித்தளமிடுகிறது. வாழ்க்கை ஆரம்பிக்கும் இடம் பாடசாலை. இங்குதான் அறிவும், ஒழுக்கமும் வித்திடப்படுகிறது. ஒருவன் நல்ல பண்பு மிக்கவனாகவும், சிறந்த கல்விமானாகவும் வாழ்வதற்குப் பாடசாலைகளின் பங்கு அளப்பரியது. பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற பல்வேறு வகையான வாழ்க்கை நெறிகளுள் மிக முக்கியமானது சமயக்கல்வியே ஆகும்.

விஞ்ஞானமும் நாகரிகமும் எவ்வளவு வளர்ந்துவிட்ட போதிலும், மனிதன் எந்தவொரு செயலையும் செய்வதற்கு இறையருளையே நாடி நிற்கின்றான். உயர்ந்த விஞ்ஞானியானாலும், வைத்தியரானாலும், உயர்பதவி வகிப்பவராயினும் தமது தொழிலை ஆரம்பிக்க முன்னர் கடவுள் வணக்கத்தில் ஈடுபடுவதனை நாம் காண்கின்றோம்.

இன்று நாட்டில் துன்பச்செயல்கள் மலிந்துபோய் இருக்கின்றன. சமூகங்களிடையே சுமுகமான புரிந்துணர்வு இல்லை. எத்தனையோ இளைஞர்களும், யுவதிகளும் வாழ்க்கையில் நெறிதவறி, வாழ்விழந்து நிற்கின்றனர். குடும்பங்களில் பிரச்சினை, வேலைத்தளத்தில் பிரச்சினை, உண்மை நட்புடையவர்களை, அன்புடையவர்களை எங்கும் காண்பது அரிதாக உள்ளது. இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமைவது இன்று சமய அறிவும், இறைநம்பிக்கையும் இல்லாமையே ஆகும்.

இன்று எம்சமூகத்தில் கொலை, களவு, கடத்தல், கற்பழிப்பு, பிறர்மனை விழைதல், பொய்ச்சான்றுரைத்தல் போன்ற கொடிய பாவங்கள் தலைவிரித்தாடுகின்றன. இத்தகைய பாவங்கள் மனித மனங்களில் குடிகொள்ளும்போது, மனிதன் மாண்புகளை இழக்கின்றான். தனது பல்வேறு தேவைகளின் நிமித்தம் சமய வழிபாடுகளைத் தியாகம் செய்ய முற்படுகின்றான். ஆலய தரிசனம் அநாகரிகம் என நினைக்கின்றான். விசுவாசத்தில், நம்பிக்கையில் வளர்ந்து வரவேண்டிய இளையவர்கள், அறிவியல் தேடலுக்காக சமயபாட நெறிகளைக் கற்கவோ, பின்பற்றவோ பின்னிற்கின்றனர். இதனால் தமது அடிப்படைச் சமநிலையையே இழக்கின்றனர்.

இதன் எதிரொலி மனித நேயத்தை மறந்தவனாக, மனித மாண்பின் மேன்மையை உணராதவனாக, மனித உரிமைகளை மதித்து வாழத் தெரியாதவனாக மனிதன் வாழ்ந்து வருகிறான். மானிடத்தின் விழுமியங்களெல்லாம் இன்று கருகிப்போயுள்ளன. இறைநம்பிக்கை அருகிப் போவதே இதற்குக் காரணமெனலாம்.

ஆகவே, ஒருவன் தன்னை மனித மாண்புள்ள ஒருவனாக மாற்ற வேண்டுமானால், இறை சிந்தனை கொண்டவனாக மாற வேண்டும். மனம் ஆன்மீகத்தில் இலயித்து, இறைநம்பிக்கை ஏற்படுகின்றபோது

மனிதம் மலரும். மனிதம் மலரும் போது இரக்கம், வாய்மை, கொடை, தியாகம், அருள், அன்பு எனும் தெய்வீகப் பண்புகள் மிளிரும். இப்பண்புகளை வளர்க்க இளையவர்கள் இறைவழிபாடு, ஆலயதரிசனம் ஆகியவற்றுடன் நல்லோர் நல்லுபதேசங்களைக் கேட்பதனூடாகவும் தெய்வீக ஆளுமையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்றைய அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சி சமூக வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மனிதனின் படைக்கும் ஆற்றலில் ஏற்பட்ட வளர்ச்சி, மனிதன் படைத்தவனையே மறக்கும் நிலைக்குள்ளாகியுள்ளது. மனிதனுக்குக் கடவுளால் ஆற்றல்கள், திறமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையே மறந்து, தன்னுடைய ஆற்றல்கள், திறமைகளில் அதீத நம்பிக்கை கொண்டவனாகக் காணப்படுகின்றான். இத்தகைய நிலையானது இந்த நூற்றாண்டில் சமயங்களின் இறைநம்பிக்கையையே கேள்விக்குறியாக்கியுள்ளது. சமயத்தின் விசுவாச உண்மைகளுக்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளது.

அதேவேளை மேலைத்தேய விழுமியங்கள், கருத்துக்கள், பழக்கவழக்கங்கள் என்பன உலகமயமாக்கல் மூலமாக எமது தேசத்தையும் வந்தடைந்துள்ளன. இதனால் இன்றைய இளையவர்கள் தமது சுய எண்ணத்தை இழந்தவர்களாக, பாரம்பரியமாக வாழ்ந்துவந்த வாழ்வில் இருந்து விடுபட்டவர்களாக, மேலைத்தேய சிந்தனைகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக வாழத் தொடங்கியுள்ளனர். இதனால் நாஸ்திகக் கொள்கைகள் வலுப்பெற்று இறைநம்பிக்கை வலுவிழந்து ஆட்டங்கண்டு நிற்கிறது. இதனைத் தொடரவிடாமல் எதிர்காலத்தில் எமது சமுதாயம் ஒரு பூரணத்துவம் உடைய சமுதாயமாக, மனித விழுமியங்களை மதிக்கின்ற சமுதாயமாக உருவாக இறைநம்பிக்கையை இளையவர் மத்தியில் ஊட்டுவது நம் எல்லோருடைய கடமையுமாகும்.

"அருகிவரும் இறைநம்பிக்கை" என்னும் இவ்விடயத்தை இன்று எழுதிக்கொண்டே இருக்க மனம் கனக்கின்றது; கண்களில் கண்ணீர் வருகின்றது; வெறுமை நெஞ்சை நிறைக்கின்றது. பாடசாலைகளில் பயிலும் இளசுகளுக்கு இதுபற்றிப் பலமுறை இதமாகச் சொன்னாலும், சிலவேளைகளில் இடித்துரைத்தாலும் அதை விரும்பி உள்வாங்குவதாகவோ, ஏற்றுக் கொள்வதாகவோ தெரியவில்லை. புலன்கள் சரியான வழியில் சென்றால் அது தெய்வீக அதிர்வை (DIVINE VIBRATION) மனிதத்தின் சகல பாகங்களிலும் ஏற்படுத்தும்.

எமது பார்வைகள் எது நிரந்தரமானதோ, எது என்றும் உண்மையானதோ,அதைப் பார்க்கப் பழக வேண்டும்.

எமது உடல் இறை ஆனந்தத்தை அனுபவிப்பதற்காகப் படைக்கப்பட்டது. அசைய முடியாத வரையிலும், முகத்தில் சுருக்கங்கள் விழுகின்ற வரையிலும், நரை தோன்றும் வரையிலும், காத்திருக்காது இறைவனை அன்புசெய்ய, அனுபவிக்க, நம்பத் தொடங்கு; சீக்கிரம் தொடங்கு; உன் உடல் என்ற வாகனத்தை நிதானமாக, மெதுவாக, சரியான பாதைகளில் அவ்வப்போது ஓட்டிச்செல்; பத்திரமாக ஒருநாள் பரமானந்தத்தை அனுபவித்து, அப்பிரசன்னத்துடன் ஒன்றாகக் கலப்பாய். அன்றாட வாழ்வில் உன் அழகிலும், இன்பம் துய்க்கும் திறமைகளிலும், அகலமாகத் திறந்துவிடப்படும் சந்தர்ப்பங்களிலும், அதனால் கிடைக்கும் அதிஷ்டங்களிலும், உயர்வுகளிலும் கர்வம் கொள்ளலாம். "இறைவனை என்றும் ஆழமாக நம்பும் நல்மனம் வேண்டும்". இந்த நம்பிக்கை தனிமனிதனில் இருக்கும் தெய்வத்தைப் புரிந்து, அடுத்தவனையும் அன்புசெய்யும். மனிதத்தை உன்னில் மலர வைக்கும்.

இவ்வுலகில் நடைபெறுகின்ற, கிடைக்கின்ற எல்லாம் ஓடும் மேகங்கள் (PASSING CLOUDS); தொடுவானங்கள். மனித வாழ்க்கையை ஓட்டிச் செல்பவர் இறைவனே ஆவார். ஜீவ சாரதியான அவரிடம் நம்பிக்கைகொள்.

"உமது கையை அவருடைய கைகளிலே வையும்; நீர் நடக்க வேண்டிய பாதை எல்லாம் அவரோடு கூடவே நடவும்; ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள். நலமான வாழ்வு உன்னிலும், உனக்குள்ளும் ஒளிரும். அது பலருக்கு 'பளிச்' என்று பிரகாசிக்கும். அந்தச் சிறிய ஒளிகள் எல்லாம் பேரொளியிடம் ஒருநாள் சங்கமமாக உன் "அருகிவரும் நம்பிக்கையை" அறுத்துத் தூர எறிந்துவிடு. ஜீவாத்மாவாகிய நீ, பலர் பரமாத்துமாவுடன் கலப்பதற்கு, உன் வாழ்க்கையால் உதவிசெய். இதுவன்றோ இன்றும், என்றும் குறிப்பாக இன்றைய எம் சூழமைவில் பக்குவமாக ஆற்றவேண்டிய பெரிய பணி; மறந்து விடாதே.



# வளர்ந்தோரின் கற்றல்

திரு. செ.செந்தில்மணி,
துணை முதல்வர்,
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை.

வளர்ந்தோரின் கற்றல் பற்றிய சிந்தனைகளும், எழுத்துக்களும் அண்மைக் காலங்களில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. ஆதிகாலத்தில் இயேசுநாதர், அரிஸ்ரோட்டில், சோக்கிரடிஸ், பிளேட்டோ, கொன்பியூசியஸ் போன்றோர் எல்லோருமே வளர்ந்தோருக்கான ஆசிரியராகவே இருந்தார்கள். இவர்கள் பின்னர் வந்த முறைசார் கல்விமுறையை விட மிகவும் வித்தியாசமான கற்றல் முறையை விருத்தி செய்தார்கள். இவர்கள் மாணவர்களுக்கு வெறும் தகவல்களைக் கொடுப்பதைவிட அவர்களது சிந்தனையைக் கிளறுவதன் மூலம் குழுவாக இயக்கி, சுயமாக ஆய்வுகளிலும், கண்டறிமுறை மூலமும், பிரச்சினை விடுவித்தல் முறையிலும் ஒரு விடைக்கு அல்லது தீர்வுக்கு வர மாணவர்களுக்கு வழிகாட்டினார்கள்.

ஏழாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் மதக்கல்வியை மேம்படுத்தும் முகமாக சிறுவர்களுக்குப் பாடசாலைகள் ஒழுங்கமைக்கப்பட்டன. இவை தேவாலயங்களினால் கட்டுப்படுத்தப்பட்டு கற்றல், கற்பித்தல் முறைகளில் சில எடுகோள்கள் விருத்தி செய்யப்பட்டது. இது சிறுவர்களுக்கான கற்பிக்கும் கலையாக (Pedagogy) பெயரிடப்பட்டு இன்றுவரை எமது கல்வி முறையின் அடிப்படையாகத் திகழ்ந்து வருகிறது.

அசுர வேகத்தில் விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றமும், உலகமயமாக்கலும் ஒவ்வொரு தனிமனிதனும் தனது கல்வியை வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது. இந்த வகையில் வளர்ந்தோரின் கற்றல் பற்றிய முக்கியத்துவம் அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளது. இக்கல்வி பற்றிய ஆய்வுகளும் முடுக்கி விடப்பட்டு வருகின்றது. வளர்ந்தோர் கற்றல் ஆய்வுகளில் ஈடுபட்டவர்களில் மல்கம் நொவல் (Malcolms Knowles), கால் ரோஜர்ஸ் (Carl Rogers) முக்கியமானவர்களாவர். இவர்களின் ஆய்வுகளின் மூலம் வளர்ந்தோருக்கான கற்றல் முறையியல் (Andragogy) வளர்ச்சி பெற்றது. வளர்ந்தோர் கற்றல்முறை பற்றி அறிவதற்கு முன்னர் வளர்ந்தோர் எனக்கருதப்படுபவர் யார் என்பதற்கான வரைவிலக்கணங்களை அறிவது நன்று.

**உயிரியல் வரைவிலக்கணம்**

ஒருவர் இன உற்பத்தியை ஏற்படுத்தக்கூடிய வயதை அடையும் பொழுது அவர் உயிரியல் ரீதியாக வளர்ந்தோராகக் கருதப்படுகின்றார்.

**சட்டமுறையியல் வரைவிலக்கணம்**

ஒருவர் வாக்குச் செலுத்தக்கூடிய அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் வாங்கக்கூடிய அல்லது மற்றவர் அனுமதியின்றி திருமணம் செய்யக்கூடிய நிலையை அடையக்கூடிய வயதை உடையவர் வளர்ந்தோராகக் கருதப்படுவர்.

**சமூக வரைவிலக்கணம்**

வளர்ந்தோருக்கான நடிபங்குகளான முழுநேர ஊழியராக, கணவன், மனைவி, பெற்றோர் போன்றோர்களாக செயற்படத் தொடங்கும் பொழுது அவர் வளர்ந்தவராகக் கருதப்படுகின்றார்.

**உளவியல் வரைவிலக்கணம்**

'எமது வாழ்க்கைக்கான பொறுப்பு நாமே' என்ற சுய எண்ணக்கருவை அடையும் நிலையும், சுய பணிப்பும் (Self directing) ஆற்றும் நிலையாகும். மனிதன் முதிர்வடையும் பொழுது வயதானது கற்றலில் ஏற்படுத்தும் செல்வாக்குப் பற்றித் தெரிந்து கொள்வது முக்கியமாகும். அடுத்து வயது முதிர்வு, கற்றல் செயல்முறைகளில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதற்கான அண்மைய ஆய்வுகளைப் பற்றி அறிவது முக்கியமாகும்.

**1. வயது முதிர்வும் நுண்மதியும்**

முன்பு நுண்மதி வளர்ச்சியானது குமரப்பருவம் வரை வளர்ச்சி அடைவதாகவும், அது பின்னர் மாறாமல் இருந்து 40 வயதுக்குப் பின்னர் குறைவடைவதாகவும் கருதப்பட்டது. இது தவறு என அண்மைய ஆய்வுகள் கூறுகின்றன. இந்த ஆய்வுமுறைகளின்படி வாழ்க்கை முழுவதும் நுண்மதித் திறன்களில் பல

மாற்றம் அடையாதிருப்பது சாயி (Shajy 1986) என்பவரால் காட்டப்பட்டுள்ளது. ஆனால் விரைவாகக் காரணம் காணல் நுண்மதிச் செயற்பாட்டில் குறைவு காணப்பட்டது. மேலும், அனுபவத்துடன் தொடர்புடைய பளிங்கு நிலை நுண்மதி (Crystallized Intelligence) வயதுடன் வாழ்க்கை முழுவதும் அதிகரிப்பதும், பாயி நுண்மதி (Fluid Lntelligence) வயதுடன் சிறிது குறைவடைவதும் காணப்பட்டுள்ளது. இதனை லேனர் (Lerner 1990) என்பவர் நிறுவியுள்ளார்.

**2. வயது முதிர்வும் ஞாபகமும்**

வயது முதிர்வுடன் குறுகிய ஞாபகம் மாற்றமடைவது குறைவாகவுள்ளது. ஆனால் நீண்டகால ஞாபகம் வயது முதிர்வுடன் குறைவடைவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை பூன் பொசாட் (Poon Fazad 1980) ஆய்வு மூலம் கண்டுபிடித்துள்ளார். பொது அறிவு தொடர்பான ஞாபகத்தில் இளையவரும், முதியவரும் ஒரே வகையில் துலங்குவது காணப்பட்டுள்ளது. திறன் சார்ந்த விடயங்களும் வயது முதிர்வில் மாற்றமடைவது குறைவாகவுள்ளது. எனினும் வயது முதிர்வுடன் குறிப்பிட்டளவு ஞாபகக் குறைவு ஏற்படுவதற்குக் காரணம் மூளையின் நிறை குறைவடைவதென ரெறி (Terry 1976) என்பவர் ஆய்வு செய்துள்ளார். ஞாபகத்தின் பகுதியில் நியூற்றன்கள் குறைவடைவதும் கிப்போகம்பஸ் பாதிப்பு ஏற்படுத்துவதும் பற்றி பாக்கின் (Parkin 1992) ஆய்வு மூலம் நிறுவியுள்ளார்.

**3. வயது முதிர்வும் ஆக்கத்திறனும்**

ஆக்கத்திறனானது முப்பது வயதிலிருந்து நாற்பது வயதுவரை உயர்நிலை அடைகிறது எனவும், அதன் பின்னர் ஆக்கத்திறன் குறைவடைவதாகவும் ஆய்வின் மூலம் சிமொன்ரன் (Simonton 1988) கூறியுள்ளார். மேலும், ஆக்கத்திறனானது அதன் புலம்சார்ந்து, உயர்நிலை வயது மாற்றம் அடைவதாகவும் கூறியுள்ளார்.

**பல்வேறு துறைகளில் ஆக்கத்திறன்**

| *துறை* | *உச்ச நிலை வயது* |
|---|---|
| கணிதம், பௌதிகம் | 20 – 30 |
| உளவியல், விஞ்ஞானத்துறைகள் | 30 – 40 |
| சரித்திரம், தத்துவம் | 40 – 50 |

இத்துடன் உலகில் உள்ள பிரபல்யம் வாய்ந்த மனிதர்கள் எல்லாம் தமது அறுபது, எழுபது, எண்பது வயதுக் காலங்களில் உலகிற்கு உயரிய பங்களிப்பைச் செய்துள்ளார்கள் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**வயது முதிர்வும் மனவெழுச்சியும்**

வயது முதிர்ந்தவர், இளையவர்கள் போலவே மனவெழுச்சிக்கு ஆளாகின்றார்கள் என்றும், ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்துவதில் இளையவர் போன்று பதட்டம் அடையாமல் இருப்பதில் வல்லவராகவும் உள்ளார்கள் எனவும் காட்டென்சின் (Cartencen 1998) குறிப்பிட்டுள்ளார். "சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது" என்ற பழமொழி எதிர் மனவெழுச்சிகளால் இளையவர் பாதிப்பதால் ஏற்படும் விளைவையே எடுத்துக் கூறுகிறது.

**வயது முதிர்வும் உடல்நலமும்**

பார்வையின் திறன், பற்களின் உறுதித்தன்மை பலவீனம் அடையத் தொடங்குவது, ஆரம்பத்தில் மெதுவாகவும் முதிர்பருவத்தின் இறுதிக் கட்டங்களில் வேகமாகவும் நடைபெறும். தசைகளின் வலிமை, புலன்களின் துல்லியம், இருதய இயக்கம் என்பன மெதுவாக நலிவடையத் தொடங்கும். இவை வளர்ந்தோரின் கற்றலில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலும் உடல் நிறையில் ஏற்றம் அடையும் சமயத்தில் தலைமயிர் உதிர்தல், நரைத்தல் என்பன ஆரம்பிக்கும். பெண்களின் மாதவிடாய் 50 வயதுகளில் நிறுத்தப்படுவதும், (Mono pass) இக்காலங்களில் இவர்கள் மிகையான உளச்சிக்கலுக்கும் மனவெழுச்சிக்கும் உட்படுவதும் நடைபெறும்.

**Malcom Knowl**

மல்கம் நொவல் வளர்ந்தோரின் கற்றல் பின்வரும் காரணிகளுடன் தொடர்புடையது எனக் காட்டியுள்ளார்.

01. கற்பவரின் தேவை தெரிந்திருக்க வேண்டும்

1. ஏன்?
2. எதை?
3. எப்படி?

வளர்ந்தோர் கற்கும் பொழுது மேற்கூறிய வினாக்களுக்கு விடை கூறக்கூடியதாக இருத்தல் அவசியமாகும்.

02.கற்பவரின் சுய எண்ணக்கரு விருத்தி
  1. சுய அதிகாரம்
  2. சுய பணிப்பு

03.கற்பவரின் முன்னைய அனுபவம்
  1. வளம் - வளர்ந்தோரின் கற்றலில் முன்னைய அனுபவமே வளமாகும்

04.கற்பதற்கான ஆயத்தங்கள்
  1. வாழ்க்கையுடன் தொடர்புடையது
  2. விருத்திக்கான செயல்

05.கற்றலுக்கான திசைமுகப்படுத்தல்
  1. பிரச்சினை தீர்த்தல் முறை

06.கற்றலுக்கான ஊக்கல்
  1. உள்ளார்ந்தது

மேற்கூறிய தலைப்புக்கள் ஒவ்வொன்றையும் விளக்கம் பெறுவது அவசியமாகும்.

**01. தேவையைத் தெரிந்திருத்தல்**

ஒரு விடயத்தை கற்கமுன்னர் வளர்ந்தோர் அதைக்கற்பதன் தேவையைத் தெரிந்திருக்க வேண்டும். இதன்மூலம் வளர்ந்தோர் அக்கற்றலினை முழு அளவில் சக்தியைப் பிரயோகித்துப் பயன் அடையலாம். வளர்ந்தோரின் கற்றலில் உதவிபுரிபவரின் (Faciliater) முதற் பணியானது, கற்பவர் கற்றலுக்கான தேவையை உணரப்பண்ணுவதாகும்.

தமது முடிவுகளுக்கும் தமது வாழ்க்கைக்கும் தாமே பொறுப்பு என்ற சுய எண்ணக்கருவுள்ளவராக இருக்க வேண்டும். கற்பதற்கு உதவுபவர், கற்பவர் மற்றவர்களில் தங்காமல் சுயமாகக் கற்பதற்கு உதவ வேண்டும். வளர்ந்தோர், வகுப்பறையில் பாடசாலைச் சிறுவர் போல் கற்றலில் ஆசிரியரை எதிர்பார்க்கும்பொழுது அல்லது ஆசிரியர் வளர்ந்தோரை பாடசாலை மாணவர்போல் நடாத்த முற்படும் பொழுது முரண்பாடு தோன்றுகிறது.

**02. கற்பவரின் அனுபவங்கள்**

வளர்ந்தோர், இளையவர்களைவிடக் கூடிய அனுபவங்களைக் கொண்டுள்ளவர்களாக உள்ளனர். கற்றலுக்கான சிறந்த அனுபவமாக இவர்களது அனுபவங்கள் திகழ்கின்றன. இவர்களுக்கு அனுபவரீதியான கற்றலே சிறந்ததாக அமைகிறது. குழுக்கலந்துரையாடல், விடய ஆய்வுமுறை, பிரச்சினைகளைத் தீர்க்கும் முறை, ஆய்வுகூட முறை போன்ற முறைகளைப் பயன்படுத்தலாம். மேலும், சகபாடி துணைச் செயற்பாடுகள் (Peer helping activities) இவர்களின் கற்றலில் சிறந்த விளைவைக் கொடுக்கும். வளர்ந்தோர் கல்வியில் எந்த நிலையிலும் பங்குபற்றுபவரின் அனுபவங்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்களது அனுபவங்களைப் புறக்கணிப்பது அவர்களை மனிதர்களாக இல்லையெனப் புறக்கணிப்பதற்கு ஒப்பானது ஆகும்.

**03. கற்றலுக்கான ஆயத்த நிலை**

வளர்ந்தோர் தமக்கு எவை தேவையோ அதைக் கற்பதற்கே ஆயத்த நிலையில் இருப்பார்கள். இக்கற்றல் உண்மை வாழ்க்கையுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். தொழில் வழிகாட்டல் சிறந்த மாதிரிகளை அறிமுகஞ் செய்வதன்மூலம் இவர்களின் ஆயத்த நிலையைத் தூண்டலாம்.

**04. கற்றலுக்கான திசைமுகப்படுத்தல்**

இவர்களது கற்றலானது வாழ்க்கை மையக்கற்றலாக (Life – Centered) அமைய வேண்டும். தாம் கற்கும் கல்வியானது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அமையும் பொழுது அதில் அவர்கள் ஊக்கம் கொள்வார்கள். அதாவது, பிரச்சினையை மையமாகவும் (Problem Centered) கற்றல் நிகழ்வது சிறப்பானதாகும். கற்றலானது வாழ்க்கையில் கற்றல் இடமாற்றம் அடையக்கூடியதாக இருக்க வேண்டும். உதாரணமாக, வளர்ந்தோருக்கான ஆங்கில வகுப்பில் வெறும் கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது "தொழில் சம்பந்தமான கடிதம் எழுதும்முறை" பற்றிக் கற்பிக்கும் பொழுது அது அவர்களது வாழ்க்கையுடன் தொடர்புபடுவதால் அதில் ஊக்கம் எடுப்பார்கள்.

**05. ஊக்கல்**

வளர்ந்தவர்களுக்கு புற ஊக்கிகளைவிட அக ஊக்கிகளே சிறப்பாக அமையும் என்பதை ரவ் (Tough 1979) தனது ஆய்வுகள் மூலம் கண்டறிந்தார். புற ஊக்கிகளான சிறப்பான வேலை பெறல், பதவி உயர்வு, சம்பள அதிகரிப்பு என்பதைவிட சுயமதிப்பு, தொழில் திருப்தி என்பன சிறந்த ஊக்கலைக் கொடுக்கும்.

கால் ரோஜர்ஸ் **(Carl Rogers)**

கால் ரோஜர்ஸ் அனுபவரீதியான கற்றல் (Experiential Learnny) வளர்ந்தோருக்குச் சிறப்பானது எனக்கூறுகிறார். அது பின்வரும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

1. *இயற்கையாகவே மனிதர்கள் கற்றலில் நாட்டமுள்ளவர்கள்.*
2. *கற்கும் பாடப்பரப்பானது கற்றவருக்குப் பொருத்தமானது என்பதை உணரும்போது சிறப்பான கற்றல் நடைபெறும்.*
3. *கற்றலானது சுய ஒழுங்கமைப்பிலும், சுயபுலக்காட்சியிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.*
4. *"அச்சுறுத்தல்" குறைக்கப்படும் கற்றல், சிறப்பாக அமையும்.*
5. *செயல் ரீதியான கற்றல், கற்றலை மேம்படுத்தும்.*
6. *சுயகற்றல், முழுமையான கற்றலில் ஈடுபடுத்தும்.*
7. *ஆசிரியர் கல்வியைத் திணிப்பவரல்லர்; உதவுபவர் (Facilater).*
8. *சுயவிமர்சனம், சுயமதிப்பீடு என்பன சுதந்திரம், ஆக்கத்திறன், தன்னம்பிக்கை என்பவற்றை உருவாக்கும்.*
9. *அனுபவமான கற்றல், சிறந்த வளமாக கருதப்படும்.*

வளர்ந்தோருக்கான பயிற்றுனருக்கு இருக்க வேண்டிய தேர்ச்சிகள்

1. *கற்பவருடன் சிறந்த தொடர்பாடலை வைத்திருத்தல்.*
2. *கற்பவருடன் சேர்ந்து கருமமாற்றும் உறவை விருத்தி செய்தல்.*
3. *கற்பவருடன் சிறந்த நேரான மனப்பாங்கை மீளவலியுறுத்தல்.*
4. *கற்றலில் ஈடுபடச் சிறந்த சூழலை ஏற்படுத்தல்.*
5. *இருவருக்கான மரியாதையைப் பேணல்.*
6. *தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கும் திறனை வளர்த்தல்.*
7. *சிறுவருக்கான கற்பித்தல் முறையிலும், வளர்ந்தோருக்கான கற்பித்தல் முறையிலும் உள்ள வேறுபாட்டை உணர்தல்.*
8. *கற்பவருக்கான நம்பிக்கையை வளர்ப்பதற்கான முறையைக் கையாள்தல்.*
9. *கற்பித்தலுக்கான விளைதிறனை சுயமதிப்பீட்டின் மூலம் காணும் திறன்.*
10. *தொடர்ச்சியான பின்னூட்டல்களை வழங்கல்.*
11. *கற்பவருக்குத் தேவையான பாடப்பரப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தல்.*
12. *வகுப்பறைச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் இணைத்தலும்.*
13. *வளர்ந்தோருக்கான கற்பித்தல் கொள்கைகளைத் தெரிந்திருத்தல்.*
14. *புத்தாக்கம், பரிசோதனை செய்தல் மூலம் வகுப்பறையில் புதிய முறைகளைக் கையாளும் திறன்.*
15. *சுயமாகவும் சுதந்திரமாகவும் கற்பதற்கு ஊக்குவித்தல்.*
16. *கற்பவரின் அனுபவங்களிற்கேற்ப வகுப்பறைச் செயற்பாட்டை அமைத்தல்.*

வளர்ந்தோருக்கான கற்பித்தல் முறைகள்

சிந்தனையைக் கிளறல், சிறு குழுமுறை (Buzz group), விவாதம், நேர்முகம், செயற்திட்டமும் விடய ஆய்வும், நடிபங்குமுறை, வெளிக்கள வேலையும் சுற்றுலாவும், பயிற்சிப்பட்டறை போன்ற முறைகளைப் பயன்படுத்தலாம். தனியாள்களாகக் கருதும்போது ஒப்படைகள், கணினியூடான கற்றல் (Computer Assisted Learning), ஒப்பந்தக் கற்றல் (Contract Learning) போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

**Reference:-**


1. George.J. Psychological of Effective Teaching, New York, 1972.
2. Stephens.J.M., Educational Psychology, New York, 1960.
3. S.Mangal.S.K., Advanced Educational Psychology, New Delhi, 2002.



# "கலாகீர்த்தி" திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களுடன் ஒரு நேர்காணல்

## சந்தித்து உரையாடியவர்: - சொற்கோ

திருமதி சாந்தினி சிவநேசன் அவர்கள் ஈழத்தின் தலைசிறந்த பரதநாட்டியக் கலைஞர். பல நூற்றுக்கணக்கான மாணவர்களைப் பரதத்துறையில் ஆற்றுப்படுத்திய அற்புதமான கலைத்துவம் அவருடையது. புகழ்பூத்த நடனக் கலைஞரான அமரர் ஏரம்பு சுப்பையாவின் மூத்த மகளான அவர், தந்தையாரது வழியிலேயே பரதத்தையும், கதகளியினையும் பயின்று மரபுத்தடம் பிறழாது, புதிய மெருகுகளை உள்வாங்கி நடனத்துறையின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிவருபவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கடந்த 18 ஆண்டுகளாக நடனத்துறைக்குப் பொறுப்பான பேராசிரியையாக விளங்கி வருகிறார். 2005ஆம் ஆண்டு அதியுயர் கலைத்துறை விருதான "கலாகீர்த்தி"யை இலங்கை அரசு இவருக்கு அளித்துக் கௌரவித்துள்ளது. தந்தையாருக்குப் பின்னர் கொக்குவில் கலாபவனத்தின் இயக்குநராகப் பொறுப்பேற்று உழைப்பதுடன், கடல்கடந்த நாடுகளுக்கும் சென்று பரதக்கலையின் வளர்ச்சிக்கான பங்களிப்பை நல்கிவரும் திருமதி சிவநேசனுடன் 02.05.2008 அன்று கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடத்திய நேர்காணல் இங்கு இடம்பெற்றுள்ளது.





**சொற்கோ** *வணக்கம், திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களே!*

**சிவநேசன்** *வணக்கம்.*

**சொற்கோ** *உங்களுடனான நேர்காணலை நடத்துவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். முதலில் உங்களது சொந்த வாழ்க்கை பற்றிக்கூற முடியுமா?*

**சிவநேசன்** *நான் பிறந்து, வளர்ந்து, வாழுமிடம் கொக்குவில் கிராமம். இணுவிலைச் சேர்ந்த அண்ணாவியார் ஏரம்புவின் மைந்தரும், ஈழத்தின் பிரபல நடனக் கலைஞருமான ஏரம்பு சுப்பையா அவர்கள் எனது தந்தையார். எனது தாயார் பூரணம் அவர்கள் கொக்குவில் கந்தையா – சின்னப்பிள்ளை தம்பதியரின் மகள். எனது பெற்றோருக்கு எட்டுப்பிள்ளைகள். அவர்களில் நானே மூத்தபிள்ளை. 03.01.1952இல் பிறந்த எனக்கு சௌதாமினி, கிருபானந்தன் (ஜேர்மனி), உமாசங்கர் (கனடா), கிருத்தியாமினி ஜெகதீஸ்வரன் (கனடா), குமுதினி ஸ்ரீகாந்தன்(கனடா), உதயசங்கர் (நோர்வே), கோபிசங்கர் (கனடா) ஆகிய உடன்பிறப்புகள். எனது திருமணம் 04.09.1978இல் நடைபெற்றது. இணுவில் சபாரத்தினம் தம்பதியரின் இளைய மகனார் சிவநேசன் அவர்கள் எனது கணவர். இவர் பேராசிரியர் சபா ஜெயராசாவின் தம்பியார். வர்த்தகத்துறையில் பணியாற்றுகிறார். திருமணத்தின் பின்னர் மேடைகளில் நடனமாடுவதை நான் தவிர்த்துள்ளேன். எங்களுக்கு சபானந் என்ற மகனும், தேவந்தி என்ற மகளும் உள்ளனர். சபானந் சென்னைப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்றவர். தற்போது எம்.பில். செய்கிறார். மகள் தேவந்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைமாணிப் பட்டம் பெற்று, இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் போதனாசிரியராகக் கடமையாற்றுகிறார்.*

**சொற்கோ** *உங்களது கல்வி, கலை, உத்தியோக முயற்சிகள் பற்றிக் கூறுங்களேன்.*

**சிவநேசன்** *கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் இரண்டாம் வகுப்புவரை கற்றபின்னர், கொக்குவில் இந்துக் கல்லூரியில் மீதமான ஆரம்ப வகுப்புகளைப் பயின்றேன். அதன் பிறகு 6ஆம் வகுப்பிலிருந்து க.பொ.த. உயர்தர வகுப்புவரை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கற்றுத் தேறினேன். எனது தந்தையாரிடமே சிறுவயது*

முதல் பரதக்கலையைப் பயிலத் தொடங்கினேன். எனது சகோதரிமாரும் அவ்வாறே. 1969 டிசம்பரில் இந்தியா சென்று 1972 வரையில் குருகோபிநாத்திடம் கதகளி நடனத்தைக் கற்றுக்கொண்டேன். அதற்குப்பின் 1972–1975 காலப்பகுதியில் அடையாறு லக்ஸ்மணன் அவர்களது நிறுவனத்தில் பரதநாட்டியத்தினைப் பயின்று "பரதசூடாமணி" டிப்ளோமாப் பட்டம் பெற்றேன். இலங்கை திரும்பியதும், சில மாதங்கள் உடுவில் மகளிர் கல்லூரியில் பணியாற்றினேன். 03.11.1975இல் நடன ஆசிரியராக அரசநியமனம் கிடைத்தது. இராமநாதன் கல்லூரியிலேயே முதலில் பணிசெய்யும் பேறுவாய்த்தது. அங்கு நாடளாவிய ரீதியில் பல நடனப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்செய்து அனுப்பிப் பரிசுகள் பெற்றமை மனநிறைவைத் தந்தது. பல விழாக்களிலும் கல்லூரி மாணவர்களின் நடன நிகழ்ச்சிகள் இடம்பெறுவதற்குத் துணைநின்றேன். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 1977–78 காலப்பகுதியில் நடனத்துறையில் ஆசிரியப் பயிற்சியினைப் பெற்றுக்கொண்டேன். அங்கு மகாவித்துவான் இணுவில் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அவர்கள் எனக்குக் குருவாக இருந்து பரதத்தின் நுட்பங்களைச் சொல்லித்தந்தார். திருமதி ரதிலக்ஷ்மி ஆனந்தக்குமாரசாமியவர்கள் அதிபராகப் பணியாற்றினார். பல்துறை ஆசான்களிடமும் கல்விகற்கக்கூடிய பெரும்வாய்ப்பு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் எனக்குக் கிட்டியது. ஆசிரிய பயிற்சியின் பின்னர் மீண்டும் இராமநாதன் கல்லூரியிலேயே பணியாற்றினேன்.

**சொற்கோ** கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடனான உங்களது அனுபவம் எத்தகையது?

**சிவநேசன்** ஆசிரியர் பயிற்சி பெற்றதுக்குப் பின்னர், 1991 நவம்பரில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றிய நான், பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அவர்களது ஓய்வினைத் தொடர்ந்து 1992 பெப்ரவரியிலிருந்து இணைக்கப்பட்ட விரிவுரையாளரானேன். 24.08.2000இல்தான் இலங்கைக் கல்வி நிர்வாகசேவையினுள் உள்ளீர்க்கப்பட்டேன். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 1977 சனவரியில் நடனத்துக்கான சிறப்புநெறி ஆரம்பிக்கப்பட்டபோதே பயிற்சிபெற்ற நான், அங்கேயே விரிவுரையாளராகப் பணியாற்றுவது இறைவனால் அளிக்கப்பட்ட கொடை எனக் கருதுகிறேன். இங்கு நடனத்தைச் சிறப்பாகப் பயிலும் மாணவ–மாணவியர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாயினும், நாடளாவிய ரீதியில் பரதத்தில் பயிற்சியளிக்கும் ஒரே ஆசிரிய கலாசாலை இதுவேயாகும். ஆதலால் நாட்டின் பல்வேறு இடங்களிலும் இருந்து மாணவர்கள் இங்கு வந்து பயிற்சி பெற்றுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் இங்கு என்னிடம் நடனத்தைக் கற்று வெளியேறி, நாட்டிலுள்ள பல பாடசாலைகளிலும் ஆசிரியப்பணி புரிகின்றனர். சிலர் வெளிநாடுகளுக்கும் சென்று கலைப்பணியாற்றுகின்றனர்.

**சொற்கோ** திருமதி சிவநேசன் அவர்களே, நீங்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மூலம் பரதநாட்டியத்தில் பயிற்சிபெற்ற ஆசிரியர் பரம்பரையொன்றினை உருவாக்கியுள்ளீர்கள். அதேபோன்று கொக்குவில் கலாபவனத்தினூடாகவும் பலநூற்றுக்கணக்கான நடனக் கலைஞர்களை உருவாக்கி இந்த மண்ணுக்குத் தந்துள்ளீர்கள். கலாபவனச் செயற்பாடுகள் பற்றிக் கொஞ்சம் கூறமுடியுமா?

**சிவநேசன்** எங்கள் வீட்டிலேயே 1956ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று எனது தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்ட கலைநிறுவனமே கொக்குவில் கலாபவனம். இங்கு பரதம், கதகளி ஆகியன பிரதானமாகக் கற்பிக்கப்பட்டன. 06.06.1960இல் புதிய கட்டடமொன்று கட்டிமுடிக்கப்பட்டு (எங்களது வளவிலேயே) அங்கு கலாபவனச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. எனது தந்தையாரின் நண்பரான கலைப்புலவர் க.நவரத்தினம் அவர்களின் ஆலோசனைப்படியும், ஓவிய சிற்பக்கலைஞர் சிவப்பிரகாசம் அவர்களது உதவியுடனும் கலாபவன நிலையம் உருவானது. சிற்ப, சித்திர வேலைப்பாடுகளுடனும், தெய்வீகப் பொலிவுடனும் திகழுகின்றது கலாபவனம். அடிக்கடி அங்கு நடைபெறும் கலைநிகழ்ச்சிகளில் இந்திய, இலங்கைக் கலைஞர்கள் பங்கெடுத்துள்ளனர். இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கலாபவனத்தில் கற்று, தங்களது நாட்டிய அனுபவங்களை பெருகேற்றி வளர்த்துக் கொண்டுள்ளனர். எனது தந்தையாரின் மறைவின்பின் நானே கலாபவனப் பொறுப்புக்களை ஏற்று நிர்வகித்து வருகிறேன். பல்கலைக்கழக மாணவர்களுட்படப் பாடசாலை, ஆசிரிய கலாசாலை போன்றவற்றில் நடனத்தைக் கற்பவர்களும் தங்களது மேலதிக தேவைகளுக்காக இங்குவந்து கற்கின்றனர். எமது பாரம்பரியக் கலையினை அழியவிடாது பாதுகாக்கும் நோக்குடனேயே, எனது மகளையும் பரதத்துறையில் கற்கும்படி ஈடுபடுத்தினேன்.

**சொற்கோ** இலங்கையில் பரதம், கதகளி ஆகிய மரபுசார் நடனக்கலைகள் வளர்ச்சியடைவதற்கு முன்னோடியாகச் செயற்பட்ட தங்களது தந்தையாரின் பணிகள் பற்றிக் கூறமுடியுமா?

**சிவநேசன்** எனது தந்தையார் ஏரம்பு சுப்பையா அவர்கள் 1922–1976 வரையில் 54 ஆண்டுகள் மட்டுமே பூமியில் வாழ்ந்தவர். அவரது தந்தையார் ஏரம்புவும் நாட்டுக்கூத்தில் சிறந்த அண்ணாவியார். எனது தந்தையாரும் சிறுவயதிலேயே நாட்டுக்கூத்து நடனங்களில் தேர்ச்சிபெற்று விளங்கினார். காவடி, கும்மி, நாடகப் பாடல்கள் இயற்றுவதிலும் கைதேர்ந்தவர். நாடகங்களில் பெண்வேடம் பூண்டு அதிகம் நடித்தவர். சிறுவயதிலேயே அவரது தந்தையாரின் பாட்டுக்குக் குழலூதும் கண்ணன் நடனம் ஆடியதாகக் கூறுவார்கள். கலைப்புலவர் நவரத்தினத்தின் ஆதரவுடன் தனது பன்னிரண்டாவது வயதில் நாடறியும் விதத்தில் கலைத்திறமையைக் காட்டியவர். 1940ஆம் ஆண்டு தமிழ்நாடு சென்று காரைக்குடி இராமகான சபாவில் நடிகரானவர். அச்சபாவில் பணியாற்றிய திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் பரதநாட்டியத்தைக் கற்றுத் தேர்ந்தவர். 1946–48 காலப்பகுதியில் நடனமேதை குரு கோபிநாத்திடம் கதகளி நடனத்தையும் கற்றுத் தேர்ச்சி பெற்றவர். கோபிநாத் மாஸ்ரரின் நடனக்குழுவில் பணியாற்றி டில்லி, கேரளா போன்ற இடங்களுக்குச் சென்று நிகழ்ச்சிகள் நடத்தியவர். ஸ்ரண்ட் சோமுவிடம் வாட் பயிற்சி பெற்றதுடன், புகழ்பெற்ற சினிமாத் தயாரிப்பு நிறுவனமான ஜெமினியின் சந்திரலேகா, சக்ரதாரி படங்களில் நடனமுமாடியவர். அடிக்கடி இந்தியா சென்று நாட்டியக்கலையின் நுட்பங்களைக் கற்றுவந்த அவர், யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 1948இல் V.R.இராஜநாயகம் மாஸ்ரரால் உருவாக்கப்பட்ட இசைநடனக் கல்லூரியில் (School of Dancing) இந்தியக் கலைஞர்களுடன் கற்பித்தவர். வட இலங்கைச் சங்கீதசபை 1948ஆம் ஆண்டு அவருக்குச் சிறந்த கலைஞருக்கான கௌரவத்தை முதலில் அளித்தது. பிரதேச கலாமன்றம் தங்கப்பதக்கம் அளித்துப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தது. "கலைச்செல்வி" சஞ்சிகையினர் நடத்திய விழாவில் "கலைச்செல்வன்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

**சொற்கோ** யாழ்ப்பாணத்து மக்களிடையே நடனக்கலையைப் பயில்பவர்கள் சார்பாகக் காணப்பட்ட மனோநிலையை உங்களது தந்தையார் எவ்வாறு மாற்றினார்?

**சிவநேசன்** குடும்பப் பெண்கள் அரங்கில் ஆடக்கூடாது என்று இருந்த நிலைமையை மாற்றி, யாழ்ப்பாணத்தின் பெரிய கல்விமான்கள், கலைஞர்கள் ஆகியோரின் புதல்விகளுக்கு நடனத்தைக் கற்பித்து அரங்கேற்றஞ் செய்து வைத்தார். இவர்களது மேடையேற்றத்தினால் பலரும் பரதக்கலையை விரும்பிக்கற்று மேடையேறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

**சொற்கோ** கல்விசார் புலத்தில் தங்களது தந்தையாரின் பணிபற்றிக் கூறுங்கள்.

**சிவநேசன்** இலங்கையின் முதலாவது பரதநடனத்துறை ஆசிரியராக 1952ஆம் ஆண்டு நெடுந்தீவு மகாவித்தியாலயத்துக்கு எனது தந்தையார் நியமிக்கப்பட்டார். அப்போதுதான் அழகியற் பாடங்களான நடனம், சங்கீதம், சித்திரம் ஆகியவை விருப்பத்துக்குரிய பாடங்களாகப் பாடசாலைகளில் இடைநிலை, உயர்வகுப்புக்களில் புகுத்தப்பட்டன. சிறிதுகாலத்தில் கீதாஞ்சலி வி.கே.நல்லையா அவர்களும் நடன ஆசிரியராக யாழ்ப்பாணத்தில் நியமிக்கப்பட்டார். நெடுந்தீவு, மண்டைதீவு, வேலணை, ஏழாலை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளிலும், ஸ்ரான்லி, வேம்படி மகளிர், உடுவில் மகளிர், இராமநாதன் மகளிர், பண்டத்தரிப்பு மகளிர், கொக்குவில் இந்து ஆகியவற்றிலும் நடன ஆசிரியராகப் பணியாற்றினார் எனது தந்தை. அவர் இறுதியாகப் பணியாற்றியது இராமநாதன் கல்லூரியில். அக்காலங்களில் பல்வேறு நடனப் போட்டிகளுக்கும், விழாக்களுக்கும் மாணவ–மாணவியரைப் பழக்கி அனுப்பிப் பரிசில்களும், பாராட்டுகளும் பெறச்செய்துள்ளார். பலசந்தர்ப்பங்களில் தங்கப் பதக்கங்களும் கிடைத்துள்ளன.

**சொற்கோ** சுப்பையா மாஸ்ரரின் மாணவ பரம்பரை பற்றிக் கொஞ்சம் விளக்கமாகக்கூறுங்கள்.

**சிவநேசன்** எல்லோரையும் நினைவில்வைத்துக் கூறமுடியாவிட்டாலும் முக்கியமான சிலரது பெயர்களை மாத்திரம் குறிப்பிடுகின்றேன். சியாமளா மோகன்ராஜ் (சென்னை), திரிபுரசுந்தரி யோகானந்தம் (கொழும்பு), சாந்தா பொன்னுத்துரை (கனடா), வேல்ஆனந்தன், லீலா ஆறுமுகையா (மதுரை), அமரர் இரா.சுந்தரலிங்கம் (முன்னாள் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்), தொம்முக்குட்டி மாஸ்ரர், கிருஷாந்தி ரவீந்திரா, பத்மரஜனி (அவுஸ்திரேலியா), பத்மினி செல்வேந்திரகுமார், நந்தினி சிவராசா, வசந்தி குஞ்சிதபாதம் ஆகியோர் எனது தந்தையாரிடம் கற்றுப் பரதக்கலையை வளர்த்த–வளர்த்து வரும் நாட்டியக் கலைஞர்கள்.

**சொற்கோ** உங்கள் தந்தையாரின் பெயர் ஈழத்து நடனக்கலை வரலாற்றில் தமிழ்ப் பண்பாட்டு மரபில் அழியாத இடம்பெற்றுள்ளது. அவர் பெற்றுள்ள வேறு பட்டங்கள் ஏதும் உண்டா?

**சிவநேசன்** 1973ஆம் ஆண்டு இணுவில் பரமானந்த சனசமூக நிலையத்தினர் தமது மண்ணில் பிறந்த கலைச்செல்வருக்கு

"அபிநயகேசரி" என்னும் பட்டமளித்துக் கௌரவித்தனர். ஏற்கனவே 1960இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலை, கலாசார விழாவில் அப்போதைய அரசாங்க அதிபர் எம்.ஸ்ரீகாந்தாவால் கௌரவிக்கப்பட்டார்.

**சொற்கோ** உங்கள் தந்தையார் நடத்திய கலைநிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவை எவையெனக் கருதுகிறீர்கள்?

**சிவநேசன்** அவர் பங்குபற்றிய ஒவ்வொரு நடன நிகழ்ச்சியும் சிறப்பானதுதான். இருப்பினும் எலிசபெத் மகாராணியின் இலங்கை வருகையின்போது கொழும்பில் நடத்திய நடனநிகழ்ச்சி, நெடுந்தீவுக்கு அப்போதைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல வந்தபோது அளித்த நடனநிகழ்ச்சி, கொழும்பில் நடைபெற்ற சைவமங்கையர் கழகத்தின் சிலம்பொலி பொருட்காட்சியில் (1960களில்) நடத்திய நிகழ்ச்சி ஆகியவை குறிப்பிடத்தக்கன.

**சொற்கோ** உங்களது தந்தையாரின் இறுதிக்காலம் எப்படி அமைந்தது?

**சிவனேசன்** கலைத்துறையில் ஓயாத உழைப்பு அவருடையது. நடனக்கலையினை அந்த அளவுக்கு அவர் நேசித்தார். 11.01.1976 அன்று அவரது பிறந்தநாள். இருப்பினும் அதற்கு இருநாட்கள் முன்னதாக இரத்த அழுத்தநோய் காரணமாக அவர் உயிர்நீத்துவிட்டார். ஆசிரியராக அரசசேவையிலிருக்கும் போதே இவ்வுலகை விட்டுப் பிரிந்துவிட்டார்.

**சொற்கோ** உங்களை மாத்திரம்தான் கலையுலக வாரிசாக விட்டுச் சென்றுள்ளாரா?

**சிவநேசன்** இல்லை. அவரது பிள்ளைகள் அனைவருமே கலையுணர்வு நிரம்பியவர்கள். தம்பி கிருபானந்தன் மிருதங்கக் கலையை முறைப்படி கற்று அரங்கேற்றம் செய்தவர்; "சங்கீதரத்தினம்" பட்டம் பெற்றவர். சகோதரிமார் சௌதாமினி, கிருத்தியாயினி, குமுதினி ஆகியோர் கலைத்துறையில் பட்டம் பெற்றுள்ளனர். பின்னவர் இருவரும் கனடா நாட்டில் பணிபுரிகின்றனர்.

**சொற்கோ** நல்லது; இனி உங்களது கலையுலக வாழ்வின் தொடக்கம் பற்றி விரிவாகக் கூறுங்கள்.

**சிவநேசன்** 1958ஆம் ஆண்டு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் மாபெரும் பொருட்காட்சியொன்று நடைபெற்றது. அந்த விழாவில்தான் எனது நடன அரங்கேற்றம் இடம்பெற்றது. அப்போது எனக்கு ஆறு வயது. அதன் பின்னர் இருநூற்றுக்கும் மேற்பட்ட நடன அளிக்கைகளைத் தனியாகவும், குழுவினருடனும் மேடைகளில் தந்துள்ளேன். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறும்போது 1978ஆம் ஆண்டு நடைபெற்ற முத்தமிழ்விழாவில் மகாவித்துவான் ந.வீரமணிஐயரின் "நல்லைக்குறவஞ்சி" நாட்டிய நாடகத்தில் மேடையில் ஆடினேன். இதுவே நான் நேரடியாக மேடையில் நடனமாடிய இறுதி நிகழ்ச்சியாகும். அதன்பின்னர் எனது மாணவ–மாணவியர் மேடையில் ஆடுவதைப் பார்த்து மனநிறைவடைகின்றேன்.

**சொற்கோ** நீங்கள் நடனத்துக்காக நட்டுவாங்கம் செய்யும்போது அந்தக் கம்பீரமும் தொனியும் சபையினரை ஈர்த்து விடுவதாகப் பலரும் கூறக்கேட்டிருக்கிறேன்; நேரடியாகவும் அவதானித்திருக்கிறேன். அந்தவகையில் யாரது பாணியைப் பின்பற்றி உங்களது நட்டுவாங்கச் செயற்றிறன் அமைந்துள்ளது எனக்கூறுவீர்களா?

**சிவநேசன்** எனது தந்தையார், எனக்கு வழிகாட்டிய குருமார் ஆகியோர் காட்டித்தந்த செல்நெறியில் பக்தியுடன் அடிவைத்துச் செல்லுகிறேன் என்பதுதான் எனது கருத்து. இறையருளும் குருமாரது ஆசியுமே நான் இந்தஅளவு நடனத்துறையில் வெற்றிகள் பெறக்காரணம் என நம்புகிறேன்.

**சொற்கோ** நீங்கள் தயாரித்தளித்த நாட்டிய நிகழ்ச்சிகளில் முக்கியமானவற்றைப் பற்றிச் சொல்ல முடியுமா?

**சிவநேசன்** இதுவரை சுமார் 25 புதிய நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, பேராதனை, வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில் தயாரித்து மேடையேற்றியுள்ளேன். கலாநிதி மனோன்மணி சண்முகதாஸின் "நித்திய சுமங்கலி" நாட்டிய நாடகம் 2001இல் முதலில் கைலாசபதி அரங்கிலும் பின்னர் கரவெட்டி, உடுப்பிட்டி போன்ற இடங்களிலும் நிதியுதவிக்காக மேடையேற்றப்பட்டது. பேராசிரியர் அ.சண்முகதாஸின் வழிகாட்டலில் "குற்றாலக் குறவஞ்சி"யையும், பேராசிரியர் கா.சிவத்தம்பியின் மேற்பார்வையில் "கண்ணனென்பதோர் நினைவுமாகி" என்பதையும் மேடையேற்றியமையும் குறிப்பிடத்தக்கது. வீரமணி ஐயரின் "விபுலாநந்தர் வாழ்க்கை வரலாறு", "நவரச ராமாயணம்", "கற்பகவல்லி" உட்படப் பல்வேறு ஆலயக் கீர்த்தனைகளுக்கும் நடனநிகழ்ச்சிகளைத் தயாரித்து அளித்துள்ளேன்.

**சொற்கோ** முக்கியமான "ஆர்கொலோ சதுரர்" நாட்டிய நாடகம் பற்றிக் கூறவில்லையே?

**சிவநேசன்** இது 2002ஆம் ஆண்டு முதலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கிலும், பின்னர் கொழும்பிலுமாக ஆறு தடவைகள் மேடையேறியது. கலாநிதி குழந்தை சண்முகலிங்கத்தின் எழுத்து வண்ணத்தில், 'சாகித்ய இரத்தினம்' கவிஞர் இ.முருகையன் அவர்களின் பாடல்களோடு, எனது நெறியாள்கையில் சமகாலத் தமிழர்களது உணர்வுகளை

உள்வாங்கி, மணிவாசகரின் வாசகத்தினைத் தலைப்பாக்கி, புதிய மேடை உத்திகளைக் கையாண்டு, பழைமையின் செழுமை குன்றாது தயாரித்தளிக்கப்பட்ட நாட்டிய நாடகமே "ஆர்கொலோ சதுரர்" ஆகும். இதில் நடித்தவர்களுக்கும் இதனைத் தயாரித்தவர்களுக்கும் எனக்கும்கூட இந்நாட்டிய நாடகம் வெற்றியையும் பாராட்டையும் பெற்றுத்தந்தது. குறிப்பாகச் சொல்லப்போனால் பழைய மரபுகளின் அழகு குலையாதவாறு புதிய மெருகுகளைப் பொருத்தமாக இணைத்துக் கொள்வதனால் பரதக்கலையானது பொலிவு பெறுவதுடன், மக்களிடையே போற்றுதலையும் பெற்றுக் கொள்வதாக "ஆர்கொலோ சதுரர்" என்னை உணரவைத்தது. அதன் பாடுபொருளும் நுட்பங்களும், மரபும் புதுமையுமாயிருந்தது.

**சொற்கோ** "ஆர்கொலோ சதுரர்" பழைய பாரதக் கதையாகவிருந்தாலும் அதன் பன்னிரண்டாம் நாள் போரின் வடுக்களும், பதின்மூன்றாம் நாள் போரின் ஆயத்தங்களும் கூறுகின்ற விடயங்கள்மூலம், நமது மண்ணில் நீண்டகாலமாகத் தொடருகின்ற யுத்தத்தின் கொடுமையை, அதன் விளைவுகளை மனம் கனக்கும் வண்ணம் காண்போர் உள்ளத்தில் பதியவைத்ததில் வெற்றிகண்ட நாட்டிய நாடகமாகப் பலரும் கருதுகிறார்கள். அதுபற்றிய தங்களது கருத்து யாது?

**சிவநேசன்** உண்மைதான்! அந்த நாடகத்தைப் பார்த்தவர்கள் உளப்பூர்வமாகப் பாராட்டியுள்ளனர். பன்னிரண்டாம் நாள் போர் முடிந்தபிறகு மாண்டவர்களைத் தேடும்போது ஒலியும், இசையும், பாத்திர அசைவுகளும், பாடல்களும், மறுநாட்போரின் எதிர்பார்ப்பும் தருகின்ற ஏக்கம், உணர்ச்சி ஆகியவை சமகாலப் போரின் வடுக்களைச் சுமந்திருக்கும் மக்களிடையே தாங்கொணாத உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. அதுவே நாடகத்தின் வெற்றியாக அமைந்தது.

**சொற்கோ** ஆசிரிய கலாசாலை, கலாபவனம் ஆகியவற்றுக்குப் புறம்பாக உள்களது கலைப்பணிகள் வேறேதும் உள்ளதா?

**சிவநேசன்** நிறையவே செய்திருக்கிறேன்; இன்னமும் செய்து வருகின்றேன். நான் கல்லூரியில் கற்பித்த காலத்திலேயே இராமநாதன் அக்கடமியில் வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றினேன். இடையிடையே பரீட்சகராயும் செயற்பட்டேன். அடுத்து வட இலங்கைச் சங்கீதசபையின் பாட ஒழுங்கமைப்பின்போது பணியாற்றியதுடன் (1983இல்), உதவிப்பரீட்சகராயும், பின்னர் பிரதம பரீட்சகராயும் கடமையாற்றி வருகின்றேன். சபையின் பரீட்சகர் கடமையைக் கொழும்பில் 25 ஆண்டுகளாகச் செய்துவருகிறேன். மேலும் தேசிய கல்வி நிறுவகத்தில் பரதநாட்டிய பாடத்துக்கான ஒழுங்கமைப்புக்குழுவில் பேராசிரியர் கா.சிவத்தம்பி, திரு. உ.நவரத்தினம் ஆகியோருடன் பணியாற்றியுள்ளேன். தமிழ்த்தினப்போட்டியின் கலைத்திறன் நிகழ்ச்சி உருவாக்கக்குழு உறுப்பினராகவும், இறுதிப்போட்டியின் நடுவராகவும் திருகோணமலை, கொழும்பு முதலான இடங்களுக்குச் சென்று பணிசெய்துள்ளேன். தற்போது திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கலைக்காவிரி நுண்கலை நிறுவனப் பரீட்சைகளும் செயற்பாடுகளும் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற ஆதரவில் நடைபெற்று வருகின்றன. அந்தப் பட்டப்படிப்புக்கான விரிவுரைகள் மற்றும் செயன்முறைகளில் நானும் துணைநிற்கின்றேன்.

**சொற்கோ** வெளிநாடுகளில் உங்களது கலைப்பயணம் தொடர்பான விடயங்களைக் கூறமுடியுமா?

**சிவநேசன்** எனது கல்விக்காகவும், பரதநாட்டியம் பற்றிய நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்காகவும் பலதடவைகள் தமிழகம் சென்றுள்ளேன். அத்தகைய அனுபவமே என்னிடம் வரும் மாணவர்களுக்கு இதயபூர்வமாக நாட்டியக் கலையைக் கற்பிக்கக்கூடிய ஆற்றலை என்னிடம் வளர்த்தது என நினைக்கின்றேன். சுமார் 25 நாட்டிய அரங்கேற்றங்களை எனது மாணவர்க்காகச் செய்துள்ளேன். என்னிடம் சில வெளிநாட்டவர்கூட நடனக்கலையின் நுட்பங்களைக் கற்றுப்போயுள்ளனர். நட்டுவாங்கத்தில் பயிற்சிபெறும் பொருட்டு ஆசிரியைகள் வந்து கற்றுள்ளனர். 2004ஆம் ஆண்டளவில்கூட UNHCR இல் பணிபுரியும் வெளிநாட்டுப் பெண் ஒருவர் சில நாட்கள் என்னிடம் கற்றுச் சென்றார். ஆறு தடவைகள் ஐரோப்பிய, வடஅமெரிக்க நாடுகள் தொடர்பாக எனது பயணங்கள் அமைந்திருந்தன. ஒருதடவை மட்டுமே கனடாவிற்குச் சென்றிருந்தேன். ஏனையவை சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுக்குச் சென்றவையாகும். 2000ஆம் ஆண்டு பேராசிரியர் சிவத்தம்பியுடன் பாட ஒழுங்கமைப்புக்காகச் சுவிஸ் சென்றேன். அப்போது அங்கு நடன நிகழ்ச்சிகளையும் நடத்தினேன். 2001 ஆகஸ்டில் வட இலங்கைச் சங்கீதசபைப் பரீட்சைக்காகக் கனடா சென்றேன். அங்கு நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சியொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டேன். 2002இல் பரீட்சை தொடர்பாகவும், பிரதம விருந்தினர் அழைப்புக்காகவும் சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய மூன்று நாடுகளுக்குச் சென்றேன். 2004, 2005ஆம் ஆண்டுகளில் மீண்டும் சுவிஸ் நாட்டுக்கு மட்டுமே சென்று திரும்பினேன்.

**சொற்கோ** புலம்பெயர்ந்து சென்றாலும் நம்மவர்கள் உங்களது நாட்டியப்புலமை மீது கொண்ட நம்பிக்கையை இழக்காது, உங்களை அடிக்கடி தமது வாழ்விடத்திற்கு அழைத்துப் பயனடைந்துள்ளார்கள் என்றே கருதுகின்றேன். சரி! சிவநேசன் அவர்களே, ஐரோப்பிய நாடுகளிலும் கனடா போன்ற நாடுகளிலும் நம்மவரிடையே மரபுக்கலையினை வளர்க்கின்ற ஆர்வம் எப்படி இருக்கிறது?

**சிவநேசன்** ஓரளவுக்குப் பொருளாதார வசதிகள் மேம்பட்டிருப்பதால் அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் பகுதிநேரமாகப் பரதநாட்டியம் பயில்வதற்குத் தமது பிள்ளைகளை அனுப்புகிறார்கள். தகுதிவாய்ந்த நமது நடன ஆசிரியைகளும் அங்குபணி செய்கிறார்கள். வேற்றுநாடுகளில் எமது பண்பாட்டை நிலைபெறச் செய்யும் கருவியாக நடனக்கலை திகழ்கிறது. "நாட்டியமயில்" போட்டி வருடந்தோறும் சுவிசில் நடைபெறுகிறது. ஐரோப்பா முழுவதிலுமிருந்து நம்நாட்டுக் கலைஞர்கள் அதில் கலந்து கொள்ளுகிறார்கள். ஆனால் பாடசாலைகளில் வகுப்புத்தரம் அதிகரிக்கும்போது கற்றல்சுமை காரணமாக நடனம் பயில்வதை நிறுத்தவேண்டிய சூழ்நிலை பிள்ளைகளுக்கு ஏற்படுகிறது. எப்படியிருப்பினும் தரமான பரதக்கலையை வளர்க்க அங்கு முயற்சி எடுக்கப்படுவது வரவேற்கத்தக்கதே.

**சொற்கோ** நடனத்துறை சம்பந்தமான உங்களது எழுத்தாக்கங்கள் பற்றிக் கூறுங்கள்.

**சிவநேசன்** ஆசிரிய கலாசாலைச் சஞ்சிகை, பேராதனைப் பல்கலைக்கழக "இளங்கதிர்" சஞ்சிகை, விக்டோரியா நுண்கலைமன்றச் சஞ்சிகை, வடக்குக் கிழக்கு கல்வியமைச்சு வெளியிட்ட சஞ்சிகை உட்பட கொழும்பு மற்றும் யாழ்ப்பாணப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் கனிசமான கட்டுரைகளை எழுதியுள்ளேன். உதயன்(மூன்றுமுறை), தினக்குரல்,வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் எனது செவ்வியும் வந்துள்ளது.

**சொற்கோ** உங்களது மாணவர் பரம்பரை பற்றி....

**சிவநேசன்** இசைமேதை திருமதி சரஸ்வதி பாக்கியராசாவின் மகள் ஹம்சானந்திதான் எனது முதல்மாணவி. 1976இல் வீரசிங்கம் மண்டபத்தில் அவரது அரங்கேற்றம் நடைபெற்றது. தற்போது பிரான்சில் வதியும் அருள்மோகன், கனடாவிலுள்ள ரமணன், மிருதங்க வித்துவன் மகேந்திரன் அவர்களின் புதல்வன் தவேந்திரன் ஆகியோருடன் எனது மகள் தேவந்தியும் குறிப்பிடத்தக்கவர்கள்.

**சொற்கோ** தங்களது மாணவர்கள் பங்குபற்றும் நடன நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்பிடுங்கள்.

**சிவநேசன்** அதிகளவில் பார்த்தால் பத்துக்கும் குறைவான அதாவது ஐந்தாறு மேடையேற்றங்களையே குறிப்பிட்ட ஒரு விடயம் சார்பாகச் செய்யமுடிகிறது. ஏனெனில் அதற்கிடையில் நிகழ்ச்சியில் பங்குபற்றிய மாணவர்கள் மணமுடித்தோ, வேறுநாடுகளுக்குச் சென்றோ, உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தோ, வேறுகாரணிகளால் பங்குபற்ற முடியாமலோ போய்விடுகிறது. எனவே புதியவர்களைக் கொண்டு வேறொரு நிகழ்ச்சியைத் தயாரிக்கும் சூழ்நிலை உருவாகிறது.

**சொற்கோ** தங்களது மகளின் நடன அரங்கேற்றம் பிரமாண்டமான முறையில் நடந்ததென அறிகிறோம். அதுபற்றிய தங்களின் கருத்து யாது?

**சிவநேசன்** எனது குரு அடையாறு பத்மஸ்ரீ லக்ஸ்மணன் அவர்களது ஆசியுடன், அவரே பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த மகிழ்ச்சியான நிகழ்ச்சி அது. 2005இல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. எமது பிரதேசத்திலுள்ள கலைஞர்களும், எனது மாணவர்களும், கலாரசிகர்களும் திரண்டுவந்து ஊக்கமளித்து என்னையும் எனது குடும்பத்தினரையும் வாழ்த்திச் சென்றனர்.

**சொற்கோ** புதிய மாணவர் பரம்பரையொன்று தற்போதும் தங்களிடம் பரதம் பயில்கிறதை நினைக்கையில் மகிழ்ச்சிதான். காலம் மாறும்போது கருத்தும் மாறும்தானே? தங்களது கலையுலகப் பணியின் தொடர்ச்சியாக வேறு ஏதாவது செயற்பாடுகள் உண்டா?

**சிவநேசன்** யாழ்ப்பாணம் சாந்திகம் உளவளநிலையத்தின் பணிகளிலும், யாழ்ப்பாணப் பிரதேச முன்பள்ளிக் கல்விக்கான பணிகளிலும், ஆசிரியர் தொலைக்கல்வி நெறிக்கான பணிகளிலும்கூட என்னை நான் இணைத்துச் செயற்பட்டிருந்தேன். அதுபோல கல்வி–கலைசார்ந்த துறைகளில் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் உதவிகேட்டு யாரும் அணுகினால் நமது வருங்காலச் சந்ததிக்காக என்னால் முடிந்தவரை உதவத் தயாராயுள்ளேன்.

**சொற்கோ** நன்றி சிவநேசன் அவர்களே! கலை, கடவுளால் அருளப்படுவதும் அவருக்கே அர்ப்பணமாவதும் ஆகும். அதனைத் தெய்வப் பணியாகக் கருதும் தங்களது உள்ளமும் போற்றுதற்குரியது. நீண்டகாலம் நடனத்துறையில் ஈடுபட்டுழைத்து வருகிறீர்கள். நீங்கள் பெற்ற கௌரவங்கள் பற்றிக் கூறுங்கள்.

**சிவநேசன்** 1991இல் நல்லாசிரியர் விருது கிடைத்தது. நல்லூர் பிரதேச செயலகம் "கலைஞானச்சுடர்" விருதினை 2004ஆம் ஆண்டளவில் தந்து கௌரவித்தது. 2005இல் "கலாகீர்த்தி" விருதும், 2008 மார்ச்சில் யாழ்ப்பாணம் பெண்கள் அமைப்பினால் "சாதனை மகளிர்" விருதும் கிடைத்தன. இவைதவிர வட இலங்கைச் சங்கீதசபை, யாழ்ப்பாண மாவட்டக் கல்வி வலயங்கள், பல்வேறு பொது நிறுவனங்கள் யாவும் என்னைக் கௌரவித்துள்ளன.

**சொற்கோ** உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரத நாட்டியத்துறையில் புகழ்பெற்ற கலைஞரான தாங்கள், இலங்கையின் தற்காலச் சூழலில், மரபுசார் நடனத்துறை பற்றிக்கூற விரும்புவதென்ன?

**சிவநேசன்** பாடசாலைக் கலைத்திட்டத்தில் பரதநாட்டியமும் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டதனால் சமூக அந்தஸ்தும், பரதநாட்டியக் கலைஞர்களுக்கு மதிப்பும் ஏற்பட்டுள்ளது. பலபேருக்கு ஆசிரியத் தொழிலும் கிடைத்து வருகிறது. இதனால் நாம் கலைஞர்களை உருவாக்காது ஆசிரியர்களை உருவாக்குகிறோம் என்றும் கூறப்படுகிறது. "சதிர்" என ஒரு காலத்தில் அழைக்கப்பட்டு உயர் சமூகத்தவரிடையே செல்வாக்கில்லாமல் விளங்கிய சூழல் தற்போது மறைந்துவிட்டது. ஆனால் முன்னர் ஆத்மார்த்தமாகக் கலைநிகழ்ச்சிகள் அதிகமாக நடந்தன. தற்போது பரீட்சையை மையமாகக் கொண்டே நடனக்கலை அதிகளவில் பயிலப்படுகிறது. போதாததற்கு நாட்டின் அசாதாரண சூழ்நிலையும் தாக்கம் விளைவிக்கிறது. இரவுநேர விழாக்கள் இல்லை. சபையினரின் செயற்பாட்டு இயல்பும் குறைவு. வெகுசன ஊடகங்களின் தாக்கமும் மேடை அளிக்கைகளை மக்கள் நாடாமற் செய்கின்றது. சென்ற ஆண்டிலிருந்து 6–11 தரங்களில் இலக்கியமும் ஒரு அழகியற் பாடமாகச் சேர்க்கப்பட்டதனால் முன்னர்போல நடனம், சங்கீதம், சித்திரம் கற்போர்தொகை குறைய வாய்ப்புண்டு.

**சொற்கோ** இறுதியாக ஒருகேள்வி. வளரும் கலைஞர்களுக்குத் தாங்கள் கூறக்கூடிய அறிவுரைகள் யாவை?

**சிவநேசன்** வளருகின்ற கலைஞர்கள் செயன்முறைப் பயிற்சியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். குருபக்தி அதிகம் வேண்டும். அவசரப்பட்டு அரங்கேற்றம் செய்துகொள்ளாது, தீவிர பயிற்சியின் பின்னரே மேடையேற வேண்டும். புதிய நுட்பங்களை மரபோடு இணைக்க வேண்டும். மனப்பூர்வமாகப் பலருக்கும் நாட்டியக்கலையைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அத்துடன் கலையார்வமுடையோர் இதனை விருத்தி செய்யப்பல துறையினரையும் இணைத்துப் பல்கலைக்கழக மட்டத்தில் கருத்தரங்குகள், செயலமர்வுகள், பட்டறைகள் நடத்துதல் வேண்டும். வெளியிடத்துக் கலைஞர்களை அழைத்து அவற்றில் பங்குகொள்ளச் செய்தல் வேண்டும். பல்லின, பல்மதக் கலைஞர்களின் சங்கம நிகழ்ச்சிகள் வளர்ச்சியடைதல் வேண்டும். தகுதிபெற்றோர் மேலதிக புலமைபெறப் புலமைப்பரிசில்கள் வழங்கி உதவ அரசும் தனியாரும் முன்வரவேண்டும். பல்லினக் கலாசாரத்தினூடாகத் தமிழர்களின் தனித்துவம் நிலைபெற தமிழ் மாணவர் கடுமையாக உழைக்க வேண்டும்.

**சொற்கோ** சிவநேசன் அவர்களே, இவ்வளவு நேரமும் தங்களது நேரத்தையும் பொருட்படுத்தாது தாங்கள் 'கலைமலர்' சஞ்சிகையின் நேர்காணலுக்கு உதவியமைக்கு கலைமலர்க்குழுவினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**சிவநேசன்** மீண்டும் ஒருமுறை எனது கலையுலக அனுபவங்களை மீட்டிப்பார்க்க வாய்ப்பளித்த உங்களுக்கும் எனது மனமுவந்த நன்றி.

### கொசோவா

யூகோஸ்லாவியாவிலிருந்து ஸ்லோவேனியா, குரோஸியா, மஸிடோனியா, பொஸ்னியா, மொன்ரீநீக்ரோ ஆகிய நாடுகள் தனிநாடுகளாகப் பிரிந்து சென்றபின்னர், 17.02.2008இல் ஆறாவது சுதந்திரத் தனிநாடாகக் கொசோவா பிரிந்தது. இந்நாட்டின் தலைநகர் பிரிஸ்ரினா. இந்நாடு 10,887 ச.கி.மீ பரப்பளவுடையது; 20 இலட்சம் மக்களைக் கொண்டது. அதில் 90 வீதத்தினர் அல்பேனியர். 10வீதத்தினர் சேர்பியர். 1999இல் நடைபெற்ற போருக்குப்பின் ஐ.நா. வின் மேற்பார்வையின் கீழ் கொசோவா வந்தது. 1974 முதல் கொசோவாவானது செர்பியாவின் தன்னாட்சி பெற்ற பகுதியாகவே இருந்து வந்துள்ளது. 1992இல் பொஸ்னியாவும், 2006இல் மொன்டி நீக்ரோவும் பிரிந்தன.



# பரதம் — ஒரு நோக்கு

கலாகீர்த்தி
திருமதி சாந்தினி சிவநேசன்,
முதுநிலை விரிவுரையாளர்,
ஆசிரியகலாசாலை,கோப்பாய்.

"பரதம்" இது ஒரு பரந்துபட்ட பிரபஞ்சம். ஏழ்கடல்களும், மலைத்தொடர்களும், ஐந்து நிலப்பரப்புக்களும், உயிர் உள்ளனவும், உயிரற்றனவுமான அனைத்தையுமே தன்னகத்தே உள்ளடக்கிய ஒரு வலுவான பதம்!

ஆம், அசைவு; அதிலும் ஒரு காலப்பிரமாணத்துடனும், ஒரு உயிர்த்துடிப்புடனும் கூடிய அசைவு - இதனைக் குறிக்கும் ஒரு சுட்டியாகவே இப்பதம் உள்ளது. இது ஒரு தனிமனிதனையோ, தனிக்கலை வடிவத்தையோ குறிக்கும் பதமல்ல. இதுபற்றிய ஒரு அறிமுகம் தொடர்பான சிந்தனையை நாம் முன்னெடுப்பதானால் இதனுடைய அடிவேரை, இதனுடைய மூலத்தைப் பற்றிப் பின்னோக்கி நீண்டதோர் பயணத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியம். எனவே, பலநூறு ஆண்டுகள் பின்னோக்கி நாம் சென்றே ஆகவேண்டும்.

மானிடவியல் ஆய்வின் அடிப்படையில் நோக்குவோமேயானால், ஆதி மனிதன் மொழியின்றி, வாழ வழியின்றி, போகும் திசை பற்றிய அறிவின்றி, தன்னைப் பற்றிய அறிவின்றி, விலங்கோடு விலங்காக வாழ்ந்த காலத்தை நின்று நிதானித்துப் பார்ப்பது அவசியம். மனிதக் குரங்கிடமிருந்து கைகளைப் பயன்படுத்தும் அறிவைப் பெற்று மனிதன் மெல்ல நிமிர்கிறான். அடிப்படைத் தேவையான உணவைப் பெறுவதிலிருந்து அவன் கருவிகளை கற்களாலேயே உருவாக்கித் தன் பசி தீர்க்க முனைகிறான்.

அதிலும் அவன் விலங்குகளோடு போட்டிபோட வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆம், போராட வேண்டிய நிர்ப்பந்தத்தில் வெற்றியைத் தனதாக்கிக்கொள்ள அவன் நன்கு பயிற்சி செய்தே அந்த உணவுப் போராட்டத்தை நடத்த வேண்டியவனாகிறான்.

மனிதன் குழுவாக வாழ்பவன். எனவே, அவன் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ள வேண்டிய தேவை உண்டு. ஆனால் மொழி இல்லை. ஒலிக்குறிப்புகள், மனிதனின் உறுப்புக்களின் அசைவுகள், சைகைகள், அவனுடைய கருத்துக்களைப் பிறருடன் பரிமாறுவதற்குத் துணைபுரிந்தன. இந்த அசைவுகளை அவன் பலதடவை பயிற்சிசெய்து, ஒத்திகை பார்த்து, அந்த அசைவுகளை ஒரு ஒத்திசைவுக்கேற்பத் திட்டமிட்டு நடாத்தி அதில் வெற்றியும் பெற்றான். வேட்டை இவ்வாறு தொடர்ந்தது.

புராதன மனிதன் தன்னைச் சூழவுள்ள இயற்கையையும், இயற்கைச் சக்திகளையும், அவற்றின் திடீர் மாற்றங்களையும் புரிந்துகொள்ள முடியாமல் திக்குமுக்காடி ஒரு பயம் நிறைந்த உயிர் வாழ்க்கை நடத்தினான். இயற்கையின் சுழற்சி, பருவகாலங்கள், இடிமின்னல், புயல், வெள்ளம் போன்ற அனர்த்தங்களைப் புரிகின்ற தன்னிலும் மேலான ஒரு சக்தியைப் பற்றி எண்ணி அவன் திகில் கொண்டான். இதனால் அவன் அந்த அற்புத சக்தியுடன் உரையாடித் தம்மை உயிர்வாழ விடும்படி மன்றாட வேண்டிய அவசியத்திற்கு உள்ளாகிய காரணத்தால் சைகைகளாலும், அபிநயத்தாலும் மனம் போனபடி ஆடும் ஆட்டங்களாலும் உரையாட ஆரம்பித்தான்.

மழை வேண்டினால் - முகில் சேர்வதை, இடி மின்னல் மழை பொழிவதை, தானியம் வளர்வதை, இனவிருத்தி ஏற்படுவதை எல்லாம் பாவனை செய்து தமக்கு வேண்டிய விதத்தில் அபிநயம் செய்தான். ஆனால் சக்திகள் இவற்றிற்கு செவிசாய்க்கவில்லை என்று கண்டு, தொடர்ந்து மிக விறுவிறுப்பாக, பல நாட்கள் தொடர்ந்து செய்தான். அதில் வெற்றியும் கண்டான். எனவே ஆட்டங்கள், அபிநயங்கள், செய்கைகள், கூச்சல்கள், ஒலிகள், கைதட்டல்கள், குதித்தல், பாய்தல், மிதத்தல், நீந்துதல், புரளுதல், கரணமடித்தல் போன்ற அனைத்துச் செயல்களையும் மிகைப்படுத்திச் செய்தாலே இயற்கைத் தேவனை ஈர்க்கலாம் என்ற நம்பிக்கை ஆதிமனிதனின் மனதிலே மிக ஆழமாக வேரூன்றிவிட்டதைக் காண முடிகிறது.



இந்த மனிதக்குழுவிலே ஒருவன் மிகவும் அற்புதமாக ஆடித் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியதும் அவன் தலைவனாகிறான். இவன் ஏனையோரிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டுவதற்காகப் பூசாரி, புரோகிதன் என்ற அந்தஸ்துக்கு உரியவனாகிறான். புராதன மக்களின் வாழ்வியல் தேவைகள் இவ்வாறு ஆடல் படிமுறைகளுக்கூடாக ஆரம்பித்து மிக வேகமாகப் பரிணாம வளர்ச்சி பெற்றன.

மேற்படி இயற்கை நெறிக்காலம் முடிவுற்றபோது, குறுநிலத் தலைவர்கள், ஐந்து நிலங்கள் போன்ற வாழ்க்கைப் படிநிலைகள் வளர,

கூத்தர்குழாம் வகைகள் முன்னெழுந்தன. தொடர்ந்து அறநெறிக் காலத்தில் சிலப்பதிகாரம் பேசுகின்ற அரங்கும், ஆடலும் ஒரு செவ்வியல் வளர்ச்சிக்கு ஆடலை இட்டுச் செல்வதைக் காணலாம். ஆடல்மகள் மாதவியுடன் ஆடல் இலக்கணம் முன் வைக்கப்படுகின்றது. கூடவே பொதுமகளிர் குலமும் உருவாகின்றது. வேத்தியல் மூலம் செவ்வியல் ஆடல்களும், பொதுவியல் மூலம் கீழ்நிலை ஆடல்களும் வளர்ச்சி பெற்றன.

இந்நிலையில் தேவதாசிகள் ஆடலுக்கு உரியவராகும் நிலையைக் காணலாம். பக்தி, பரவசமாக இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தெய்வீக நடனமானது, ஆட்சி மாற்றங்கள், அந்நியர் வருகைகள் காரணமாகத் தனது கௌரவத்தை இழந்து நலிவுற்றது. எனினும், மீண்டும் கட்டடக்கலை, சிற்பக்கலைகளின் நிலைகொள்ளல் காரணமாக மீண்டும் புனிதத்துவமடைந்தது. மகேந்திர பல்லவன், மாமல்லன் போன்ற மாமன்னர் காலம் ஒரு பொற்காலமாக மாறி நடனக் கலையை உன்னத நிலைக்கு இட்டுச்சென்றது. அந்த உன்னதத்தில் உயர்குடிப் பெண்கள், இதனை விரும்பிக் கற்கும் கௌரவம் ஏற்பட்டது.

இன்று நாம் பார்க்கும் நடனத்தின் 'மூலம்' அடிநிலை மக்களின் அசைவுகளில் இருந்து தோன்றி பல்வேறு பரிணாம வளர்ச்சி கண்டு, இன்று சாஸ்திரீய -கிராமியவடிவ அமைப்புக்களில் வளர்ந்துள்ளமையைக் காண முடிகின்றது.

இன்றைய கல்வியியலாளர்கள் கற்றல் முறைக்கு நடனத்தை ஒரு ஊடகமாகப் பயன்படுத்தும் அளவிற்கு இது மனதின் ஆழங்களுக்கு ஊடுருவிச் சென்று தாக்கத்தை ஏற்படுத்தவல்லது என்ற உண்மையைப் புலன்கொள்ள முடிகின்றது. "கலை கலைக்காகவே" என்னும் நிலைமாறி, இன்று இதே "கலை மக்களுக்காகவே" என்கின்ற நிலை எவ்வாறு வந்தது? ஏன் வந்தது? என்பது பற்றிச் சற்றே நாம் பார்க்கலாம். நல்ல கற்றறிவாளர்கள் மத்தியிலே அரங்கேறும் கலைவடிவங்கள் சாதிக்கவல்ல சாதனைகளைக் காட்டிலும், கலையின் நுணுக்கம் அறியாத பெரும்பான்மை மக்கள் மத்தியில் கலை ஊடுருவிச்சென்று சாதிக்க வேண்டிய சாதனைகள் இன்றைய உடனடித் தேவையாக மிளிர்வதைக் காணும்போது, கலை மக்களுக்காகவே என்பதைப் பற்றி நாம் தீர்மானிக்க வேண்டியவராகிறோம். "ஐந்தாவது வேதம்" என்று நடனம் குறிப்பிடப்பட்டதன் நோக்கம் இன்றுதான் நிறைவேறும் கட்டம் நெருங்கியுள்ளதோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

இருபது நூற்றாண்டுகளாக நடனம் பல்வேறு படிநிலை வளர்ச்சிகளைத் தாண்டி வந்துள்ளது. இதில் முக்கிய பங்காளர் ஆடுவோனும், பார்ப்போரும் எனும் இரண்டு பகுதியினருமாவர். ஆடுவோனும் வளர்ந்துள்ளான்; பார்ப்போரும் வளர்ந்துள்ளார்கள். இரண்டுக்கும் மத்தியில் ஆடலும் வளர்ந்துள்ளது. எந்தவொரு ஆற்றுகைக் கலைக்கும் பார்வையாளரும் அவர்தம் ரசனை உணர்வுகளும் உடனுக்குடன் பரிமாறப்பட்டுக் கொண்டேதான் இருக்கும். எனவே, 'பரதம்' கண்ட வளர்ச்சி பற்றிப் பார்க்கும் நாம், இன்று அதன் தேவை, எளிமை, அது செலுத்தும் தாக்கம் என்பவற்றின் அடிப்படையையே பார்க்க வேண்டும். குருகுலமாக இருந்து வளர்ந்த கலை, கலாசாலைகளுக்குள் சென்று ஊடகங்கள் வாயிலாகப் பன்முகப்படுத்தப்பட்ட கிளைகளைப் பரப்பி வியாபித்துள்ளமை கண்கூடு.

ஒரு கலையை ஒருவன் கற்று முடித்துவிட முடியாது. அவன் தனக்குள் அதனை உள்வாங்குவது முதற்கட்டம். பின்பு அதனைத் தனது வளங்களுடன் வெளியிடுவது அடுத்த கட்டம். கலை குடிகொள்ளும் உள்ளம் இயற்கையைப் போன்று பசுமையானதாகவும், நீதியானதாகவும், தெய்வீகமானதாகவும் அமைய வேண்டியது அவசியம். குரூரம், வஞ்சகம், வன்முறை போன்ற தீய உணர்வுகள் கலை குடிகொள்ளும் தூய உள்ளத்தில் குடியிருக்கக்கூடாது. கலை தெய்வீகமானது. ஆடும் பெருமானின் அசைவே அகிலம் அனைத்தையும் ஆட்டுவிக்கும் அசைவாக எமது புராணங்கள் கூறியுள்ளன.

இன்றைய "ஆசிரியத்துவம்" வரையில் நடனக்கலை கிளை பரப்பியுள்ள இவ்வேளையில், இக்கலையைத் தெளிவுறக் கற்கவேண்டியது அவசியம். நல்லமொழி அறிவும், இசையறிவும், தாள ஞானமும் ஆடற்கலையின் உன்னதமான வெளிப்பாட்டுக்கு அவசியமானது. நடனக்கலையின் முக்கியமான பிரச்சினையே பிறரில் தங்கியிருத்தல் ஆகும். சரியான இசைபடுதலும், நட்டுவாங்கமும், நிறைவான குருபக்தியும் இக்கலையின் உயர்நிலைகளாகின்றன.

"ஊனினை உருக்கி உள்ளொளி பரப்பி உலப்பிலா ஆனந்தம் நிறைந்த" - இந்த தெய்வீகக் கலையானது, கற்பவனையும், கற்பிப்பவனையும் பார்ப்போரையும் ஒருங்கே புனிதப்படுத்தவல்ல கலையாகும். இக்கலை வளர்ச்சிக்குத் தொடர்ந்த பயிற்சியும், தெளிவான வழிநடத்தலும், நிறைவான விடய ஞானமும் கொண்ட தேடல் மிக மிக அவசியமானது. இது இன்னும் புதிய பரிமாணங்களைத் தேடப்போகும் ஆத்மார்த்த கலையாகும் என்பதில் ஐயம் சிறிதேனும் இல்லை.



# குழந்தைக் கல்வியில் இசைப்பாடல்களின் வகு

செல்வி மலர் சின்னையா,
முதுநிலை விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

இசை என்பது காற்றில் கலந்து, செவிவழி புகுந்து, ஒருவரின் உடலையும் உள்ளத்தையும் இதமாக்கி இயக்கிடும் சக்திமிக்கது. பிறர் இசைக்கவும், தான் இசைப்பதன் மூலமும் ஒருவரின் இயக்கசக்தி வலிமையடைகிறது. ஒலியின் ஒரு வடிவம் மொழி. மொழியின் ஒரு வடிவம் இசை.

சொல், பொருள் என்பவை ஏற்ற இராகம், தாளம், குரல்வளம் என்பவற்றோடு இணையும்போது உருவானதே (இசைக்கருவிகள் உட்பட) இசைப்பாடல்கள். இப்பாடல்கள் மனிதனின் இரசனையுடன் ஒன்றுசேரும் போது அவனைத் தன்வசப்படுத்திக் கொள்கின்றன. இறைவனைத் தன் வசப்படுத்த மனிதன் இசையைக் கையாண்டமையை இராவணன் மேகமலைக்குள் அகப்பட்ட நிலையில் சாமவேதம் பாடி மீண்ட வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

இசைக்கிருக்கும் வல்லமையின் பொருத்தப்பாட்டினை மனித உயிருடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். மனிதனின் உயிர், காற்று வடிவமானது எனப்படுகிறது. இசையும் காற்றில் கலந்து காற்றில் மிதந்து செவிக்குள் நுழைந்து, காற்றாயிருக்கும் உயிருடன் சேர்ந்து இரசனை என்ற வடிவில் உடலையும் உள்ளத்தையும் இயக்கும் இயற்கை சக்தியாக மிளிர்கிறது.

இசையைக் கிரகித்து இரசிக்கும் மனித மனதை, மனித நடவடிக்கைகள் ஆணித்தரமானதாக நிலையானதாக, விருப்பத்திற்குரியதாக இருக்க இசையை முன்னோர்கள் கையாண்டுள்ளனர். தொழிற்பாட்டு (அரிவு வெட்டு, ஏலேலே), பக்திப் பாடல்கள், அழகியல் பாட்டுக்கள், தாலாட்டுப் பாடல்கள் என பற்பல இசைப்பாடல்களைப் பாடி, ஆடி நடிக்கும் உத்திகளைக் கையாண்டனர். தாயின் வயிற்றுக்குள் உதயமாகும் குழந்தை தாயின் கேள்விஞானத்தின் மூலம் இசையை இரசிக்கக்கூடிய வரப்பிரசாதம் பெற்றுள்ளது என்பது உளவியலாளரின் கருத்து.

இயற்கையாகவே இரசிக்கும் ஆற்றல்கொண்ட குழந்தைகளுக்கு இசையைப் பயன்படுத்திக் கற்பிப்பதன் மூலம் அவர்களுக்குள் பொதிந்திருக்கும் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர முடியும். (சிறந்த இசைப்பாடல்களைக் கேட்கும் குழந்தைகள் தானாகவே அப்பாடலின் தாளம், இராகம் என்பவற்றிற்கேற்ப ஆடி அசைவதைக் காண்கின்றோம். எட்டுமாதக் குழந்தையிலிருந்து இச்செயலை அவதானிக்கலாம்)

குழந்தைகளைப் புலன் இயக்க செயற்பாடுகளில் திறன்பெறச் செய்யவும், குறியீட்டு வடிவங்களை இனங்காணச் செய்யவும், விதிகளுக்கு இணங்கி விளையாடவும், சமூக விழுமியங்களை அறிந்து கொள்ளவும், ஆத்மீக சிந்தனைகளில் ஈடுபடவும், அதிக சொற்களை அறிந்துகொள்ளவும், பாடல்களை மனனம் செய்யவும், அதன் மூலம் பாடல்களை ஞாபகத்தில் நிலைநிறுத்தவும் இசைப்பாடல் பெரும் பங்களிப்புச் செய்யும்.

குழந்தையின் அழுகையை நிற்பாட்ட கனிவாகப் பாடும் தாலாட்டுப் பாடலுக்குச் சக்தியுண்டு என்பதை நாம் அறிவோம். தாயின் தாலாட்டு குழந்தைக்கு மனநிறைவைக் கொடுக்கிறது. அதனால் குழந்தையின் மனம் அமைதியடைகிறது. அப்போது குழந்தை பாட்டைக் கேட்டபடியே துயில் கொள்ளத் தொடங்குகிறது. அதேபோல் குழந்தைகளின் அறிகை ஆற்றல், எழுச்சி ஆற்றல், இயக்க ஆற்றல் போன்றவற்றை வளர்ப்பதற்கு இசைமுறை கற்பித்தல் மிகச்சிறந்த கற்பித்தல் முறையாகும்.

குழந்தைகள் நித்திரையைத் தவிர ஓயாது செயற்பட்டுக் கொண்டிருக்கும் உடல் உளநிலை கொண்டவர்கள். அவர்களிடமிருக்கும் தேடல் உந்தல்கள் அவர்களைத் தேடிக்கொண்டிருக்கச் செய்யும். காணப்படுபவற்றை அறியவும், அவற்றைத் தாமும் செய்து பார்க்கவும், இயக்கிப் பார்க்கவும் துடித்துக்

கொண்டிருப்பர். பல சொற்களுக்குப் பொருள் புரியாத நிலையில் விளக்கம் கேட்பர். அவர்கள் பார்ப்பவை எல்லாம் புதுமையானவை.

இத்தகைய குழந்தைகளுக்கு அவர்களின் ஐம்புல விருப்புக்களுக்கேற்ற, துறைசார்ந்த பொருள் பொதிந்த சிறந்த பாடல்களை, அர்த்தமுள்ள சிறிய வசனங்களைக் கையாண்டு அவர்கள் பாடக்கூடிய (சங்கராபரணம் போன்ற) இராகத்தைக் கையாண்டு, கற்பிக்கும்போது குழந்தைக்கான கற்றலும் கற்பித்தலும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாக அமையும்.

கல்வி கற்பிப்பதன் முக்கிய நோக்கம் பூரண மனிதனை உருவாக்குதல். அதில் மிக முக்கியமானது சமநிலையானதோர் ஆளுமையை உருவாக்குதல். அதற்காகத் தனிநபரில் அறிதல் ஆட்சி, எழுச்சி ஆட்சி, உள இயக்க ஆட்சி என்பனவற்றை ஏற்படுத்துதல் வேண்டும். எழுச்சி ஆட்சி விருத்திக்கு இசைப்பாடல்கள் உடனடி விருத்திக்கு வித்திடும். இத்தகைய எழுச்சி ஆட்சி குழந்தைப் பருவத்தில் வேகம் கொண்டது. இந்த நிலை வேகத்தில் அறிதல் ஆட்சியையும், உள இயக்க ஆட்சியையும் இசைப்பாடல்கள் ஊடாகப் பதியவைப்பது சுலபமானது.

சமூகத்திற்கு நன்மை பயக்கும் சிறந்த மனிதாபிமானியாக உருவாக்குவதும் கல்வியின் நோக்கத்தில் முக்கியமானது.

*"பிறப்பிலே ஊனமென்று வைத்தியம் விலக்கியதால் வாழ்வே*

*இடிந்ததம்மா! மனமோ முறிந்ததம்மா"* என்ற வரிகளை இசையுடன் பாடும்போது பாடுபவரும் கேட்பவரும் அத்தகைய நிலையினரைக் கண்டவுடன் அவர்கள் மீது கருணை, தயை, இரக்கம், அகிம்சை போன்ற மனிதாபிமான நிலைக்குள்ளாகி, அவர்களுக்கு உதவி, அவர்களுக்கு உரிய அந்தஸ்துக் கொடுக்கும் நிலைக்கு அவர்களின் மனம் பக்குவப்படும்.

*காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக்*
*கட்டிக் கொஞ்சும் அம்மா!*
*பாலைக்காய்ச்சி சீனி போட்டு*
*பருகத்தந்த அம்மா!*
*புழுதி துடைத்து நீருமாட்டிப்*
*பொட்டும் வைக்கும் அம்மா!*
*அழுது விழுந்தபோதும் என்னை*
*அணைத்துத் தாங்கும் அம்மா!*
*பள்ளிக்கூடம் விட்டநேரம்*
*பாதி வழிக்கு வந்து*
*துள்ளிக் குதிக்கும் என்னைத்தூக்கித்*
*தோளில் போடும் அம்மா!*



தினம்தோறும் தன் தாய் தனக்குச் செய்பவற்றை அனுபவிக்கும் குழந்தைகளுக்கு தாயின் செயல் சாதாரண நிகழ்வுகளாகத் தெரியும். ஆனால் இப்பாடலைப் பாடும்போது தாயின் செயல்களை அளப்பரிய செயலாகக் கருதி தாய்மீது அதீத அன்பும், கருணையும், கீழ்ப்படிவும், கடமையுணர்வும் மேலிடப்படுவர்.

ஒருவரிடமுள்ள பகைமை, குரோதம் போன்ற மன உணர்வுகளை நீக்குவதற்கும், சமாதானத்தை வளர்ப்பதற்கும், மற்றவர்களை மதிக்கவும், விட்டுக்கொடுக்கவும், புரிந்துணர்ந்து வாழப்பழகவும் இசையால் முடியும்.

*"மனிதன் வகுத்தது பலகுலம் - மூல*
*இறைவன் படைத்தது ஒரு இனம்*
*ஓடும் இரத்தம் ஒரு நிறம் - அதில்*
*மதங்கள் மட்டும் பலவிதம்"*

*"உணரா மக்களின் இந்நிலை*
*உரசிப் பார்க்க முடியாதா?*
*சிறுவர் எமக்கு இது வேண்டாம்*
*எல்லா மனிதகுலம் ஒன்றென்போம்"*

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க நன்நடத்தைகளைக் குழந்தைகளின் மனதில் இசைப்பாடல்கள் மூலம் பதித்துவிட்டால் அவர்களின் வாழ்நாள் முழுவதும் அப்பாடல் வரிகள் அழியாதிருந்து அவர்களின் மன எழுச்சிகளைக் கட்டுப்படுத்தி வாழவைப்பதிலும் இசைக்கு வல்லமையுண்டு.

ஒரு விடயத்தை அறியச் செய்வதற்கு இசைப்பாடல்கள் சக்திமிக்கவை.

*"எங்கள் தோட்டத்தில் பல பயிர்கள் - அது*
*பூக்குது காய்க்குது பாருங்கோ*
*கத்தரி வெண்டி பூக்குது*
*பூசணி பயிற்றை காய்க்குது*
*கீரை வல்லாரை தழைக்குது*
*உண்டு மகிழ வாருங்கோ*
*எருவை அள்ளிப் பரப்பினேன்*
*அப்பா அண்ணா கொத்தினர்*
*அம்மா அக்கா நட்டனர்*
*தம்பி தங்கைநீர் பாய்ச்சினர்"*

இப்பாடல் வரிகள் தோட்டத்தில் பயிரிடப்படும் செடி, கொடி, புல் பூண்டு வகையினை எடுத்துக் காட்டுகின்றன. வீட்டுத் தோட்டச் செய்கையின் குடும்பப் பங்களிப்பினைத் தெளிவுபடுத்துகின்றன. அத்தோட்டச் செய்கையினால் ஏற்படும் நிகழ்வுகள் எடுத்துக் காட்டப்படுகிறது. கொடுத்துண்ணும் பண்பு, பொழுதுபோக்காய்ச் செய்யும் வீட்டுத் தோட்டத்தின் பயன் எடுத்துரைக்கப்படுகிறது.

இப்பாடல் அறிதல், செயல், ஒற்றுமை, பயன் என்பவற்றை இசையோடு அள்ளிச் சுலபமாகக் குழந்தைகளுக்கு வழங்கியிருப்பதைக் காண்கின்றோம். இதன்மூலம் மாணவரிடம் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைச் சிலவரிகள் மூலம் விதைக்க முடிகிறது. சுருங்கச் சொல்லிப் பரந்த விடயத்தைக் குறுகிய நேரத்தில் மிக்க மகிழ்ச்சியுடன் கற்கவும் கற்பிக்கவும் வழிகாட்டுகிறது.

இவ்வாறு கற்பிப்பதன் மூலம் குழந்தைகளிடம் மனப்பாங்கு விருத்தி, இரசித்தல், ஆக்க வெளிப்பாட்டுத்திறன், ஆக்கபூர்வமான சிந்தனை, ஆத்மீகச் செயற்பாடு, இசைவாக்கம், இணைந்த சமூக நடத்தைகள் (Pro social Behaviour), இலட்சிய வடிவிலான அகத்தை வளர்த்தல், தமக்குரிய உளநிறற்கோலத்தை அமைத்தல், சமூகப் புலக்காட்சி மலரச்செய்தல் போன்றவற்றைக் குழந்தையிடம் ஏற்படுத்த முடியும்.

இசை மூலம் கற்பித்தல் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு மிகச்சிறப்பானது, அதன் பயன் அதிகமானது என்று உளவியலாளர்களும், கல்வியாளர்களும் எடுத்துரைத்தாலும் அத்தகைய முறைமையைக் கையாள்வதில் ஆசிரியர்களிடமும், கல்வியாளர்களிடமும், கல்வி நிர்வாகிகளிடமும், பாடத்திட்டங்கள் வரைவோரிடமும், பாடப்புத்தக வெளியீட்டாளர்களிடமும் வறுமைநிலை நீண்டநாட்களாக நிலவி வருகிறது.

இருப்பினும் ஆசிரியர்கள் தமது பணியினை ஆணித்தரமானதாகவும், சுலபமாகவும், மாணவரின் நலன் கருதியும் மகிழ்ச்சியாகவும் செயற்பட விரும்பிடும் பட்சத்தில் கருத்தாழம்மிக்க, சிறார் நிலைக்கேற்ற பாடல்களை ஆக்கியும், தேடி எடுத்தும் கற்பித்தலில் ஈடுபடும் மனஎழுச்சியைக் கொண்டு கற்பிக்கத் துணிதல் வேண்டும்.

''தாரமும் குருவும் தலைவிதிப்படி'' என்பதற்கேற்ப ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் செயற்பாடுவார்களோயானால் இன்றைய சிறார் உலகம் நாளை பொன்பொழியும் உலகமாவது திண்ணம்.

******

# எங்கள் கலாசாலை துணை முதல்வர்



**திரு. செ. செந்தில்மணி**

B.Sc, P.G.D.E, Trd (Maths), M.A (Tea.edu) S.L.E.S - III



கலாசாலை விரிவுரையாளர்கள்



# திரு விவிலியம் காட்டும் கல்விச் சிந்தனைகள்

திரு. எஸ்.அந்தோனிப்பிள்ளை,
மறை ஆசிரியர்,
பகுதிநேர விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

இயேசு ஒரு முழு மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்து சென்றார். அனைத்து மனிதர்களுக்கும் ஒரு மாதிரிகையாக அவர் விளங்கினார். உடல் வளர்ச்சியிலும், உள வளர்ச்சியிலும் ஆரோக்கியம் நிறைந்து விளங்கினார். ஆனால் யேசுவின் மானிடத் தன்மையை எவரும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. சிலர் அவரை ஒரு சமயவாதியாக, சமய உண்மைகளைப் போதித்த ஒரு மாபெரும் ஆசிரியராகப் பார்த்தனர். இன்னும் சிலர் அவரை இறைவனாக்கி, இறைப் பண்புகளை அவரில் மிகைப்படுத்திக் காட்டி, யேசுவின் முழுமையான மானிடத் தன்மைகளைக் கண்டுகொள்ளத் தவறினர். இவ்வாறு மனிதர்களால் குறைத்து மதிப்பிடப்பட்ட ஒரு மனிதனாகவே யேசு இருந்து வருகின்றார்.

முழுமையான மானிட வளர்ச்சியிலே கல்வி என்பது இன்றியமையாத ஒன்றாகும். இயேசுவின் வாழ்வில் கல்வியின் செல்வாக்குப்பற்றி நோக்குகையில், இயேசுவின் சிறுவ, இளமைப்பராய வளர்ச்சியைப்பற்றித் தூய லூக்கா நற்செய்தியாளர் தமது நூலில் இரத்தினச் சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "இயேசு வளர வளர ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவரானார்" (லூக்.3:52).

இங்கு இயேசு அறிவிலே வளர்ந்து வந்த வேளையில் ஞானத்திலும் வளர்ந்து வந்தார் என்பதும், மனிதருக்கு உகந்தவராக வளர்ந்து வந்த வேளையில் இறைவனுக்கும் உகந்தவராக வளர்ந்து வந்தார் என்பதும் நோக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

இன்றைய உலகின் அறிவு வளர்ச்சி வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. விஞ்ஞானத் துறையிலே, அறிவியற் துறையிலே, தொழில்நுட்பத் துறையிலே, மருத்துவத் துறையிலே, தகவல் தொழில்நுட்பத் துறையிலே, வர்த்தகத் துறையிலே இன்னும் இன்னோரன்ன துறைகளிலே அது விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது. ஆயினும் அறிவு வளர்ந்த வேகத்துக்கும், அளவுக்கும் மனிதனும், மனித சமுதாயமும் ஆரோக்கியமாக வளரவில்லை என்பது வேதனைக்குரியதாயாகும்.

மனிதன் வளரவில்லையா? மனித சமுதாயம் வளரவில்லையா? அறிவினை வானுயர வளர்த்த மனிதனால் ஆரோக்கியமாக வளர ஏன் முடியவில்லை? மனித சமுதாயத்தை ஆரோக்கியமாக வளர்க்க ஏன் முடியவில்லை? காட்டுமிராண்டிகளாகவும், ஒருவரோடொருவர் சண்டை பிடித்தும், ஒருவருக்கொருவர் பயந்தும் வாழ்கின்ற தோமஸ் ஹொப்ஸின் சமுதாயத்தையே இன்று காண்கின்றோம் அல்லது "மனிதன் பிறக்கும் போது சுதந்திர புருஷனாகப் பிறக்கின்றான்; பின்பு அவன் எங்கும் பலவிதமான அடிமைத்தன விலங்குகளோடேயே இருக்கின்றான்" என்ற ரூசோவின் மனிதர்களையே இன்று நாம் காண்கின்றோம்.

இதற்கான காரணம், மனிதன் பெற்றுக்கொள்கின்ற அறிவு அவனுக்கு ஆரோக்கியமான வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக அவனுடைய கைகளிலும், கால்களிலும் அது விலங்குகளையே மாட்டிவிடுகிறது. சுதந்திரமாகப் பிறந்த மனிதன் சுமக்க முடியாத நுகத்தடிகளைச் சுமந்துகொண்டு தன் வாழ்வில் கூனிப் போகின்றான்.

அறிவும், ஞானமும் இறைவனின் கொடைகள். "ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே. அறிவுக்கும் விவேகத்துக்கும் ஊற்றானவர் அவரே" (நீதி 2:6) என்று திரு விவிலியம் கூறுகின்றது. மேலும் திரு விவிலியத்தைப் புரட்டுகின்ற போது, அறிவு என்பது ஞானத்தின் ஆற்றலே என்று அறிய முடிகிறது (சா.ஞா. 7:22). இப்படியாக நோக்குகின்றபோது அறிவும், ஞானமும் எப்போதும் ஒன்று சேர்ந்தே செல்ல வேண்டும். அவை பிரிக்கப்பட முடியாதவை என அறிந்து கொள்ளலாம். இத்தகைய தன்மையையே இயேசுவின் வளர்ச்சிலும் பார்க்க முடிகிறது. "இயேசு வளர வளர ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்து வந்தார்."

இன்றைய உலகில் அறிவுள்ள மனிதர்களையே எங்கும் காண்கின்றோம். ஆனால் ஞானமுடைய மனிதர்களை எங்கும் காண்பது அரிதாகவுள்ளது. அறிவு வளரும் போது அங்கே ஆணவம், தலைக்கனம், பிடிவாதம், விட்டுக் கொடுக்கா நிலை, கீழ்ப்படியாமை, நான் என்ற மமதை, சுயநலம் போன்ற தீய பண்புகள் சேர்ந்து வளர்வதையும், அதன் விளைவாக சமுதாயத்தில் நாம் காணும் சண்டை சச்சரவுகள், சமுதாய ஏற்றத்தாழ்வுகள், முரண்பாடுகள், பசி, பட்டினி, வறுமை, களவு, கொலை, அறியாமை போன்ற பல்வேறு தீமைகள் எழுவதையும் காண முடிகிறது. காரணம், அறிவு ஞானத்துடன் சேர்ந்து கொள்ளாததேயாகும். ஞானத்தை நூல்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியாது. அதை இறைவனிடமிருந்தே நாம் பெற்றுக்கொள்ள முடியுமென நீதி மொழிகள் கூறுகின்றன: "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" (1:7). இந்த அச்சம் என்பது இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதாகும்; அவருடைய கட்டளைகளை மீறி நடக்கின்ற போது மனதில் ஏற்படும் உறுத்தலாகும். இறைவனின் கட்டளைகள் மனித வாழ்வை வளப்படுத்தும் வடிகால்களாகும். இவை மனிதனை அடக்கி, ஒடுக்குவதற்காக அளிக்கப்பட்டவையல்ல. இத்தகைய ஞானமே கீழ்ப்படிவைக் கொண்டுவரும். ஆணவத்தை விடுத்துத் தாழ்ச்சியை மனித உள்ளத்தில் உண்டாக்கும். ஏனெனில், ஞானம் சொல்கின்றது: "உன்னை நீ ஒரு ஞானி என்று எண்ணிக்கொள்ளாதே. ஆண்டவருக்கு அஞ்சித் தீமையை அறவே விலக்கு" (நீமொ.3:7). மேலும் ஞானம் ஆரோக்கியமான மெய் அறிவைக் கொண்டுவரும். கடவுளைப் பற்றிய அறிவைத் தரும். அன்பையும், வாய்மையையும் கழுத்தில் அணிகலன்களாக அணிவிக்கும். "அப்பொழுது நீ கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவனாவாய்" (நீமொ.3:4) இதையே இயேசுவின் வாழ்விலும் பார்க்கின்றோம். யேசு ஞானத்திலும், அறிவிலும் வளர்ந்து வந்ததாலேயே, வளர்க்கப்பட்டதாலேயே அவர் மனிதருக்கும், இறைவனுக்கும் ஏற்புடையவராக முடிந்தது. அறிவைக் மட்டும் கொண்டுள்ளதால் ஒரு மனிதன் மனிதர்களுக்கு (எல்லா வேளைகளிலும் அல்ல) ஏற்புடையவனாக இருக்கலாம். ஆனால் இறைவனுக்கு ஏற்புடையவனாக இருக்க முடியாது. மாறாக அவ்வறிவு ஞானத்துடன் சேர வேண்டும்.

மேலும் "ஞானம் மனித நேயமுள்ள ஆவி" (சா.ஞா. 1:6) என்று சாலமோனின் ஞானநூல் சொல்கின்றது. எனவே, ஞானமுள்ள மனிதர் ஏனைய மனிதர்களை மதிப்பர்; அவர்களுக்குத் தீங்கு செய்யக்கூட நினையார்; அவர்களின் துன்ப, துயரங்களைக் கண்டு விரைந்தோடி உதவிகள் செய்வர். இவ்வாறு ஞானமும், அறிவும் ஒன்றுசேரும்போது அங்கு அமைதியான, ஆரோக்கியமான சமுதாயம் கட்டி எழுப்பப்படும்.

இன்று முரண்பட்ட தன்மைகளை நம் சமுதாயத்தில் காண்கின்றோம்; அனுபவிக்கின்றோம். தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல் துறைகள் துரித வளர்ச்சியடைந்துள்ள போதிலும் எத்தனையோ மனிதர்கள், குடும்பங்கள் தனித் தீவுகளாக வாழ்ந்துகொண்டிருப்பதற்கு நாம் எத்தனையோ பேர் சாட்சிகளாக இருக்கின்றோம். பரந்து, விரிந்துள்ள இப்பிரபஞ்சத்தை இன்று எமது அறையிலுள்ள மேசையிலே கொண்டுவரக்கூடிய முறையில் தொழில்நுட்பத் துறை வளர்ந்துள்ள போதிலும், எத்தனையோ மனிதர்களை, உறவினர்களை, அறிமுகமானவர்களை எம்மால் அன்புசெய்ய முடியாதுள்ளது. இத்தகைய முரண்பட்ட தன்மைக்கு அறிவு இல்லை என்று சொல்லிவிட முடியுமா?

உணவு உற்பத்தித் துறையின் துரித வளர்ச்சிபற்றி இங்கு சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இதன் துரித வளர்ச்சியால் உணவுத் தொகையின் அளவு அதிகரிக்கிறது; புதிய புதிய உணவுகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. சத்துள்ள உணவுகளின் உற்பத்தி எவ்வளவுதான் அதிகரித்துள்ளபோதிலும் வறுமையிலும், பட்டினியிலும், நோய்நொடிகளிலும் வருந்தும் மக்களின் தொகையும் நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் முரண்பாட்டுக்கு அறிவு இல்லை என்று விடை கூறிவிட முடியுமா?

இன்றைய ஆடையின்மை அவமானத்துக்கு வறுமை, வேலைவாய்ப்பின்மையே காரணம் என்று சொல்லிவிட முடியுமா? இன்றும் எத்தனையோ சிறார்கள் ஆரம்பக் கல்வியைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ள நிலைக்கு என்ன காரணத்தைக் கண்டுபிடித்துவிடப் போகிறது இந்த உலகம்?

ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்; அவனது வாழ்வுரிமை, வதிவிட உரிமை போன்றன அனைவருக்கும் சமமாக அளிக்கப்பட வேண்டும் என்று யாப்புக்களில் அழகுற எழுதி வைத்துள்ள நாட்டுத் தலைவர்களுக்கு அவற்றை உரிய முறையில் ஒவ்வொரு மனிதனுக்கும் அளிப்பதற்கு அறிவில்லை என்று சொல்லிவிட முடியுமா? மனிதநேயத்துடன் ஒவ்வொரு நாட்டுத் தலைவர்களும்

தன் பிரசைகளைச் சமமாக நடாத்தும் போது பல்வேறுபட்ட நாடுகளிலும் விடுதலைப் போராட்டங்கள் தலைதூக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கமாட்டாது. இதன் மூலம் போர் கொண்டுவரும் அநாவசியமான உயிர் இழப்புக்கள், சொத்திழப்புக்கள், இடப்பெயர்வுகள், வறுமை, தொழிலின்மை, நோய் நொடிகள் போன்ற தீமைகளைத் தவிர்த்திருக்க முடியும். ஞானம் மனிதனை தீமையின் வழியிற் செல்லாமற் தடுக்கும் சக்தி கொண்டது: "ஞானம் உன் உள்ளத்தில் குடிபுகும்; அறிவு உன் இதயத்திற்கு இன்பம் தரும். அப்பொழுது, நுண்ணறிவு உனக்குக் காவலாய் இருக்கும்; மெய்யறிவு உன்னைக் காத்துக்கொள்ளும். தீயவழியில் செல்லாமலும், வஞ்சகம் பேசும் மனிதரிடம் அகப்படாமலும் இருக்கும்படி அது உன்னைப் பாதுகாக்கும்" (நீமொ.2:9-11).

எனவே, அறிவு என்பது எப்போதும் ஞானத்தோடு சேர்ந்தே செல்ல வேண்டுமென்று திரு விவிலியம் கூறுகின்றது. இதையே மனிதர்களின் மாதிரிகையாக வாழ்ந்து சென்ற இயேசுவின் வாழ்விலும் காண்கின்றோம். எனவேதான், வேதநூல் கூறுகின்றது: "செல்வத்தை நாடுவதுபோல் ஞானத்தை நாடி, புதையலுக்காகத் தோண்டும் ஆர்வத்தோடு அதைத்தேடு" (நீமொ.2:4). தொடர்ந்து வேதநூல் கூறுகின்றது: "ஞானத்தைத் தேடி அடைந்தோர் நற்பேறு பெற்றோர்; மெய்யறிவை அடைந்தோர் நற்பேறு பெற்றோர்; வெள்ளியைவிட ஞானமே மிகுநலன் தருவது; பொன்னைவிட ஞானத்தால் வரும் செல்வம் மேலானது. ஞானம் பவளத்தைவிட விலைமதிப்புள்ளது; உன் அரும்பொருள் எதுவும் அதற்கு நிகராது" (நீமொ.3:13-15).

எனவே, இன்றைய உலகை நோக்கும்போது, அது அறிவில் வானுயர வளர்ந்துள்ள வேளையில் ஞானத்தில் வளரவில்லை என்பது கண்கூடு. திரு விவிலியம் கூறும் கல்விமுறை அறிவும், ஞானமும் சேர்ந்த கல்வி முறையே. அதுவே மனிதனுக்கும், சமுதாயத்திற்கும், முழு உலகிற்குமே ஏற்ற கல்வி முறையாகும். இதுவே திரு விவிலியம் காட்டும் கல்விச்சிந்தனைகள்.

## மார்டின் விக்கிரமசிங்ஹ



நவீன சிங்கள இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளராக விளங்கியவர் இவர். இலக்கியம் என்பது உங்கள் பிரச்சினைதான் என்பதை மக்களுக்கு உணர்த்தியவர். சிங்கள இலக்கியத்தில் பாரம்பரியமொன்றினை உருவாக்கியவர். இவரது எழுத்துக்களில் ரஷ்ய எழுத்தாளரான அன்ரன் செக்கோவின் தாக்கம் உண்டு. மக்களது கிராமிய வாழ்வையும் பிரச்சினைகளையும் தமது படைப்புக்களில் படம்பிடித்துக் காட்டியவர்.

காலி-மாத்தறைவீதியில் கொக்கல என்னுமிடத்தில் 1891இல் பிறந்த விக்கிரமசிங்ஹ 1976இல் தனது 85வது வயதில் காலமானார். ரஷ்யமொழி உட்பட உலகின் பல மொழிகளில் இவரது படைப்புக்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது பல சிறுகதைகள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. "கம்பரெலிய" என்ற புகழ்பெற்ற நாவலைப் பேராசிரியர் ம.மு.உவைஸ் "கிராமப்பிறழ்வு" எனத்தமிழில் மொழிபெயர்த்தார். காலி பொன்விஸ்தா கல்லூரியில் ஆரம்பக் கல்வியை மாத்திரமே பெற்ற இவர், முயற்சியால் உயர்ந்து சிங்கள மொழியையும் இலக்கியத்தையும் வளப்படுத்தினார். ஆரம்பத்தில் மட்டக்களப்பிலுள்ள சிங்கள நிறுவனமொன்றில் லிகிதராகக் கடமையாற்றிய விக்கிரமசிங்க, ஆங்கிலமொழியிலும் புலமைபெற்றுப் பலநூல்களை எழுதியுள்ளார். நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் போன்றவற்றைப் படைத்ததுடன் சிங்களக் கலாசார ஆய்வாளராகவும், இலக்கிய விமர்சகராகவும் விளங்கினார். "லீலா" என்ற இவரது முதல் நாவலை 19 வயதில் எழுதி வெளியிட்டார். 65 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமது வாழ்க்கையை எழுத்துத்துறைக்கு அர்ப்பணித்தார். கடைசிப் படைப்பான "சிங்களமொழியும் கலாசாரமும்" என்ற ஆங்கிலநூல் 1975இல் வெளியானது. 1925-1946 காலப்பகுதியில் பத்திரிகைத் துறையில் பணியாற்றினார். தான்பிறந்த கிராமத்தையே தமது படைப்புகள் பலவற்றில் கதைக்களமாகச் சித்திரித்துள்ளார். இவரது "கம்பரெலிய" நாவல் ஷெல்டர் ஜேம்ஸ் பீரிசினால் திரைப்படமாக்கப்பட்டது. அமரர் காமினி பொன்சேகா அதில் நடித்தார். அப்படம் இந்தியத் திரைப்பட விழாவில் தங்கமயில் பரிசுபெற்றது. 'அபே கம' (எமது ஊர்), 'அபேவித்தி' (எமது விபரங்கள்), 'மகே கதாவ' (எனது கதை), 'ஹந்த சாக்கி கீம' (நிலவே சாட்சி), 'வாஹால்லு' (அடிமைகள்), 'அ(ப்)பூரு முஹுணு' (அபூர்வமுகம்), 'பவ்காரயாட கல்கெஸீம்' (பாவிக்குக் கல்லெறிதல்) ஆகிய சிறுகதைகள் குறிப்பிடத்தக்கவை. 'கம்பரெலிய' (கிராமப்பிறழ்வு), 'கலியுகய' (யுகமுடிவு), 'ரோகிணி', 'பவதரணய', 'மிரிங்குதிய' (கானல்நீர்), 'அபேகம', 'உபந்தாசிட' ஆகியவை உட்படப் 13 நாவல்களை எழுதியுள்ளார். இவரது ஒரேயொரு கவிதைத்தொகுதி 'தேரிகீ' என்பதாகும். இது பாளிமூல மொழி பெயர்ப்பாகும். ஆறு சிறுகதைத் தொகுதிகளும் வெளிவந்துள்ளன. இயற்கை விஞ்ஞானம், தொல்பொருளாராய்ச்சி, வைத்தியம் ஆகியவற்றிலும் இவருக்கு ஈடுபாடு அதிகம். அவைபற்றிய பலநூல்களையும் எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் 'பௌத்தமும் கலாசாரமும்', சிங்களக் கலாசாரத்தின் தோற்றங்கள் ஆகிய இருநூல்கள் வெளிவந்துள்ளன. இலங்கையரசு மார்டின் விக்கிரமசிங்காவுக்கு மிக உயரிய இலக்கிய விருதினை முதன் முதலில் இலங்கையில் கொடுத்துக் கௌரவித்துள்ளது.

— சொர்ந்கோ



# யாழ்ப்பாண ஓவியக் கலைஞர்கள் – சில குறிப்புகள்

திரு. வீ.கருணலிங்கம்,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர்
கலாசாலை.

யாழ்ப்பாண ஓவிய மரபில் நீண்டதொரு வரலாறுபடைத்த (கலைஞர்களை) நமது ஓவியர்களை என்றும் நினைவில் கொண்டு ஆவணப்படுத்தப்படல் வேண்டும் என்ற அடிப்படையில், இங்கு சிலபேரது குறிப்புக்கள் மாத்திரம் தரப்பட்டுள்ளன.

1) எஸ்.ஆர்.கனகசபை (1901-1964)



- இவர் கோப்பாய், இருபாலையில் பிறந்தவர்; புகழ்பெற்ற யாழ்ப்பாணத்தின் மூத்த ஓவியர்.
- இவரால் முதன்முதல் யாழ்ப்பாணத்தில் எண்ணெய் வர்ணப் பிரயோகம் அறிமுகப்படுத்தப்பட்டது. "இருட்டடிப்பு ஓவியம்" மிகச்சிறந்த படைப்பாகும்.
- சாதாரண பாடசாலைகளிலும் சித்திரத்திற்கு புத்துயிர் கொடுத்த பெருவள்ளல் இவரேயாவார்.
- வின்சர் ஆட்கிளப் இவரால் 1938இல் தாபிக்கப்பட்டது.
- இவர் "43" குழுவில் அங்கம் வகித்துள்ளார்.
- இவர் வடபிரதேச சித்திர வித்தியாதரிசியாகவும் பணியாற்றியுள்ளார்.

2) க.கனகசபாபதி (1915- )

- இவர் 1915இல் திருநெல்வேலியில் பிறந்தவர்.
- உருவப்பட வரைவில் அதிகம் அக்கறை கொண்டவர்.
- பலாலி ஆசிரிய கலாசாலையில் சித்திர விரிவுரையாளராக இருந்தவர்.
- '43' ஓவியக்குழுவில் அங்கம்வகித்த யாழ்ப்பாணத்தவருள் ஒருவர்.
- எஸ்.ஆர்.கனகசபையின் அபிமான மாணவராவார்.
- இயற்பண்புவாத ஓவியங்களிலிருந்து நவீனபாணி ஓவியங்கள் வரை பல்வேறு கலைப்பாணிகளிலும் தன் ஓவிய ஆளுமையை வெளியிட முயன்றுள்ளார்.

3) ச.பெனடிக்ற் ( -1987)

- யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.
- இயற்பண்புவாதியாக உருவப்பட வரைவில் தேர்ச்சிபெற்றவர்.
- இலவச ஓவிய வகுப்புக்களை நடத்தி உள்ளார்.
- ஓவியர் மாற்கு அவர்கள் தனது ஆரம்பகால உருவ ஓவியப் பயிற்சியை இவரிடம்தான் பெற்றார்.

4) அன்ரனிப்பிள்ளை தேவநாயகம்

- மானிப்பாய் வாசியான இவர், சிறிதுகாலம் இத்தாலியிலும் ஓவியப்பயிற்சி பெற்றவர்.
- சித்திர வித்தியாதரிசியாக இருந்தவர்.
- இயற்பண்புப் பாணியிலான ஓவியங்களை அதிகமாக வரைந்தவர்.
- கோட்டோவியம் மூலம் மனித உடலின் சிறப்பியல்பான கூறுகளைத் தெரிந்தெடுத்து வரைந்துள்ளார்.
- 'மின்சாரம்' என்ற பட்டப்பெயர் இவருக்கேயுரியது.

5) அம்பலவாணர் இராசையா (1926-1991)



- ஈழத்தின் மூத்த ஓவியரின் வரிசையில் திகழ்ந்தவர்.
- கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை ஓவிய விரிவுரையாளராய் இருந்தவர்.
- வின்சர் ஆட்கிளப்பின் ஓவியப் பயிற்சியக முதல் மாணாக்கரில் ஒருவர்.
- இவர் அதிகமாக நிலக்காட்சி ஓவியங்களை வரைந்துள்ளார். கொழும்பு கலாபவனத்தில் பலவருடங்கள் அங்கத்தவராக விளங்கியவர்.

6) இராசரெத்தினம் (1927- )



- இவர் பிரதிமைக்கலை ஓவியராவார்.
- திருகோணமலை மாவட்ட சித்திர வித்தியாதிகாரியாக இருந்தவர்.
- ஓவியனுக்கு மனத்திலிருத்தி வரையும் திறன் அவசியம் என்கிறார்.
- இவரது ஓவியங்களில் இருபரிமாணச் சட்டத்தில் முப்பரிமாணத்தைக் கொண்டுவரும் பாங்கு சிறப்பானது.
- இவரது சிறந்த படைப்புக்களாவன:-
    - i. கஜுரினா கடற்கரையில் இளைப்பாறல்.
    - ii. வைக்கல் வண்டில்
    - iii. குளிர்காய்தல்
    - iv. மழை ஓய்ந்த நிலாக்காலம்
- இவர் காட்சிச் சித்தரிப்பே நிலக்காட்சி ஓவியத்தில் முதன்மையானது என்கிறார்.

7) ஆசை இராசையா (1946- )



- யாழ்ப்பாணத்து ஓவியக் கலைமரபின் இரண்டாம்கட்ட வளர்ச்சியில் தடம்பதித்தவர்.
- இயற்பண்புவாத ஓவியச் செல்நெறிகளின் முதன்மை ஸ்தானத்தை இவர் பெறுகின்றார்.
- காட்சிக்கான கரு, காட்சியமைப்பு, வர்ணச் சேர்க்கை வர்ணத்திணிவு என்பவற்றை நுட்பமான முறையில் கையாளுதல் வேண்டுமென்பது இவரது அபிப்பிராயமாகும். தகவுப் பொருத்தம் ஓவியத்தின் உயிர்நாடி என்கிறார்.
- கலைப்பணியின் அடிப்படையில் இவரது ஓவியங்களை மூன்றாக வகுக்கலாம்.
    - i. இந்திய மரபின் கலைப்பாணி
    - ii. இருள்ஒளி வேறுபாட்டை முதன்மைப்படுத்தும் கலைப்பாணி
    - iii. இயற்பண்புவாத கலைப்பாணி.

    முதலாவது வகைக்கு உதாரணங்களாக "தமயந்தி", சகுந்தலை, ஓவியனின் கனவு, தாயும் சேயும், காதலர்கள், தாண்டவம் என்பவை குறிப்பிடத்தக்க நீர்வர்ண ஓவியங்களாகும்.

8) ஓவியர் சிவசுப்பிரமணியம் (ரமணி) (1942- )



- இலங்கையின் தலைசிறந்த ஓவியர்களிடம் பயிற்சி பெற்றவர்.
- சமகால ஓவியர்களிடையே தனித்துவத்துடன் பிரகாசித்து நிற்பவர்.
- பாரம்பரிய கலைமரபும் அதனோடு இணைந்த பயிற்சியும் நவீன ஈடுபாடும் இவரது சிறப்பியல்புகள்.
- மரபுவழி ஓவியக் கருப்பொருளாக இருந்தாலும் முற்றிலும் புதியபாணியில் வரைவது இவரது விசேட ஆதாரசுருதியாகும்.
- இவரது ஓவியங்களில் இரேகைகளே முதற்கூறுகளாகக் காணலாம்.
- இருபதாம் நூற்றாண்டு ஓவியக் கலைஞர்களின் படைப்புக்களினால் தூண்டப்பட்டவர்.
- எத்தகையதொரு ஓவிய மரபையும் தன்பாணியாகக் கொள்ளாது தனக்கென்ற தனிவழியில் முன்னோடிகளின் சிறப்புக் கூறுகளைத் தன்வயப்படுத்தி படைப்பாக்கத்தில் ஈடுபடுபவர்.
- இவர் சிறந்த சிற்பக் கலைஞருமாவார். பொது ஸ்தாபனங்கள் பலவற்றில் இவரால் உருவாக்கப்பட்ட சிலைகளைக் காணலாம்.
- இவரது ஓவியங்களில் பெரும்பாலும் அட்டைப்பட ஓவியங்களே இவருடைய கலைத்திறன் மதிப்பீட்டைப் பேசவைக்கின்றன.

9. கலாகேசரி ஆ.தம்பித்துரை (1932-1994)




- ஈழத்துச் சிற்பக்கலைஞர்களில் முதன்மை ஸ்தானத்தைப் பெறும் இவர் ஓவிய ஆசிரியராக ஆரம்பத்தில் திகழ்ந்தார்.
- சித்திர வித்தியாதரிசியாகவும் கடமையாற்றியுள்ளார்.
- சிறுவர் சித்திரக் காட்சிகள் மூலமாகவும் ஓவியக்கல்விக்கு பெரும் பணியாற்றியவர்.
- சிற்பத்தில் லலித உணர்வை வெளிப்படுத்துவதற்கு ஓவியத்திலுமுள்ள ரேகை லயங்கள் முக்கியமானதென்பது இவர் கருத்தாகும்.
- இயற்கை நல்கும் முருகியல் மரபுக்கேற்ற பாணியில் தனது தனித்துவத்துடன் ஒன்றுகலந்து கற்பனைச் செறிவுடன் வெளியிடும் கலைஞனின் ஆக்கம்தான் காலவோட்டத்தால் இழுத்துச் செல்லப்படாத உன்னத இடத்தைப் பெறுகிறது என்கிறார்.
- கல்வியின் அடிப்படை பற்றியும் கல்வியில் ஓவியத்தின் பயன்பாடு பற்றியும் சிறுவர் சித்திரத்தின் முக்கிய பண்புகளைப் பற்றியும் விபரமாக 'சிறுவர் சித்திரம்' என்ற இவரது நூல்மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது.
- இவரது நூல்களின் ஏனைய "ஓவியக்கலை", "யாழ்ப்பாணத்து பிற்காலச் சுவரோவியங்கள்" என்பவையும் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.
- யாழ்ப்பாணத்து மக்களின் ஓவியப் பிரக்ஞையை வளம்படுத்த முயன்ற கலாகேசரி தம்பித்துரையார் பணிகளை நாம் பதிவுசெய்து பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

10. ஓவியர் அ.மாற்கு (1933-2000)



- நவீன ஓவியத்தின் முன்னோடிகளில் தலைசிறந்தவர்.
- ஓவியங்கள் கலைஞனின் தேட்டத்தின் விளைவாயிருத்தல் வேண்டும் என்கிறார் மாற்கு.
- விடுமுறைக்கால ஓவியக்கழகம் ஒன்றை ஸ்தாபித்து (1963-1966 வரை) ஒரு மாணவர் பரம்பரையை உலகறியச் செய்தவர்.
- காலவேகத்தின் போக்கிற்கு ஏற்ப நவீன ஓவியங்கள் மிகவும் அத்தியாவசியமானது என்கின்ற கோட்பாட்டை செயலில் காட்டியவர்.
- தூரிகைகள் இயற்கைக்குப் புதிய பரிமாணத்தை தருதல் வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்.
- இவரது கலைவளர்ச்சிக் காலம் பல்வேறு படிநிலைகளைக் கொண்டது. ஆரம்பத்தில் கழுவுதற்பாணிச் சித்தரிப்பு இதன் அடிப்படை நீர்வர்ணங்களே.
- அடுத்து இயற்கைசார் வர்ணங்களையும் கடும்பிரகாசமான வர்ணங்களையும் பிரயோகிக்கும் பாணியாகும்.
- அடுத்து ரேகைச் சித்திரங்களின் பாணி மேலோங்கிக் காணப்பட்டது. அடுத்து கோட்டுருவங்கள் கனபரிமாணத்தைத் தரும்தன்மை அடுத்தகட்ட வளர்ச்சி

11. ஓவியர் ஆ.சுப்பிரமணியம் (ஆட்டிஸ்ட் மணியம்) (1923-2006)



- இவர் ஐரோப்பிய நவீன நுட்பமுறைகளை இயற்பண்புவாத நிலைநின்று பயன்படுத்தியுள்ளார்.
- மனப்பதிவாக ஓவியப்பாணியிலும் கவரப்பட்டு "ஏரிக்கரைக் காட்சி" எனும் நீர்வர்ண ஓவியத்தைத் தீட்டியுள்ளார்.
- கொழும்பு அரசினர் கலைக்கல்லூரியில் ஓவியம் பயின்றவர்.
- கலை என்பது குறித்ததொரு இலட்சியத்தை உருவவடிவத்தில் அமைத்துக் காட்டும் கருத்து வெளிப்பாடல்ல; அது கலைஞன் உருவவடிவிலுணரும் கற்பனை இலட்சியமே என்கின்றார்.
- சித்திரத்தின் இயல்பான கூறுகளாக இவர் ஐந்து அம்சங்களை எடுத்துக் காட்டுகின்றார்.
- ஓவியம் பற்றி அறிவுபூர்வமாக சிந்தித்து செயற்பட்ட கலைஞன் என்றே இவரைக் கொள்ளலாம்.

12. முத்தையா கனகசபை (1925 - )

- ஐரோப்பியக்கலை வரலாற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக ஓவியத்துறைக்குக் கவரப்பட்டவர்.
- இவரது ஆக்கங்களில் நிகழ்ச்சிச் சித்திரிப்பு ஓவியங்களே முதன்மையானவை.
- காட்சிச் சித்திரிப்பு இவரது ஓவியங்களில் முதன்மை பெறுவதில்லை.

13. கோ. கைலாசநாதன் (1956 - )



- புதிய தலைமுறை ஓவியர்களில் தனித்துவமானவர்.
- சாவகச்சேரி வலயக் கல்வி அலுவலகத்தில் சித்திரப்பாட உதவிக் கல்விப்பணிப்பாளராக கடமைபுரிகின்றார்.
- இவரது குருவாக விசாகப் பெருமாளை (நவாலி) நினைவுகூருபவர்
- இந்திய மை கொண்டு அநேகமான ஓவியங்களை வரைந்துள்ளார்.
- மேலைத்தேய கலைஞர்களின் செல்வாக்கு இவரது ஓவியங்களில் படிந்துள்ளது.
- இவரது ஓவியங்களில் பொருட்களின் புறஉருவம் ஒதுக்கப்பட்டு விடுகிறது. மனப்பதிவே வெளிப்படுத்தப்படுகிறது.

14. எஸ். சண்முகராசா (1942 - )



- இவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சித்திரப்பாட விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார்.
- வர்த்தக ஓவியங்களை அதிகம் வரைந்து காட்சிப்படுத்தியுள்ளார்.
- இயற்கை ஊடகங்களை உயிரோட்டமுள்ள கலைப் பொக்கிசமாக மாற்றும் விதத்தில் தனித்துவமானவராக காணப்பட்டார்.
- இவர் பிரதிமை ஓவியங்களையும் அதிகம் வரைந்துள்ளார்.
- இவர் ஓவியத்துறையில் மாத்திரமல்லாது ஒரு சிறந்த புகைப்படக் கலைஞருமாவார்.

15. என்.சுந்தரலிங்கம் (1949 - )



- கருத்தியல் சித்திரங்களை வரைவதில் தனித்துவமானவர்.
- சிற்ப ஆக்கங்களைப் படைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றார்.
- இவர் அரச நுண்கலைக் கல்லூரியிலும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் சித்திரப் பயிற்சியினை முறையாகக்கற்ற சமகால ஓவியராவார்.
- தற்போது யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் சித்திரப்பாட சேவைக்கால ஆலோசகராகத் தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.
- பாடசாலைக் கல்விக்கு சித்திரப்பாடத்தினுடைய பங்களிப்பின் மூலம் பல ஆக்கக் கண்காட்சிகளையும் பாடசாலை மட்டத்திலும் வலயமட்டத்திலும் நடத்தி வருகின்றார்.

16. எஸ்.துரைவீரசிங்கம் (1946 - )



- இவர் யாழ்ப்பாண ஓவியக் கலைமரபில் வழிவந்த அனுபவம்பெற்ற ஓவிய சிற்பக் கலைஞராகத் திகழ்கின்றார்.
- சிங்கி மாஸ்ரர் என அழைக்கப்படும் சித்திரக்கலைஞர்.
- வலிகாமம் கல்வி வலயத்தில் நீண்டகாலமாகச் சித்திரக்கலை ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.
- இவரது படைப்புக்களை இன்றும் இனங்காணக்கூடிய வகையில் பாடசாலைகளின் வகுப்பறை அலங்காரங்கள் காட்சிதருகின்றன.
- இவரது குடும்பமே ஓவியக் கலைக்கூடமாக பிரகாசிக்கச் செய்துள்ளார்.
- ஓய்வு நிலையில் இருந்தும் தனது பணியை சிற்பத்தினூடாக வெளிப்படுத்திப் பெருமை சேர்ப்பவராகத் திகழ்கின்றார்.
- I.A.T. என்ற தனியார் நிறுவனத்தை நிறுவி, மாணவ பரம்பரையினர் ஓவியத்துறையில் ஊடுருவ முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

17. எஸ்.வரதராஜன் (1946 - )



- இவர் யாழ்ப்பாண ஓவியக் கலைமரபில் வழிவந்த ஓவியக் கலைஞராவார்.
- யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் சித்திரக் கலைப்பாட ஆசிரிய ஆலோசகராக இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.
- இவரது ஓவியங்களை ஆலயங்களிலும், பொது மண்டபங்களிலும், பாடசாலை வகுப்பறைகளிலும் காணச்செய்வதன் மூலம் ஓவியத்துறைக்கு தன்னாலான பங்களிப்பினை இன்றும் செய்து வருகின்றார்.
- ஓய்வு நிலையிலும்கூட இவரது பணிகள் தொடர்கின்றன. இவரது வாரிசாக மகனும் ஓவியக்கலையில் பட்டம்பெற்று பணிசெய்து வருகின்றார்.

18. சிவப்பிரகாசம் (1927 - )



- இவர் யாழ்ப்பாண மரபுவழி ஓவிய சிற்பக் கலைஞர்களில் சிறப்பான இடத்தை வகிப்பவர்.
- பல்வேறு சிற்பவடிவங்களை பொது இடங்களிலும் நிலைநிறுத்தித் தன்புகழை அழியாது பேணிக்காத்த கலைஞர்.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள இராமநாதனின் சிலை இவரது சிற்பத்திறமைக்கு உதாரணமாக விளங்குகின்றது.
- ஆலயங்களில் ஓவியங்களை வரைந்து புகழ்பெற்றவர்.
- இவர் தன்வழி தொடர பல இளம் ஓவியர்களை வளர்த்தெடுத்துள்ளார்.
- அண்மைக் காலத்திலே யாழ்ப்பாண கலாசாரப் பேரவையினரின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட வலுவிழந்தோருக்கான சித்திரக் கைப்பணிப்பயிற்சி ஒன்றை நடத்தி அதன்மூலம் ஜனாதிபதி விருதினைப் பெற்றுள்ளார்.
- பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்று யாழ்ப்பாண ஓவிய உலகுக்குப் பெருமை சேர்த்த கலைஞரை என்றும் மனதில் கொள்ள வேண்டும்.

**அதிவண. லோங் அடிகளார்**



**இவர் அயர்லாந்து நாட்டின் லிமெரிக் என்னும் இடத்தில் 1896 இல் பிறந்தவர். இளமையிலேயே இறைபக்தியில் நாட்டங்கொண்டு யேசுசபைக் கல்லூரியில் இணைந்து கற்றவர். 1910இல் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபராயிருந்த அதிவண. மத்தியூஸ் அடிகளாரின் கவனத்துக்குட்பட்டு அமலமரித் தியாகிகள் நவசந்நியாசத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். குருத்துவப் படிப்பு முடிந்ததும் 1920இல் திருநிலைப்படுத்தப்பட்டார். 1921இல் யாழ்ப்பாணம் புனித பத்திரிசிரியார் கல்லூரி ஆசிரியர் குழுவில் இணைந்தார்; அங்கே விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பாயிருந்தார். இக்காலத்தில் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும் முடித்துப் பின்னர் எம்.ஏ. பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். தமது உயர்ந்த சேவையினால் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபராக 1936இல் பதவி உயர்த்தப்பட்டு 1954வரை தொடர்ந்து 18 ஆண்டுகள் பணியாற்றினார். கல்லூரியின் வளர்ச்சிக்கு மாத்திரமன்றி, யாழ்ப்பாணப் பொதுநூல் நிலைய உருவாக்கத்திற்கும் அரும்பணியாற்றினார். அதற்கான நிதியம் ஒன்றினை உருவாக்கி, உலகம் முழுவதும் சென்று பணம் திரட்டிக் கொடுத்தார். யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் களியாட்ட விழாவையும், "யாழ்ப்பாணத்தின் விடை" என்னும் களியாட்ட நிகழ்ச்சியையும் முதன்முதல் நடத்தினார். அசல் யாழ்ப்பாணத்தானாக வாழ்ந்த அடிகளார், நாட்டைவிட்டுப் பிரியும்போது யாழ்ப்பாண மக்கள் திரண்டுவந்து கண்ணீர்மல்கப் பிரியாவிடை நல்கினர். 30.04.1961இல் இலண்டனில் மரணமான அடிகளாரின் உடல் அயர்லாந்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இலங்கையின் தேசியவீரரில் ஒருவராகக் கணிக்கப்பட்டு இலங்கையரசு 1990இல் முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தது. யாழ்ப்பாண மக்களும் பொதுசன நூலகத்தில் அவரது சிலையைத் தாபித்துள்ளனர்.**



# கல்வயலாரின் கவிதைகள்

## 1

## எண்ணப் பொறிகள்

☞ கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி,
பகுதிநேர விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

முருகனது வேலைப் பறித்து
முறித்தால்
ஒருவேளை; ஓர்மம் ஒடுங்கிப் பொடியன்
இருப்பன் அடங்கியென
எண்ணப் பொறி பறக்கும்.
எண்ணப் பொறியில் கிளம்பி எழுகின்ற
வண்ணம், கலவை, வனப்பில் வலைப்பின்னல்
சக்தி கொடுத்த திமிரின் தலையெடுப்பில்
சிக்கித் தவிக்கும்;
சிலிர்ப்பில்;
சிறிய பொறிபட்ட சூடு;
பொருக்கு மன உணர்வில்
முருகனது வேலைப்பறித்து முறித்துவிட்டால்....யூ
ஆறுதலையும் அடக்கி முடக்கினால்
வேறொன்றும் வேண்டாம்
கெறு அடங்கிப் போகும்
வீரவாகைக் கடத்தும்
விசயம் சரியெண்டால்
ஆருமே தேவையில்லைஃஉ
பானு கோபன் கொதித்தான்
படையெடுப்பேன் என்றான்.
சூரனொடு சிங்கன் சூழ்ச்சி
வலைப்பின்னல்
நேரெதிராய் இற்றறுந்து;
போகவிடலாமோ?
பானுகோபன் பதறி;
பல்லை நெறுமினான்.
"ஈனச் செயலுக் கிடங்கொடுக்க மாட்டேன்,
நம்மானம் பெரிசு;
மரியாதையாய் அவர்கள்
தானாகவந்து
சரணடைந்தால் மன்னிப்போம்
மோணையூ பொறடா;
முதல்வேலையாய் நாங்கள்
போனவழிப் பிழை(ப்) பொட்டை
மறைச்சுவிட்டால்யூ"
ஞானம் புதிதாய் உதயம்;
நயந்தவராய்;
கைக்குருவி, பேனா, கடதாசி,
மை இவற்றை
எக்காரணம் கொண்டும்
எவரும் பயன்படுத்தக் கூடாதயூ
சட்டம்;
சரி, யாரும் மீறினால்
கொட்டம் அடக்கப்படும்.

❊ ❊ ❊

கந்தப்புராணக் 'கதை'யா?
ஒயூ அது ஓ
எந்தத் திசையிலே
மாறிக்கிடக்கிறதயூ

# 2

# கணக்கில் எடுப்பதில்லை

குலமகளிர் கூடி நீர் ஆடும் குளத்தில்
நிலவு தரை இறங்கி நீரில்
விளையாடும்
அலை தழுவி;
ஆசை அணைப்பில் நழுவி
நிலவு நிமிடம் ஒரு நெற்றியாய்
மாலைநீர் ஆடும் மகளிர்
நடுப்புருவ
கோலத் திலகப் பொலிவோடு நின்று
கலவி பலநிகழ்த்தும் காமன்
உருக்கொண்டு
சிலபேற்றை கண்ணுக்குச் சிவமே
தெரியாது
விசிறிகள் அற்றால்
விளைவு சவம்;
அவர்கள் பிசிறல் கதையில்
புரளும் பேர்
ஆசிரியர்
பத்தை விரித்துப் பதினொன்றாய்
ஒன்றெழுதும்
வித்தகர்கள்;
சும்மா நீர்
வீண்கதைகள் பேசாதீர்
சத்தமிட்டுக் சொன்னால் உம்
சந்ததியே மீளவிடார்
குத்தல் கதைகள்
கொழுவலிலே போய்;
முடியும்
ஐயா அவர் சொன்னார் உதை;
ஒன்றும் நாங்கள்
கணக்கில் எடுப்பதில்லை.





# MAXIMISING THE TASK OF LISTENING IN ESL CONTEXTS

Mr. V.ParANTHAMAN
B.A(Hons) M.A(Merit)
Lecturer in ELT, ELTC
University of Jaffna.

## I. Introduction

Listening is an essential skill for comprehension and effective communication. We only become aware of what remarkable feats of listening we achieve when we are in an unfamiliar listening environment such as listening to a language in which we have limited proficiency. Listening includes a kind of processing, dividing an unfamiliar speaker's utterances into words, identifying them, and at the same time interpreting what the speaker meant. (Anne Anderson & Tony Lynch)

In Second language learning listening is approached as a healthier source providing necessary input to stimulate the language faulty of the learners or speakers. According to Rivers 'Speaking does not itself constitute communication unless what is said is comprehended by another person'. Listening functions as an effective skill to bring a kind of interaction among speakers.

Chiefly, we have four types of listening; Reciprocal - where listener takes part in interaction Non- reciprocal-listener doesn't take part in interaction, Transitional - we obtain information or specific information; and Interaction where we maintain friendly social relations.

Listening has been neglected so far in the secondary education when different types of second language leaching pedagogies were in practice.

But the skill, listening has been introduced in the current text books being used for teaching English as a second language in schools and higher education centres.

The texts and the tasks or activities prescribed here are drawn from the academic contexts of our University.

## II. Text Selection - Justification

Second language listening is something different from the first language listening. $L_2$ listeners have to face internal and external barriers while comprehending the texts written in the second language. Faerch and Kasper have discussed several issues - $L_2$ head factors. These factors include

a) knowledge of the $L_2$ linguistic code
b) degree of socio cultural competence
c) Strategic competence

$L_2$ listeners should be in a position to use various cognitive strategies involving deductive reasoning and compensation strategies. (eg:- guessing intelligently about the meaning of what is heard). Sometimes they have to use their knowledge of indirect strategies like getting the general meaning without knowing every word.

Theoretically, selecting a text for a listening task is based on two factors. These factors are drawn from the Schema theory to $L_2$ listening. D. Long has proposed these two schematic knowledge which are really essential while selecting a text for listening comprehension.

1. Content schemata (background knowledge of the text)
2. Textual schemata (real organizational knowledge of the text)

Chiang has also provided additional evidence that the knowledge of the content schemata enhances the comprehension for ESL listeners. Sheils also considers familiarity with the content schemata of a talk to be vitally important for listeners and highlights several additional factors that are thought to affect the difficulty of processing oral discourse. They are related to the content, structural, and linguistic features of the oral text and to the speaker's style of delivery and speech. (Patricia Dunkel Page - 272)

# Why is computer education for young children a growing concern?

Over the past few years, computers have become a vastly popular household item. The luxury of e-mailing messages as opposed to charging up the phone bill is more appealing. Checking news, weather and sports via the Internet is a convenience that many are taking advantage of.

Our children's lives are already getting influenced by technology – and this is just the beginning. Computers and internet are here to stay and software titles targeting young children continue to increase. Computer science has become a compulsory subject in Sri Lankan schools. Today, we find computers in use everywhere, whether we go to reserve a plane ticket or to a Bank to withdraw or deposit money we find computers performing these tasks. This is because it is faster and helps us to complete our work without mistakes/ errors. So parents too have realized the need to help their children to develop strong computer skills.

Parents are leaving the learning up to the computers and spending less quality time with their children. The most important learning step for children is interaction with others. If they are sitting in front of the screen all day, they do not learn to share, wait their turn, or even something as simples as manners. Children need to be in contact with other children, adults, and animals. They need to experience things first hand not off a computer screen. One benefit of the computer age is that children are becoming smarter. They are growing up computer literate and will have that as a huge advantage. Computer literacy is becoming a huge job qualification and feeling comfortable with one will put them a step ahead.

Children will also be able to complete homework on line. In some places, if you miss school you can find out the assignments that you miss and catch up. This is very helpful if your child comes down with the flu, but do you want them to feel like it is okay to miss school because they can catch up with their computer?

Overall, children can benefit from computers if they are used wisely. Parents that supervise their children when they are on the computer can ensure that everything is happening safely.

Computers are the wave of the future, but old fashioned learning techniques should not be forgotten. A child needs to interact physically with other people and learn everything from computers.

**What are the advantages of computers for young children?**

Computers help children to be in control of their experience, to set their own pace, and to select the level of challenge with which they feel comfortable.

Computers help children to use all of their senses to extract information. Computers fascinate kids and can draw their full attention, which often results in a deeper focus and concentration.

Computers enable children to learn through creating, just as they gain hands – on knowledge and understanding when they build forts, make up stories, and paint, increase their skills.

As they master computers, children build positive attitudes toward technology that will pay dividends for the rest of their lives.

**Computers benefit the development of fundamental skills...**

Good educational software enables children to develop and practice a broad range skill. It can help them learn, for example, about letters, numbers, shapes, colors, and rhythm. Good software can also help children develop their understanding of cause and effect, higher order problem solving, procedural thinking, and creative expression, today, the wide range of multimedia available for kids in Sri Lanka is really amazing.

**Emotional skills:**

By using a computer children develop self - confidence and self - esteem as they master computer skills and use the computer to make things happen. This also gives them a reason to smile!

**Social skills:**

In the classroom setting or in the home when their friends or parents are available, children often prefer working with one or two partners over working alone, which leads to the development of social skills.

**Computers benefit children with special needs..**

Computers have proven extremely beneficial to kids with certain speech, audio, and motor limitations. Kids with special needs can use alternative input and output devices (assistive technologies) to interact with computers and do things that they normally could not accomplish independently. They benefit especially from having access to an on demand, patient tutor that allows them to work at their own pace. What they achieve through using a computer enhances their self - esteem and provides them with a greater sense of control and engagement with the world. The internet provides them with the best of knowledge for their treatments and they can be in touch with doctors or friends through the internet, in Sri Lanka or Abroad. Also, the internet can later help them earn their means of livelihood.

**What are the disadvantages of computers for young children?**

Computers are very engaging and can exercise a strong "holding power" on children as well as adults. They really seem to mesmerize children. Since we do not yet understand the impact of this power, we need monitor the amount of time a child spends before a computer.

If the software is not age - appropriate, children are likely to become frustrated and associate a computer with failure.

Kids with access to software that is not age appropriate may be exposed to such negative influences as violence, strong language, and over – stimulation from fast – action graphics.

Frequent and prolonged computer sessions may pose physical health risks for children. The most frequently cited are visual strain, harmful effects of radiation, and posture and skeletal problems. In the case of normal usage and normal operating conditions, however, research has shown that computer monitors are safe and does not compromise the health of our eyes and that computer monitors emit little or no harmful radiation. What does seem to pose a hazard is the strain placed on a child's posture and skeletal structure if she consistently uses a computer set-up designed for and adult.

**Just what is children's computer education?**

Years ago, computer literacy was defined in terms of specific knowledge of computer technology and terminology. Today, it is regarded more as a continuum of awareness, skills, experience, and attitudes based on the age and capabilities of the individual child.

1. *An awareness of what the computer can do - that it is a tool for learning and finding out about things, and for expressing and creating things.*
2. *An awareness of ideas and behavior that area part of the computer culture, such as knowledge of safe behavior on the Internet.*

3. *Basic operational skills learned by immersion in a variety of software programs.*
4. *A body of successful experiences that over time develop within a child an intuitive feel for dealing with new thing that he encounters in a computer environment. Typical examples are how to navigate a new program and how to "trouble-shoot" when something isn't working.*
5. *An attitude of discovery, mastery, purposefulness, and pleasure in using computers.*

**How do children gain computer literacy? Is there a series of steps?**

Children develop computer literacy by observing others at the computer and by diving in and actively exploring different software programs. As with learning to read, each child will progress at the rate appropriate to that child. By and large, children are curious and pick up fast. These are lots of computer classes in Sri Lanka which specially cater to young children.

**STEPS:-**

**Exposure and observation:-** A child's relationship with the computer typically begins with the child watching a sibling, parent or classmate busy at the computer. It eventually crawls up to Daddy's lap, and through the so called "Daddy Interface" has its first computer experiences, passive in nature.

**Active participation:-** The child quickly moves from observer to active participant, grabbing at the mouse, banging on the keyboard, and pointing at things that excite her on the screen. The parent, however, still operates the software.

**Taking control:-** Eventually, the child learns how to control a mouse of trackball and subsequently how to control what is happening on the computer screen. Using its newfound "point and click" and "Click and drag" skills, it can now actively explore a software program.

**The computer is my tool:-** With greater control, the child begins to see the computer more as her tool – something she can use to make and find things. Increasingly, she approaches the computer with a goal, for example to find dinosaurs or click on something colorful or moving.

**Mastering skills:-** As she plays with different software programs, a child develops a general sense of how to navigate through simple environments, how to start and quit an activity, and how to operate specific programs. Although she may still rely on a parent or sibling for many functions, she is rapidly mastering an impressive skill set.

**Independence:-** Most children with consistent access to a computer over the period of a couple years are eventually able to power up the machine, start up a pre-loaded application either from the hard disk or a CD-ROM, quit an application, operate the printer and scanner, access the Internet from the desktop, and even send and e-mail.

Refer:- India web.

Mr. J. Jeyajeeva
Teacher
J/ Mathagal St. Joseph
M.V.

Thanks for "Valanar" Magazine Mathagal St. Joseph College M.V

**********



கலை மலர்க் குழுவினர்



கலாசாலை பகுதி நேர விரிவுரையாளர்கள்



கட்டுரை

# சூழல் மாசடைதலும் சூழல் பாதுகாப்பின் அவசியமும்

(முத்தமிழ் மன்றம் நடத்திய போட்டியில் முதற்பரிசு பெற்றது)

வே.விஜயசொருபி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

நம்மைச் சுற்றியுள்ள அனைத்தையும் சூழல் என்கிறோம். இச்சூழலை மனிதன் அளவுக்கதிகமாகப் பயன்படுத்துகின்றான். இதனால் சூழல் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றது. இதனால் சூழலில் வாழும் உயிரினங்களுக்குப் புற்றுநோய்களும், தொற்றுநோய்களும் ஏற்படுகின்றன. எனவே, மனிதஇனம் பெரும் சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியதாய் உள்ளது.

இந்த வகையில் பூமியில் ஆரம்ப காலத்தில் சூழலாதிக்கவாதம் பெரும்பங்கு வகித்தது. ஆனால் வளர்ந்துவரும் சமூகத்தில் மானிட ஆதிக்கவாதம் பெரும்பங்கு வகிக்கின்றது. இந்த வகையில் மனிதன், சுயஸ் கால்வாய், பனாமா கால்வாய் போன்றவற்றை வெட்டினான். சமீபத்தில் இந்தியாவால் சேது சமுத்திரத்திட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் பல நன்மைகள் ஏற்பட்டாலும் பல சூழல்சார்ந்த பிரச்சினைகளுக்கு இலங்கை முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அந்தவகையில் தரையில் மண்ணரிப்பு ஏற்படப் போகின்றது. இதனால் இலங்கைக்கே உரித்தான கடற்கரைவளம் அற்றுப்போகும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான மானிட ஆதிக்க வாதத்தினால் ஏற்பட்ட சூழல் சமநிலையின்மையினால் அண்மையில் (2006ஆம் ஆண்டு) கடல்கோள் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும், பூமியில் மேலைத்தேய நாடுகள், கீழைத்தேய நாடுகள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுக் கூறப்படுகின்றது. மேலைத்தேய நாடுகளில் பெரும்பான்மையாக அபிவிருத்தி அடைந்த நாடுகள் காணப்படுகின்றன. இவை பாரிய கட்டடங்கள் போன்றவற்றையும், தொழிற்சாலைக் கழிவுகள் போன்றவற்றையும் ஏற்படுத்துகின்றன. இதனால் நிலச்சமநிலையின்மை ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் இடையிலுள்ள பிரச்சினையாக சூழல் சமநிலையின்மை விளங்குகின்றது.

அடுத்து, இயற்கைச் சூழலில் நீர், நிலம், வளி என்பன மாசடைகின்றன. இதனால் பாரிய பிரச்சினைகளை இலங்கை எதிர்கொள்கின்றது. அண்மையில் (2007ம் ஆண்டு) இலங்கை வங்கி அறிக்கையின்படி புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இடங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது என அறிகின்றோம். அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் நிலம், நீர், வளி என்பன அதிகளவு மாசடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலும் இதனைத் தடுத்து நிறுத்தும் முகமாக UNDP உரும்பிராயில் (ஓகானிக் காடின்) சேதனத் தோட்டம் நிறுவவுள்ளது. உரும்பிராயில் குறிப்பிட்ட பகுதியை மக்கள் அனுமதியுடன் இயற்கையான முறையில் 30ha பரப்பளவில் இயற்கை பசளை கொண்டு தோட்டம் செய்யவுள்ளது. இது சூழல் பாதுகாப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும், சிறந்த முன்மாதிரியாகவும் விளங்கும் வகையில் அமையவுள்ளது.

இதனால் மக்கள் இயற்கையான உணவுவகைகளை உண்பதனாலும் வளி, நிலம், நீர் மாசடையாது இருப்பதனாலும் ஆரோக்கியமான மக்களும் ஆரோக்கியமான உணவும் கிடைக்கின்றது. இதனால் மக்களின் சுகவாழ்வுக்கு இது சாத்தியமாகின்றது.

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் 96ஆம் ஆண்டளவில் Blue Baby பிறப்பும் குறிப்பிடத்தக்கது. இவையாவும் ஏன்? எப்படி? என்ற கேள்வி எழுகின்றது. இதற்குச் சூழல் மாசடைதலே காரணமாகின்றது. எனவே, நாம் சூழலைக் கவனமாகப் பராமரித்தல் வேண்டும்.

சூழல் மாசடைதலில் பெரும்பங்கு நீரினால் ஏற்படுகிறது. நீர் மாசடைதலில் செல்வாக்குச் செலுத்துவனவாக விளங்குபவை இரசாயனப் பசளைகள், பீடைகொல்லிகள், அளவுக்கதிகமான நீர்ப்பாவனை போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும், கழிவுக்குழிகள் சட்ட விதிமுறைக்கு அமைவாகக் கட்டப்படாமை போன்ற பல பிரச்சினைகளும் காரணமாகின்றன.

பீடை கொல்லிகளினால் தேவையான தேனீ, சிலந்தி, புழுக்கள் என்பன இறக்கின்றன. இதனால் மகரந்தச் சேர்க்கை மற்றும் மண் பசளையாக்கிகள் இறக்கின்றன. இதனால் சூழல் பாதிப்படைகின்றது. இதற்கு மாற்றீடாக இயற்கைப் பசளைகளைத் தோட்டங்களுக்கு இடுவதனூடாக உயிரியல் வாயுவால் இவற்றை அழித்தல் நடைபெறுகிறது.

மேலும், அளவுக்கதிகமான செயற்கைப் பசளைகளை இடுவதனால் நிலம் நைத்திரேற்றுக்களாக மாறுகின்றது. இதனால் நீர் மாசடைந்து நீலக்குழந்தை பிறக்க ஏதுவாகிறது.

இதற்கு மாற்றீடாக இயற்கைப் பசளைகளைப் பாவிக்க வேண்டும் என அரசு அறிவிக்க வேண்டும்.

அடுத்து நிலம் மாசடைதலில், காடுகள், அழித்தல் முக்கியம் பெறுகின்றன. விறகுக்காகவும், பயிர்ச் செய்கைக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால் மேல் மண் அரித்துச் செல்லப்படுகின்றது. இதனால் நிலம் வளமற்றதாக விளங்குகின்றது. வளிமண்டலத்தில் $CO_2$ அதிகரிக்கின்றது; வளிமாசடைகின்றது. இதனால் பச்சைவீட்டு விளைவு ஏற்படுகின்றது. இலங்கையில் $CO$, $SO_2$ ஆல் அதிகளவு வளி மாசடைகின்றது.

எனவே, இவற்றைத் தடுக்க வேண்டுமெனின் விறகுக்காக உயிரியல் வாயுவைப் பயன்படுத்தல் வேண்டும். இதனால் பல நன்மைகள் காணப்படுகின்றன.

மேலும் நகர்ப்புறங்களில் ஏற்படும் கழிவுகள் கால்வாய்களில் தேங்கிக் காணப்படுகின்றன. இதனால் மீதேன் வாயு வெளியேறுகின்றது. இதனால் பல தொற்றுநோய்களும், சுவாசக் கோளாறுகளும் ஏற்படுகின்றன. இவற்றைத் தடுக்கும் முகமாக குப்பை கூழங்கள் கொட்டுவதற்கென மாநகரசபையால் இடம் ஒதுக்கப்பட்டு மீள்பயன்படுத்தல் அதாவது கழிவுப் பொருட்களைச் சுத்திகரித்து மீள் உற்பத்தி செய்யப்படுகின்றது.

அடுத்து வளி மாசடைதல் பற்றி நோக்கின், வளியில் காணப்படும் வாயுக்களில் அசாதாரண நிலை ஏற்படலும், இதற்குக் காரணமாக $CO$, $SO_2$ போன்ற வாயுக்களின் வெளியேற்றமும் முக்கியமானவை. இங்கு நகர்ப் புறங்களில் வாசனைத் திரவியங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், துப்புரவாக்கிகள் போன்றவற்றில் காணப்படும் CFC வாயுவினால் ஓசோன்படைத் துவாரம் ஏற்பட்டது. இதனால் வெப்பம் அதிகரித்து புற்றுநோய்கள், தோல்வியாதிகள் என்பன ஏற்பட்டன. இதனால் சில தீவுகள் நீரில் மூழ்கும் அபாயம் காணப்படுகின்றது.

எனவே, இவற்றைத் தடுப்பதற்கு மாற்றீடு வாயுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், ஐக்கிய நாடுகள்சபை நகர்ப்புறங்களில் கிறீன் வெல்ட் முறையைப் பயன்படுத்துகின்றது. மேலும், 2050ஆம் ஆண்டளவில் 100கோடி மரங்களை நாட்டவுள்ளது.

அடுத்து ஒலி சூழலை மாசுபடுத்துகின்றது. கோயில்களிலும் விழாக்களிலும் பெரும் ஓசையுடன் பாடும் ஒலிபெருக்கிகள் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றன. மனிதனுக்கு மன அமைதியையும், சாந்தத்தையும் கொடுக்கும் ஒலி மீடிறன் ஆக 40-45 வரை ஆகும். 45-60 வரை சமிபாட்டை பாதிக்கும். 60-80 வரை நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும். 80-120 வரை காதுச் சவ்வுகள் வெடிக்கும் அல்லது இளகிப் போகும். இதைத் தொடர்ந்து கேட்டால் செவிட்டுத்தன்மை ஏற்படும். எனவே, எப்பொருளையும் அளவுடன் பாவிக்க வேண்டும்.

வாகனங்களின் ஒலி இரைச்சலால் பல நோய்கள் ஏற்படுகின்றன. இதற்கு மாற்றீடாக சத்தமில்லாத, $SO_2$வை வெளிவிடாத வாகனங்களை ஜப்பான் கண்டுபிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே, நாமும் சூழலைப் பாதுகாத்துச் சுகமாக வாழ்வோம்.

---

**தமிழ்த்தாகம்**

கோடையிலே எரிவெயிலிற் காயும்போது
கொப்பளிக்குந் தமிழ்வெள்ளம் தோயவேண்டும்
வாடைதரு மூதலிலே நடுங்கும்போது
வயத்ததமிழ்க் கதிரென்னைக் காயவேண்டும்
பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழில் அழுமோசை கேட்க வேண்டும்
ஓடையிலே என்சாம்பர் கரையும்போதும்
ஒண் தமிழே சலசலத்து ஓடவேண்டும்.

அமரர் மட்டக்களப்பு இராஜபாரதி
"ஈழத்துக் கவிதைக்கனிகள்" தொகுதியிலிருந்து



**சிறுகதை**

# உயிர்காத்த கடமை

(முத்தமிழ் மன்றம் நடத்திய போட்டியில் முதற்பரிசு பெற்றது)

பு.சுதர்சினி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

ஆசிரியை நிரஞ்சனா வேகமாகச் சைக்கிளைச் செலுத்திக் கொண்டிருந்தாள். 7.40இற்கு நீர்வேலிச் சந்தியில் ஒரு பஸ் வரும். அதனை விட்டால் 15 நிமிடத்திற்கு ஒன்றுமே வராது. 'இப்ப நேரம் 7.35 ஆகுது. சந்திக்குப் போய்ச்சேர ஐந்து நிமிடமாகுமே' தனக்குள் முணுமுணுத்தவாறே விரைவாக ஓடினாள்.

நிரஞ்சனா சைக்கிள் விடும் வீட்டில் சைக்கிளைவிட்டு வெளியில் வரவும் பஸ் வந்து நின்றது; ஏறிக்கொண்டாள். அவள் மனம் காலையில் வீட்டில் நிகழ்ந்ததை நினைத்து அலைமோதியது. நடந்தது இதுதான்; கடைச்சாவியைக் காணவில்லை என்று கணவன் இவள்மீது பாய்ந்ததால் சிறுசண்டை பெரும் போராகிவிட்டது.

"எங்கையப்பா கடைத்திறப்பு?" என்று கணவன் மனோ கேட்க; பள்ளிக்குச் செல்லும் மகளின் புத்தகப்பையை அணிவித்து அவளை அனுப்பிவிட்டு உள்ளே வந்தவள்,

''நீங்கள் தானே நேற்று வைச்சனீங்கள்'' என்றாள். அவளுக்குப் பள்ளிக்கு வெளிக்கிடும் அவசரம். அவனுக்கோ கோபத்தில் வாயிலிருந்து வார்த்தை வெடித்துப் புறப்பட்டது.

"ஏன் உனக்கு எடுத்துத்தர ஏலாதோ? ஓ! அவ பெரிய ரீச்சரெல்லே, பள்ளிக்கூடத்தை அவதான் தலையில சுமக்கிறா''

நிரஞ்சனாவுக்குப் புரிந்துவிட்டது. இது தினமும் நடப்பதுதான். எதில ஆரம்பித்தாலும் கடைசியில முடியிறது அவளது ரீச்சர் உத்தியோகத்தில்தான். அவள் வேலைக்குப் போவது அவனுக்குத் துளியும் விருப்பமில்லை. ஆனால் வேலையை விட்டால் வீட்டுச் செலவுகளை ஈடுகட்ட முடியாது. ஏனெனில் அவனது கடையில் வரும் வருமானம் குடும்பத்திற்குப் போதாது.

திடீரென பஸ் பிரேக் போட்டபோது சிந்தனை கலைந்த நிரஞ்சனா, நிமிர்ந்து பார்த்தாள். செக்பொயின்ற் ஒன்றிலே பஸ் நின்று கொண்டிருந்தது. மெதுவாக இறங்கியவாறு அடையாள அட்டையைத் தேடினால் பையினுள் அதனைக் காணவில்லை. அப்பொழுதுதான் நினைவு வந்தது, கணவன் ஏதோ விதானையின் பதிவிற்கு வேணுமெண்டு நேற்று வாங்கிக்கொண்டு போனவன் திருப்பித் தரேல்லை. திக்கென்றது அவளுக்கு. என்ன செய்வதென்று தெரியவில்லை. மெதுவாக வரிசை முன்சென்று அவள் முறை வந்தது. அவள் வாயைத் திறப்பதற்குள்,

"குட்மோர்னிங் ரீச்சர் நீங்க போங்க" என்று அவன் சொல்ல "கடவுளே!" என்றவாறு பஸ்ஸில் ஏறினாள். "திரும்பி வரும்போது என்ன நடக்குமோ? எல்லாம் கணவனால் வந்த வினை" என்று மனதினுள் நொந்தவாறு பாடசாலைக்குச் சென்றால் அங்கு மகிழ்ச்சிதரும் செய்தி காத்திருந்தது.

"வாழ்த்துக்கள் ரீச்சர்" என்றார் வாயிலில் நின்று கொண்டிருந்த சேர். "என்ன சேர் விசயம்?'

"உங்கட வகுப்பு ரமேஸ் மாகாண மட்டத்தில நடந்த கட்டுரைப் போட்டியில் முதலாவதாய் வந்திருக்கிறான்''

''என்ன உண்மையாயோ? அவன் கெட்டிக்காரன் தான்! நன்றி சேர்" என்றவாறு உள்ளே சென்றாள்.

கையெழுத்திட்டு விட்டு நிமிரவும், அங்கு வந்த அதிபர் "நிரஞ்சனா மிஸ் உங்கட வகுப்புப் பிள்ளைதான் முதலாவதாய் வந்ததாம் கெட்டிக்காரன்" என்றார்.

"ஓம் சேர் நானும் எதிர்பார்த்தேன்"

"உங்கட முயற்சிதான் ரீச்சர் இதுக்குக் காரணம், நீங்கள் அந்தப் பிள்ளையளோட முன்னேற்றத்திற்கு எவ்வளவு தூரம் பாடுபடுறியள் எண்டு எனக்குத் தெரியும்; எல்லாரும் உங்கள மாதிரி இருந்தால்...."

''நன்றி சேர்'' என்றவாறு வகுப்புக்குச் சென்றாள். காலையில் மனதில் ஏற்பட்ட ரணத்திற்கு மருந்து தடவுவது போல அதிபரின் பாராட்டு அமைந்தது. வகுப்பினுள் நுழைந்ததும் "ரமேஸ் வந்திட்டானா பிள்ளையள்?" என்று கேட்டபோது ரமேஸ் முன்னே வந்தான். ''கெட்டிக்காரன்; பள்ளிக்கூடத்திற்கும் எனக்கும் பேரெடுத்துத் தந்திட்டாய்'' என்று அவனை அணைத்துக் கொண்டாள்.

புலமைப் பரிசில் பரீட்சை எடுக்க இருக்கும் மாணவர்களுக்கே அவள் கற்பித்துக் கொண்டிருந்தாள். எனவே, தனது கற்பித்தலில் கூடிய கவனத்துடன் பிள்ளைகளைத் தயார்ப்படுத்த வேண்டியிருந்தது. அதனால் மாலையிலும் சிறிது பிந்தியே வீட்டிற்குச் செல்வாள். அதனாலும் வீட்டில் சண்டை. தன் தலைவிதியை நொந்தவாறே அன்றைய பாடத்தைத் தொடங்கினாள்.

மாலையில் வீடு திரும்பிய நிரஞ்சனா தனது அன்றாட வேலைகளை முடித்துவிட்டுப் பிள்ளைக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்கத் தொடங்கும்போது, கடைக்குச் சென்ற கணவன் வீட்டினுள் நுழைந்தான். தேநீர் போட்டுக்கொண்டு போய்க் கொடுத்த நிரஞ்சனா "என்ர ஐ.சி எங்கையப்பா?" என்றாள். அவன் காது கேளாதது போல் கிணற்றடிக்குச் சென்றுவிட்டான். நிரஞ்சனாவிற்கு வருத்தமாக இருந்தது. 'ஐ.சி இல்லாமல் எப்பிடிப் போனே, வந்தாயெண்டு ஒரு கேள்வியில்ல' அலட்சியமாக நடந்துகொள்ளும் கணவனைப் பார்த்தால் 'ஏன் கலியாணம் செய்தன்' எண்டு வெறுப்பு வந்தது. மெதுவாக அவன் சட்டைப் பையைப் பார்த்தால் அதற்குள் ஐ.சி இருந்தது. தானே அதை எடுத்துக் கொண்டு சமயலறையினுள் நுழைந்தாள்.

தனது வேலையில் கருத்துடன் செய்யப்பட்ட அவள் வீட்டு வேலையிலும் பொறுப்புடன் நடந்து கொண்டாள். ஆனாலும் அவள் கணவனுக்கு அவள்மீது ஏதோ ஒரு வெறுப்பு. வேறென்ன அவனைவிட மதிப்பான உத்தியோகத்தில் மனிசி இருப்பது அவனுக்குப் பிடிக்கேல்லை.

அன்று விடுமுறைநாள். இருவரும் வீட்டில் இருந்தனர். மகள் பக்கத்து வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தாள். நிரஞ்சனா சமைத்துக் கொண்டிருந்தாள். பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த மனோ அதில் மனைவியின் பெயர் இருப்பதைக் கண்டான். ஆசிரியர்களுக்கிடையே கற்பித்தல் துணைச்சாதனங்கள் தயாரித்தல் போட்டியில் முதலாவது இடம் நிரஞ்சனாவிற்குக் கிடைத்திருந்தது. அது அவனது கோபத்திற்குத் தூபமிட்டது. திடீரென சைக்கிளை எடுத்துக் கொண்டு எங்கேயோ சென்றான். சில நாட்களாகவே அவளைப் பாராட்டும் விதமான பல செய்திகளை அவன் கேட்டு ஏனோ அவள்மீது பொறாமை கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அதைவிட "நீங்கள் நிரஞ்சனாவின் மிஸ்ரர் தானே?" என்பது போன்ற வினாக்கள் அவனை எரிச்சல்படுத்தின.

ஆனால் துணிந்து வேலைக்குப் போகாதே என்று கூறவும் முடியவில்லை. பிறகு வீட்டுச் செலவுக்கு என்ன செய்வது? இவ்வாறு சிந்தித்தவாறே வீதியில் கவனமின்றிச் சென்றவனை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் அடித்து வீழ்த்தியது. இரத்த வெள்ளத்தில் அவன். மயக்கத்தில் சென்று கொண்டிருந்தவன் காதுகளில் இறுதியாக விழுந்த வார்த்தை "இவர் நிரஞ்சனா மிஸ்ஸின் அவரெல்லே!"

மனோ கண் விழித்த போது கண்ணீர்மல்க எதிரே அவன் மனைவியும் பிள்ளையும். அவன் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்திருந்தான். அருகில் அவனைக் காப்பாற்றி உயிர் கொடுத்தவர். "ஆம் உயிர் கொடுத்தவர் தான்". "ஏனெனில் நிறைய இரத்தம் இழந்துவிட்ட அவனது இரத்தக்குரூப் எங்கும் இல்லாமல், இறுதியில் அவர்தான் இரத்தம் கொடுத்தாராம்.

"இஞ்சாருங்கோ இவர் எனது வலயக் கல்விப்பணிப்பாளர், இவர் உங்களை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து எல்லா உதவியும் செய்தார்" என்றாள் மனைவி.

அப்பொழுதுதான் தன் மனைவியின் பெருமை அவனுக்குப் புரிந்தது. அதுதானே அவன் உயிரையே காத்தது. உயிர்காப்பாள் துணைவி; ஆனால் இங்கு அவளது கடமை உணர்வு அல்லவா அவனது உயிரைக்காத்தது.

---

**இலங்கையில் உள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள் அமைந்துள்ள இடங்கள்**

1. ஊவா
2. நில்வளா
3. மகாவலி
4. சாரிபுத்த
5. சியனை
6. வவுனியா
7. சிறிபாத
8. அட்டாளைச்சேனை
9. மட்டக்களப்பு
10. பஸ்துன்ரட்ட
11. புலஸ்திபுர
12. வயம்ப
13. ருவன்புர
14. றுகுணு
15. யாழ்ப்பாணம்
16. தர்காநகர்
17. ஹாபிடிகம
18. பேராதனை



மரபுக்கவிதை

# இறைவனுக்கு ஒரு விண்ணப்பம்

(முத்தமிழ் மன்றம் நடத்திய போட்டியில் முதற்பரிசு பெற்றது)

திருமதி பிரபாஜினி
மயிலாஷன்
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'D'.

காலைத் தென்றல் கனிவுடன் வீசவும்
பாலை வனங்கள் பசுஞ்சோலை யாகவும்
மாலைப் பொழுதுகள் மகிழ்வுதந் தாடவும்
ஞாலத் திறைவா உனக்கொரு விண்ணப்பம்

நாட்டின் யுத்த மேகங்கள் விலகவும்
வீட்டின் கொடிய பசிப்பிணி அகலவும்
ஏட்டின் மூட இருண்மைகள் நீங்கவும்
பாட்டில் இறைவா உனக்கொரு விண்ணப்பம்

சொந்தம் சூழ்ந்து சுகமாய் வாழவும்
பந்தம் விலகாப் பண்புகள் வளரவும்
சந்தம் கொழிக்கும் தமிழிசை ஓங்கவும்
எந்தன் இறைவா உனக்கொரு விண்ணப்பம்

மழலைகள் சிரித்து மண்ணில் விளையாட
மங்கையர் மகிழ்ந்து மனையினில் உறவாட
மாந்தர் உலகினில் மகத்துவம் பெற்றிட
மாசற்ற இறைவா உனக்கொரு விண்ணப்பம்

தாமரை மலர்ந்த பொய்கையின் குளிர்மையும்
தத்தைகள் பேசும் மழலையின் செழுமையும்
பாமரர் நெஞ்சில் பகுத்தறி வொளியும்
பரவிட இறைவா உனக்கொரு விண்ணப்பம்

சண்டைக ளகன்று சமாதானம் வந்திட
சகலரும் சரிநிகர் சமானமென் றாகிட
அண்டை அயலார் அன்பினால் வென்றிட
ஆக்குவாய் இறைவா உனக்கொரு விண்ணப்பம்

சுயநல மில்லாப் பொதுநலம் வேண்டும்
சுதந்திரம் என்பது அனைவர்க்கும் வேண்டும்
பயமின்றி வாழ்க்கை பாரினில் வேண்டும்
பணிவுடன் இறைவா உனக்கொரு விண்ணப்பம்.



புதுக்கவிதை

# அழியாத நினைவுகள்

(முத்தமிழ் மன்றம் நடத்திய போட்டியில் முதற்பரிசு பெற்றது)

ந.ஜெயறூபி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'A'.

பள்ளிப் பருவமதில் துள்ளித்திரிந்த
பசுமையான காலங்கள் உ என்றும் என்
இதயத்தின் அறைகளிலே இதமாக
இனிமையாகக் குடியிருக்கின்றன

சுடுமணலின் நடுவே துள்ளிக் குதித்தோடி
சுட்டித்தனம் புரிந்து காலிலே பட்ட காயம்
அம்மாவின் சேலைகட்டி இங்கிதமாய்
அம்மா போல் நடித்து மகிழ்ந்த காலங்கள்

புத்தகங்களின் பக்கங்களிலே உ என் மனதிலுதித்த
புத்தம் புதிய கருத்துக்களை வரைந்து
இறுதியிலே அவை இனிக்காது போனதனால்
இறுக்கமாகப் பிடித்து கசக்கி எறிந்த பக்கங்கள்

வெண்ணிலாவைக் காட்டி அம்மா
சோறூட்டும் வேளையிலே உ கண்ணாடியில்
வெண்ணிலவைத் தொட்டதனால்
மகிழ்ந்து குதித்த நினைவுகள்

பாங்கான மணலினிலே பட்டுச்சட்டைதனை
தடக்காது பற்றிக்கொண்டு உ கெந்தி
வட்டமிட்டுச் சாகசங்கள் காட்டிவிட்டு
அன்னையின் அரவணைப்பில் நனைந்த நினைவுகள்

பள்ளிச் சிறுமியாய் சிட்டாகப் பறந்து,
பாலரோடு சேர்ந்து விளையாடி,
பள்ளியால் வரும்போது என்
பட்டான கன்னங்களில் அம்மா பதித்த முத்தங்கள்

மாங்காயும் புளியங்காயும் கல்லெறிந்து வீழ்த்தி
ஒரு முறை கடித்து விட்டு எறிந்த நினைவுகள்
அத்தனையும் இன்றும் எனக்கு
கற்கண்டாகத் தித்திக்கிறது

இன்னும் எத்தனை எத்தனையோ என்நெஞ்சில்
இனிய நினைவுகள் இதமாகப் படர்கின்றன உ அவை
அழியாத நினைவுகளாய் என் இதயச் சுவர்களில்
அழகான ஓவியமாய் பசுமையாகப் படிந்திருக்கின்றன.



கவிதை

# என்னுயிர்த் தமிழணங்கே!

திருமதி பாமினி சிவலிங்கம்
(பழையமாணவி - 2003)
ஆசிரியை, மானிப்பாய்
மெமோறியல் கல்லூரி.

பொன்பூத்த தமிழணங்கேயூ
பொலிவுடனே எனை ஈந்து
மண்ணார்ந்த இப்புவியில்
மாண்புபெற வைத்தனையோ?
எந்நாளும் இன் தமிழை
என்றும் யான் பூசிக்க
இந்நாளில் இப்புவியில்
இசைந்திடுவாய் எந்தனுக்கு.

தமிழன்னை நீ தந்த
தவச்செல்வம் பலவொன்றாய்
என்னுயிரில் கலந்துறைந்து
என்றும் யான் சுவாசிக்க
வண்ணமொடு தமிழினிமை
வகைவகையாய்த் தந்து நின்று
வாண்மைபெற வாழ்த்திடுவாய்
வையகத்தில் இன்புறவேயூ



கவிதை

# பசுமையான நினைவுகள்

ம.தயாநிதி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'C'.

மீட்டிப் பார்ப்போம் நம் கடந்தகால நிகழ்வுகளை
வான் முட்டும் பனை மரங்கள் உ தேன் சிந்தும்
சோலைகள் தென்னந்தோப்புகள் உ அவற்றின் ஓசை
ஒலி எங்கே? காணாது போய்விட்டதா???

மெல்லிய இளந்தென்றல் மென்குளிர்பட்டு எழுந்ததும்
முத்துப் போன்ற பனித்துளி தட்டி விளையாடியதும்
பழைய சோற்றைப் பிசைந்து பக்குவமாக உண்டதும்
இசை ஞானியையும் மிஞ்சிய கானக் கருங்குயிலின்
இசை கேட்டு மெய் சிலிர்த்த காலமும் மீண்டிடுமோ???

பனை மட்டையும் குரும்பெட்டியும் கொண்டு
கிரிக்கற் விளையாடியதும்
அன்னநடை பயின்று வரும் அருவியில்
அள்ளி அன்னம் போல் குளித்ததும்
எட்டுப் பேர் குடும்பத்தில் எள்ளளவும் பிரிவின்றி
ஏற்றமுற வாழ்ந்த இனிய காலத்தை
ஏக்கமுடன் மீட்டிப் பார்க்கின்றேன்

புளியங்காய் பறிக்கப் புளியமரம் ஏறுவதைப் பார்த்து
பேய் இருக்கும் மரத்திலென்று பயமிருக்கும் உ முதியவரும்
நாற்சார் வீட்டில் நாமெல்லாம் மகிழ்ந்து இருந்தும்
கோயில் திருவிழாவிலே கும்மாளம் அடித்ததும்

வாசலிலே கோலமிட்டு வண்ணப்பானை அதில் வைத்து
வந்தவரை வரவேற்று பொங்கிப் படைத்த
பொன்னான காலம் அது உ இனியும் வந்து
எம்வாழ்வில் தலை காட்டுமோ??

மனிதர்களிடம் கூடித்திரிந்து
குட்டிக்கதை சொன்னதும்
நட்புக்காய் ஏங்கித் திரிந்ததும்
உறவுகளிடம் உரையாடியதும் உ நிஜமா
இவை இனியும் வருமோ??

அடடா கடிகாரம் அலறுகிறதேயு
வேலைக்கு நேரமாச்சு - வாட்டியபாணை
கறியின்றி உண்டுவிட்டு - காரில்ஏறி
செல்கிறேன் வேலைக்கு
மனதில் அந்த மாறாத பசுமையான நினைவுகளுடன்...



கவிதை

# சுதந்திர பூமியில் நிச்சயம் சிரிப்போம்.

திருமதி மோ.தவநிதி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'E'.


வெண்புறாக்கள் போல் வெள்ளை ஆடையில்
பள்ளி செல்லும் செல்வச் சிறுவர்க ளோடு
நானும் பள்ளி செல்ல ஆசைப் படுகின்றேன்
ஆனால் என்னை அழைத்துப் போக
ஆதரவாக இங்கு எவருமில்லையேயூ

வீதியோரத்தில் வீட்டின் மொட்டை மாடியில்
ஓடிவிளையாடும் பிள்ளைகள் போல்
நானும் கைகோர்த்து விளையாடத் துடிக்கிறேன்
ஆனால் என் தந்தையோ பாதையோரத்தில்
பாதணிகளைச் சீர்செய்யும்படி பணித்துவிட்டாரேயூ

புத்தகம் சுமக்க வேண்டிய என் கைகள்
இங்கே புழுதியைத் துடைக்கின்றன
பயிரினைக் காத்திட அமைத்திட்டவேலி
இங்கே பயிரையே மேய்கின்றது
கல்வியைக் கற்றிடும் சிறுவர்கள் மத்தியில்
கால்களின் 'சூ'வினை வீதியில் துடைக்கிறேன்

கட்டாயக் கல்வியெனக் கட்டளைகள் பலவரினும்
மொட்டான எம்வாழ்வு ஒருபோதும் மலராது
முத்தான எம் கைகள் முறுக்கிழந்து போகிறது
சத்தான உணவின்றி சாய்ந்து மனம் தளர்கிறது
முள்ளில் மலர்ந்த ரோஜா கூடப் பூத்துச் சிரிக்கிறது
முழுமதி கொண்ட மனிதனின் உடலம் முடங்கிக் கிடக்கிறது

நாங்கள் இல்லையேல் நாளை இவ்வுலகம் இல்லை
நாதி இன்றியே யாம் நலிவடையவில்லை
சேலை நெய்திடும் நெசவாளன் இங்கே
தேய்ந்த கல்லினில் சேலையைக் கிழிக்கிறான்
சுயநல மனிதன் திருந்தும் நாள் வந்தால்
சுதந்திர பூமியில் நிச்சயம் சிரிப்போம்.





கவிதை

# கற்பனைக் கனவில் வாழ்ந்தது போதும்.

இ.கடம்பவனவாசினி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'D'.

கனவே கனவே
கொஞ்சம் கலைந்து போயூ
தேசம் சுதந்திரம் கிடைக்கும் வரை
எங்காவது தொலைந்து போயூ

இருண்டு போன எங்கள்
வாழ்வில் ஒளி கிடைக்குமா?
கண்ணீரில் மூழ்கிப் போன
எங்கள் முகவரி தான் தெரியுமா?

எங்கள் தேசத்தில் இனியும்
சுதந்திரக்காற்று வீசுமா?
இல்லை இங்கே எங்கள்
கல்லறைகள் மட்டும் தான் இருக்குமாயூ

வீடற்றுப் போனவனுக்கு வாசல் எதற்கு?
விடியலைத் தேடும்
கறுப்பு இரவுகள் இன்னும்
எங்கள் விழி ஓரத்தில் இருக்குயூ

உனக்காக கிழக்கு வெளுத்திருக்கிறது
உன் வரவை எண்ணிக் காத்திருக்கிறது
கண்ணீரில் கரைந்தது பல இரவுகள்
ரத்தத்தில் உறைந்தது எங்கள் உறவுகள்

கவலையின் கண்ணீரில் மூழ்கி விடாதேயூ உ வெறும்
கற்பனைக் கனவுகளில் வாழ்ந்து விடாதே
சிறகு கொண்டு இந்த வானை அளந்துவிடுயூ
உன் உரிமையைப் பெற்றிடத் துணிந்துவிடு


பாறை முழுவதும் நாளை
வேர் பிடித்துப் பு' பு'க்கலாம்
நீ அதற்காக உரிமைக் குரல் கொடு
விடிகிற சூரியன் கிழக்கை வாங்கலாம்.



மாணவர் மன்றத்தினர்



கலாசாலை கல்விசாரா ஊழியர்கள்







# நட்பைத் தேடி...

**(சிறுகதை)**

செல்வி கருணைசீலி ஆலோசியஸ்,
ஆரம்பக் கல்வித்துறை,
1ஆம் வருடம்.

அதிகாலையில் பறவைகளின் இன்னிசையிலே கண்விழித்தாள் தீபிகா. அவளால் முன்பு போல் துள்ளி எழுந்து காலைக்கடன்களைச் செய்ய முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். இதனைக் கண்ட தீபிகாவின் தாய் "நடந்தது நடந்து போச்சு; அதையே நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காம நடக்கப் போற வேலையைப் பாரு" என்றாள். அவளால் எப்படி கவலைப்படாமல் இருக்க முடியும்? தான் இவ்வளவு காலமும் தாய்க்கு அடுத்ததாக யாரை நம்பியிருந்தாளோ, அவளே அவ்வாறு கூறியது அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

எழுந்து காலைக் கடன்களை முடித்தவள் தாய் கொடுத்த தேநீரைப் பருகி விட்டு மாமரத்தின் கீழ் போய் அமர்ந்து கொண்டாள். அவளது பார்வை மாமரத்து அணிலின் மீதிருந்தாலும் சிந்தனையெல்லாம் எங்கோ இருந்தது.

தீபிகாவும் சுகாவும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். எல்லா மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு இணைபிரியாத நண்பிகள். தீபிகா ஏழ்மை என்றால் எது என்றே தெரியாது வளர்ந்தவள். அவளின் தந்தை ஒரு பிரபல வியாபாரி. கல்வியைப் பற்றி எதுவுமே தெரியாதவர். மகள் படித்து பெரிய வைத்தியராக வரவேண்டும் என்பதெல்லாம் அவரது நோக்கமல்ல. ஓரளவு படித்தால் போதும் என்பதே அவரது எண்ணம். தீபிகாவும் படிப்பில் சளைத்தவள் அல்லள். வகுப்பிலே நன்றாகப் படிப்பாள்.

சுகா ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது தந்தை ஒரு விவசாயி. அவரது சொற்ப வருமானத்தைக் கொண்டே அக்குடும்ப வண்டி ஓட்டப்படுகின்றது. தான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் தன் மகளைப் படிக்க வைத்து ஒரு வைத்தியராக்க வேண்டும் என்பதே அவரது நப்பாசை.

நண்பிகள் இருவருக்குள்ளும் எந்தவொரு இரகசியமும் இருந்ததில்லை. குடும்பப் பிரச்சினையாயிருந்தாலும் சரி; படிப்பு சம்பந்தமான பிரச்சினையாயிருந்தாலும் சரி அவ்விருவருமே தீர்த்துக் கொள்வார்கள். சுகாவிலும் பார்க்க தீபிகா நன்றாகப் படிப்பாள்; சித்திரம் வரைவாள். இது மற்றைய மாணவர்களுக்கு மட்டுமன்றி சுகாவிற்கும் சற்றுப் பொறாமையாகத்தான் இருந்தது. இருந்தும் அதை தீபிகாவிடம் காட்டிக் கொள்ளவில்லை.

சுகாவின் ஒரு சில செயல்களை வைத்து அவளது உள்மனதைத் தெரிந்து கொண்டாள் தீபிகா. அதை சுகாவிடம் கேட்டால் கோபித்து விடுவாள் என எண்ணி நண்பிக்காகத் தன்னை அர்ப்பணிப்பதெனத் தீர்மானித்தாள். அதன்பின் நடந்த எந்தப் போட்டியிலுமே தீபிகா பங்குபற்றவில்லை. அதில் சுகாவைப் பங்குபற்றச் செய்து, அதற்கு உதவியாக இருப்பாள். அவ்வாறுதான் அன்றும் தீபிகாவைப் பங்குபற்றும்படி வந்த சித்திரப் போட்டியில் சுகாவைப் பங்குபற்ற வைத்து, தீபிகா அழகிய சித்திரத்தை வரைந்து கொடுத்தாள். அச்சித்திரம் வலய மட்டம், மாகாண மட்டம், மாவட்ட மட்டமெனப் பல பரிசில்களையும் சுகாவிற்கு ஈட்டிக் கொடுத்தது. தனக்குக் கிடைக்கவேண்டிய பரிசில்கள் நண்பிக்குக் கிடைத்ததை எண்ணிச் சிறிதும் கலங்கவில்லை தீபிகா. தான் பரீட்சைகளில் அதிக புள்ளியெடுத்தால் சுகாவிற்குப் பிடிக்காது என எண்ணி தனக்குத் தெரிந்த விடைகளைக்கூட எழுத மாட்டாள். அப்பரீட்சைகளிலெல்லாம் சுகாவே அதிக புள்ளிகளைப் பெறுவாள். தான் கல்வியில் முன்னேறி வருவதாக எண்ணி சுகா பெருமைப்படுவாள். சுகாவின் மகிழ்ச்சியில் தீபிகாவும் பங்குகொள்வாள். இவ்வாறு ஒருசில மாதங்கள் கடந்தன. அவர்களது உயர்தரப் பரீட்சையும் நெருங்கியது.

தான் படித்து வேலை பார்ப்பது அப்பாவுக்குப் பிடிக்காது என்பதனாலும் தான் அதிக புள்ளிகள் பெற்றால் சுகாவிற்குப் பிடிக்காது என்பதனாலும் அந்த உயர்தரப் பரீட்சையையும் சுகாவிற்காக விட்டுக் கொடுத்தாள் தீபிகா.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. தீபிகா நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருந்தாலும் சுகாவிலும் பார்க்க குறைவாகவே பெற்றிருந்தாள். பரீட்சைப்

பெறுபேறுகள் வந்ததும் சுகா முற்றிலும் மாறிவிட்டாள். அவ்வூரில் யாரையும் மதிப்பதில்லை. ஏன் தீபிகாவையும்தான். சில மாதங்களின் பின் சுகா பல்கலைக்கழகம் சென்றுவிட்டாள். அங்கே பல நண்பர்கள் அவளுக்கு கிடைத்தார்கள்.

அன்று சுகா தன் ஊருக்கு வந்தாள். தந்தையின் நோய் காரணமாக சுகாவைப் பார்க்க நேரம் இல்லை தீபிகாவிற்கு. சுகாவும் தீபிகாவைப் பார்க்கச் செல்லவில்லை. ஒருசில நாட்கள் கழிந்தன. தீபிகாவின் தந்தை இதயநோய் காரணமாக இறந்து போனார். அவருக்காக ஊரே திரண்டு வந்து அஞ்சலி செலுத்திவிட்டுச் சென்றது. ஆனால் சுகா மட்டும் அங்கு செல்லவில்லை. அது தீபிகாவிற்கு மேலும் மேலும் துயரத்தைக் கொடுத்தது. தன் நண்பியின் மாற்றத்திற்குக் காரணம் எதுவென்று புரியவில்லை. எதுவானாலும் சுகாவிடமே பேசி அதற்கான காரணத்தைக் கண்டறிவது என்ற முடிவுடன் சுகாவின் வீட்டை நோக்கிச் சென்றாள் தீபிகா. தீபிகாவைக் கண்டும் காணாததைப் போல் வீட்டிற்குள் சென்றுவிட்டாள் சுகா. சுகாவின் தாயாரே அவளை உள்ளே வந்து உட்காரச் செய்துவிட்டு உள்ளே சென்று "சுகா உன்ர கூட்டாளி வந்திருக்கிறாள்; போய் பேசிக்கிட்டிரு; நான் தேத்தண்ணீ ஊத்திக்கிட்டு வாறேன்" என்று கூற உள்ளே இருந்த சுகாவோ "போங்கம்மா உங்களுக்குத்தான் வேலை இல்லை என்று அவளோடை பேசிக்கிட்டிருக்கிறிங்கள் எனக்குமா வேலை இல்லை'' என்று கேட்க அதிர்ந்துபோன அவளது தாய், "என்னடி இப்படி பேசுகின்றாய் உன்னோட கூட்டாளி இல்லையா அவள்" என்று கேட்க, "ஆமாம் பெரிய கூட்டாளி ஏதோ பெரிய கெட்டிக்காரி என்று எல்லோரும் சொன்னாங்க அதுதான் நானும் பழகினேன். இப்பதான் அவாவின் கெட்டித்தனம் ஊருக்குத் தெரியுதே" என்று சுகா கூற அவளது தாய் மாத்திரமின்றி இவையனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த தீபிகாவும் அதிர்ந்து போனாள். யாரிடமும் சொல்லாமல் வீட்டைவிட்டு வெளியேறினாள். நடந்தது அனைத்தையும் தாயிடம் கூறி கவலைப்பட்டாள்.

'தீபிகா, அங்க என்ன யோசிச்சுக்கிட்டிருக்கிற' என்ற தாயின் கேள்வியில் சிந்தனை கலைந்த தீபிகா, "அம்மா இந்த வீட்ட வித்திட்டு அப்பா நடத்தின கடைக்குப் பக்கத்தில் இருக்கிற வீட்ல போய் இருந்தா என்னம்மா? அங்க நிறைய நண்பர்கள் இருக்காங்க" என்றுகூற, மகளின் துயரத்தைப் புரிந்து கொண்ட அவளது தாய், "அதற்கென்ன இந்த வீட்டை வித்தாப்போச்சு" என்று சம்மதம் தெரிவிக்க, வீடு விலை பேசப்பட்டது. அதை வாங்கியவர்கள் வேறு யாருமல்லர், சுகாவின் குடும்பத்தினர்தான். தீபிகாவின் குடும்பம் வேறு வீட்டிற்குச் சென்றுவிட்டது. வீட்டைச்சுத்தம் செய்ய சுகா குடும்பம் வந்திருந்தது. துப்புரவு செய்து கொண்டிருக்கும் போது தீபிகாவால் தவறுதலாக விடப்பட்ட ஒரு பெட்டி அங்கே இருந்தது. அதை சுகா திறந்து பார்த்தாள். தீபிகா படித்த புத்தகங்கள், அவளது பழைய டயரிகள் அங்கே இருந்தன. தீபிகாவின் அந்த பக்கங்களைப் படிக்கலாம் என டயரியைப் புரட்டினாள் சுகா. அங்கே அதிர்ச்சி காத்திருந்தது அவளுக்கு. அதில் அத்தனை பக்கங்களிலும் சுகாவைப் பற்றியே எழுதப்பட்டிருந்தன. சுகாவிற்காய் முதல் முதலில் விட்டுக்கொடுத்த சித்திரப்போட்டி, சுகா முதல் முதலில் மேடையேறி பேச்சுப் பேசியது. அதற்காக பரிசில்கள் வாங்கியது, தான் பரீட்சைகளில் சுகாவிற்காய் தெரிந்த வினாக்களுக்குக் கூட விடையளிக்காதிருந்தது. ஏன் உயர்தரப் பரீட்சையைக்கூட அவளுக்காய் விட்டுக் கொடுத்தது என எல்லாவற்றையும் அந்தந்த நாட்களிலேயே மிகவும் உருக்கமாக எழுதியிருந்தாள். இதை வாசித்த சுகாவின் கண்களிலேயே கண்ணீர் முட்டியது. ''என் சந்தோஷத்திற்காக தன் கல்வியையே தியாகம் பண்ணினவளைப் போய் தப்பாய்ப் புரிஞ்சிட்டேன். அவளைச் சந்தித்து அவளிடம் மன்னிப்பு கேட்கும்வரை எனக்கு நிம்மதியே இல்லை" என எண்ணியவள் பெட்டியை மூடி வைத்துவிட்டு யாரிடமும் சொல்லாமல் புறப்பட்டு விட்டாள் தீபிகாவிடம் சென்று மன்னிப்புக் கேட்பதற்காக.

---

**இலங்கையிலுள்ள பட்டப்பயில் கற்கை நிறுவகங்கள்**

1. உள்நாட்டு மருத்துவ நிறுவகம் (கொழும்புப் பல்கலைக்கழகம்)
2. கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம் (களனிப் பல்கலைக்கழகம்)
3. கொழும்பு பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி
4. சுவாமி விபுலாநந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம் (இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்)

இலங்கையின் 14 தேசியப் பல்கலைக்கழகங்களுக்கும் 4 நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் மாணவர் அனுமதிக்கப்படுகின்றனர்.



# The value of English Education

Mr. S.Eeaswaran,
Primary Education,
2nd Year 'C'

Out of all international languages English stands gallantly in the forefront. For, It is the language most commonly chosen and used among the various nations for inter-communication purposes. There was a time when Jaffna excelled in its standard of English. Srila Sri Arumuga Navalar the great writer, who pioneered the development of Saivaism and Tamil Language during the 19th century, was so proficient in English, that he even translated the holy bible into Tamil. Mr. Alagu Subramaniyam a famous lawyer at the Jaffna Courts, was also an eminent English writer and poet who composed several poems in English on Jaffna soil. Till about the beginning of the sixties, most subjects including Mathematics, Science, History, Geography, Civics were taught in the English medium, beginning from the sixth standard. Unfortunately, English had been laid in cold storage, for nearly three long decades. In schools as well as private institutions, it turned out to be a much hated, unwanted subject. As a result the number of English teachers also decreased. However, it is indeed relieving to note that the value of English has lately been realized nationwide and steps to resurrect its standards are taken. It is also relieving to note that English medium classes have been started in schools and private institutions. In fact there was a time, when the English educated in Jaffna including higher school students conversed fluently among themselves - a scene very rarely to be seen these days!

"As many languages a man learns, so many men he becomes" is the wisely utterance of a great scholar. Learning at least two useful languages beyond one's mother tongue, will undoubtedly be of immense benefit to carry him up in life. Needless therefore to reiterate here the value of English as one of such languages.

The world is changing day by day, and the concept of a global village is fast becoming accepted. Every other day new discoveries are being made in every field of activity. Such discoveries are mostly introduced to the world through English. The knowledge of English therefore becomes imperative, if one is to keep abreast with the latest developments in all such fields of activities. In the past too, most of the valuable, original theories and concepts in all educational fields, had been made available to the world through English. Such original English works, form a valuable source of information and often go into the bibliography of scholars who conduct research studies into those fields.

Nations intending to strengthen their diplomatic ties, as well to propagate their culture and religion as well as business, choose English as the best means of communication. The English language, is also a repository of literary and philosophical works produced by various scholars from time to time. The sweetness and multifarious characteristics of English literature are relinquished by those who are interested and delve into it. William Shakespeare, Charlens Dickens, William Wordsworth, were among the internationally renowned English writers, who produced literature ranging from poetry to prose. Such books had been in the past and still are used as text books in almost all countries where English is taught.

The importance of English is gathering momentum every day. Though at present only a general knowledge of English is tested at the G.C.E. Advanced Level, it is quite possible that in another few years it may be made compulsory for entry to a University. A situation may also arise warranting very high fluency and administrative ability in English for promotion to various high posts in the state as well as private sectors, in addition to other requirements including management abilities and computer knowledge.

Environment plays a very useful role in the learning of languages. However it is good to remember the following words of an famous English scholar. "Reading make a man, conversation a ready man, writing an exact man!"

It is often wondered whether English could be learnt through one's mother tongue. An English man cannot teach English Tamil or Sinhala or any language other than English, unless he has learnt it. But that is not the case with a Sinhala or Tamil teacher well versed in English. He or she can undoubtedly give a basic knowledge of the English language, through the mother tongue. But that is only to start with. However, care must be exercised to see that the student is made to read, write and speak English through various practical methods so that a non-hesitant attempt is made by the student to acquire all language skills. In a country like ours, where English has been neglected for over thirty years, it is natural for a large of number of people to be out of its touch even up to their late forties. Creating and English environment and trying to draw students of all ages in large numbers is rather expensive and there is also a time problem, particularly in the case of working students ranging from minor employees to staff grade officers. It is also rather difficult to introduce a system of learning of English through English in an atmosphere where people have been used for several decades to communicate among themselves only in their mother tongue. There is also a severe dearth of teachers who are well trained or for that matter even well versed in English to conduct such classes. Hence, whether it is through self study or teacher guide study, it is equally good to start learning with the assistance of one's mother tongue. The student must however be gradually made to switch over to learning English through English.

People are born with differing intellectual capacities. There are fast learners and slow learners. If a student excels in some field of study, it indicates has inborn brilliance as well his interest in that subject. Language handling is also a matter, that needs lot of inborn interest. There are so many linguists who can speak and write several languages. If a student interested in a particular language gets a sound basic knowledge in it at the inception, he can later develop his talents to any extent on his own, selecting any method he would find suitable to his. An efficient language handling ability increases the personality of a person in any field of activity he is engaged in.

It is therefore wise, to start learning English straight away, if you aspire to go up to the highest echelons of your profession. "Better late than never!"



# The Man

Mr. S.Anpalakan,
Primary Education,
2nd Year 'C'

If a man speaks too much
He is talkative
If he speaks too little
He is reserved
If he spends too much
He is a spends thrift
If he spends too little
He is a miser
If he advances too much
He is way ward
If he legs behind
He is laggard
If he Insists too much
He is obstinate
If he insists too little
He is fickle
If he is accommodating
He makes him self cheap
If he remain stiff
He is proud

- *with Grateful acknowledgements to the Sunday Standard, July 5, 1953*

---

"அந்தி அடிவான், அமுதக் கடைசலென
குந்தி யெழும் நிலவு, பூவரசங் குழையூடாய்
சிந்திக் கிரணங்கள் செல்லம் பொழிகின்ற
காலைப் பரிதி, ககனச் சிறுபறவை,
"ஏலோ" எனநீர் இறைப்போர் இசையெனது
பிஞ்சு மனதைப் பிசைய, மறுகணமே
பெஞ்சில் எடுத்தெச்சில் பெய்து சுவரெல்லாம்
நெஞ்சில் புரண்ட நினைவுக்குத் தொட்டிவிட......
என்ன விதமாய் இளமை மறைகிறது"

– 'அது' கவிதைத் தொகுதியில் மு.பொன்னம்பலம்



# தாயன்பு

செல்வி குமுதினி முருகையா
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'D'.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. "தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை'' என்பதும் அவ்வாறான ஒரு பழமொழியே ஆகும். இவற்றினூடாக நாம், தாயன்பின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்கின்றோம்.

மண்ணுலகில் நாம் கண்முன்னே காண்கின்ற கடவுளராகத் தாயும், தகப்பனும் விளங்குகின்றனர். பெற்றெடுத்த கணம் முதல் எம்மைப்பேணி வளர்ப்பவர்கள் நம் பெற்றோர்களே. தாயானவள் தன் உதிரம் தந்து, தன் உதரத்தே சேயைப் பத்துமாதம் சுமந்து பெற்றெடுக்கின்றாள். நோய்வந்த காலத்திலே தன் குழந்தைக்காக நோன்பிருக்கின்றாள். தன் பசி, தூக்கம் கருதாது கண்ணெனக் குழந்தையைக் காப்பாற்றி வளர்க்கின்றாள். அவள் வழங்கும் நல்லுணவுகள் பிள்ளையின் ஆரோக்கிய வாழ்வுக்கு அடித்தளம் ஆகின்றன. அப்போது அவள் ஊட்டும் உணவு உயிர் வளர்க்கின்றது. அறிவார்ந்த அவள் உரைகள் நற்பண்பு வளர்க்கின்றன. தாயானவள் தீயவழியில் தன்பிள்ளை தெரியாது புகும் வேளைகளில் கண்டித்து நல்வழிப்படுத்துவதும் உண்டு. ஆனால் பெரும்பாலும் அன்பு வழியில் திருத்துவதே அவளின் இயல்பாகும். பிள்ளைகள் துன்பமுறாத விதத்தில் சகல கஷ்டங்களையும் தாமே பொறுத்து நம்மைப் பெற்றோர் பேணி வளர்க்கின்றார்கள். தாயின் அன்புக்கு நிகராக உலகில் எதனையும் ஒப்புமை கூறிவிட முடியாது. மதக்கருத்துக்களின் அடிப்படையில் சக்தியாக தாயானவள் வணங்கப்படுகின்றாள். அது மட்டுமல்ல காளியாக, துர்க்கையாக, சரஸ்வதியாக, லட்சுமியாக, கௌரியாக பலவிதங்களிலும் தாய் போற்றப்படுகின்றாள்.

நமக்கு இரண்டு தாயார் உண்டு. ஒன்று பெற்றதாய்; மற்றொருதாய் இறைவன். தாய் இந்த உடம்பைப் பெற்றவள். இந்தப் பிறப்பிற்கு மட்டும் தாய். இறைவன் பிறவிகள் தோறும் நமக்கு உதவும் தாய். அதனால் இறைவனைத் தாய் என்று கூறுகின்றார் மாணிக்கவாசகர்.

*"தாயான செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பி"*
*- திருவாசகம்*
*"தாயிற் சிறந்த தயவான தத்துவனே"*
*- சிவபுராணம்*

நாம், தாயாரைத் தக்க ஊஞ்சலில் வைத்துப் போற்றிப் பாலும், தேனும் ஊட்டி, மலர்மாலை சூட்டி வழிபட்டாலும் தாயார் நம்மை ஒருநாள் வளர்த்ததற்கு இணையாகாது. சந்நியாசம் பெற்ற ஆதிசங்கரரும், பட்டினத்துச் சுவாமிகளும் தாயாருக்குத் தகனக்கிரியை செய்தார்கள். இதிலிருந்து பற்றற்ற பரமஞானியும் தாயாரைப் போற்ற வேண்டும் என அறிந்து கொள்ளலாம். தாய் தான் சிறந்த தெய்வம். தாய் பூமியைக் காட்டிலும் கனமானவள் என்று யட்சப்ருச்னை கூறுகின்றது. "ஈன்றாளில் என்ன கடவுளும் இல்லை'' - என்பது நான்மணிக்கடிகை. இதுவும் தாயன்பை இனிது விளக்குகின்றது.



வடநாட்டிலே ஓர் அரசனிடம் சமஸ்தான வித்துவானாக ஸ்ரீ ஹீரன் என்பவர் இருந்தார். இவர் வடமொழியில் வல்லவர். இவர் அரசசபையில் சூரியனைப்போல விளங்கினார். அவருடைய வாக்கின் வல்லமையைக் கண்டு மன்னன் மகிழ்ந்து அவருக்குப் பல விருதுகள் வழங்கினார்.

ஒருநாள் அயல்நாட்டில் இருந்து ஒரு புலவன் வந்தான். யாளிமுகத்தோடாவும், வைரக்கடுக்கனும் நவரத்தின மோதிரங்களும் பொற்சரிகைப் போர்வையும் உடைய அப்புலவன், சீடர் பலர்சூழ மிடுக்குடன் காட்சி தந்தான். அப்புலவனுக்கும், ஸ்ரீ ஹீரனுக்கும் கல்விப்போர் நிகழ்ந்தது. அதில் ஸ்ரீ ஹீரன் தோல்வியடைந்தார். அந்த அவமானத்தை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவருக்குச் சிந்தாமணி என்ற மகாமந்திரம் தெரியும். அம்மந்திரம் சரஸ்வதிக்கு உரியது. அதனைப் பன்னீராண்டு ஜெபித்தால் கலைமகள் தோன்றிக் காட்சி தருவாள். இல்லையேல், நடு இரவில் பிணத்தின்மீது அமர்ந்து அச்சமின்றி பன்னிருநிமிடம் ஜெபித்தால் கலைமகள் காட்சி தருவாள். அவருக்கு ஸ்ரீ ஹர்சன் என்ற குழந்தை இருந்தது.

அந்த மந்திரத்தை சின்னஞ்சிறிய பாலகனிடம் ஒப்புவிக்க வேண்டும் எனக்கருதினார். மந்திரத்தை உபதேசிக்கக் கூடிய வயது குழந்தைக்கு இல்லை. தன் மனைவி மாமல்லதேவிக்கு அந்த மந்திரத்தை உபதேசித்தார்.

பெண்ணே! சிந்தாமணி என்ற இந்த மந்திரம் மிகச்சிறந்த அருமையும், பெருமையும் உடையது. 'இதனை நமது மகனுக்கு உரிய காலத்தில் நீ உபதேசம் செய்' என்று கூறி அதன் இயல்புகளையும் அதன் பயன்பாட்டையும் கூறினார்.

பின்னர் "மானம் இழந்த பின் வாழாமை முன் இனிது" என்ற வாக்கின்படி அவர் உயிர் துறந்தார். மனைவி மாமல்லதேவி கணவனாருடைய பிரிவைக் குறித்துப் பெரிதும் வருந்தினாள். மந்திரத்தை மகனிடம் ஒப்புவிக்கும் பொருட்டு உயிர் தாங்கிக் கொண்டிருந்தாள்.

பின்பு அம்மந்திரத்தை சதா உச்சரிக்கும் பயிற்சியை அக்குழந்தைக்குத் தந்தாள். தன்மகன் பன்னிரு ஆண்டுகள் ஜெபித்தால் தானே வாணிதேவியின் தரிசனம் கிடைக்கும்? அத்தனை நாள் தாமதிக்காமல் அதிவிரைவில் அன்னை கலைமகளின் அருளைத்தன் அருமை மகன் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

ஒருநாள் இரவு பன்னிரண்டுமணி; நள்ளிரவு. தன் வீட்டுக் கூடத்தில் அவள் மல்லாந்து படுத்துக் கொண்டாள். மகனை மார்புமீது வைத்துக் கொண்டாள். "கண்ணா உனக்குச் சொன்ன மந்திரத்தை நீ சொல்லிக் கொண்டே இரு. அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் நிரம்பப்பட்சணம் தருவேன்; விளையாட்டுச்சாமான் வாங்கித்தருவேன்; என்றாள். அவள் இட்ட திட்டத்தை குழந்தை அறியாது தானே? தாயின் மார்பில் அமர்ந்திருந்த ஸ்ரீ ஹர்ஷன் மந்திரத்தை இடையறாது ஜெபித்துக் கொண்டிருந்தான். தாய் விளக்கை அணைத்தாள். முன்னமே படுக்கைக்குள் ஆயத்தமாக வைத்திருந்த வாளை எடுத்துத் தன் தலையைத் துண்டித்துக் கொண்டாள். குழந்தை இதை அறிந்து கொள்ளவில்லை. மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே இருந்தது. நள்ளிரவில் பிணத்தின் மீதிருந்து மந்திரத்தை ஜெபித்ததால் கலைமகள் அன்ன வாகனத்தில் தோன்றி சந்திரோதயம் போல காட்சி அளித்தாள்.

அந்த அருள் ஒளியில் வாணிதேவியை குழந்தை தரிசித்தது. அதேநேரத்தில் தன்னைப் பெற்றெடுத்த அன்னை மாண்டு இருக்கக் கண்டது. இந்தத் தாயை நோக்கி அழுவதா? அந்தத் தாயை நோக்கித் தொழுவதா? என்று எண்ணித் திகைத்தது.

கலைமகள் அக்குழந்தைக்குப் பூரணமான அருளை வழங்கிக் கலைஞானத்தைத் தந்தருளினாள். ஸ்ரீ ஹர்ஷன் கலைமகளை நோக்கி, "அம்மா! என் தாயைப் பிழைக்க அருள்செய்" என்று தொழுது வேண்டினான். வாணிதேவி அருள்புரிந்தாள். மாமல்லதேவி உயிர்பெற்றெழுந்தாள்.

ஸ்ரீ ஹர்ஷன் வடமொழியில் பெரும் புலவர் ஆனார். இவரே நளனுடைய சரிதத்தை "நைஷதம்" என்ற நூலாகப் பாடியவர் ஆவார்.

இந்த வரலாற்றினால் தாயன்பு நன்கு புரிகின்றது. தன் மகனுக்காகத் தாய் தன்னையே தியாகம் செய்து கொண்டாள். இதைப்போன்று பல பாடல்கள், நாவல்கள், சிறுகதைகள் என்பன தாயின் அன்புச் சிறப்பை விளக்குகின்றன. இலக்கியங்களிலே தாய்மைச் சிறப்பிற்கு கோசலை, யசோதை, மாதவி, சகுந்தலை, குந்தி என்போர் உதாரணங்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

உபாத்தியாயனைவிட பத்துமடங்கு அதிகம் ஆசாரியன்; ஆசாரியனைவிட நூறுமடங்கு பிதாவும், பிதாவைவிட ஆயிரம் மடங்கு மதிப்புக்கும் மரியாதைக்கும் பெருமைக்கும் உரியவள் தாய் என்று மனுதர்ம சாஸ்திரம் கூறுகின்றது.

*தாய்மைத்துதி:-* *உபாத்யாயன் தசாசார்யா*
*ஆசார்யானாம் சதம்பிதா*
*ஸகஸ் ரந்து பித்ரன் மாதா*
*கௌர வேணத் ருச்யதே*

- மனுதர்ம சாஸ்திரம்

இத்தகைய சிறப்புக்களைத் தாய்மொழி, தாய்நாடு எனும் சொற்களூடாகவும் உணர்ந்து கொள்ளலாம்.

*"பெற்றதாயும் பிறந்தபொன்னாடும்*
*நற்றவ வானிலும் நனிசிறந்தனவே"*

XXXXXXXXXX



# நம்பிக்கை

செல்வி தயாளினி சின்னையா,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'E'.

நம்பிக்கை என்பதே வாழ்விற்கு அடித்தளமாகும். நம்பிக்கை ஓர் உயரிய உளப்பண்பு ஆகும். நம்பிக்கையினால் பெரும் நன்மையே விளையும். தீமையும் துன்பமும் நம்பிக்கையினால் விளைவதன்று. வாழ்க்கை என்னும் நெடுந்தூரப் பயணத்தை நம்பிக்கை என்னும் முதலடியினைக் கொண்டு, கடமைகளைத் தெளிந்த, தேர்ந்த அறிவோடு, முயற்சி எனும் ஊன்றுகோலுடன் தடம் பதித்து வெற்றிகாண வேண்டும்.

நம்பிக்கை இல்லாத வாழ்க்கை நரகம் ஆகின்றது. நம்பிக்கை இன்மையே ஒழுக்கக் கேடுகள் நிகழ்வதற்குக் காரணமாகின்றது. நம்பிக்கை இல்லாத வாழ்க்கை வெறும் சூன்யப் பிரதேசமாகின்றது. நம்பிக்கை என்னும் ஒளி நம் எல்லோருக்கும் கட்டாய உடைமை ஆகின்றது. நம்பிக்கை கொண்டவனது வாழ்க்கையில் அனைத்து முயற்சிகளும் உயர்வுக்கே வழிவகுக்கும். 'எங்களால் முடியும்' என்ற எண்ணத்தின் ஆற்றல் அளப்பரியது. இந்த ஒரு நம்பிக்கையினாலேயே உலகில் பல சாதனைகள் நிகழ்கின்றன. வாழ்வின் முதலும் முடிவுமாக இருப்பது தளராத தன்னம்பிக்கையே ஆகும்.

நம்பிக்கை பிறந்து, தவழ்ந்து, நடைபயிலும் களம் நட்பு. இரண்டு உள்ளங்களின் நட்பு நம்பிக்கையினாலேயே உண்டாகின்றது. நம்பிக்கையினால் விளைந்த நட்பினால் பல சாதனைகளும் ஆற்றல்களும் புலப்படுகின்றன.

இல்வாழ்வதனில் நம்பிக்கையே அனைத்தும் ஆகும். மனை வாழ்க்கையில் இதுவே மிக இனிமையான நல்ல இராகமாகின்றது. எந்த இல்லறத்தில் நம்பிக்கையுடைய இருவர் காதலராக வாழ்கின்றனரோ அந்த இல்லறத்தில் அழகு பொலிவுறும்; வளம் கொழிக்கும்; மகிழ்ச்சி ததும்பும்; அமைதி நிலவும்.

வாழ்வின் முதற்படியான நம்பிக்கை கொண்டு ஆற்றும் காரியங்கள் அனைத்தும் வெற்றியுடன் மிளிரும். மன உளைச்சல், கவலை, சஞ்சலம் நீங்கிய இனிமையான வாழ்வு துலங்கும். சந்தேகமற்றுச் சந்தோசமாக வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல நம்பிக்கை என்னும் வளம் நாடிச் செல்வோமாக.

## இலங்கைப் பாடசாலைகளில்...

- இலங்கையில் 50க்கும் குறைவான மாணவரைக் கொண்ட 1533 பாடசாலைகள் உள்ளன.
- 140 பாடசாலைகளில் ஓர் ஆசிரியர் மூலமும், 245 பாடசாலைகளில் இரு ஆசிரியர்கள் மூலமும் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- 4000க்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட 26 பாடசாலைகள் உள்ளன. இதில் 2006ஆம் ஆண்டிலும் பார்க்க 08 பாடசாலைகள் அதிகம்.
- தேசியப் பாடசாலைகள் 328ஆக உயர்ந்துள்ளன.
- ஆசிரியர் எண்ணிக்கை 2,08,277 பேர்.
- இதில் பட்டதாரி ஆசிரியர்கள் 72,126 பேர். பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 1,27,499 பேர், பயிற்றப்படாத ஆசிரியர்கள் 7087 பேர்.
- உயர்தர வகுப்புகளில் நான்கு பாடங்களும் கற்பிக்கக்கூடிய பாடசாலைகளின் எண்ணிக்கை 2006ஐவிட 22ஆல் அதிகரித்துள்ளது. 659இல் இருந்து 681ஆக அதிகரித்துள்ளது.
- மாணவர் எண்ணிக்கை 2275ஆல் அதிகரித்துள்ளது. தற்போதைய மாணவர் தொகை 39,42,327 பேர்.

*தகவல்: 'தினக்குரல்' 15.05.2008*



# உண்மையே இறைவன்

திருமதி றஜனி ஸ்ரீஸ்கந்தராஜா,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'C'.

இயற்கையின் நியதியால் தோன்றியதே இந்த உலகம். இந்த உலகத்தில் ஒருவர் மனத்தால் நினைத்துப் பார்க்கவே முடியாத அளவுக்கு எண்ணரிய உயிரினங்கள் வாழ்கின்றன. இந்த உயிரினங்கள் யாவும் இயற்கையின் பரிணாமமே. இந்த உயிரினங்களில் மனிதவர்க்கமே மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

ஆதிகாலத்தில் மனித இனம் பெரிதும் வளர்ச்சி அடையாத போதிலும், வெகுகாலச் சுழற்சியின் பின்னே கண்டங்கள், நாடுகள், ஊர்கள் என்று படிப்படியாக பரந்துபட்டு முன்னேறி, பற்பல வடிவங்களில் பற்பல இயல்புகளோடு எண்ணற்ற தொகையில் வாழ்ந்து வருகின்றமை கண்கூடு. இந்த மனிதர்கள் யாவரையும் நல்லவர், தீயவர் என இருவகையில் அடக்கலாம். அன்பு, நன்றி, கருணை என்னும் தூய பண்பைக் கொண்டவர்கள் உத்தமர்களாகவும், ஆசை, கோபம், களவு, கொலை, காமம் என்னும் தீய செயல்களைச் செய்பவர்கள் இழிவானவர்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த இருசாரார்களும் தத்தமது சாதக பாதகச் செயல்களுக்கேற்ப பாவம், புண்ணியம் என்ற பெறுபேறுகளைப் பெறுகின்றார்கள்.

இங்கே பாவம், புண்ணியம் என்ற பெறுபேறுகளை இருசாராரும் பெறுவது எப்படி? நன்மைக்கும் தீமைக்கும் பரிகாரம் தீர்ப்பது எது? அப்படித் தீர்ப்பு வழங்குவது ஒரு சக்தியல்லவா? அந்தச் சக்திக்குப் பெயர் இறை அல்லவா?

"*ஆசை, கோபம், களவு கொள்பவன் பேசத்தெரிந்த மிருகம்; அன்பு நன்றி கருணை உள்ளவன் மனித வடிவில் தெய்வம்*"என்பது திரைப்படப் பாடலாகும். தொடர்ந்து, "*இதில் மிருகம் என்பது கள்ளமனம்; உயர் தெய்வம் என்பது பிள்ளைமனம்; இந்த ஆறு கட்டளை அறிந்த மனது ஆண்டவன் வாழும் வெள்ளைமனம்*" என்றும் "*உள்ளதைச் சொல்லி நன்மையைச் செய்தால் உலகம் உன்னிடம் மயங்கும்; நிலை உயரும்போது பணிவுகொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்*" என்றும் கண்ணதாசன் பாடியபாட்டு இங்கே நினைவு கூரத்தக்கது. உண்மையான மனதில் இறைவன் குடிகொண்டிருக்கின்றான். இதனால் அந்த மனம் மற்ற உயிர்களால் வணங்கப்படுகின்றது.

அடுத்து "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என்னும் வாக்கியத்தையும் நாம் இங்கே நோக்கற் பாலது. பச்சிளம் குழந்தையைப் பாருங்கள்; வெள்ளை மனம் கொண்ட பிஞ்சுக்குழந்தை; கள்ளம் கபடம் சூதுவாது யாதாயினும் தெரியாத நிலையில் குழந்தை மனம் நிறைந்திருக்கிறது.

குழந்தைப் பருவம் மாற மாற நன்மை தீமைச் செயல்களில் ஈடுபாடு தொடங்குகிறது. தீமை புரிந்து வாழ்வானாகில் அவன் தீமைக்கே ஆளாகிறான். தன் வாழ்வில் எந்நாளும் தனக்கும் பிறர்க்கும் தூயவனாக வாழ்வானாகில், அவன் இதயம் இறைவனுக்கு ஒப்பானது. இறைவன் அவனது இதயத்தில் குடிகொள்கிறான். இதனால் அவன் நினைப்பதும் சொல்வதும் அப்படியே நடக்கிறது. உண்மை மனமே இறைவனின் வதிவிடம் ஆகிறது.



# சிவ சின்னங்களுள் திருவைந்தெழுத்தின் சிறப்பு

சைவப்புலவர், க.சசிரேகா,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'C'.

மானுடப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் நோய்வாய்ப்பட்டவரே. உடல்நோய், உளநோய் என்பன எங்களுக்குண்டு. இவைகளிலிருந்தும் விடுபடும் மார்க்கத்தை விளக்குவதே சமயம். சைவசமயம் பிறவிநோயைப் போக்கும் விதிகளைக் கற்பிக்கிறது. இந்நோயைப் போக்கி முத்திப்பேற்றை அளிக்கும் சாதனங்களாகத் திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து முதலியன விளங்குகின்றன. இவற்றுள் திருநீறு, உருத்திராக்கம் என்பன புறச்சாதனங்களாகவும் திருவைந்தெழுத்தானது அகச்சாதனமாகவும் கூறப்படும்.

திருவைந்தெழுத்து என்பதன் கருத்து, " தெய்வீகத் தன்மை பொருந்திய ஐந்து எழுத்து" என்பதாகும். இதனை 'ஐந்தெழுத்து மந்திரம்' எனவும், 'பஞ்சாட்சரம்' எனவும் கூறுவர். இது ஐந்து வகைப்படும். 'நமசிவாய' என்பது தூல பஞ்சாட்சரம். 'சிவாயநம' என்பது சூக்கும பஞ்சாட்சரம். 'சிவாயசிவ' என்பது காரண பஞ்சாட்சரம். 'சிவ' என்பது மகாகாரண பஞ்சாட்சரம். 'சி' என்பது மகாமனு பஞ்சாட்சரம். 'சி' என்ற எழுத்திலே தொடங்கி 'ம' என்ற எழுத்தில் முடியும் மந்திரம் சிகராதி பஞ்சாட்சரம் என்றும், 'ந' என்ற எழுத்திலே தொடங்கி 'ய' என்ற எழுத்திலே முடியும் மந்திரம் நகராதி பஞ்சாட்சரம் என்றும் கூறப்படும். சிவபெருமானின் திருப்பாதங்களைச் சேர்ந்து உலகப்பற்றைத் துறக்க விரும்புவோர் 'சிவாயநம' எனவும், உலக வாழ்வின் இன்பங்களைப் பெரிதும் விரும்புவோர் 'நமசிவாய' எனவும் ஓதுவர். இதில் ஒவ்வொரு எழுத்திற்கும் தனித்தனிப் பொருளுண்டு. 'சி' என்பது சிவத்தையும், 'வ' என்பது திருவருளையும், 'ய' என்பது உயிரையும், 'ந' என்பது திரோதான சக்தியையும், 'ம' என்பது ஆணவமலத்தையும் குறிக்கும். ஐந்தெழுத்தும் முப்பொருளை உணர்த்தி நிற்கின்றன. 'சி' சிவத்தையும்,. 'வா' சிவசக்தியையும் பசுவையும் 'ந' திரோதான சக்தியையும் பாசத்தையும் குறிப்பனவாம். ஆகவே, பதி, பசு, பாசம் என்பனவே திருவைந்தெழுத்துணர்த்தும் பொருள்களாகும்.

வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள், தோத்திரங்கள், புராணங்கள் என்பன இதுபற்றி விரித்துக் கூறுகின்றன. வேதங்களில் யசுர் வேதத்திலுள்ள 'தருத்திரியம்' என்னும் பகுதியில் இதன் பெருமை கூறப்பட்டுள்ளது. திருமுறைகளிலே தேவார முதலிகள் 'பஞ்சாட்சரப் பதிகம்' என்றும் 'நமசிவாயப்பதிகம்' என்றும் தனித்தனியாகப் பதிகங்களைப் பாடியுள்ளனர். இறைவன் மீது பக்தியை மிகுதியாகக் கொண்டு கண்ணீர் பெருக நமசிவாய மந்திரத்தினை ஓதுதல் வேண்டும். அவ்வாறு ஓதுபவர்களை அம்மந்திரம் நல்வழியில் செலுத்தும். ஆகவே, இம்மந்திரமே இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் ஆகிய நான்கு வேதங்களும் கூறும் உண்மைப் பொருளுமாகும் என்பது வாக்கு. இதனையே, *"வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே"* என்ற பாடலின் மூலம் விளங்கிக் கொள்ளலாம். மேலும், *"கூற்று அஞ்ச உதைத்தன அஞ்செழுத்தும்மே"* என்றும், *"வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் ஐந்தெழுத்தும்மே"* என்றும், "எல்லாத் தீங்கையும் நீக்குவரென்பரால் நல்லார் நாமம் நமச்சிவாயவே என்றும்" அருளிப்பாடியுள்ளனர்.

நாவுக்கரசரைச் சமணர்கள் கல்லோடு கட்டிக்கடலிலே விட்டபோது ஐந்தெழுத்தை ஓதியே அவர் கரையேறினார் என்பதை அறிகின்றோம். *"சொற்றுணை வேதியன்"* எனத் தொடங்கிப் பாடிய பதிகத்தில் *"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே"* எனப் பாடியுள்ளமையைக் காணலாம்.

மேலும்,

*"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்*
*நமச்சிவாயவே நானறிவிச்சையும்*
*நமச்சிவாயவே நா நவின்றேத்துமே*
*நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே"* என்றும்

*"பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை*
*நண்ணிநின் றறுப்பது நமச்சிவாயவே"* என்றும்
*"சொல்லக விளக்கது சோதியுள்ளது, நல்லக விளக்கது நமச்சிவாயவே"*
என்றும் பாடியிருப்பதுடன்,
*"சிவாயநம என்று நீறணிந்தேன் தருவாய் சிவகதி"* என்றும் கேட்கிறார் அப்பர் அடிகள்.

சுந்தரமூர்த்தி நாயனாரும் திருவைந்தெழுத்தை ஒருமுறைகூட மறக்கலாகாது என்பதை,
*"ஓவு நாள் உணர் வழியு நாள் உயிர் போகுநாள் உயர் பாடைமேற்*
*காவு நாளிவை யென்றலாற் கருதேன்*
*கிளர் புனற் காவிரி*
*பாவு தண் புனல் வந்திழி பரஞ்*
*சோதி பாண்டிக் கொடுமுடி*
*நாவலா வுனை நான் மறக்கினும்*
*சொல்லு நா நமச்சிவாயவே"* என்ற பாடலினூடாகக் கூறியுள்ளார்.

மணிவாசக சுவாமிகளும் தாம் பாடிய திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய சிவபுராணத்தைப் பாடும் போது *'நமச்சிவாய வாழ்க'* எனத் தொடங்கியுள்ளமையைக் காணலாம். திருச்சதகத்திலே ஓரிடத்தில் *"ஐந்தெழுத்தின் புனை பிடித்துக் கிடக்கின்றேனை"* என்று பாடியுள்ளார். மேலும், *"நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்"* என்ற பாடல்வரி, அவர் குருமூர்த்தியிடமிருந்து பெற்ற ஐந்தெழுத்து உபதேச உண்மையை எடுத்துக் காட்டுகின்றது.

திருமூலரது பாடல்களினூடாகவும் ஐந்தெழுத்தின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. சிவாயநம எனும் தூல பஞ்சாட்சரத்தை முறையாக ஓதுபவர்க்கு அருள்வழி கிட்டுமென அருளியுள்ளார் அவர்.

*"குருவழி யாயகுண ங்களினின்று*
*கருவழி யாய கணக்கை யறுக்க*
*வரும் வழி யாள மறுக்கவல் லார்கட்*
*கருள் வழி காட்டுவதஞ் செழுத்துமே"* என்பது திருமந்திரம்.

பஞ்சாட்சரம் இரண்டெழுத்திலும் கூறப்படுவதுண்டு. இதனைப் பின்வரும் திருமந்திரப்பாடல் எடுத்துக் காட்டுகிறது.

*"சிவசிவ என்கிலர் தீவினையாளர்*
*சிவசிவ என்றிடத் தீவினை மாளும்*
*சிவசிவ என்றிடத் தேவரு மாவர்*
*சிவசிவ என்னச் சிவகதி தானே"*

இதனூடாகச் "சிவசிவ" எனும் மந்திரம் பாவநாசம், தேவநிலை, சிவலோகப் பெருவாழ்வு என்னும் நலன்களை அளிக்கும் என்பதை அறியலாம்.

பெரிய புராணத்தில் திருவைந்தெழுத்தின் மகத்துவம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர்நெறியறியாத் தெய்வச் சோழமன்னர் ஆட்சியிலே சோழநாட்டிலே வாழ்பவர்கள் திருவைந்தெழுத்தை ஓதுபவர்களாக இருப்பதால் அந்த நாட்டில் நோய், துன்பம் ஏற்படுவதில்லை எனக்கூறுகிறார் சேக்கிழார். இதனை *"ஓதிய எழுத்தா மஞ்சும் உறுபிணிவரத் தானஞ்சும்"* என்ற பாடல்வரி எடுத்துக் காட்டுகிறது.

*"பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்*
*வஞ்ச மாக்கள் தம் வல்வினையும் அரன்*
*அஞ்செழுத்தும் உணரா அறிவலியோர்*
*நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்"* என்பது பெரியபுராணம்.

மெய்கண்ட சாஸ்திரங்களிலும் திருவைந்தெழுத்துப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம். சிவஞான போதத்தில்,

*"ஊனக் கண்பாசம் உணராப்பதியை*
*ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி*

*உராத் துணைத் தேர்ந்தெனப் பாசம்ஒருவ*
*தண்ணழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே"*

என்ற பாடலின் மூலம் திருவைந்தெழுத்தின் சிறப்பைக் காணலாம். அதாவது, பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறிய முடியாத இறைவனைப் பதி ஞானத்தாலே அறிய முடியும். பேய்த்தேர் போன்று மயங்கி நின்ற பாசக் கூட்டங்கள் நீங்கப் பதிஞானமே தோன்றிப் பிறவி வெப்பத்தை நீக்கும் குளிர்ந்த நிழலாக அமையும். ஆனால் இந்தப் பதிஞானம் இடையறாது நிகழ்வதற்குச் சாதகமாகத் திருவைந்தெழுத்தை இடையறாது ஓதுதல் வேண்டும் என்கிறது.

உமாபதி சிவாச்சாரியார் கூடக் கொடிக்கவி என்னும் நூலில் திருவைந்தெழுத்துப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சிதம்பரத்திலே ஒருமுறை கொடி ஏறாதிருந்த பொழுது திருவைந்தெழுத்தின் விளக்கங்கூறி மனதிலே விதிப்படி தியானிக்கவே கொடியும் ஏறியதாக அறிகிறோம். அந்த நேரத்திலே பாடப்பட்ட நூலே **கொடிக்கவி** என்பர்.

*"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்*
*பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்*
*பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்*
*கூசாமல் கட்டக் கொடி"* என்பது கொடிக்கவி.

பட்டினத்தாரும் இறக்கும் நேரத்திலும் ஐந்தெழுத்தையே ஓதிக்கொண்டு இறப்பதற்கு வரந்தர வேண்டுமென்று பாடியுள்ளார். இதனை,

*"ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து*
*மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன் யான்*
*செய்யுந் திரு வெற்றியூருடையீர் திருநீறுமிட்டுக்*
*கையுந் தொழப் பண்ணி ஐந்தெழுத் தோதவும் கற்பியுமே"* என்ற பாடல் விளக்கியுள்ளது.

சூக்கும பஞ்சாட்சரமாகிய 'சிவாயநம'வை முத்தி பஞ்சாட்சரம் என்பர். இதனை ஓதினால் ஒப்பற்ற ஞான யோகம் சித்திக்குமென உறுதி கூறுகிறார் தவயோகியார்.

*"ஓதிய நம்மலம் எல்லாம் ஒழித்திட்டவ்*
*வாதி தனை விட்டிறையருட் சக்தியால்*
*தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்*
*ஓது சிவாயமல மற்ற உண்மையே"*

என்ற பாடல் இதனை விளக்கி நிற்பதைக் காணலாம். ஔவைப்பாட்டி இயற்றிய **நல்வழி** என்னும் நூலிலும் பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்புக் கூறப்பட்டுள்ளமையைக் காணலாம்.

*"சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு*
*அபாயமொரு நாளுமில்லை – உபாயம்*
*இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்*
*விதியே மதியாய் விடும்"* என்பது நல்வழி.

இப்பாடலின் பொருளை விளங்கிக் கொள்வோமாயின், 'சிவாயநம' என்று தியானித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு ஒருநாளும் துன்பம் வராது. விதியின் விளைவால் வரும் துன்பத்தை வெல்வதற்கு இதுவே வழி. சிவத் தியானத்தாற் சிவமே அவர்களுடைய புத்தியை வழிப்படுத்துகிறது. சிவத்தியானம் இல்லாதவர்களுக்கு விதியே புத்தியை வழிப்படுத்துகின்றது. சிவத்தியானம் உள்ளவர்களுக்கு விதியின் தாக்கம் இல்லை. அது இல்லாதவர்களுக்கு விதியின் தாக்கம் உண்டு என்பதாகும். 'சிவாயநம என்று நீறணிந்தேன் தருவாய் சிவசக்தி' என்று அப்பரடிகள் கேட்டதைப் போலவே நாமும் 'சிவாயநம' என்ற சிவமூல மந்திரத்தை விதிப்படி ஓதி விபூதி தரித்துச் சிவசக்தியடைவோமாக!

**************



இரண்டாம் வருடம் ஆரம்பநெறி "A"
ஆசிரிய மாணவர்கள்



இரண்டாம் வருடம் ஆரம்பநெறி "B"
ஆசிரிய மாணவர்கள்



# யோகக் கலையில் பத்மாசனம்

திருமதி கார்த்திகா குணநாதன்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'E'.

நம்நாட்டின் பழைமை வாய்ந்த யோகாசனக் கலையும், உணவுமுறையும், தியான முறையும், நம்நாட்டு மக்களின் பழம்பெரும் சித்த வைத்தியமும் மக்களின் நலவாழ்வுக்கென நம்முன்னோர் வகுத்தவை. இவ்வகையில் நோக்கும்போது, திருமூலர் வாக்கில்,

*"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்*
*திடம்படு மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே?"* என்பதை அறியலாம்.

உடலை முறையாக வளர்த்தால் தான் நாம் உயிரையும் பராமரித்தவர்கள் ஆவோம். உயிரைச் செல்வனே நம் உடலில் தங்கவைத்து, அமைதியுடனும் ஆனந்தத்துடனும் இம்மண்ணுலகில் நீண்டநாள் வாழ்ந்து, விண்ணுலகப்பேற்றையும் பெறுவதற்கு யோகாசனப் பயிற்சிகளை மேற்கொண்டு உடலைப் பேணிப்பாதுகாப்பதுதான் சிறந்த உபாயம் ஆகும்.

சைவநூல்களில் முதலில் வணங்க வேண்டிய மூர்த்தி கணபதியாகக் கூறப்பட்டுள்ளது. இது போன்று முதலில் ஆரம்பிக்க வேண்டிய ஆசனம் பத்மாசனம் ஆகும். இதனை எல்லாரும் தமது உடல், உள ஆரோக்கியத்துக்காக மேற்கொள்ளல் சிறந்ததாகும். இதனை மேற்கொள்ளும் முறை வருமாறு,

பத்மம் என்பது தாமரை. மலர்ந்த இதழ்களைப் போல் உள்ளங்கால் இரண்டும் மேல்நோக்கி இருப்பதால் இதற்கு இப்பெயர்.

கீழே உட்கார்ந்து இரண்டு கால்களையும் உங்களுக்கு நேராக நீட்டிக் கொள்ளுங்கள். பிறகு வலக் கணுக்காலைக் கைகளால் தூக்கி இடது தொடையின் மீது வையுங்கள்; அதேபோல் இடக்கணுக்காலை எடுத்து வலது தொடையின் மேல் வையுங்கள். இப்போது இரண்டு குதிக்கால்களும் அடிவயிற்றை ஒட்டினாற்போல் இருக்க வேண்டும். இரண்டு உள்ளங்கைகளையும் முழங்காலில் படியுமாறு தொய்வாக வைத்திருக்க வேண்டும் அல்லது இரண்டு கைகளிலும் சின் முத்திரையும் பிடிக்கலாம். அல்லது இணைந்த பாதங்களின் மேல் இடக்கையை விரித்து வைத்து அதன்மேல் வலக்காலை வைத்துக் கொள்ளலாம். இந்தநிலை புத்தரின் மோனநிலை போன்றது.

சுகாசனம் போலவே இதிலும் முதுகு, கழுத்து, தலை இம்மூன்றும் நேராக இருக்க வேண்டும். உடல் மிகவும் பருமனாக உள்ளவர்களால் இந்த ஆசனத்தை எடுத்த எடுப்பில் செய்வது சற்றுக் கடினம். அப்படிப்பட்டவர்கள் முதலில் சிலகாலம் சுகாசனத்தை செய்து பழகி அதன் பிறகுதான் பத்மாசனத்திற்கு வரவேண்டும்.

பலரால் பத்மாசனத்தில் தொடர்ந்து ஓர் ஐந்து நிமிடநேரம்கூட இருக்க முடியாது. கால்களில் வலி வந்துவிடும். வலி எடுத்தால், இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் இருந்துவிட்டுப் பிறகு ஆசனத்தைக் கலைத்துவிட வேண்டும். பின்னர் சில நிமிடங்கள் இருந்துவிட்டுப் பிறகு காலில் வலி நீக்கிய பின் மீண்டும் பத்மாசனத்துக்குப் போக வேண்டும். அப்படிப் போகும்போது முதலில் வலக்காலின் மேல் இடக்காலைப் போட்டிருந்தால் இப்போது இடக்காலின் மேல் வலக்காலைப் போட வேண்டும். அதேபோன்று முதலில் இடக்காலின் மேல் வலக்காலைப் போட வேண்டும். இவ்விதமே இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்கு ஒரு தடைவை கால்களை மாற்றி ஆசனம் போட்டுப் பழகினால் நாளடைவில் பத்து அல்லது பதினைந்து நிமிட நேரம் சிரமமில்லாமல் பத்மாசனத்தில் அமர்ந்திருப்பதற்கான ஆற்றலைப் பெற்றுவிடலாம். அதன்பிறகு இந்தப்

பதினைந்து நிமிட நேரத்தை அரைமணி நேரமாகவோ ஒருமணி நேரமாகவோ அதிகரிப்பது ஓர் அரிய காரியமாக இராது.

ஆனால் இம்மாதிரி நீண்டநேரம் பத்மாசனத்தில் இருக்க வேண்டிய அவசியம் தியானம் பயில்பவர்களுக்கு மட்டும்தான் உண்டே தவிர, உடல் நலத்திற்காக அல்லது மன அமைதிக்காக ஆசனம் பயில்பவர்கள் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் பத்மாசனத்தில் இருந்தால் போதுமானது. பத்மாசனத்தைக் கலைக்கும்போது எப்படி ஆசனத்தைப் போட்டோமோ அதே போன்று கைகளால் கால்களை விலக்கி நீண்டு உட்கார்ந்த பின்னரே எழ வேண்டும்.

இந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு பிராணாயாமம் செய்தால் விரைவில் புத்துணர்ச்சி கிடைக்கும். இரண்யா தொல்லை வராமல் தடுக்க இவ்வாசனம் பயன்படுகிறது. நேராக அமர்ந்து செய்யும் இந்த ஆசனத்தால் கூனல் முதுகு நேராகி விடுகிறது. மனச்சாந்தி கிடைக்கிறது. பெண்களுக்குத் தன்னம்பிக்கையும், உற்சாகமும் உலகத்தை தைரியமாகப் பார்க்கும் மனப்பக்குவமும் கிடைக்கிறது.

*"ஆசனங்கள் சுத்தக் கிரியையாய் அமைந்துள்ளவை*
*உடலுக்கு வலிமையும் வனப்பும் தருபவையாயுள்ளன"*



### அமரர் பண்டிதர் சச்சிதானந்தன் அவர்களுக்கு

## 'கலைமலர்'ரின் அஞ்சலி

பண்டிதர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் இலங்கைத் தமிழர்களின் அறிவுப் பெட்டகம். நடமாடும் பல்கலைக்கழகமாக வாழ்ந்து முடித்த தமிழ்ஞானி. 19.10.1921இல் நும்பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளைக்கும் மாவிட்டபுரத்துத் தெய்வானைப் பிள்ளைக்கும் மகனாக மாவிட்டபுரத்தில் பிறந்தவர். ஆரம்பக்கல்வியைக் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியைப் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றிலும் (1936–1937), உயர்கல்வியை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் (1938–1940) கற்றவர். சிவப்பிரகாச தேசிகர், சுப்பிரமனிய சாஸ்திரிகள், பாலசுந்தரக் குருக்கள் ஆகியோரிடம் சமஸ்கிருதத்தையும் தனது தந்தையாரிடம் வானியல், சோதிடம் போன்றவற்றையும் கற்றவர். 1940இல் மதுரைப் பண்டிதப் பரீட்சையில் முதலிடம் பெற்றுச் சித்தியடைந்தவர். இலண்டன் இன்ரர்சயன்சிலும் சித்திபெற்றவர். 1946–47 காலப்பகுதியில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் "யாழ்நூல்" ஆராய்ச்சிக்குத் துணையாகத் தமிழ்நாட்டில் பணிபுரிந்தவர். பின்னர் நீர்கொழும்பு சென்மேரி பாடசாலையிலும் (1946), உடுவில் மகளிர் கல்லூரியிலும் (1947–1959) கணித ஆசிரியராகப் பணியாற்றியவர். இலண்டன் பி.ஏ.யில் சிறப்புப் பட்டம் பெற்றவர். 26.08.1949இல் திருமணபந்தத்தில் இணைந்தவர். பரமேஸ்வராக் கல்லூரி (1960), யாழ் இந்துக் கல்லூரி (1961), யாழ் மத்திய கல்லூரி (1962–65) ஆகியவற்றில் கணிதம், தமிழ் போன்ற பாடங்களைக் கற்பித்தவர். 1965–67களில் அரசினர் பாடநூற்சபையின் எழுத்தாளராயிருந்தவர். 1978இல் இலண்டன் பல்கலைக்கழகத்தில் உளவியலில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். இவரது கல்விப் பணியினைப் பாராட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2001இல் கௌரவ கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவித்தது. கல்வியலாளராகப் பணிசெய்ததோடு ஆக்கவிலக்கிய கர்த்தாவாகவும் திகழ்ந்தவர் சச்சிதானந்தன். ஆனந்தத்தேன் (கவிதை 1955), தியாகமாமலை வரலாறு (1959), யாழ்ப்பாணக் காவியம் (1998), தமிழ் யாழியல் – ஆராய்ச்சி (1997), மஞ்சுகாசினியம்: இயங்குதமிழியல் (2001), Fundamentals of Tamil Prosody (2002), இலங்கைக் காவியம்: பருவப் பாலியர் படும்பாடு (2002), மஞ்சு மலர்க்கொத்து (சிறுவர் பாட்டு – 2003), எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும் – கவிதை (2004), S.J.V.Chevanayaham (In Print) ஆகிய இவரது நூல்கள் வெளிவந்துள்ளன. "அன்னபூரனி" என்ற நாவலை (1942) 'ஈழகேசரி'யில் எழுதியவர். 'தண்ணீர்த்தாகம்' என்ற சிறுகதை மூலம் சாதிப் பிரச்சினைகளைக் கையாண்ட முன்னோடி முற்போக்காளரானவர். பலநூற்றுக்கணக்கான ஆய்வுக்கட்டுரைகளையும் இருபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதியவர் "சாகித்யரத்னா" என்னும் அதியுயர் இலக்கிய விருதினை 1999இல் இலங்கையரசு இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. சம்பந்தன்விருது (2001), வடக்குக்கிழக்கு ஆளுநர்விருது (2003), இலங்கை இலக்கியப்பேரவை விருது (2004), தந்தைசெல்வா நினைவு விருது (2004), கலாகீர்த்தி தேசியவிருது (2005) ஆகியவற்றுடன் கவிதைக்காகத் தேசிய, மாகாண மட்டங்களில் பலமுறை பரிசுபெற்றவர். தமிழரசுக் கட்சியின் தாபகர்களில் ஒருவர். தன்வாழ்நாள் பூராவும் தமிழ்த் தேசியவாதியாகவும் மனிதநேயப் பண்பாளியாகவும் வாழ்ந்தவர். மனைவி பரமேஸ்வரியுடன் ஏழு பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளும் கண்டு நிறைவாழ்வு வாழ்ந்தவர். 21.03.2008 அன்று அதிகாலையில் மரணமான இவரின் பூதவுடல் அன்றையதினமே எதுவித ஆரவாரமுமற்ற முறையில் தகனஞ் செய்யப்பட்டது. எந்தவித ஆடம்பரங்களையும் விரும்பாதது அவரது தமிழ் உள்ளம். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பலமுறை பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்திருக்கிறார். அன்னாருக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகத்தின் சார்பில் "கலைமலர்" தனது மனப்பூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

காலகள் குதித்துநட மாடுதேயடா - கவிக்
கள்ளைக் குடித்த வெறி ஏறுதேயடா!
நூல்கள் கனித்தமிழில் அள்ளிட வேண்டும் - அதை
நோக்கித் தமிழ்ப்பசியும் ஆறிடவேண்டும்.

தேவர்க்(கு) அரசுநிலை வேண்டியதில்லை - அவர்
தின்னும் சுவையமுது வேண்டியதில்லை
சாவிற்றமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன்
சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்.

அமரர் பண்டிதர் க.சச்சிதானந்தன்
"ஆனந்தத்தேன்" கவிதைத் தொகுதியிலிருந்து



# வாழ்வை உயர்த்தும் நம்பிக்கை

திருமதி வாசகி
செல்வவேல்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

"நம்பிக்கை இல்லாத வாழ்வு குப்பைத் தொட்டிக்குச் சமன்" என்பது ஒரு வாசகம். நாம் எந்தத் தொழிலைச் செய்ய முற்பட்டாலும் அதில் ஒரு நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை நல்லதாக இருப்பின் வாழ்வு நல்லதாக இருக்கும். நம்பிக்கை கெட்டதாக இருப்பின் எமது வாழ்வைச் சிதைத்துவிடும்.

நல்ல நம்பிக்கையுடன் வாழ்பவரே வாழ்வினில் உயர்ந்தவர். தியாகம், சேவை, பரந்த மனப்பாங்கு, மானம் என்பன நல்ல நம்பிக்கைகள். இலட்சியங்கள் சிறுவயதிலேயே மனதில் வேரூன்றிவிட வேண்டும். நாம் கற்கும் காலத்திலேயே எதற்காகக் கற்கின்றோம்? ஏன் கற்கின்றோம்? எப்படிக் கற்கின்றோம்? என்ற கேள்விகள் எழும்புகின்றன. இக்கேள்விகளுக்கு வரும் விடைகளே குறிக்கோள்களாக மாறுகின்றன. குறிக்கோள் இல்லாதவனின் கல்வி பயனற்றது. அது முழுமைபெறாமல் வாழ்க்கையையே பாழடித்து விடும்.

இவ்வாறே வாழ்வில் உயர்ந்தவர்களின் இதயத்தில் ஒரு குறிக்கோள் இருந்து, அது அவர்களை ஆட்கொள்கிறது. மானிட வாழ்வில் கணவன் மனைவியை நம்புகின்றாள், தாய் பிள்ளைகளை நம்புகின்றாள், மாணவன் ஆசிரியரை நம்புகின்றாள். இவ்வாறு நம்பிக்கையின் அடிப்படையில் எங்கள் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது.

சுவாமி விவேகானந்தர், இராமகிருஷ்ணர் போன்ற ஆத்மஞானிகளின் உள்ளத்திலே கடவுள் பற்றிய ஆத்மீகக் கேள்விகள் நம்பிக்கைகளாக இருந்தன. அவர்களை ஆத்மீக வீரர்களாக அவை உலகுக்குக் காட்டின. இதற்கு எடுத்துக்காட்டாக கிருஷ்ணபகவான் பகவத்கீதையில்,

"நீ எதைக் கொண்டு வந்தாய் கொண்டு செல்வதற்கு", "இன்று உன்னுடையது நாளை மற்றவனுடையது", "இதுவே எனது படைப்பு"எனக் கூறியதில் இருந்து இறையாட்சி புலப்படுகின்றது. இவ்வாறாக எம்மை வழிப்படுத்திச் செல்லும் இறைவனை நாம் எவ்வளவு தூரத்திற்குப் பூரணமாக நம்பி எமது காரியங்களைச் செய்கின்றோம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. எமது வழமையான சம்பிரதாயங்கள் நம்மையும் மற்றையவர்களையும் ஏதோ ஒரு நம்பிக்கையில் வாழச்செய்கிறது. இப்படி எமது வாழ்க்கைச் சக்கரம் சுழல்கின்றது.

இதனைவிட நோய்களுக்கு மருந்து கண்டவர்கள் சிகிச்சைக்கு மருந்துகண்டவர்கள் சிகிச்சைக்கு வழிவகுத்தவர்கள் துணைச்சாதனத்தை கண்டுபிடித்தவர்கள் எல்லோரும் நம்பிக்கையுடன் வாழ்ந்தவர்கள்.

நம்பிக்கையுடன் - புலவர்கள், அறிஞர்கள், கவிஞர்கள் பல படைப்புக்களைப் படைக்கிறார்கள். பல ஆக்கங்களை உலகுக்கு ஈந்தார்கள். அவர்களின் நம்பிக்கை எமக்கு அறிவுப்பசியை நீக்கின.

நம்பிக்கை சுயநலமற்றது. தியாக உள்ளம் கொண்டது மற்றவர்களை மதிக்கச் செய்வது. மற்றவர்களுக்கு நல்வழிகாட்டுவது. இவ்வாறு நம்பிக்கையுடன் வாழ்வை உயர்த்திக் கொள்பவர்களை உலகம் என்றும் மறக்க மாட்டாது.

இவ்வாறு எம்மிடையே தியாக உள்ளத்துடன் வாழும் இளைஞர்கள், யுவதிகள் பலர் உளர். அவர்கள் சமூகத்திற்காக இலட்சியத்துடன் வாழ்கின்றனர். அந்த நம்பிக்கையை எல்லோரும் அடைய மாட்டார்கள். மக்களின் நல்வாழ்வுக்காக முன்னின்று போராடிப்பலர் தம் அரிய உயிரை மண்ணுக்காக ஈய்ந்துள்ளனர். இவ்வாறு வாழும் இளைஞர்களின் நம்பிக்கை உயர்ந்த தன்மை வாய்ந்தது. மற்றவர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்வதே பெரிய இன்பமாகும்.

ஆகவே, நல்ல நம்பிக்கைகள் வாழ்வை மேம்படுத்தும் அதேசமயம் சுயநலம், பொறாமை, ஆணவம், வஞ்சனை, தீய பழக்கவழக்கங்கள், பண்பாட்டு சீரழிவுகள் என்பன தீய நம்பிக்கைகளாகும்.

உயர்ந்த நம்பிக்கையுடையவர்கள் மேன்மையான வாழ்வு அடைவர். முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் ஏழ்மையில் இருந்து உயர்ந்து உலகம் போற்றும் விஞ்ஞானியாகவும் வாழ்ந்து காட்டினார். மகாத்மாகாந்தி அகிம்சை வழியில் நின்று வாழ்ந்து உயர்ந்தார். ஆகவே உயர்வான நம்பிக்கை வாழ்வை மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

✡✡✡✡✡✡✡✡✡



# குருவிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

செல்வி ந.துஷ்யந்தி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'D'.

பல பிறவிகளில் செய்த புண்ணியத்தால், குரு நமக்கு வாய்க்கப் பெறுகின்றார். குருவை நம்மைப் போல மனிதராகக் கருதினால் ஆத்மீகத்தில் முன்னேற முடியாது.

குருவாக்கை உணர்வதைத் தவிர வேறு வேதம் இல்லை. வேதம் என்பது சற்குரு பிராணனின் நிறைமொழியே. குருவைப் பணிந்து பணிவிடை செய்வது சரீரத்தவம் - உடல் வழித்தவம் எனப்படும்.

நடமாடும் திருமேனியோடு குருபிரான் வாழுங்காலத்தை அவருடனேயே இருக்க முயலவேண்டும். உபவாசம் என்பது பட்டினி கிடப்பதல்ல. சற்குருவின் சன்னிதானத்தில் இருப்பதே உபவாசம்.

குருவின் தரிசனத்தின் முன்பு, நமது போலி ஞானம், முட்டாள்தனம் எல்லாம் வெளிச்சத்திற்கு வந்துவிடும். சத்சங்கம் என்றால் குருவுடன் அவர் அருகில் இருத்தலேயாகும்.

'ஈசனாம் ஞானி இருந்துள இடத்தே இருப்பதே முத்தி' என்கிறது பிரமகீதை. பரமாத்ம தத்துவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அப்படித் தெரிந்து கொண்டவர்களான ஞானிகளிடம் போ. அவர்களிடம் வணக்கத்தோடும் பணிவோடும் நடந்து கொள்; சேவை செய்; நிச்சயம் உபதேசம் செய்வார்கள் என்கிறது பகவத்கீதை.

நம் செயலால், நாம் எல்லா வகையிலும் நடந்து எப்போதும் நம் குருபிரான் பார்க்க நல்லவனாக நடந்து அவர்கள் வழங்கும் மெய்ப் பொருளுக்குக் கைம்மாறாக நாம் ஒரு இராஜாங்கமே அவர்களுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தாலும் அதுவும் அதற்கு ஈடல்ல. ஏனெனில் அது அழியக்கூடாதது. அது அழியாத நிதி. அது அவர்களிடம் மட்டுமே உள்ளது. அவர்கள் மட்டுமே அதை வழங்க முடியும்.

இதைத் திருவள்ளுவர் 'செய்ந்நன்றி' என்கிறார். ''செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது'' என்கிறார்.

அவர்கள் கருணையுடன் நமக்கு அளிக்கும் வான் பொருளுக்கு ஈடாக அவர்கள் நம்மிடம் எதிர்பார்ப்பது அவர்கள்பால் நம் வஞ்சகமற்ற யதார்த்தமான ஒட்டுதலை, அன்பையே ஆகும்.

குருமார்களிடத்தில் எப்போதும் சத்தியமே பேசவேண்டும். குயுக்தியான எண்ணம் வரக்கூடாது; எண்ணம், சொல், செயலால் பரிசுத்த ஒழுக்கத்தோடு நடந்துகொள்ள வேண்டும்.

குருவின் விருப்பு நமக்குச் சொர்க்கம். அவர்கள் வெறுப்பு நம்மை நரகத்தில் தள்ளிவிடும். நம் தூய நடத்தையால்தான், ஆசானின் இரக்கம் நம்மீது பாயும். அவர்களின் இரக்கமே, முத்திக்கு மூலம். குருசங்கமத்தாலே நம் கெடுமதி விலகுகின்றது. குருவருளால் நம் ஸ்வரூபமே தெரியவருகின்றது. குருவின் சொல் அமுதம்; புனிதமான கங்கையே.

சாதுக்கள் முன் கால்மேல் கால்போட்டுக் கொண்டு அமரக்கூடாது. அப்படி அமர்வது ரஜோ குணத்தை அதிகப்படுத்தும். பெரியோர் பேசும்போது குறுக்கே பேசக்கூடாது. அவர்கள் அருளும் பெரும் பொருள் குறித்து வீண்வாதமோ தர்க்கமோ செய்தல் கூடாது.

குரு வசிக்கும் இடம் காசி தலம். அவரது பாதோதகம் கங்கை. குரு சாட்சாத் விஸ்வேஸ்வரன். குரு சேவையே கயை. அவர் உடல் அங்குள்ள அட்சயமான வடவிருட்சம் என்கிறது குருகீதை. மற்றும் தன்னை, தன்குடும்பம் என்பவற்றைக் கூட மனமகிழ்ச்சியுடன் கொடுத்து வழிபட வேண்டும் என்றும் குருவிடம் சீடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் எனவும் கூறுகின்றது.

"குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே மகேஸ்வரனாகிய தேவன், குருவே ஏகமாகிய பரப்பிரம்மம். ஆதலால், அத்தன்மையுடைய குருவிற்கு நமஸ்காரம்'' என்கிறது குருகீதை. ஆதலால் பிரம்மா, விஷ்ணு, சிவன், தேவன், ஆத்மா, ஜீவன், பிதா, மாதா, பந்து, தர்மம், தன்சரீரம், இந்திரியங்கள், பிராணன், உறவினர், சாதி, குலம், சர்வமும் குருவே.

குருபெருமான் அளிக்கும் மெய்ப்பொருளை எவ்வாறு போற்றிப் பாதுகாக்க வேண்டும் என பிரம்மப் பிரகாச மெய்வழி ஆண்டவர் கூறுவதைப் பாருங்கள்.

*"மறுப்படாச் சிற்பி தானும் மழைத்துளி திறந்து வாங்கி*
*இறுக்கி வாய் மூடி முத்து ஈன்றிடும் உவமை போல*
*குருபரன் உபதேசத்தைக் குலைத்து வாய் சிதறிடாமல்*
*பொருத்துவாய் மூடிக் காத்தல் பொங்கிடும் காமதேனே"*

ஆசான் ஒருவன் உள்ளத்தில் பதித்த அழியா நிதியானது வித்தாக உள்ளது. அதை மெய்யறியாப் பொய்யரிடம் வாய் கொடுத்துக் கிளறிப் பார்க்காமல் அதைச் சிந்தித்தும் தியானித்தும், வேத சாஸ்திரங்களோடும், ஞான நூல்களோடும் ஒப்பிட்டுப் பார்த்தும் இவ்வாறாக அதை நீரூற்றி வளர்ப்பது போல் வளர்த்தால் அந்த வித்து முளைத்து, செடியாகி, பெரிய மரமாகும்; கற்பகதருவாகும்.

நாம் கடவுளை அழைத்தால் இதயபூர்வமாக மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலான வழிபாடுகளைச் செய்து வந்தால் நிச்சயமாக பரம்பொருள் மனித உருவில் குருபிராணனான் ஆக வந்து வழிநடத்துவார்.

முற்காலத்தில் மகான்கள் இருந்தார்கள். இப்போது அப்படிப்பட்டவர்கள் இல்லை என்றே பலரும் நினைக்கின்றனர். அது தவறு. மகான்கள் எல்லாக் காலத்திலும் இருக்கின்றார்கள். அவர்களைக் கண்டுகொள்ள நமக்கு அறிவும் தேடலும் இல்லாததுதான் பெருங்குறையாக உள்ளது.

இப்போதும், மெய்ப்பொருள் ஞானியர் நடமாடும் திருக்கோயில்களாக மனித உருவில் வந்து ஞானம் வழங்கிக் கொண்டிருக்கின்றனர். காதுள்ளவன் கேட்கக்கடவன்.

---



## அமரர் ஆர்.ஆர்.பூபாலசிங்கம் அவர்கள்

"பூபாலசிங்கம் புத்தகசாலை" என்பது இலங்கையில் மாத்திரமன்றிக் கடல்கடந்த நாடுகளில் வதியும் தமிழர் மத்தியிலும் பிரபல்யம்பெற்ற நிறுவனமாகும். அதன் நிறுவுநர் திரு. ஆர்.ஆர்.பூபாலசிங்கம் (1922-1982) அவர்கள் நயினாதீவினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணத்தில் திரு. கு.வி.தம்பித்துரை அவர்களது புத்தக நிறுவனத்தில் ஆரம்பகாலத்தில் பணிசெய்தவர். பின்னர் படிப்படியாக உயர்ச்சிகண்ட உழைப்பாளர். யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் சில ஆண்டுகள் புத்தகக்கடை வைத்திருந்தார். பின்னர் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தின் எதிரில் அவரது புத்தகக்கடை செயற்பட்டது. இன்றும் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் அவர் தொடக்கிய நிறுவனம் கிளைகளைப் பரப்பி அவரது பிள்ளைகளால் நடத்தப்படுகிறது. அமரர் பூபாலசிங்கம் அவர்கள் கம்யூனிஸவாதி. அக்கட்சியின் உறுப்பினராயிருந்து பணிசெய்தவர். மனிதநேயம் மிக்கவர். தனது புத்தகசாலைக்கு வரும் இலக்கிய-வாசிப்புத் தாகம் கொண்டவர்களுக்கு இலவசமாக நூல்களைத் தந்து உருவாக்கியவர். தனது வீட்டிலும் ஒரு புத்தகப் படிப்பகத்தை வைத்து உதவியவர். டானியல், டொமினிக்ஜீவா முதலான பல எழுத்தாளர்களின் வாசிப்புக்குத் துணைசெய்தவர். அவர்களைக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் சேர்த்துவிட்டவர். பல்வேறு பொதுப்பணிகளுக்கும் உதவிடும் பரந்த உள்ளம் அவருடையது. நயினாதீவு நாகேஸ்வரி அம்மன் ஆலயப்பணிகளுக்கும் அவரது தொண்டு அளப்பரியது. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் மக்களை நேசித்த, படைப்பாளிகளை நேசித்த, இலக்கியத்தை நேசித்த மானுடப் பண்பாளர். 1982இல் அவர் மறைந்தபோதிலும் அன்னாரின் மூத்தமகன் திரு. ஸ்ரீதர்சிங் அவர்கள் தமது தந்தையார் விட்டுச்சென்ற இலக்கிய, சமூகப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

- சொற்கோ -

---

## கடல்நடுவே ஒரு களம்

கடல்களைத் தாண்டிக் கேட்கிறது
வீறிட்ட சிசுக்குரல்
காப்புடைந்த பெண்ணின் கதறல்
களன்றெரியும் வீட்டின் குமுறல்

சமரசப் பேச்சின் அலங்கார வளைவுக்குள்
எதிரெதிர் இனத்து மகனும் மகளும்
முகூர்த்த வேளையில்
சிரசறுபட்டு அலறிவிழும் ரணகளம்

இனம் மொழி மதம் என்று
ஊர்வலம் எடுத்த
மூளையின் தாதுக்கள் மோதி
சங்கமம் பிறந்து சிக்கெடுத்தது முடிச்சு

முடிச்சு இனி
வேஷ்டிக்கும் முந்தானைக்குமல்ல;
முஷ்டிக்கும் பொறிவில்லுக்கும்
அமைதியின் அனுஷ்டானங்களும்
ஆரவாரம் ஒடுங்கி ஸ்தம்பித்தன

கல்லும் உருகி அலையெடுக்கிறது
எரிமலைப் பிழம்பு மரணம் மட்டுமே என்றபின்
மரணம்தான் என்ன? அழிவது உடலின்
கற்பூர நிர்தத்துவம்; அழியாததுவோ
உயிரின் ஆரத்திச்சுடர்

*அமரர் தருமு சிவராமு (பிருமிள்)*
*"கவிதைக் கனிகள்" தொகுதியிலிருந்து*



# எளிமையான வாழ்வும் வளமும்

சி.நவரெத்தினஅம்மாள்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'A'.

ஒவ்வொரு நாடும் மக்களிடையே வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்துவதற்காகப் பல பொருளாதார வசதிகளைச் செய்கின்றது. இதற்குப் பல்வேறு வகையான அபிவிருத்தித் திட்டங்ளை அமுற்படுத்துகின்றது. மனிதனது தேவைகளை அத்தியாவசியம், ஆடம்பரம் என இருவகையாக வகுத்துப் பார்க்கலாம். ஒவ்வொரு மனிதனுக்கும் உணவு, உடை, உறையுள் என்பன முக்கியமானதாகும். எமது நாட்டைப் பொறுத்தவரையில் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது அல்லலுறும் பல மக்களை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால் நம் மூதாதையர்களை நோக்கினால் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து திருப்தியுடன் வாழ்ந்தனர். ஆனால் தற்போதைய சமுதாயம் நாகரிக வளர்ச்சி என்று சொல்லிக் கொண்டு தத்தமது தேவைகளைப் பலவாகப் பெருக்கி அவற்றைப் பெறுவதற்காக ஆலாய்ப் பறந்து கொண்டு திரிகின்றது. சிலர் ஆடம்பரப் பொருட்களைப் பயன்படுத்துவதும் வாழ்க்கைத் தர உயர்வு என்று தவறாக எண்ணுகின்றனர்.

ஒரு சமுதாயத்தில் எல்லோரும் ஓரளவு சமநிலைப் பகிர்வில் வாழ்ந்தால் மக்களிடையே போட்டி, பொறாமை, பூசல் போன்றன நிலவமாட்டாது. பணம் படைத்த வசதிவாய்ப்புள்ள மக்கள்கூட எளிமையாக வாழப்பழகுதல் வேண்டும். வசதி இருப்பதால் ஒருவன் அளவுக்கு அதிக ஆடம்பரமாக வாழ்வது தர்மத்திற்கு விரோதமானது. மானிட வாழ்வு பயனள்ளதாக அமைய வேண்டுமானால் நமது அத்தியாவசிய தேவைகளைக்கூட குறைந்தபட்ச அளவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதிகளவு பணம் இருக்குமானால், கஷ்டப்படும் வறிய மக்களுக்கு அதனை உதவி செய்வதுதான் நியாயமானதும் தர்மமும் புண்ணியமும் ஆகும். நாம் அளவுக்கு அதிக தேவைகளுக்கு ஆசைப்பட்டு, அதைப்பூர்த்தி செய்வதற்காக ஓயாது உழைத்து, நிம்மதி இன்றிப் பலகஷ்டங்களை அடைய வேண்டியிருக்கிறது. "போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து" என்ற பொன்மொழிக்கு ஏற்ப எம்மிடம் இருப்பதே நமக்குப் போதுமென்ற மனநிறைவு அடைதல் வேண்டும்.

பணத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்காக மக்கள் சிலர் இலஞ்சம், ஊழல் போன்ற குறுக்கு வழிகளிலும் பணம் சம்பாதிக்க முயல்கின்றனர். எனவே தேவைக்கு அதிகமாக வைத்திருக்க நினைப்பதால் வாழ்க்கையில் சாந்தி இல்லை; சௌக்கியம் இல்லை; மனநிம்மதி இல்லை; திருப்தி இல்லை. தரித்திரமும் துக்கமுமே உண்டாகும். உண்மையில் வாழ்க்கைத்தரம் என்பதைப் பார்த்தால் நல்ல குணங்களுடன், இறை பக்தியுடன், கருணை உள்ளத்துடன், எவ்வுயிரையும் தன் உயிர்போல் எண்ணி அன்புடன் வாழுவதே உயர்தரமான வாழ்க்கையாகும். பொருளாதாரத் தேவைகள் அதிகரிப்பதை வாழ்க்கைத்தரம் என்று சொல்ல முடியாது. மனதில் உயர்ந்த நோக்கத்துடன், உயர்ந்த இலட்சியத்துடன் வாழ்வதே சிறந்ததாகும்.

விஞ்ஞான வளர்ச்சியும் பொருளாதார அபிவிருத்தியும் உடைய மேலைத்தேய நாடுகள் வியாபார நோக்குடன் பலவகையான நவீனரகப் புதுப்பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகின்றன. இதனால் அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக, அல்லும் பகலுமாக ஓயாது இயந்திரம் போல உழைக்க வேண்டிய சூழ்நிலையில் அந்நாட்டு மக்கள் தள்ளப்படுகின்றனர்.

ஆதிகால மக்கள் வாழ்க்கையில் போட்டி பொறாமை இல்லாது ஒற்றுமையாக மனநிம்மதியுடன் வாழ்ந்தனர். மகாத்மாகாந்தி, வள்ளுவர் போன்ற மகான்கள் வாழ்க்கையை எளிமையாக வாழ்ந்து மக்களுக்கு முன்மாதிரியாகவும், நம்பிக்கை நட்சத்திரங்களாகவும் விளங்கினர். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் எல்லோரும் இயன்றளவில் எளிமையாக வாழப்பழகுதல் வேண்டும்.



# கூறலும் குறிப்பறிதலும்

திரு. வே.கணேந்திரன்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ம் வருடம் 'C'.

கூறப்படுபவை கூற்றுக்கள் ஆகும். கூற்றின் அடி ஆதாரம் சொற்களாகும். உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளின் வெளிப்பாடுகளையும், பொருட்கள் செயல்களின் காட்சி வடிவங்களையும், ஒலி வடிவத்திற் கூறமுற்பட்டபோது, சொற்கள் பிறந்தன. சொற்கள் சிறப்பானவை, வலிமையானவை. உள்ளம் எப்படி வலியதோ அப்படியே உண்மையின் பாற்பட்ட சொற்களும் வலியன. பயன்படுத்துவோர் திறத்திற்கும் வினைத்திட்பத்திற்கும் ஏற்ப பயன்படுவன. உள்ளத்து உணர்வை உடலால் பேசும் மெய்ப்பாட்டு மொழி குறிப்பாகும். அது உள்ளமும் உதடும் இணைந்து உள்ள அமைவைக் காட்டும். மொழி உண்மையான சொற்களோடு இணையும் போது, மிகச்சிறப்பாக உள்ளம் கருதியதை உணர்த்த வல்லது. எனினும், உள்ளத்து உணர்வான வெட்கம், கோபம், காமம், பொறாமை ஆகிய தீய குணங்கள் உள்ளத்திற்கும் உதட்டிற்கும் இடையே இருட்டிரை போட்டு, ஒன்றை நினைக்கும் உள்ளத்தையும், பிறிதொன்றை மொழியும் உதட்டையும் உருவாக்கிய பின், உள்ளம் நினைப்பதை உணர்த்தவல்ல உடல்மொழி தயங்கியும், விழுங்கியும், மயங்கியும் உள்ளம் நினைப்பதை உள்ளத்தின் கண்ணாடி எனத்தக்க முகத்தில் குறித்துக்காட்டும். அதை உய்த்தும் உணர்ந்தும் அறிதலே குறிப்பறிதல் ஆகும். எனவே, சொற்களின் சிறப்பையும், அதனினும் முந்தியதாகிய குறிப்பு உணர்த்தும் விடயங்களை அறியும் உண்மையான தெளிந்த அறிவையும், சொல்லேர் உழவர்களான வள்ளுவர், கம்பர் ஆகிய இலக்கிய கர்த்தாக்களின் துணையோடு, ஆராய்ந்து சுவைத்தலும், நயத்தலுமே இங்கு அமைந்துள்ளன.

சொல்லிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல அதிகாரங்களை ஒதுக்கியவன் வள்ளுவன். அவன் சொல்லைப்பற்றி அதிகம் சொன்னவன். நிறைமொழி கூறி, மழலைபேசி செவிக்கின்பம் தந்து, இனியவை கூறி மேலும், புறங்கூறாமை, சொல்வன்மை, வாய்மை, பயனில சொல்லாமை என தனி அதிகாரங்களை ஒதுக்கி, அடக்கமுடைமை, தூது, அமைச்சு ஆகிய அதிகாரங்களிலும் சொல்லைப்பற்றி சொல்லிய சொலல்வல்லான் வள்ளுவன்.

சொல்லுக்கு வளம் சேர்ப்பது, பலம் சேர்ப்பது சொன்ன சொற்படி ஒழுகுதல் ஆகும். இதுவே வாய்மை, மெய்ம்மை, உண்மை என்ற சொற்களால் சுட்டப்படுகிறது. சொல்லின் செய்ய வேண்டும், செய்ய முடியாததை சொல்லக்கூடாது, அப்படிச் சொன்னதை செய்யாவிட்டால், சொன்ன சொல்தவறிய, நாக்குப்புரட்டிய குற்றம் நமதாகும். சொல்லும் செயலும் இணையும்போது சொல் சிறப்படையும். அதுவே நாவின் நயம் ஆகும். இதனையே ஊர்களில் 'நா நாணயம் தவறக்கூடாது' எனக்கூறுவர். எண்ணம் ஒரு பக்கமாகவும், சொல் வேறு பக்கமாகவும் தோன்றின் பொய் பிறக்கின்றது. சொல் ஒன்றாயும், செயல் பிறிதொன்றாயும் அமையும்போது களவு பிறக்கிறது. இவ்வாறின்றி மூன்றும் சேரும்போது சொற்கள் நிறைவுடையதாகின்றன. எண்ணமும் சொல்லும் செயலும் ஒன்றுபட்டதால் உருவாகிய ஒற்றுமையின் பலம் சேருகிறது. இதனால் அம்மொழி, நிறைமொழியாகின்றது.

*"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டிவிடும்"*

இவ்வாறான நிறைமொழியை பேசுகின்றவர் சொல்லுகின்ற சொற்கள் அப்படியே நடந்துவிடுவது வியப்பானதன்று. இது எண்ணம், சொல், செயல் என்பன இணைந்ததால் உருவான பலம். கொக்கை எரித்தவன் பார்வை வலிமை, பாவம் "கொக்கென்று நினைத்தாயா என்னை" என்ற சொல்லால் பலவீனப்பட்டுப் போனது. இது செயலோடு சேர்ந்த சொல்லின்பலம். இது செயலை நிறைவாய் செய்ததால் உண்டான நிறைமொழி.

சொற்கள் சிறப்பான ஆயுதங்கள். அவை புதுமையான ஆயுதங்களுங்கூட. வாள் முனைகளைவிட பேனா முனைகள் கூர்மையானவை. போர் முனைகளில் பெற்ற வெற்றிகள்கூட நாமுனைகளால் மழுங்கடிக்கப்படலாம் அல்லது செழுமையாக்கப்படலாம். வெற்றியையும் தோல்வியையும் உறுதிப்படுத்தி ஒப்புவித்து, ஒப்பந்தம் செய்ய வைப்பவை சொற்களே. எனவே, தான் நினைக்கும் கருத்துக்களை பிறரும்

ஏற்கும்படி புரிய வைப்பவனும், சோர்வின்றி கொள்கையில் பற்றுறுதியுடன் உழைப்பவனும், உரிய இடத்து உரிய நேரத்தில் தனது கருத்தை வலியுறுத்திக் காட்டுபவனுமே, வெற்றியடைகிறான்.

*"சொலல் வல்லான் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல் வெல்லல் யார்க்கும் அரிது"*

சொற்கள் எல்லோரிடமும் தான் உண்டு. ஆனால் எல்லோரும் வெற்றி பெறுவதில்லையே? என்ற கேள்வி எழலாம். வாய் திறந்தால் வம்பளப்பதே சிலருக்கு தொழில். பாதாதி கேச பரியந்தம் வர்ணிப்பதும், வசைபாடுவதும், கோள் சொல்வதும், இவர்களுக்கு கைவந்த கலை. இவ்வாறு சொற்களை தவறாகப் பயன்படுத்துவதால் அவை பலமிழந்து போகின்றன. "கடியவேக சுடுசர"மெனத்தக்க சொல் வலுவிழந்து வீணாகிப்போகிறது.

*"பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல்*
*மக்கட் பதடி எனல்"*

பயனில்லாத சொற்களைக் கூறுபவர்கள் நெல்லுக்குள் எவ்வாறு பதர் காணப்படுகின்றதோ அவ்வாறே மக்களுக்குள் காணப்படுகின்றனர். சொற்களைச் சொல்லும்போது அச்சொற்களின் திறம் அறிந்து சொல்லுதல் வேண்டும். தவறுதலாகவோ பிழையாகவோ சொன்ன சொற்கள் ஒருவனுடைய ஆளுமையை, அவனுடைய நோக்கத்தை பலவீனப்படுத்திவிடும். எனவே, வெற்றியைத் தரத்தக்க சொற்கள் சரியான இடத்திற் பிரயோகிக்கும்போது, எதிரான கருத்துக்கள் வலுவிழந்து போகின்றன. வெற்றி நம்மைத்தேடி வருகின்றது.

*"சொல்லுக சொல்லை பிறிதோர் சொல் அச்சொல்லை*
*வெல்லும் சொல்லின்மை அறிந்து"*

மிகவும் வல்லவர்களாக சொற்களை திறமறிந்து சொல்லும் நிறைமொழி மாந்தர் சொற்றிறம் உடையவர்கள். அவர்களுக்கு சொற்கள் சேவகம் செய்யும். அவர்கள் சொல்வல்லோர், சொல்லேர் உழவர்களாவார். சங்கச் சான்றோர் முதலான புலவர்கள் இவ்வாறு அமைந்தனர். அதனால் தமிழ்நாட்டு மக்களும், மன்னர்களும் அவர்தம் வாயினால் தாம் பாடப்படுதல் பெரும் பேறென கருதினர். வள்ளலெனப் போற்றப்படுதலுக்காக தம் தலையைக்கூட கொடுக்கச் சித்தமாயிருந்தனர். கணக்கில்லாத நிதியத்தை அள்ளி வழங்கினர். மக்களுக்கும் மன்னர்களுக்குமிடையே வேறுபாடு காணாது அன்பை மட்டுமே கண்ட மாசறு காட்சியினால், மன்னனை மட்டுமன்றி, மக்களையும் இவர்கள் பாடினர்.

அவர்களைக்கண்டு மன்னர்கள் அஞ்சியதும் உண்டு. நீடுழிகாலம் அவர்கள் வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டதும் உண்டு. மன்னர்தம் வாழ்க்கைச்சரிதம் கால வெள்ளத்தால் அழிந்தாலும், புலவர்கள் தம்பாடலால் இன்றுவரை அவர்கள் புகழை நிலைக்கச் செய்துள்ளனர். இதனாலேயே அக்கால மன்னர்கள் புலவர்கட்கு அஞ்சினர். வரலாற்றுப்பழியை ஏற்க யார்தான் விரும்புவார்கள்?

*"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க*
*சொல்லேர் உழவர் பகை"*

சொல்தான் வலிய ஆயுதமா? இதைவிடச் சிறந்த ஆயுதம் இல்லையா? என ஐயம் எழலாம். வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு. சொல்லைவிடவும் வலிய ஆயுதம் ஒன்று உண்டு. சொல் கடிய வேகச் சுடுசரமாயின் இது அதனையும் மிஞ்சியது. வாயு வேகம், மனோவேகம் என்பார்களே அத்தகையது. நவீன விஞ்ஞானத்தில் ஒளியின் வேகத்தை விஞ்சியது. சொல்லிற்கு இது அண்ணன். அதனால் இதை இரு இடங்களில் பெயர்மாற்றாது அதிகாரமாக ஒதுக்கியுள்ளார் தெய்வப்புலவர். இதுவே குறிப்பறிதலாகும். முதற்பத்து அரசியலிலும், பின்னைய பத்து களவியலிலும் அமைந்துள்ளது.

ஒருவன் உள்ளத்தில் உள்ளதை தெளிவுற அறியக்கூடியவன் மனிதனானாலும் அவனைத் தெய்வத்தோடு ஒப்ப மதிக்க வேண்டும்.

*"கூறாமை நோக்கி குறிப்பறிவான் எஞ்ஞான்றும்*
*மாறாநீர் வையத்தணி"*
*"ஐயப்படா தகத்த துணர்வானைத்*
*தெய்வத்தோ டொப்பக் கொளல்"*

சொல்லுக்கு நாபிறப்பிடம், வாய் அதன் தாய்வீடு. அதனிலும் இது மேலானது. குறிப்பை உணர்த்துவதும் உணர்வதும் கண்ணே. எனவே, குறிப்பறிந்து ஒழுகும் கண்ணே அறிவுக்கு அணியாகின்றது. குறிப்பறிய மாட்டாத கண்ணால் உண்டாகத்தக்க பயன் என்ன? யாதொன்றுமில்லை.

*"குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்*
*என்ன பயத்ததோ கண்"*
*"நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்*
*கண்ணல்லது இல்லைப் பிற"*

"அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்". "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்". ஆனாலும் இதனை அறிய, உணர ஓர் அறிவு தேவை. ஏனெனில் இவ்விடத்தில் சொல்லும் எண்ணமும் ஒன்றை ஒன்று விவாகரத்துச் செய்து கொள்கின்றன. வாயைக் காது கவனிக்க கண்ணைக் கண் கண்காணிக்க வேண்டும். தொடர்ந்து கண்ணைக் கண் நோக்காது வார்த்தை வெளிவருமாயின், அது குறிப்பால் உள்ளத்தில் ஏதோ புதையுண்டுள்ளதைக் காட்டும். இதனை உணர்ந்து உய்த்து அறிவதே குறிப்பறிவாகும்.

அரசியலில் ஓர் குறிப்பறிதலாக கம்பராமாயண யுத்த காண்டத்தில் விபீஷணன் அடைக்கலப்படலம் விளங்குகிறது. விபீஷணன் இராமனிடம் அடைக்கலமாக வந்திருக்கிறான். அவனுக்கு அடைக்கலம் வழங்கலாமா? என்பது தொடர்பாக மந்திர ஆலோசனை நடைபெறுகிறது. அறிவில் முதிர்ந்தோர்,

*"பற்றுதல் பழுதென பழுதுறா வொரு*
*பெற்றி உணர்வினார் முடியப் பேசினார்"*

அவனை சேர்த்துக் கொள்வது ஆபத்தானதென தீர்க்கமாகக் கூறினார். அடக்கமே வடிவாக நின்ற அனுமனை இராமன் பார்த்தான்.

*"செறி பெருங்கேள்வியாய் கருத்தென் செப்பென*
*நெறிதரு மாருதி யென்னுநேரிலா*
*வறிவினை நோக்கினான் அறிவின் மேலுளான்"*

உன்னுடைய கருத்து என்னவென்று கேட்பதுபோல நோக்கவே, அந்நோக்கின் நோக்கை உணர்ந்தவன் ஆகிய அனுமன் அறிவன் ஆகிறான்.

*"வஞ்சகர் வாண்முகம் கண்டதோர் பொழுதினில்*
*தெரியும் கைத்தவம்"*
*"உள்ளத்தில் உள்ளதை உரையின் முன்துற*
*மெள்ளத்தன் முகங்களே விளம்புமாதலால்*
*கள்ளத்தின் விளைவெலாம் கருத்திலாமிருட்*
*பள்ளத்தி னன்றியே வெளியிற் பல்குமே"*

இது அறிவின் உச்சம். சொல்லினும் மேலான செழுமை. இங்கு கம்பன் காட்டும் வள்ளுவன் கூறிய அறிவின் உச்சமான அருமருந்தென்ன முத்தம் அவைக்கு வந்தது. குறிப்பால் இராமன் கேள்வியை மட்டுமன்றி, முன்னமே எதிரியின் இளையவனான விபீஷணன் மேல் கண்ணெனும் கோலினை கருதியாண்ட வண்மையின் வண்மையான் அனுமன். எனவே, அவன் அறிவன். அவ்வறிவன் மேல் ஓர் அரியாசனமிட்டு அறிவின் மேலுள்ளான் ஆக இராமனைக் கம்பன் சித்திரிக்கிறான்.

*"குறிப்பின் குறிப்புணர்வாரை உறுப்பினுள்*
*யாது கொடுத்துங் கொளல்"*

இது அரசியல். அனுமனைத் தன் அன்பைக் கொடுத்து இராமன் பெற்றான். ஏனெனில், இருவரிடத்தும் இணையிலா அன்பு விளங்கிற்று.

குறிப்பறிவில் இரண்டாவது பத்து களவியலில் உள்ளது. இது அனேகர்க்கு கைவந்த கலை. அது கல்லாமலே பாகம்படும் கலை. இக்கலைக்கு கண்ணே கால்கோள்விழா எடுக்கும். கண்ணே காண வேண்டுமெனத் துடிக்கும். காணாதபோது கனவிலேனும் காணும். இங்கு சொல்லெனும் பயன்மிக்க ஆயுதம் பயனற்றுப் போய்விடும்.

*"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்*
*வாய்ச்சொற்கள் என்னபயனு மில"*

கதைகளும், காவியங்களும், கமராக்களும் தடம் மாறுமிடம். யாழ்தேவிக்கு இது பொல்காவல, மகாவலிக்கு இவ்விடம் பொல்கொல்ல, காவேரிக்கு இது பேரூர்.

*"கண்ணொடு கண்ணினைக் கௌவி ஒன்றை ஒன்று*
*உண்ணவும் நிலைபெறாது உணர்வொன்றும் இடம்"*

வரிசிலை அண்ணலும், வாட்கண் நங்கையும் இருவரும் மாறிப் புக்கிதயம் எய்தும் இடம். கண்களும் கண்களும் கலந்து பேசிட காதல் பிறக்குமிடம். ஒருங்கிய ஈருடற்கு ஒருயிர் ஆகும் இடம். இவ்விடத்தின் வரவை பலபேர் காத்திருப்பதுண்டு.

*"யான் நோக்குங்கால் நிலம் நோக்கும் நோக்காக்கால்*
*தான்நோக்கி மெல்ல நகும்"*

இவ்விடத்தின் வரவை இதன்மூலம் உணரலாம். இஃது உணர மாட்டாதவராயின் பரிதாபம் உயிர்வாழ்வின் அர்த்தமே அவிந்து போய்விடும். இவ்விடத்தில் குறிப்பறியவில்லையாயின் அருமருந்தன்ன தேன் வெறுமணலில் சிந்திவிடும். எனவே, குறிப்பறிதல் அதிகம் வேண்டிய இடமாகும். அது வாழ்வின் கோபுர கலசம்; ஒவ்வொரு உயிரினதும் உணர்வினதும் உற்பத்தி மையம்; ஊற்றுவாய். அந்த ஊற்றுவாய் அடைபட்டுப் போகலாமா? எனவே,

*"கூறலும் குறிப்பறிவும் வாழ்வின் உயிர்நாடியாகும்"*

---

**தமிழ்த் திரையுலகம் பற்றி அறிவோம்**

- தமிழில் முதலாவது பேசும்படம் 31.10.1931இல் வெளியிடப்பட்டது. தமிழில் வெளிவந்த முதலாவது முழுநீள வர்ணப்படம் எம்.ஜி.ஆர். நடித்த "அலிபாவாவும் நாற்பது திருடர்களும்" ஆகும்.
- இந்தியாவில் வெளியான முதற் பேசும்படம் "ஆலம்ஆரா" என்ற இந்திப்படமாகும். 1931 ஏப்ரலில் இது வெளியானது.
- தமிழில் முதன்முதலில் பாடல்கள் இல்லாமல் வெளிவந்தபடம் ஏ.வி.எம்.மின் "அந்தநாள்". சிவாஜிகணேசன் - பண்டரிபாய் நடித்தது.
- மூன்று தீபாவளிகளைக் கண்டு வெற்றிகரமாக ஓடிய தியாகராசபாகவதரின் "ஹரிதாஸ்" (1944) படத்தின் சாதனையை ரஜனிகாந்தின் "சிவாஜி" (2007) படம் முறியடித்துள்ளது.
- எம்.ஜி.இராமச்சந்திரன் முதன் முதலில் நடித்தபடம் "சதிலீலாவதி". எம்.ஜி.ஆர் தனது 16வது படமான ஜீபிடரின் "ராஜகுமாரி" படத்தின்மூலம் முதன்முதல் கதாநாயகனானார்.
- சிவாஜிகணேசனின் முதற்படம் "பராசக்தி" கலைஞர் மு.கருணாநிதியின் வசனத்தில் உருவாகிப் பெருவெற்றி பெற்றது.
- ஜெமினிகணேசனின் முதற்படம் ஜெமினி ஸ்ரூடியோவின் "மிஸ்மாலினி".
- சுமார் 2000 படங்களில் நடித்துத் தமிழ்த் திரையுலகில் பெருமைபடைத்த நகைச்சுவை - குணச்சித்திர நடிகை பத்மஸ்ரீ மனோரமா.
- தமிழக அரசின் முதலாவது அரசவைக் கவிஞர் நாமக்கல் வெ.ராமலிங்கம்பிள்ளை.
- கவிஞர் கண்ணதாசன் புலமைப்பித்தன் ஆகியோரும் தமிழக அரசின் அரசவைக் கவிஞராய் இருந்தனர்.
- சமீபத்தில் கவிஞர் வைரமுத்து அவர்கள் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் தமிழக அரசின் அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழ்த் திரைப்படப் படவுலகில் அதிக பாடல்களை இயற்றிய கவிஞர் வாலி. சுமார் 7000 பாடல்கள் இயற்றியுள்ளார்.
- கவிஞர் அ.மருதகாசி சுமார் 4000 பாடல்களையும், கவிஞர் கண்ணதாசன் 5000 பாடல்களையும் இயற்றியுள்ளார்.

**இலங்கைச் சினிமா**

- இலங்கையின் முதலாவது சிங்களப் பேசும்படம் "கடவுனு பொறந்துவ". இதனைத் தயாரித்தவர் எஸ்.எம். நாயகம் என்ற தமிழர். இத்திரைப்படம் 21.01.1947அன்று திரைக்குவந்தது. இதில் கதாநாயகனாக டபிள்யூ ஜெயமான்னவும் கதாநாயகியாக தமிழ்ப் பெண்ணான ருக்மணிதேவியும் நடித்தனர். விரைவில் இருவரும் தம்பதிகளுமாகினர்.
- இலங்கையின் முதலாவது தமிழ்த் திரைப்படத்தைத் தயாரித்து இயக்கியவர் ஹென்றி சந்திரவன்ச என்ற சிங்களவர். இத்திரைப்படம் 16மி.மீட்டரில் தயாரிக்கப்பட்டதால் படமாளிகைகளில் திரையிடப்படவில்லை. 1962இல் மண்டபமொன்றில் திரையிடப்பட்டது.
- இலங்கையின் முதலாவது தமிழ்ப்படத்தை (35மி.மீட்டர்) இயக்கிக் கதாநாயகனாகவும் நடித்தவர் பி.எஸ்.கிருஷ்ணகுமார். 1963இல் "தோட்டக்காரி" என்னும் இப்படம் திரையிடப்பட்டது.
- எம்.எஸ்.நாயகம், சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர், டபிள்யூ.எம்.எஸ்.தம்பு, ரீ.சோமசேகரன், கே.குணரெத்தினம், லெனின் மொறாயஸ், ஜோ.தேவானந், றொபின்தம்பு, எம்.வி.பாலன் போன்ற பல தமிழர்கள் சிங்கள் படத்துறையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுள்ளனர்.



# நாகரிக மோகமும் இளைய சமுதாயமும்

க.தாரணி
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவையார். "மானிடராய்ப் பிறப்பதற்கு என்ன தவம் செய்துவிட்டோம்'' என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்கின்றோம். குரங்கில் இருந்து தோன்றியவன் மனிதன் என்றார் டார்வின். மனிதன் தோன்றிய காலம் முதலாக நாகரிக வளர்ச்சி பெற்று வந்துள்ளான். ஆரம்பத்தில் நாகரிகங்கள் யாவும் நதிக்கரையோரங்களிலே தோற்றம் பெற்றன. நாடோடியாக அலைந்து திரிந்த ஆதிமனிதன் தனது குடியிருப்புக்களை நதிகளுக்கண்மையில் அமைத்துக் கொண்டான். உலகில் இந்துநதிக் கரை நாகரிகம், எகிப்திய நாகரிகம், மொசப்பதேமிய நாகரிகம், சீன நாகரிகம் என்பன பண்டைய நாகரிகங்களில் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

அந்நாகரிகங்களில் வாழ்ந்தோர் தமது பிரதேசத்தின் இயற்கைச் சூழல், பொருளாதார முறை, அரசியல் போன்ற வேறுபட்ட காரணங்களால் வேறுபட்ட வாழ்க்கை முறைகளையும், பண்பாட்டு அம்சங்களையும் கொண்டிருந்தனர். இதனால் நாகரிகங்கள் ஒரே இயல்பினைக் கொண்டதாக இருக்கவில்லை. சனத்தொகை அதிகரிப்பு, தேவைகள் அதிகரிப்பு காரணமாக நாகரிகங்கள் படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கின. இதனால் தமது தேவைகளை, தமது பிரதேசங்களிலேயே பூர்த்தி செய்ய முடியாதநிலை தோன்றியது.

ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியின் பயனாக நாடுகாண் பயணங்கள் ஏற்பட்டன. இதனால் அமெரிக்கா, இந்தியா போன்ற புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. காலப்போக்கில், கீழைத்தேய நாடுகள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர்களது காலனித்துவ ஆட்சியின் கீழ் உட்பட்டன. இதனால் ஆங்கில நாகரிகமும் கீழைத்தேய நாகரிகமும் கலக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன.

காலம் காலமாக தனக்கென பல சிறப்புக்களைக் கொண்டுள்ள இனமான தமிழினம், இந்நாகரிக வளர்ச்சியின் மோகத்தில் தள்ளப்பட்டு சிக்குண்டு சின்னாபின்னமாய்ப் போயுள்ளது. அவர்கள் பாரம்பரியமாய் பண்பாட்டோடு வாழ்ந்த பிரதேசங்களைக் கைவிட்டு, தமது பொருளாதார நலன்களுக்காகவும், வேலைவாய்ப்புக்களுக்காகவும், அரசியல் காரணமாகவும் மேலைத்தேய நாடுகளுக்குக் குடிபெயர்ந்து குடும்பம் குடும்பமாக பல ஆண்டுகளாய் வாழ்கின்றனர். அவர்களும், அவர்களுக்குப் பிறக்கின்ற பிள்ளைகளும் மொழி உட்பட தமிழ்ப் பண்பாட்டு அம்சங்களைப் படிப்படியாகக் கைவிட்டு வருகின்றனர். இதற்கு இயந்திர மயமாக்கப்பட்ட மேலைத்தேய வாழ்க்கைமுறை காரணமாகத் தோன்றக்கூடும். ஆனால் தமிழர் தாயகப் பகுதிகளில் வாழ்கின்ற எம்மவர்கள் போகின்ற பாதை சிக்கலான விடயமாக உள்ளது.

குறிப்பாக, எமது நாட்டைப் பொறுத்த வரையில் அதிலும் வடக்கு - கிழக்கைப் பொறுத்த மட்டில் இளைய சமுதாயத்தின் நிலைமை கவலைகொள்ள வைத்துள்ளது என்றே கூறலாம். நீண்ட காலம் தொடரும் கொடிய யுத்தம், அதன் காரணமாக ஏற்படும் இடப்பெயர்வுகள், அகதி வாழ்க்கை, இயற்கை அழிவுகள் போன்றன அவர்களது இயல்பான வாழ்க்கையைச் சீரழித்துள்ளன. வறுமை, பொருளாதாரப் பிரச்சினைகள், வேலையின்மை என்பனவும் அவர்களது மனநிலையில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன. வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி, எதிர்கால வாழ்வின் நிச்சயமற்ற தன்மை என்பனவும் அவர்களது மாற்றங்களுக்குக் காரணமாக உள்ளன.

அந்நியர் ஒரு பகுதியில் ஊடுருவும்போது இப்பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்களை அழிக்க முற்படுவது இயல்பாகும். அதனால் மக்களுடைய வாழ்க்கை ஒழுக்கமற்றதாகக் காணப்படும். இத்தகு நடவடிக்கைகளுக்கு எம்மவரும் துணை போவது வேதனைக்குரியதாக உள்ளது.

தமிழர் பகுதிகளில் பாடசாலையைவிட்டு இடை விலகுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதோடு சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதிலும்

ஒழுங்கின்மை காணப்படுகிறது. சிறுவர் தொடக்கம் இளைஞர்கள் வரையில் புகைபிடித்தல், மது அருந்துதல் என்பவற்றில் தாராளமாக ஈடுபடுகின்றனர். போதைவஸ்துப் பாவனை குறைவாகக் காணப்பட்டாலும் சில இடங்களில் அதன் பாவனையும் தலையெடுத்துள்ளது. பீடா மென்ற பல வாய்கள் பான்பராக், பாவுள் என்பவற்றை மெல்லுகின்றன. இவற்றில் போதைப் பொருட்கள் கலந்துள்ளன. அவற்றின் விற்பனையைத் தடுப்பதற்கு எதுவித நடவடிக்கையோ, புகைத்தல் - மதுபாவனையைக் குறைப்பதற்கான முன் முயற்சிகளோ எடுக்கப்படவில்லை. போதை காரணமாகத் தகாத செயல்களில் ஈடுபடல், தகாத வார்த்தைகளில் பேசுதல், காவாலிப் பையன்களின் அட்டகாசம், சந்திக்குச் சந்தி நின்று வீண் வார்த்தைகளிலும் அடிதடிகளிலும் ஈடுபடல் ஆகிய செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

இளைஞர்கள் நிலை இவ்வாறிருக்க, பெண்களின் நிலையோ வேறுவிதமாக உள்ளது. சேலை உடுத்தி அம்மன் தேர்களைப் போன்று அழகாகப் பவனி வந்தவர்கள், இன்று நிலைமாறி குதிக்கால் சப்பாத்துடனும், குறுகிய ஆடைகள், இறுக்கமான ஆடைகள் என்பவற்றை அணிவதோடும் மட்டுமல்லாமல், சினிமாப் படங்களில் வருவதுபோல் கவர்ச்சிகரமாக விதம் விதமான ஆடைகளுடன் அரைகுறையாகத் திரிகின்றார்கள். "ஆள்பாதி ஆடைபாதி" என்ற நிலைமாறி, "ஆள் முக்கால் ஆடை கால்" என்பதாக நிலைமை மாறியுள்ளது. இதற்கு விளம்பரங்கள், திரைப்படங்கள், வெளிநாட்டுப் பெண்களின் வருகை போன்றவை காரணமாக உள்ளன.

ஆடை ரீதியாக பெண்களின் நிலை இதுவென்றால், மறுபுறம் வறுமை, பொருளாதாரப் பிரச்சினைகளினால் எமது கலாசாரத்துக்கு ஒவ்வாத நடவடிக்கையில் ஒருபகுதியினர் ஈடுபடுகின்றனர். களவாக காட்சிப்படுத்தப்பட்டும், மறைவாக பார்க்கப்பட்டும் வருகின்ற ஏராளமான நீலப் படங்களும், மஞ்சள் புத்தகங்களின் பாவனையும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பயன்மிக்க இணையத்தில் ஆபாசப் படங்களின் தளங்களையே பால் வேறுபாடின்றி அதிகம் பார்வையிடுகின்றார்கள். ஆனால் இதன் பாவனை பெரிதாக வளர்ச்சி அடையவில்லை என்றே கூறலாம். தவறான பாலியல் தொடர்புகளும், அதன் காரணமாக கருவுற்றுப் பிறக்கின்ற குழந்தைகள் அநாதை இல்லங்களில் சேர்க்கப்படும் நிலையும், பெண்களைத் திருமணத்திற்காகக் கடத்துதல் போன்ற சம்பவங்களும் ஆங்காங்கே முளைக்கத் தொடங்கியுள்ளன.

இதனைவிடச் சமூகத்தில் பரவலாக இடம்பெறும் களவுகள், கொலைகள், கற்பழிப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றன. இளம் விதவைகளின் எண்ணிக்கையும், விவாகரத்துக் கோரும் இளம்பெண்களின் தொகையும் அதிகரித்துள்ளது.

எனவே, பண்பாடுமிக்க எமது சமுதாயத்தினை மீளக்கட்டி எழுப்புவதற்கு இறுக்கமான நடவடிக்கைகளும், சட்டங்களும் அவசியம். ஆனால் இவற்றைச் செயற்படுத்தப் போகின்றவர்கள் யார்? எப்போது? எப்படி? எங்கே? காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.

---

ஊற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுரை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.

– புறநானூறு –

பண்ணின் பயனாம் நல்லிசையும் பாலின் பயனாம் இன்சுவையும்
கண்ணின் பயனாம் பெருகொளியும் கருத்தின் பயனாம் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனாம் பொழிமழையும் வேதப்பயனாம் சைவமும்போல்
மண்ணின் பயனாம் அப்பதியின் வளத்தின் பெருமை வரம்புடைத்தோ

– பெரியபுராணம் –



# தானத்திற் சிறந்தது வித்தியாதானம்

செல்வி க.ஜெகநிதி
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'E'.

உடையோர் இல்லாதார்க்கு உவந்தளித்தல் "தானம்" எனப்படும். மண்விளை தானியங்கள் உண்ணும் உணவாக அளிக்கப்படுகின்றன. கண்ணும் குருதியும் எண்ணற்கரிய உயிர்களின் ஊனத்தைத் தவிர்க்கத் தானமாக அளிக்கப்படுகின்றன. உடலைக்காத்து உன்னதப் பணிபுரிகின்றன. ஆனால் உயிரைக் காத்து உறுதுணையாய் ஓம்புகின்ற தானமும் ஒன்றுண்டு. தானங்களுள் தலைசிறந்தது; தரணியிலே விலை மதிப்பற்று விளங்குவது; அதுவே வித்தியாதானமாகும்.

மனம் நிறைந்த வித்தையை மற்றவர்க்கு ஈதலே வித்தியா தானமாகும். கல்லாதவர் ஒன்றும் இல்லாதவர்க்கு ஒப்பாவார் என்கின்றார் செந்நாப் போதார் திருவள்ளுவர். மண்ணுலகில் மாண்புடன் வாழ வகைசெய்வது கல்வி. எண்ணுகின்ற பிறவி ஏழிலும் பின்தொடர்வது முன்கற்ற கல்வி என்கின்றார். ஆதலால், 'எழுமையும் ஏமாப் புடைத்த' இனிய கல்வியை ஈதலே மிகப்பெரிய கொடை என்பது மிகையாகாது. கல்வியறிவு தங்கி நில்லாத ஒருவனிடத்து நல்லதையும் அல்லதையும் பகுத்துணரும் வல்லமை இருப்பதில்லை; கல்லாதவன் முகத்தில் கண்கள் இருப்பதில்லை; அவை இரண்டு புண்களே ஆகின்றன என்கிறது திருக்குறள். இதனால் கண்ணில்லாத கபோதி ஒருவனுக்கு கண்ணே வழங்கிப் புற ஒளியை ஊட்டுவதைவிட, அறிவாகிய ஞான ஒளியை அவனிடத்து நாட்டுவதே சிறந்ததெனச் சாற்றுகின்றனர் பெரியோர்.

கல்வியாகிய அறிவு கேட்கப்படும்போது அவை செவிக்கு நல்விருந்து ஆகின்றது. அறிவுப் பசியைத் தீர்க்கின்றது. செவிக்கு உணவு இல்லாதபோதே வயிற்றுப் பசியை ஆற்றும் அன்னம் வேண்டும் என்கின்றது குறள். கேள்வியாகிய கல்வி நினைவுகளை நிரப்புகின்றது. உணர்வுகளை முழுமையாக்க உறுதுணையாகின்றது. இதனை உதரத்துக்கு உணவுவழங்கி ஓராயிரம் பேருக்குப் பசி தீர்ப்பது பெருமையல்ல, இல்லாத ஒருவனின் கல்லாமை நீக்குதலே ஒப்புயர்வு இல்லாத அறம் என்கின்றான் பாரதி. அன்ன சத்திரம் ஆயிரம் அமைப்பதிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிக்கக் கோருகின்றான்.

எத்துணை செல்வமுடையவன் ஆயினும், கல்வி இல்லாதவன் ஏழையாகவே எண்ணப்படுகின்றான். கேடில் செல்வம் ஆகிய கல்வி இம்மையில் நல்வழி வகுத்துத் தருகின்றது. தீவினை களைந்து உயர்வினைத் தருகின்றது. தர்மங்களை மேற்கொண்டு தானுயர வழிசெய்கின்றது. தன் சுற்றம் யாவும் தரணியில் பெரும் நிலை அடைய உதவுகின்றது. இதன் மூலம் மறுமையிலும் மாண்பு உள்ள நிலையடைய உறுதுணை ஆகின்றது.

இன்னும் புறத்தே உணரப்படுகின்ற தானங்கள் யாவும் பூதங்கள் ஐந்தினாலும் அழிக்கப்படத் தக்கவை. நிலையாத உடலோடு நீத்துவிடும் இயல்பு படைத்தவை. உடல் அழியும்போது, உடல் கொண்ட தானமும் அழிந்துவிடும். கொடுத்தவர்க்கு மட்டுமே அத்தானம் தர்மமாய் நிலைத்து இருக்கும். ஆனால் கல்வி தானமாய் வழங்கப்படும்போது அதைப் பெற்றவர் பிறவிகள் ஏழிலும் பயன் பெற்றிருக்க முடியும். கொடுத்தவர்க்கும் தர்மம் நெடுந்தூரம் தொடர்ந்து வரும்.

உலகியல் பொருள் யாவும் வழங்கப்படும். வேளையின் பின், கொண்டவர்க்கு உரிமையாகி அவர் பொருளின் அளவினைக் கூட்டுகின்றது; கொடுத்தவர்க்கு இல்லாததாகிக் குறைகின்றது. கொடுத்தாலும் குறையாத பெருஞ் செல்வமாய்ப் பெருகுவது கல்விச் செல்வம் ஒன்றேதான். கொண்டவர்க்கும், கொடுத்தவர்க்கும் குறைவில்லாமல் பெருகுவது கறையற்ற கல்வியின் தானமேயாகும். ஆதலால் கல்வி, கற்றவர்க்கும், கற்பித்தவர்க்கும் உற்ற துணையாக நின்று நற்றவப் பேறை நல்குகின்றது. கல்லாத ஒருவன் மானிடனாயினும் அவன் விலங்கெனவே கருதப்படுகின்றான்.

*"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரொடுஏனை யவர்"*

என்கின்றது ஈரடிக்குறள். பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றவர்கள் கூட கல்லாதவிடத்து விலங்கென்ற கணிப்பையே பெறுகின்றனர். கல்லாதவர்

மாக்களென்று தாழ்த்தி வைக்கப்படுகின்றனர். ஐம்புலனும் ஆறறிவும் செம்மையாகப் பெற்றிடினும் இம்மையில் மக்களென்று போற்றப்படுவதற்கு மனம் வளர்க்கும் கல்வியே அவசியமாகின்றது. ஆதலால் கல்லாத ஒருவனுக்குக் கல்வியை வழங்குதலானது, மானிடனான ஒருவனை மாண்புகள் மிக்க மனிதனாகப் படைக்கின்ற பெருமையுடைத்ததாகும். இதனாலன்றோ எழுத்தை அறிவித்தவன் இன்னொரு இறைவனாகப் போற்றப்படுகின்றான். இவ்வுலக வாழ்வின் வழிகாட்டியாக வாழ்த்தப்படுகின்றான்.

கல்வி ஆத்மாவுக்கு அமைதியைத் தருகின்றது. ஆனந்தமான வாழ்வுக்கு அடிகோலும் அத்திவாரமாகின்றது. நித்திலத்தில் நீடுபுகழ் பெற்று நிலைத்திருக்க உதவுகின்றது. அறநெறி நின்று தவநெறியில் ஒழுக உறுதுணையாகின்றது. அழிவற்றதாக உயிரோடு தொடர்ந்து நின்று ஆக்கம் பல விளைக்கிறது. ஆதலால் இத்துணை பெருமை உடைத்த கல்வியை இல்லையெனாது ஈதலே தலைசிறந்த தானமெனக் கொள்வது தக்கதேயாகும்.

*"கற்றவர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு"*

## *திரு கா.சைமன் காசிச்செட்டி அவர்கள்*



*புத்தள மாவட்டத்தின் கற்பிட்டி கிராமத்தில் காபிரியேல் – மேரி றொசைறோ தம்பதியரின் மகனாக திரு. சைமன் காசிச்செட்டி அவர்கள் (21.03.1807–05.11.1860) பிறந்தார். இவர் தாய்மொழி தமிழுடன் ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிரதம், பாளி, அரபு, போர்த்துக்கீசம், கிரேக்கம், இலத்தீன், டச்சு, எபிரேயம் முதலான மொழிகளையும் கற்றுப் பன்மொழிப் பாண்டித்தியம் உடையவரானார். தனது 17 வயதில் கற்பிட்டி நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராகவும் பின்னர் புத்தளம், சிலாபம் பகுதி மணியகாரனாகவும் (1928), இலங்கையின் சட்டநிருபணசபையில் தமிழர் பிரதிநிதியாகவும் (1938–1945) பதவிவகித்தார். மாவட்ட நீதிபதியாகப் பதவிவகித்த முதலாவது இலங்கையராகவும் இலங்கை நிர்வாகசேவையில் கடமையாற்றிய முதல் இலங்கையராகவும் இவர் பெருமைபெற்றுள்ளார். இலக்கியத்துறையில் இவரது பணிகள் ஏராளம். 189 தமிழ்நாட்டுப் புலவர்களினதும் 13 ஈழத்துப் புலவர்களினதும் சுருக்கமான வரலாற்றினைத் தொகுத்து தமிழ் 'புளூராக்' (Tamil Plutarch) என்னும் நூலினை தமிழுலகிற்கு அளித்தார். இந்நூலே தமிழ்ப்புலவர் வரலாறு பற்றிக்கூறும் முன்னோடி நூலாக இன்றும் பெருமையுடன் கருதப்படுகிறது. அக்காலத்தேவை கருதி இவரது ஆக்கங்கள் ஆங்கிலமொழியிலேயே அமைந்தனவாகினும் தமிழர்களது வரலாறு, வாழ்க்கைமுறைகள், பண்பாடு ஆகியவற்றை எடுத்துக் காட்டுவதாக அவை அமைந்தன. சிறந்த பூகோளவியல் அறிஞரான காசிச்செட்டி அவர்கள் இலங்கையின் நீளம், அகலம், சுற்றளவு, பரப்பு ஆகியவற்றைப் பற்றி முதன்முதலில் கணித்துக் கூறினார். இலங்கையின் சகல இனமக்களினதும் வரலாறுபற்றியும், கிராமப் பெயர்கள் பற்றியும் ஆய்வுசெய்தார். 'சிலோன் கசற்றியர்' (Ceylon Gazeteer) என்ற இலங்கைபற்றிய தகவல் திரட்டு நூலினை 1834இல் வெளியிட்டதன்மூலம் இலங்கைப் பத்திரிகைகளுக்கும், வர்த்தமானிக்கும் முன்னோடியாக விளங்கினார்.*

*மாலைதீவு மொழியில் சிங்களமொழி கலந்துள்ளமை பற்றி கட்டுரை எழுதினார். அதேபோன்று தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்கள் பற்றியும், சமஸ்கிருத மொழிக்கும், யாவா மொழிக்கும் இடையிலான தொடர்பு பற்றியும் ஆராய்ந்து எழுதினார். சமஸ்கிருத தமிழ் அகராதி, ஆங்கில தமிழ் அகராதி, யாழ்ப்பாண வரலாறு, குதிரைமலை பற்றிய வரலாறு ஆகியவற்றுடன் பிலிப்டிமெல்லோவின் வரலாறு, கத்தோலிக்க தேவாலயங்களின் வளர்ச்சி ஆகிய நூல்களையும் எழுதினார். கிறிஸ்தவ வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள ஆதியாகமம் பற்றியும் இவரால் ஒருநூல் எழுதப்பட்டது. மேலும், தமிழரின் சாதிப்பாகுபாடு, பழக்கவழக்கங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து சமூகவியல் ஆய்வுநூல் ஒன்றினை எழுதினார். இந்நூல் தமிழரின் தொன்மையான நாகரிகச் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.*

*சைமன் காசிச்செட்டி அவர்கள் புத்தளப் பிரதேச முக்குவ குலத்தவரின் 'உற்பத்தியும் வரலாறும்', 'இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரியங்களும் பழக்கவழக்கங்களும்' ஆகிய கட்டுரைகளை எழுதியதுடன், திருக்கோணேஸ்வர ஆலயத்தின் வரலாற்றைக்கூறும் கவிராஜவரோதயரின் புராணப்பாடல்களை ஆங்கிலமொழியில் மொழிபெயர்த்து 1831இல் வெளியிட்டார். திருவாதவூர்புராணம், அல்லி அரசாணிமாலை, காசிக்காண்டம் ஆகிய நூல்களிலிருந்து சிலபகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். கற்பிட்டியில் இலவசப் பாடசாலை ஒன்றினைக் கட்டிக்கொடுத்ததுடன் தேவாலயமொன்றையும் கட்டிக்கொடுத்து சமயப்பணி புரிந்தார். 'உதயாதித்தன்' என்னும் மாதச்சஞ்சிகையை ஓராண்டுக்கு மேலாக வெளியிட்டார். இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் 'சிலோன் மகசின்' என்னும் இதழில் வெளிவந்துள்ளன. 1859இல் தமிழ் 'புளூராக்' வெளியிடப்பட்டது. பல்வேறு அறிஞர்களும் பாராட்டும் வண்ணம் தேசியப்பணியுடன் தமிழ்ப்பணியும் புரிந்த இவரது 200வது ஆண்டு நினைவுதினம் இவ்வாண்டு கொழும்பு தமிழ்ச்சங்கத்தினரால் சிறப்பாகக் கொண்டாட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.*

*– சொற்கோ –*



இரண்டாம் வருடம் ஆரம்பநெறி "C"
ஆசிரிய மாணவர்கள்



இரண்டாம் வருடம் ஆரம்பநெறி "D"
ஆசிரிய மாணவர்கள்



# தமிழ்மொழியின் சிறப்பு

ச.தயாநிதி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

தமிழர்களின் பெருமையை உலகறியச் செய்வது தமிழ்மொழியாகும். ஒவ்வொரு இனத்திற்கும் அதன் தனித்துவத்தை வெளிப்படுத்த உதவுவது மொழியாகும். அந்தவகையில் பண்டைக் காலத்திலிருந்து தமிழ்மொழி சிறப்புப்பெற்று விளங்குகின்றது. இவ்வாறு மிகத்தொன்மையான மொழியாகத் தமிழ்மொழி விளங்குகின்றது என்பதைப் பின்வரும் பாடல் ஆதாரப்படுத்துகின்றது.

*"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே*
*வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி"*

பிள்ளையானது ஆரம்பத்தில் தாய்ப்பாலினை உணவாக உட்கொள்வதனால் நோய் எதிர்ப்புச்சக்தியைப் பெற்று ஆரோக்கியமாக வாழுகின்றது. அதேபோன்று தமிழ்மொழியைத் தெளிவுறக் கற்றுத் தமிழ்ப்பண்பாட்டினைப் பேணி வாழ்கின்ற ஒருவன், பல்வேறு வகையான செல்வங்களைப் பெற்று வாழ்கின்றான். தமிழர்களின் வாழ்விற்கு அர்த்தம் கூறும் தமிழ்மொழியானது அமுதமாக விளங்குகின்றது. இதன் சிறப்புப்பற்றிக் கூறும்போது,

*"தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"*
என்னும் பாரதிதாசனது பாடலடிகளையும்

*"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமுதம் என்றாலும் வேண்டேன்"*

என்ற பட்டுக்கோட்டையாரின் பாடலடிகளையும் குறிப்பிடலாம். தமிழ்மொழியானது பழைமைக்குப் பழைமையுமாய், புதுமைக்குப் புதுமையுமாய் தன் இயல்பு பிழறாது பல நூற்றாண்டுகளாக உலவி வருவது குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பாகும். எமது நாட்டில் மட்டுமன்றி உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற மக்களிடையே எமது மொழி பிரபல்யமாய் அமைந்துள்ளது. உலகப்பொது மேடையிலே தமிழ் இனத்தின் பெருமையை நிலைநாட்டுவது தமிழ்மொழி என்றால் மிகையாகாது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம்பெருங்காப்பியங்கள் தமிழ்மொழியின் அணிகலன்களாக விளங்குகின்றன.

ஒரு மொழியின் தோற்றம், வளர்ச்சிக்குரிய வழிமுறைகளை விளக்கி நிற்கும் தன்மையால் முதன்மைபெறும் மொழியாகத் தமிழ்மொழி விளங்குகின்றது. அமிழ்தினும் இனியதாகிய மொழியானது அழிக்கப்படாமல் இருப்பதற்கும், வளர்வதற்கும் காரணம் அது இன்பவடிவமாகவும், அன்பு வடிவமாகவும் இருப்பதாகும். பன்னெடுங் காலத்துக்கு முன்னே தன்னகமாக இந்தியாவைக் கொண்டிருந்த தமிழ்மொழி இன்று உலகமெல்லாம் பேசப்படும் மொழியாக உருவெடுத்துள்ளது. இறைவன் அளித்த இத்தமிழ் செந்தமிழாகவும், தூதுகண்ட பைந்தமிழாகவும் வைகையிலே எதிரேறிய இன்றமிழாகவும் போற்றப்படுகின்றது. அது மட்டுமன்றித் தமிழ்மொழியானது குன்றாத இளமையும், குறையாக ஊக்கமும் மிகுந்து விளங்குகின்றது.

மொழியின் அமைப்பையும், மக்கள் உலக இயற்கைகளையும் திறம்பட விரித்துரைத்த "தொல்காப்பியம்" போன்ற மிகப்பழைய நூலை நமது செந்தமிழிலன்றி வேறு மொழிகளில் காணமுடியாது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் எடுத்து விளக்கிய திருக்குறள், நாலடியார் போன்ற அரும்பெரும் நூல்கள் நம் செந்தமிழ் மொழியில் மட்டும்தான் உள்ளன. உலக இயற்கை பிறழாது பாடிய "பத்துப்பாட்டு, எட்டுத்தொகை" முதலான சங்கத்தமிழ்ப்பாடல்களுக்கு நிகரானவை வேறெங்குமில்லை. தேவாரம், திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவை, பெரியபுராணம் என்னும் தெய்வத்தமிழ் நூல்கள் உருவாகுவதற்குத் தமிழ்மொழியே வழிசமைத்தது.

பலமொழி பயின்ற மேல்நாட்டவர் பலர் 'இனிமைக்குத் தமிழ்மொழி' என்று இயம்பியுள்ளதைக் கண்டு பெருமையடைகின்றோம். தமிழில் இல்லாத பொருள் இல்லை. வேறு மொழிகளுக்கு உள்ளது போல் சொற்பஞ்சமோ, பொருட்பஞ்சமோ எம் இனிய தமிழ்மொழிக்குக் கிடையாது. கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்

காலத்தில் பாண்டிநாட்டில் சமணமும், பௌத்தமும் நிலைகொண்டிருந்த வேளையில் ஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு வரவழைத்து மங்கையற்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவத்தையும் தமிழையும் வாழவைத்த வரலாறு நாடறியும். அங்கும் தமிழ்மொழியே பாண்டியனது வெப்புநோயைத் தீர்த்தது. அனல்வாதம், புனல்வாதம் ஆகியவற்றிலும் வென்றது.

இவற்றிலிருந்து தமிழ்மொழியின் சிறப்புப்பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது. தமிழ்மொழி எங்கள் தாய்மொழி. அதன் சிறப்பை, புகழை பல்லாண்டு காலம் பாடலாம். பல மொழிகளைப் படித்த பாரதி, *"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்"* எனக் கூறுவதிலிருந்து தமிழ்மொழியின் சிறப்பை அறியமுடிகின்றது.

## *கலாசாலை வரலாற்றில்... (1)*

- *வள்ளல் சேர்.பொன்.இராமநாதன் அன்பளிப்பாகக் கொடுத்த 25 ஏக்கர் பரப்பளவையுடைய சத்தியாமா தோட்டத்தின் ஐந்து ஏக்கரில், 1921ஆம் ஆண்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுப் பூர்த்தியானபின், 1923ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பிரதேசத்தின் முதலாவது அரசினர் ஆசிரிய கலாசாலை தொடங்கப்பட்டது.*
- *அது யாழ்ப்பாண ஆசிரிய கலாசாலை, கோப்பாய் என்ற பெயருடன் இயங்கியது.*
- *ஆசிரிய கலாசாலையின் தென்புறத்தே தனியாக ஒதுக்கப்பட்ட இரண்டு ஏக்கர் காணியில் சாதனா பாடசாலை இயங்கியது. ஆசிரிய கலாசாலை மாணவர்கள் அங்குதான் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட்டனர். பல ஆண்டுகள் இவ்வழக்கம் பின்பற்றப்பட்டது. பின்னர் பல பாடசாலைகளுக்கும் ஆசிரிய மாணவர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர்.*
- *ஆசிரிய கலாசாலைகளுக்கான பிரவேசப் பரீட்சைகள் மூலமே அப்போது மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். ஆரம்ப காலங்களில் மாணவர் எண்ணிக்கை குறைவாகவிருந்தது. மாணவர் அனைவரும் ஆண்களாகவும் இருந்தனர்.*
- *கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முதலாவது அதிபராக திரு. அருணாசலம் பொன்னையா அவர்களும், உபஅதிபராக திரு. சி.க. இராசசிங்கம் அவர்களும், சாதனா பாடசாலைத் தலைமையாசிரியராக திரு. சி.வைரமுத்து அவர்களும் பணியாற்றினர்.*
- *கொழும்பு, கல்முனை, நாவலப்பிட்டி, திருகோணமலை உட்பட யாழ்ப்பாணப் பிரதேசத்து மாணவர்களும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சிபெற்றனர்.*
- *"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுகுக" என்பதே அப்போதைய கலாசாலை மகுட வாசகமாயிருந்தது.*
- *சிறிய அளவிலான வருடாந்த சஞ்சிகையானது இடைக்கிடையே வெளிவந்துள்ளமையை அறியமுடிகிறது. 1929இல் சுன்னாகம் ரி.எம்.அச்சகத்தில் உருவாகி 64 பக்கங்களில் மாணவர் சஞ்சிகை வெளியீடு என்ற பெயரில் வருடாந்த சஞ்சிகை வெளிவந்துள்ளது. அதில் வித்துவான் ந.சி.சுப்பையாபிள்ளை, மா.பீதாம்பரப்பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சி.தா.சிதம்பரப்பிள்ளை, பொ.கிருஷ்ணபிள்ளை, இ.குமாரசாமி போன்ற அறிஞர்களது கட்டுரைகள் இடம்பிடித்திருந்தன.*
- *பண்டிதர் ம.வே.மஹாலிங்கசிவம் அவர்கள் விரிவுரையாளராக இங்கு கடமையாற்றினார்.*
- *1924இல் 22பேரும், 1925இல் 30பேரும், 1926இல் 25பேரும், 1927இல் 19பேரும், 1928இல் 38பேரும், 1929இல் 31பேரும், 1930அவட 39பேரும், 1931இல் 34பேரும் கற்றுத் தேறினார்களெனப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.*
- *29.05.1930இல் சுவாமி விபுலாநந்தர் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகைதந்து 'சர்வகலாசாலை' பற்றி உரைநிகழ்த்தியுள்ளார். அதேபோன்று ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் வித்யாகர்த்தராகிய கொட்விறே அவர்கள் 01.12.1930 வருகை தந்திருந்தார்.*
- *ஆசிரிய கலாசாலையிற் பயிலும்போதே யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கப் பரீட்சைகளுக்குத் தோற்றும்வண்ணம் ஆயத்தங்களும் செய்யப்பட்டன. பலர் அப்பரீட்சைகளுக்குத் தோற்றியுள்ளனர்.*
- *1947ஆம் ஆண்டளவில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மகளிர் மாத்திரம் பயிற்சி பெறுவதற்கான இடமாயிற்று. இதுவரைகாலமும் ஆண்களுக்காக இயங்கிய கலாசாலை கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலை ஆயிற்று.*



# விபுலாநந்த அடிகள் தந்த யாழ்நூல்

செல்வி சந்தனா பத்மநாதன்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'C'.

*"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ*
*வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ*
*வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல*
*உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"*

என்று தொடரும் பாடல் அடிகள் மூலம் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்தவர் விபுலாநந்த அடிகள். இவர் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வித்தகராக விளங்கினார். தமிழுலகுக்கு யாழ்நூலைத் தந்த பெருமை இவருக்குரியதாகும்.

தமிழிசை பற்றி நடந்த முக்கிய ஆராய்ச்சிகளின் பெறுபேறுதான் விபுலாநந்தரின் யாழ்நூல். யாழ்நூலை உருவாக்க முன்னரேயே அவர் இசை பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தமையை அவரது இசை பற்றிய கட்டுரைகள் உணர்த்துகின்றன. வங்கியம், சங்கீத பாரிஜாதம், குழலும் யாழும், இயலிசை நாடகம் போன்ற கட்டுரைகள் இசை பற்றிச் சிந்தித்தமைக்கு உதாரணங்களாகும். இக்கட்டுரைகளினூடாக வளர்ந்து வந்த இசை பற்றிய அவரது கருத்தே யாழ் நூலாக முழுமை பெற்றிருக்க வேண்டும்.

யாழ் நூலைப் புரிந்துகொள்ள மூன்று வகை அறிவு தேவைப்படுகின்றது. இசை அறிவு, கணித அறிவு, தமிழ் அறிவு ஆகியவைகளே அவையாகும். இசையைக் கணிதமொழியில் விளக்க முனைந்த விபுலாநந்த அடிகளார் தமிழிசைக்கு அளித்த பங்களிப்பு இசைக் கணிதமே எனலாம். இந்த யாழ்நூலில் அடிகளாரின் தமிழ்ப்புலமை விளங்குவதைக் காணலாம். சங்க இலக்கியங்களையும், சிலப்பதிகாரத்தையும் தேவாரங்களையும் ஆதாரமாகக் கொண்டு தமிழரின் இசைப்பாரம்பரியத்தைத் தொடர்ச்சியாக இனங்காண முயலுகின்றார் அடிகளார். பாயிரவியல், யாழுறுப்பியல், பாலைத்திரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒழிபியல், சேர்க்கை என்ற பகுதிகளாக இந்நூல் வகுக்கப்பட்டுள்ளது.

பாயிரவியலில் தனது நோக்கம் கூறிய விபுலாநந்த அடிகள், யாழுறுப்பியலில் பண்டைய தமிழ் இலக்கியங்களை ஆதாரமாகவும், தாம் கற்ற மேற்குநாட்டு வரலாறுகளைத் துணையாகவும் கொண்டு பண்டைத் தமிழர் மத்தியில் வழக்கில் இருந்த யாழ்களை மீளுருவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுகின்றார். வில்யாழ், பேரியாழ், மகரயாழ், சீறியாழ் எனப்படும் செங்கோட்டு யாழ், சகோடயாழ் ஆகிய யாழ் வகைகளை வெளிக் கொணர்கிறார். பௌதிகவியலுக்கு ஏற்ப யாழின் நரம்பின் அமைப்புகள் கூறப்பட்டு ஒலிகள் அளக்கப்படுகின்றன. இசை நரம்புகளின் சிற்றெல்லை, பேரெல்லை என்பன கூறப்படுகின்றன.

பாலைத்திரிபியியலில் பாலையின் வகைகள் செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை என வகுக்கப்பட்டு சகோட யாழுக்கு இசை கூட்டும் முறையும் கூறப்படுகிறது. சிலப்பதிகாரத்து அரங்கேற்று காதையில் யாழாசிரியனது அமைதி கூறிய செய்யுட்பாகத்துக்கு உரை கூறுமுகமாகத்தான் பண்டைய யாழ் பற்றித் தன் கருத்தை விபுலாநந்த அடிகள் உரைக்கின்றார்.

பண்ணியல் என்னும் அதிகாரத்தில் பண்களைப் பற்றிய தன் கருத்துக்களை முன்வைக்கின்றார். பிங்கலந்தை, சேந்தன், திவாகரம், சூடாமணி ஆகிய நிகண்டு நூல்களிலின்றும் சூத்திரங்கள் காட்டப்படுகின்றன. நூற்றுமூன்று பண்களைக் குறிப்பிட்டு அவற்றில் பாலை நிலைகளைச் சுருதி வீணையிலமைத்துக் காட்டும் முயற்சி இவ்வதிகாரத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வதிகாரத்தில் பழந்தமிழிசை மரபிற்கும், வடநாட்டிசை மரபிற்குமிடையே அமைந்த தொடர்பு விளக்கப்படுகிறது.

தேவாரவியல் என்னும் அதிகாரத்தில் நாலாம் திருமுறைக்கு யாப்பமைதி கூறப்படுகிறது. தேவாரப் பண்ணின் உருவங்கள் ஆராயப்படுகின்றன. இந்தளம், காந்தார பஞ்சமம், நட்டராகம், பஞ்சமம், தக்கராகம், தக்கேசி, கௌசிகம், செவ்வழி, செந்துருத்தி, காந்தாரம், குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி முதலிய பண்கள் பற்றிக் கூறப்படுகின்றன.

ஒழிபியலில் கணிதத்திற்கும் இசைக்கும் உள்ள தொடர்பு விளக்கப்படுகிறது. இசைக் கணிதம் இதில் வெளிப்படுத்தப்படுகிறது. அத்தோடு குடுமியாமலை இசைக் கல்வெட்டுப்பற்றி விளக்குவதுடன் தமிழிசையின் சுருக்கமான வரலாறும் உரைக்கப்பட்டுள்ளது.

இறுதியாக, சேர்க்கையில் தேவார இசைத்திரட்டும், இசைநாடகச் சூத்திரங்கள் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன. அடிகளார் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள், ஆற்றிய சொற்பொழிவுகள் முதலியவற்றிலிருந்து பொருத்தமான பகுதிகள் யாழ்நூலை அலங்கரிக்கின்றன. இசை நூலிலுள்ள ஓசை நயம்மிக்க கவிதைகளும், இனிமையான மொழிபெயர்ப்புக்களும், கற்பனை வளம் நிறைந்த செந்தமிழ்ச் சொற்றொடர்களும் படிக்கப் படிக்க இன்பம் தருவன.

உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை என்னும் ஏழிசையோசையின் சிறப்புக்களும் தனித்தன்மையும் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன. இசை நுணுக்கம் தெரியாதோரும் படித்து இன்புறப் பல பகுதிகள் உண்டு. உதாரணத்துக்கு ஒன்று பின்வருமாறு,

*'இன்பத்திலும், துன்பத்திலும் பாட்டு உதித்து மனதிற்கு ஆறுதலளிக்கின்றது. இனபந்துய்த்த உள்ளத்தினின்று மலர்ச்சியும், உயர்ச்சியும் தோன்றுவன. துன்பம் தோய்தலினாலே மனத்தில் அசைவும், கலக்கமும் ஏற்படுவன. மலர்ச்சி, உயர்ச்சி, அசைவு, கலக்கம் என்னும் நான்கிலும் நின்று உவகை, பெருமிதம், இளிவரல், வெகுளி என்னும் நான்கும் தோன்றுவன''.*

யாழ்நூலில் ஒவ்வொரு வகையான யாழின் உருவப்படங்களும் தரப்பட்டிருப்பது இன்னொருவகைச் சிறப்பாகும். அத்துடன் நரம்புகட்டுதல், முறுக்காணி அமைத்தல், ஒற்றுறுப்பு அமைத்தல் ஆகியவற்றை அழகாகக்கூறி யாழிலே இசை கூட்டும் முறையையும் சொல்கிறார்.

தமிழ் நிகண்டு நூல்கள், சங்க இலக்கியங்கள், வடமொழி நூல்கள் ஆகியவற்றிலுள்ள யாழ் பற்றிய குறிப்புக்களோடு பிறதேசங்களிலும் தமிழ்க் குலத்தார் வாழ்ந்து நாகரிகம் பரப்பினார்கள் எனவும், அந்நாடுகளில் எல்லாம் யாழ்க்கருவியும் போற்றப்பட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்நூலில், இலண்டன் மாநகர்ப் பழம் பொருட்காட்சிச்சாலை கல்லோவியத்தில்,

> "பிரித்தானிய காட்சிச் சாலையில் இடம்பெற்றுள்ள யாழ்"
> "பக்தாத் நகர காட்சிச்சாலையிலுள்ள யாழ்"
> "சென்னை மாநகர்ப் பழம்பொருட் காட்சிச்சாலையிலுள்ள யாழ் ஓவியங்கள்"
> "எகிப்திய பிரமிட் கோபுரத்தில் உள்ள யாழ் ஓவியம்"

பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. இப்படியெல்லாம் போற்றுதலுக்கும் பெருமதிப்புக்கும் உரிய இசைக்கருவி மறைந்ததை எண்ணி மனம் கவல்கின்றார் அடிகளார். அக்காலத்தில் பல்வேறு இசைக்கருவிகள் இருந்தபோதும், விபுலாநந்தர் சிலப்பதிகாரத்திலே வரும் யாழ் கருவியை ஆராய்ந்து அக்கருவிக்கு வடிவமும் வண்ணமும் கொடுத்து கருவியைப் புதிதாக உருவாக்கி இசைநூலையும் அரங்கேற்றினார்.

பண்டைய தமிழர் இசைக்கருவிகளையும் இசையையும் வெளிக் கொணர்வதும், தமிழிசை வரலாற்றை விளக்குவதும், இசை ஆராய்ச்சிக்கு இன்றியமையாத கணக்கு முறைகளை கணித மூலம் விளக்குவதும் யாழ்நூலின் நோக்கங்கள் என நாம் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

தமிழரின் தனித்துவம் பற்றிய நோக்கைக் கொண்டிருந்த விபுலாநந்த அடிகளார் தமிழரின் தனித்துவம் எனக் கருதப்பட்ட பண்ணிசையை வெளிக் கொணர்ந்தமையும், பழைய இசைக்கருவிகளை இலக்கிய உதவி

கொண்டு மீளுருவாக்கம் செய்தமையும், தமிழ் இசைக்குச் செய்த பணிகளாகும். சிறப்புவாய்ந்த 'யாழ்' எழுப்பும் ஒலி தமிழ் வழங்கும் இடமெலாம் ஒலிக்க வேண்டுமானால் யாழ்நூல் என்னும் இனிய நல்லிசை நூல் வலம்வர வேண்டும். யாழ்நூலை நன்கு பயின்று மீண்டும் தமிழ் ஒலிக்கும் இடமெல்லாம் 'யாழ்' ஒலிக்க வகை செய்வது தமிழர்களின் கடப்பாடாகும்.

உசாத்துணை நூல்கள்:-

1. சுவாமி விபுலாநந்தர் காலமும் கருத்தும்
2. உள்ளக்கமலம்
3. விபுலாநந்தத்தேன்

## உடுமலை நாராயணகவி



உடுமலை நாராயணகவி (1899-1981) தமிழ்த் திரையுலகில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாகக் கவிதை தந்தவர். சமூக சீர்திருத்தக் கருத்துகளுக்கு முதன்மைதந்து கவி படைத்தவர். தந்தை பெரியாரின் திராவிடக் கொள்கையினை ஆதரித்து நின்றவர். வாழ்நாள் முழுவதும் நாத்திகராகவே வாழ்ந்தவர். திராவிட இயக்கத்தினர் திரைப்படத் துறையில் இவரை ஊக்குவித்தனர். ஏறத்தாழ 15 ஆண்டுகள் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் கருத்துக்களுக்கு திரைப்படங்களில் பாடல்வடிவம் தந்தவர். 1934-1961வரை அதிகளவிலும் பின்னர் தாம் விரும்பிய தயாரிப்பாளர்களின் படங்களில் மாத்திரமும் பாடல்கள் எழுதியவர். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி, கலைவாணர் ஆகியோரது நட்பைப் பெற்றவர். தமது கொள்கைகளுக்கு உகந்ததாக இல்லாவிட்டாலும் கதாபாத்திரங்களின் தன்மைக்கேற்பத் திரைப்படங்களில் பாடல்கள் எழுதியபோதிலும் இயன்றளவு சீர்திருத்தக் கருத்துக்களை பாடல்களினூடு வெளிப்படுத்தியவர். தமிழ்த் திரையுலகில் முதன்முதலாக கவிஞர்களுக்கு மதிப்பையும் கௌரவத்தையும் தேடித்தந்தவர். 1960களின் தொடக்கத்தில் திரையுலகின் செல்நெறி மாறுபட்டபோது தாமாகவே பாடல்கள் எழுதுவதில் இருந்து ஒதுங்கிக் கொண்டவர். மூன்று நிமிடப் பாடலாயின் மூவாயிரம் ரூபாயும் ஆறு நிமிடப் பாடலாயின் ஆறாயிரம் ரூபாயும் பெற்றுத் திரைக்கவிஞர்களின் தகுதியை வரையறுத்தவர். முதன்முதல் சொர்க்கவாசல் படத்திற்காக ஐம்பதினாயிரம் ரூபாயினை அண்ணா இவருக்குப் பெற்றுக் கொடுத்தார். சாகித்யரத்னா, கலைமாமணி போன்ற விருதுகளுடன் பலமுறை சிறந்த திரைப்படப் பாடலாசிரியர்களுக்கான விருதுகளையும் பெற்றவர். நாடகம், திரைப்படம், வானொலி, பத்திரிகை, சஞ்சிகை, அரசியல் மேடை முதலான பன்முகத் துறைகளிலும் உடுமலையின் கவிதாவீச்சு நிகழ்ந்துள்ளது.

### காலத்தினால் பழையாள்!

எங்கள் தமிழ்மொழிகற் கண்டுநல் கனியுமென்ன
இன்பம் தருவதென்று சொல் சொல் சொல்கிளியே!
எங்கும் புகழ்பெறும் சங்கம் தவழவரும்
பொங்கும் கடலிதென்று சொல் சொல் சொல்கிளியே (எங்கள்)

குள்ளன் அகத்தியமுனி வள்ளல் இலக்கணமாம்
நல்லணி யைப்புனைந்த நங்கை என்பார்
உள்ளம் எனும்விழியில் கொள்ளும் அஞ்சனம் என்றே
எல்லவர்க் கும்எடுத்துச் சொல் சொல் சொல்கிளியே! (எங்கள்)

மேதினிக் கும்பொதுவில் நீதிவ குத்தகுறள்
வேதம்ப டைத்ததென்பர் மேலோர் – நூலால்
கோத கன்றபுலவர் நாவில் நடனமிடும்
நாத வடிவமென்று சொல் சொல் சொல்கிளியே! (எங்கள்)

காலத்தி னால்பழமை கோலத்தினால் இளமை
சாலப் பொருந்தும் தமிழ்த் தாயென் றோதாய்
கூழுக் குப்பாடியதோர் ஏழைக்கிழவி பன்னாள்
வாழக் கனிகொடுத்த செஞ்சொல் சொல்கிளியே! (எங்கள்)

பாச்சி வெண்சோச்சியென்று பாசங்கலந்த அன்பால்
ஆச்சி மொழிந்ததென்று சொல்லாய் பூவாய்!
வாச்ச மனைவிமக்கள் வாஞ்சையுடன் செவியில்
பாச்சும் அமுதமென்று சொல் சொல் சொல்கிளியே! (எங்கள்)

காவியக் கம்பன் இளங் கோவைப் புகழ்வடிவில்
பாவில் காட்டுகின்ற சீரார் செல்வி
காவலர் மூவர்களும் கண்போல் வளர்த்ததமிழ்
நாவினில் வாழ்கவென்று சொல் சொல் சொல்கிளியே! (எங்கள்)

சொல்லப் புரிந்துகிள்ளைப் புள்ளும் உடன்தொடர்ந்து
சொல்லும் மொழியிதென்று சொல் சொல் சொல்கிளியே!
தெள்ளித் தெளிந்தமலர்க் கள்ளும் கரும்பின் – ரச
வெள்ளம் நிகர்த்ததென்று சொல் சொல் சொல்கிளியே! (எங்கள்)



# சிரிப்பின் பயன்கள்

செல்வி செல்லையா
தேவராணி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

உணவுக்குப் பஞ்சம், உடைக்குப் பஞ்சம், உப்புக்குப் பஞ்சம், உறைப்புக்குப் பஞ்சம், இனிப்புக்குப் பஞ்சம் என்றெல்லாம் பல்சுவைப் பஞ்சம் நிறைந்த காலமேயானாலும் இயற்கை மனிதப்பிறவிக்கு மட்டும் சிறப்பாக வழங்கியிருக்கும் பெருங்கொடையான சிரிப்புக்கு இன்னும் பஞ்சம் வராமை நம்பாக்கியமே. எனவே, சிரிக்கக் கூடாதா? ஏன் அதற்குமா கஷ்டம். 'வேறு எந்த ஜீவராசிகளும் செய்ய முடியாத சிறப்பாகும் இந்தச் சிரிப்பு' என்றெல்லவா கலைவாணர் பூரிக்கின்றார். "இடுக்கண் வருங்கால் நகுக'' என இங்கிதமாய் எடுத்துரைக்கின்றது திருக்குறள். ஏன்? இடுக்கண் வராதவிடத்தும் நகுக. ஏனெனில் உடலுக்கும், உளத்துக்கும் நலமளித்துப் புத்தூக்கம் தரும் மாமருந்து சிரிப்பேயாகும். இதனை அன்றாட வாழ்வில் நாம் உணர்கிறோம்.

வாழ்க்கையே பெருங்கலை. அதனைச் சிறப்பிக்கும் மற்றொரு கலையே நகைச்சுவை. எனவேதான் பரந்துபட்ட பல்வேறு கலைகளிலும் நகைச்சுவை அதன் ஈடிணையற்ற தனிச்சிறப்புணர்ந்து இணைந்து நிலவுவதாகின்றது. கல்விக் கலையில் ஈடுபடும் ஆசிரியர்க்கும், மாணவர்க்கும் இதய இணைப்பை ஏற்படுத்தும் அரியசாதனம் நகைச்சுவையே என்றால் மிகையல்ல.

கல்வி புகட்டும்போது வகுப்பில் ஏற்படும் சோர்வுணர்வையும் சலிப்புத் தன்மையையும் நிவர்த்தி செய்து கலகலப்பை ஏற்படுத்தும் சக்தி நகைச்சுவைக்கே உண்டு. பாடக் கவர்ச்சியினையும் வகுப்பின் கட்டொழுக்கையும் நிலைநாட்டுவதற்கு ''சிரிப்பு'' என்னும் சிறப்பு ஆசிரியருக்கு கை கூடிவந்துவிடின், அ∴து ஆசிரியத் தொழிலின் மகத்தான வெற்றி எனலாம். இதனையே ஆசிரியர் இன்முகத்துடனும், இன்சொல்லுடனும் திகழ வேண்டும் எனக் கல்வி உளவியலாளர்கள் வலியுறுத்தியுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

மேலும், ஆசிரியர்கள் கடும் வார்த்தைகளைப் பயன்படுத்துதல், பிரம்பு எடுத்தல், தேவையற்ற முறையில் அமைந்த தண்டனைகளை மாணவர்களுக்கு அளித்தல் போன்ற தவறான வழிகளில் இருந்து ஆசிரிய சமூகத்தைத் திசைதிருப்பி, மாணவ சமூகத்தின் சீரிய வளர்ச்சிக்கு சிரிப்புக்கலை பேருதவி புரிகின்றது.

நகைச்சுவையானது சிறந்த சுவைமிக்க மருந்தென்பதனை ஆசிரியர்கள் மனதிற் கொண்டு செயற்படுதல் இன்றியமையாதது ஆகும். ஏனெனில் எம்மருந்துக்கும் அளவு, நேரம் போன்ற ஒழுங்குகள் உள்ளன. அது மிகினும், குறையினும், மாறுபடினும் பலாபலன் கவலைக்கிடமானதாக அமையலாம். எனவே, நகைச்சுவையைப் பாட போதனையின்போது கையாளும் ஆசிரியர்கள் அதனை நேரமறிந்து, பாடத்தோடு பொருத்தி, மாணவர் மனதை வளப்படுத்துவதாக அமைதல் வேண்டும். அளவுக்கும் எல்லைக்கும் மீறியதாக அமையாமலும் செயலாற்றக் கடமைப்பட்டுள்ளனர்.

பாடவேளை முழுவதுமே நகைச்சுவைத் தன்மையாகக் காணப்படுமேயானால் பாடத்தின் பெறுபேறுகள் பெரிதும் பாதிப்புறக் கூடும். நகைச்சுவையே இல்லாது பாடம் நடாத்துவதாயின் குறிப்பிட்ட பாடம் மாணவர்களுக்கு வறட்சி மிக்கதாயும், கவர்ச்சி அற்றதாயும் அமைந்து இடைஞ்சலையே விளைவிக்கலாம். அத்துடன் குறிப்பாக, ஆசிரியரின் ஆளுமைக்கோர் சவாலாகவும் அ∴து அமைதல் கூடும். நன்கு கற்றிருந்தும், பயிற்சிகள் பல பெற்றும் விளங்குகின்ற பல ஆசிரியர்கள் நகைச்சுவைத்தன்மை கைகூடாமையினால் தம் போதனை முறையில் விரக்தியும் தொழிலில் அக்கறையற்ற தன்மையினதாயும் இருப்பதனை நாம் அறிவோம்.

எப்போதும் சிடுமூஞ்சியான ஒரு புவியியல் ஆசிரியர் இலங்கை எங்கே இருக்கின்றது? என மாணவர்களைப் பார்த்து கடுமையாகக் கேட்டார். மாணவர்கள் பயத்தால் வெலவெலத்தனர். தெரிந்த விடையும் வெளிவரத் தயங்கியது. ஒரு மாணவன் மட்டும் ஆசிரியரின் அதட்டலுக்குப் பயந்து "இலங்கை சுவரில் இருக்கிறது சார்'' என்று உளறிவிடுகின்றான். சிடுமூஞ்சி ஆசிரியரே சிரித்துவிட்டுப் போங்கள் (சுவரில்

இலங்கைப் படம் தொங்கியது உண்மை) என்றார். ஆனால் அச்சிரிப்பு நிரந்தரமானதாக அமைந்து அறிவைத் தெளிவித்து பரஸ்பர உறவை வளர்க்க வேண்டுவதையே கல்வி உலகும் சமூகமும் எதிர்பார்க்கின்றது.

கோழிப்பண்ணை பற்றிப் போதிக்கும் ஓர் ஆசிரியர் மாணவர்களிடம் "கோழிப் பண்ணை ஒன்று வெற்றிகரமாக நடைபெறுவதற்கு மிகவும் அவசியமானது என்ன? என்று கேட்டார். உடனே ஒரு மாணவன் எழுந்து பதிலளிக்கின்றான். "கோழி….சார்" சிரிப்பால் வகுப்பு குலுங்குகின்றது.

சிரிப்புக்கு இடமற்ற கோழிப்பண்ணைப் பாடத்தில் சிரிப்பு புகுந்தமைதான் சிறப்புக்குரியது; சிந்தனைக்குரியது. அந்நகைச்சுவை மாணவர் வாயிலாக அவர்கள் உணராது பிறந்த தனித்துவம் மிக்க ஆக்கம் என்பதனை தெளிவுறுத்தப்பட வேண்டியதாகும். எனவே ஆசிரியர் மட்டுமன்றி மாணவர்களும் சிரிப்புக் கலையுடன் கல்வியில் ஈடுபடும் சுதந்திரம் இடம்பெற வேண்டுமென்பது உணரத்தக்கது.

நகைச்சுவையால் மக்கள் பெறும் கவர்ச்சியும் நலமும் அளப்பரியது. எனவேதான் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் நகைச்சுவைத் துணுக்குகளுக்கும் ஏனைய நகைச்சுவை அம்சங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்க முந்திக் கொள்கின்றன. பண்டைய கூத்துக்கள் மூலம் இன்றைய சினிமாவரை சிரிப்புக்கலைக்கு சிறப்பான இடமளித்து மக்களைத் தம்வசமாக்கி இருப்பதனை ஆசிரிய சமுதாயம் அறியாததா என்ன? கல்வியினூடாக நகைச்சுவை இடம்பெறும்போது சிறப்பாக மாணவர்களது வயது, தரம், பாடத்தின் தன்மை என்பனவற்றை மிகக் கவனமாக மனதிற் கொண்டு மேற்கொள்ளப்படுவதில் நிதானம் வேண்டப்படுவதாகும். கீழ்த்தரமான அல்லது அருவருப்பான அம்சங்களைத் தவிர்த்தல் பயனுடையதாகும். பிற மத, இன, சமூக அம்சங்களை நையாண்டி செய்யும் நகைச்சுவைகள் கல்வி புகட்டலில் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். சிரிப்பின் விளைவாக மகிழ்ச்சி பெறுதல் ஒன்றே நோக்கெனக் கொள்ளுதல் தவறாகும்.

நகைச்சுவை ஒவ்வொருவரது ரசஞானத்தையும் துலங்கச் செய்து, மனதைப் பண்படுத்தி, மானிட வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் சக்தி என்பதனை உணர்ந்து செயலாற்றலே அறிவுடைமை ஆகும்.



ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே! - நீ
ஏன் படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே!
நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே! - நம்
நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே!
நல்லவர்கள் தூற்றும்படி வாழ்ந்துவிடாதே! - நீ
(ஏட்டில்)

மூத்தோர்சொல் வார்த்தைகளை மீறக்கூடாது - பண்பு
முறைகளிலும் மொழிகளிலும் மாறக்கூடாது
மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக்கூடாது - தன்
மானமில்லாக் கோழையுடன் சேரக்கூடாது - நீ
(ஏட்டில்)

துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிடவேணும்
சோம்பலை வெல்லும் திறன் பெற்றிடவேணும்
வம்புசெய்யும் குணமிருந்தால் விட்டிடவேணும் - அறிவு
வளர்ச்சியிலே வான் முகட்டைத் தொட்டிடவேணும் - நீ
(ஏட்டில்)

வெற்றிமேல் வெற்றிவர விருதுவரப் பெருமைவர
மேதைகள் சொன்னதுபோல் விளங்கிடவேணும்!
பெற்றவரின் புகழும் நீ பிறந்தமண்ணின் புகழும்
வற்றாமல் உன்னோடு வளர்ந்திட வேணும் - நீ
(ஏட்டில்)

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
'குமாரராஜா' திரைப்படத்தில்



# பாலர் அபிநயப்பாடல் போதிக்கும் முறைகள்

செல்வி யோன்ரவிராஸ் ஜசிந்தா,
நடனத்துறை,
2ஆம் வருடம்.

அன்பான, நல்ல ஆசிரியர்களிடம் குழந்தைகள் மிகவும் பிரியமாக இருப்பார்கள். குழந்தைகளின் கள்ளங் கபடமில்லாத உள்ளங்களை நன்கறிந்த ஆசிரியர்களும், குழந்தைகளின் எதிர்கால வாழ்வு மிகவும் பிரகாசமாக இருக்க வேண்டும் என்று விரும்பும் ஆசிரியர்களும், குழந்தைகளிடம் அன்பாகவும், ஆசையாகவும் நடந்து கொள்வர். நல்ல கருத்துக்கள் நிறைந்த பாடல்களைக் குழந்தைகளின் தரத்திற்கேற்பத் தெரிவுசெய்து, அதற்கேற்ற வர்ண மெட்டுக்களையும் அமைத்து, அபிநயங்களையும் சேர்த்து, குழந்தைகளுக்குக் கற்பிப்பதால் பேரானந்தமும் திருப்தியும் கொள்வர். அந்த அன்பான ஆசிரியர், குழந்தைகளின் மனோநிலைகளை அறிந்து, அவர்கள் விரும்பும் பாடல்களையும் கற்றுக் கொடுக்கும்போது, குழந்தைகளின் மனதிலே சந்தோசமும், கலையுணர்வும், விவேகமும், சாதுரியமும் பெருகுவதை ஆசிரியர் கண்டு பூரிப்படைவர். இத்தகைய பூரண நிலையை வகுப்பிலே நாம் அவதானித்தால், இதற்கு மூல காரணம் ஆசிரியர் தமது கலையறிவுடன், உளநூல் அறிவையும் கலந்து பிரயோகித்ததன் விளைவே எனக்கணித்துக் கொள்ளலாம். இவ்வாசிரியரின் இந்த வெற்றிக்குக் காரணம் என்ன என்பதை ஆராய்வோம்.

குழந்தைகள் இயல்பாகவே ஆர்வம் உள்ளவர்கள். கள்ளங் கபடமற்ற உள்ளங் கொண்டவர்கள். இவர்களுடைய மனோநிலைகள் அலைபாய்ந்து கொண்டிருந்தாலும், அவர்களது பிஞ்சு உள்ளங்கள் நன்மை தீமை அறியாமல் எதையும் கிரகிக்கும் தன்மை வாய்ந்தனவாக இருப்பது இயற்கை. இத்தகைய கபடமில்லாத உள்ளங்களிலே, விவேகத்தையும் சாதுரியத்தையும் வளர்ப்பதற்கும், அவர்களது குணாதிசயங்களை நல்வழியில் திருப்பி, சிறந்த பிரஜை ஆக்குவதற்கும் கலையுணர்வு ஒரு தலைசிறந்த சாதனமாக அமைகிறது. இக்கலை உணர்வு அக்குழந்தையின் எதிர்கால நல்வாழ்விற்கு வித்திடுகிறது. இத்தகைய கலையின்பமானது அவர்களது நல்ல உளவளத்தினைத் தேவனாக்குகிறது. இன்னும் சொல்லப்போனால், மிருகமும் ஆக்கிவிடுகிறது. தரக்குறைவான இரசிகத்தன்மை மனிதனை மிருகமாக்கி பஞ்சமா பாதகங்களையும் செய்யத் தூண்டுகிறது. ஆகவே, தரமான நல்ல கலையுணர்வைத் தூண்டி, நல்ல கலையின்பத்தை வளரச் செய்து, நல்ல பிரஜைகளாக்குவது ஆசிரியர்களது முக்கிய பணியாகும்.

ஆரம்பப் பள்ளி வாழ்க்கையிலே தரமான இரசிகத் தன்மையை வித்திடுவதற்காக நல்ல கருத்து, சிந்தனை, வர்ணனை, கற்பனைவளம் நிறைந்த பாடல்களை ஆசிரியர் மாணவர்களின் தரத்திற்கு ஏற்பத் தெரிவுசெய்தல் அவசியம். இந்த அபிநயப் பாடல்களைத் தெரிவுசெய்யும் போது குழந்தைகளுக்கு சுவாரஸ்யமான முறையிலே அப்பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்களை அவர்கள் மனதிலே தெட்டத் தெளிவாகப் பதியும்படி, சிறந்த உதாரணங்களுடன் ஆசிரியர் விளக்கம் அளித்தல் வேண்டும். இவ்விளக்கங்களை மாணவர்கள் உணர்ந்து அனுபவிக்கும் படியான வினாக்கள், விடைகள், சம்பாஷணைகள், கருத்துப் பரிமாறல்கள் போன்ற அம்சங்களை ஆசிரியர் மிகுந்த கவனத்துடன் கையாள வேண்டும்.

பாடலுக்கேற்ற இசையமைப்புக் கொண்ட வர்ணமெட்டுக்களை அமைத்து இசை இன்பத்தையும், கவிதை இன்பத்தையும் குழந்தைகள் நுகர்ந்து அனுபவிக்கச் செய்வது ஆசிரியர் கையாள வேண்டிய உத்திகளில் ஒன்று. குழந்தைகளும் அந்த அபிநயப் பாடலை நன்கு விளங்கிப் பாடி அனுபவித்தபின், அதற்கேற்ற முகபாவம் தோற்றுவிக்கும் வழிமுறைகளைக் கையாள வேண்டும். குழந்தைகளிடம் முகபாவத்தைத் தோற்றுவிப்பதற்கு ஆசிரியர் சில தந்திரோபாயங்களைக் கையாள வேண்டும். அத்தகைய தந்திரோபாயங்கள் பின்வருமாறு;

1. அபிநயப் பாடல்களின் சுவாரஸ்யமான கதை விளக்கம்
2. மனதிற் பதியும்படியான வர்ணனைகள்
3. உதாரணங்கள்
4. நடிப்பு
5. மாணவரை இலயிக்கச் செய்தல்
6. மெய்ம்மறந்த நிலையில் இரசிகத்தன்மை ஊட்டல்

7. அவர்கள் விரும்பிய பிடித்தமான பொருள் பொதிந்த பாடல்
8. இலகுவாகப் பாடி இரசிக்கக்கூடிய வர்ணமெட்டு
9. ஆசிரியர்கள் மாணவர்களிடம் காட்டும் அந்நியோன்னியம்
10. ஆசிரியர் காட்டும் கலை விளக்கம்

குழந்தைகளின் கற்றலில் அவர்களின் நாட்டம், ஊக்கம், செயல்கள், அனுபவங்கள் என்பன முக்கியமானவை. குழந்தைகள் விளையாட்டில் விருப்பமுடையவர்கள். விளையாட்டு மூலமே கல்வியளிக்கப்படுகிறது. இதனால் பிள்ளைகளின் உடல், உளம் வளர்ச்சி பெறுகின்றன. அபிநயம், இசை, இயக்கம் என்ற அடிப்படையில் குழந்தைகள் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். எல்லோரும் ஒன்றாகக் கூடியாடி விளையாடுவதால் கூட்டு மனப்பான்மை, மற்றவர்களை மதிக்கும் தன்மை, ஒழுக்கம், கட்டொழுங்கு என்பன இயல்பாகவே குழந்தைகளிடம் ஏற்பட்டு வளருகின்றன.

குழந்தைகளிடம் இயல்பாகவே கற்பனா சக்தியும், இயற்கையான படைப்பாற்றலும் உண்டு. இத்தகைய திறன்களை வளர்த்து விடுவது ஆசிரியரின் கடமையாகும். குழந்தைகளின் ஆளுமை, இயற்கையுடன் ஒன்றியதாக வளர வேண்டும். தன்னுடைய ஆற்றல் எல்லையற்றது என்பதை அவர்கள் உணர வேண்டும். ஆசிரியர் குழந்தைகளிடம் அழகியலைத் திணிக்கக்கூடாது. சூழலிலிருந்து குழந்தை பெற்றுக்கொண்ட அனுபவங்களைச் செய்கைகளினால் வெளிக்கொணரும் சக்தியைப் பெறுகிறது.

இங்கே குழந்தைகளுக்கான பாடல்கள் சில தரப்பட்டுள்ளன. முதலாவது பாடலில் குழந்தை குருவியொன்றை நோக்கிப் பாடுவதாகவும், குருவி, அணில், ஆடு, பசுக்கன்று ஆகியன பிள்ளையோடு உரையாடுவது போலவும் அமைந்த சூழலைக்கண்டு குழந்தைகள் இன்புறுகிறார்கள். ஆதலால், அவர்களுக்கான பாலர் பாடல்கள் அபிநயம் செய்வதற்கு உகந்ததாய் அமைய வேண்டும். ஒரு நடன நிகழ்ச்சியில் பலர் பங்குபற்றக்கூடிய வாய்ப்பினை அளிக்க வேண்டும். இப்பாடல்களைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கும்பொழுது இலகுவான வர்ணமெட்டில், பிள்ளைகளுக்கு கவர்ச்சி ஏற்படக்கூடியவாறு ஆசிரியர் பாடியும், ஆடியும் கற்பித்தல் நன்று.

### பாலர் அபிநயப் பாடல்

*தாளம்:- ஏகம் (திஸ்டநடை)*

ஆகட்டும் ஆகட்டும் கள்ளக் கிருஷ்ணா
அன்னைய சோதைக்குச் சொல்வேன் கிருஷ்ணா
கன்றுக் குட்டியை அவிழ்த்து விட்டவன்
கையைக் கட்டியே அடியும் பட்டவன்

உறியில் வெண்ணெயைத் திருடித் தின்றவன்
உரலிற் கட்டியே அடியும் பட்டவன்

### சிறுவர் அபிநயப் பாடல்

*தாளம்:- ஆதி*

சின்னஞ்சிறு கண்ணன் சிங்கார வண்ணன்
திருட்டுகளும் புரட்டுகளும் செய்வதில் மன்னன்
(சின்)

வெண்ணெயும் பாலும் திருடித் தின்பானாம்
வெறுஞ் சட்டியானால் போட்டுடைப்பானாம்
கண்ணாலே ஒன்றையும் காணாதவன் போலவே
அன்னைமுன் நாடகம் ஆடிக் காட்டும் மாயனாம்
(சின்)

கன்னியரைக் கண்டால் கண் அடிப்பானாம்
பின்னலைப் பின்னால் பிடித்திழுப்பானாம்
என்னடி கண்ணம்மா எங்கே போறாய்? சொல்லம்மா
இனிக்கவே ஒன்றுதா ஏனோ கெஞ்சி நிற்பானாம்
(சின்)



# பரீட்சைகளை எதிர்கொள்ள...

திரு. சி.வின்சன்ராஜ்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

பரீட்சைகள் அவசியம்தானா? கல்வி கற்பவர் கிரகித்தவற்றை அளவிடுவதற்குப் பரீட்சைகள் சரியான அல்லது காத்திரமான முறைகளா? நீண்டகாலமாகக் கற்ற கல்வியை, குறுகிய காலத்தில் நடத்தப்படும் பரீட்சைகள் துல்லியமாக மதிப்பீடு செய்ய முடியுமா? மேற்கூறப்பட்ட கேள்விகள் பரீட்சை தொடர்பாக நீண்டகாலமாக எழுப்பப்பட்டு வந்தாலும், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பரீட்சைகள் இன்றும் மிக முக்கியமானதாக இருப்பதை மறுக்க முடியாது.

கற்றலினதும் கற்பித்தலினதும் தராதரத்தை உயர்த்த வழிவகுக்கும் கல்வியினை மதிப்பீடு செய்வதற்குப் பரீட்சைகள் சரியான மதிப்பீட்டுக் கருவிகளாக இல்லாதபோதும், தற்போது கைவசமுள்ள மதிப்பீட்டுக் கருவிகளில் பரீட்சைகள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. ஆகவே, பரீட்சைகள் தவிர்க்க முடியாதவை என்று கூறலாம். அதாவது, விரும்பியோ, விரும்பாமலோ அவற்றுக்கு முகங்கொடுத்தேயாக வேண்டும்.

கல்வியியலாளர்களின் கருத்துப்படி எல்லாப் பரீட்சார்த்திகளுமே ஏதோவொரு விதத்தில் பரீட்சைகளினால் பதட்டப்படுகிறார்கள். பரீட்சார்த்திகளின்மேல் பரீட்சைகள் பலவிதமான அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன. இவைகள் உடல் அழுத்தங்களாகவும், மன அழுத்தங்களாகவும் அமையும். மனப்பதட்டம், பரீட்சை பற்றிய பயம், மன உளைச்சல் போன்ற மன அழுத்தங்களினாலும் போதிய உறக்கமின்மை, ஓய்வின்மை, படபடப்பு போன்ற உடல் அழுத்தங்களினாலும் பாதிக்கப்படுகின்றனர். இவைகள் ஒருவிதமான தளர்வுநிலைக்கு உடலையும், மனத்தையும் இட்டுச் செல்லக்கூடியனவாகும். ஆயினும், பரீட்சைகள் தேவையற்றது எனக்கூறி ஒதுக்கிவிடவும் முடியாதுள்ளது.

**பரீட்சைக்காக எதிர்கொள்ளும் வழிகள்**

கற்ற கல்வியினை மதிப்பீடு செய்வதற்குப் பரீட்சைகள் போதுமானதாக இல்லாதபோதும், பரீட்சைகள் தவிர்க்க முடியாதவையாக உள்ளன. அவற்றை ஓரங்கட்டிவிட முடியாது. பரீட்சைகள், ஒருவர் பெற்றுவந்த அளவினைக் குறித்த நேரத்திற்குள் வெளிப்படுத்தும் திறனையே அடிப்படையாகக் கொண்டுள்ளன எனக்கூறலாம். எனவே, பரீட்சைகளை எதிர்கொள்வது பற்றிய கருத்துக்களை நோக்குவோம்.

- பரீட்சைக்கு முன்னர்

*I. திட்டமிடுதல்*

பரீட்சையின் காலம், பரீட்சை நேரசூசி என்பவற்றின் அடிப்படையில் நேர அட்டவணைபோட்டுப் பாடங்களை மீளாய்வுசெய்து படித்தல் ஒவ்வொரு பாடங்களுக்கும் உரிய நேரங்களைச் சரியாகப் பயன்படுத்துதல், கடந்தகால மாதிரி வினாக்களுக்கு விடையளித்துப் பயிற்சிபெறல், சந்தேகங்கள், தவறுகளை ஆசிரியரின் உதவியுடன் திருத்திக்கொண்டு தெளிவுபெறல்.

*II. நம்பிக்கை கொள்ளுதல்*

நான் பரீட்சையை எதிர்கொள்ளுவேன்; படித்த பாடங்களில் தெளிவு உள்ளது என நம்பவேண்டும். தேவையற்ற பயங்களை நீக்கி உறுதியுடன் இருத்தல். "என்னால் முடியும்" எனச் சொல்லிக்கொள்ளுதல்.

*III.பதட்டத்தைப் போக்குதல்*

பரீட்சையினால் ஏற்படும் பதட்டத்தைப் போக்க மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சிகளைச் செய்யலாம். சாதாரணமாக, ஓய்வாக இருத்தல், விளையாடுதல், உடற்பயிற்சி செய்தல் என்பனவும், மேலும் சுவாசப்பயிற்சிகள், சாந்த வழிமுறைகள், மந்திர உச்சாடனம், தியானம் போன்ற பயிற்சிகளையும் செய்யலாம்.

- பரீட்சையின் போது

I. குறித்த நேரத்துக்கு முன்பாக பரீட்சை மண்டபத்துக்குச் சென்று உரிய இடத்தில் ஓய்வாக இருத்தல்

II. பரீட்சைத்தாளை பூரணமாகவும் தெளிவாகவும் வாசித்தல். அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க வேண்டும். எத்தனை கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்? கட்டாயமாக விடையளிக்க வேண்டிய வினாக்கள் எவை? என்பவற்றையும் வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். முதல் வினா தொடக்கம் இறுதி வினாவரை வாசிக்க வேண்டும். ஏனெனில் இடையிலும் இறுதியிலும்கூட நன்கு பதிலளிக்கக்கூடிய வினாக்கள் அமைந்திருக்கலாம்.

III. வினாக்களைத் தெரிவுசெய்தல்

பதில் எழுதக்கூடிய வினாக்களைத் தெரிவுசெய்தல் பரீட்சையின்போது மிகவும் அவசியமானதாகும். இதன்போது சந்தேகமானவை, மயக்கம்தரும் வினாக்கள் என்பவற்றைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

IV. நேரம் குறித்தல்

வினாக்களைத் தெரிவுசெய்தபின், விடை எழுதுவதற்கான நேரத்தைக் கவனமெடுத்துக் கொண்டு ஒவ்வொரு கேள்விகளுக்கும் நேரம் ஒதுக்கி விடைகளை எழுதவேண்டும்.

V. விடைகளை எழுதுதல்

இலகுவாகவும், எளிதாகவும் எழுதக்கூடிய வினாக்களுக்கு முதலில் விடைகளை எழுத வேண்டும். கற்றுக் கடினமானவற்றைப் பின்னர் எழுதிக்கொள்ளலாம். விடைகளைப் பொருளுள்ளதாகவும் தெளிவாகவும் எழுதவேண்டும். வினாக்களுக்குரிய இலக்கங்களைச் சரியாக இடவேண்டும். உரிய படங்கள், விளக்கக் குறிப்புக்களையும் விடைகளுடன் தகுந்த முறையில் இணைக்க வேண்டும். விடை எழுதுவதற்குப் பக்கத்திலேயே படங்கள் கீறுவதும், குறிப்புக்களை எழுதுவதும் திருத்துவதற்கு இலகுவாக அமையும். விடைகள் எழுதி முடிந்ததும் அதற்கு அடிக்கோடிட்டு அந்த விடையை நிறைவுசெய்ய வேண்டும்.

VI. விடைகள்

விடைகள் சரியான இலக்கமிடப்பட்டதாகவும், தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டதாகவும், பொருளுள்ளவையாகவும் இருக்க வேண்டும். முதல் வினாவுக்கு எழுதப்பட்ட விடையின் தெளிவான கையெழுத்துப் போலவே இறுதியாக எழுதப்படும் வினாவுக்கான விடையின் கையெழுத்தும் இருக்க வேண்டும். இல்லையேல் உங்கள் பதட்டத்தை அது வெளிப்படுத்துவதாக அமையும். விடைத்தாள்களை ஒழுங்குபடுத்தி அடுக்கி, சரிபார்த்துக் காட்டிய பின் அல்லது 'கிளிப்'படித்து இணைத்தபின், மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டால் பரீட்சைகள் பற்றிய பயங்கள் பரீட்சார்த்திகளிடமிருந்து நீங்குவதுடன், பெரும் சுமையாக இருக்கும் பரீட்சைகள் சுலபமாக மாறிவிடும். பரீட்சைப்பொருள் (விடயம்) தொடர்பான பூரண அறிவும், உடல் உளரீதியான தயார்ப்படுத்தலும் இருக்கும்போது பரீட்சைகள் இலகுவாகுவதுடன் அதில் வெற்றிபெறுவதும் உறுதியாகும்.

**ஆக்கத்துக்கு உதவியவை:-**

1. கல்வியில் முன்னேற, திருமதி பி.எவ்.சின்னத்துரை
2. இன்று ஒரு தகவல், இந்திய வானொலி நிகழ்ச்சி

## கோள்களிலே...

| | | |
|---|---|---|
| மிகப்பெரியது | - | வியாழன் (Jupitor) |
| மிகச்சிறியது | - | புதன் (Mercury) |
| மிகவும் குளிரானது | - | புளூட்டோ (Pluto) (இது தண்ணீரும் மீதேன் வாயுவும் சேர்ந்த பனிப்பந்து போன்ற புதிரானதோர் கோள்) |
| மிகவேகமானது | - | புதன் (Mercury) |
| சூரியனுக்கு மிக அண்மையில் உள்ளது | - | புதன் (Mercury) |
| பூமிக்கு மிக அண்மையிலுள்ளது | - | வெள்ளி (Venus) |
| சூரியனுக்கு மிகத் தொலைவிலுள்ளது | - | புளூட்டோ (Pluto) |
| மிகவும் பிரகாசமானது | - | வெள்ளி (Venus) |



# வருங்கால சமுதாயத்தை வளமாக்குவோம்

திரு. பத்மநாதன் பிரதாபன்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'A'.

செய்யும் தொழில்களையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது வையத்தை வாழவைக்கின்ற உழவுத்தொழிலுக்கு அடுத்தபடியாக இடம்பெற்றிருப்பது ஆசிரியத்தொழிலே ஆகும். உழவன் நல்ல பயிர்களை உருவாக்கி வளப்படுத்தி நல்ல பயனை விளையச்செய்து உலகிற்கு உணவூட்டுவது போல, வருங்கால சமுதாயத்தின் அல்லது உலகத்தின் வளர்ச்சிக்கு மூலாதாரமாக விளங்குபவர்கள் ஆசிரியர்களே ஆவர்.

ஆசிரியர் என்போர் மாணவரிடத்தேயுள்ள அறியாமையிருளகற்றி, அறிவொளியூட்டி அவர்களை நல்லவர்களாக, வல்லவர்களாக, தமக்கும் உலகிற்கும் பயன்பட வைப்போராவர். மாணவர் என்போர் மாண்பினை ஆக்கிக் கொள்பவர்களாவர். நாம் எப்படியாவது வளரவேண்டும்; நாம் வளர்வதற்கு உறுதுணையாக இருக்கும் பெற்றோர்கள், அயலவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், நாட்டவர்கள் எல்லோரும் நமக்கு வழிகாட்டிகளாகவும், நம்மை நெறிப்படுத்துபவர்களாகவும், நமது உயர்வு கண்டு மகிழ்பவர்களாகவும் இருக்கின்றார்கள்; அவர்களது வழிகாட்டலிலே, நெறிப்படுத்துதலிலே, ஆளுமையிலே, தாமும் இணைந்து வளம்பெற வேண்டும் என்று அவாவிநிற்பர். "புகைபுக முடியாத இடத்திலும் அறிவுபுகும்." கள்ளம், கபடம், வஞ்சகம், சூது, பொறாமையற்ற வெள்ளையுள்ளங்களிலே நல்ல கருத்துக்களை விதைக்கும்போது சகல வசதிகளுமுடைய நிலத்திலே விதைக்கப்பட்ட விதை செழித்து வளர்வது போல இவர்களும் பல்துறையாற்றலும் பெற்று வளம்பெறுவர். தூண்டாவிளக்கெனினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும். அதேபோல எங்கள் கையிலே அகப்படுகின்ற எங்கள் ஆளுமையிலே வளரவருகின்ற மாணவச்செல்வங்களையும் வளப்படுத்தி நெறிகாட்டி மலரவைப்பது ஆசிரியத்துவம். "எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே." அறிவுப் பெற்றோர்களாகிய ஆசிரியர்களுடைய ஒழுங்கான வளர்ப்பிலேதான் மாணவமணிகள் ஒளிவிட்டுப் பிரகாசிக்க முடியும். பாடசாலை என்பது ஒரு இன்பப்பூங்கா. இந்த இன்பப்பூங்காவிலே நறுந்தேன் பருகும் தேனீக்கள் போன்ற சிறுவர்கள் ஆடிப்பாடி ஓடி மகிழ்ந்து தன்னோடு ஒத்தவரோடு அன்பிலே, இணைந்து அறிவிலே கலந்து, எழுத்தறிவிக்கும் இறைவராம் ஆசிரியருடைய அன்பான வழிகாட்டலிலே வளம்பெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர். சோலைப்பூக்களாய்ப் பொலிவுபெற்று தென்றல் நுழைந்து செல்வதனால் அயலெல்லாம் வாசனைவீசி நீர்வளம், நிலவளம் துணையாக இருப்பதனால் சூழலுக்கு நல்ல சுகத்தைக் கொடுப்பதுபோல, நல்ல மாணவர்களை வளம்படுத்தும் ஆசிரியர்களினாலும் பாடசாலைகளினாலும் வளமூட்டப்பெற்று மிளிர வேண்டியவர்கள் மாணவர்கள்.

இன்றைய சிறுவர்களே நாளைய சமுதாயத்தை வாழவைக்கும் பெருமாந்தர்கள். இவர்கள் வளமாக்கிகள்; மெருகூட்டிகள்; ஒளிவிளக்கை ஏற்றுபவர்கள். இந்தப் பெருஞ்சிறப்பினாலேதான் வருங்கால உலகம் வளம்பெற முடியும். அந்த வளமாக்கிகளை வளப்படுத்துகின்ற பெருநோக்கத்தை, அரிய செயற்பாட்டை ஆசிரியர்களாகிய நாம் என்றுமே மறக்கலாகாது. "பால்நினைந்தூட்டும் தாய்" போல, பிள்ளைகளின் நல்வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணித்து நிற்கும் பெருமகன் போல, ஐந்து வயதிலே அரிவரி ஏடு கையில் கொண்டு மழலைமொழி பேசி மழலைகளோடு பிஞ்சுக்கரம் சேர்த்து சிறுநுண் எறும்புபோலச் சிரித்து விளையாடிவரும் அந்த சின்னப் பாலகர்களை நாம் வரவேற்கின்றோம். அன்பு முதலாகக் கொண்டு அவர்களும் இறைவனை நேரே கண்டதுபோல பெருமகிழ்வோடு பெற்ற தாயாரிடத்திலே கொடுக்கும் அந்தப் பெரும் பாசத்தையே தம்மை வளமாக்க வந்திருக்கும் ஆசிரியரிடமும் கொடுத்து "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற நினைப்போடு படிக்க முடிலுகின்றார்கள். அவர்களை வழிகாட்டப் போகின்ற ஆசிரியர்களோ

*"நிலம் மலை நிறை கோன்*
*மலர் நிகர் மாட்சி உலகியல் அறிவோடு*
*உயர் குணம் இனையவும் உடையவராய்"*
அமைவர்.

அவர்களது கையிலே அகப்படுகின்ற மாணவமணிகளும் பருகுவோம் என்ற ஆர்வத்தராகி சித்திரப்பாவையின் அத்தக அமையும் பாங்கினராகி இருப்பர். இத்தகைய அரிய மாணவர்களே சிறந்த உயர்ந்த இலட்சணங்களைக் கொண்ட ஆசிரியர் கற்பிக்கும்போது உயர்ந்த இலட்சியத்தை அடைவர் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

இன்றைய கல்வி நிலையையும் ஆசிரிய வளத்தையும் நோக்கும்போது எத்துறையில் ஆசிரியர்கள் வல்லவர்களாக இருக்கின்றார்களோ அத்துறையில் அவர்களுக்கு உயர் அறிவு வழங்கி சிறப்புப்பயிற்சி கொடுத்து அவருடைய சேவையை அரசு ஊக்குவிக்கின்றது. இந்த நிலையில் எல்லா மாணவர்களையும் பல்துறை ஆற்றல்பெற்ற ஆசிரியர்கள் வளம்படுத்துவது மிகமிக இலகு. சில சில காரணங்களினாலே மாணவர்கள் நிலைதளம்பக்கூடும். அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து அவர்களை வளம்படுத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. ஐந்து வயதிலே அரிவரி ஏட்டோடு வந்த பாலகனுக்கு பன்னீராண்டுப் பயிற்சி கொடுத்து அவனைப் பல்துறை ஆற்றலுள்ளவனாக்கி, பண்புள்ளவனாக்கி, நாட்டிற்கேற்றவனாக்கி, நல்ல சிந்தனா சக்தியுடையவனாக்கி, சமுதாயத்தைப் புரிந்துணர்ந்து அதனோடு ஒட்டிநடக்கக் கூடியவனாக்கி, எந்தவிதமான சூழலிலும் அதில் நீச்சல் கண்டு தன்னையும் சார்ந்தவரையும் பாதுகாத்து பல்கலைக்கழகத்திற்கு உயர்கல்வி நாடிச்செல்லும் உத்தமர்கள் இவர்கள்.

இந்த அளவிற்கு வளம்பெற்று நல்லவர்களாக மதிக்கப்பட வேண்டிய மாணவனை வளமாக்கிப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்புகின்ற பொறுப்பு ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை கல்வியை வழங்கும் ஆசிரியர்களினதும் பாடசாலைகளினதும் பொறுப்பேயாகும். ஒரு பயிர் வளர்வதற்கு நல்ல நிலவளமும், நீர்வளமும், வான்வளமும் கிடைக்கப்பெற்று நல்ல விவசாயியும் அமைவானேயானால், அப்பயிர் வளர்ந்து உலகிற்கு உயிரூட்டும். இது போலவேதான் மாணவர்களுக்கும். அவர்களும் கல்வியும் வளம்பெறுவதற்கு நல்ல சூழலும் அதற்கேற்ப வசதிவாய்ப்புக்களும் அதற்கேற்ற ஆசிரியர்களும் அவர்களுக்கேற்ற கட்டுப்பாடுகளும் ஒழுங்குகளும் அமைந்து விடுமானால், அவர்கள் எந்தவித இடையூறுகளுமின்றி எந்தவித தடைதாண்டல்களுமின்றி வளர்ந்து வருங்கால சமுதாயத்தை வளம்படுத்தும் வளமாக்கிகள் ஆவர். இவர்கள்தான் வருங்கால சமுதாயத்தை வாழவைக்கின்ற உத்தமர்கள். இந்த உத்தமர்களை உருவாக்குகின்ற பொறுப்பு ஆசிரியர்களாகிய எம்முடைய கைகளிலேயேதான் தங்கியிருக்கின்றது. சுருக்கமாகச் சொல்லப்போனால் நூறு அடுக்கு மாளிகையொன்று அமைக்கப்பட வேண்டுமானால், அது அமைக்கப்படுகின்ற நிலத்தின் தன்மையும் அத்திவாரமும் சிறப்பாக இருக்க வேண்டும். இருந்தால்தான் அந்த நூறு மாடிகளையும் தாங்கும் ஆற்றலையும், அசையாத் தன்மையையும் ஆக்கிக்கொள்ள முடியும். வருங்கால சமுதாயத்தை வளப்படுத்துகின்ற மாணவ மணிகளை உருவாக்குகின்ற ஆரம்ப அத்திவாரமும் ஒழுங்காகவும் ஸ்திரமானதாகவும் இருக்க வேண்டும். இந்த வகையிலே ஐந்து வயது பூர்த்தியடைந்து ஆண்டுக்கு ஆண்டு ஏற்றபடி வளப்படுத்தி வளர்த்தால் தான் அவர்களும் வளரமுடியும். அப்படியானால் அவர்களை எப்படி வளர்க்க முடியும்? இப்படியான கேள்வி ஒவ்வொரு ஆசிரியரது உள்ளத்திலும் உருவாக வேண்டும். இன்னும் இத்தகைய கேள்வி மேல்மட்ட கல்வித்துறையிலும் எழவேண்டும். கருத்தொருமித்துக் கண்டவிடையை மையமாகக் கொண்டு இருபகுதியினரும் செயற்பட வேண்டும்.

இந்த வகையிலே, ஆசிரியர் கலாசாலைகளிலே ஆரம்பக்கல்விப் பயிற்சியைப் பெற்று, ஆரம்பக்கல்வி மாணவர்களை வளப்படுத்துவோம் என்ற நோக்கத்தோடு பயிற்சியை முடித்து, பணியினை மேற்கொள்ளுகின்ற நன்னோக்கமுள்ளவர்களாக, பிள்ளையின் வளர்ச்சியே நமது வளர்ச்சியென்ற சிந்தனையுள்ளவர்களாக, பணியை ஏற்கின்றோம். ஒருவகையிலே ஐந்து விரல்களும் ஒரே தன்மையாக, ஒரேயளவாக, ஒரு செயலை ஐந்தும் தனித்துச் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவனாக அமைவதில்லை. இதேபோல நம்மிடம் கற்கவருகின்ற மாணவர்களும் ஒரு சூழலிலிருந்தோ, ஒரேவிதமான அறிவாற்றலுடைய பெற்றோரது வளர்ப்பிலிருந்தோ, ஒரேவிதமான குணாதிசயங்களைக் கொண்டவர்களாகவோ இருப்பதில்லை. வேறுபட்ட இயல்பினை உடையவராகக் கற்க வேண்டும் என்ற நோக்கமுடையவராக வரும்போது அவர்களது பெற்றோரும் தமது பிள்ளைகள் கல்வித்துறையிலே வளம்பெற்று வளர வேண்டும் என்ற ஆவலோடு நம்மிடத்தே அனுப்பி வைக்கின்றனர். ஆசிரியர்களாகிய நாமும் "பால்நினைந்தூட்டும் தாய்போல", குஞ்சைக் காக்கும் பறவைபோல அவர்களை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு நம்மீது சுமத்தப்பட்டுள்ளதால், அந்தக் கடமையுள்ளத்தோடு மாணவர்களை அணுகுகின்றோம். அவர்களது கருத்திற்கேற்ப வேண்டிய கல்விமுறை இன்று கல்வித்துறையினரால்

ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதால் அதற்கமைய நாம் செயற்படுவோம். ஒரு வகுப்பிலே எல்லா மாணவர்களும் மீத்திறன் உள்ளவர்களாக இருப்பதில்லை. வேறு வேறு பாடங்களிலே அவர்கள் தனிச்சிறப்புக் கொண்டவர்களாக இருப்பதை நாமும் கருத்துக் கணிப்பீட்டினூடாகக் கண்டுகொள்ள முடியும். அந்தத் துறையிலே அவர்களை வளம்படுத்தும்போது மற்றைய துறைகளையும் நாம் தட்டிக் கொடுத்தால் தான் அவர்கள் கணிசமான ஒரு நிலையை அடையமுடியும். ஒரு பிள்ளை விருப்பமான பாடத்தை விருப்பமில்லாத ஆசிரியரிடம் கற்கும்போது அந்தப்பாடமும் விருப்பமற்றுப் போய்விடும்.

விருப்பமில்லாத பாடம் விருப்பமான ஆசிரியரால் கற்பிக்கப்படும்போது அவருக்காக அந்தப்பாடத்திலே காதல் ஏற்பட்டு அந்த மாணவன் வளரமுடியும். இது எப்படியென்றால், ஆசிரியர் மாணவருக்கிடையே ஒரு ஈர்ப்புசக்தி இருக்க வேண்டும் என்பது புலனாகிறது. கள்ளங்கபடமற்ற அந்த வெள்ளையுள்ளங்களை அன்பால் அணைத்துப் பாடம் போதிக்கும்போது, ஒரு இன்பப்பூங்காவிலே சஞ்சரிப்பதுபோன்ற உள்ளக் கிளர்ச்சியை மாணவர் எய்துவர். மாணவரது குதூகலத்திலே ஆழ்ந்துபோயிருக்கும் ஆசிரியரும் தன் மனதிலே இருக்கின்ற துன்பங்கள் யாவும் அகலப்பெற்று அந்த இன்பமான சூழலிலே நாமும் அவர்களைப் போன்ற பாலகர்களாகமாறிக் கல்வியைப் போதிப்போமானால், மாணவர் உள்ளத்தில் அச்சமிராது, ஆசிரியர் எம்மை அடித்துவிடுவாரோ பேசிடுவாரோ என்ற ஏக்க உணர்விராது. நீரோட்டத்தின் வழி தோணி செல்வதுபோல அவர்களும் செயற்படுவர்.

கல்வி என்பது கல்லுதல் அல்லது தோண்டுதல் என்ற பொருளைத்தரும். அதாவது மாணவரது உள்ளத்திலே இருக்கின்ற உள்ளார்ந்த அனுபவங்களைக் கிளறிக்கிளறி வெளியே கொணர்ந்து, அறிவுலகிலே சஞ்சரிக்கவைத்து, வளம்படுத்த வேண்டியவர்கள். ஆறு வயது தொடக்கம் பதினொரு வயது வரையுள்ள மாணவர்களை அன்பாகநோக்கிக் கல்வி போதிக்கும்போது அவர்களது சிந்தனை சிதறடிக்கப்படாத நிலையையும் எல்லோரும் ஒருமித்த உத்வேக நிலையிலே செயற்படுவதையும் அவதானிக்க முடியும். இந்த நிலையிலே கல்வி போதிக்கும்போது மேல் வகுப்பிலே சில மாணவர்களோடு கல்லிலே நாருரித்தது போன்ற கஷ்டநிலையின்றி பசுமரத்து ஆணிபோன்ற ஒரு செம்மை நிலையை, மென்மையான நிலையை அவதானிக்க முடியும். ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு இந்த நிலையிலே கல்வியைப் போதிப்போமானால் மேலும் அவர்களை சூழலின் தாக்கத்திலிருந்தோ, பருவ வேறுபாடுகளிலிருந்தோ திசைதிரும்ப விடாது, கட்டாயமின்றிக் கருணையோடு வளம்படுத்த முடியும். இதற்காகவேதான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கல்வியியற் கல்லூரி போன்ற நிறுவனங்களில் எந்தச் சிறப்புப்பாடப் பயிற்சியைப் பெற்றாலும், அவர்களுக்கு கல்வியியலும், கல்வி உளவியலும் உடற்கல்வியும் கட்டாய பாடங்களாகப் போதிக்கப்படுகின்றன. இத்துறையிலே வாண்மைபெற்ற ஆசிரியர்கள் மாணவர்களோடு பழகும்போதும், கல்வி கற்பிக்கும்போதும் உளவியல் நுட்பங்களை உணர்ந்து செயற்படுவார்களேயானால் ஆரம்ப வகுப்புகளிலே எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்களுக்கு இடமிராது. இலங்கையைப் பொறுத்தமட்டில் கல்வித்துறையில் புராதன காலம் தொடக்கம் இற்றைவரைக்கும் பல்வேறு பாடசாலை அமைப்பு முறைகளின் கீழ் கல்வி போதிக்கப்பட்டு வந்திருக்கின்றது. கலைத் திட்டங்களும் ஆசிரியர் மையக் கலைத்திட்டத்தில் இருந்து பாடமையக் கலைத்திட்டம், மாணவர் மையக் கலைத்திட்டம், கற்றல்மையக் கலைத்திட்டம் என்றெல்லாம் மாற்றமடைந்து செல்கின்றன. ஆசிரியர்களது வகிபாகங்களும் கடத்தும் வகிபாகம், பரிமாற்றும் வகிபாகம், நிலைமாறும் வகிபாகம் என்ற நிலையில் மாற்றமடைந்து இன்று நிலைமாறும் வகிபாகம் நடைமுறையில் காணப்படுகிறது. இவ்வாறாகக் கல்வித்துறையில் காலத்துக்குக் காலம் கல்விக் கொள்கைகளிலும் கல்வித் திட்டங்களிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்ற போதும் அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஆசிரியர்களது கைகளிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர்கள் அதனைச் செயற்படுத்தும்போது வேண்டாவெறுப்போடு செயற்படாது மனத்தூய்மையோடு அதனை நிறைவேற்றுவதன் மூலம் மாணவர்களிடையே உண்மையான வளர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

இவ்விதமாக, வருங்கால சமுதாயத்தை வளப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தை மையமாகக் கொண்டு மாணவர்களது தன்மைக்கு ஏற்பவும், அவர்களது ஆற்றலுக்கு ஏற்பவும் அணுகுமுறைகளைக் கையாண்டு ஆசிரியர்களாகிய நம் கல்வியைப் போதிப்போமானால், அறிவாற்றலில் உயர்வு தாழ்வில்லாத அருமையான எதிர்கால சந்ததியை மலர்ச்சி பெறவைக்க முடியும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.



இரண்டாம் வருடம் ஆரம்பநெறி "E"
ஆசிரிய மாணவர்கள்



இரண்டாம் வருடம் நுண்கலைத்துறை
ஆசிரிய மாணவர்கள்



# உடலுக்கு உறுதிபயக்கும் வாக்குண்டாம்....

க.சிவச்செல்வி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'C'.

*"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்*
*நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு*
*துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்*
*தப்பாமற் சார்வார் தமக்கு"*

இது ஒளவைப் பிராட்டியார் அருளிய கல்பமுறை அடங்கிய செய்யுள். இதற்கு தும்பிக்கையுடைய விநாயக மூர்த்தியின் திருப்பாதங்களைத் துதிப்பவர்களுக்கு வாக்கு வன்மையும், மனோபலமும், லக்ஷ்மி கடாக்ஷமும் உண்டாகும்; உடலும் வாடாது எனப்பொருள் கூறுவர்.

ஆனால் இதன் உட்கருத்து வேறு, அதாவது சரீரத்தை நெடுநாள் வரை நரை, திரை, மூப்பு, பிணி என்னும் துன்பங்கள் அணுகாது, என்றும் இளமையாய் இருக்கும் தன்மையைத் தரும் கல்ப மூலிகைகளின் விபரத்தைக் கூறும் செய்யுளாகும். எவ்விதமெனில், பூ என்பது தாமரைப்புஷ்பம்; மேனி என்பது குப்பைமேனி; தும்பி என்பது தும்பைச்செடி; கையான் என்பது கரிசாலை; பாதம் என்பது செருப்படை. தாமரைப் புஷ்பம், குப்பைமேனி, தும்பைச்செடி, கரிசாலை, செருப்படை ஆகிய பஞ்சபூத மூலிகைகளை அறிந்து உபயோகித்தால், பஞ்சபூதத்தாலான உடலுக்கு இவை உறுதி பயக்கும். தாமரைப் புஷ்பத்தில் தாமிரச்சத்து நூற்றுக்கு ஐம்பது பங்கு உண்டு.

மனிதன் ஆரோக்கியமாகவும் அதிமேதாவியாகவும் இருக்க வேண்டுமானால், மூளை சரியான நிலையில் இருக்க வேண்டும். பலவிதக் கவலைகளினால் மூளை சில சமயங்களில் சீர்கெடும். அதனால் பாரிசவாயு, தலைச்சுற்று, காக்கைவலிப்பு, பித்தமயக்கம், சித்தப்பிரமை முதலிய நோய்கள் ஏற்படுகின்றன. மூளையைப் பலப்படுத்தினால் ஆயுள் பெருகும் எனச் சித்தர்கள் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

மூளையைப் பலப்படுத்துவது தாமரையே. தாமரையில் நான்கு வகைகளுண்டு. நீரில் உற்பத்தியாவது மூன்று; தரையில் உற்பத்தியாவது ஒன்று. வெண்தாமரை, செந்தாமரை, ஆகாயத்தாமரை ஆகியவை குளங்களிலுள்ள நீரின் மீது மிதக்கும். சிவந்த புஷ்பத்தை 'செந்தாமரை' எனவும், வெள்ளைப் புஷ்பத்தை 'வெண்தாமரை' எனவும், நீரில் அந்தரமாய் வேரோடு கொத்துக் கொத்தாகக் காணப்படுவதை 'ஆகாயத் தாமரை' என்றும் கூறுவர்.

'கல்தாமரை' என்பது மலைகளின் இடுக்கில் உற்பத்தியாவது. இதன் இலை ஒரு ரூபாய் வட்ட வடிவமாகக் காணப்படும். இதில் புஷ்பம் இல்லை. இந்த இலையைப் பறித்து உலர்த்திய பிறகும்; பொடி செய்த பிறகும் நீர்பட்ட மாத்திரத்தில் பச்சை நிறம் திரும்பி, அன்றுவிட்ட இலையைப் போலக் காணப்படும். கல் தாமரையில் தாமிரச் சத்து அதிகம். உதாரணமாக, இரும்புத்தூளைக் கல்தாமரைச் சாற்றில் ஊறவைத்து மறுநாள் பார்த்தால் அந்த அயன் தூள் முழுவதும் செம்பு நிறமாக இருக்கும். இந்த மகத்தான மூலிகை இலையைத் தூள் செய்து சாம்பலாக்கி நீரில் கரைத்துக் காய்ச்சிச் செம்பு எடுத்தால் பரிசுத்தமான செம்பு கிடைக்கும். அச்செம்பினால் செய்யப்படும் மருந்து கொடிய வியாதிகளையும் நீக்கும்.

கல்தாமரை இலையைப் பொடி செய்து தினம் காலை மாலைகளில் ஒரு சிட்டிகையை நீருடன் கலந்து சாப்பிடலாம். இதனால் மூளைக்குப் பலம் ஏற்பட்டு ஆயுள் பெருகும்.

செந்தாமரைப்பூ மூல உஷ்ணத்திற்கு நல்லது. இதயத்தில் உண்டாகும் வியாதிகளான அதிகத் துடிப்பு, குறைந்த துடிப்பு, வீக்கம், சுருக்கம், ரணம், காற்றின் குறைவு, வேகம், கபாடம்..... முதலியவைகளுக்கு ஒரு வெண்தாமரைப் பூவைக் கஷாயமிட்டுப் பருகிவர இருதய வியாதிகள் முழுவதும் குணமாகிவிடும்.

அடுத்து குப்பைமேனியை நோக்கின், எளிதில் கிடைக்கக்கூடிய பச்சிலை வகைகளிலே இதுவும் ஒன்றாகும். இதற்கு 'பூனை வணங்கி' என்றொரு பெயருமுண்டு. பூனை நோய்வாய்ப்பட்டால் குப்பைமேனிச் செடியிருக்கும் பக்கம் சென்று, இலையில் தன் தலையைத் தேய்த்துக் கொள்வதுடன், இலையைத் தன் நாவினால் நக்கிக் கொடுக்கும். பூனைக்கு ஏற்பட்டிருக்கும் மந்தம், அஜீரணம், உடல்வலி, கண்நோய் முதலியவைகள் நீங்கிவிடுகின்றன. மேலும்,

*"தந்த மூலப் பிணி தீர்ந்திடும் புண் சர்வ விஷம்*
*உந்து குன்மம் வாதம் உதிர் மூலத் தினவு*
*சூலம் சுவாசம் தொடர் பீனிசம் கபம் போம்*
*ஞாலங் கொள் மேனி அதனால்"*

என பதினெண் சித்தர்களில் ஒருவராகிய தேரையர், இம்மூலிகையின் குணம் பற்றிக் கூறுகின்றார். உதாரணமாக படுக்கைப் புண் நீங்க, குப்பைமேனி இலையையும் மஞ்சளையும் சம அளவு எடுத்து அரைத்துப் பூசிவரப் படுக்கைப் புண் ஆறும். இதனைப் புண் ஆறும்வரை நீடித்துச் செய்ய வேண்டும். பூச்சி - விஷக்கடி நீங்க, மேனிச் செடியை சட்டென்று பிடுங்கி இலையைப் பறித்துக் கசக்கிப் பிழிந்து மேலே தடவி, சாம்பிராணிப் புகை, நெருப்புச்சூடு காட்டவும். காதுக்குள் இரண்டிரண்டு துளிகள் விடவும். குடிக்க 70மி.லீ. சாற்றைப் பிழிந்து கொடுக்கவும் இவ்வாறு செய்தால் விஷக்கடி உபாதை நீங்கும். நீடித்து இரு நாட்களுக்குக் கொடுக்க வேண்டும். தலைவலி நீங்க, குப்பைமேனிச் சாற்றுடன் சுக்கை இழைத்து நெற்றிக்குப் பற்றுப்போட்டு சிறிது சாம்பிராணிப் புகை நெருப்புச்சூடு காட்ட உடனடியாகத் தலைவலி நீங்கும்.

அடுத்து நோக்கின், கரிசாலையை, கையாந்தகரை என்றும் கரிசலாங்கண்ணி என்றும் கூறுவதுண்டு. சாதாரணக் கரிப்பான், பொற்றலைக் கரிப்பான் என்னும் இருவகையிலே சாதாரணக் கரிப்பானில் நல்ல அயன்சத்தும் (இரும்பு) பொற்றலைக் கரிப்பானில் தங்கச் சத்தும் இருப்பதால் இந்த இரு மூலிகைகளும் மக்களின் உடல் நலனுக்கு நன்மை தரும் அநேக காரியங்களைச் செய்கின்றன.

*"குரற் கம்மிற் காமாலை குட்டமொடு சோகை*
*யுரற் பாண்டு பன்னோ யொழியும் - நிரற்சொன்ன*
*மெய்யாந் தகரை யொத்த மீளியண்ணும் நற்குலத்துக்*
*கையாந்தகரை யொத்தக் கால்"*

*"பொற்றலைக்கை யாந்தகரை பொன்னிறமாக் கும்முடலைச்*
*சுத்தமுறக் கட்டுஞ் சுகங் கொடுக்குஞ் - சிற்றிடையாய்*
*சிந்தூரங் கட்காகுஞ் சிந்தைதனைத் துலங்குவிக்கும்*
*முந்திவளர் குன்ம மொழிக்கும்"*

என்னும் தேரையர் குணபாடப் பாடலிலே காட்டிய இருவிதக் கரிப்பான் மூலிகைகளும் மூளைக் கோளாறு, பைத்தியம், சித்தப் பிரமை, கண் ரோகங்கள், கபரோகங்கள், சோகை, பாண்டு, காமாலை, பற்களில் ஏற்படும் நோய்கள் முதலியவற்றைப் போக்குவதோடு மண்ணீரல், கல்லீரல் இவைகளில் பற்றும் ரோகங்களைப் போக்கி, ரத்தத்திற்குப் போதிய வல்லமை கொடுப்பதில் நிகரற்றவை.

இம்மூலிகையைப் பச்சையாகவும், பருப்புடன் சேர்த்துக் கூட்டாகவும், எலுமிச்சம்பழம் சேர்த்துப் பச்சடியாகவும், துவையலாகவும் பக்குவம் செய்து சாப்பிடலாம். தைலம், நெய், சூர்ணம், கஷாயம், குடிநீர் முதலியவைகளாகவும் தயாரித்து உபயோகப்படுத்தலாம்.

பல்நோய்கள் நீங்க, கரிசலாங்கண்ணி இலையை வாய் கொள்ளுமளவு போட்டு நன்றாக மென்று பல் தேய்த்துவர பல்லிலுள்ள அழுக்குகள் நீங்கும். மேலும், பல் சம்பந்தமான (பயோரியா) வியாதிகளை நீக்கியும், தடுத்தும் பாதுகாப்பதோடு வாய்ப்புண், வாய்நாற்றம் முதலியவைகளையும் நீக்கி ஆரோக்கியத்தைத் தரும். தும்பை இலையின் குணத்தை,

*"சீறுகின்ற பாம்போடு சில் விஷங்கள் சென்னிவலி*
*ஏறுகபம் மாந்தம் இருக்குமோ - நாறுமலர்க்*
*கொம்பனைய மாதே குளிர்சீத சன்னிவிடும்*
*தும்பைஇலை யென்றொருக்காற் சொல்"*

*"தும்பையிலையை உண்ணுஞ் சோற்றுக்கெலாங் கரியாய்
அம்புவியோர் மெத்த அருந்துங்கால் - வெம்பிவரு
மேகமொடு கண்புகைச்சல் வீறுகைகால் அசதி
தாகம்அதி சோம்ப லறுந்தான்"* என்றும்,

செருப்படையின் குணத்தை,

*"செருப்படைக்கு வாதம்போம் சேர்வான மேகம்
இருப்படிக்கொள் பொல்லா இசிவும் விருப்படிக்கும்
சூலையொடு வாதகுன்மம் தோற்றா தொருநாளும்
வேலை யொத்த கண்ணாய் விளம்பு"*

என்றும் பதினெண் சித்தர்களில் ஒருவராகிய தேரையர் இம்மூலிகைகளின் குணங்களை அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

மனிதனின் சரீரத்தை மட்டும் வாட்டும் நோய்கள் சில; மனத்தை மட்டும் வாட்டும் நோய்கள் சில; இரண்டையும் வாட்டும் நோய்களோ பல. சரீரம், மனம் இரண்டிலுமே நோயின்றி இருக்கும் நிலைதான் உண்மையில் பூரண ஆரோக்கியம். அதை அடைய முயற்சி செய்ய வேண்டும். நாம் பிறந்த நாட்டிலே, நமது உடலுக்குத் தக்கபடி உற்பத்தியாகும் மூலிகைகளின் குணங்களைத் தெரிந்து கொண்டால், பொதுவாக நோய்களைத் தடுக்கலாம். நோயை முளையிலேயே கிள்ளிவிட்டால் அது வளராது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற கூற்றுக்கு அமைய ஆரோக்கியத்தில் கண்ணுங் கருத்துமாய் இருந்தால், உடல் உறுதியுடன் வாழ்க்கையில் உண்டாகும் இன்பங்களையும் மகிழ்ச்சியையும் இனிதே அனுபவிக்கலாம் என்பது திண்ணம் என்பதை அழகாக வாக்குண்டாம்... எடுத்துக் கூறுகின்றது.

உசாத்துணை நூல்:-
இயற்கை தரும் இன்மருந்துகள், வைத்திய விசாரதை T.S.ஜனககுமாரி.



---

அன்பே கடவுள் என்பது ஏதனாலே? - அதில்
ஆத்மசக்தி இன்பம் இருப்பதாலே
சாத்திரங்கள் பொய்யென்பது ஏதனாலே? ஏ
மாத்துகிற வார்த்தையும் இருப்பதாலே
சாதிமதம் இல்லை என்பது ஏதனாலே? - மனம்
சமத்துவம் தானடைந்த தன்மையாலே
பொதுவுடைமை கேட்பது ஏதனாலே? - தொழில்
புரிந்தும் புசிப்பும் அற்றும் போனதாலே.

நன்மை எல்லாம் தீமையானது ஏதனாலே?
ஞானமற்ற பேச்சிலும் நடத்தையாலே
தன்மதிப்புக் குறைவதும் ஏதனாலே?
தரங்கெட்ட சகவாச தோசத்தாலே.

உண்மையை மறைப்பதும் ஏதனாலே?
உள்ளும் புறமும் வேறுபட்டதாலே
புத்தகம் படிக்கிறது ஏதனாலே?
புகழ்தரும் புத்தியும் வளர்வதாலே

எண் எழுத்தைக் கண்என்பது ஏதனாலே?
உண்மை பொய்யை உள்ளமது காண்பதாலே.

*- "மணமகள்" திரைப்படத்திற்காக
உடுமலை நாராயணகவி இயற்றியது.*



# முன்பள்ளியின் அவசியம்

ந.நவீந்தினி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'A'.

"உயர்கல்விக்கும் உவப்பான வாழ்க்கைக்கும் அடி அத்திவாரமாகத் திகழ்வது ஆரம்பக்கல்வி" என்பதை இன்று யாவரும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையிலே, அதற்கு ஆரம்பப் படிக்கல்லாய் அமையும் முன்பள்ளிக் கல்வியைக் குழந்தைகளுக்குப் பெற்றுக் கொடுக்க எவரும் தவறுவதில்லை. அந்தளவிற்கு முன்பள்ளிக் கல்வியின் அவசியம் எவராலும் உணரப்படுகின்றது. முன்பள்ளியானது 3-5 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு, அவர்களது தொடர்பாடல் திறனை விருத்தியடையச் செய்யவும், ஆளுமைத்திறனை வளர்த்தெடுக்கவும் கற்றற் செயற்பாடுகளை அளிப்பதாகும்.

முன்பள்ளி பற்றிய எண்ணக்கருவானது 18ஆம் நூற்றாண்டளவிலேயே வளர்ச்சிகாணத் தொடங்கியது. ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார, சமூகத் தேவைகள் முன்பள்ளி வளர்ச்சிக்குக் காலாயமைந்தன. 2ஆம் உலக மகாயுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கீடு பெண்களையும் தொழில் வாழ்க்கைக்குத் தள்ளிய காரணத்தினால், குழந்தைகளைப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, அந்தப் பொறுப்பை ஏற்கும் நிறுவனங்களாக முன்பள்ளிகள் தோற்றம் பெற்றன. சமூகமயமாக்கற் தொழிற்பாடு காரணமாகப் பெற்றோர் காட்டிய ஆர்வமும் முன்பள்ளியின் விரைவான வளர்ச்சிக்கு வழிகோலியது. மேற்குலக நாடுகளின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கீழைத்தேச நாடுகளிலும் மெல்ல மெல்லப் பரவி வளர்ச்சி கண்டது.

முன்பள்ளிக்கல்வி பற்றி பல அறிஞர்களும் கருத்துக்களைக்கூறி அதன் அவசியத்தை எமக்கு உணர்த்தியுள்ளனர். சிக்மன் புரோயிட், குழந்தை ஐந்து வயதிற்குள்ளேயே பூரண மனிதனுடைய தன்மைகளைப் பெற்று விடுவதாகக் குறிப்பிடுகின்றார். காந்திஅடிகள் "ஒரு குழந்தை தன் ஐந்து வயதிற்குட்பட்டுக் கற்றுக் கொள்ளாததை பின்னர் எந்தக் காலத்திலும் கற்றுக் கொள்ளாது" என்கிறார். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" எனத் தமிழர் மரபிற் கூறப்படும் பழமொழியும் இதனைச் சுட்டுவதாய் அமைகின்றது. இலங்கையிலும் முன்பள்ளி அவசியம் உணரப்பட்டுப் படிப்படியாக அது வளர்ச்சி கண்டது. 1960களில் அரசு பாடசாலையைப் பொறுப்பேற்றபோது முன்பள்ளிகளைக் கவனத்தில் எடுக்கத் தவறியது. இதனால் தனிப்பட்ட நபர்களாலும் தனியார் நிறுவனங்களாலும் முன்பள்ளிகள் வளர்த்தெடுக்கப்பட்டன. 1997இன் தேசிய கல்வி ஆணைக்குழு, முன்பள்ளிக் கல்வியின் அவசியத்தை உணர்த்தினாலும், இற்றைவரை நேரடியாக எல்லா முன்பள்ளி நிறுவனங்களையும் நிர்வகிக்காமை முன்பள்ளிக் கல்வியில் ஏற்றத்தாழ்வினை ஏற்படுத்துவதாயமைகிறது.

நகரங்களில் அமைந்துள்ள முன்பள்ளிகளுக்கும், கிராமங்களில் அமைந்துள்ள முன்பள்ளிகளுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. தற்போது யாவரையும் ஆட்கொண்டுள்ள ஆங்கில மோகம் முன்பள்ளிக் கல்வியிலும் தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அமைகின்றது. "முன்பள்ளி ஆசிரியர்களின் குறிக்கோள் குழந்தைகளை அறிவால் நிரப்புவதல்ல; உபகரணங்களைக் கையாளப் பழக்குவது அல்ல; குழந்தைகளிடம் உள்ள இயற்கையான ஆற்றலை வெளிக்கொணர்வதே" என்கின்ற மொன்டசோரி அம்மையாரின் கருத்தினை தற்கால முன்பள்ளிக்கல்வி நிறுவனங்கள் புறந்தள்ளி விட்டன என்று கூறலாம். சில முன்பள்ளிகள் எழுத்திற்கே முக்கியத்துவம் அளிப்பதனையும், அமைதிப் பிரார்த்தனை என்னும் ரீதியில் குழந்தைகளின் இயல்பான செயற்பாடுகளுக்குத் தடை விதிப்பதும் முன்கல்வியில் ஏற்றத்தாழ்வை உண்டுபண்ணுகின்றன.

முன்பள்ளிகளைப் பதிவுசெய்தல், பயிற்சிகளை வழங்குதல், மேற்பார்வை செய்தல் என்பன மாகாண அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியினை அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளூர் அதிகாரசபை உட்படப்பல நிறுவனங்கள் வழங்குகின்றன. எனினும், இச்சேவைகள் எல்லா முன்பள்ளிகளுக்கும் கிட்டாமல் இருப்பதும், வழங்கும் கல்விக்கான வரையறைகள் சரியான முறையிலே நிர்வகித்து நடைமுறைப்படுத்தாததும், உகந்த கலைத்திட்டம். ஒரே வகையில் எல்லோராலும் எல்லா முன்பள்ளிகளுக்கும் எட்டாமையும், அவற்றை நடைமுறைப்படுத்தாமையும் முன்பள்ளிக்கல்வியின் ஏற்றத்தாழ்விற்குக் காரணமாயமைகிறது.

நிரந்தரமான ஆசிரிய வளம் காணப்படாமை, புதிய புதிய ஆசிரியர்கள், போதியளவு பயிற்சி இன்மை, போதிய சம்பளம் இன்மை போன்ற காரணிகளினால் முன்பள்ளிக் கல்வி விருத்தி அடைய முடியாதுள்ளது. குறிப்பிட்ட சில பயிற்சிகள் வழங்கப்படுவதும் அது தொடர்ச்சியான முறையில் அல்லது ஒழுங்குமுறையில் அளிக்கப்படாமலிருப்பதும் புதிதாக வரும் ஆசிரியர்கள் தம் அனுபவத்தினூடாகவே தமது பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டி இருக்கின்றமையும் போதிய பயிற்சி இன்மையினைக் காட்டுகின்றன.

தரம் 1இல் அடியெடுத்து வைக்கும் மாணவர்கள், பல இடங்களில் இருந்து ஒன்று சேரும்போது ஏற்றத்தாழ்வினை ஏற்படுத்துவதாய் முன்பள்ளிக் கல்வி அமையாது இருக்க வேண்டுமெனில், ஒரே மாதிரியான கலைத்திட்ட முறையினை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. அதற்குத் தகுந்த பயிற்சியும் மேற்பார்வையும் அவசியமாகின்றது. ஆரம்பக் கல்வியில் அக்கறை செலுத்தும் பலரும் முன்பள்ளிக் கல்விக்கான கலைத்திட்ட நடைமுறைப்படுத்தலிலும் அக்கறை செலுத்தினால் ஆளுமையுள்ள சிறார்களை உருவாக்க முடியும்.

பிள்ளை வீட்டிற்கு வெளியே முதல் அனுபவம் பெறும் கற்றல் நிலையமாக முன்பள்ளி அமைவதனாலும், இப்பருவத்திலேயே மூளை வளர்ச்சி விரைவாக நடைபெறுவதன் காரணமாகவும், முன்பள்ளி சகல கற்றல் வளங்களுடன் அமைந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. விளையாடுவதற்கான இடவசதிகளுடன் விளையாட்டுப் பொருட்களும் மனதையும் கவரும் விதமான கற்றல் மூலைகளும் அமைந்திருப்பது அவசியம். இவை பிள்ளைகளினி சுயமாக ஆராய்ந்து கற்கும் ஆற்றல்களை வளர்ப்பதாக அமையும். திட்டமிட்டு அமைக்கப்பெற்ற விளையாட்டு முற்றமும் அவசியமாகின்றது. குடிநீர், மலசலகூட வசதிகள், சுகாதாரப் பாதுகாப்பு முறையில் அமைந்து இருக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

எனவே, ஒரு முன்பள்ளிக் கல்வியானது திறம்பட மாணவரைச் சென்றடைய வேண்டுமாயின், எல்லா முன்பள்ளிகளிலும் பாடசாலைகளைப் போன்று ஒரேவிதமான கலைத்திட்ட முறைமை பயன்படுத்தப்பட வேண்டும். செயற்பாட்டு ரீதியிலான கல்வி வழங்கப்படுவதுடன், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உரிய தராதரங்களோடு கூடிய பயிற்சி அளிக்கப்படுவதும் முக்கியம். முன்பள்ளிச் சூழல் சகல வசதிகளுடனும் அமைந்து காணப்படுவதுடன், ஏற்றத்தாழ்வற்ற பொதுவான கல்வி வாய்ப்பினை மாணவர்களுக்கு வழங்கிச் சிறந்த ஆளுமையான சமுதாயத்தை உருவாக்க கல்வியியலாளர்கள் முன்வர வேண்டும்.

## சிந்தனைத் துளிகள்

- புற்களைக்கூட ஒன்றாகப் பிணைத்துக் கயிறாக்கும்போது மதம்கொண்ட யானையையும் விழ்த்தமுடியும். —சுவாமி விவேகாநந்தர்
- பெரியவர்கள் பெறுகின்ற வெற்றியைவிட இளைஞர்கள் பெறுகின்ற தோல்வி சிறந்தது. —டிஸ்ரேலி
- அன்பு உன்னிடத்தில் வளர உனது அழகும் வளருகின்றது. ஏனெனில் ஆத்மாவின் அழகுதான் அன்பு. —செயின்ட் அகஸ்டீன்
- உங்கள் குறிக்கோளில் வெற்றியடைய வேண்டும் என்றால் உங்கள் இலக்கில் இம்மியும் பிசகாது குறிவைத்து, அதே சிந்தனையோடு செயற்படவேண்டும். — அப்துல்கலாம்
- கல்வியின் வேர்கள் கசப்பானவை. ஆனால் பழம் இனிப்பானது. — அரிஸ்ரோட்டில்
- உண்மையொன்றே இறுதிவரை நிலைத்துநிற்கும். மற்றவை அனைத்தும் காலவெள்ளத்து அலைகளால் அடித்துச் செல்லப்படும். — காந்தியடிகள்
- வாழ்க்கை என்பது சிந்திப்பவர்களுக்கு இன்பமாக இருக்கிறது. உணர்ச்சி கொள்பவர்களுக்குத் துன்பமாய் இருக்கிறது. — லாபுரூயர்
- உழைப்பால் கிடைக்கும் ஒருசிலரின் மதிப்பு, உழைப்பின்றிக் கிடைக்கும் 5 பவுண்டுகளைக் காட்டிலும் உயர்ந்தது என்பதை உணரும்படி செய்யுங்கள். — ஆபிரகாம்லிங்கன்
- உயர்ந்த எண்ணத்தைவிட உயரியது எதுவுமில்லை. — விக்டர் ஹியூகோ
- பள்ளிக்கூடம் ஒரு தோட்டம்; குழந்தைகள் செடிகள்; ஆசிரியர்கள் தோட்டக்காரர்கள். — சான்யூவிங்
- எவரொருவர் தனது வேலையைச் செம்மையாகச் செய்கிறாரோ அவரே சிறந்த கலைஞர். — அரவிந்தர்
- பிறர் தவறுகளைக் கண்டு தன்தவறுகளைத் திருத்திக் கொள்பவன் அறிவாளி. — ஹெர்பர்ட்
- புரிந்து கொள்ளுதல் கற்றலின் மிகப்பெரிய அம்சம். — லொக்
- வாழுமளவு நான் கற்கிறேன். — இராமகிருஷ்ணர்

*"அறிஞர்களின் அறிவுரைகள்" (2004) நூலிலிருந்து.*



# தமிழ்மொழி வளர்ச்சியில் நவீன தொழில்நுட்பத்தின் பங்கு

செல்வி ஜெயரூபி நல்லையா
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'A'.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்த மொழியாகிய தமிழ்மொழியானது விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்தில் புகுந்து வளர்ச்சியடைந்து வருகிறது. தொன்றுதொட்டுத் தமிழ்மொழி பேச்சின் மூலமும் எழுத்தின் மூலமும் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து வந்துள்ளது. நமது பண்டைய இலக்கியங்கள் யாவும் செய்யுள் வடிவிலே படிப்பறிவுள்ளோரால் மட்டுமே வாசித்துணரக் கூடியதாக விளங்கின. இக்குறைபாடு ஐரோப்பியரின் வருகையால் நிவர்த்தியாக்கப்பட்டது. அவர்களின் மதப்பிரச்சார நடவடிக்கையின் காரணமாக ஆங்கில உரைநடையைத் தழுவித் தமிழில் உரைநடை வளர்ச்சி கண்டதுடன், அச்சியந்திரத்தின் அறிமுகமும் ஏற்படலாயிற்று. இதனால் பல நூல்களும் இலக்கியங்களும் அச்சேறின.

மேல்நாட்டவர் அறிமுகப்படுத்திய இலக்கிய வகைகளாகிய சிறுகதைகள், நாவல்கள்கூட தமிழில் அச்சேறலாயின. படிப்படியாக விஞ்ஞான நூல்களும், சமய தத்துவநூல்களும் தமிழ்படித்த ஐரோப்பியராலும் ஆங்கிலம் படித்த தமிழ்ப்புலமை மிக்கோராலும் எழுதி அச்சிடப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் வியக்கத்தக்க தமிழ் இலக்கியப் படைப்புக்கள் பல அச்சேறின. தமிழ்மொழி மூலம் கல்விகற்கும் நிலை ஏற்பட்ட காலத்திலிருந்து தமிழ்மொழி மூலப்பாட நூல்கள் அச்சேறின. இக்கால கட்டத்திலே தட்டச்சுமுறை, பிரதியாக்க முறைகள் என்பனவும் அறிமுகமாயின. இதனால் பல பழந்தமிழ் நூல்கள் பாதுகாக்கப்பட்டன. எனவே, அச்சியந்திர அறிமுகம், தட்டச்சு - பிரதியாக்க அறிமுகம் ஆகியவற்றினூடாகத் தமிழ்மொழி வளர்ச்சியடையலாயிற்று. மேலும், வானொலி, தொலைக்காட்சி என்பனவும் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன.

இன்று நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் மேலும் தமிழ்மொழி வளர்ச்சி அடைந்து வருகிறது. இன்று எத்துறையை எடுத்து நோக்கினாலும் தொழில்நுட்பத்தின் பங்களிப்பைக் காணமுடிகிறது. தமிழ்மொழி வளர்ச்சிக்கு கணினி, தொலைக்காட்சிப் பெட்டி, இணையம், இலத்திரனியல் தபால் என்பன பாரிய பங்களிப்புச் செய்துள்ளமை வெளிப்படை. கணினி, தொலைத்தொடர்பு வலையமைப்பு ஆகியவற்றின் இணைப்புடன் தகவல் தொழிநுட்பம் மிகவேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. பண்டைய காலத்தில் கல்வெட்டுக்களிலும் ஏடுகளிலும் வாழ்ந்த தமிழ்மொழி, பின்பு படிப்படியாக அச்சேறி இன்று கணினி மயப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். கணினியில் எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய பிரதான கணினித்தமிழை உருவாக்கினர். அதற்காகக் குறியீட்டு முறையும், விசைப்பலகையும் தராதரப்படுத்தப்பட்டுள்ளதால் இணையத்திலும் இன்று தமிழைப் பயன்படுத்தக் கூடியதாயுள்ளது. இதனால் தமிழ்மொழி தன்னழகை மேலும் மெருகூட்டிக்கொண்டது.

இன்று இணையம் பயன்படுத்தப்படாத துறையே இல்லை எனலாம். அந்த வகையில் தமிழின் பெரு வளர்ச்சிக்கும் இணையம் பங்காற்றுவது வெளிப்படை. செய்திப் பரிமாற்றம், கல்வி, வணிகம், சுற்றுலாத்துறை, தொலைத்தொடர்பு, நூலகம், அருங்காட்சியகம் முதலியவற்றிலும், மருத்துவத்துறையிலும் இணையம் முக்கிய இடத்தை வகிக்கிறது. மனித இனத்தின் முதல் பன்மொழி ஊடகம் இணையமாகும்.

தமிழில் இணையத்தகவல் பெறல் சம்பந்தமாக சிங்கப்பூரிலும் சென்னையிலும் நடந்த மாநாடுகள் மேலும் இத்துறை வளர வாய்ப்புக்களை உருவாக்கின. உலக வலைப்பின்னல் மூலம் தேடல் பற்றிய செய்தியையும் தகவலையும் பெறலாம். வலிமையான தேடல் பொறிகள் இலக்கியங்களைச் சிலமணி நேரத்தில் துருவி ஆராய்ந்து, கேட்கும் தகவல்களைத் திரையில் தரும் படக்காட்சிமுறையில் தொலை மாநாடுகளையும் நடத்த முடிகிறது. மின் இதழ்களையும் வாசிக்க முடிகிறது. பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, முதுமாணி பட்டப்படிப்புகளுக்கான தகவல்கள் பெறுவதுடன் உசாத்துணை நூல் விபரங்களும், துணை விரிவுரைகளும் கூடப் பெறமுடிகிறது. கல்விசார் துறையில் தமிழில் முன்னேற பல வாய்ப்புக்கள

ஏற்பட்டுள்ளன. தமிழாராய்ச்சிகளின் பரிமாணத்தை விரிவுபடுத்தவும் நவீன தொழில்நுட்பம் உதவுகிறது.

இன்று ஆங்கில விசைப்பலகை அமைப்பிலேயே தமிழில் அச்சடிக்கும் முறை காணப்படுகிறது. தட்டச்சுப் பொறிமுறை உருவானது போன்றே இதுவும் வளர வாய்ப்புக்களுண்டு. இன்று திருக்குறள், இசை, திரைப்படம், இலக்கியம் எனப் பலதுறைகளிலும் தமிழில் கலந்துரையாடல்கள் இணையம் மூலம் நடந்துவருகின்றன.

தமிழ்மொழிக்கான விசைப்பலகை அமைப்பும் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ் அடைந்திருக்கும் பாரிய வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கத் தமிழில் ஒரு அகரமுதலி அவசியம் என்பதனை உணர்ந்து இலங்கை அரசகரும மொழிகள் ஆணைக்குழு தகவல் தொழில்நுட்பக் கலைச்சொல் ''அகரமுதலி'' என்ற நூலை வெளியிட்டுள்ளது. நாளாந்தம் வளர்ந்து வரும் அறிவியல் துறையின் உதவியுடன் தமிழ்மொழி வளர்ச்சி கண்டு வருகிறது. இன்றைய நவீன வசதி வாய்ப்புக்கள் உள்ள உலகிலே நவீன தொழில்நுட்பத்தால் கணநேரத்தில் பல நன்மைகளைப் பெறக்கூடியதாக உள்ளது. எனவே, இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியானது தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பெரும்பங்கு ஆற்றுகிறது. தொழில்நுட்பத்தின் உதவியுடன் தமிழ்மொழியானது வளர்ச்சிகண்டு வருகிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அன்று ஏடுகளிலும் நூல்களிலும் தவழ்ந்த தமிழன்னை இன்று கணினி உலகில் உலாவருவது மட்டுமன்றித் தன் வளர்ச்சியிலும் உயர்ந்து நிற்கிறாள் என்பது வெள்ளிடைமலை.

## கோப்பாய் பண்டிதர் வி.வேலுப்பிள்ளைப் புலவர்

கோப்பாய் வடக்கு வராம்பற்றைறையைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளைப் புலவர் 1870இல் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் விநாசித்தம்பி. மதுரைப் பண்டிதர். சைவசித்தாந்தத்தில் தேர்ச்சிபெற்றவர். தமிழ்நாடு சென்று சைவசித்தாந்தம் பற்றி உரையாற்றியவர். தமது வீட்டிலேயே ஒரு திண்ணைப் பள்ளியை நடத்தியவர். திருக்குறளின் முதல் 42 அதிகாரங்களுக்கு "முப்பானூற் சுருக்கம்" என நூலினை எழுதி வெளியிட்டவர். இவரது "சைவசித்தாந்த சங்கிரகம்" என்னும் நூல் பலரது பாராட்டையும் பெற்றது. இதனை 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் (விகாரி வருஷம் கார்த்திகை மாதம்) வெளியிட்டார். இவர் இயற்றிய பலநூல்கள் பற்றிய விபரம் தெரியவில்லை. 1972இல் இலங்கைப் பாடசாலைகளில் பயன்படுத்திய க.பொ.த. சாதாரண வகுப்புக்குரிய தமிழ்ப் பாடநூலில் முப்பானூற் சுருக்கத்திலிருந்து ஒரு பகுதி சேர்க்கப்பட்டுள்ளதுடன், நூலாசிரியர் பற்றிய சிறுகுறிப்பும் காணப்படுகிறது. அக்காலத்தில் கல்விவெளியீட்டுத் திணைக்களத்தில் உதவி ஆணையாளராகப் பணியாற்றியவரும், புலவர்மீது பக்தி கொண்டவருமான கோப்பாய் அ.வி.மயில்வாகனம் அவர்கள் இதற்கு உதவியுள்ளார். இரசிகமணி கனகசெந்திநாதனது "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" நூலும் வேலுப்பிள்ளைப் புலவர் பற்றி விதந்து குறிப்பிட்டுள்ளது.

திருத்தில்லை நிரோட்டயமகவந்தாதி, பரானந்தநற்பாமாலை முதலிய நூல்களும் புலவரால் செய்யப்பட்டன. புலவரின் சகோதரி மகனான கந்தையா ஆறுமுகம் ஆசிரியர் அவர்கள் தமது மூத்தம்மான் பற்றிக் கூறுகையில் தன்னைத் தீட்சைபெறவைத்து, ஏடுதொடக்கிப் பாடசாலையில் சேர்த்துவிட்டவர் அவரென்றும், ஆசாரசீலரான அவரது வழிகாட்டலே தன்னை ஓர் நல்லாசிரியராக உருவாக்கியது என்றும் கூறியுள்ளார். ஆசிரியர் ஆறுமுகம் அவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் தற்போதைய அதிபர் திரு. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சமூகசேவையாளரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபருமான திரு. ஆறு திருமுருகன் ஆகியோரின் தந்தையார் ஆவார். தனது தந்தையார் விரும்பியபடி அவரது மூத்தம்மான் வி.வேலுப்பிள்ளைப் புலவரின் "சைவசித்தாந்த சங்கிரகம்" நூலின் புதியபதிப்பினைத் திருமுருகன் அவர்கள் வெளிக்கொணரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். புலவரது இறுதிக்காலம் 1945 எனக் கூறப்பட்டாலும் கருத்து வேறுபாடுகள் உள. அவர் சுமார் 55 வயதளவிலேயே மரணித்தார் எனலாம்.



# நீரிழிவு நோயைக் குணப்படுத்த

செல்வி இ.நர்மதா,
ஆரம்பக் கல்வித்துறை,
1ஆம் வருடம்.

நீரிழிவு நோய் இன்று உலகளாவிய ரீதியில் ஏறத்தாழ 10% – 12% ஆனவர்களைப் பாதித்துள்ளது. ஆசிய நாட்டிலேயே இதன் பாதிப்பு மிகவும் உயர்வாக உள்ளது. இந்நோ யை மிகச் சரியான முறையில் கட்டுப்படுத்தாவிடில் குருதிக்கலன்கள், சிறுநீரகங்கள், கண், நரம்புகள், இதயம், குடல், தசைகள் என்பன பெரும் பாதிப்படைகின்றன. இந்நோய் இப்போது வயது வேறுபாடின்றிப் பலரையும் பீடித்து வருகிறது.

இந்நீரிழிவானது பொதுவாக 35 வயதிற்குட்பட்ட இளம் பருவத்தினருக்கு சதையியானது இன்சுலினை உற்பத்தி செய்யத் தவறி விடுவதனால் ஏற்படுகிறது. இவர்கள் இன்சுலினை ஊசிமூலம் பெறவேண்டும். 35வயதிற்கு மேற்பட்டவர்களுக்குச் சதையியினால் போதியளவு இன்சுலின் சுரக்கப்படுவதில்லை. அவ்வாறு சுரக்கப்படினும் சிலவேளைகளில் உடலால் உரியமுறையில் பயன்படுத்தப்படுவதில்லை. இவர்களின் உயர் வெல்ல மட்டத்தினை உணவுப் பழக்கங்களாலோ அல்லது மாத்திரைகளாலோ கட்டுப்படுத்தலாம். ஆனால் சில நோயாளிகள் இன்சுலினை உள்ளெடுக்க வேண்டி வரலாம்.

இந்த இன்சுலின் உடலுக்குத் தேவையான சர்க்கரையை சமநிலையில் வைத்துக்கொள்ள உதவி செய்கிறது. நாம் உண்ணும் உணவிலுள்ள மாப்பொருளிலிருந்தே சுகர் (Sugar) எனும் சர்க்கரைப் பொருள் கிடைக்கிறது. இன்சுலின் சுரப்பது குறையும்போது, அதிகமான சர்க்கரைப்பொருள் வெளியேற்றப்படாமல் இரத்தத்திலும், சிறுநீரிலும் அதிகளவில் கலக்கப்படுகின்றது. இதனால் இரத்தத்தின் அடர்த்தி அதிகரிக்கப்படுகிறது. இந்த அடர்த்தியான இரத்தத்தை இதயமானது கடினமாக வேலைசெய்து, உடலில் பல பாகங்களுக்கு நகர்த்த வேண்டியுள்ளது. இதனால் உடலில் களைப்பு உண்டாகிறது. மேலும் சிறுசிறு இரத்தக் குழாய்களில் கடுமையான அடைப்பு ஏற்பட்டு விடுகின்றது. இதனால் உடலில் கால், கை போன்ற சில இடங்கள் மரத்துப் போய்விடுகின்றன. இரத்தத்திலுள்ள சர்க்கரையை அதிக அளவில் பிரித்துச் சிறுநீருடன் கலந்து வெளியேற்ற சிறுநீரகங்கள் கடுமையாக வேலைசெய்ய வேண்டியுள்ளது. எனவே, சிறுநீரகங்கள் நாளடைவில் பாதிக்கப்பட்டு, ஒரு காலத்தில் சிறுநீரகங்கள்கூட வேலைசெய்யாமல் (Kidney Failure) பழுதாகிவிட வாய்ப்புண்டு. சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு விடுவதால் இரத்தத்திலுள்ள உப்புக்களும் பிரிக்கப்படாமல் போகவே, உடலில் உப்புச் சேர்ந்து சிலருக்கு கை, கால், முகம் போன்றன வீக்கம் அடைகின்றன. உடலில் உப்புச் சேருவதால் ஏற்கனவே இரத்த அழுத்த நோய் உள்ளவர்களுக்கும் இன்னும் இரத்த அழுத்தம் அதிகரிக்கப்பட்டு பின்பு அந்நோயாளிகளுக்கு "மாரடைப்பு" (Heart attack) ஏற்பட வாய்ப்புண்டு.

அதிகளவு தண்ணீர்த் தாகம், அடிக்கடி சிறுநீர் வெளிச்செல்லுதல், தலைச்சுற்று, சோர்வு, உடல்மெலிவு, நாவறட்சி, கைகால் விறைப்பு போன்றவற்றை நீரிழிவுக்கான அறிகுறிகளாகும். இந்நோயாளிக்கு நோய் எதிர்ப்புசக்தி குறைவதால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகின்றன. நீரிழிவு நோயாளர்களுக்கு இரத்தப் பரிசோதனையும், சிறுநீர்ப் பரிசோதனையும் அவசியமாகச் செய்ய வேண்டும். இந்நோயை ஆரம்பத்தில் இனங்கண்டால் அதன் தாக்கத்தைக் குறைக்க முடியும். இந்நோயை முழுமையாகக் குணப்படுத்த முடியாது; கட்டுப்படுத்த முடியும். அதற்குத் தகுந்த வைத்திய ஆலோசனை பெறுவதே சிறந்த வழியாகும்.



# வீட்டு வைத்தியம்
## நாட்டு மருந்துகளும் மூலிகைகளும்

செல்வி குயின்சி பஞ்சராசா
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'C'.

நமது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை காற்றும், நீரும், உணவுமேயாகும். இவற்றுள் நாம் உட்கொள்ளும் உணவில் உபயோகப்படும் பதார்த்த வகைகளில் சில முக்கியமானவைகளையும், இயற்கையின் மாறுதலாலும் உணவின் பேதத்தாலும் அப்போதைக்கப்போது நம் உடலில் ஏற்படும் சிறு மாறுதல்களுக்கு அதாவது பிணிகளுக்கு அம்மூலிகை வகுப்பின் சம்பந்தமான சில நன்மைகளையும் இங்கு கூறுவோம்.

பண்டைய தாய்மார்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு நோய் வந்தால், பழக்கமான சில பொருட்களைக் கொண்டு கஷாயமிட்டோ, சூரணம் செய்தோ கொடுத்துப் பிணிகளை நீக்கி வந்தார்கள். இக்காலத்திலுள்ள தாய்மார்களோ, குழந்தைகளுக்குச் சளி பிடித்தாலும், வயிற்றில் சிறுமந்தம் உண்டானாலும் உடனே மருத்துவர்களை நாடிச் செல்கின்றனர். இது குடும்பம் நடத்துவதில் சிக்கனமுறை அன்று.

ஆகவே, நாம் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களுக்கு நம்நாட்டு மருந்து வகைகளில் சாதாரணப் பழக்கத்தில் உள்ளவைகளில் சிலவற்றை உபயோகிக்கும் முறையைக் கற்றுக்கொடுத்துச் சிறு வியாதிகளுக்குக் கையாளச் செய்வது சிக்கன முறையாகும்.

நம் முன்னோர்கள் சாப்பிடும் சாப்பாட்டிற்குக் கைக்குற்றலரிசி உபயோகித்தார்கள். கீரை வகைகளையும் உணவு வகைகளில் சேர்த்து வந்தார்கள். அதனால் உடல் பலவீனமடையாமல் நீண்டநாள் நரை திரையின்றி வாழ்ந்து வந்தார்கள். நாமும் அப்பழக்கத்தை அனுசரித்து வந்தால் சுகவாழ்வு வாழலாம்.

எல்லாக் கீரைகளையும் அதிகமாக உண்ணுவது சரியன்று. கீரைகளை நாள்தோறும் உண்டால் குடலில் கிருமிகள் உண்டாகும் என்பதனையும் நாம் அறிய வேண்டும். பத்தியக் கீரைகளாகிய அரைக்கீரை, பொன்னாங்கன்னி, மணித்தக்காளி இவைகளைப் பெரும்பான்மையாக உபயோகிக்கலாம்.

*சுக்கு:-*

இது மிகவும் சாதாரணமாய்க் கிடைக்கக்கூடியது. இதன் தோல் நஞ்சுக் குணமுடையது. இதை எப்போதும் தோலைச் சீவியே உபயோகிக்க வேண்டும்.

*குணம்:-* சுக்கு வயிற்றிலுள்ள மந்தத்தை நீக்கி, ஜீரணத்தை உண்டாக்கிப் பசியை உண்டு பண்ணும். வயிற்றில் காற்று நிறைந்திருந்தால் அக்காற்றை வெளிப்படுத்தி வேதனையைத் தணிக்கும்.

*உபயோகம்:-*

1. சுக்கின் தோலைச் சீவிய பிறகு அதை நெருப்பிலிட்டுச் சுட்டு நெய்யில் தேய்த்து உட்கொண்டால் மந்த பேதியைக் குணமாக்கும்.
2. சுக்கை, கஷாயமிட்டுச் சாப்பிட மந்தம், வயிற்றுவலி, வாந்தி, வயிற்று உப்சம் முதலியவை தீரும்.
3. சுக்கை வாயிலிட்டு மென்று சாரத்தை மாத்திரம் விழுங்கினால், தொண்டைக்கட்டும், குரல் கம்மலும் தீரும்.
4. சுக்கை இழைத்து நெற்றியில் இலேசாகப் பற்றிட்டு நெருப்பனல் படும்படி செய்தால், தலைவலி தீரும்.
5. சுக்கை வாயிலிட்டு மென்றால் பல்வலி சாந்தமாகும்.

*மிளகு:-*

மிளகுக்குக் கறி என்னும் பெயரும் உண்டு. சாதாரணமாக நாம் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசும்போது "உங்கள் வீட்டில் இன்றைக்கு என்ன கறி?" என்று கேட்கிறோம். பதார்த்தங்களுக்கு இப்பெயர் வந்த காரணம் எல்லாப் பதார்த்தங்களும் மிளகு சேர்த்துச் செய்யப்பட்டதேயாகும். அப்பழக்கம் இப்போது பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். மிளகைப் பதார்த்தங்களில் சேர்ப்பதால், பதார்த்தங்களிலுள்ள விசத்தன்மைகள் நீக்கி, பதார்த்தம் நிற்குணத்தை அடையும். மிளகு விஷத்தை நீக்கும் குணமுடையது. எல்லா விஷங்கட்கும் மிளகு முறிவு என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

*குணம்:-* மிளகு நம் வயிற்றிலுள்ள வாயு, முறைச்சுரம், வாதம் இவைகளை நீக்கி உடலைக் காக்கும்; வெப்பத்தையும் உண்டாக்கும்.

*உபயோகம்:-*

1. மிளகைப் பொடி செய்து உண்டால் பசி அதிகரிக்கும்.
2. மிளகுத் தூளைக் கஷாயமிட்டுக் குடிக்கத் தொண்டைக் கம்மலும், தொண்டை இரணமும், வயிறு சம்பந்தமான நோய்களும் தீரும்.
3. மிளகுத் தைலத்தில் தலை முழுகினால் வாதரோகம், செவிடு, புத்தி மந்தம் முதலியவை குணமடையும்.

*திரிகடுகம்:-*

சுக்கு, மிளகு, திப்பிலி இம்மூன்றும் சேர்ந்த கூட்டுச்சரக்குக்குத் "திரிகடுகம்" என்பது பெயர். தமிழில் "திரிகடுகம்" என்னும் பழந்தமிழ் நூல் உண்டு. அந்நூலுக்கு இப்பெயர்வரக் காரணம் என்ன? எப்படித் திரிகடுகம் நோய் நீக்கி உடலைக் காக்குமோ, அப்படியே திரிகடுக நூலும் தன்னைக் கற்பவனுக்கு மன இருளை நீக்கி அறிவு வளரச் செய்யும் என்பதாகும். இந்த முக்கூட்டுச் சரக்கினாலும் இவற்றுள் ஒவ்வொன்றாலும் தனித்தனி தீர்க்கக்கூடிய நோய் எல்லாம் தீரும்.

*நெல்லிக்காய்:-*

நெல்லிக்காய் பித்தத்தைச் சமானப்படுத்தும். இதைத் துவையல் செய்து சாப்பிட்டால் வாய் நீரூறலும், அரோசகமும், வாந்தியும் தீரும். இதன் இலைக்கொழுந்தை அரைத்து மோரில் கலந்து சீதபேதிக்கு உட்கொள்ளலாம்.

*சீரகம்:-*

இதற்குப் 'போஜன குடாரி' என்பது மற்றொரு பெயர். ஒருவன் அளவுக்கு மிஞ்சி உணவு உண்டு விட்டால், சீரகத்தைப் பொடித்து வாயிலிட்டு நீர் குடிக்க உண்ட உணவு ஜீரணமாகிவிடும். இதற்குச் செரிப்பிக்கின்ற தன்மை இருக்கின்றமையால் மிளகு ரசத்தில் சீரகத்தைச் சேர்க்கிறார்கள்.

*குணம்:-* சீரகத்தால் பித்தம், வாந்தி, வயிற்றுவலி முதலியவை குணமாகும்.

*உபயோகம்:-*

1. இதைப் பொடித்து வெண்ணையில் கொடுக்க வயிற்றெரிச்சல் குணமாகும்.
2. சீரகத்தையும் உப்பையும் சமமாகப் பொடித்து வாயிலிட்டு நீர் குடிக்க, அஜீரணமும் பசியின்மையும் தீரும்.
3. சீரகத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் பாவனைசெய்து சாப்பிட, வாந்தியும் பித்தமும் தீரும்.

*வெள்ளைப் பூண்டு:-*

நாம் உண்ணும் உணவில் நாடோறும் உபயோகிக்கும் பொருள்களில் வெள்ளைப் பூண்டும் ஒன்று. இது உடலிலுள்ள வாய்வையும் குடலிலுள்ள கிருமிகளையும் நீக்குவதுமன்றிக் குடற்புண்ணை ஆற்றுவதிலும் நிகரற்றது.

*குணம்:-* வெள்ளைப் பூண்டினால் கட்டிகளும், செவிடும், இருமலும், சுவாசமும், புரையோடும் புண்களும் குணமாகும்.

*உபயோகம்:-* வெள்ளைப் பூண்டை அரைத்துக் கட்டிகளுக்குப் பற்றிடலாம். இதன் சாரத்தைக் காதில் இரண்டு துளி பிழியக் காது செவிடு குணமாகும். இதன் சாற்றை வெளிப் பிரயோகமாகப் புரையோடும் புண்களுக்கும் நாட்பட்ட இரணங்களுக்கும் பூச, அவை ஆறிவரும்.

*அதிமதுரம்:-*

இதைக் கஷாயமிட்டுக் குடிக்க, வறட்டிருமல் தீரும்.

*அதுமதுரப்பால்:-*

இது மருந்துக் கடைகளில் (Country Medicine shop) கிடைக்கும். இது கறுப்பு உருளைத் துண்டுகளாக விற்கப்படும். இதைச் சாதாரண இருமலுக்கு வாயில் அடக்கிக்கொள்ளக் குணமாகும்.

*துளசி:-*

இது ஒரு கற்பக மூலிகை. இதைச் சஞ்சீவி என்றுஞ் சொல்லலாம். இதனால் கபம், சுரம், தாகம், மந்தம் இவை போகும்.

*உபயோகம்:-* இதைக் கஷாயமிட்டோ அல்லது தனிச் சாற்றோடு தேன் கலந்தோ சாப்பிட, மேலே கூறிய பிணிகள் தீரும்.

*பொன்னாங்கன்னிக் கீரை:-*

இதன் பெயரை நாம் நன்றாக நோக்கினால் இதன் குணம் விளங்கும். இதைச் சமைத்துச் சாப்பிட நமது உடல் பொன்னாகும் என்பது இதன் கருத்து. இதனால் கண்ணிலுண்டாகும் நோயாகிய கண் காசம், தேகச்சூடு, மண்ணீரல் நோய் ஆகியவை போகும். உடல் பொன்னிறமடையும்.

இதைத் துவட்டிச் சாப்பிட உடல் காந்திபெறும். இதை உப்பில்லாமல் வேகவைத்து வெண்ணெயுடன் கலந்து 40 நாட்களுக்கு வைத்துக்

கட்ட வாதம் அல்லது கப சம்பந்தமான கண் வியாதிகள் தீரும். இதன் தைலத்தைத் தேய்த்துத் தலை முழுகக் கண்நோய்கள் தீரும்.

*மணித்தக்காளிக்கீரை:-*

இந்தக் கீரை நாப்புண், நாவேக்காடு இவைகளைத் தீர்க்கும். மணித்தக்காளி வற்றல் குடற்புண்களை ஆற்றும். இதன் இலையைப் பச்சைப் பயற்றுடன் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட வாய்ப்புண்ணும் குடற்புண்ணும் குணமாகும். இதன் இலை ரசத்தை வாயில் விட்டு ஊறவைத்து உமிழ வாய்ப்புண் ஆறும். இதன் வற்றலைக் குழம்பு செய்து சாப்பிடக் கல்லீரலின் சூடும் குடற்புண்ணும் தணியும். நீரடைப்புத் தீரும்.

உசாத்துணை நூல்:-
குடும்பக்கலை

## நிலா

கம்பனோடு பாரதியார்
கண்ட வெண்ணிலா – தமிழ்க்
கவிதைபோல உலகமெங்கும்
காதல்செய் நிலா

தம்பியோடு தங்கைகண்டு
தாவும் வெண்ணிலா – எங்கள்
தாத்தா பாட்டி கதைகள் சொல்லித்
தந்த வெண்ணிலா

ஆறுமாதக் குழந்தை போல
அழகுபூண் ணிலா – எங்கள்
ஆடலிறை வேணியிலே
அணியுங் கூன்நிலா.

வேறுவேறு நாட்டவர்க்கும்
விளங்கு வெண்ணிலா
வெண்ணெய் போல மண்ணிற் சோதி
விரியும் வெண்ணிலா

மாலைவந்து மேற்குவானில்
மறையுங் கூன்நிலா – வரும்
மாதமொரு நாளிற்பூத்து
வாழும் வெண்ணிலா

காலமென்னுங் கோலவுண்மை
காட்டிடும் நிலா – கவிக்
கற்பனைக்குக் கலகமாகக்
காணும்வெண் ணிலா

பேதமின்றி யார்க்குமன்பு
பெய்திடும் நிலா – வாழ்வின்
பேதைமைக்குப் போதமாகப்
பேணிடும் நிலா.

வேதன்நான்கி னோடுவாழும்
வெண்ணிலா நிலா – வெற்றி
வீரன்போலப் பூரணையில்
விளங்கிடும் நிலா

அப்பம் என்று அன்னன்பாடி
அழைத்த வெண்ணிலா – அவர்
அழகு தமிழ்ப் பாடல்போல
அலர்ந்த முழுநிலா

எப்பொழுதும் கவிதைபோல
இருந்திடாய் நிலா – தினம்
இனிமை செய்யும் பூரணையாய்
இலங்கிடாய் நிலா.

*அமரர் பாண்டியூரன்*



# சித்த மருத்துவம்

திருமதி க.ஜீவகன்,
ஆரம்பக் கல்வித்துறை,
1ஆம் வருடம்.

வாழப் பிறந்த மனிதனுக்கு அடிப்படைத் தேவை விலைமதிப்பற்ற நல்வாழ்வு ஆகும். இத்தகைய நல்வாழ்வை அவன் பெறவேண்டியது அவனது கடமையும் உரிமையுமாகும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. இன்று நமது வாழ்க்கைக்குப் பொருத்தமான, பிணிதீர்க்கும் மருத்துவ முறைகளில் முக்கியமானதும் முதன்மையானதும் சித்த மருத்துவம்தான். இதன் சீரும், சிறப்பும், ஆங்கில ஆட்சிக் காலத்தில் மேற்கத்தேய கலாசாரத்தால் பின்னுக்குத் தள்ளப்பட்டு ஒளிகுன்றி வீழ்ச்சியடைந்தது. மேலும், நவீன ஆதிக்கத்தாலும் மோகத்தாலும் இயற்கை மருத்துவ முறைகள் இலைமறை காயாகி விட்டன. அலோபதி மருத்துவ முறையின் எதிர்விளைவுகள், பக்க விளைவுகள் மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதோடு இயன்றளவு பெரும் சிக்கலாகவே உள்ளன. பின் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் மருந்துகளைக் கொடுக்கும் இன்றைய சூழலில் மாற்று மருந்து முறைகள் பற்றி மக்கள் சிந்திக்கலாயினர். எனவே, மண்ணின் மருத்துவமான சித்த மருத்துவம் இப்போது மாற்று மருந்தாகப் பயன்படுகிறது.

இயற்கையின் கொடையான நிகரற்ற நற்குணம் வாய்ந்த மூலிகைகளை கீரையாகச் சமைத்தும், துவையலாக அரைத்தும், பொடியாக உணவில் கலந்தும் சாப்பிடுவதன் மூலம் சித்த மருத்துவம் உணவு மருத்துவமாக மாறுகிறது. வாழ்வின் அறுசுவைகளைச் சமஅளவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் வாதம், பித்தம், கபம் ஆகிய முக்குற்றங்களைச் சமன் செய்து நோயின்றி வாழமுடியும். இதில் ஏதேனும் ஒன்று குறையினும், மிகினும் நோய்வரும் என்பது சித்தர்களின் கருத்து. இம்மருத்துவ முறையில் மருந்துகள் இயற்கை மருந்து, செயற்கை மருந்து என இருவகைப்படும். வேர், பட்டை, தழை, கொட்டை, பூ, காய் போன்றன இயற்கை மருந்துகளே. மாத்திரை, இளகல், மெழுகு, எண்ணெய் போன்ற பிறவும் செயற்கை மருந்துகளாகும். தமிழ் மருத்துவத்தில் இயற்கை மருந்துகளே பெரும்பான்மை. "வேர்பார் தழைபார் மெல்ல மெல்ல செந்தூரம் பற்பம் பார்" என்பது தமிழ் மருத்துவப் பழமொழி ஆகும். "ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை மருத்துவன்" எனும் பழமொழியும் இயற்கை மருந்தின் பயன்பாட்டை வலியுறுத்துவதாகும்.

உலகில் முதல் முதலாக உணரப்பட்ட மருத்துவப் பொருள் மூலிகைகளே. நாம் பயன்படுத்தும் கீரை, காய்கள், கனிகள் எல்லாமே ஒவ்வொரு வகையில் சித்த மருத்துவப் பண்டங்களே. மூலிகை மருந்துகள் உடலோடு கலந்து நோயைக் குணப்படுத்துகின்றன. தற்காலத்தில் மாறுபட்ட பழக்கவழக்கங்களாலும் சுற்றுச்சூழல் சீர்கேட்டாலும், மக்கள் அடிக்கடி நோய்வாய்ப்படும் நிலையில் உள்ளனர். மேலைநாட்டு மருத்துவத்திற்கு ஆகும் செலவு ஏழை எளிய மக்களால் தாங்கக்கூடியதாக இல்லை. மேலும், அம்மருந்துகள் நோயை முற்றிலும் நீக்கக்கூடியதாக இல்லாமலும் பின் விளைவுகள் தரக்கூடியதாகவும் உள்ளன. மூலிகை மருத்துவம் சிக்கனமாக எளியவராலும் கைக்கொள்ளக் கூடிய ஒன்றாகும்.

மக்கள் பிணிநீக்குவதற்குரிய மூலிகைகளை மலை, காடுகளிலிருந்து கொண்டுவந்து நாட்டு மக்களிடையே அறிமுகம் செய்து பயிர்செய்யவும் உணவாகப் பயன்படுத்தவும் மிக முற்காலத்தில் சித்தர்கள் அறிவுறுத்தியுள்ளனர். உதாரணமாக இஞ்சி, மிளகு, கடுகு, ஓமம், சீரகம், மஞ்சள், பூண்டு, வெந்தயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரே மூலிகைக்குப் பல பெயர்களுமுண்டு. உதாரணமாக, அவுரியை நீலி எனவும் அழைப்பர். இதனையே "அப்பாடா நீலி அவுரியடா அறுபத்து நான்கு பெயரைக் கொன்றவளடா" என்றும், ஆடாதோடையின் அருமையை "ஆடா தோடைக்கும் ஐந்து மிளகுக்கும் பாடாத நாவும் பாடும்" என்றும் விளக்குவர்.

எனவே, தரையில் வளரும் மருத்துவ மூலிகைகளை தரைமட்டமாக்காமல், மண்ணைச் சார்ந்த மருத்துவத்திற்கு நாம் மதிப்பளித்தல் வேண்டும்.



# விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்தும் மனிதனிடம் அமைதியில்லையே!

திருமதி நாளினி அருள்லிங்கம்
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'E'.

ஏர் பூட்டி எருதிழுக்க ஏக்கர் கணக்கான நிலங்களை உழுது பயிரிட்டு உற்றார் உறவினரோடு உண்டு மகிழ்ந்தான் அன்றைய மனிதன். அவனுடைய மனதிலே அமைதி இருந்தது; மகிழ்ச்சியடைந்தான். இன்று இயந்திரக் கலப்பைகள் குறுகிய நேரத்துள் பெருமளவிலான நிலங்களை உழுது முடிக்கின்றன. நடையில்லை, களைப்பில்லை, உழவு இயந்திரத்திலிருந்தபடியே வயலை உழுகின்றான். விஞ்ஞான தொழில்நுட்பத்தின் வளர்ச்சி வெளிப்பாடே இந்த உழவு இயந்திரம். இருப்பினும் இன்றைய கமக்காரனின் மனதில் அமைதியில்லை, மகிழ்ச்சியில்லை, ஏன்? உண்மையில் ஆள் நடந்து உழுதலால் ஏற்பட்ட வலி குறைந்தபோது மகிழ வேண்டுமல்லவா? இதற்குப் பல காரணங்கள் உண்டு. பொதுவாக வசதிகள் அதிகரிக்கத் தேவைகளும் அதிகரிப்பது இயல்பே. தேவைகள் அதிகரிக்க அவற்றை அடைய முடியாதவிடத்து கவலை ஏற்படவே செய்யும். திருவள்ளுவர் இந்த இடத்தில் பொருந்தும் படியான ஒரு குறளைக் கூறுகின்றார். அதாவது, "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இவன்" என்பதாம்.

அல்பிரட் நோபல் என்ற சுவீடன் விஞ்ஞானி டைனமைற் என்று சொல்லப்படும் வெடிமருந்தைக் கண்டுபிடித்தார். அதன் மூலம் ஏராளமான பணத்தைச் சேர்த்தார். வெடிமருந்தை ஆக்க வேலைகளுக்கு மட்டுமல்லாது, அழிவு வேலைகளுக்கும் பயன்படுத்தலாம். அழிவிற்கே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டது. யுத்த காலங்களில் அதிகமாக விற்கக்கூடிய பொருளான இந்த வெடிமருந்தைச் சகலரும் அறிவர். மணம் முடிக்காது தனிமனிதனாக வாழ்ந்த விஞ்ஞானி அல்பிரட்நோபல், தனது கண்டுபிடிப்பு அழிவுப்பாதைக்குப் பயன்படுவதையும், பயன்படப் போவதையும் உணர்ந்தார். தனது வாழ்வின் கடைசி நாட்களில் உலகில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று தனது சொத்துக்களை அதற்கு பயன்படுத்தும்படி உயில் எழுதிவிட்டு மறைந்தார். அல்பிரட்நோபல் விட்டுச்சென்ற நிதி நோபல் பரிசுக்குப் பயன்படுகின்றது.

சமாதானம், இலக்கியம், இரசாயனம், பௌதீகம், வைத்தியம் போன்ற துறைகளுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகின்றது. இந்தக் கண்டுபிடிப்பு, விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் மொட்டுவிட்டு மலர்ந்தமையினால் நறுமணத்தைப் பரப்பவில்லை; மாறாக வெறுப்பைப் பரப்பியது. இது கண்டுபிடிப்பின் தவறா? அல்லது தவறான பாதையில் பாவிப்பவர்களின் தவறா? பயன்பாட்டிலேயே அதன் நன்மையும் தீமையும் அமைகின்றது.

தொலைத்தொடர்புச் சாதனங்கள் இன்று துரிதவளர்ச்சி அடைந்துள்ளன. தீப்பெட்டி அளவிலான கையடக்கத் தொலைபேசி மூலம் ஒருவர் இருந்த இடத்தில் இருந்துகொண்டு வீதியோரம் நடந்தபடியேயும் உலகின் எந்தப் பகுதிக்கும், எந்த நேரத்திலும், எவருடனும் கதைக்கக்கூடிய விதத்தில் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. காளான்களைப் போல எல்லா இடமும் கையடக்கத் தொலைபேசி விற்பனை மற்றும் அது தொடர்பான பொருட்கள் விற்பனை நிலையங்கள் முளைத்துள்ளன. ஒருவரிடம் எழுதுவதற்கு ஒருபேனை இல்லாவிட்டாலும், ஒரு கையடக்கத் தொலைபேசி சட்டைப் பையில் இருக்கக்கூடிய நிலையே இன்று காணப்படுகின்றது. வீதியிலே வாகனத்தைச் செலுத்திச் செல்லும் சாரதிகள் முதல் ஆலயத்துள்ளே ஆண்டவனை வணங்கிச் செல்பவர்கள் வரை பெரும்பாலோரது கைகளிலே இக்கையடக்கத் தொலைபேசிகள் இருப்பதைக் காணலாம். ஒரு மனிதன் ஆலயத்திற்குச் செல்வது அமைதி வேண்டிச் சில நிமிடங்கள் என்றாலும், இந்த உலகத் துன்பங்களில், அல்லல்களில், அட்டூழியங்களிலிருந்து விடுபட்டு, பூசை வழிபாட்டில் கலந்து, பிரார்த்தனையிலீடுபட்டு, இறைவன் திருவருளை வேண்டுவதற்கே. இறைவனை மெய்யன்போடு அழுது தொழுதால் அவன் அருளைப் பெறலாம் என்று அருளாளர்கள் கூறுவர். "யானே பொய் என்நெஞ்சும் பொய் என் அன்பும் பொய், ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்று கூறுவார் மாணிக்கவாசகர் சுவாமிகள். ''பரம்பொருளின் பெரும்புகழைப் பேசலன்றி வேறொன்றும் பேசற்க ஆலயத்துள்'' என்று பெரியோர்

குறிப்பிடுவர். இவை எல்லாவற்றையும் அறிந்தும் ஆலயத்துள் வழிபட வருபவர்களில் சிலர் கையடக்கத் தொலைபேசியுடன் வருகின்றார்கள். ஆலயத்துள் நின்றபடியே வெளியே இருப்பவர்களுடன் சத்தமிட்டுக் கதைக்கிறார்கள். இதன் மூலம் ஒருவர், வழிபடும் அனைவருக்கும் தீங்கு விளைவித்தவராகின்றார். குளிக்கப்போய் சேறு பூசிய நிலைக்கு உள்ளாகின்றார். பிறவிக்குக் காரணமான பாவங்களிலிருந்து விடுபட்டுப் பேரின்பத்தை அடைவதற்குப் பதிலாக பெரும் பாவத்தைச் சேர்த்து பிறவிப் பெருங்கடலில் நீந்துகின்றார்கள். ஆலயத்துள் செருப்புக்களை யாரும் கொண்டு செல்வதில்லை. அதேபோல் கையடக்கத் தொலைபேசியையும் வெளியே வைத்து விட்டே இறைவழிபாட்டிற்கு ஆலயத்துள் செல்லுதல் அறத்தோடமைந்த வழியென்பதை உணர்தல் வேண்டும்.

சிலர் நூல்நிலையங்களுக்குக் கையடக்கத் தொலைபேசியுடன் வருகின்றார்கள். பலர் அமைதியாக அன்றாடப் பத்திரிகைகளை, புத்தகங்களை ஆழ்ந்து ரசித்துப் படித்துக் கொண்டிருக்கையில் ஒரு குழந்தை அழுவதுபோல அல்லது நாய் குரைப்பது போல ஒரு சத்தம் தொடர்ந்து கேட்கும். வந்த நபர் கவலையேதுமின்றி தொலைபேசியை சட்டைப் பையிலிருந்து எடுப்பார்; அடுத்திருப்பவர்களைப் பற்றிச் சிந்தியாது உரத்துக் கதைப்பார்; அதட்டுவார்; சிரிப்பார்; பலசந்தர்ப்பங்களில் இப்படியாகக் கதைப்பவர்களை நூலகரோ அல்லது பாதுகாப்பு ஊழியர்களோ வற்புறுத்தி வெளியே அனுப்பியிருப்பதையும் கண்டிருக்கின்றோம். சில சந்தர்ப்பங்களில் இப்படியானவர்களைக் கண்டித்தததையும் அறிவோம். எது எவ்வாறாயினும் ஒரு பொருளின் தேவையும் முறையான பயன்பாடும் அவற்றைப் பாவிப்பவர்களையே சேரும். விரைவான தொடர்பாடலுக்காக விஞ்ஞானம் ஆக்கித்தந்த வியத்தகு பொருளே இந்த கையடக்கத் தொலைபேசி. அவசிய தேவைக்கு வசதிகளற்ற ஓரிடத்திலிருந்து பேசக்கூடிய சூழ்நிலையில் இதைப் பாவித்தால் தவறில்லை.

அடுப்புவைத்து, அதற்கு விறகுவைத்து, பானைசட்டி கரிப்பிடிக்க எரித்து, சுவையான சமையல் செய்து, பின் பாத்திரங்களை கரிபோகக் கழுவி சுத்தம் செய்வதோடு சமையலின்போது அடுப்பு புகையையும் உடலுள் எடுத்து துன்பப்பட்டனர் அன்று. இன்று எரிவாயு அடுப்புக்கள் வந்துள்ளன. கரியில்லை; புகையில்லை; களைப்பில்லை; ஒருசில மணிநேரத்துள் சமையல் முடிகின்றது. உளுத்தம்பருப்பை கழுவி ஊறவிட்டு கல்லுரலில் போட்டு மணிக்கணக்காக அரைத்துப் பதம்பார்த்து தோசை, வடை சுட்டது அன்று; இன்று விஞ்ஞானம், அரைத்துக் கஷ்டப்படாதீர்கள்; இதோ உங்களுக்குப் புது இயந்திரம்; இதில் அரைக்கலாம்; உடைக்கலாம்; மாவாக்கலாம் என்று மகிழ்வான செய்தியைக்கூறி, கையால் தூக்கக்கூடிய குறைந்த பாரத்திலமைந்த பொருட்களைத் தந்துள்ளது. இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது இயந்திர சாதனங்கள் நாம் உடல்நோக மணிக்கணக்காகச் செய்த வேலைகளைச் சில நிமிடங்களில் முடித்து, எவ்வளவோ நேரத்தை மீதப்படுத்தித் தந்துள்ளன.

ஆனால் இன்று யாரைக் கேட்டாலும் ''ஒன்றுக்கும் நேரமில்லை'' என்ற பதிலையே பெறுகின்றோம். அப்படியானால் விஞ்ஞானம் ஆக்கித்தந்த இயந்திர சாதனங்களால் மீதப்படுத்தப்பட்ட நேரமெங்கே? சிந்திக்க வேண்டிய விடயமிது! இன்று விஞ்ஞானம் தொழில்நுட்பம் வியப்படைய வைக்கும் நிலைக்கு வந்துள்ளது. சாதாரண மனிதன் மணிக்கணக்காக நாட்கணக்காகச் செய்த வேலைகளை இன்று இயந்திரங்களும் கணினிப் பொறிகளும் சில நிமிடங்களுக்குள் செய்து முடித்து மனிதனுக்கு ஓய்வையும் ஆறுதலையும் தந்துள்ளன. இருப்பினும் இன்றைய மனிதன் அமைதியாக, ஆறுதலாக, ஆனந்தமாக, நோய் நொடியின்றி ஒற்றுமையாக வாழ்கின்றானா? உண்மையில் விஞ்ஞானம் வளர்ந்த வேகத்தில் இவை அமையவில்லை. அன்பு, அருள், மனஅமைதி என்பவையே நிறைவை ஏற்படுத்தும். அமைதியை நிலைநாட்டும் மெய்ஞ்ஞானம் வேறு; விஞ்ஞானம் தொழிநுட்பம் வேறு. மெய்ஞ்ஞானத்தால் பெறும்பேற்றை விஞ்ஞானத்தால் பெறமுடியுமா?



முதலாம் வருடம் ஆரம்பநெறி
ஆசிரிய மாணவர்கள்



மூதறிஞர், கலாநிதி, பண்டிதர். க. சச்சிதானந்தன் அவர்கள்
அமரத்துவம் அடைவதற்கு முன்னர் 2007ஆம் ஆண்டு எமது கலாசாலை
'கலைமலர்' வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக்
கலந்து கொண்டபோது பிடிக்கப்பட்ட புகைப்படம்.



# இலங்கையின் சூழற் பிரச்சினைகள்

தி.அமிழ்தினி,
ஆரம்பக் கல்வித்துறை,
1ஆம் வருடம்.

இலங்கை மத்திய சூழல் பாதுகாப்பு அதிகாரசபை இலங்கையின் பல்வேறு இயற்கைச் சூழல் அம்சங்கள் பாதிப்புற்று வருவதை அடையாளம் கண்டுள்ளது. நிலம், நீர், வளி, உயிர்ச்சூழல் ஆகிய அம்சங்களில் மாசடைந்த தன்மைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இயற்கைச் சூழலின் இயற்கை நிலைமையை மாற்றும் செயற்பாடுகளினால் ஏற்பட்ட சூழல் மாசடைதலும் அதனால் அங்கிகளுக்கும் சூழலுக்குமிடையிலான சமநிலை அற்றுப்போதலும் இலங்கையைப் பொறுத்தவரையில் ஏனைய சில நாடுகளைப் போன்று பாரதூரமானவையல்ல. எனினும் இலங்கையின் பௌதீகச்சூழல் தன்மைகள் மாசடைந்து வருகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

காட்டு வளமழிதல் இலங்கையில் அதிகரித்துச் செல்கின்றது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 27% காட்டு நிலப்பரப்பாகும். முன்னர் 48% காட்டு நிலப்பரப்பாக இருந்தது. பின்னர் பெருந்தோட்ட விருத்திக்காக மலைக்காடுகள் அழிக்கப்பட, குடியேற்றத் திட்டங்களுக்காகவும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும் உலர்வலயக் காடுகள் அழிக்கப்படுகின்றன. விறகுத் தேவைக்காகவும் காடுகள் அழிக்கப்படுவதால் காட்டு மரங்கள் $CO_2$ஐ சுவாசித்து $O_2$ ஐ வெளிவிடுகின்றன. இவற்றினால் மண்ணரிப்பு துரிதப்படுத்தப்படுகிறது; மழைவீழ்ச்சி குன்றுகிறது; தாவரசமூகமும், விலங்கினங்களும் பாதிப்புற்று வருகின்றன.

பலதேவைகளின் நிமித்தம் காடுகள் அழிக்கப்படுவதனால் மண்ணரிப்பும் மண்சரிவும் ஏற்படுகின்றன. இதனால் இலங்கையின் பெருந்தோட்ட நிலங்களில் 30செ.மீ. தடிப்பு வரையிலான மேல் மண் நீக்கப்பட்டுவிட்டது எனக் கணித்துள்ளனர். இலங்கையின் உலர் வலயத்திலும் மண்ணரிப்பினை அவதானிக்கலாம். தரிசாகிவிட்ட நிலங்கள் இதற்குச் சான்றாகும். இலங்கையின் கரையோரங்கள் சமூக, பொருளாதார, சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை. இங்கு கடல் அரிப்புக்கு முக்கிய காரணம், கரையோர மணல் அகழ்தல், ஆற்று மணல் அகழ்தல், உள்நாட்டு முருகைக் கற்சுரங்கம் அகழ்தல் கரையோர முருகைக் கற்களைச் சேகரித்தல், கடற்பார்த் தொடரை வெடிவைத்துத் தகர்த்தல், முறையற்ற கடல் தடுப்பு அணைகள், முறையற்ற கரையோரக் கட்டடங்கள், கரையோரத் தாவரங்களை நீக்குதல் என்பனவாகும்.

இலங்கையில் முருகைக் கற்பார்கள் யாழ்ப்பாணத் தீவுகளிலும், மன்னார் வளைகுடா, புத்தளக்கரை, தென்மேற்குக் கரை, சின்னப்பாஸ் பாறை, பெரியபாஸ் பாறை, மட்டக்களப்பு, நிலாவெளி முதலான கரையோரங்களில் காணப்படுகின்றன. இந்த முருகைக் கற்பாறை அகழ்தல் ஒரு பெரும்சூழற் பிரச்சினையாக மாறிவிட்டது. இலங்கையின் கரையோரங்களில் முருகைக் கற்பார்கள் அகழ்ந்தெடுக்கப்படுவதால் கடலரிப்பின் மூலம் நிலத்தை இழக்கும் நிலை தோன்றியுள்ளது. கடல் உயிர்கள் முருகைக் கற்களில் தங்கியுள்ளன. இதனால் இந்த வளம் அழிவுறுகின்றது. அமிலப்புகை சூழலைப் பாதித்து வருகின்றது. கடல்நீர் தரையின் கீழ் ஊடுபரவ வாய்ப்பாகின்றது. இவ்வாறான செயன்முறைகள் முருகைக் கற்பார் பிரச்சினைகளாகும்.

இலங்கையின் கட்டடத் தேவைகளுக்காகவும் பள்ளக் காணிகளை நிரப்புவதற்காகவும் மணல் அகழ்ந்து எடுக்கப்பட்டு வருவதனால் கடலரிப்பு, நதியோட்டம் நிகழமுடியாமை, கடல்நீர் நிலப்பகுதிக்குள் புகுதல், உவர்நீர் நதிப்படுக்கைகளுள் வெள்ளப்பெருக்கின் போது புகுதல் ஆகியன ஏற்படுகின்றன. இதன் காரணமாகக் கரையோரத் தாவரங்கள் அழியும் நிலை ஏற்படுகின்றது.

நீர்நிலைகள் மாசடைவு இலங்கையில் பரவலாகப் பெருகிவருகின்றது. ஆறுகள், குளங்கள், கிணறுகள் என்பவற்றில் நீர்வறண்டு காணப்படுதல், இலை குழைகள் சருகாகிக் காற்றின் மூலம் நீர்நிலைகளில் விழுதல், கைத்தொழில் கழிவுகளும் விவசாய இரசாயனப் பொருட்களும் நீரில் கரைந்து செல்வதால் அடையல்கள் ஏற்படுதல் ஓடிவழியும் நீர்,

மீன்பிடிக் கலங்களும் கப்பல்களும் சிந்தும் எண்ணெய் முதலானவைகளால் நீர் மாசுபடுதல் முதலிய காரணிகள் நீரினை மாசடையச் செய்கின்றன. இவ்வாறான மாசுபடும் நீரினை மக்கள் அருந்துவதனால் அவர்களுக்கு வாந்திபேதி, வயிற்றுளைவு, செங்கண்மாரி, இரைப்பை நோய்கள், நெருப்புக் காய்ச்சல் குடல் சம்பந்தமான நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றின் மூலம் மரணம் ஏற்பட்டு சனத்தொகை குறைய வாய்ப்பாக உள்ளது.

இலங்கை மக்களது குடிநீர்த் தேவையையும் சிறிதளவு பயிர்ச் செய்கைக்கான நீர்த்தேவையையும் தரைக்கீழ் நீரே பூர்த்தி செய்து வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் குழாய்க்கிணறுகள் மூலம் நீரைப் பெற்று வருகின்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வாழ்வும் வளமும் தரைக்கீழ் நீரிலேயே தங்கியிருக்கிறது. நாட்டின் தரைக்கீழ்நீர் நன்னீரின் வளம் குறைதல், நன்னீர் உவராதல், நன்னீர் மாசடைதல் போன்ற சூழல் பிரச்சினைகள் காணப்படுகின்றன. கிணறுகளில் தோட்டத்திற்கு நீர் இறைக்க, நீர்இறைக்கும் யந்திரப் பாவனை மூலமும் தரைக்கீழ் நீர் பெறப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளால் கரையோரக் கிணறுகள், தீவுப்பகுதிக் கிணறுகள் பலவும் ஏற்கனவே உவராகி விட்டன. இன்று யாழ்ப்பாணக் கழிப்பிடங்கள் நீரடைப்பு மலசலகூடங்களாக மாறிவிட்டன. அதனால் கிணறுகளுக்கு அருகே மலக்குழிகள் அமைந்து வருகின்றன. இதனால் கிணற்றுநீர் மாசடைந்து வருகின்றது.

---

## *கலாசாலை வரலாற்றில்... (2)*

- *கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் இரண்டாவது அதிபர் திரு. ஆ.ஈ.சண்முகரெத்தினம் அவர்கள் 1936–1947வரை கோப்பாயில் கடமையாற்றிவிட்டு, 1947இன் தொடக்கத்தில் பலாலியில் புதிதாக உருவான ஆண்களுக்கான ஆசிரிய கலாசாலையின் அதிபராகச் சென்றுவிட்டார். கோப்பாயில் செல்வி ஞானம் முருகேசு அதிபராயிருந்தார்.*
- *திரும்பவும் 1980ஆம் ஆண்டளவில்தான் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆண்களும் கற்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. கற்கைநெறிகளும் கோப்பாய், பலாலி ஆகிய கலாசாலைகளுக்குப் பகிரப்பட்டன. ஆரம்பக்கல்வியும், அழகியலும் இங்கு பிரதானநெறிகளாயின.*
- *1960களில் கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசலை வெளியீடாகக் "கலைமலர்" உருவானது. தமிழ், நுண்கலை, சமூகவியல், இந்துசமயம், கிறிஸ்தவம், விளையாட்டு போன்ற துறைகளும் அவற்றுக்கான மன்றங்களும் செயற்பட்டன. அருணா, ராதா, சுவர்ணா என மூன்று இல்லங்களும் இயங்கின.*
- *1963–1985வரை திருமதி ரதிலக்ஷ்மி ஆனந்தக்குமாரசுவாமி அதிபராயிருந்தார். இவர் காலத்தில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. "சப்தமி" என்ற பொதுமண்டபம் (பின்னர் ரதிலக்ஷ்மி மண்டபம்), யோகமண்டபம், கிருஷ்ணை படிப்பகம் முதலியன குறிப்பிடத்தக்கன.*
- *அறுபதுகளில் "வாழக்கல்மின்" என்பது கலாசாலையின் மகுடவாசகமாயிற்று.*
- *1974ஆம் ஆண்டு மூன்றாவது பரிசளிப்புவிழா நடைபெற்றதாகத் தகவல்கள் கூறுகின்றன.*
- *1974இல் கல்வி I, II, இந்துசமயம், கிறிஸ்தவம், தமிழ்மொழி, கணிதம், சூழல், கைவேலை, சித்திரம், பொதுவிஞ்ஞானம், உடற்கல்வி, நடனம், சங்கீதம் ஆகிய பொதுப்பாடங்களுடன் தெரிவுப்பாடங்களும் பயிற்றப்பட்டன.*
- *1972 புதிய கல்விச்சீர்திருத்தத்தின் பிரகாரமே அழகியற் பாடங்கள் ஆசிரிய கலாசாலைகளில் கற்பிக்கப்பட்டன. தனிநெறியும் உருவாக்கப்பட்டது.*
- *1974இல் 119பேரும், 1975இல் 120பேரும், 1979இல் 126பேரும் ஈராண்டுப் பயிற்சியை நிறைவுசெய்தனர்.*
- *1979ஆம் ஆண்டு 56 ஆண்டுகள் கடந்த நிலையில் 20வது மலர் வெளிவந்தது (வருடாந்த சஞ்சிகை). பல ஆண்டுகளில் வருடாந்த மலர் வெளிவரவில்லை.*
- *1980களில் சிங்களமும் கற்பிக்கப்பட்டது. மூன்றாண்டுகளாகப் பயிற்சிநெறிக் காலம் நீடிக்கப்பட்டது. இருப்பினும் 1983இல் மீளவும் இரண்டாண்டுகளாகப் பயிற்சிநெறிக்காலம் மாற்றப்பட்டது.*
- *175பேர் 1982இல் மூன்றாண்டுப் பயிற்சியை நிறைவுசெய்தனர் (1980–1982).*
- *12.01.1985இல் திருமதி ர.ஆனந்தக்குமாரசுவாமி இளைப்பாற, செல்வி ச.சின்னப்பு அதிபரானார். 1985ஆம் ஆண்டு "கலைமலர்" ஆனந்தக்குமாரசுவாமி சிறப்பிதழாக வெளிவந்தது.*
- *11.11.1989இல் ச.சின்னப்பு இளைப்பாறுதலும் திரு. வை.கா.சிவப்பிரகாசம் அவர்கள் அதிபரானார். 05.11.1991இல் சிறியளவில் வருடாந்த சஞ்சிகை "கலைமலர்" வெளியானது.*
- *1993 இல் திரு. வை.கா.சிவப்பிரகாசம் ஓய்வுபெற்றதும் திருமதி சிவா இராமநாதன் அதிபரானார். 31.10.1995 – 19.02.1996 காலப்பகுதியில் நாட்டின் அசாதாரண நிலைமை காரணமாகக் கலாசாலையின் செயற்பாடுகள் தடைப்பட்டன.*



# உளநெருக்கீட்டுக்கு உள்ளான பிள்ளைகளும், அவர்களை வழிப்படுத்துவதில் ஆசிரியரின் பங்கும்

திருமதி கலைவதனி
நவதீசன்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'D'.

பிள்ளைகளுக்குப் பலவிதமான உளப் பிரச்சினைகள் ஏற்படலாம். அவர்கள் அவற்றைத் தங்களது வளர்ச்சிக்கும் விருத்திக்கும் ஏற்ப, தங்களது இயல்புகள் அனுபவங்களுக்கு ஏற்ப, வெவ்வேறு விதங்களில் வெளிப்படுத்துவார்கள். சாதாரண வாழ்வியல் அனுபவங்களுக்குள் வராத பேரழிவுகள், உயிரிழப்புகள், எதிர்பாராத வகையில் ஏற்படுகின்ற எமது கட்டுப்பாட்டிற்குள் இல்லாத நெருக்கீடுகள் போன்றன பெரும்பாலானோரில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகக் காணப்படுகின்றன. சூறாவளி, நிலநடுக்கம், வெள்ளப்பெருக்கு, எரிமலையின் சீற்றம், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களும், போர் அனர்த்தங்களும் இவ்வாறான தன்மை உடையவையாக இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் வாழுகின்ற யாவரும் இந்த அனர்த்தங்களிடையேதான் நீண்டகாலம் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எமது நாட்டில் போர், சுனாமி போன்றவையே பிள்ளைகளின் உளநலம் பாதிக்கப் பிரதான காரணிகளாக உள்ளன என்று கூறலாம்.

பெற்றோரினதும், நெருங்கிய உறவினர்களினதும் இறப்புக்கள், பிள்ளைகள் மகிழ்வாக இருப்பதற்குரிய அன்பு, அரவணைப்பு, ஆதரவு ஆகியவற்றை இல்லாது ஆக்கிவிடும். இத்தகைய சூழ்நிலையில் சடுதியாக எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி சமூக ரீதியாக, உளரீதியாக, ஏன் உடல் ரீதியாகவும் பிள்ளைகள் பாதிக்கப்படலாம். பாதிப்பின் தரம் அவர்கள் அனுபவித்த, எதிர்கொண்ட கொடுமைகளின் கொடூரத்தைப் பொறுத்ததாக இருக்கும். போர்ச் சூழலில் பயங்கரமான சந்தர்ப்பங்களும் அதிர்வுகளும், உதவியற்ற நிலையும், மரணம் பற்றிய பயமும் சேர்ந்து அதீத நெருக்கீட்டை உணருகின்ற நேரமாக இருக்கின்றது. பொருள்கள், சொத்துக்களின் அழிவுகளைக் காணுதல், அன்புக்குரியவர்களின், அயலவர்களின் இறப்பைக் காணுதல், சிதைந்த உறுப்புக்களையும் சதைகளையும் இரத்தத்தையும் காணுதல் போன்ற பலவும் பிள்ளைகளின் மனங்களில் ஆழமாகப் பதிந்து போவதுடன் இவை பிற்காலங்களில் மாறாத வடுக்களாகிப் பெரியளவிலான உளவியல் தாக்கங்களை ஏற்படுத்த வல்லன. இவ்வாறு பாதிப்பிற்கு உள்ளான பிள்ளைகள் மன நெருக்கீட்டிற்கு உள்ளாகின்றனர்.

போர்ச்சூழலில் பிள்ளைகளுக்குத் தாக்கங்களை ஏற்படுத்தும் பொதுவான நெருக்கீடுகளாக,

1. *வறுமையும் போசாக்கின்மையும்*
2. *நோய்வாய்ப்பட்ட நிலை*
3. *இடப்பெயர்வு*
4. *இழப்புகள்*
5. *வன்முறைகளைக் காணுதல், நேரடியாக அனுபவித்தல்*
6. *கல்வித்துறையில் ஏற்படும் குழப்பங்கள்*
7. *அங்கங்களை இழத்தல்*
8. *பெற்றோர், உறவினர் காணாமற் போதல்*
9. *குடும்பப்பிரிவு*

ஆகியவற்றைக் கூறலாம். நெருக்கீட்டிற்கு உள்ளான பிள்ளைகளின் இயல்புகளை நோக்குவோமாயின் அமைதியின்மை, மன உளைவு, வலோற்காரம், ஏக்கம், கவலை, அச்சம், கற்றலில் ஆர்வமின்மை, பதகளிப்பு, மனச்சோர்வு, பிற்போக்குத்தனம், தாழ்வுச்சிக்கல், விரக்தி, இறுமாப்பு, உளப்பலவீனம் போன்றவற்றைக் காணலாம்.

நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளில் அவதானிக்கக்கூடிய நடத்தைகளாக திக்கித்துப் பேசுதல், தனிமையில் இருந்து கஃதத்தல், பயங்கரக் கனவுகண்டு அதிர்ச்சியடைதல், கற்றலில் இடர்ப்படுதல், கற்றவற்றை விரைவில் மறந்துவிடுதல், மற்றவர்களுக்குத் தொல்லை கொடுத்தல், வன்செயலில் ஈடுபடுதல், ஒதுங்கியிருத்தல்,

பேசமறுத்தல், நகங்களைக் கடித்தல், பிள்ளைகளுக்கு அடித்தல், இலகுவில் அழுதல், முரண்டு பிடித்தல், ஏனையோரிடமிருந்து ஆதரவை விரும்புதல், அதிக கோபப்படுதல், தனிமையை நாடுதல் போன்றவற்றைக் காணலாம். இப்படிக் காணப்படும் பிள்ளைகளை வழிப்படுத்தி, நாட்டிற்கு உகந்த நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்.

நெருக்கீட்டிற்கு உள்ளான பிள்ளைகளை வழிப்படுத்தலில் ஆசிரியர்கள் பல திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். பாதிப்பிற்குள்ளான பிள்ளைகளில் அனேகர் வகுப்பறையில் கற்றலில் கவனம் செலுத்தவோ அல்லது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடவோ முடியாத நிலையில் இருப்பர். விரக்திக்கும் மன அவதிக்கும் உட்பட்டுச் சஞ்சலப்படுவர். ஒருவருடனும் சேராது தனித்திருப்பர் அல்லது முரண்பட்டுச் செயற்படுவர். சிலவேளைகளில் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திவிடுவர். இவ்வாறு நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளை இனங்கண்டு அவர்களை உணர்வு பூர்வமாகப் புரிந்துகொண்டு மன அழுத்தங்களில் இருந்து விடுபட இரக்க சிந்தையுடன் ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும். இவ்விடயத்தில் பயனளிக்கத்தக்க விதமாகச் செயற்பட்டுப் பரிகாரம் காண ஆசிரியர்கள் தொழில்ரீதியாக அனுபவம்பெற மனநோய் வைத்தியர்களோ அல்லது உறவினர்களோ அல்ல. ஆனாலும் பிள்ளைகளுடைய பிரச்சினைகளைப் பற்றி உணர்வு கொண்டவர்களாகவும், அவர்களுடைய துன்பங்களைப் போக்க முதலுதவிகளை அளிக்கக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். அதற்கு ஆசிரியர்கள் மனநெருக்கீட்டிற்கு உள்ளான பிள்ளைகளைக் கையாளுவதற்கான அறிவையும், ஆற்றலையும் நுட்பங்களையும் பெற்றிருக்க வேண்டும்.

நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளைக் கையாளுவதற்கு ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய நுட்பங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. *நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளில் காணப்படும் குணம் குறிகள் பற்றித் தெரிந்து கொள்வதுடன் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக உணர்வுபூர்வமான அறிவையும் கொண்டிருத்தல்.*
2. *நெருக்கீடுகளை ஏற்படுத்தும் காரணிகளை இனங்காணுதல்.*
3. *நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளை இனங்காணுதல்.*
4. *நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளின் பூரண நம்பிக்கையை வென்றெடுத்தல்.*
5. *உளரீதியான அழுத்தங்களிலிருந்து பிள்ளைகளை விடுபடச் செய்வதற்குப் பொருத்தமான வழிவகைகளைக் கையாளுதல்.*
6. *பிள்ளைகளின் நெருக்கீடுகளைக் குறைப்பதற்கு பெற்றோரின், பாதுகாவலரின் அனுசரணையைப் பெறும் வழிவகைகளை அறிந்திருத்தல்.*
7. *நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளுக்குப் பொருத்தமான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை இனங்கண்டு கற்பித்தலில் ஈடுபடுதல்.*
8. *அவர்களை உள ஆரோக்கியத்துடன் வளர்வதற்கும் இயல்பு நிலைக்குக் கொணர்வதற்கும் பொருத்தமான உத்திகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்தல்*
9. *நெருக்கீட்டிற்கு உள்ளான பிள்ளைக்கு மகிழ்ச்சி ஊட்டும் செயற்பாடுகளை ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்துதல்.*
10. *சிறுவர் உரிமை சாசனத்தை அறிந்து அவற்றைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதற்காக இயலுமான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.*

இப்புரிந்துணர்வின் அடிப்படையில் நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளுக்கு அன்பையும், ஆதரவையும், ஈடுபாட்டையும் ஆசிரியர்கள் நல்குவார்களாயின் பிள்ளைகள் அவர்களில் நம்பிக்கை வைப்பார்கள். பாதிப்புக்குள்ளான பிள்ளைகள் தங்கள் ஆசிரியர்களில் நம்பிக்கை கொள்ளும்போது ஆசிரியர்கள் அப்பிள்ளைகளின் கவலைகளையும், பிரச்சினைகளையும் அதற்கான காரணங்களையும் ஆழமாகப் புரிந்து தேவைப்படும் உதவிகளைச் செய்வார்கள். இதனைச் செய்தால் நெருக்கீடுகளுக்குள்ளான பிள்ளைகள் இழந்துபோன அனுபவங்களை மறக்கத் தொடங்கும்போது அழுத்தங்களிலிருந்து விடுபடும் நிலையை எய்தி மகிழ்வாகத் தமது கற்றற் செயற்பாடுகளில் மீண்டும் கவனம் செலுத்த முடியும்.

பிள்ளையின் உடல், உள வளர்ச்சிக்கேற்ப பக்குவமான கற்றல் உத்திகளை உரிய கல்வி உபகரணங்களுடன் கவர்ச்சிகரமாகப் போதிப்பதில் விழிப்புணர்ச்சியுடன் ஆசிரியர் இருப்பாராயின், எந்தவிதமான நெருக்கீட்டிற்கும் உள்ளான பிள்ளையும் திறமையுடனும் ஆர்வத்துடனும் கற்கும். பிள்ளைகளின் விருத்திசார் இயல்புகளுக்கேற்ப கற்றல் தொழிற்பாட்டின் இயல்புகளும், கற்பித்தல் முறைகளும் அமைதல் வேண்டும்.

கற்பித்தல் உத்திகளை இலகுவாகவும், விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும், பொருத்தமானதாகவும் மேற்கொள்ளுதல் ஆசிரியரது கடமையாகும். உள நெருக்கீட்டிற்கு உள்ளான பிள்ளையிடம் ஓர் ஆசிரியர் அன்புடனும் அரவணைப்புடனும் நடந்துகொள்ள வேண்டும். அத்துடன் அதிகாரத்துடனும் கட்டுப்பாட்டுடனும் வழிநடத்த வேண்டும். சிறந்த தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டும். நம்பிக்கையை ஏற்படுத்துவதுடன், பாராட்டு, வெகுமதி போன்றவற்றை வழங்கிப் பிள்ளையைச் சிறந்த பிரஜையாக உருவாக்க வேண்டியது ஆசிரியரது கடமையாகும். நெருக்கீட்டிற்கு உள்ளான பிள்ளைகளை அணுகும் முறைகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. *பிள்ளைகளுடைய அவலங்களையும் அதனால் ஏற்பட்ட தாக்கங்களையும் இனங்காணல்.*
2. *பிள்ளைகள் தமக்கேற்பட்டுள்ள அவல நிலையைத் தயக்கமின்றி ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துதல்.*
3. *அவல நிலையினால் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மையைப் போக்குவதற்கு பாதிப்பிற்குள்ளான பிள்ளைகளை முதன்மைப்படுத்திச் செயலாற்றுதல்.*
4. *பாதிப்புற்ற பிள்ளைகளை வகுப்பில் ஏனைய பிள்ளைகளுடன் சுயமாகவும் உற்சாகத்துடனும் செயற்பட வழிகாட்டல்.*
5. *சக மாணவர்களுடன் மகிழ்வோடு கலந்துரையாடச் சந்தர்ப்பமளித்தல்.*
6. *நற்பழக்க வழக்கங்களை நெறிப்படுத்தக் கூடிய செயற்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்தல்.*
7. *வாசித்தல், சித்திரம் வரைதல், ஆக்குதல், பாடுதல், ஆடுதல், நாடகம் நடித்தல், கதைகள் கூறல், போட்டிகள் நடத்துதல், பாராட்டிப் பரிசுகள் வழங்கல் போன்றவற்றில் ஈடுபடுத்தி இதன்மூலம் அவற்றின் மேல் கூடிய நாட்டம் ஏற்பட, அவர்களின் பாதிப்பு நிலையைப் படிப்படியாகக் குறைத்து இயல்புநிலைக்கு அவர்களை மீளச்செய்தல்.*

நெருக்கீட்டிற்குள்ளான பிள்ளைகளுக்கான கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. *சேர்ந்து தாளத்துடனும் இசையுடனும் பாடுதல்.*
2. *வெளிக்களச் சுற்றுலாக்களில் ஈடுபடுதல். (கோயில், தொழிற்சாலை, பூங்கா, கடற்கரை, விவசாயப் பண்ணைகள் போன்றன)*
3. *விருப்பமுள்ள ஒத்த வயதுடைய பிள்ளைகளுடன் மனம்விட்டுப் பேசுவதற்கான சந்தர்ப்பம் வழங்கல்.*
4. *துன்பமான செய்திகளைச் செவிமடுப்பதையும், பார்வையிடுவதையும் தவிர்த்தல்.*
5. *நுட்பமான செயற்பாடுகளில் ஈடுபடுதல்.*
   *உ+ம்:- ஒழுங்கற்றவைகளை ஒழுங்குசெய்தல்*
6. *விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல்*
7. *விடுகதைகள், புதிர்கள் கூறுதல்* ஆகியவற்றின் மூலம் உளநெருக்கீட்டைக் குறைக்க முடியும்.

ஆகவே முடிவாக நோக்கும்போது, இன்றைய சிறார்களே நாளைய தலைவர்களாக உதிக்கவுள்ளனர். எனவே, "காலமறிந்து பயிர்செய்" என்பதற்கிணங்க அவர்களது தேவை அறிந்து உடனுக்குடன் தீர்க்க ஆசிரியர் உதவ வேண்டும். எனவே, அனர்த்தங்களுக்குள்ளான மாணவர்களுக்கு உதவுவதற்கு ஆசிரியர்கள் அனர்த்தங்கள் பற்றியும், அதனால் ஏற்படும் உளநெருக்கீடுகள் பற்றியும், அவை எவ்வாறு ஏற்படுகின்றன? என்பது பற்றியும், அந்த உளநெருக்கீடுகளை மாணவர்கள் எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பது பற்றியும் அறிந்து கொள்ளலும் விழிப்புணர்வு பெற்றுக்கொள்ளலும் அவசியமானது. இந்த அறிவும், விழிப்புணர்வும், மாணவர்களுக்கு உதவும் ஆசிரியர்களுக்கு இருக்கும்போது அது ஒரு ஒழுங்கான அடித்தளத்தைக் கொடுக்கும்.

நெருக்கீடுகளின் தாக்கங்கள் சிறுவர்களின் தாங்கும் சக்திக்கும், தன்மைக்கும் அப்பாற்பட்டு தீவிர பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். இப்படியான நிலைமைகளில் உள, மருத்துவர் மூலம் உதவிசெய்யத் தேவைப்படின், தகுந்த இடங்களுக்கு அவர்களை அழைத்துச்சென்று வழிப்படுத்த ஆசிரியர்கள் தயங்கக்கூடாது. பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு உதவியளிக்க எல்லா ஆசிரியர்களும் முன்வரவேண்டும். இதுவே, ஆசிரியத் தொழிலின் குறிக்கோள்களில் முக்கியமானதொன்றாகவும் கருதப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்:-

1. சிறுவர் உளநலம்
   வெளியீடு:- ஜீ.ரீ.இசற்/ பீகெயர் வவுனியா
   சாந்திகம், யாழ்ப்பாணம்
2. மகிழ்ச்சியான கற்றல்
   வெளியீடு:- ஜேர்மன் தொழிநுட்பக் கூட்டுழைப்பகம் [GTZ/ TIP]

******



# சிறுவர் உரிமைகளும் துஷ்பிரயோகங்களும்

க.ரஞ்சினி,
ஆரம்பக் கல்வித்துறை,
1ஆம் வருடம்.

இன்று குடித்தொகை தொடர்பான முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக சிறுவர் துஷ்பிரயோகமும் காணப்படுகின்றது. UNO இன் சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிக்கும் சிறுவர் பாதுகாப்பு சாசனத்தின்படி 18 வயதுக்குக் குறைந்தவர்களைப் 'பிள்ளைகள்' எனக் குறிப்பிடுவர். பிள்ளை சார்ந்த எச்செயற்பாடும் அவருக்கு நன்மை தருவதாக இருக்க வேண்டும். பெற்றோர் அல்லது பொறுப்பு வாய்ந்தவர்கள் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு வழங்காத பட்சத்தில் அரசே பாதுகாப்பு வழங்க வேண்டும். பிள்ளைகளின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல், தனிப்பட்ட திறமைகளை மேம்படுத்தல், தனதும், ஏனையோரதும் கலாசாரம் மற்றும் விழுமியங்கள் என்பவற்றுக்கு பிள்ளை அளிக்கும் கௌரவத்தை மேம்படுத்தல் போன்றவை இச்சாசனத்தில் அடங்கியுள்ள அடிப்படை அம்சங்களாகும். சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் [I.L.O] பிள்ளைகளுக்குக் கல்விகற்கும் உரிமை உள்ளது, அக்கல்வி மேற்பட்ட நோக்கங்களை நிறைவேற்றத்தக்க வகையில் அமைதல் வேண்டும் எனக் கூறுகின்றது. வாழும் உரிமை, அபிவிருத்தி உரிமை, பாதுகாப்பு உரிமை, பங்கேற்பு உரிமை என்பன வழங்கப்பட வேண்டும் என I.L.O மேலும் வலியுறுத்துகின்றது.

பொதுவாக, மூன்றாம் மண்டல நாடுகளிலேயே சிறுவர் உரிமைகள் வழங்கப்படாது துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன. அதிலும் ஆசிய நாடுகள் முன்னணியில் உள்ளன. ஆசிய நாடுகளில் காணப்படும் வறுமை, வேலையின்மை, உள்நாட்டுச் சண்டைகள், கல்வியறிவின்மை, மூடப் பழக்கவழக்கங்கள் போன்றவை இதற்குப் பெரிதும் காரணமாய் உள்ளன. எவ்வாறாயினும் பணம் பெற்றால் போதும் என்ற நிலையில் பெற்றோரே தம்பிள்ளைகளின் உரிமைகளை மறுப்பதும், துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்துவதும், இந்நாடுகளில் பெரிதும் காணக்கூடியதாய் உள்ளது. பல குடும்பங்களில் ஒவ்வொரு பிள்ளையையும் பணத்திற்காக விற்றுவிடுவதும் இங்கு அதிகம் உள்ளது. வீட்டு வேலைகளிலும் மற்றும் வியாபார நிலையங்கள், தொழிற்சாலைகள், தோட்டங்கள், யுத்தமுனைகள், உல்லாச விடுதிகள் போன்றவற்றிலும் சிறுவர்கள் பெரிதும் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். 1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் யுனிசெவ் நிறுவனத்தின் அறிக்கையின்படி உள்ள சிறுவர் உழைப்பாளிகள் நிலைமைகள்,

1. ஆசியா - 60%
2. ஆபிரிக்கா - 25%
3. லத்தீன் அமெரிக்கா - 8%
4. ஏனையவை - 7%

உலகம் முழுவதும் 5-14 வயதிற்கு இடைப்பட்ட 120million சிறார்கள் முழுநேர உழைப்பாளிகளாக உள்ளனர். மற்றொரு 130million பகுதிநேர உழைப்பாளிகளாக உள்ளனர்.

ஆசியாவில் சிறுவர் உழைப்புத் தொடர்பாகக் கூறப்படுகையில், பெரும்பாலான சிறுவர்கள் சம்பளம் எதுவும் வாங்காமல் அல்லது குறைந்த சம்பளத்தில் வீட்டுப் பணியாளராகக் காணப்படுகின்றனர். எதிர்காலத்தில் நல்ல வேலையும் கூடிய சம்பளமும் வழங்கப்படும் எனக்கூறி வேலை வாய்ப்பளிக்கப்படுகின்றனர். அவர்கள் வீட்டுக்குச் செல்லும்போது அல்லது உறவினர்கள் வரும்போது 250 டொலரிலும் குறைவாகப் பணம் கொடுக்கப்படும். ஆசியாவில் பெரும்பாலான சிறுவர்கள் 11-13 வயதிற்கு உட்பட்டவர்கள். பால் வேறுபாடு இன்றி இருபாலாரும் வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பாடசாலை செல்லாமையால் இவர்களுக்கோ இவர்களது வீடுகளில் உள்ளவருக்கோ எழுத வாசிக்கத் தெரியாது. வேலை வாங்கும்போது வாய்த்திட்டல் முதல் உடலில் சூட்டுக்காயம் போடப்படுவது வரை பல துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

தென்னாசிய நாடுகளில் சிறுவர் துஷ்பிரயோகம் மிக அதிகமாக உள்ளது என்ற குற்றச்சாட்டுக்கு பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகள் உள்ளாகியுள்ளன. பாகிஸ்தானில் 10million சிறுவர்கள் வேலைகளில்

ஈடுபடுத்தப்படுகின்றனர். பெரும்பாலானோர் சப்பாத்துத் தைக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். இவர்களின உழைப்பு பெரிதும் சுரண்டப்படுகின்றது. அடுத்துவரும் ஆண்டுகளில் வருடாந்தம் 9%ஆல் இவர்களின் அளவைக் குறைத்து விடுவதற்கு பாகிஸ்தான் ஒத்துக் கொண்டுள்ளது. இந்தியாவில் 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட 6million சிறுவர்கள் பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இலங்கை ஒரு குறைவான சனத்தொகை [19.1million] கொண்டுள்ள நாடாக உள்ளபோதும் கூடியளவு சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர்.

வங்களாதேசம் 18வயதிற்குக் கீழ்ப்பட்ட 5.1million சிறுவர்களை பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்துகின்றது. பாடசாலை செல்ல வேண்டிய வயதில் 38% னர் பாடசாலை செல்வது இல்லை. பெண்களில் 74%னர் கல்வியறிவு அற்றவர்கள் ஆவார். 5 வயதிற்கு குறைந்த அரைவாசிப் பிள்ளைகள் வலிப்பு நோய்க்கு உள்ளாகியுள்ளனர். மேலும் பலர் உடல், உள நோய்களுக்கு உள்ளாகின்றனர். சுரங்கம் தோண்டுதல், வெடித் தொழிற்சாலைகளில், வெடிசுற்றுதல், கடற்றொழில் இயந்திரங்களை இயக்குதல், சுத்திகரிப்பு தொழிற்சாலைகளில் ஈடுபடுத்தப்படல் போன்ற அபாயகரமான தொழில்களில் 46% சிறுவர் உழைப்பாளிகள் பயன்படுத்தப்படுகின்றனர். விசம் கலந்த தூசி, நச்சுப்புகை, அதிக வெப்பம் போன்ற நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர். இதனால் எலும்பு, சுவாசத்தொகுதி போன்றவற்றில் நோய்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே சிறுவர்களைத் தொடர்ந்து துன்புறுத்திப் பார்க்காது, அவர்களுக்கான உரிமைகளை வழங்கி, சுதந்திரமாகச் செயற்படவிடுவது எமது கடமையாகும்.

## *கலாசாலை வரலாற்றில்... (3)*

- *19.02.1996 தொடக்கம் பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் தற்காலிகமாகக் கலாசாலை இயங்கியது. 06.05.1996 – 19.05.1996வரை வெறும் கையெழுத்துப் பதிவே இடம்பெற்றது.*
- *20.05.1996இல் செங்குந்தா இந்துக் கல்லூரியில் இயங்கத் தொடங்கிய கோப்பாய் ஆசிரிய கலாசாலை 21.06.1996இல்தான் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவாரம்பித்தது.*
- *12.08.1996இல் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை அதிபரானார். அவரின் பின்னர் 1998இல் திரு. மு.பரஞ்சோதி அதிபரானார். இக்காலகட்டத்தில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. வடபிரதேச மாணவர்களுடன், அழகியற் கல்விநெறி பயில்வதற்காக நாடளாவிய ரீதியிலும் மாணவர் அனுமதிக்கப்பட்டனர்.*
- *அதிபர் மு.பரஞ்சோதியவர்களின் உடல்நலம் குன்றியதால் அவர் தமது பதவியிலிருந்து நீங்கி மீண்டும் விரிவுரையாளராகிவிட, புதிய அதிபராக 03.01.2003இல் திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். சுற்றுமதில் அமைத்தல், விளையாட்டு மைதானம், விளையாட்டுப் பொருட்களின் அறை போன்றவற்றின் புனரமைப்பு, யோகமண்டபம் மற்றும் கிறிஸ்தவ ஆலயம் போன்றவற்றின் புனரமைப்பு, பொதுமண்டபம் புனரமைப்பு உட்பட பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பௌதீக வளங்கள் கூடுதலாகக் கலாசாலைப் பெறப்பட்டுள்ளன.*
- *85 ஆண்டுகள் வரலாற்றினையுடைய கோப்பாய் ஆசிரிய கலாசாலை இதுவரையில் பத்து அதிபர்களின் வழிகாட்டல்களில் வளர்ச்சிகண்டு வந்துள்ளது. பல்லாயிரக்கணக்கான ஆசிரிய மாணவர்களுக்குப் பயிற்சிதந்த நிறைவையும் பெற்றுள்ளது.*

- சொற்கோ -

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லாற் சிறப்பில்லைக் கற்றோற்குச்
சென்றவிடம் எல்லாஞ் சிறப்பு.

- வாக்குண்டாம் -

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றொவ்வார் - மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்.

- நன்னெறி -

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்ம ரறுக்கும் மருந்து.

- நாலடியார் -



# குண்டு போடுதல்: நிலைகளும் கடமைகளும்

த.சரோஜினி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'C'.

உத்தியோகத்தர்

குண்டுபோடுதல் நிகழ்ச்சி மற்றைய எறிதல், வீசல் நிகழ்ச்சிகளுடன் இணைக்கப்பட்டாலும் உண்மையில் இக்குண்டானது எறியப்படுவதில்லை; ஒரு நிலையில் இருந்து போடப்படுவதையே குறிக்கும். குண்டு தள்ளப்படுவதே உண்மைநிலை ஆகும். உண்மையில் குண்டு எறியப்பட்டால் அது ஒரு தவறான செயல் என்றே கூறப்படுகிறது.

குண்டானது கையைவிட்டு வெளியேறும் போதும் அதற்கு முன்புமான குண்டின் நிலை வியாக்கியானத்துக்குரியது. எனவே, அதனை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் ''தோள் மட்டத்திலிருந்து ஒரு கையில் போடப்பட/ தள்ளப்பட வேண்டும்'' என விதி குறிப்பிட்டுச் சொல்கிறது. எறிவதற்கான நிலையை வட்டத்துள் எடுத்து நிற்கும்போது குண்டானது நாடியுடன் அண்டியோ அல்லது நாடியுடனோ இருக்க வேண்டும். எறியும் அசைவின் போதும் இந்நிலையிலிருந்து கைகீழே இறங்கக் கூடாது. அத்தோடு தோளுக்குப் பின்னும் குண்டு வரக்கூடாது. இவற்றின் அடிப்படையில் குண்டு முன்னோக்கித் தள்ளப்படுதல் வேண்டும். குண்டு போடுதல் பெரும்பாலும் கடுமையான செயற்பாடாகும். போட்டியாளரைச் சமநிலைப்படுத்துவதற்காக வட்ட முன் பகுதியில் முட்ட பலகை வைக்கப்படுவது உண்டு. இப்பலகையின் உள் பக்கத்தை போட்டியாளர் முட்டுவதற்கு அனுமதியுண்டு.

இந் நிகழ்ச்சிக்கு குறைந்தது 4 மத்தியஸ்தர்கள் தேவை. 1ஆம் மத்தியஸ்தர் நிகழ்ச்சியை நடாத்துபவர்; நிகழ்ச்சியை நடாத்துவதற்கான சகல வசதிகளும் உண்டா எனச் சரிபார்த்தல்; அவையாவன; எறிதல் களம், குறியீடுகள், அளவான குண்டு, அளவுநாடா குறித்த ஆணி, பதிவேடு என்பனவாகும். முக்கியமாகப் போட்டியாளர்கள் கையைச்சுத்தம் செய்ய வேண்டும். வியர்வை துடைக்கத் துணி வைத்துக்கொள்ள வேண்டும்.

போட்டியாளர் வரவு தந்ததும் முதலில் நிபந்தனைகளைத் தெரியப்படுத்த வேண்டும். போட்டியாளருக்குப் பயிற்சி எறி தேவையாயின் இரண்டுக்கு மேற்படாத பயிற்சி மட்டும் களத்தில் அனுமதிக்கலாம். போட்டியாளர் அங்கீகரிக்கப்பட்ட உடை, இலக்கம், பாதணி அணிந்துள்ளார்களா என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். வட்டத்தில் நின்ற போட்டியாளர் நிலையாக நின்றபின்பே எத்தனத்தை எடுக்கலாம். வட்டத்தில் உட்பிரவேசிக்கும் வேகத்தோடு குண்டை எறிய விதி அனுமதிக்கவில்லை.

பொதுவாகக் குண்டு போடுபவர், குறித்த நிலையிலேயே தொடங்குவார். எனவே தலையுடன் சேர்ந்து குண்டும் செல்லும். இந்நிலையில் மற்றைய கை மிகவும் தாழ்வாகக் கீழே தொங்கியிருக்கும். அசைவின் போது கீழ் தொங்கும் கை கோட்டில் அல்லது முட்டுப் பலகைமேல் அல்லது வெளியில் முட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். எறிய எத்தனித்தது தொடக்கம் குண்டு கையை விட்டு விலகும்வரை குண்டைத் தூக்கிய கை குண்டுடன் தோள்மட்டத்திற்கு கீழ் இறங்கவோ அல்லது பின் செல்லவோ அனுமதியில்லை.

குண்டு போட்டவர் குண்டு நிலத்தில் முட்டிய பின்னர் வெளியேறலாம். இவ்வாறு வெளியேறினால் மட்டுமே போட்டியாளர் உடல் சமநிலைப்படுத்திய பின் வெளியேறினார் என்பது தெளிவாகும். குண்டு அந்தரத்தில் நிற்கும்போது வெளியேறினால் தவறாகக் கொள்ளப்படும்.

1ஆம் 2ஆம் மத்தியஸ்தர்

வட்டத்திற்கு இரு பகுதிகளிலும் ஏற்படும் தவறுகளையும் கவனிக்க வேண்டும். இவர் முட்டுப் பலகைத் தவறையும் கவனித்து, முறையான எறியின் அளவையும் எடுத்து, பதிந்துகொள்ள வேண்டும். அளவுகள் இருவரால் பதியப்பட வேண்டும்.

3ஆம் மத்தியஸ்தர்

இவர் குண்டின் அசைவை ஆரம்பம் தொடக்கம் கையைவிட்டு விலகும் திசைவரை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். எறியும் தறுவாயில் ஏற்படும் தவறுகளை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

குண்டை எறிவதற்காகக் கையை முன் தள்ளும்போது தலையுடன் சேர்ந்து நாடியும் நிமிர்ந்து கொள்ளும். இவ்விடத்தில் நாடிக்கும் குண்டுக்கும் இடையில் சிறு இடைவெளி ஏற்படும். இது இயல்பாகவே உண்டாகும் என்பது கவனிக்கப்பட வேண்டும். எறியும் கையை முழுமையாகக் கவனிக்க வட்டத்தின் பின் நின்றே கவனிக்க வேண்டும்.

முறையான எறியாயின் 3ஆம் மத்தியஸ்தர் நாடாவை முறைப்படி பிடித்து நேராகவும், மையப் புள்ளியுடாகவும் அளப்பர். சிறு தொய்தல் தன்னும் இருக்கக்கூடாது. சரியான எறி என்பதை வெள்ளைக் கொடியாலும், பிழை என்பதைச் சிவப்புக் கொடியாலும் காட்டுதல் வேண்டும்.

4ஆம் மத்தியஸ்தர்

பாகைக்குள் விழுந்த குண்டின் அடையாளத்தை எடுப்பர். எறிகின்ற பாகையைக் குறிக்கும் கோடுகளுக்கிடையே எறிய வேண்டும். கோட்டில் சிறிதுபட்டாலும் தவறு என்றே கணிக்கப்படும்.

வட்டத்தை விட்டு வெளியேறுதல்

*1. குண்டு நிலத்தில் விழுந்த பின்பே வெளியேற வேண்டும்.*

*2. வட்டத்திற்கு வெளியே நீட்டப்பட்ட மையக்கோட்டிற்குப் பின்னராகவே இருக்க வேண்டும்.*

குண்டு போடுதல் நிகழ்வில் பெரும்பாலும் ஒரே இடத்தில் மிகவும் அண்மித்தும் விழும். இதனால் பல அடையாளங்கள் ஒரு சிறு இடத்துள் இருக்கும். எறிந்து விழும் தருணத்தில் விழவிருக்கும் இடத்தை உன்னிப்பாகக் கவனிக்காதுவிட்டால் வீழ்ந்த அடையாளத்தைக் குறிப்பாக அடையாளம் காணமுடியாது. எனவே இதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

நிகழ்ச்சி முடிவில் பதிவுகள் ஒப்புநோக்கிப் பூர்த்திசெய்து, இடங்களை நிர்ணயித்து, சமநிலை உடைப்பு இருப்பின் அதையும் முடித்து, மத்தியஸ்தர் ஒப்பமிட்டுச் சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கையில் காணப்படும் குண்டுபோடுதல் முறையை இரண்டாக நோக்கலாம்.

*1. பரிஞ பிறையன் முறை*

*2. சுழன்று போடுதல் முறை*

பரிஞ பிறையன் முறையை எடுத்தால் அம்முறையின் திறன்களாக

*1) பிடித்தல்*

*2) தொடக்கநிலை*

*3) வழுக்குதல்*

*4) போடுதல்*

*5) இறுதி மெய்நிலையும் ஆரம்ப நிலைக்கு வருதலும்*

*6) வெளியேறுதல்* என்பன அடங்கும்

*1) பிடித்தல்*

குண்டை விரல்களில் வைத்திருக்க வேண்டும். உள்ளங்கையில் படாது ஐந்து விரல்களிலும் தாங்கிப்பிடிக்க வேண்டும். இறுக்கமாகப் பிடித்தல் கூடாது.

*2) தொடக்க நிலை*

குண்டு போடுபவர் குண்டு போகும் திசைக்கு எதிர்ப்புறமாக உடலைத் திருப்பி வட்டத்தின் பின் பகுதியில் தொடக்க நிலையில் நிற்றல்.

*3) வழுக்குதல்*

உடலின் பாரத்தைப் பொறுத்து (முன்கால்) காலை வழுக்குதல் ஆரம்பமாகும். பின்காலைப் பின் தள்ளுதல் வேண்டும். வழுக்கும் கால் வட்டத்தின் மத்திய பகுதியில் முன்நோக்கி வழுக்கிச் செல்லுகின்றது.

*4) போடுதல்*

வழுக்கிச் சென்ற பின்னர் குண்டைப் போடுதல்

*5) மெய்நிலையும் ஆரம்ப நிலைக்கு வருதல்*

குண்டுபோட்ட பின் சமநிலைக்கு வருதல்; அதாவது சாதாரண நிலையை அடைதல்

*6) வெளியேறுதல்*

குண்டு போட்டபின் சாதாரண நிலையின் வட்டத்தின் பின் அரைப்பகுதியால் வெளியேறுதல்

******



# தொழில்நுட்பக் கல்வியின் பயன்பாடுகள்

திருமதி கற்பகராணி
தர்மதாஸ்,
ஆரம்பக் கல்வித்துறை,
1ஆம் வருடம்.

ஆரம்பகால மனிதன் இன்றைய நாகரிக மனிதனாக வளர்ந்த கதை மிகவும் சிறப்பானது. குகைகளை இருப்பிடங்களாகக் கொண்டு அன்று வாழ்ந்த கற்கால மனிதனுக்கும், விண்வெளியைக் கடந்து கோள்களிற்குச் சென்று ஆய்வுகள் நடாத்தும் இன்றைய மனிதனுக்கும் இடையே உள்ள வளர்ச்சியானது மிகமிகப் பெரியது ஆகும். இதனை நாம் நன்கு உணர்ந்து நோக்கும்போது, மனிதன் தனது சிந்தனை வளர்ச்சியின் மூலம் தனக்கும் பிறருக்கும் சமூகத்திற்கும் பற்பல துறைகளில் பற்பல தேவைகளையும் அதற்கான உபயோகப் பொருட்களையும் பெருக்கிக் கொண்டதனைக் காணமுடிகின்றது. பஞ்சபூதங்களின் செயற்பாடுகளில் காணப்படும் அறிவியல் விஞ்ஞானமே இதனை விரிவுபடுத்தக் காரணமாக இருந்தது எனத்தெளிவாகக் கூறமுடியும். ஏனெனில், தேவைகளும் அறிவியலும் இணைந்தபோதே ஆயிரக்கணக்கான தொழில்கள் தோன்றின. பெரிய தொழில்களுக்கு உபதொழில்கள், கிளைத்தொழில்கள் என்றும் முளைத்தெழுந்தன. இவ்வாறு தொழில்கள் பெருக்கமடைந்த நிலையிலே மனிதன் சிறப்பாக வாழ விரும்பி, அவன் தனது ஆற்றலுக்கேற்ற தொழிலைச் செய்ய முனைகின்றான்.

இன்றைய காலகட்டத்திலே தொழிற்துறை வளர்ச்சியும் விஞ்ஞான வளர்ச்சியும் பிரிக்கமுடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளன. எனவே, எந்தவொரு தொழிலுக்கும் விஞ்ஞானத்தின் உயரிய பண்புகள் தேவைப்படுகின்றன. அறிவு, அவ்வறிவினைப் பிரயோகித்துச் செயலாற்றும் தெளிவு, அவற்றோடு கூடிய நுணுக்கமான செய்முறைகள், அவற்றின் மூலம் பெறப்படும் முழுமையான பண்புகளே தொழிற்பண்புகளாகக் கருதப்படுகின்றன. இவையே தொழில்நுட்பம் என்னும் பெயர் பெறுகின்றன. காலத்திற்குக் காலம் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் சக்திகள் தொழிற்றுறையிலே கணிசமான வளர்ச்சி வேகத்தினைக் கொண்டிருப்பதோடு, வளர்ச்சி அடைந்த மேற்குலக நாடுகளில் அதிசயிக்கத் தக்கவகையில் சாதனைகளை நிகழ்த்தி வருகின்றன. எனவே, தொழிற்பயிற்சியினைப் பயில விரும்பும் இன்றைய இளைஞர், யுவதிகள் உரிய தொழிலுக்குரிய நுட்பமுறைகளையும், செயன்முறைகளையும் அறிந்திருப்பது மிகமிக அவசியமாகின்றது. அப்பொழுதுதான் அவர்கள் தாம் விரும்பி ஈடுபடும் தொழிலில் முழுமையான பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்றைய காலகட்டங்களில் இளைஞர், யுவதிகள் போன்ற இளம் சமுதாயத்தினரிடையே தொழில்நுட்ப அறிவினைப் புகட்டும் கேந்திர நிலையங்களாகக் கல்வி நிலையங்கள் விளங்குதல் வேண்டும். தொழிற் சமத்துவ உணர்வினை வளர்ப்பதற்கேற்ற இடங்கள் கல்வியை வழங்கும் இடங்களேயாகும். ஏனெனில், இளம் சமுதாயத்தினரிடையே சமத்துவம், ஒற்றுமை போன்ற உணர்வுகள் ஆழமாகப் பதிக்கப்படல் வேண்டும். இவற்றினூடே தொழில் பற்றிய ஆழமான எண்ணக்கரு பதிக்கப்படல் வேண்டும். அவர்களின் ஆற்றலிற்கும் தகுதிக்கும் ஏற்றவகையில் இயைபான தொழிலைக்கற்க வேண்டும். முழுமையாகக் கற்க முடியாவிட்டாலும் தொழில்பற்றிய நுட்பங்களையும் பயிற்சிகளையும் பெறுதல் வேண்டும். இதன் பின்னர் தொழில்நுட்பக் கல்லூரிகளின் ஊடாக உயர் பயிற்சி வழங்குதல் வேண்டும். விசேட திறமைகள் படைத்தோர்க்குப் புலமைப் பரிசில்கள் வழங்கி, தொழிற்றுறையில் முன்னேறிய மேலைத்தேய நாடுகளுக்கு அவர்களை அனுப்பிச் சிறப்புப் பயிற்சிகளை வழங்குதல் வேண்டும். இவ்வாறு கற்றுத் தேறுவதன் மூலம் மாணவ உலகின் இளஞ்சமுதாயம் எதிர்கால உலகினைத் தன்னம்பிக்கையோடு கட்டியெழுப்பும். தொழில்நுட்பக் கல்வியின் மூலம் இவ்வாறு சிறந்த பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் விவசாயமே பாரிய அளவில் காணப்படுகின்றது. எனவே, தொழில்நுட்பம் என்பது மந்த நிலையிலேயே காணப்படுகின்றது. எனவே, நவீன மயப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் உருவாதலும் அவை திறம்படச் செயற்படுதலும் முயற்கொம்பாகவே காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில்

ஆண்டுதோறும் கல்வி நிலையங்களை விட்டு வெள்ளம் போல் வெளியேறும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளித்தல் அசாத்தியமாகும். எனவே, நாட்டினைப் பயமுறுத்தும் வேலையில்லாத் திண்டாட்டம் எனும் அசுரனை இல்லாதொழிக்க, நம்நாட்டு இளைய சமுதாயம் முன்னேற, தொழில்சார் முயற்சி பற்றிய அறிவினைப் புகட்டுதல் மிகமிக அவசியமாகின்றது. இவற்றின்மூலம் தொழில்நுட்பக் கல்வியின் பயனை அடைய முடியும்.

இன்றைய காலகட்டத்தில் தொழிலுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் போது விண்ணப்பிப்போரின் கல்வித் தகைமையை மட்டும் கருதாது அவர்களின் தொழில்நுட்ப அறிவு, பயிற்சி, அனுபவம் என்பவற்றினையும் கவனத்திற் கொள்கின்றனர். தொழில்நுட்ப அறிவினைப் பெற்றவர்கள் கல்வித்தகைமை குறைந்தவர்களாயினும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஏனெனில் தொழில்நுட்ப அறிவினை உடையவர்கள் திறமையாகவும், சிக்கனமாகவும் சிறந்த முறையில் நல்ல பொருள்களை உற்பத்தி செய்யவும் ஆற்றலுள்ளவர்களாகவும் காணப்படுவர். ''மந்திரமறியாதவன் பூசை விடியவிடிய'' என்பதுபோன்று தொழில்வளம் பெருகிவரும் இந்நாளிலே ஏட்டுக்கல்வி கற்றோரிலும் பார்க்க தொழில்நுட்பக் கல்வி பயின்றவர்களே வளமான நல்ல வாழ்வு வாழமுடிகின்றதனைக் காணமுடிகின்றது. இதன் மூலமும் தொழில்நுட்பக்கல்வியின் பயனை நாம் அறிந்துகொள்ளலாம்.

வளர்ச்சியடைந்த நாடுகளின் கல்வி நிலையங்களிலே தொழில்நுட்பக் கல்விக்கே உயர்ந்த மதிப்பு அளிக்கப்படுகின்றது. அங்கு புத்தகப் படிப்பினை விரும்பும் மாணவர் தொகையிலும் பார்க்க தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவர்களே பெருமளவாகக் காணப்படுகின்றனர். இவற்றினைவிட மேலைத்தேய நாடுகளில் காணப்படும் கல்லூரிகளில் தொழில்கள் பற்றிய விபரங்கள் கற்பிக்கப்படுகின்றன. இவற்றின்மூலம் ஒவ்வொரு மாணவனும் தன் தனித்திறமைக்கும், தன்மைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற தொழிலை மேற்கொள்ளுமாறு தூண்டப்படுகின்றான். அதனால் இந்நாடுகள் தொழில்நுட்பத் துறையிலே வளர்ச்சிபெற்று தொழிற்றுறைகளிலே முன்னேற்றமடைந்துள்ளன. மேலைத்தேய நாடுகளைப் போன்று, எமது நாடுகளிலும் இடைநிலைக் கல்வி நிலையங்கள் தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை தொழில்நுட்பக் கல்விக்கு உரிய இடமளித்தல் வேண்டும். வலுவான பயிற்சிகளும், சேவை மனப்பாங்கும், அர்ப்பணிப்பும் இருந்தால் முழுமையான பயன்களை இளைஞர், யுவதிகள் போன்ற இளம் சமுதாயத்தின் மூலம் வெளிப்படுத்தி வைக்க முடியும். இங்ஙனம் அமையுமானால் எதிர்காலப் பொருளாதார நிலையினைச் சிறப்பாகக் கட்டியெழுப்ப முடியும். எனவே, தொழில்நுட்பக் கல்வியின் பயனானது இன்றைய நவீன காலகட்டத்தில் எல்லோருக்கும் அவசியமானதாகக் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

---

## இலங்கைத் தமிழ்த் திரைப்படங்கள்

இலங்கையில் 1962 – 1994 காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட தமிழ்த் திரைப்படங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) **குறுந்திரைப்படங்கள் (16மி.மீ)**
சமுதாயம் (1962), பாசநிலா (1966)

2) **சிங்கள மொழியிலிருந்து மொழிமாற்றம் (டப்பிங்) செய்யப்பட்ட திரைப்படங்கள்**
நான்கு லட்சம் (1971), கலியுககாலம் (1974), யார் அவள் (1976), சுமதி எங்கே (1976), ஒருதலைக் காதல் (1980), பனிமலர்கள் (1981), இவளும் ஒரு பெண் (1981), அஜாசத்த (1982)

3) **நேரடித் தமிழ்ப்படங்கள்**
தோட்டக்காரி (1963), கடமையின் எல்லை (1966), டாக்ஸி டிரைவர் (1966), நிர்மலா (1968), மஞ்சள் குங்குமம் (1970), வெண்சங்கு (1970), குத்துவிளக்கு (1972), மீனவப்பெண் (1973), புதிய காற்று (1975), கோமாளிகள் (1976), பொன்மணி (1977), காத்திருப்பேன் உனக்காக (1977), நான் உங்கள் தோழன் (1978), வாடைக்காற்று (1978), தென்றலும் புயலும் (1978), தெய்வந்தந்த வீடு (1978), ஏமாளிகள் (1978), அனுராகம் (1978), எங்களில் ஒருவன் (1979), மாமியார் வீடு (1979), நெஞ்சுக்கு நீதி (1980), இரத்தத்தின் இரத்தமே (1980), அவள் ஒரு ஜீவநதி (1980), நாடுபோற்ற வாழ்க (1981), பாதை மாறிய பருவங்கள் (1982), ஷர்மிளாவின் இதயராகம் (1993)

4) **இலங்கை இந்தியக் கூட்டுத்தயாரிப்புப் படங்கள்**
பைலட் பிறேம்நாத், தீ, நங்கூரம், மோகனப் புன்னகை, வசந்தத்தில் ஓர் வானவில்

*தம்பிஐயா தேவதாஸ் எழுதிய*
*'இலங்கைத் தமிழ்ச்சினிமாவின் கதை' (1994) என்ற நூலிலிருந்து.*



# தகவல் தொழில்நுட்பமும் மனித சமூகமும்

திரு. த.பிரபாகரன்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'E'.

உலகம் உள்ளங்கையளவில் சுருங்கிவிட்டது, உலகம் மாறிவிட்டது என்றெல்லாம் பேசுகிறார்களே. இதற்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது தகவல் தொழில்நுட்ப மாற்றங்களே. இன்றைய காலச்சூழலில் எமது அன்றாட வாழ்வில் நாம் அறியாமலேயே பலவிதத்திலும் தகவல் தொழிநுட்பம் இழையோடிக் கொண்டிருக்கிறது. இன்றைய யுகமே தகவல் தொழில்நுட்ப யுகம்தான். இவ்வலைப்பின்னலிலிருந்து மனித சமூகம் விடுபட முடியாத அளவு பின்னிப் பிணைந்துள்ளது எனலாம். அந்தளவிற்கு மனிதனது தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் வளர்ச்சி பெற்றுள்ளதுடன், மனிதனது முன்னேற்றமும் அதனை ஒட்டி அமைந்துள்ளது எனலாம்.

அயலவருடன் பேசும் போதும் தொலைபேசியில் பேசும்போதும் வானொலி, தொலைக்காட்சி, உருநகல், ஈமெயில், கணினி என்று பல விதங்களில் நாம் தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றோம். ஏன்! மனிதனது உடலமைப்புகூடச் சிறந்த தகவல் பரிமாற்றத்தினால்தான் இயங்குகிறது. உடலின் நரம்புகள் மூளைக்குத் தகவல்களைச் சரியாக எடுத்துச் செல்வதிலேதான் மனித உயிரின் இயக்கமே தங்கியுள்ளது. குழந்தை பிறக்கும்போது அழுகை ஒலியுடன் பிறக்கிறது. அவ்வொலிகூடத் தகவல் பரிமாற்றமே. இவ்வாறு மனித வாழ்வுடன் இன்றியமையாத இயக்கமாக இணைந்த தகவல்தொடர்பு சைகைகள், உடல் மொழிகள், பறவைகளைத் தூது அனுப்பல், நெருப்புப் புகை உபயோகம் என்று பல உத்திகளின் துணையுடன் வளர்ந்து, இன்றைய இயந்திர உலகில் சிக்கல் நிறைந்த தொழில்நுட்பக் கருவிகள் மூலம் இயங்குகிறது. மனித வாழ்வை இயக்கும் சக்தியாகிறது என்றால் மிகையில்லை.

இயல்பான வாழ்க்கை முறைகளினூடு தகவல்களைப் பரிமாறிக் கொண்ட மனிதனது செயற்பாட்டில் அச்சியந்திரத்தின் வருகை பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. மனிதனது எண்ணங்கள், கருத்துக்கள் மற்றும் செய்திகளைப் பரவலாகப் பெரும்பான்மை மக்களிடம் எளிதாகக் கொண்டு சென்று தகவல் பரிமாற்றத்தைச் சாத்தியமாக்கியது. உலகைப் புரிந்து கொண்டு அதனை மனிதன் கட்டுப்படுத்த அச்சாதனம் மிக உதவியாயிற்று. இதனால் மனிதனது சரித்திர அறிவியல், கல்வி, விஞ்ஞானத் துறைகள் அனைத்தும் துரித வளர்ச்சி பெறலாயின. இதன்மூலம் தகவல் தொழில்நுட்பத்துறையும் புதுமெருகு பெறலாயிற்று.

வானொலி, தொலைக்காட்சி என்பன தகவல் பரிமாற்றத்தில் பெரும் புரட்சி ஏற்படுத்தின. இவை உலகளாவிய மக்கள் தொடர்பை எளிமைப்படுத்தின. உலக விடயங்கள் வாழ்வியல் அம்சங்கள், நகைச்சுவை, சமூக நிகழ்வுகள், கல்வி விடயங்கள், விளையாட்டு நிகழ்வுகள் என்று வாழ்வில் பலநோக்கு சார்ந்த தகவல்கள் இங்கு பரிமாறப்பட்டன. இன்று குறிப்பிட்ட சமூகத்தவர்க்கு என்றே ஒலி, ஒளி அலைகள் இயங்குவது குறிப்பிடத்தக்கது. அதாவது குறித்த சமூகத்தின் விருப்புக்கள், எண்ணங்களுக்கேற்ப அவர்க்கு ஏற்ற வகையில் தகவல் அளிக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பம் வெற்றி கண்டுள்ளது.

அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல் தற்செயல் நிகழ்வாகக் கண்டறிந்த தொலைபேசி, இன்று உலகளாவிய ரீதியில் அனைவரது உபயோகத்திலும் உள்ளது. இதன் மூலம் தகவல்கள் உடனுக்குடன் பரிமாறப்படுகின்றன. இதன் வளர்ச்சியாக இன்று E-mail, Fax என்று பலவழிகளில் தகவல் தொழில்நுட்பச் செயற்பாடுகள் இடம்பெற்று வருதல் குறிப்பிடத்தக்கது.

தகவல் தொழில்நுட்பவுலகில் இன்று மனித வாழ்வைப் பெரிதும் பாதித்த நுட்பங்களாக கணினியும், இன்ரநெற்றுமே திகழ்கின்றன. இரண்டாம் உலகப்போரின் போதுதான் முதலில் எண்ணிலக்கக் கணினிகள் உதயமாகின. தொடர்ந்து நிகழ்ந்த மனிதனது அறிவியல் தேடல்களால் கணினிகளின் இயக்கம் பெருகி, சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துவது குறிப்பிடத்தக்கது. இன்று வீட்டில் இருந்தவாறே நமக்குப் பிடித்த துறைசார் கல்வியைப்பெற முடிகிறது. அறிவியல் மாற்றங்களைக் கண்டுகொள்ள முடிகின்றது. உலக நாடுகள்

பலவற்றிலும் மாணவர்கள் வகுப்பறைக் கல்வியைப் புறக்கணிக்கும் நிலை உருவாகி வருகின்றது. வீட்டில் உட்கார்ந்தவாறு பங்குச்சந்தை வியாபாரத்தைக் கையாள முடிகிறது. இன்று கிராமிய வங்கிகள்கூடக் கணினி மயப்பட்டுள்ளன. வைத்தியத்துறையை நோக்கின், கணினி, இன்ரநெற் என்பவற்றின் ஆதிக்கம் பெரும் பயனளித்ததைக் காணலாம். திடீர் சத்திரசிகிச்சைகளின் போது நிகழும் புரியாமைகள், கண்டுபிடிக்க முடியாத நுணுக்கங்களைக் கண்டறியவும், அவற்றுக்கான சிறந்த சிகிச்சையையும் அளிக்கும் வகையில் உலகளாவிய வைத்திய நிபுணர்களை ஒரே வலையமைப்பில் சந்தித்து தகவல் பரிமாற முடிகிறது. இதனால் மனிதவாழ்வு மீளளிக்கப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொருவருக்கான செயற்பாடும் அனைத்து வாழ்வியல் இயக்கங்களும் தகவல் தொழில்நுட்ப வலையமைப்பில் சிக்கிக் கிடக்கின்றன என்றால் மிகையன்று.

ஆகவே, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மனிதனது தனிமையைப் போக்கி உலகை ஒரு சமூகமாக்கியுள்ளதுடன், அவனது தேவைகளை இலகுவாக்கிப் பெரும்பங்கு ஆற்றுவதுடன், மனிதனது அறிவியல் நுணுக்கங்கள் நாள்தோறும் புதிய புதிய தகவல் தொழில்நுட்ப உத்திகளை தேடிக் கண்டறிந்து கொண்டிருக்கிறது என்பதும் வியந்து குறிப்பிடத்தக்கன எனலாம்.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முதலாவது அதிபர் ஸ்ரீமான் அப்புக்குட்டியார் பொன்னையா அவர்கள்



யாழ்ப்பாண மாவட்டம் தெல்லிப்பழை. கிளவ் லேன் என்னும் இடத்தை வசிப்பிடமாகக் கொண்ட அப்புக்குட்டியார் - அபிராமி அம்மையார் தம்பதியின் மூத்த புதல்வரான பொன்னையா அவர்கள் 28.02.1880இல் பிறந்தார். இவருக்கு அப்புத்துரை (நியாய துரந்தரர் - சட்டநிருபணசபையின் தமிழர் பிரதிநிதி) என்ற சகோதரரும் உளர். கூடவேபிறந்த சகோதரிமார் சிறுவயதிலேயே மரணமடைந்தனர். இளமைப்பராயத்தில் பிரம்மஸ்ரீ முத்துக்குமாரசாமி ஐயரிடம் ஆரம்பக்கல்வியை மரபுரீதியாகக் கற்றபின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தரக் கல்வியைப்பெற பொன்னையாவைப் பெற்றோர் அனுப்பினர். அங்கு அதிபராயிருந்தவர் Mr. Samuel Howland அவர்கள். கிச்கொக். எல்மர். கென்ஸ்மன். அல்வின் ஏபிரகாம். கட்சன் பரமசாமி. செல்லையா குக். ஜே.வி.செல்லையா ஆகியோர் இவருக்கு நல்லாசிரியர்களாக இருந்தனர். 1896-1902வரை ஆறு வருடங்கள் அங்கு கல்வி கற்றபின். பிரபல கல்விமான் ஆகிய திரு. நெவின்ஸ் செல்லத்துரை அவர்கள் இவரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டார் (1902 ஜூன்).

இவான்ஸ்துரை அவர்கள் 1903இல் திரு.பொன்னையாவை கொழும்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இருவருடப் பயிற்சிபெறச் செய்தார். திரும்பவும் யாழ்ப்பாணம் இந்துவில் சேவைசெய்த இவரை இவான்ஸ்துரை அவர்கள் கோப்பாய் ஆங்கில சாதனா பாடசாலையில் கற்பிக்கச் செய்தார். சிறிதுகாலத்தில் அதன் அருகில் உருவான அரசினர் ஆசிரிய கலாசாலையின் முதலாவது அதிபராக நியமனம் பெற்றார். 1923ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கோப்பாய் ஆசிரிய கலாசாலை தொடங்கப்பட்டது. அங்கே தமிழ் பயிற்றும் ஆசானாக பொன்னையா அவர்கள் விளங்கினார். ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்கத்தின் பண்டிதர் பரீட்சைக்கு கலாசாலை மாணவர்களைத் தோற்றச்செய்தார். தாமே தமிழ்முதலான பாடங்களைக் கற்பித்தார். ஆசிரிய கலாசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார். ஆசிரிய கலாசாலைகளின் மேற்பார்வையாளராகவும் பணியாற்றினார். ஏற்கனவே காவேட்துரை அவர்கள் இவரை 1911இல் உதவி வித்தியாகர்த்தராகவும். எல்.மக்களே அவர்கள் 1920இல் வித்தியாகர்த்தராகவும் நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மல்லாகம் சுவாமிநாதர் புத்திரி காமாட்சிதேவியை 1908ஆம் ஆண்டு திரு. பொன்னையா அவர்கள் திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதியினருக்கு சாமிநாதன். அப்பாசாமி ஆகிய இரு ஆண்பிள்ளைகள் பிறந்தனர். இலக்கண நூல்கள். மொழியியல் நூல்கள். பூகோள நூல்கள் ஆகியவற்றை எழுதிய இவரது சேவையை மதுரை ஸ்ரீபாண்டித்துரைத்தேவர் போன்றோர் பாராட்டியுள்ளனர். 1935ஆம் ஆண்டுவரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றிப் பலரது பாராட்டுக்கும் உரியவரானார். இவரது பிற்காலம் பொதுச்சேவையில் கழிந்தது.

— *சொர்கோ* —



# பறக்கும் தட்டுக்களும் வேற்றுக் கிரகவாசிகளும்

திருமதி ஜெயச்சித்திரா
இலங்கேஸ்வரன்,
ஆரம்பக் கல்வித்துறை,
1ஆம் வருடம்.

500கோடி ஆண்டுகளுக்கு முன் சூரியன் உருவானதாக ஆய்வுகள் கூறுகின்றன. இந்த அண்டவெளியில் ஒன்றுக்கு மேற்பட்ட பால் வீதிகள் (Milkways) இருப்பதாகவும், இத்தகைய பால்வீதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட ஞாயிற்றுத் தொகுதிகள் (Solar System) இருப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. அந்திரோமிடா எனும் பால்வீதியின் ஒரு அந்தத்திலே சூரியனை மையமாகக் கொண்ட ஞாயிற்றுத் தொகுதியில் புவியும் மூன்றாவது கோளாக வலம் வருகிறது. இப்பூமியில் நிலவுகின்ற தட்பவெப்ப நிலைமைகளும் நீர், ஒட்சிசன் போன்ற அடிப்படை மூலகங்களும் காணப்பட்டமையினாலேயே ஆறறிவுபடைத்த மனித குலமும் தோன்றி செவ்வாயில் மனிதர்கள் வாழ முடியுமா என்று ஆய்வுசெய்கின்ற அதேநேரத்தில் விண்வெளியில் உல்லாசப் பயணம் மேற்கொள்ள விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற காலகட்டத்தில் நாம் வாழ்கின்றோம்.

நிலவில் இறங்கி மனிதன் வெற்றி கொண்டாடி 39 ஆண்டுகள் கடந்த நிலையில் செவ்வாய்க் கிரகத்தில் ஆடைகளற்ற பெண் இருக்கிறாள் என்று விண் ஓடம் படம் எடுத்து பூமிக்கு அனுப்பி அது பெண் அல்ல, பாறைக்கல் என்று உறுதிப்படுத்தி உள்ளார்கள் நாசா (NASA) விஞ்ஞானிகள்.

இந்நிலையில் வேற்றுக் கிரகவாசிகளும் அன்னியத் தோற்றங்களும் (Unidentified flying Objects) பற்றி ஆராய்கின்ற வேளையில், கி.மு. 1450ஆம் ஆண்டு 5மீற்றர் அளவுகொண்ட சூரியனைவிடப் பிரகாசமான ஒளிவட்டங்களை வானில் கண்டதாகவும், றோமானிய சிரியர் யூலியஸ் சிக்வின்ஸ், கி.மு. 99ஆம் ஆண்டு சூரியன் மேற்குத்திசையில் மறையும் வேளையில் ஒரு உருண்டையான பொருள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். 1561ஆம் ஆண்டு ஜேர்மனியிலுள்ள நியூறம் பேர்க் நகரில் வானில் பல பறக்கும் தட்டுக்கள் ஒன்றுக்கொன்று கடும் சண்டையிட்டுக் கொள்வது போன்று காட்சிகள் தோன்றின. எவை எவ்வாறெனினும் 1947ஆம் ஆண்டில் அமெரிக்காவில் வானில், பறக்கும் தட்டைக் கண்டதாக வந்த செய்திக்குப் பின்னர்தான் இது பற்றிய ஆய்வும் விழிப்புணர்வும் ஏற்பட்டது.

அமெரிக்காவில் கலிபோனியா மாநிலத்தில் பிற்பகல் வேளையில் பறக்கும் தட்டில் வந்த செவிகளற்ற ஈயநிறமான மனிதனைக் கண்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமன்றி இலங்கையிலே கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விநோதமான பறக்கும் தட்டும், அதிலிருந்து இறங்கிய 2 குள்ளமான ஈயநிறமுடைய மனித உருவங்களையும் அப்பிரதேச விவசாயிகள் நேரில் கண்டதாகவும் பல தினசரிகள் செய்திகளை வெளியிட்டிருந்தன. மேலும், கடந்த ஆண்டு காலி, அம்பாந்தோட்டையின் காட்டுப் பகுதிகளில் செவிகளற்ற ஈயநிறமுடைய வேற்றுக்கிரக உருவங்களை அப்பிரதேச மக்கள் கண்டதாகவும் அது சம்பந்தமாகப் பொலிசாரும் ஆய்வுகளை மேற்கொண்டதாகவும் தினகரன் பத்திரிகையின் வார மஞ்சரியில் கடந்த வருடம் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே, இந்த வகையான செய்திகளை, விஞ்ஞானிகள் மனிதனைவிட தொழில்நுட்பம் கூடிய வேற்றுக் கிரகவாசிகள் வேற்றுக் கிரகங்களிலிருந்து பூமியின் ஏதும் தேவைக்காகவோ அல்லது ஆய்வுகளுக்காகவோ தங்களது தொழில்நுணுக்கம் கொண்ட பறக்கும் தட்டு ஊர்திகள் மூலம் வந்திருக்கலாம் என நம்புகின்ற அதேசமயத்தில், இதுபற்றிய கதைகளை வடிவமைத்து மேற்குலகம் இவைபற்றிய திரைப்படங்களை வெளியிட்டுக் கொண்டிருப்பது விநோதமான விந்தையாக இருக்கிறது. எனவே உண்மைத் தகவல்கள் சான்றுகள் மூலம் ஆய்வுகளினூடாக வெளிவரலாம் என்று நம்பிக்கை கொள்வோமாக.



# யப்பானின் வெற்றி இரகசியம் 5S நடைமுறை

திரு. இ.வீரவதனன்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'A'.

போதிய இயற்கை வளங்களையும், வாய்ப்புக்களையும் பெரிதும் கொண்டிராத கிழக்காசிய நாடுகளில் ஒன்றான யப்பான் 2ஆம் உலக மகாயுத்தத்தின்போது பாரிய அழிவுகளை எதிர்கொண்ட போதிலும், இன்று கைத்தொழில் துறை, தொழில்நுட்பத்துறை போன்ற பல்வேறு துறைகளில் முன்னணி நாடாக உலகில் விளங்குகிறது.

யப்பானின் இத்தகைய முன்னேற்றத்துக்குப் பல்வேறு காரணிகள் காணப்படுகின்ற போதிலும், அந்நாட்டு முகாமைத்துவக் கோட்பாடான கெய்சன் (KAIZEN) முகாமைத்துவக் கோட்பாடும், 5S திட்டமும் அக்காரணிகளுள் முதன்மை பெறுகின்றன.

அதாவது கெய்சன் முகாமைத்துவத்தினை 5S திட்டத்தின் மூலமாக யப்பானியர்கள் நடைமுறைப்படுத்துகின்றனர். இத்திட்ட நடைமுறையானது யப்பானின் கல்விப்புலத்தில் மட்டுமல்லாது சமையலறை தொடக்கம் அந்நாட்டு அரசியல், பொருளாதார, சமூக, கலை, கலாசாரத் துறைகள் யாவற்றிலும் பின்பற்றப்படுகிறது.

"S" இல் தொடங்கும் 5 யப்பானியச் சொற்களின் அடிப்படையில் யப்பானியர்கள் தம் முன்னேற்றப் படிமுறைகளைப் பின்வருமாறு நடைமுறைப்படுத்துகின்றனர்.

**5S நடைமுறை/ 5S Procedure**

| *யப்பானியக்கருத்துச்சொற்கள்* | *ஆங்கிலக்கருத்துச்சொற்கள்* | *தமிழ்க்கருத்துச்சொற்கள்* |
|---|---|---|
| Seiri (செய்ரி) | Sorting | பிரித்தெடுத்தல் |
| Seiton (செய்டோன்) | Systemizing | ஒழுங்காக வைத்தல் |
| Seiso (செய்சோ) | Sanintizing | தூய்மை/ துப்புரவு |
| Seiketsu (செய்கெட்சு) | Standardize | நியமம் |
| Shitsuki (செட்சூசி) | Sutain (Self dicipline) | மேல்நான்கையும் தொடர்ந்து ஒரு சுயஒழுக்கமாக/ ஒரு வாழ்க்கை முறையாக கடைப்பிடித்தல் |

**5S நடைமுறையின் முக்கிய நோக்கங்களாவன:-**

- *குழு வேலைக்கான வலுவூட்டல்*
- *தலைமைத்துவப் பண்புகளை அபிவிருத்தி செய்தல்*
- *தரம், செயற்திறன் என்பவற்றை அதிகரித்தல்*

**5Sஇன் அவசியம்:-**

- *பணியிட/ வேலைத்தள/ நிறுவனத்தின் ஆரோக்கியத்தை, செயற்திறனை மேம்படுத்த இம்முறை உதவுகின்றமை.*
- *இம்முறையினை நாளாந்த வாழ்விலும், வீட்டிலும் சிறப்பாகப் பாடசாலைகளிலும் உபயோகித்து உச்சப் பயன்பெற முடிகின்றமை.*

**5Sஇன் பயன்கள்:-**

- *ஒவ்வொருவரினதும் பங்குபற்றலை உறுதிப்படுத்த உதவுகின்றது.*
- *ஊழியர்களை ஊக்கப்படுத்த உதவுகின்றது.*
- *நல்ல சூழலை அபிவிருத்திசெய்ய, செயற்திறனை அபிவிருத்தி செய்ய உதவும்.*
- *எங்கும் எதிலும் வாழ்க்கை முறையாகக் கொண்டு உயர் பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும்.*
- *எந்தவொரு இடத்திலும் இப்படிமுறையினைப் பின்பற்றுவதனால் நேரமிச்சம், மன உளைச்சல் இல்லை, முரண்பாடுகள் இல்லை, வாழ்க்கையில் மகிழ்ச்சி, முன்னேற்றம், உயர்வான வாழ்க்கைத்தரம் என்பன கிட்டும்.*

இனி 5S நடைமுறையிலுள்ள ஒவ்வொரு "S"உம் குறிப்பிடும் விடய அம்சங்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் பின்வருமாறு ஆராயலாம்.

### *I) Seiri/ Sorting – பிரித்தெடுத்தல்*

இந்த நடைமுறையானது தேவையற்றவற்றை அகற்றல், இடத்தை சேமித்தல், இருப்பு மட்டத்தைக் குறைத்தல், நல்ல வேலையிடத்தை உருவாக்கல், மன அழுத்தத்தைக் குறைத்தல், தேவையற்ற பொருட்களைக் காசாக்குதல் எனும் பணிகளைச் செய்வதனைக் குறிப்பிடுகின்றது.

யப்பானியரது பல்வேறு இடங்களில் பயன்படும் இம்முறையில் தேவையற்ற பொருட்களை அகற்றும்போது தற்போது உடனடியாக அகற்றவேண்டிய பொருட்கள்/ பொருட்தொகுதிக்கு சிவப்புநிற அடையாளமும், தேவைப்படலாம் என எண்ணக்கூடிய பொருட்களுக்கு மஞ்சள்நிற அடையாளமும், அவசியம் தேவைப்படும் பொருட்களுக்கு பச்சைநிற அடையாளமும் இடப்படும். இவ்விதம் பொருட்களை வேறுபடுத்துவதனாலும் வேறுபடுத்தியபின் தேவையற்றவற்றை அகற்றுவதனாலும் பல நன்மைகள் கிடைக்கின்றன அவையாவன;

1) *இடப்பயன்பாடு மீதப்படுத்தப்படும்*
2) *வேலைத்தளத்தில் இடையூறுகள் ஏற்படாது*
3) *விபத்துக்கள் தவிர்க்கப்படும்*
4) *கூடுதலான இடப்பரப்பைப் பெறலாம்*
5) *சிறந்த இருப்புக் கட்டுப்பாடு பெறப்படும்*
6) *நேர விரயத்தைத் தடுக்கலாம்*
7) *தேவையானவற்றை இலகுவில் பெறமுடியும்*
8) *வீண் சிரமங்கள் தவிர்க்கப்படும்*

### *II) Seiton/ Systemizing - ஒழுங்காக வைத்தல்*

பொருட்களை வைத்து எடுப்பதற்கான பொருத்தமான இடத்தினை தெரிவுசெய்து எடுக்கும் முறையாகும். அதாவது தேடுவதற்கான நேரத்தைக் குறைத்தல், பொருட்களை சேமித்து வைப்பதற்கான முறை காணப்படல், சேமிப்பின் தரத்தை உயர்த்துதல், இலகுவாக, விரைவாகப் பொருட்களை அணுகுதல் எனும் பணிகளை செய்வதனை நோக்காக கொண்டு அமையும் இம்முறையின் மூலம் உரிய உயர்பலனை அடைய பொருட்களை பொருத்தமான ஒரே இடத்தில் வைத்து எடுத்தல் வேண்டும். அவ்விதம் செயற்படின் கிடைக்கக்கூடிய அனுகூலங்களாவன,

1) *அதிகளவு இடம் மீதப்படுத்தப்படும்.*
2) *தேடுவதற்கான நேரம் குறைவடையும்.*
3) *கவனமான பாவனையை உறுதிப்படுத்தலாம்.*

### *III) Seiso/ Sanintizing - தூய்மை/ துப்புரவு*

தம்மையும், தத்தமது பொருட்களையும், தமது சூழலையும் தாமே தூய்மையாக வைத்திருப்பதனால் அதியுச்சமட்டப் பண்பினை வளர்ப்பதனை நடைமுறைப்படுத்தும் இம்முறையானது கழிவுப் பொருட்களை இடுவதற்கு ஏற்ற இடத்தினைத் தெரிதல், கழிவுகளை அகற்றும்போது அவற்றினை தரம்பிரித்து மீள பயன்படுத்தக்கூடிய முறையினைக் கையாளுதல், சுத்தப்படுத்தும் உபகரணங்களை உரிய இடத்தில் வைத்தல் எனும் நோக்கினைக் கொண்டமைந்துள்ளது. இந்நோக்கினை உரியபடி அணுகுவதன் மூலம் கிடைக்கக்கூடிய அனுகூலங்களாவன,

1) *பொருளாதார வளத்தினைப் பெருக்கக்கூடிய எண்ணக்கருவை நிறைவேற்ற முடிகின்றது.*
2) *வேலைத்தளம் துப்புரவானதாக அமைகின்றது.*
3) *விபத்துக்களை பெருமளவில் குறைத்துக்கொள்ள முடியும்.*
4) *இலகுவான முறையில் பராமரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.*
5) *ஊழியர்கள் மகிழ்ச்சிகரமாக பணியாற்றுவர்.*
6) *சுத்தப்படுத்தவென தனியான நேரமோ, செலவுகளோ ஒதுக்க வேண்டியதில்லை.*

### *IV) Seiketsu/ Standardize - நியமம்*

செய்ரி, செய்டோன், செய்சோ ஆகிய நடைமுறைகளால் சூழப்பட்ட சூழலை பராமரித்தல் கோவைப்படுத்தல், அடையாளமிடல், ஒழுங்கமைத்தல், துப்புரவு பேணல் என்பவற்றில் நியமத்தைக் கடைப்பிடித்தலை நோக்கமாக கொண்டதாக இம்முறை அமைகின்றது.

அதாவது சிறப்பாக ஒழுங்குபடுத்தல், வகைப்படுத்தல், தரப்படுத்தல் என்பவற்றை முன்னெடுக்கும்போது அழியும் பொருட்கள், அழியாப் பொருட்கள், மூலப்பொருட்கள், உடையக்கூடியவை, பதிலீட்டுப் பொருட்கள், இணைப்புப் பொருட்கள், ஆபத்தானவை, அடிக்கடி தேவைப்படுபவை, பெறுமதி கூடியவை, விசேடப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியவை ஆகியவற்றையும் கவனத்தில் கொண்டு செயற்படுவதன் மூலம், சுலபமாகப் பொருட்களைப் பெறமுடிதல் போன்ற பல அனுகூலங்களைப் பெறமுடியும். அவ்வாறு அமையக்கூடிய அனுகூலங்களாவன,

*1) செயற்பாடுகள் விரைவுபடுத்தப்படும்.*
*2) முரண்பாடுகள் குறைவடையும்.*
*3) பணியாட்களின் அதிகளவிலான ஒத்துழைப்பு கிடைக்கும்.*
*4) வினைத்திறன்மிக்க வேலைத்தளம்.*
*5) செயற்திறன் முன்னேற்றம்.*
*6) நிறுவனத்தின் மதிப்பு உயரும்.*

***V) Shitsuki/ Sustain - மேல்நான்கினையும் ஒழுங்காக கடைப்பிடித்தல்.***

தன்னொழுக்கமான செயற்பாடுகளைக் குறிப்பிடும் இம்முறையானது முன்னர் குறிப்பிட்ட செய்ரி, செய்டோன், செய்சோ, செய்கெட்சு, செட்சூசி என்பவற்றை தொடர்ச்சியாக சுயஒழுக்கமாக/ வாழ்க்கை முறையாக பின்பற்றுவதனால் கிடைக்கும் உண்மையான பெறுமானம் பற்றி குறிப்பிடுகின்றது.

வேலைத்தளத்தை ஒழுங்காகவும் துப்புரவாகவும் பேணுவதற்கான நடைமுறையை தொடர்ந்து கடைப்பிடித்தல், தமது பணிகளை செயற்திறனூடாக தொடர்ந்து மேற்கொள்வதனை நோக்கமாகக் கொண்டமைந்த இம்முறையின் அனுகூலங்களாவன,

*1) பணியாட்கள் ஊக்கப்படுத்தப்படுவர்.*
*2) பணியாளர்களுக்கு மனஉறுதி ஏற்படும்.*
*3) பணியாளர்களின் செயல்திறன் மேம்படும்.*
*4) நிறுவன மதிப்பு உயரும்.*

மேற்குறித்தவாறு எண்ணற்ற உயர்வான நோக்கங்களைக் கொண்டனவாக அமையும் 5S நடைமுறையினை எந்தவொரு செயற்பாட்டிலும் முன்னெடுப்பதன் ஊடாக மிகச்சிறந்த அனுகூலங்கள் பறவற்றை அடையமுடியும். குறிப்பாக சமையலறை தொடக்கம் பாரிய கைத்தொழிற்சாலை வரை இடம்பெறும் செயற்பாடுகளை 5S நடைமுறை மூலம் செயற்படுத்தும் யப்பான், இன்று உலகளாவிய ரீதியில் மிகவும் முன்னேற்றமான பொருளாதாரத்தையும் உயர் தொழிநுட்பத்தையும் கொண்டு விளங்குவதுடன் அந்நாட்டு மக்களிடமும் வேலைகளில் சுறுசுறுப்பு, நீண்டநேரம் வேலைசெய்யும் ஆற்றல், முரண்பாடின் போக்கற்ற தன்மை, வள உச்சப்பயன்பாடு, நேரம் மிச்சப்படுத்தும் தன்மை என்பன விருத்தியடைந்திருப்பதுடன் அதனால் ஒவ்வொருவரும் சிறப்பான வாழ்க்கை முறையினை கொண்டிருக்கவும் முடிகின்றது.

இதேவேளை, இலங்கை போன்ற நாடுகளில் காணப்படும் நேரப்பிரச்சினை, முரண்பாடான போக்கின் வளர்ச்சி, வேலைத்திறன் குறைவு எனும்பல குறைபாடுகளுக்கும் சமூக, பொருளாதார பின்னடைவுகளுக்கும் காரணம் கல்வி உள்ளிட்ட எந்தவொரு துறையிலும் 5S நடைமுறை போன்ற சிறந்த திட்டமிடல் இன்மையே ஆகும்.

இதனால் இலங்கை போன்ற நாடுகள் 5S நடைமுறைகளை முழுமையாக அனுசரித்துப் பயன்பல பெறவேண்டும்.

உசாத்துணைநூல்கள்:-

• அகவிழி
• யாழ்ப்பாண கல்வி வலய முகாமைத்துவ பிரிவின் வெளியீடு



# இணையம் பற்றி அறிவோம்.

திரு. நாகச்சந்திரன் செல்வச்சந்திரன்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் முக்கிய மைல்கல்லாக 'இணையம்' (INTERNET) அமைந்துள்ளது. 'இணையம்' என்றால் என்ன என்பதை எளிமையாகக் கூறுவதாயின், உலகளாவிய 'கணினிகளின் வலைப்பின்னல் எனக்குறிப்பிடலாம். இவ்விணையம் மூலம் ஏராளமான பயன்கள் கிடைக்கின்றன. தகவல்களைப் பார்வையிட, தேடிப்பெற, மின்னஞ்சல் அனுப்ப, பெற, உரையாட, கூட்டங்கள், விவாதங்கள் நடத்த, படங்கள் சலனப் படங்கள் என்பவற்றைப் பார்வையிட, பரிமாற்ற, விரும்பிய பாடநெறியைக் கற்க, ஆலோசனை பெற என்றவாறு இணையத்தின் பயன்கள் நீண்டு செல்கின்றன. ஆகவே, இணையத்தால் முடியாதது எதுவுமே இல்லை என்றே கூறலாம்.

இத்தகைய இணையத்தினை கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது வகுப்பறையில் பயன்படுத்துவதனால் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1. *மாணவர் தமக்குத் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். இதனால் மாணவர்களின் தேடல் அதிகரிக்கும் (Yahoo, Google போன்றன விரைவான தேடற் பொறிகளாகும்)*
2. *இலத்திரனியல் அஞ்சல் (E-mail) மூலம் தகவல்களைப் பாதுகாப்பாகவும், விரைவாகவும் பரிமாற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.*
3. *உலகின் பல பாகங்களில் இடம்பெறும் செயற்பாடுகளை உடனுக்குடன் பெற்று அறிவைப் புதுப்பித்துக் கொள்ள முடியும்.*
4. *தேவையான தகவல்களை பதிவிறக்கம் (Down Load) செய்து சேமித்து வைப்பதனால் மீளமீளப் பயன்படுத்தலாம்.*
5. *குறித்ததுறை சார்ந்த விரிவான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.*

இவ்வாறு "இணையம்" மூலம் பெரும் நன்மைகள் கிடைத்தாலும் சில குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன.

1. *மாணவர் தமக்கு தேவையான தகவல்களைவிட வேறு தளங்களுக்கும் செல்வதற்கு வாய்ப்புண்டு.*
2. *பார்வையிடும் தளங்களையும், தேவையற்ற சில தளங்களை (பாலியல் தொடர்பானது) கண்காணிப்பதும், கட்டுப்படுத்துவதும் சிரமமாக இருக்கும்.*
3. *இவற்றில் இடம்பெறும் தகவல்கள் நூறுவீதம் நம்பகமானவை எனக்கூற முடியாது.*
4. *இதில் இடம்பெறும் தகவல்களின் உற்பத்தி ஸ்தானம் (Source) எது என்பதை கண்டறிவது கடினம்.*
5. *மின்னஞ்சல் மூலம் பரவும் 'வைரஸ்' (Virus) காரணமாகவும் பாதிப்புக்கள் ஏற்படலாம்.*

எனினும் சாதகமான அம்சங்களை மட்டும் சிறப்பாகக் கையாண்டு அறிவைப் பெருக்கமுடியும்.

இங்கு இணையத்தளங்கள் என்பது முக்கியம் பெறுகின்றன. ஏராளமான இணையத்தளங்கள் உண்டு. எங்களுக்கு முகவரி இருப்பது போன்றே இணையத்தளங்களுக்கும் முகவரி உண்டு. உதாரணமாக இணையத்தளம் ஒன்றின் முகவரி பின்வருமாறு அமையும்.

http://wwwyahoo.com

இங்கு, http:- Hyper Teat Transter Protocol

www:- World Wide Web

yahoo.com:- இணையத்தள முகவரிகளில் பலவகை உண்டு. இதிலுள்ள இறுதிச் சொற்கள் இணையத்தளம் என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கும்.

பின்வருவன இணையத்தள முகவரிக்கு பின்னாலுள்ள சொற்களுக்கான விளக்கங்கள் ஆகும்.

.com - Commercial தொடர்பானது.

.org - அரசசார்பற்ற அல்லது சேவை நிறுவனங்களின் பொதுவான பதம்.

.edu - கல்வி சம்பந்தமான தளமாகும்.

.mil - இராணுவம் சம்பந்தமான தளமாகும்.

.lk - இலங்கை தொடர்பான அல்லது இலங்கை நிறுவனங்கள் தொடர்பான தளங்கள்.
.ca - கனடா இணையத்தளங்கள்.
.gov - அரசாங்கத்திற்குரிய இணையத்தளங்கள்.

இணையத் தளங்கள் சிலவற்றின் முகவரிகளும் அவற்றின் மூலம் பெறக்கூடிய தகவல்களும் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| இணையத்தள முகவரி | பயன்பாடு |
|---|---|
| *http://10minutemail.com* | 10 நிமிடங்களுக்கு தற்காலிகமாக மின்னஞ்சல் முகவரியைத் தரும் |
| *http://everystockphoto.com* | தேவையான நிழற்படங்களை இலவசமாகப் பெறுவதற்கு |
| *http://nobelprize.org* | நோபல் பரிசு தொடர்பான விடயங்கள் |
| *www.w3schools.com* | இணையப்பக்க வடிவமைப்பு தொடர்பான விடயங்கள் |
| *http://tamilwebdunia.com* | தமிழில் உலகச் செய்திகள், சினிமா, விளையாட்டு, மின்னஞ்சல், ஆன்மீகம் எனப் பலவற்றைக் கொண்டுள்ளது. |
| *http://discovermasazine.com* | நாளுக்குநாள் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள |
| *http://www.zoho.com* | இணையத்தில் இருந்தபடியே word, Excel, Power point என்பவற்றில் வேலைசெய்ய |
| *http://www.tamilbeat.com* | தமிழ் mp3 பாடல்களை பதிவிறக்கம் செய்ய |
| *http://www.video-tutes.com* | இலவச வீடியோப் பயிற்சி |
| *http://www.popsci.com* | விஞ்ஞானம் பற்றிய செய்திகள் |
| *http://www.koodal.com* | தமிழில் செய்திகள், திரைப்படங்கள், நகைச்சுவை கூடல்மெயில் |
| *http://www.puthumali.com* | தமிழில் பல பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்டது. |
| *http://www.answers.com* | கேள்வியாக இருக்கும் சொற்களுக்கு விடை தரும் இணையத்தளம். |
| *http://www.netvibes.com* | தேவையான இணையத்தளங்கள் என்பவற்றை ஒரே பக்கத்தில் பார்க்க. |
| *http://www.nationalgeographic.com* | இயற்கையின் அற்புதங்களை நேரடியான இயல்புத் தோற்றத்தோடு பார்க்க. |
| *http://www.123greetings.com* | வாழ்த்து மடல்களை இலத்திரனியல் முறையில் அனுப்ப. |
| *http://www.oruwebsite.com* | தமிழ்த்திரைப்படங்களை இலவசமாகவும் முழுமையாகவும் பார்க்க. |
| *http://www.reciva.com* | பல்வேறு நாட்டு வானொலிச் செய்திகளைக் கேட்பதற்கு |
| *http://www.nowpublic.com* | மக்களால் சேகரிக்கப்பட்ட செய்திகள் நிழற்படங்கள் என்பவற்றைப் பார்வையிட. |
| *http://www.wikimapia.org* | எமது வீட்டையும், சுற்றியுள்ள பிரதேசங்களையும் பார்க்க. |
| *http://www.nationmaster.com* | ஊர்ஜிதப்படுத்தப்பட்ட விடயங்களைப் புள்ளிவிபர ரீதியாகபார்வையிட. |
| *http://wwwmadehow.com* | உபகரணங்கள், பொருட்கள் தயாரிக்கப்படும் முறைகளைஅறிய. |
| *http://wwwsmscollection.com* | பல்வேறு வகைகளைச் சேர்ந்த smsகளின் தொகுப்பு. |
| *http://www.amazon.co.uk* | எமக்குத் தேவையான நூல்களை வீட்டில் இருந்தபடியே வாங்க. |
| *http://www.onelook.com* | ஆங்கிலச் சொற்களுக்கான பொருளை விரைவாக அறிய |
| *http://www.bbc.co.uk/tamil* | BBC தமிழ் |
| *http://www.mamadedia.com* | சிறுவர்களிற்கான தளம் |
| *http://www.cricinfo.com* | கிரிக்கெற் பற்றிய செய்திகள் |
| *http://www.funeral-cast.com* | மரணச்சடங்கு ஒலிபரப்புச் செய்ய |
| *http://mylastemail.com* | உயில் அஞ்சல்கள் |
| *http://www.comicseries.com* | சித்திரத் தொடர்கதைகள் |
| *http://www.like.com* | உலகிலுள்ள ஒரேமாதிரியானவற்றைப் பார்க்க. |

உசாத்துணை நூல்:-
Pc Times



# ஆரம்பக் கல்வியும் கணினியும்

இ.இரட்ணஜோதி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

பண்டைக்காலம் தொட்டு ஆரம்பக்கல்வி முக்கியம் பெற்றதாகக் காணப்பட்டுள்ளது. பிளேட்டோ, ரூசோ, டுயி போன்ற கல்வித் தத்துவவியலாளர்களும் ஆரம்பக்கல்வி வழங்கப்பட வேண்டும், அதுவும் தாய்மொழியில் வழங்கப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளனர். இக்கருத்துக்களை இலங்கை புத்திஜீவிகளும், கல்வியியலாளர்களும் உள்வாங்கி, 6வயது தொடக்கம் 10வயது வரையான வயதுப்பிரிவுகள் அடங்கும் நிலையை ஆரம்பக்கல்வி என்ற அடிப்படையில் வழங்கி வருகின்றனர்.

பிஜாயேயின் அறிகை விருத்திப் பருவத்தின் அடிப்படையில் இவ்வயதுப் பிரிவினர், முன் எண்ணக்கருப் பருவத்திலும், தூல சிந்தனைப் பருவத்திலும் அடங்குகின்றனர். இவர்களுக்கு கருத்து நிலையில் சிந்திக்க முடியாத காரணத்தால் காட்சி நிலையிலேயே கற்பிக்க வேண்டும். இதற்கு இன்றைய உலகினைக் கிராமமாக்கி விட்ட கணினியும், இணையமும் மிகுந்த பங்களிப்பினை வழங்க முடியும்.

2007இல் கொண்டுவரப்பட்டுள்ள கலைத்திட்ட மறுசீரமைப்பின்படி ஆசிரியர் வகிபாகங்களில் நிலைமாற்றும் வகிபாகம் என்பது பிரதான இடம்பெறுகிறது. இங்கு கற்றல் முக்கியம் பெறுவதோடு ஆசிரியர் வளவாளராகக் கடமையாற்றுகிறார். வளப்பாவனை அதிகம் இடம்பெறுகின்றது. இதில் பிரதான சாதனமாகக் கணினியைப் பயன்படுத்தலாம்.

தகவல் தொழில்நுட்பத்தின் அறிமுகத்தோடு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் இன்று அநேக நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கையிலும் இதன் அத்தியாவசியம் உணரப்பட்டமையினால் இதற்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

இன்றைய எமது பாடசாலைகளில் கணினியை

1. *கணினிக்கல்வி*
2. *கற்றல் - கற்பித்தல் சாதனம்*
3. *முகாமைத்துவம்*

என மூன்று வழிகளில் பயன்படுத்தலாம். இத்தகைய கணினியைக் கற்பித்தல் துணைச்சாதனமாகப் பயன்படுத்துவதால் பின்வரும் நன்மைகள் கிடைக்கின்றன.

1. *கற்றல் - கற்பித்தல் வினைத்திறனாக அமையும்.*
2. *கற்போரின் சுயகற்றலை மேம்படுத்தலாம்.*
3. *ஆசிரியரின் செயற்பாடு இலகுவாகும்.*
4. *மாணவர் தனித்தும், குழுவாகவும் கற்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.*

கணினியைப் பின்வரும் நான்கு முறைகளில் பயன்படுத்த முடியும்.

1. *சமூகம் - கணினி பற்றிய விழிப்புணர்வு.*
2. *தொழில் - மாணவர் கணினியைக் கையாளும் திறன்*
3. *கற்றல் - கற்பித்தல் செயற்பாடு*
   *I) CAL - Computer Aided Learning*
   *II) CAI - Computer Aided Instruction*
4. *முகாமைத்துவம் - அலுவலகப் பயன்பாடு.*

மேலும், இக்கணினியை மாணவர் மையத்திசையில் பின்வருமாறும் பயன்படுத்தலாம்

1. *கணினி ஓர் ஆய்வுச்சாதனம்.*
2. *கணினி ஓர் பிரச்சினை விடுவிக்கும் சாதனம்.*
3. *கணினி ஓர் முன்வைப்புச் சாதனம்.*

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்குப் பொருத்தமான கணினிக் கல்வியை வழங்கலாம். எடுத்துக்காட்டாக, paint, e-book, games போன்றவற்றின் மூலம் மாணவர்களின் திறனை விரிவடையச் செய்யலாம்.

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு வினைத்திறன் மிக்கதாகவும், நேரத்தினைச் சிக்கனமாகவும் எண்ணக்கருவைச் சரியான முறையில் வழங்கவும் இதனைப் பயன்படுத்தலாம். Power point presentation மூலம் இலகுவாக முன்வைத்தலை மேற்கொள்ளலாம். இது மாணவர்களுக்கு மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தும். இதன்போது, ஆசிரியர் தனக்குத் தேவையான வளங்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம். தற்போது பல மென்தட்டுக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவை எழுத்து, படம், ஒலி வடிவங்களைக் கொண்டதாக உள்ளன. இதன்மூலம், பாடல்கள், கதைகள், பாட அலகுகள், கணிதச் செய்முறைகள் என்பவற்றை இலகுவாக அறியச் செய்யலாம். மேலும், Encarta, Britanica, World, Atlas போன்றவற்றின் மூலமும் தகவல்களைப் பெறச்செய்யலாம்.

மேலும், இக்கணினியுடன் இணைய இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் தமக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டலாம். yahoo, google போன்ற இலவச தேடற்பொறிகள் மூலம் பல விடயங்களை உடனுக்குடன் அறியலாம்.

கணினியைக் கற்றல் - கற்பித்தல் சாதனமாகப் பயன்படுத்துவதால் சிறந்த பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.



## "இந்துபோட்" சு.இராசரத்தினம்

## (1884 -1970)

யாழ்ப்பாணத்தில் சைவத்தமிழ் மரபினூடாகக் கல்வியை வழங்குவதிலும், சைவச்சிறார்களின் காப்பகத்தைநிறுவி அவர்களது துயர் துடைப்பதிலும் முன்னோடியாகச் செயற்பட்டவர் "இந்துபோட்" சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள். 04.07.1884இல் கோப்பாயில் பிறந்த இவர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியையும் பெற்றவர். கொழும்பு சட்டக்கல்லூரியில் பயின்று குடியியல் சட்டத்துறை அறிஞரானவர். யாழ்ப்பாண மாவட்டத்தில் பதில் நீதியரசராகப் பணியாற்றியவர். இலங்கை அரசாங்கசபையில் உறுப்பினராகவும் திகழ்ந்தவர். வருவாய் வரக்கூடிய தொழில்களைக் கைவிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வழியைப் பின்பற்றி, சேர். பொன்.இராமநாதன் அவர்களது துணையுடன் சைவத்தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். 1923 மார்கழியில் சேர். பொன்.இராமநாதன், சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி போன்றவர்களால் உருவாக்கப்பட்ட திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் முகாமையாளராகவும், செயலாளராகவும் பணியாற்றி அந்நிறுவனத்தின் உயிர்போன்று விளங்கியவர். யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மாங்குளம், சிலாபம், புத்தளம், பதுளை, நாவலப்பிட்டி போன்ற இடங்களிலும் சைவப் பாடசாலைகளைத் தாபித்தவர். சில பாடசாலைகளில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிக் கல்வியை வழங்க வழிசெய்தவர். 1958ஆம் ஆண்டு 187 அரச நன்கொடைபெறும் பாடசாலைகள் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பொறுப்பில் இயங்கின. 1928இல் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை ஒன்றினை உருவாக்கி 1963 வரை சுமார் 1500க்கு மேற்பட்ட சைவாசிரியர்கள் பயிற்சிபெற்று வெளியேறவும், தகைமைசார்ந்த அறிஞர்கள் கல்வியறிவூட்டவும் வழிவகுத்தவர். 1930இல் திருநெல்வேலியில் ஆண், பெண் அநாதைவிடுதிகளை உருவாக்கி சைவ ஏழைச்சிறார்கள் அங்குதங்கியிருந்து கற்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்தியவர். அங்கு தங்கியிருந்த மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறவும் சைவத்தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணவும் வசதிசெய்து கொடுத்தவர். அவர் தொடக்கிய இந்த நல்லறப்பணி இன்றுவரை தொடருகின்றது. 35ஆண்டுகளாக சைவத்துக்கும் தமிழுக்கும் ஓடியோடி உழைத்த நல்லுள்ளம் இவருடையது. ஏனையவருக்கு முன்மாதிரியாக இலங்கையில் சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தை கல்வித்துறை மூலமும்,பண்பாட்டுத்துறை மூலமும் கட்டிக்காத்த இப்பெருமகனார் 12.03.1970இல் சிவபதமடைந்தார். யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் என்றும் அழிக்கமுடியாத பெயர் "இந்துபோட்" இராசரத்தினம் அவர்களுடையதாகும்.



# இணையம்
## INTERNET

எம்.புஸ்பவேணி,
ஆரம்பக் கல்வித்துறை,
1ஆம் வருடம்.

- தொலைத்தொடர்பு ஊடகங்களில் சமீபகாலக் கண்டுபிடிப்பு இணையம் ஆகும். உலகில் எப்பாகத்தில் நிகழும் எந்த விடயமாயினும் உடனுக்குடன் தொடர்பாடல் மூலம் அறிந்து கொள்ளமுடியும். இதற்கு வழிகாட்டி இணையம்.
- ஒரேமாதிரியான செயற்பாட்டு அமைப்புக்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருத்தலை Network என்பர். பல்வேறு கணினிப் பொறிகளை இணைத்துத் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும் அமைப்பு Computer Network எனப்படும்.
- பல்வேறு கணினிகளின் (Network) வலைப்பின்னல் அமைப்புக்கள் ஒன்றிணைக்கப்பட்டு தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளும் அமைப்பே Internet work ஆகும். அது சுருக்கப்பட்டு இணையம்எனத் தமிழில் அழைக்கப்படுகின்றது.
- வளர்ச்சிப்படி
  1. தொலைபேசி (இயங்கும் முறை)
  2. செலூலர் தொலைபேசி (கதிர்வீச்சால் செய்திப் பரிமாற்றம் -
     Eg:- செல்டர், மொபிடல், டயலொக்)
  3. பேஸிமிஸி (∴பக்ஸ்) (தொலைபேசி – பதிவுக்கருவி உள்வாங்கி காகிதம்)
  4. ஈமெயில் (Electronic Mail) (சர்வதேசத் தொலைபேசி, கணினி Modem என்னும் கருவியால் இணைப்பு)
  5. இணையம்:- உலகில் உள்ள கணினிகள் மின்னியல் ரீதியாக இணைந்து தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் செய்தல்.
- உலகம் வியாபித்த வலைப்பின்னல் (World Wide Web) WWW செயற்பாடு.
  1. செய்மதிகள் (செயற்கைக்கோள்) 36000Km தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
  2. ஓரிடத்திலிருந்து செய்மதிகள் அனுப்பப்பட்டு அங்கு சேமிக்கப்பட்டு, தேவைப்படும் இடங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.
- இச்சேவையில் இணைவோர் ஒரு விலாசத்தைப் பெறுவர். அதனூடாக எல்லா விடயங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.
  Eg:- Lake House – விலாசம் (http/w/w/w/lanka net Lake House)
- நன்மைகள்
  1. கல்வி அறிவினை விருத்தி செய்யலாம்
  2. வியாபாரம், வங்கி நடவடிக்கைகள்
  3. புதிய கண்டுபிடிப்புக்களை அறிதல்
  4. உடனடி ஆலோசனைகளைப் பெறல்
  5. நேருக்குநேர் உரையாடல்
  6. வேலைவாய்ப்பு, பொழுதுபோக்கு

*******



# கணினி வைரஸ் என்பதனைப் பற்றி எளிமையாகப் புரிந்து கொள்ளுங்கள்.

திருமதி ஜெ.காயத்திரி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

Computer virus என்பது பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். இதனை நாம் தமிழில் "கிருமி நிரல்கள்" என்று கூறுகின்றோம். இத்தகைய கிருமி நிரல்களும் நாம் கணினியில் பயன்படுத்தும் மற்றைய நிரல்கள் (Programs) போன்றவையே. அப்படியிருக்க, இதனை ஏன் கிருமி நிரல்கள் என்று கூற வேண்டும்? சில நிரல்கள் அழிவுப் பணிக்காக எழுதப்படுகின்றன. எப்படிக் கிருமிகள் நமது உடலில் புகுந்தால் அது எமது உடலுக்குப் பல உபாதைகளை விளைவிக்கின்றனவோ, அவைபோல இத்தகைய அழிவுப் பணிகளுக்காக எழுதப்பட்ட நிரல்களும் கணினிக்குள் புகுந்தால் அதற்குப் பல உபாதைகளை விளைவிக்கின்றன. இங்கு கணினிக்கு உபாதை எனக்கூறுவது கணினியிலுள்ள தரவுகளை, மென்பொருட்களை அழிப்பது. அதிகமான இடத்தை நினைவகங்களில் ஆக்கிரமிப்புச் செய்து, அதன் மூலமாகக் கணினியின் செயற்பாட்டு வேகத்தைக் குறைப்பது, கணினியில் வேலை செய்யும்போது பலவிதமான நொந்தரவுகளைச் செய்வதாகும்.

இத்தகைய நிரல்களைக் கிருமி நிரல்கள் என்று கூறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவை பின்வருமாறு;

1. *இந்த நிரல்கள் எப்படிக் கிருமிகள் ஒரு கிருமியிலிருந்து பல்கிப் பெருகுகின்றதோ அதுபோல பல்கிப் பெருகவல்லவை. ஒரு கிருமி நிரல், தானாகவோ தன்னைப் போன்ற கிருமி நிரல்களையோ உருவாக்கவல்லது. இதனை Self Replication என்பர்.*
2. *எப்படிக் கிருமிநிரல்கள் ஏதாவது ஊடகங்களைப் பயன்படுத்திப் பரவுகின்றனவோ, அது போல இத்தகைய நிரல்களும் கணினியின் பல ஊடகங்களின் வழியாக ஒரு கணினியிலிருந்து மற்றையதொரு கணினிக்குப் பரவுகின்றன. எடுத்துக்காட்டாக, நெகிழ்வட்டுக்கள் (Floppy disk) மற்றும் வலையமைப்புகளின் மூலம் கோப்புகளை ஒரு கணினியிலிருந்து வேறு கணினிக்கு மாற்றும்போது, அதன் வழியே இத்தகைய கிருமி நிரல்களும் அந்தக் கணினிக்கு பரவிவிடுகின்றன. அங்கிருந்து அடுத்த கணினி என்று அதனுடைய பரவல் நடந்து கொண்டே இருக்கும்.*
3. *மனித உடலில் கிருமி புகுந்ததும் அது அதனுடைய குறிகளை நமக்கு உணர்த்தி நோய்வாய்ப்படுவதுபோல, இந்தக் கிருமி நிரல்களும் நம் கணினியில் புகுந்தவுடன் அது தான் செய்ய வேண்டிய அழிவுப் பணிகளையும், தொந்தரவுகளையும் தந்து அதனுடைய இருப்பை நமக்கு உணர்த்தும். இதனை Symptoms of virus Attack என்று கூறுவதுண்டு.*
4. *இத்தகைய கிருமிகள் நமது உடலில் புகுந்து விட்டதை அறிந்ததும் அதனை அழிக்காது விடின் உடலுக்கு தீங்கு ஏற்படுவது போல கிருமி நிரல்களை அப்படியே தொடர விட்டால் கணினியிலுள்ள முக்கிய தகவல்கள் மற்றும் மென்பொருட்கள் என்பவற்றை தாம் இழக்க வேண்டி நேரிடும்.*

இத்தகைய கிருமி நிரல்கள், ஆரம்பத்தில் ஒரு விளையாட்டுக்காக மென்பொருள் பொருளியலாளர்களால் எழுதப்பட்டன. அவர்கள் வலையமைப்பிலுள்ள நண்பரின் நிரல்களை அழிப்பதற்கும் விளையாட்டாகத் தொந்தரவு செய்வதற்குமே எழுதப்பட்டன. அவை வளர்ச்சியடைந்து கணினி உலகையே அவதிக்குள்ளாக்கும் என யாரும் அறியவில்லை. ஜோசி (Josi) என்னும் கிருமி நிரல் நம் கணினியில் புகுந்தால் அது நாம் ஏதாவது வேலையாக இருந்தால் திடீரெனத் தோன்றி 'எனக்குப் பிறந்தநாள் வாழ்த்துச் சொல்' என்று கட்டளையிடும். அது கூறியவாறு வாழ்த்துத் தெரிவித்தால் பின் மறைந்து விடும். இத்தகைய கிருமி நிரல்கள் நமது கணினியிலுள்ள மென்பொருளுக்கும், கணினிக்கும் எப்போதும் தீங்கு விளைவிக்காது.

ஆனால் சில கிருமி நிரல்கள் மிகவும் ஆபத்தானவை. நமது Hard diskஐயே மொத்தமாக அழித்து விடும். அத்தோடு நமது மொத்தத் தகவல்களும் மென்பொருட்களும் அழிந்து விடும். இது பெரிய நிறுவனங்களைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய இழப்பாக இருக்கும். தனிக்கணினியைப் பொறுத்தவரையில் மிகவும் விலைமதிக்க முடியாத தகவல்கள் எதனையும் அதிகம் கணினியில் வைத்திருக்கப் போவதில்லை. மென்பொருள் அழிந்து போய்விட்டாலும் மீண்டும் ஏற்றுக் கொள்ளலாம்.

**எத்தகைய வகையில் இக்கிருமி நிரல்கள் செயற்படுகின்றன?**

இத்தகைய கிருமி நிரல்களை எழுதும் வல்லுனர்கள் எந்த விதமான முறையில் கணினியை அந்நிரல் தாக்க வேண்டும் என அதில் எழுதுகின்றார்களோ அதன்படி அந்நிரல்கள் செயற்படும். எடுத்துக்காட்டாக, நான் ஒரு கிருமி நிரலை எழுதுகிறேன். அதில் எந்த நிரல் கோப்புகளைப் பிரதி எடுக்கும்போது அது கணினியில் இருந்து நெகிழ்தட்டுக்கும், அதிலிருந்து கணினிக்கும் செல்வதற்காகக் கட்டளைகளை அமைக்கின்றேன். அது மட்டுமல்லாது அந்நிரல், கணினி வினைக்கலனைத் தனது நினைவகத்தில் ஏற்றியவுடன் செயற்பட்டு அதாவது தன்னைத் தானே கணினியின் இராம் நினைவகத்தில் ஏற்றிக் கொண்டு அக்கணினியின் திகதியைக் கவனித்து வருமாறு கட்டளைகளை அமைக்கின்றேன். அவ்வாறு கணினியின் திகதியைக் கவனித்து வரும் அக்கிருமி நிரல் மே 5 கணினியின் திகதியாக வரும் நேரத்தில் அதிலுள்ள தகவல்களை (Format) மொத்தமாக அழிக்கும் கட்டளையைக் கொடுக்கிறேன். இதுதான் ஒரு கிருமி நிரல் செய்யும் வேலை. இங்கு கணினியின் திகதியைக் கவனித்து, அதில் நான் கொடுக்கும் திகதி வந்தால் அது தனது வேலையைச் செய்யக் கட்டளையிட்டிருப்பது போல பல வல்லுனர்கள் பலவிதமான கட்டளையிடுகின்றனர். இத்தகைய கிருமி நிரல்கள் அதை எழுதும் வல்லுனரைப் பொறுத்து வேறு வேறு விதமாக அமைகின்றன. வெவ்வேறு வழிகளில் செயற்படுகின்றன. இத்தகைய கிருமிநிரல்களை நாம் பொதுவாக இரு வகையாகப் பிரிக்கிறோம்.

1. கோப்புகளைத் தாக்கும் கிருமிகள் (File virus)
2. Boot sector மற்றும் Partition Table கிருமிகள்

இவற்றில் கோப்புகளைத் தாக்கும் கிருமிகள் நிரல்களையும் தகவல் கோப்புகளையும் தாக்கி அழிக்கின்றன. இன்னும் கணினியில் பயன்படுத்தும் நெகிழ்வட்டு (Floppy) மற்றும் வன்தட்டு (Hard disk) என்பவற்றில் நாம் பகிர்ந்து வைத்துள்ள கோப்புகளின் சரியான முகவரி மற்றும் இந்த வன்தட்டு எத்தனையாகப் பிரிக்கப்பட்டுள்ளது, அந்த ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வளவு கொள்ளளவு போன்ற தகவல்கள் இந்த Boot Sector மற்றும் Partition Table போன்றவற்றிலுள்ளன. இவைகளைக் கிருமி நிரல்கள் தாக்குவதால் நாம் அந்த வன்தட்டிலுள்ள மொத்தச் சேமிப்புகளையும் இழந்து விடுவோம். தற்காலத்தில் பல புதிய வகைக்கிருமி நிரல்கள் பரவுகின்றன. அவை மேற்கூறிய வகையில் செயல்படுவதோடு இணையத்தின் வாயிலாக credit card numbers மற்றும் கடவுச்சொல் (Password) போன்றவற்றைக் கவர்ந்து செல்வதற்கும் எழுதப்படுகின்றன.

ஒருவகைக் கிருமிநிரல்களை "த்ரோசான் குதிரைகள்" என்று கூறுகிறோம். இவை கிருமி நிரல்களை ஒவ்வொரு கணினிக்கும் கொண்டு செல்லும் வேலையைச் செய்கின்றன. இதில் எடுத்துச் செல்லப்படும் கிருமி நிரல்கள் அந்தந்த கணினிகளில் தங்கி அக்கணினியில் செய்யப்படும் வேலையைக் கவனித்து வருகின்றன. எப்போதாவது credit card numbersஐத் தரும் போது அவற்றைக் குறிப்பெடுத்துக் கொள்கின்றன. சில சமயங்களில் இணைய வங்கியில் பயன்படுத்தும் கடவுச் சீட்டுகளையும் எடுத்து வைத்துக் கொள்கின்றன. பின் தனது எஜமானுக்கு (Owner of that virus) இணையத்தின் மூலம் அனுப்பி விடுகின்றன.

**கிருமி நிரல்களை நம் கணினியில் நுளைந்து விடாமல் தடுப்பது எப்படி?**

சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். அவைகளாவன,

1. பிறரிடமிருந்து வாங்கிப் பயன்படுத்தும் Floppy disk , CD என்பவற்றை முறையாகச் சோதித்த பின்னரே பயன்படுத்தவேண்டும். (முடிந்தளவு அவைகளைத் தவிர்க்க வேண்டும்)
2. வேண்டாத விளையாட்டு மென்கலன்களை (Soft ware) இலவசமாகக் கிடைக்கிறதே என இணையத்திலிருந்து இறக்கிக் கொள்வதோ, நண்பர்களிடமிருந்து வாங்கிப் பயன்படுத்தலோ கூடாது.
3. முடிந்தளவு அடிக்கடி கணினியைக் கிருமிப் பரிசோதனைக்கு உட்படுத்தல் வேண்டும்.
4. மின்னஞ்சலில் வரும் இணைப்புக்களை அனுப்பியவர் தமக்கு வேண்டியவராக இல்லாதிருப்பின் கவனமுடன் கையாள வேண்டும். இவைகள் பெரும்பாலும் கிருமி நிரல்களைத் தாங்கிவரப் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் இத்தகைய கிருமி நிரல்களை அழிப்பதற்கு அல்லது தடை செய்வதற்கு என கிருமி அழிப்பான்கள் (Anti virus) கிடைக்கின்றன. இக்கிருமி அழிப்பான்களை நம் கணினியில் பதிந்து வைத்துக்கொண்டு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனாலும் இங்கு பல விடயங்களைக் கவனிக்க வேண்டும். எல்லாக் கிருமி நிரல்களையும் எல்லாக் கிருமி அழிப்பான்களும் அழித்து விடுவதில்லை. காரணம்

ஏற்கனவே வந்த ஒரு கிருமி நிரலுக்குத்தான் அதை அழிக்கக்கூடிய நிரல்களை எழுத முடியும். இன்று புதிதாக வரும் கிருமி நிரல்களிற்கு நாளைதான் மருந்து கண்டுபிடிக்க முடியும். அதற்குக் காரணம் ஒவ்வொரு கிருமிநிரல் எழுத்தாளர்களும் புதுப்புது விதமான முறைகளைக் கண்டுபிடிப்பதாலாகும். அம்முறைகளை நன்கு ஆராய்ந்து அந்தப் புதுக்கிருமி எவ்வாறு செயற்படுகிறது என அறிந்து தான் அழிப்பான்கள் (vaccines) எழுதப்படுகின்றன. நேற்றைய கிருமி அழிப்பான்கள் நாளைய கிருமிகளை அழிக்கப்போவதில்லை. எனவே, அடிக்கடி உங்களது கிருமி அழிப்பான் மென்கலன்களைப் புதுப்பிக்கவேண்டும். கிருமி அழிப்பான் மென்கலன்களை எழுதுபவர்கள் பல கிருமி நிரல்களைப் புதிதுபுதிதாக உலவவிடுகின்றனர். பின் அதற்கான அழிப்பானைத் தயார் செய்து விற்பனை செய்கின்றனர். அச்சமயத்தில் வேறு சில கிருமிகளை வெளிவிடுகின்றனர். ஒரு கிருமியை எழுதியவருக்கு அது எவ்வாறு செயற்படும் என்பது தெரிந்துவிடுவதால், அதனை அழிக்க எளிதில் அழிப்பானை உருவாக்கமுடியும். ஒரு புதிய கிருமிநிரலானது எவ்வாறெல்லாம் தாக்குகிறது, பரவுகிறது என்பதை நன்கு ஆராய்ந்து அழிப்பதற்கும், தடுப்பதற்கும் நிரல்களை உருவாக்குவது கடினமானது.

## ஐக்கிய நாடுகள் தாபனம் (1)

- ஐக்கிய நாடுகள் தாபனமானது 1945ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24ஆந் திகதி 50 உறுப்புரிமை நாடுகளுடன் உருவாக்கப்பட்டது.
- ஐ.நா வின் உத்தியோகபூர்வ மொழிகளாக சீனம், ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகள் காணப்படுகின்றன. பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, பொருளாதார சமூகநலச் சபை ஆகியவற்றில் அரபுமொழியும் உத்தியோகபூர்வ மொழியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.
- பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, பொருளாதார சமூகநலச்சபை, நம்பிக்கைப் பொறுப்புச்சபை, சர்வதேச நீதிமன்றம், தலைமைச் செயலகம் ஆகிய ஆறு உறுப்பாண்மைகள் ஐ.நா. வில் உள்ளன. இவைதவிர 15 முகவராண்மைகள், பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள், நிறுவனங்கள் ஆகியனவும் அடங்குகின்றன.
- பொதுச்சபையின் வழமையான கூட்டத்தொடர் ஒவ்வோர் ஆண்டும் செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பமாகும். ஒவ்வொரு கூட்டத்திலும் புதிய தலைவர், 21 உபதலைவர்கள், ஆறு பிரதான குழுக்களுக்கான தவிசாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். புவியியல் ரீதியான சமபிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யும் பொருட்டு சபையின் தலைமைப்பதவி ஆபிரிக்கா, ஆசியா, கிழக்கு ஐரோப்பா, லத்தீன் அமெரிக்காவும் கரிபியனும், மேற்கு ஐரோப்பாவும் ஏனைய நாடுகளும் என ஐந்து பிராந்திய அடிப்படையில் மாறிமாறி வழங்கப்படும்.
- பாதுகாப்புச்சபை அல்லது பெரும்பான்மை நாடுகள் அல்லது பெரும்பான்மை அங்கத்துவ நாடுகளின் ஒப்புதலோடு தனியொரு அங்கத்துவ நாடு விடுக்கும் வேண்டுதலுக்கு அமைய பொதுச்சபையின் விசேட கூட்டத்தொடரை நடத்தலாம்.
- ஆயுதப்பரிகரணமும் சர்வதேசப் பாதுகாப்பும், பொருளாதாரமும் நிதியும், சமூகநலம்–மனிதாபிமானம்–கலாசாரம், விசேட அரசியலும் குடியேற்ற ஆட்சி நீக்கமும், நிர்வாகமும் வரவுசெலவுத் திட்டமும், சட்டத்துறை என ஆறு குழுக்கள் செயற்படுகின்றன.
- சில விடயங்கள் குழுக்களில் ஆராயப்படுவதில்லை. முழு அளவிலான கூட்டத்தொடரில் ஆராயப்படும். குழுக்களில் வாக்களிப்பு சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் நிகழும். ஆனால் பொதுச்சபைத் தீர்மானங்கள் அங்கத்துவ நாடுகளைச் சட்டரீதியாகக் கட்டுப்படுத்த வலுவற்றவை.
- பாதுகாப்புச்சபையில் 15நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் 'வீட்டோ' அதிகாரமுடைய நிரந்தர அங்கத்துவ நாடுகளாகும். ஏனைய 10 நாடுகளும் இருவருடங்களுக்கு ஒருமுறை பொதுச்சபையால் தெரிவுசெய்யப்படுகின்றன. நடைமுறையில் 9 வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேறும் ஆனால் 'வீட்டோ' நாடுகளின் வலு அவசியமாகும். அவற்றுள் ஒருநாடு இணங்காவிட்டாலும் தீர்மானம் நிறைவேறாது.
- பொருளாதார சமூகநலச்சபையில் 54நாடுகள் அங்கம் வகிக்கின்றன. சாதாரண நிலையில் பெரும்பான்மை அடிப்படையில் தீர்மானங்கள் நிறைவேறும். இந்நாடுகளின் பதவிக்காலம் 3ஆண்டுகள் ஆகும். இதில் 9துணை அமைப்புக்களும் அவற்றோடு தொடர்புடைய நிறுவனங்களும் செயற்படுகின்றன. 9செயற்படு ஆணைக்குழுக்களும் விசேடதுறைகளில் பிரச்சினைகளை ஆராய்ந்து சிபார்சுகளை தெரிவிக்கின்றன.
- புள்ளிவிபரம், சனத்தொகையும் அபிவிருத்தியும், சமூக அபிவிருத்தி, மனித உரிமைகள், பெண்கள் நிலைமை தொடர்பானவை, போதைமருந்துகள், குற்றத்தடுப்பு மற்றும் குற்றவியல் நீதி, அபிவிருத்திக்கான விஞ்ஞானமும் தொழிநுட்பமும் பற்றியது, நீடித்திருக்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பானது என்றவாறு இந்த ஆணைக்குழுக்கள் செயற்படுகின்றன. மேலும் 5 பிராந்திய ஆணைக்குழுக்களும், 5 நிலையியல் குழுக்களும், நிபுணர் அமைப்புக்களும் செயற்படுகின்றன.
- பொருளாதார சமூகநலச்சபையானது ஐ.நா. நிகழ்ச்சித் திட்டங்கள் (UNDP, UNEP, Unicef, UNFPA போன்றவை), விசேட முகவராண்மைகள் [உலக விவசாயத் தாபனம், உலக சுகாதார நிறுவனம், சர்வதேச தொழிற்தாபனம், யுனெஸ்கோ போன்றவை] ஆகியவற்றுடன் ஒத்துழைப்பை மேற்கொண்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது. இச்சபை அரசுசார்பற்ற அமைப்புக்களுடன் உறவுகளைப் பேணுகிறது. இந்த அமைப்புக்களை மூன்று வகையாகப் பிரித்து அதற்குரிய நிலையில் செயற்படுகின்றது.



# உயிரைக் கொல்லும் நோய் H.I.V எய்ட்ஸ்

கு.சூரியகலா
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'D'.

எச்.ஐ.வி எய்ட்ஸ் என்பது உலகம் முழுவதும் காணப்படும் ஒரு சுகாதார மற்றும் சமூகப் பிரச்சினை ஆகும். இந்நோயின் தாக்கமானது வெறும் சுகாதாரப் பிரச்சினையாக மட்டுமல்லாது, மனித இனத்தின் சக்தியைக் குறைத்து மனிதகுல முன்னேற்றத்திற்குப் பெரும்தடையாகவும் அச்சுறுத்தலாகவும் இருக்கின்றது. எமது அயல்நாடான இந்தியாவில் இந்நோயின் தாக்கம் அதிகமாக உள்ளதால் எமது நாட்டிலும் இந்நோயின் தாக்கம் கூடுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது. எனவே, ஒவ்வொருவரும் இந்நோய் தாக்காமல் பாதுகாத்துக் கொள்வதுடன், மற்றவர்களுக்கு தொற்றாமல் தடுக்கவும் செயற்படுவது அவசியம். இன்றைய காலத்தில் பாலியல் தொடர்புகளுடன் பெரிதும் சம்பந்தப்பட்ட இளவயதினரின் சனத்தொகை அதிகரிப்பு, பாலியலைத் தொழிலாகப் புரிபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, உள்நாட்டு இடப்பெயர்வு, தகவல் தொழிநுட்ப வளர்ச்சி, தளர்வான சுகாதாரக் கட்டுப்பாடுகள் போன்ற காரணங்களால் எமது நாட்டிலும் எய்ட்ஸ் நோயின் தாக்கம் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

எய்ட்ஸ் என்பது பெற்றுக்கொள்ளப்பட்ட நோயெதிர்ப்புச் சக்தியை குறைக்கும் நோய்களின் தொகுப்பாகும். இந்நோயை ஏற்படுத்தும் வைரஸ் எச்.ஐ.வி வைரஸ் ஆகும். எச்.ஐ.வி என்பது மனித உடலில் நோயெதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் வைரஸ் ஆகும். எச்.ஐ.வி எனப்படும் நுண்கிருமி ஒருவரின் உடலுக்குள் செல்வதாலேயே இந்நோய்நிலை ஏற்படுகிறது. இந்நோயின் கிருமி ஒருவரின் உடலிலுள்ள நோயெதிர்க்கும் சக்தியை உருவாக்கும் வெள்ளை அணுக்களைத் தாக்கி அழிக்கிறது. இதன் மூலம் ஒருவரின் நோய் எதிர்ப்புச்சக்தி குறைகிறது. நோயெதிர்ப்புச் சக்தி குறைவதால் பல்வேறு நோய்கள் எச்.ஐ.வி உள்ளவரை ஒரே சமயத்தில் தாக்கி அவரை மிகவும் பலவீனமடையச் செய்கிறது. எச்.ஐ.வி மரணத்தை ஏற்படுத்தவல்லது. தற்போது எச்.ஐ.வி உள்ளவரை நீண்டகாலம் ஆரோக்கியமாக வைத்திருக்க மருந்துகள் இருந்தாலும், முழுமையாகக் குணப்படுத்தக்கூடிய மருந்துகள் எதுவும் இல்லை.

எச்.ஐ.வி இன் தோற்றம் பற்றி நோக்குவோமானால், ஆபிரிக்க நாடுகளில் வாழ்ந்த பழங்குடி மக்கள் பச்சை நிறக்குரங்குகளின் இறைச்சியையும், இரத்தத்தையும் பச்சையாக உட்கொள்ளும் போது இவர்களுக்கு அக்குரங்குகளிலிருந்து தொற்று ஏற்பட்டது. இது ஏறக்குறைய 1930களில் இடம்பெற்றது. 1981இல் அமெரிக்காவில் முதன் முதலில் எய்ட்ஸ் நோயாளி கண்டுபிடிக்கப்பட்டார். 1983இல் பிரான்ஸ் நாட்டு லூக் மொண்டிகெயர், அமெரிக்க நாட்டு ரொபெட்கலோ ஆகிய இரு விஞ்ஞானிகளும் இணைந்து செய்த ஆராய்ச்சியின் பயனாக எச்.ஐ.வி வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. 1986ஆம் ஆண்டு இந்தியாவில் மும்பை மற்றும் சென்னை பொது வைத்தியசாலைகளில் முதல் எய்ட்ஸ் நோயாளி கண்டுபிடிக்கப்பட்டார். இலங்கையில் 1986ஆம் ஆண்டு முதலாவது எய்ட்ஸ் நோயாளி கண்டுபிடிக்கப்பட்டார். அவர் ஒரு வெளிநாட்டுத் தொற்றாளராகக் காணப்பட்டார். பெரும்பாலும் இந்நோய் 15 முதல் 45 வயதினரையே அதிகம் பாதிக்கிறது. இந்நோய் இன, மத, கல்வி, வருமானம் என்ற எந்த பேதமுமின்றி யாரையும் தாக்கும். இந்நோய்த் தொற்று ஏற்பட்டு 8-12 வருடங்களின் பின்பே நோயறிகுறிகள் தோன்றுகின்றன. நோயறிகுறிகள் தோன்ற நீண்டகாலம் எடுப்பினும் அக்காலங்களில் மற்றவர்களுக்கு நோயைப் பரப்பிக் கொண்டிருப்பர்.

உலகில் எச்.ஐ.வி தொற்றுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் 39.5மில்லியன் பேர். அவர்களில் வளர்ந்தோர் 37.2மில்லியன் பேர். அவர்களில் பெண்கள் 17.7மில்லியன் பேர். அவர்களில் சிறுவர்கள் 2.3மில்லியன் பேர். 2006இல் புதிதாகத் தொற்று ஏற்பட்டவர்கள் 4.3மில்லியன் பேர். இந்தியாவில் இத்தொற்றுடன் 2006 இறுதிவரை வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் 5.7மில்லியன் பேர். இலங்கையில் பார்ப்போமானால் எச்.ஐ.வி தொற்றுடையோர் 865 பேர். அவர்களில் ஆண்கள் 512 பேர். பெண்கள் 353 பேர். எய்ட்ஸ் நோயாளர் தொகை 246 பேர். எய்ட்ஸ் நோயால் ஏற்பட்ட இறப்பு 185 பேர். யாழ்ப்பாணத்தில் முதல் தொற்று 1993இல் இனங்காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் எய்ட்ஸ் நோயாளரின் எண்ணிக்கை

38. அவர்களில் ஆண்கள் 27 பேரும் பெண்கள் 11 பேரும் ஆவர். இங்கு எய்ட்ஸால் ஏற்பட்ட மரணங்கள் 22 ஆகும். வெளிநாட்டுத் தொற்றுக்கள் உடையோர் 36 பேரும் உள்நாட்டுத் தொற்றுடையோர் 02 பேரும் காணப்படுகின்றனர்.

எச்.ஐ.வி வைரஸ் ரெட்ரோ வைரஸ் (Retro Virus) வகையைச் சேர்ந்தது. இது இலத்திரனியல் நுணுக்குக் காட்டியினூடாக மட்டுமே பார்க்கக் கூடிய மிகச்சிறிய வைரஸ். இவ்வைரஸின் கரு RNA பரம்பரையலகு பகுதிகளைக் கொண்டது. இவை இனப்பெருக்கத்திற்காக உயிருள்ள மனிதக் கலங்களுடன் சேரவேண்டியது அவசியம். எச்.ஐ.வி வைரஸ் பொதுவாக சூழலில் உயிர்வாழ முடியாது. எனவே, அயற் சூழலில் வளியிலோ, நீரிலோ, உணவிலோ இவ்வைரஸ் காணப்பட மாட்டாது. எச்.ஐ.வி வைரஸ் தொற்றடைந்த ஒருவரின் உடலில் மட்டுமே உயிர்வாழும். இது வரையில் HIV-I, HIV-II ஆகிய இருவகைகள் இனங் காணப்பட்டுள்ளன. இவ்விரு வகைகளும் நோய்நிலையை ஏற்படுத்தக் கூடியன. ஆபிரிக்காவில் HIV-II என்றும், ஐரோப்பிய, அமெரிக்காவில் HIV-I என்றும் அழைக்கப்படுகிறது.

எச்.ஐ.வி வைரஸ் மனித உடலில் காணப்படும் இடங்கள் குருதி, ஆண்களின் விந்து, பெண்களின் யோனிமடல் சுரப்பு, கருப்பைக் கழுத்துச் சுரப்பி, தாய்ப்பால் என்பவற்றுடன் உமிழ்நீர், கண்ணீர், வியர்வை, மலம், சிறுநீர் என்பவற்றிலும், சிறியளவில் காணப்படும். இந்நோயின் அறிகுறிகளாக எதிர்பாராத அளவில் நிறை குறைவடைதல் (ஒரு மாதத்தில் 10% அளவான நிறைகுறைவடையும்), ஒரு மாதத்திற்கு மேலாகத் தீராத வயிற்றோட்டம், களைப்பு, வறட்சியான இருமல், கை கால் வலி, அதிக வியர்வை, பல்வேறு தோல் நோய்கள், வாயினுள் பொருக்குப்போடல், நிணநீர்ச் சுரப்பிகள் வீங்குதல் போன்றவை காணப்படும்.

எச்.ஐ.வி எய்ட்ஸ் தொற்றும் வழிகளாவன; பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புகள் மூலமும் அல்லது தொற்றடைந்தவருடன் உடலுறவு கொள்வதன் மூலமும் எச்.ஐ.வி தொற்றடைந்த இரத்தத்தை உடலினுள் செலுத்துவதன் மூலமும் தொற்றுநீக்கம் செய்யப்படாத அல்லது தொற்றடைந்தவருக்குப் பயன்படுத்திய ஊசி, சத்திரசிகிச்சை உபகரணங்களை மற்றவர்களுக்குப் பயன்படுத்தல் மூலமும், தொற்றடைந்த தாயிடமிருந்து குழந்தைக்குத் தொற்றுகின்றது. தொற்றடைந்த தாயிடமிருந்து குழந்தைக்கே கர்ப்பத்தில் இருக்கும்போது, பிரசவத்தின்போது, தாய்ப்பால் கொடுக்கும்போது ஆகிய மூன்று வழிகளாலும் தொற்று ஏற்படுகின்றதெனினும் 25% தொடக்கம் 43% வரையே தொற்றும் நிலையுள்ளது. எச்.ஐ.வி பலவழிகளில் தொற்றினாலும் 85% இற்கும் அதிகமான அளவில் தவறான பாலியல் தொடர்புகள் மூலமே தொற்று ஏற்படுகின்றது.

எனவே, எச்.ஐ.வி நோயில் இருந்து எம்மைப் பாதுகாக்கும் முறைகளாக, அதாவது பாலியல் மூலம் தொற்றுதலைத் தடுக்க, ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்தல் அதாவது தவறான அல்லது பலருடனான பாலியல் தொடர்புகளைத் தவிர்த்தல், தான் திருமணம் முடித்த துணையுடனல்லாத எவருடனும் பாலியல் தொடர்புகொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆணுறை அணிதல் வேண்டும். அதேபோன்று குருதி மூலம் பரவுவதைத் தடுக்க குருதிமாற்றம் செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குருதித் தொற்றுள்ளதா? எனப் பரிசோதித்தல் வேண்டும். தொற்றுள்ளவர் எனச் சந்தேகிப்பவர்களிடமிருந்து குருதி பெறுவதைத் தவிர்த்தல் வேண்டும், ஊசிகள் பாவிக்கும் முன் நன்கு கிருமியழிப்புச் செய்யப்பட்டது என்பதை உறுதிசெய்தல் வேண்டும், பயன்படுத்திய ஊசிகளை முறையாக அழித்தல் வேண்டும், நாளத்தினூடாகப் போதை மருந்து ஏற்றுவதைத் தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அதேபோன்று தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவுவதைத் தடுப்பதற்கு தொற்றடைந்த தாய் பாலுறவுகளைத் தவிர்த்தல் வேண்டும், தொற்றடைந்த தாய் பாலுறவு கொள்ளும் ஒவ்வொரு தடவையும் ஆணுறை அணிய வேண்டும், இன்னொரு கர்ப்பத்தை இயன்றளவு தவிர்த்தல் வேண்டும், இதற்காகக் குடும்பத்திட்ட முறைகளைக் கையாள வேண்டும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் எய்ட்ஸ் வராமல் எம்மைப் பாதுகாத்து உயிர் ஆபத்தில் இருந்து தப்பிக்கொள்ள முடியும்.



# பச்சைவீட்டு விளைவும் ஓசோன்படைச் சிதைவும் ஏற்படுத்தும் தாக்கங்கள்

க.கனிதா,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'C'.

சூரியனிலிருந்து வெளிவருகின்ற கதிர்வீச்சானது புவிமேற்பரப்பை நோக்கி உள்வரும் போதும் வெளியேறும்போதும் வளிமண்டலத்திலுள்ள காபனீரொக்சைட், நைதரசன், மெதேன், குளோறோ புளோறோ காபன், நீராவி போன்றவற்றால் உறிஞ்சப்படும் செயற்பாடே பச்சைவீட்டு விளைவு எனப்படும். மேற்சொன்ன வாயுக்கள் வளிமண்டலத்தில் அதிகரித்த அளவில் காணப்படுவதால், வெப்பநிலையானது படிப்படியாக அதிகரித்துச் செல்கின்றது. இதனால் பல்வேறு பாதிப்புகள் சூழலுக்கு ஏற்படுகின்றன. இவ்வாறு பச்சைவீட்டு விளைவு ஏற்படுவதற்கு மனிதனே காரணமாகின்றான். இயற்கை அனர்த்தங்கள் சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்டாலும் அதிகமான சந்தர்ப்பங்கள் மனிதனின் செயற்பாடுகளினால் விளைகின்றன.

பச்சைவீட்டு விளைவை ஏற்படுத்தும் காரணிகளுள் காடழிப்பு, உயர் கூட்டு எரிபொருட்களின் அதிகரித்த பயன்பாடு, கால்நடை வளர்ப்பு, சேற்றுநில உருவாக்கம், கனிப்பொருள் அகழ்வுகள், யுத்தங்கள், குளிர்சாதனப் பெட்டிப் பயன்பாடுகள் என்பவற்றை மனித செயற்பாட்டால் ஏற்படும் தாக்கங்களாகக் குறிப்பிடலாம். இவ்வாறான செயற்பாடுகள் வளிமண்டலத்தில் வெப்பநிலை அதிகரிப்புக்கு ஏதுவாகின்றன. காடழிப்பினால் தாவரங்களின் ஒளித்தொகுப்புச் செயற்பாடு இல்லாது போகின்றது. அதனால் வளிமண்டலத்தில் காபனீரொக்சைட் அதிகரிக்கின்றது. மற்றும் கால்நடை வளர்ப்பு எரிபொருட்களின் அதிகரித்த பாவனை, யுத்தங்கள் என்பவற்றினால் நைதரசன், மெதேன் வாயுக்களின் தாக்கமும் அதிகரிக்கின்றது. குளிர்சாதனப் பெட்டிப் பாவனையினால் குளோரோ புளோரோ காபன் (CFC) வளிமண்டலத்தில் அதிகரிக்கின்றது. இவ்வாயு அதிகரிப்பினால் சூழலில் பல்வேறு பாதகமான விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவ்வாயுக்கள் ஓசோன்படையுடன் தாக்கமுறுவதால் சூழலில் பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றன. பச்சைவீட்டு விளைவால் ஏற்படும் முக்கியமான தாக்கமாக ஓசோன் படைத்தேய்வைக் குறிப்பிடலாம். இந்த ஓசோன்படைத் தேய்வே சூழலின் ஏனைய பிரச்சினைகளுக்கு மூலமாகவும் இருக்கின்றது.

ஓசோன்படையானது மாறன் மண்டலத்திற்கும், படை மண்டலத்திற்கும் இடையில் தனித்துவமான வாயுவைக் கொண்டதாக அமையப் பெற்றுள்ளது. $O_2$ மூலக்கூறுகளின் இணைப்பினால் ஓசோன் ($O_3$) வாயு உருவாக்கப்பட்டுள்ளது. இது 15 - 35Km உயரமான பகுதியில் செறிவாகக் காணப்படுகிறது. ஓசோன்படையின் செறிவினை அளப்பதற்கு "டொப்சன் யுனிற்" பயன்படுத்தப்படுகிறது. இந்த ஓசோன்படையானது பின்வரும் காரணங்களால் முக்கியத்துவம் பெறுகிறது.

*I. ஞாயிற்றுக் கதிர்வீச்சின் அதிகப்படியான தாக்கத்திலிருந்து புவியை ஒரு குடைபோல் பாதுகாப்பதனூடாகப் புவியினது வெப்பச் சமநிலையைப் பேணுதல்.*

*II. சூரியனிலிருந்து வரும் புற ஊதாக்கதிர்களைப் புவிமேற்பரப்பை நோக்கி வந்தடையாது தடுத்தலும், இதனூடாகப் புவிமேற்பரப்பிலுள்ள உயிரினங்களைப் புற்றுநோய் போன்றவற்றிலிருந்து பாதுகாத்தலும்.*

*III. இடி, மின்னல் போன்றன ஏற்படும் சந்தர்ப்பங்களில் புவிக்கருகாமையில் தோன்றி புவிமேற்பரப்பு உயிரினங்களைப் பாதுகாத்தல்.*

*IV. இப்படையானது கிருமிகளைச் சுத்திகரிக்கும் படையாகவும் காணப்படல்.*

இவ்வாறான பாதுகாப்புக் கவசமாக விளங்கும் ஓசோன்படையானது இயற்கை, மனித செயற்பாடுகளின் விளைவாக இரசாயன மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு, ஓசோன் மூலக்கூறுகள் பிறவடிவங்களுக்கு உட்படல் அல்லது செயலிழத்தல் ஓசோன்படைச் சிதைவு எனப்படும்.

C.F.C வாயுவின் அதிகரித்த உற்பத்திப் பயன்பாடு ஓசோன்படைச் சிதைவுக்கு பிரதான காரணமாக இருக்கின்றது. இவ்வாயுவானது குளிர்சாதனப் பெட்டியில் அடைக்கும் கைத்தொழிலாகவும், நுரை உருவாக்கற் செயற்பாட்டிற்கும் இலத்திரனியற் பொருட்களின் துப்புரவாக்கும் திரவத்திலும், அழகுசாதனப் பொருட்கள் போன்றவற்றிலும் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக வருடம் ஒன்றிற்கு 75,000தொன் C.F.C வெளியிடப்படுகிறது எனக் கூறப்படுகிறது.

இவற்றைவிட விமானங்கள் செய்மதிகள் என்பன விண்வெளியில் செல்லும்போது அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் புகைத் துணுக்குகளும், நச்சுவாயுக்களும் ஓசோன்படைச் சிதைவிற்கு காரணமாகின்றன. யுத்தத்தின்போது பயன்படுத்தப்படும் வெடிபொருள், அணுகுண்டு, ஆயுத உற்பத்தி, அணுப்பரிசோதனை என்பனவும் ஓசோன்படைச் சிதைவிற்குக் காரணமாகின்றன.

1940ஆம் ஆண்டிலே ஓசோன்படையில் துவாரம் இருப்பது தெளிவாக்கப்பட்டது. ஆனால் 1982ஆம் ஆண்டிலேயே அந்தாட்டிக்காவிலுள்ள "கலிபே" என்ற இடத்தில் துவாரம் கண்டுபிடிக்கப்பட்டது. பின் 1985இல் நிம்பஸ்-7 (Nimbus-7) என்ற விண்கல ஆய்வினூடாக இது உறுதி செய்யப்பட்டது. இதன் சிதைவினை றியோடிஜெனறோ, சந்தியாகோ, சில்லியன், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, நஸ்மீலியா போன்ற பகுதிகளில் காணலாம்.

இவ்வோசோன்படைத் தேய்வினால் மனிதனுக்கும் சூழலுக்கும் பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக, புவியின் வெப்பநிலை அதிகரித்துச் செல்லல், பனிக்கட்டி உருகுதல், காட்டுத்தீ ஏற்படல், மனிதனுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படல், பிளாந்தன்கள் அழிக்கப்படல், பிளாஸ்ரிக் பொருட்கள், நிறப்பூச்சுக்கள் என்பன விரைவாக வெளிறல் தன்மை அடைதல், பயிர்ச்செய்கை நடவடிக்கை பாதிக்கப்படல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஓசோன்படையில் துவாரம் ஏற்படுவதன் காரணமாக ஞாயிற்றுக் கதிர்கள் புவிமேற்பரப்பை நேரடியாக வந்தடைகின்றன. இதனால் வெப்பச் சமநிலையில் பாதிப்பு ஏற்படுவதுடன், புவியின் வெப்பநிலையும் வேகமாக அதிகரிக்கிறது. இதனால் வரட்சி, வெள்ளப்பெருக்குப் போன்ற வானிலை மாற்றங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. உதாரணமாக, 2020இல் புவியின் வெப்பநிலை மேலும் 1.3°C அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பூகோள வெப்பநிலை அதிகரிப்பால் முனைவுப் பிரதேச, உயர்மலைப் பிரதேசப் பனிக்கட்டி கவிப்புகள் வேகமாக உருகுதல் நடைபெறும். இதனால் கடல்நீர்மட்டம் உயர்வதால் சிறிய தீவுகள் நீரில் மூழ்க வேண்டிய அபாயநிலை ஏற்படும். உதாரணமாக, மாலைதீவு, இந்தோனேசியத் தீவுகள் போன்றவை நீரில் மூழ்கலாம்.

புவியின் வெப்பநிலை அதிகரித்துச் செல்வதால் காட்டுத்தீ ஏற்படும். இதனால் இயற்கைத் தாவரங்கள், விலங்குகள் என்பன அழிவடைவதால் உயிர் பல்வகைமை பாதிக்கப்படும்.

மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கும் பற ஊதாக்கதிர்கள் புவிமேற்பரப்பை நேரடியாக வந்தடைவதனால் தோல் புற்றுநோய், கண்நோய், தலைவலி, தலைச்சுற்று, வாந்தி, மூளை உறுப்புப் பாதிக்கப்படல், நரம்புத்தளர்ச்சி, மனித உடலில் நோய் எதிர்ப்பாற்றல் குறைவடைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

இவ்வாறான பலதீங்குகள் ஓசோன்படைச் சிதைவினால் ஏற்படுவதை அவதானித்த உலக நாடுகள் ஒன்றிணைந்து ஓசோன்படையைப் பாதுகாப்பதற்கான செயற்திட்டங்களை மேற்கொள்கின்றன. அவ்வகையில் 1977இல் வாஷிங்டனில் 32 நாடுகள் பங்குபற்றிய மாநாட்டில் சில கொள்கைகள் முன்வைக்கப்பட்டன. அவையாவன,

1) 1. ஓசோன்படையில் ஆய்வை மேற்கொள்ளல்
   2. சூழல் தொகுதியையும் காலநிலையையும் எங்ஙனம் பாதிக்கின்றதென அறிதல்
   3. மானிட சௌக்கியத்தை எவ்வாறு பாதிக்கின்றது என அறிதல்
   4. ஓசோன்படையை அவதானிக்க இணைப்புக் குழுக்களை நிறுவுதல்
2) அபிவிருத்தியடைந்த நாடும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் தமக்கிடையில் ஒப்பந்தங்களை உருவாக்கி அவற்றைச் செயற்படுத்துவதன் ஊடாக ஓசோன்படையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளல். இந்த வகையில் பின்வரும் உடன்படிக்கைகள் செய்யப்பட்டன.

   1985 வியட்னா உடன்படிக்கை
   1987 மொன்றியல் உடன்படிக்கை
   1989 கெல்சிங் உடன்படிக்கை

3) ஓசோன்படையில் துவாரத்தை ஏற்படுத்தும் வாயுக்களின் உருவாக்கத்தைக் கட்டுப்படுத்தல்
அவ்வகையில் நவீன தொழிநுட்பத்தினூடாகக் குளிர்சாதனப் பெட்டிகளில் C.F.C பயன்பாட்டிற்குப் பதிலாக 01.01.2000இல் இருந்து HCFC (ஐதரோ குளோரோ புளோரோ காபன்) வாயுவைப் பயன்படுத்துகிறார்கள். 2030இல் HCFC ஐயும் நிறுத்திவிட்டு புதிய வாயு கண்டுபிடிக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. ஏனெனில் HCFCயும் வெப்ப அதிகரிப்புக்குக் காரணமாகிறது.
2007இல் இருந்து 100கோடி மரங்களை உலகளாவிய ரீதியில் நடுவதால் $CO_2$வின் அளவைக் குறைக்கலாமென ஐநா தீர்மானித்துள்ளது. 2050ஆம் ஆண்டில் தற்போதுள்ள $CO_2$வின் அளவை 50%ஆல் குறைக்க G8 நாடுகள் முடிவு செய்துள்ளன.

4) ஓசோன் படையில் துவாரம் ஏற்படுவதால் ஏற்படும் பாதிப்பை மக்களுக்கு எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
இவ்வகையில் புற்றுநோய்களின் தாக்கம், ஏனைய உடற்கோளாறுகள் போன்றவற்றைக் கருத்தரங்குகள், கண்காட்சி போன்றவற்றினூடாக எடுத்துக் காட்டல்.
செம்ரெம்பர் 16இல் ஓசோன் தினம் கொண்டாடப்படுதல்

5) ஓசோன்படையைச் செப்பனிட ஓசோன்படையைச் சீர்ப்படுத்தும் வாயுக்களை நிரப்பி அனுப்புதல்.

6) அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு ஓசோன்படையைப் பாதுகாக்கத் தேவையான உதவிகளை வழங்கல். அத்துடன் ஐ.நா.சபையின் உதவியைப் பெற்று ஓசோன்படையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல்.

எவ்வாறாயினும் உலகநாடுகள் அனைத்தும் இணைந்து தற்போது ஓசோன்படைச் சிதைவைத் தடுப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபடுவது கண்கூடாகிறது. இதனால் 1990இல் ஆட்டிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட ஓசோன்படைத் துவாரம் பெரிதாவது நிறுத்தப்பட்டிருக்கின்றது. இத்துவாரம் 2100ஆம் ஆண்டளவில் தானாகவே அடைபட்டுவிடுமெனக் கூறப்படுகிறது.

## ஐக்கிய நாடுகள் தாபனம் (2)

- **நம்பிக்கை பொறுப்புச்சபை 1945இல் ஏற்படுத்தப்பட்டது. 7நாடுகளின் நிர்வாகத்தில் 11நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசங்கள் தொடர்பான மேற்பார்வையை ஐ.நா. வழங்கியது. 1994இல் பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்க்கப்பட்டன. பிரச்சினைக்குரிய பிரதேசங்கள் தனிநாடுகள் ஆகின. தேவையேற்படின் இச்சபை தொடர்ந்து செயற்படும்.**
- **நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றமானது பொதுச்சபை, பாதுகாப்புச்சபை ஆகியன தனித்தனியாக வாக்களிப்பதன் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 15 நீதிபதிகளைக் கொண்டு இயங்குகின்றது. ஒரேநாட்டு இரு நீதிபதிகள் ஒரேதடவையில் இடம்பெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது. நீதிபதிகளின் பதவிக்காலம் 9 வருடங்களாகும். நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகள் இங்கு கவனத்திற்கு எடுக்கப்படுகின்றன. முழு அமர்வுடன் நீதிமன்றம் கூட்டப்படும் இருப்பினும் வழக்காடு நாடுகளின் வேண்டுதலுக்கு அமைய 'சேம்பர்' எனும் சிறிய சட்டமன்றப் பிரிவுகளாகவும் கூட்டலாம்.**
- **செயலகத்தின் தலைவர் ஐ.நா. வின் பொதுச்செயலாளர் ஆவார். இவரது பதவிக்காலம் 5 வருடங்களாகும். மீண்டும் பதவி புதுப்பிக்கப்படலாம். 160 நாடுகளைச் சேர்ந்த 8900 அலுவலர்கள் செயலகத்தில் பணியாற்றுகின்றனர். இவ்வலுவலகம் நியூயோர்க்கில் உள்ளது. சில முக்கிய அமைப்புக்கள் அடிஸ்அபாவா, பெய்ரூட், ஜெனீவா, நைரோபி, சந்தியாகோ, வியன்னா ஆகிய நாடுகளில் செயற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வருடமும் ஐ.நா. வின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி எடுத்துக்கூறும் அறிக்கை ஒன்றைச் செயலாளர் நாயகம் சமர்ப்பிப்பார். பாதுகாப்புச்சபையின் தீர்மானப்படி பொதுச்சபையினால் செயலாளர் நாயகம் தெரிவுசெய்யப்படுவார்.**

# கலாசாலை நிகழ்ச்சிப்பதிவுகள்



முத்தமிழ் விழாவில்



வருடாந்த இல்ல விளையாட்டு
நிகழ்ச்சியில்



முத்தமிழ் விழா தொடக்க
நிகழ்ச்சியில்



ஆரம்பக் கல்வி மன்ற ஆக்கத்திறன்
செயற்பாட்டில்



வாணி விழாவில்



ஒளி விழாவில்

# கலாசாலை நிகழ்ச்சிப்பதிவுகள்















# கலாசாலை நிகழ்ச்சிகளின் பதிவுகள்









# கலாசாலை நிகழ்ச்சிகளின் பதிவுகள்













# MS Word இல் உங்கள் வேலைகளை விரைவாக்குவதற்குச் சில இலகுவான வழிகள்

திருமதி க.புனிதமலர்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'D'.

தகவல் தொழில்நுட்பம் என்பது கரைகாண முடியாத நவீன தொழில்நுட்பமாக வளர்ந்து வருகிறது. கணினியும் அதனோடு இணைந்த தகவல் தொழிநுட்பமும் மனிதவாழ்வில் இன்றியமையாதவையாக விளங்குகின்றன. கணினித் தொழில்நுட்பம் கல்விச் செயற்பாட்டிலிருந்து பிரிக்க முடியாத கருவியாகவும், உறைவிடமாகவும் பரிணாமம் அடைந்துள்ளது. எழுத்தறிவு எந்தளவிற்கு முக்கியமோ, அதே அளவிற்கு கணினிக்கல்வியும் முக்கியம் பெறுகிறது. தொலைபேசி, செலூலர், ∴பக்ஸ், ஈமெயில், இன்ரநெற் ஆகியன கணினி மூலம் தொழிற்படுகின்றன.

எனவே, இந்த நவீன கணினிபற்றி ஆழ்ந்த அறிவினைப்பெற வேண்டும். அந்த வகையில் எம்.எஸ்.வேர்டில் (MS. Word) உங்களது தகவல்களையும் கட்டளைகளையும் உள்ளீடு செய்வதில் மவுஸைப் பயன்படுத்துவதைவிட, கீபோட்டிலுள்ள இலகு வழிகளைப் பயன்படுத்துவதன் மூலம் உங்களது வேலைகளை விரைவாகச் செய்ய முடியும். அப்படிச் செய்வதற்குரிய சில இலகுவழிகள் பின்வருமாறு,

| | |
|---|---|
| Ctrl + S | வேலைசெய்து கொண்டிருக்கும் பைலை சேமித்து வைப்பதற்கு. |
| Ctrl + C | குறிப்பிட்ட பகுதியை பிரதி (Copy) செய்வதற்கு. |
| Ctrl + X | குறிப்பிட்ட பகுதியை ஓரிடத்தில் இருந்து இன்னுமோர் இடத்திற்கு மாற்றம் செய்யும்பொருட்டு. |
| Ctrl + V | Keyboardற்கு கொண்டு சென்ற பகுதியைத் தேவையான இடத்திற்கு கொண்டு வருவதற்கு. |
| Ctrl + B | ஒரு குறிப்பிட்ட சொல்லை தடித்த எழுத்திற்கு மாற்ற. |
| Ctrl + U | ஒரு குறிப்பிட்ட சொல்லின் கீழ் கோடிட்டுக் காட்ட. |
| Ctrl + I | ஒரு குறிப்பிட்ட சொல்லைச் சரிவான எழுத்திற்கு மாற்ற. |
| Ctrl + L | தெரிவுசெய்யப்பட்ட அனைத்து வரிகளையும் இடது புறமாக ஒரு நேரான அமைப்பிற்கு கொண்டு வருவதற்கு. |
| Ctrl + R | தெரிவுசெய்யப்பட்ட அனைத்து வரிகளையும் வலது புறமாக ஒரு நேரான அமைப்பிற்கு கொண்டு வருவதற்கு. |
| Ctrl + E | தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு வரியையும் அப்பக்கத்திற்கு மையமாகக் கொண்டு வருவதற்கு. |
| Ctrl + N | புதியதொரு பைலைப் (File) பெறுவதற்கு. |
| Ctrl + O | ஏற்கனவே செய்துள்ள பைலைத் (File) திறப்பதற்கு. |
| Ctrl + D | எழுத்துப்பெட்டி (Font box)க்குச் செல்வதற்கு. |
| Ctrl + P | அச்சுப்படுத்தி (Print) எடுப்பதற்கு. |
| Ctrl + W | முடிவுக்குக் கொண்டு வருவதற்கு (Close) . |
| Ctrl + Y | Undo ரைப்பிங் மூலம் நீக்கியதை மீளக் கொண்டு வருவதற்கு. |
| Ctrl + 1 | ஒருவரி இடைவெளி விடுவதற்கு. |
| Ctrl + 2 | இருவரி இடைவெளி விடுவதற்கு. |
| Ctrl + } | தெரிவுசெய்த எழுத்துக்களைப் பெரிதாக்குவதற்கு (Font size) |
| Ctrl + { | தெரிவுசெய்த எழுத்துக்களைச் சிறிதாக்குவதற்கு (Font size) |

ஓஓஓஓஓ



# விஞ்ஞானக் கருவிகள்

ஜீ.உதயபாரதி,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

| | | |
|---|---|---|
| ஹைட்ரோமானி | - | திரவங்களின் அடர்த்தியை அளத்தல் |
| ரிக்டர் அளவுத்திட்டம் | - | பூமி அதிர்ச்சியை அளக்கும் அளவுத்திட்டம் |
| ஓடியோமானி | - | ஒலியின் திறனை அளத்தல் |
| அல்டிமானி | - | விமானம் பறக்கும்போது உயரத்தை அளக்கும் கருவி |
| அம்பியர்மானி | - | மின்னோட்டம் அளக்கப்படும் கருவி |
| அனிமோமானி | - | காற்றின் வேகம், திசை என்பவற்றை அளக்கப் பயன்படும் கருவி |
| அடியோமானி | - | ஒளியின் அளவை வலிமையை அளக்கப் பயன்படும் கருவி |
| பரோமானி | - | காற்றின் அமுக்கத்தை அளக்கும் மானி |
| கலோரிமானி | - | வெப்பத்தின் அளவை அளக்கப் பயன்படும் கருவி |
| காடியோகிராப் | - | இருதயம் வேலை செய்வதைக் காட்டும் கருவி |
| பைனாகுலர் | - | தூரத்திலுள்ள பொருட்களை பெரிதாக்கிக் காட்டும் கருவி (தொலைநோக்கி) |
| குரோமானி | - | திசையைச் சரியாகக் காட்டும் கருவி |
| எலக்ரோட்ஸ் கோப் | - | மின்னோட்டம் உள்ளதா என்பதைப் பரிசோதிக்கும் கருவி |
| ரேபார்கருவி | - | விமானத்தின் திசை, தூரம், உட்பட பல்வேறு தேவைகளையும் பதியும் கருவி |
| ரோபோ | - | தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் இயந்திர மனிதன் |
| நொட்ஸ் | - | கடல், கப்பல், படகு போன்றவற்றின் வேகம் அளக்கும் முறை |
| லக்டோமானி | - | பாலிலுள்ள தண்ணீரை அளக்கும் கருவி |
| பெரிஸ்கோப் | - | நீர்மூழ்கியின் மேல்தளத்தில் உள்ளவற்றை கீழுள்ளவர்கள் அறியக்கூடியஆடி |

# உலக நாடுகளின் பண அலகுகள்

| | | | |
|---|---|---|---|
| இலங்கை | ரூபா | மலேசியா | ரின்கிற் |
| அமெரிக்கா | டொலர் | நெதர்லாந்து | கில்டர் |
| ரஷ்யா | றூபின் | ஆப்கானிஸ்தான் | ஆப்கானி |
| மேற்கு ஜேர்மனி | மார்க் | பின்லாந்து | மார்க்கா |
| இங்கிலாந்து | ஸ்ரேலிங்பவுண் | பர்மா | கயாற் |
| நைஜீரியா | நயா | தென்கொரியா | வொன் |
| சவுதிஅரேபியா | றியால் | பிலிப்பைன்ஸ் | பேசோ |
| யப்பான் | யென் | அஜந்தீனா | பேசோ |
| சுவிற்சலாந்து | பிராங் | போர்த்துக்கல் | ஸ்குடோ |
| டென்மார்க் | கிறவுண் | லெபனான் | பவுண் |
| இந்தியா | ரூபா | கனடா | டொலர் |
| வங்களாதேஷ் | ராகா | நோர்வே | குறோனர் |
| இஸ்ரேல் | செக்கெல்ஸ் | எகிப்து | பவுண் |
| பிரான்ஸ் | பிராங் | இந்தோனேசியா | ரூம்பியா |
| பாகிஸ்தான் | ரூபாய் | கென்யா | சிலிங் |
| இத்தாலி | லீரா | நேபாளம் | ரூபா |
| ஈராக் | டினார் | நியூகினி | சினா |
| லிபியா | றியால் | தென்ஆபிரிக்கா | றாண்ட் |
| சிங்கப்பூர் | டொலர் | தாய்லாந்து | டாட் |
| பிரேசில் | குருசிய்ரோ | யோர்டான் | டினார் |
| சிலி | எஸ்குடே | பேரு | சொவர் |
| சீனா | யுவண் | துருக்கி | லீரா |



# கணித பாடத்தில் டீன்ஸ் குற்றிகளும் அதன் பயன்பாடும்


திரு. மு.நடராசா,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

எந்தவொரு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போதும் உதாரணங்கள் பயன்படுத்துவது மிகவும் இன்றியமையாதது எனவும், அதிலும் ஆரம்பக்கல்வியில் அது கட்டாயமானது எனவும் உலகிலுள்ள கல்வியியலாளர்கள் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மைகள் கூறுவதை யாரும் மறுக்கவும், மறக்கவும் முடியாது. இந்த வகையில் சூல்ஸ் பி.டீன்ஸ் (Sultz P.Dienes) என்ற கணிதவியலாளரின் அயராத உழைப்பினால் "டீன்ஸ் குற்றிகள்" என்னும் எண்ணிகள் உலகிற்கு அறிமுகமாகின.


இன்று, இந்த டீன்ஸ் குற்றிகள் அதன் முக்கியத்துவம் காரணமாக இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் கல்வியமைச்சின் ஏற்பாட்டில் கிடைக்கப்பெற்றும், பல பாடசாலைகளில் அதனைப் பயன்படுத்தாமல் முடங்கிக் கிடப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இதற்குரிய காரணங்கள் பலவாக இருக்கலாம். ஆனால் இந்த டீன்ஸ் குற்றிகளை கணித பாடத்தில் பல சந்தர்ப்பங்களில் எனது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின்போது பயன்படுத்தி நல்ல விளைவைப் பெறக்கூடியதை அவதானிக்க முடிந்தது. இதனால் இந்த டீன்ஸ் குற்றிகளை ஆரம்பக் கல்வியில் கணிதபாடத்தில் பயன்படுத்தக்கூடிய சில சந்தர்ப்பங்களை நோக்குவோம்.

கணித பாடத்தில் முதன்மைநிலை I இலுள்ள பிள்ளைக்கு முதலில் எண்ணுக்கு முந்திய எண்ணக்கரு கற்பிக்க வேண்டும். அதாவது அடங்கல், தெரிதல், தொடர்புறுத்தல், வரிசைப்படுத்தல், மாறின்மை, ஒன்று ஒன்றிற்கான ஒத்திசைவு, அயல் போன்ற விடயங்கள் கற்பிக்கும்போதும் இந்த டீன்ஸ் குற்றிகளைப் பயன்படுத்தலாம்.

உதாரணம்:- வரிசைப்படுத்தல் பற்றிக் கற்பிக்கும்போது



அல்லது



இவ்வாறாக டீன்ஸ் குற்றிகளைப் பயன்படுத்தி அறிமுகம் செய்யலாம் என்பது எனது கருத்தாகும்.

மேலும் எண்கள் பற்றிக் கற்பிக்கும்போதும் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உதாரணம்:-

| எண்ணிகள் | | எண்பெயர் | | எண்குறி |
|---|---|---|---|---|
| □ | → | ஒன்று | → | 1 |
| □ □ | → | இரண்டு | → | 2 |
| □ □ □ | → | மூன்று | → | 3 |
| □ □ □ □ | → | நான்கு | → | 4 |

இவ்வாறாகத் தொடர்ந்து எண்பெயர், எண்குறி பற்றியும் கற்பிக்கும் போதும் டீன்ஸ் குற்றிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.


இத்துடன் எண்களின் இடப்பெறுமானம் பற்றிக் கற்பிக்கும் போதும் பின்வருமாறு பயன்படுத்திக் கொள்ளலாம்.

உதாரணம் :-

1) (பதினைந்து)




2) (நூற்று இருபத்தைந்து)





மேலும் கணிதபாடத்தில் அடிப்படைக் கணிதச் செய்கைகளான,


I) கூட்டல்
II) கழித்தல்
III) பெருக்கல்
IV) வகுத்தல்


என்பவற்றின்போதும் டீன்ஸ் குற்றிகளைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை சிறப்பாக மேற்கொள்ளலாம்.

I) கூட்டல்

உதாரணம்:-


a) 



b) 


c) 


II) கழித்தல்


உதாரணம்:-

a) 



b) 

III) பெருக்கல்

உதாரணம்:-

a) 

2இன் மூன்று மடங்கு
அதாவது $2X3=6$


b) 

3இன் நான்கு மடங்கு
அதாவது $3X4=12$

IV) வகுத்தல்


உதாரணம்:-

a) $8 \div 2 = ?$




அதாவது எட்டு எண்ணிகளை இரண்டு சமபங்குகளாக்கினால் ஒரு பங்கில் இருக்கும் எண்ணிகளின் எண்ணிக்கை விடையாக வரும்.

எனவே,




இவ்வாறு இரண்டு சமபங்குகளாக்கலாம். இதிலிருந்து ஒரு பங்கிலுள்ள எண்ணிகளின் எண்ணிக்கை நான்கு ஆகும்.
$\therefore\ 8 \div 2 = 4$ ஆகும்.

b) $33 \div 3 = ?$



இவ்வாறு முப்பத்து மூன்றைக் குறிக்கும் டின்ஸ் குற்றிகளை எடுத்து மூன்று சமபங்காக பின்வருமாறு ஒழுங்குபடுத்தினால்,




ஒரு பங்கிலுள்ள எண்ணிக்கைகுறிக்கும் எண் பதினொன்று ஆகும்.
ஆகவே, $33 \div 3 = 11$ ஆகும்.

இவ்வாறாக டின்ஸ் குற்றிகளைப் பயன்படுத்தும் வேறு சில சந்தர்ப்பங்களை நோக்கினால் அதில்,

I. எண்கோலங்கள் பற்றிக் கற்பிக்கும் போது,


உதாரணம்:-

a)



-----------

b)



-----------

இவ்வுதாரணங்களில் காட்டியவாறு பயன்படுத்திக் கொள்ளலாம்.

மற்றும் திண்ம உருக்களும் கேந்திர கணிதத் தளவடிவங்களும் பற்றிக் கற்பிக்கும்போதும் டின்ஸ் குற்றிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதாவது,

உதாரணம்:-

a) சதுரத் தளவடிவத்தை அறிமுகம் செய்ய
b) சதுரமுகியை அறிமுகம் செய்ய
c) செவ்வகத் தளவடிவத்தை அறிமுகம் செய்ய
d) சதுரமுகியின் பண்புகளைக் கண்டறிய வழிப்படுத்தவும்

மேலும் பல சந்தர்ப்பங்களிலும் டீன்ஸ் குற்றி பேருதவியாக இருக்கிறது.

இத்துடன் பரப்பளவு பற்றிக் கற்பிக்கும்போதும் இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் சில சந்தர்ப்பங்களை உதாரணங்கள் மூலம் பார்ப்போம்.

a) ஒரு மேசையின் மேற்பரப்பளவை அளக்க எதேச்சை அலகாக 100ஐக் குறிக்கும் டீன்ஸ் தட்டைப் பயன்படுத்த வழிப்படுத்தலாம்.

b) 1000 என்ற எண்ணைக் குறிக்கும் டீன்ஸ் குற்றியைப் பயன்படுத்தி அதிலுள்ள ஒரு சதுரமுகத்தில் எத்தனை சிறிய சதுரக் கட்டங்கள் உண்டு என எண்ணவைத்து அதன் மொத்த மேற்பரப்பின் பரப்பளவை எத்தனை சிறிய கடட்டங்கள் எனக் கண்டறிய வழிப்படுத்தலாம்.

இவ்வாறாக, டீன்ஸ் குற்றிகளின் பயன்பாடுகள் பற்றி ஓரளவு பார்த்தோம். எனவே, இந்த டீன்ஸ் குற்றிகளின் உச்சப் பயன்பாட்டைக் கணிதபாடத்தில் பெற கணிதத்துறை சார்ந்த அனைவரும் முன்வந்து கணிதபாட அடைவு மேம்பாட்டிற்கு முயற்சிப்போமாக.

குறிப்பு:- இத்துடன் தரம் 4இற்கு ஒரு பாடவேளைக்கான (60நிமிடப் பாடவேளை) வகுத்தல் பற்றிய பாடக்குறிப்பு இணைத்துள்ளேன். டீன்ஸ் குற்றியைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாடு அடங்கியது.

**5E திட்டத்திற்கு அமைவான மாதிரிப் பாடக்குறிப்பு**
**[டீன்ஸ் குற்றியை பயன்படுத்தல் சார்பானது]**

1. திகதி
   1.1. தரம் - 4
   1.2. பாடம் - கணிதம்
   1.3. தேர்ச்சி:- மூவிலக்க எண்களை நான்கால் வகுத்தல் பற்றி அறிவைப் பெறுவர்.
   1.4. தேர்ச்சி மட்டம்:- மூவிலக்க எண்களை நான்கால் வகுத்தல் பற்றிய கணிதச் செய்கைபற்றி அறிந்து கொள்வர்.
2. செயற்பாடு:- மூவிலக்க எண்களை நான்கால் வகுப்போம். செய்முறைகளைப் பயன்படுத்துவோம்.
3. நேரம்
4. தரவிருத்தி உள்ளீடு:- ஒன்று தொடக்கம் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது வரை எண்களைக் காட்டக் கூடியளவு எண்களைக் கொண்ட டீன்ஸ் குற்றிகள், மற்றும் தேவையான பொருட்கள்.
5. கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:-

*5.1. ஈடுபடல் (Engagement)*

மாணவர்கள் இன்று கற்கும் விடயம் பற்றிய முன்னறிவை மீட்கக்கூடிய மனக்கணித வினாக்களை வினவிக் கொண்டு, கரும்பலகையில் மூவிலக்க எண்களை நான்கால் வகுத்தல் என்ற தலைப்பை எழுத வேண்டும்.

உதாரணமாக, மனக்கணித வினா:-

8 கொய்யாப்பழங்களை 4 நபருக்குச் சமனாகப் பங்கிட்டால் ஒருநபர் பெறும் கொய்யாப் பழங்களின் எண்ணிக்கை யாது?

*5.2. கண்டறிதல் (Exploration)*

மாணவர்களை நான்கு பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து, போதியளவு டீன்ஸ் குற்றிகளை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்க வேண்டும். பின் டீன்ஸ் குற்றிகளைப் பயன்படுத்தி மூவிலக்க எண்களைக் காட்டுமாறு கூறி அதன்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு நிவர்த்தி செய்துகொண்டு, மூவிலக்க எண்களை 4ஆல் வகுப்பதற்கான வினாக்களை கரும்பலகையில் எழுத வேண்டும் (முதலில் வராத வினாக்களை எழுத வேண்டும்)

ஒவ்வொரு குழுவிலுமுள்ள 4 நபர்களும் டீன்ஸ் குற்றிகளைப் பயன்படுத்தி சமமாகப் பங்கிடுவர். பின்னர் விடையைக் கண்டறிந்து குழுவிலுள்ள ஒருவர் கூறுவார். அதன்போது எந்தக்குழு முதலில் விடை கூறுகிறது என்ற போட்டியை ஏற்படுத்த வேண்டும். இதைத் தொடர்ந்து மிகுதிவரும் வினாவை எழுதி இதேபோன்று தீர்வுகாண வழிப்படுத்த வேண்டும். அத்துடன் கரும்பலகையில் வகுத்தலைக் குறிக்கும் எல்லா வடிவ வினாக்களையும் எழுதுவது நல்லது.

உதாரணங்கள்:-

a) $104 \div 4 = ?$

b) $4 \overline{)716} = ?$

c) $4\sqrt{916} = ?$

d) $\frac{124}{4} = ?$

e) 996 தேங்காய்களை 4 பேருக்குச் சமனாகப் பங்கிட்டல் ஒரு நபர் பெறும் தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

f) 906 மாம்பழங்களை 4 நபருக்குச் சமனாகப் பங்கிட்டால் ஒரு நபருக்கு கிடைக்கும் மாம்பழங்களின் எண்ணிக்கையையும், மிகுதியையும் காண்க.

தொடர்ந்து மேற்படி வினாக்களை டீன்ஸ் குற்றிகளைப் பயன்படுத்தாமல் எழுத்துச் செய்கைமுறை மூலம் வகுத்தலைச் செய்ய வழிப்படுத்த வேண்டும்.

*5.3. விளக்கமளித்தல் (Explanation)*

மேற்படி வினாக்களுக்கான விடைகளை ஒவ்வொரு குழுசார்பாகவும் ஒருவர் முன்வைப்பர். அத்துடன் செய்கை முறையையும் முன்வைப்பர்.

*5.4. விரிவாக்குதல் (Elaboration)*

மாணவர்கள் இன்றைய கண்டாய்தலின்போது அவதானித்த இடர்களையும் நிவர்த்திக்க ஆவன செய்வதோடு திறமையாகச் செயற்பட்ட மாணவர்களைப் பாராட்டி மேலும் வகுத்தல் பற்றிய அறிவு எமது அன்றாட வாழ்க்கையில் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் பற்றியும் கூறி கரும்பலகையில் உதாரணக் கணக்குகளைச் செய்து காட்டி விளக்கமளித்தல்.

*5.5. மதிப்பிடல் (Evaluation)*

கண்டறிதலுக்காக கரும்பலகையில் எழுதிய வகுத்தல் வினாக்களைப் போன்ற நான்கு வினாக்கள் எண்களை மாற்றி எழுதிவிட வேண்டும். இவ்வினாவிற்கான செய்கை முறையுடன் விடையையும் ஒவ்வொரு மாணவர்களும் எழுதி முன்வைப்பர்.

முன்னூட்டல்:- மீத்திறனுடைய மாணவர்களை இனம்கண்டு அவர்களை மேலும் முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளை வழங்கி வழிப்படுத்த வேண்டும்.

பின்னூட்டல்:- இடர்ப்படும் மாணவர்களை இனம்கண்டு அவர்களுக்குரிய இடர்களை களையக்கூடிய விதத்தில் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

---

**இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள்**

1. கொழும்புப் பல்கலைக்கழகம்
2. பேராதனைப் பல்கலைக்கழகம்
3. ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
4. களனிப் பல்கலைக்கழகம்
5. மொறட்டுவப் பல்கலைக்கழகம்
6. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
7. உறுகுணைப் பல்கலைக்கழகம்
8. கிழக்குப் பல்கலைக்கழகம்
9. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
10. இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
11. இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம்
12. தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
13. இலங்கை ஊவா வெல்லச பல்கலைக்கழகம்
14. கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகம்
15. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்



# EQ - ஓர் அறிமுகம்
## இது கணிதக் குறியீடு அல்ல.

சி.சிறிசுதாகரன்,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'B'.

இன்றைய எல்லாத் தேர்வுகளிலும் கட்டாயம் இடம்பெறும் அளவுகோலாக IQ எனப்படும் நுண்ணறிவு விளங்கி வருவதை நாம் அறிவோம்.

5S, 5E என்றெல்லாம் CR கொப்பிகள் நிறைய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டாலும், இறுதியாக எல்லாவற்றையும் துடைத்தெறிந்து விட்டு "பொதுப் பரீட்சைகள் பாராட்டி வாழ்த்துதல்களை" தந்துவிட்டுப் போகின்றன. சரி விடயத்துக்கு வருவோம்.

"உலகில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் மிகுதியான அறிவுத் திறனால் (Inteligence) சிறந்து விளங்கியவர்கள்கூட மனவெழுச்சி அறிவின் (Emotional Inteligence) திறனில் கவனம் செலுத்தாததால் தங்கள் துறையிலும், சொந்த வாழ்க்கையிலும் மனம் நொந்தவர்களாகப் பல இன்னல்களைச் சந்தித்துள்ளார்கள். இதற்குக் காரணம் மனவெழுச்சித் திறனில் (Emotional Quotient) கவனம் செலுத்தாததுதான்.

உளவியல் பேராசிரியர் வி.டி.எஸ்.சுவாமிநாதன் - சென்னை பல்கலைக்கழகம்

மேற்படி பேராசிரியரின் கருத்து மனவெழுச்சித் திறனின் முக்கியத்துவத்தை கூறி நிற்கிறது. அவரின் மனவெழுச்சித் திறன்பற்றிய வரைவிலக்கணம் பின்வருமாறு அமைகின்றது. "மனவெழுச்சித்திறன் என்பது உண்மைநிலையை அடிப்படையாகக் கொண்டதும்; நம் உணர்வுகளுடன் பிறரின் உணர்வுகளையும் புரிந்து கொண்டு செயற்படுவதேயாகும்".

சுயவிழிப்புணர்வு, மனதை அடக்கியாளுதல், அதை நிர்வகித்தல் போன்ற நம்முடைய உணர்வுகளையும் மனநிலையையும் சார்ந்த அறிவே மனவெழுச்சி அறிவாகும்.

அறிவுத்திறனுடன் மனவெழுச்சித் திறனும் சமநிலையில் இருந்தால் மட்டுமே வாழ்வில் நாம் வெற்றியடைய முடியும்.

மனவெழுச்சித் திறனை இன்னும் இலகுவாக விளங்கிக்கொள்ள கதை ஒன்றைத் தருகிறேன்.

சத்திரிய குல மன்னன் ஒருவன் ஒரு ஞானியைச் சந்தித்து, "சொர்க்கம், நரகம் என்றால் என்ன?" என்று கேட்டான். அதற்கு ஞானியோ "நீயொரு வடிகட்டின முட்டாள். உன்னைப் போன்ற முட்டாள்களிடம் விளக்கம்கூறி நான் என் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை" என்று முகத்தில் அடித்தாற்போல் பதில் கூறினார். ஒரு அரசனாகிய தன்னைப் பார்த்து ஞானி அவமதிக்கும் வகையில் கூறியதைக் கேட்டு மிகுந்த கோபமடைந்த மன்னன் வாளையுருவி ஞானியை வெட்டும் வகையில் முன்னேறிச் சென்றான்.

உடனே ஞானி அவனைப்பார்த்து "மன்னவா! இதற்குப் பெயர்தான் நரகம்" என்றார். இந்த சொற்களைக் கேட்டவுடனேயே மன்னன் ஓர்கணம் திகைத்து நின்றான். பின் மெல்ல தன் நிலை உணரலானான். கண்மூடித்தனமான கோபத்தால் அறிவிழந்து நிற்கும் தன்னைப் பார்த்து வெட்கினான். தலைகுனிந்து ஞானி முன் மண்டியிட்டு "நான் எத்தனை பெரிய முட்டாள் தனத்திற்கு ஆட்பட்டுவிட்டேன், நல்லவேளை அதிலிருந்து மீண்டு விட்டேன். ஞானியே என்னை மன்னித்தருளும்" என்று வேண்டினான்.

அதற்கு ஞானி மன்னரைப் பார்த்து " இதுதான் சொர்க்கம்" என்றார்.

ஒரு சூழலில் தவறான ஓர் உணர்ச்சியை தவறான முறையில் வெளிப்படுத்தி விட்டோம் என்று உணர்தலே தன்னை அறிதலாகும். இது உணர்ச்சி அறிவுக்கான அடிக்கல்லாகும்.

ஆகவே, குறித்த சூழலில் நமக்குள் ஏற்படும் உணர்ச்சிகள், விளைவுகள் ஆகியவற்றை உடனே வெளிப்படுத்தினால் என்ன விளைவுகள் ஏற்படும்? அவ்வகை உணர்ச்சிகளை எவ்வாறு ஓர் நிலைக்குக் கொண்டு வருவது? அவ்வகை உணர்வை எவ்வாறு சூழலுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க வேண்டும்

என்ற அறிவுத் தொகுதியே மனவெழுச்சித்திறன் எனப்படுகின்றது.

எமது பாடசாலை மற்றும் ஏனைய நிலையங்களில் கலைத்திட்டங்கள் யாவும் IQ விலேயே அதிக அக்கறை செலுத்துகின்றன. இலட்சங்களை இலட்சணங்களாகப் பெறும் பாடசாலைகள்கூட இவற்றில் சாதித்தவை....? எந்தளவு என்பது வெளியே வராதவிடயம் ஆகும்.

EQவை வளப்பதில் பாடசாலைகளிலும் பார்க்க பெற்றோர்களின் நடத்தைகளே அதிக தாக்கம் செலுத்தும் என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வகை மனவெழுச்சித் திறனை வளர்த்துக்கொள்ள முடியுமா? என்பதைக் கேட்கலாம். முடியும் என்றே ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். IQவிற்கும் EQவிற்கும் அடிப்படை வித்தியாசம் இதுதான். அதாவது அறிவுத்திறன் என்பது ஒரு வயதுக்குமேல் ஒருவனுடைய மூளையில் பதிவாகிவிடும். ஆனால் மனவெழுச்சித் திறனை நம் எந்த வயதிலும் வளர்த்துக் கொள்ள முடியும்.

மனவெழுச்சித் திறன் வளர்ச்சி என்பது உண்மையில் குழந்தைகளின் வளர்ப்போடு மிக நெருங்கிய தொடர்புடையது. குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் நம் கவனம் முழுவதும் செலுத்தப்படுகின்ற நிலையில் நாம் அவர்களின் உணர்ச்சிகளை அவர்களே கையாளக் கற்றுக் கொடுக்கத் தவறிவிடுகின்றோம்.

பாடசாலை, கல்லூரி அல்லது பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முதலிடம் பெற்றுப் பதக்கம் பெறுபவர்கள் தமது சொந்த வாழ்வில் ஏற்படும் மிகச்சிறிய பிணக்குகளில்கூட மனம் உடைந்து சோர்ந்துபோய் விடுகின்றனர். இவ்வரிகளை எழுதிக் கொண்டிருக்கும்போது கற்றறிந்த மேதாவிகளின் குடும்பவாழ்வு மிகக் குறுங்காலத்திலேயே விவாகரத்துவரை வருகின்ற நிகழ்வுகள் கண்முன் வருகின்றன.

உணர்வுகளை வெளிப்படுத்தத் தெரியாது, கையாளத் தெரியாது. வெறும் இயந்திரங்களாய் உழைத்துவிட்டு மன உளைச்சல், விரக்தி என்று மனரீதியான பாதிப்புக்களுடன் வாழ்க்கையை முடிக்கும் பலர் கண்முன் வருகின்றனர். தனிமனித வாழ்வில் மனவெழுச்சித் திறன் எவ்வாறு அமைகின்றது என்பதை அறிந்து ஆய்வாளர்களால் செய்யப்பட்ட தொடர் ஆய்வு நமக்கு பல விடயங்களைத் தருகின்றது.

ஓர் ஆய்வு நிபுணர் முன்பு பல குழந்தைகள் அமர்ந்திருந்தனர். அவர்கள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டனர். தனித்தனியே இரு குழுக்களாக்கப்பட்ட இவர்கள் முன்னால் இனிப்புப் பண்டங்கள் வைக்கப்பட்டன. சிறிது நேரத்தின் பின்னர் இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. இதன்போது ஒரு குழுவில் நின்ற குழந்தைகள் தமக்கு இன்னும் இனிப்புக்கள் வழங்கப்படவில்லை என அங்கலாய்த்து படிப்படியாக அந்த இனிப்புப் பொருட்களை உண்ணத் தொடங்கினர். ஆனால் ஏனைய குழுவில் உள்ள குழந்தைகள் தமக்கு இனிப்புப் பொருட்கள் வழங்கப்படும் வரை கதைத்தும், ஆடியும் பாடியும், உரையாடியும், வாசித்தும் தமது நேரத்தைப் பயனுள்ள முறையில் செலவழித்தனர்.

முடிவில் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்ட இம் மாணவர்களின் பொறுப்புணர்வு பற்றிய காகிதங்கள் பலவருடங்களின் பின்னர் அவர்களது உயர்நிலையை ஆய்வின் இறுதியில் நிரூபித்துள்ளன.

நமது மனவெழுச்சியை நாம் எதிர்கொள்ளும் சூழலுக்குத் தக்கவாறு எவ்வாறு நடக்கின்றோம் என்பதே மனவெழுச்சித் திறனாகும்.

நமது இன்றைய தேவையும் அதுவேயாகும்.

---

**அன்பு**

**எல்லாச் சமயமுங் கண்ட ஒரேமுடிவு அன்பு என்பது. அன்பை வலியுறுத்தாத சமயம் இல்லையென்றே சொல்லலாம். அன்பு வேறு சமயம் வேறு அல்ல. அன்பும் சமயமும் ஒன்றே. அன்பில்லாத சமயம் இருக்குமாயின் அதனைச் சமயம் என்று சொல்வதில்லை. அதற்கு வேறுபெயர். அன்பு இல்லாத உடம்பை உயிர்நின்ற உடம்பு என்று சொல்வதில்லை. அது வெறுமனே எலும்பைத் தோலாற் போர்த்த உடம்பு என்று சொல்வர். மனித வாழ்வுக்கு உயிர்நிலை அன்பே. ஆதலாற்றான் வள்ளுவர் பெருமான் 'அன்பின் வழியது உயிர்நிலை' என்றார். அன்புக்குச் சாதி, சமயம், ஆண், பெண், உயர்வு, தாழ்வு எந்தவித வித்தியாசமுமே இல்லை. உலகில் பேதமற்று வாழ ஒரேவழி ஒருவரை ஒருவர் அன்பு செய்தலே. பல்பெருஞ்சமயஞ் சொல்லும் பொருள் அன்பே. அன்பே கடவுள்; அன்பே வாழ்வு; அன்பே எல்லாம்.**

*– எட்டாம் வகுப்பு "இலக்கியவிருந்து" 1960 நூலிலிருந்து*



# சித்திரக் கலையானது பாடசாலைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்

பா.ஐங்கரன்,
சித்திரம்,
2ஆம் வருடம்.

அறிமுகம்

சிவமும் சக்தியும்போல இரண்டறக் கலந்து, உடல் உளம் ஆகியவற்றின் இயக்க செயற்பாடுகள் மூலமாக ஒழுங்குபடுத்தப்பட்டு, எல்லோர் மனதையும் தன்பால் ஈர்த்து வெளிப்படுத்தப்படுகின்ற இரசனையுடன் கூடிய ஆக்கத்திறன்களே கலைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. முன்னோர்கள் இக்கலைகளை அறுபத்து நான்காக வகைப்படுத்திக் காட்டியுள்ளனர். இக்கலையானது எல்லோரிடத்தும் ஏதோ ஒரு வடிவத்தில் இலைமறை காயாக அமிழ்ந்து கிடக்கிறது. இவை ஒழுங்குபடுத்தப்பட்டு அதற்கே உரிய பரிமாணங்களோடும் இரசனையோடும் இயல்பாக வெளிப்படுத்தப்படும் போதுதான் கலைகள் முழுவடிவம் பெறுகின்றன. இக்கலைகள் ஒருவருக்கு ஒருவர் வேறுபடுவதற்கு இரசனை விருத்தி, திறன் விருத்தி, மனப்பாங்கு விருத்தி, முயற்சியுடனான பயிற்சி, மனவெளிச் சித்தாந்தங்கள், தனிநபர் ஆளுமை, தற்றுணிவு, விருப்பு - வெறுப்புக்கள் என்பன காரணங்களாக அமைகின்றன. ஆரம்ப காலத்தில் அதீதமான மனித உழைப்பில் உண்டான களைப்பினை ஆற்றிக் கொள்வதற்காகவும், ஓய்வுநேரங்களில் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பதற்காகவும் கலைச் செயற்பாடுகளில் மனிதர்கள் ஈடுபட்டனர். இவற்றின்போது ஆடல்கள், பாடல்கள் முக்கிய இடம் வகித்தன. இதனைவிடக் கூரிய ஆயுதங்கள், போர்க் கருவிகள், சமையல் உபகரணங்கள் என்பன சுயதேவை கருதியும், கைப்பணிப் பொருட்கள், களிமண் ஆக்கங்கள் ஆகியன பொழுதுபோக்கை மையமாகக் கொண்டும் ஆக்கப்பட்டதுடன், வரலாற்றைப் பதிவுசெய்யும் குறிகாட்டிகளாக முத்திரைகள், கல்வெட்டுக்கள், கற்பாறைகளின் செதுக்கல்கள், மலைப்பாறைகளைக் குடைந்து குகைச்சுவர்களிலே வரையப்பட்ட சுவரோவியங்கள் என்பன இன்றும் சான்றாதாரங்களாக உள்ளன. 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவை மையமாகக் கொண்டு ஏற்பட்ட கல்வி மறுமலர்ச்சிக்குப் பின்பே முதன்மையான கலைகளில் ஒன்றாகச் சித்திரம் இனம் காணப்பட்டு, பாடசாலைக் கல்வியில் ஒரு பாடமாக சேர்க்கப்பட்டு கற்பிக்கப்பட்டது. இன்று வர்த்தக நோக்கில் துரித வளர்ச்சியடைந்து வரும் துறைகளில் ஒன்றாகச் சித்திரம் காணப்படுகின்றது. மேலும், சுய ஆக்கங்கள் (ஓவியம், சிற்பம்), சிறு கைத்தொழில்கள் (முகமூடி, மட்பாண்டம்), நிறுவன மயப்படுத்தப்பட்ட கைத்தொழில்கள் என நவீன யுகத்தில் எல்லாத்துறைகளிலும் பின்னிப்பிணைந்து பெரிதும் வேண்டப்பட்ட துறையாக இத்துறை காணப்படுகின்றது. மேலும், சித்திரக்கலையானது ஒவ்வொரு மனிதனதும் இயல்பான ஆற்றல் அதாவது தெய்வீக ஆற்றல் வெளிப்பாடு என நம்பப்பட்டு வருகின்ற நிலையில், இன்றைய உலகமயமாதல் காரணமாக ஏற்பட்ட கணினி யுகத்தில் கணினியை இயக்கக் கற்றுக் கொண்ட அனைவருமே சித்திரங்களை வடிவமைக்கலாம் என்ற நிலை உருவாகி, சித்திரம் இலகுபடுத்தப்பட்டுள்ளதுடன், நவீன புதிய தொழிநுட்பங்களுடன் புதிய புதிய வடிவில் புதுப்புது பரிமாணங்களோடு பொருளாதாரத்திற்கும் உதவுகின்றது.

பாடசாலையில் சித்திரக்கலை

இலங்கையில் 1972ஆம் ஆண்டு முதல் ஒழுங்குபடுத்தப்பட்ட பாடத்துறைகளுடன் சேர்ந்ததாக முதன்மைக் கலைகளான சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய அழகியற்கலைகள் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி, பல்கலைக்கழகக் கல்வி எனப்பல்வேறு கலைத்திட்ட மாறுதல்களுக்குட்பட்டு கற்பிக்கப்பட்டு வருகின்றமையை நாம் அறிவோம். இவற்றைச் சுருக்கமாக ஆராய்வோம்.

ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தை எடுத்துக் கொண்டால் ஒருங்கிணைக்கப்பட்ட இணைந்தபாடமாக அழகியற்கல்வி கட்டாய பாடமாக கற்பிக்கப்படுகின்றது. ஆரம்பப் பாடசாலைப்பருவம் என்பது ஒரு தீர்க்கமான பருவம். அதாவது எதிர்காலத்தில் வெற்றிகரமான பிரஜையாக செயற்படுவதற்குத் தேவையான பல ஆற்றல்களின் உருவாக்கமும், இசைவாக்கமும் இப்பருவத்திலேயே நிகழும் என்பது குழந்தை உளவியலாளர்களினதும், கல்வியியலாளர்களினதும் கருத்தாகும். மேலும், சமநிலையான ஆளுமை வளர்ச்சி, அறிவுத்திறன், மனப்பாங்கு விருத்தி, அழகியல் இரசனை விருத்தி,

எல்லோரையும் அன்பாக அரவணைத்தல், தன்னைமட்டுமன்றி வீடு, சுற்றாடலை அழகுபடுத்தல், சுயமான ஆக்கவேலைகளில் ஈடுபடல், கற்பனை ஆற்றல், நவீன உலகை எதிர்கொள்ளும் திறனைப் பெறல் என்பன சித்திரக் கலைப்பாடத்தைக் கற்பதன் மூலம் பெறப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், ஆரம்பக்கல்வியில் எல்லாப் பாடத்துறைகளும் செயற்பாட்டுடன் கூடியதாக, 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தேர்ச்சி மையக்கல்வித் திட்டத்துக்கு அமைவாக, அழகியலுடன் தொடர்புபட்டதாக ஆடல், பாடல், அபிநயம், போலச்செய்தல், நடித்துக்காட்டல், பேச்சுப் பயிற்சி, எழுத்துப் பயிற்சி, வாசிப்புப் பயிற்சி, பார்த்துவரைதல், வர்ணம் தீட்டல், பூவேலை மற்றும் ஆக்க வேலைப்பாடுகள், செய்துகாட்டல், விளையாட்டு எனப் பலதரப்பட்டதாக எல்லாப்பாட அலகுகளும் கற்பிக்கப்படுவதாலும், இடைநிலைக் கல்விக்குத் தயார்படுத்தும் துறையாக ஆரம்பக் கல்வித்துறை காணப்படுவதாலும், இடைநிலைக் கல்வியிலேயே அழகியற் பாடங்களில் விரும்பிய பாடத்துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தேவை மாணவர்களுக்கு ஏற்படுவதாலும், மாணவர்களில் அமிழ்ந்து கிடக்கின்ற கலை வெளிப்பாடுகளை வெளிக்கொண்டு வரவேண்டிய தேவை ஆரம்பகல்வி ஆசிரியர்களுக்கு இருப்பதாலும், ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் அழகியல் கலையில் ஆர்வமும், ஆற்றலும், விருப்பும், திறனும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாறு இல்லாது போகுமிடத்து இடைநிலைக் கல்வியில் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதுடன், நிலையான கற்றல் இடமாற்றம் ஏற்படுவதில் பாதிப்பு ஏற்படுவதுடன் அழகியல் உணர்வற்ற ஒரு சமுதாயம் உருவாகவும் ஏதுவாகின்றது. அத்துடன் மகிழ்ச்சிகரமான கற்றலையும் பாதிக்கிறது. எனவே, ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் சகலதுறை ஈடுபாட்டுத் திறன் கொண்டவர்களாகக் காணப்படுதல் அவசியமாகும்.

இடைநிலைக் கல்வியில் துறைசார்ந்த ஈடுபாடும், ஆற்றல்களும், திறன்களும் உள்ளோர் தமக்குப் பொருத்தமான பாடத்துறைகளைத் தெரிவுசெய்து (சித்திரம், சங்கீதம், நடனம்) கற்க முடிவதால் சித்திரக் கலையின் பங்கு குறைந்து காணப்படுகின்றது. மேலும், தற்போதைய கலைத்திட்டத்தில் அழகியற் கலைப்பாடத்திற்கும் மேலதிகமாக ஆங்கில மொழித்திறன், தாய்மொழித்திறன், தகவல் தொழிநுட்பம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் சித்திரக்கலை விருப்பத்துக்குரிய பாடமாக மாறியுள்ளதுடன் முதன் முறையாக 2007இல் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் விழுக்காடு மிகவும் குறைவாகக் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. இது காலப்போக்கில் இன்னும் பாரதூரமாக மாறுவதற்கு நிறைய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. இவ்வாறான கலைத்திட்ட மாற்றத்திற்கும் மேலதிகமாக சித்திரக்கலைக்கு இருக்கக்கூடிய சமூக அந்தஸ்து குறைந்த வருகிறது. இது பாடசாலை மட்டத்திலும்சரி, பெற்றோர் மட்டத்திலும்சரி, சமூக மட்டத்திலும்சரி சித்திரக் கலையை உயர் கௌரவம் கொண்ட பாடத்துறையாகக் கருதுவது இல்லை. இதனால் பெற்றோர்கள் தம்பிள்ளைகளை உயர் இலக்கு, இலட்சியம் நோக்கிய கற்பித்தலுக்கு சித்திரக்கலையைத் தெரிவுசெய்து ஊக்கம் கொடுப்பதில்லை. இதனைவிட இன்றைய சமூகம் பரீட்சையை மையமாகக் கொண்ட கற்றலுக்கே முக்கியத்துவம் கொடுப்பதால் சித்திரக்கலையைப் பொறுத்தவரை அதிகூடிய அடைவு மட்டத்தை எடுக்க முடியாது என்ற மனப்பாங்கு தோற்றம் பெற்றுள்ளது. இதற்குத் தரநீதியான வரையறுக்கப்பட்ட பாடநூல்கள் இல்லாமையும் மற்றும் முழுக்க முழுக்க பௌத்த கலை, மேலைத்தேய கலைகளையே பாடத்துறைகளில் உள்ளடக்கிக் கலைத்திட்டம் இருப்பதாலும், தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு நேரடிக் காட்சிக்குட்படுத்தியோ அல்லது பூரண அறிவுபெறும் நிலைமையோ குறைவாகக் காணப்படுகின்றது. எல்லாப் பாடசாலைகளிலும் சித்திரப்பாடத்திற்கு என தரம்வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படாமை, ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளாக தரம்வாய்ந்த உசாத்துணை நூல்கள் போதியளவில் கிடைக்காமை, தேர்ச்சிபெற்ற வளவாளர்கள் பற்றாக்குறை, பாடசாலைகளில் சித்திரக்கலைக்கு முக்கியத்துவம் கொடுக்காமை, வளப்பற்றாக்குறை, தனித்துவமான அறைவசதிகள் இல்லாமை, ஏனைய துறைசார்ந்த ஆசிரியர்களால் சித்திரக்கலை கற்பிக்கப்படுதல், ஓர் ஆசிரியர் இரண்டு பாடசாலைகளில் கற்பித்தல் போன்ற ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளும் காரணமாக அமைவதுடன் பாடம்பற்றிய பூரண அறிவின்மை, கற்பித்தல் ஆற்றல் இன்மை, ஆர்வம் இன்மை, மாணவர்களைச் சிறந்த முறையில் வழிநடத்தும் ஆளுமைத்திறன் இன்மை, கற்பித்தல் சாதனங்களைச் சிறந்த முறையில் பொருத்தமாகப் பயன்படுத்திக் கற்பிக்காமை, சித்திரக்கலையை எளிமையான துறையாக அல்லாது கடினமான துறையாக மாணவர் மத்தியில் காண்பித்தல், நவீன சித்திரக்கலை பற்றிய அறிவோ, ஈடுபாடோ இல்லாமை, மாணவர்களை வேலையுலகிற்குத் தயார்ப்படுத்தல் என்ற இலக்கு நோக்கியதாக வழிப்படுத்தாமை போன்ற

ஆசிரியர்களின் குறைபாடுகள் காரணமாகவும், துறைசார்ந்த திறமையும் ஆர்வமும் உடையோரும் வேறு துறைகளைத் தேர்ந்து எடுத்துக் கற்பதால் இடைநிலை, உயர்நிலைக் கல்வியில் சித்திரக் கலையை கற்போர் தொகை அருகிவருவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான போக்கினால் எதிர்காலத்தில் பாடசாலைகளில் சித்திரக்கலைப் பாடம் இல்லாமல் போவதற்கும் வாய்ப்பு ஏற்படலாம். தொண்ணூறுகளில் பாடசாலைகளில் இடைநிலை வகுப்புக்களிலும் உயர் வகுப்புக்களிலும் நாடகமும் அரங்கியலும் என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது மேற்குறிப்பிட்ட அழகியற் பாடங்களுடன் இலக்கியமும், நாடகமும் அரங்கியலும் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலைமைகளைப் போக்குவதற்காகப் போதிய சித்திரக்கலை ஆசிரியர்களை உள்வாங்குவதுடன், தரம்வாய்ந்த வளவாளர்களைப் பயன்படுத்தி நவீன பாணியிலான சித்திரக்கலை நுட்பங்களை தொழில்வாய்ப்பை மையமாகக் கொண்டதாக ஒழுங்குபடுத்தி, தொடர்ச்சியான செயலமர்வுகள் மூலம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல், கணினி மூலமாக சித்திரக்கலை நுட்பங்களை அறிமுகப்படுத்தல், வலை அமைப்பினூடாக உலகப் பிரசித்திவாய்ந்த ஓவியங்களின் சிற்பங்களின் நுட்பங்களை அறிந்து கொள்வதற்கு கூட்டமைப்பு ரீதியாக உதவுதல், திறமையோடும், அர்ப்பணிப்போடும் செயற்படும் ஆசிரியர்களை இனம்கண்டு ஏனைய பாடசாலைகளுக்கு முன்னோடியாகத் தெரிவுசெய்து பாராட்டுவதுடன் செயலூக்கமுள்ள பயனுள்ள செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல், பொருத்தமான இலகுவான கற்றல் கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு ஊக்கமளித்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் ஆசிரியர்களின் வாண்மையை அதிகரிக்கச் செய்யலாம். மேலும், சித்திரக்கலையில் பிள்ளைகளுக்கு இரசனையும், ஆர்வமும் ஊக்கமும் ஏற்படும் வகையிலும் எதிர்காலத்தில் சுயமான தொழில்துறையைத் தேர்ந்தெடுப்பதற்கு நம்பிக்கை ஊட்டும் வகையிலும் ஆசிரியத்தொழில், கேலிச்சித்திரங்கள், புத்தக முகப்பு அட்டை, பல்வேறு வடிவமைப்புக்கள், பொது இடங்களில் காணப்படும் ஓவியங்கள், சிற்பங்கள், விளம்பர போஸ்ரர்கள், எழுத்துக்கள், காட்டூன் சித்திரங்கள், கணினி மூலமான சித்திர வடிவமைப்புக்கள், கலைப்பொருள் கைப்பணி விளையாட்டுப் பொருள் ஆக்கங்கள், சிறுகைத்தொழிற் பொருட்கள் உற்பத்தி போன்ற தொழில்துறைகளை வர்த்தக நோக்கில் எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதனை கவர்ச்சிகரமாக அறிமுகம் செய்தல், இதனைவிட துறைசார்ந்த சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல், கண்காட்சிகளை ஒழுங்குசெய்தல், போட்டிகளை நடத்தி வெகுமதிகள், சன்மானங்களை வழங்கல், இலகுவாகவும் துரிதமாகவும் வரைவதற்கான நுட்பங்களை அறிமுகம் செய்வதுடன் கற்பித்தல் சாதனங்களை எளிமையாகப் பயன்படுத்திக் கற்பித்தல், சித்திரக்கலை சார்ந்த விடயங்களைப் பெறுவதற்கு வழிகாட்டியாகச் செயற்படல் போன்றவற்றின் மூலம் மாணவர்களைச் சித்திரக் கலைப்பாடத்தின்பால் கவர்ந்திழுக்கலாம் என்பது எனது கருத்தாகும்.

பொதுவாகத் தொழில்வாய்ப்பை இலக்காகக் கொண்டோரே பாடசாலைகளில் உயர்நிலைக் கல்வியில் சித்திரப் பாடத்தை தேர்ந்தெடுக்கின்றனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இதில் சித்தியடைவோர் போட்டிப் பரீட்சை, தொண்டராசிரியர் நியமனம் என்பவற்றின் மூலம் ஆசிரியத் தொழிலுக்கு உள்வாங்கப்பட்டு ஆசிரிய கலாசாலைகளில் பயிற்றுவிக்கப்படுவர். இது கிரமமாக இடம்பெறுவது இல்லை. ஆனால் 2000ஆம் ஆண்டுக்குப் பின் தேசிய கல்வியியற் கல்லூரிகள் மூலமாக வருடம்தோறும் கூடியபட்சம் 20 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கக் கூடியதாக இருந்தபோதும், போதுமான தகைமை வாய்ந்தவர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றனர். மேலும், இதே காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் சேர்க்கப்பட்ட இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் ஆரம்பிக்கப்பட்ட சித்திரமும் வடிவமைப்பும் பாடத்துறை மூலமாகச் சித்திரத்திற்கு உயர்கல்வி வாய்ப்பு ஏற்பட்டதோடு பட்டதாரி ஆசிரியர்களும் உருவாவதற்கு வழி ஏற்பட்டது எனலாம். இங்கு கற்று வெளியேறுவோரும் ஆசிரியத் தொழிலையே தேர்ந்தெடுப்பதால், பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தியாக்கப்பட்டு வருவதைக் காணலாம். இருப்பினும் பட்டதாரி ஆசிரியர்களுடைய செயற்பாடுகள் பாடசாலைப் பாடவிதானங்களுக்கு அமைவானதாக, பாரம்பரிய வரைதல் நுட்பங்களையும், பாரம்பரிய கலை கலாசாரத்தையும் கற்பிப்பதிலேயே நின்றுவிடுகிறது.

சித்திரக்கலைப் பாடமானது தொடர்ந்து நிலையான பங்களிப்பைச் செய்ய வேண்டுமாக இருந்தால் இதற்குரிய சமூக அந்தஸ்து, இலட்சியம் நோக்கிய கற்றல் என்பவற்றை உருவாக்க வேண்டும். எனவே, இன்றைய தொழில்வாய்ப்பை இலக்காகக் கொண்ட நவீன சித்திரக்கலையின் நுட்பங்களை (கணினி மூலமான சித்திரக்கலை) பாடசாலை மட்டத்தில் வளர்த்தெடுக்கும் போதுதான் சமூக அந்தஸ்து உயரும். இது காலத்தின் தேவையாக உள்ளது.

நவீன சித்திரக்கலை

உலகலாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் பொருளாதார முன்னேற்றம் காரணமாக காலத்துக்குக் காலம் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் பாரம்பரிய முறைகளுக்குப் பதிலாக புதிய புதிய கருவிகள், உபகரணங்கள், நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டு புதுமைகள் படைக்கப்பட்டு வருவதுடன், இவை உலகமயமாதல் மூலம் எமது நாட்டிலும் ஏற்பட்ட சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்கள் காரணமாக மாறிவரும் உலகுக்கு ஏற்ப புதுமைகளைப் புகுத்தி இணைத்து வாழவேண்டிய தேவையை எல்லாத் துறையினர்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது. இது சித்திரத்துறைக்கு விதிவிலக்கானது அல்ல. யாழ்ப்பாணத்தின் சித்திரக்கலையை எடுத்தால், முறைசார் கல்விமட்டத்தில் அதன் கலைத்திட்டம், தேர்ச்சி என்பன மாறிவரும் உலகுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படாமல் இருப்பது குறையேயாகும். ஆனால் பாடசாலை தவிர்த்து தனியாரின் செயற்பாடுகள் மூலமாகச் சித்திரக்கலை என்ற வரையறை இல்லாமல் கணினி மூலமாகப் பல்வேறுபட்ட வடிவங்களில் நவீன சித்திரக்கலை வளர்ந்து வருவதனை அவதானிக்க முடிகிறது. இது ஒரு தொழில்வழங்கும் துறையாகக் காணப்படுகிறது. இதன் மூலமாகப் பாரம்பரிய சித்திரக்கலை சம்பந்தமான அறிவு உள்ளவரால் மட்டும் என்று அல்லாமல், கணினியை இயங்கச் செய்வோர் யாரும் செய்யக்கூடியவாறு உள்ளமை எல்லோரையும் இதன்பால் வசப்படுத்தும் ஒரு தளமாகக் காணப்படுகின்றது. எனவே, இதனைக் கணினியோடு தொடர்புபடுத்தி சுருக்கமாக ஆராய்வோம்.

## Decining (வடிவமைப்பு)

இதன் மூலமே பெருமளவான கலைத்தொழிற் பொருட்கள் அழகுபடுத்தப்படுகின்றன. புடைவை, தளவிரிப்பு, மேசைவிரிப்பு, வர்ணப்பூச்சு, அலங்காரங்கள், கைத்தொழில் பொருட்களின் வடிவமைப்பு, வாழ்த்து மடல்கள் என்பன வடிவமைக்கப்படுகின்றன. இதன்மூலம் பாரம்பரிய கலைகளுக்கும் மேலதிகமாக வர்த்தக நோக்கில் ஏராளமான சாதனைகளைச் செய்துவருவதைக் காணலாம்.

## Painting (வர்ணப்பூச்சு)

இதன் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட வர்ணங்களைக் கலந்து புதிய நிறம் பெறப்படுவதுடன், கலக்கப்படும் வீதத்தின் அடிப்படையில் இருண்டது, வெளிச்சமானது எனப் பல்வேறுபட்ட நிற வித்தியாசத்தில் விரும்பியபடி பெற்றுக்கொள்ளலாம். இதன்மூலம் வர்ணத்தின் பயன்பாடு காட்டப்படுகின்றது. மேலும், விரும்பிய உருவங்கள், காட்சிகளுக்கு விரும்பிய நிறங்கள் பயன்படுத்தப்படுவதுடன் ஒளிநிழல் காட்டியும் வரையக் கூடியதாக உள்ளது. வர்ணங்களைக் கலத்தல் தொடர்பான அறிவு பெரியளவில் தேவையில்லை. பாரம்பரிய முறைப்படி பெறமுடியாத நிறங்களையும் இதன்மூலம் பெற்று நேர்த்தியாக விரும்பிய வடிவமைப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும்.

## Mixing (கலவை)

இதன்மூலம் பல்வேறுபட்ட வடிவங்கள், ஓவியங்கள், எழுத்துருக்கள் என்பவற்றின் பகுதிகளை இணைத்து விரும்பிய ஒரு வடிவத்தைப் பெற்றுக் கொள்வதாகும். இது வாழ்த்துமடல்கள், காட்சிப்படங்கள், விளம்பரப் போஸ்ரர்கள், காட்டூன் சித்திரங்கள், புகைப்படப் பிரதிகள், நவீன சினிமா உருவாக்கங்கள் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைகின்றது. இதன் மூலமாக வர்த்தக நோக்கில் ஏராளமான வடிவமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன.

## Writing (எழுத்து)

இதன் மூலம் பல்வேறு அளவுகளில், பல்வேறு வடிவங்களில், பல்வேறு தோற்றங்களில் எழுத்துக்களை உருவமைப்பு செய்ய முடியும். இதனால் விளம்பரங்கள், வாழ்த்து மடல்கள் என்பவற்றைப் பல்வேறுபட்ட வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறாக கணினி மூலமாக எல்லோராலும் எளிதாகவும் விரும்பிய வடிவங்களில் நேர்த்தியாகவும், தேவையான நிறங்களை பயன்படுத்தியும், தேவையான பிரதிகளையும் பெற்றுக்கொள்ள முடிவதால் எல்லோரும் விரும்பும் தொழில்முயற்சியாகக் காணப்படுகின்றது. எனவே, இதனைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் சித்திரக்கலையின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்திக் கற்பிப்பதன்மூலம் சித்திரக்கலை எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்வதுடன், பாடசாலையைவிட்டு வெளியேறியவுடன் தொழிநுட்பம்சார்ந்த நவீன சித்திரக் கலையைப் பயன்படுத்திச் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளவும் முடியும். சமூகமட்டத்திலும், சித்திரக்கலை பெரிதும் மதிக்கப்படுகின்ற துறையாக மாறுவதற்கு வழியேற்படும்.

********



# சித்திர அரும்புகள்

செல்வி இ.அனுசியா,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'D'.

சித்திரம் ஓர் கட்புலக்கலை. நமது மனதில் தோன்றும் எண்ணங்களை, இரேகைகள் மூலமும், வர்ணங்கள் மூலமும் வெளிப்படுத்தல் சித்திரம் ஆகும். மனிதன் தனது புத்திக்கூர்மையினால் இயற்கையில் கிடைக்கும் பொருட்களின் மூலம் இயற்கையினால் உருவாக்கப்படாத கருத்துள்ள ஆக்கம் ஒன்றை உருவாக்குவதே சித்திரம் எனப்படுகிறது.

சித்திரத்தின் தோற்றத்தை அறுதியிட்டுக் கூறுதல் கடினமாகும். மனித சமுதாயத்தின் தோற்றத்துடன் சித்திரமும் தோன்றியிருத்தல் வேண்டும் எனக்கொள்ளலாம். ஆரம்பகால மனிதன் தனது வேட்டைத் தொழிலுக்காக உபகரணங்களைத் தயாரிக்க முயன்றான். இவ்வாறு, ஆக்கப்பட்ட கல்லாயுதங்கள் வெவ்வேறு வடிவங்களில் அமைந்தன. இதன் மூலமே, ஆதிமனிதன் வடிவம் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொண்டிருப்பான் எனக் கருதலாம். ஆதிமனிதன், தனது தேவைகளுக்காக வடிவமைத்த கருவிகளே மனிதனால் ஆக்கப்பட்ட முதல் உருவங்களாகும். பின்பு ஓய்வு நேரங்களில், கருவிகளை அலங்காரம் செய்ய முற்பட்டான். கற்குகைகள், மனிதனின் இருப்பிடமாக இருந்தபோது அதில் தான்கண்ட காட்சிகளைக் கூரான கற்களினாலும், மிருகத்தின் இரத்தம் போன்றவற்றினாலும் ஓவியமாக வரைய முற்பட்டான்.

கற்குகைகளைவிட்டு மந்தை மேய்த்தல், விவசாயம் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டபோது சமூகம் சிக்கல் நிறைந்ததாக மாறியதால் தேவைகள் அதிகரித்தன. இதனால், தனக்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள், உறைவிடம் பற்றிய புதிய எண்ணக்கருக்கள் எழுந்தன. வாழ்நாளில் பெற்ற அனுபவங்கள் அதிகரிக்கையில் சமூக, உளவியல் தேவைகளும் அதிகரித்ததால் நம்பிக்கைகளும், வழிபாடுகளும் தோற்றமெடுத்தன. இதன்மூலம், மனத்திருப்தியை எதிர்பார்த்த மனிதனில் இரசனை ஆற்றல், ஆக்கத்திறன் போன்றவை மேலும் வளர்ச்சியடைந்தன.

கருத்துப் பரிமாற்றத்திற்குக் கலையை ஊடகமாகப் பயன்படுத்த முயன்றதனால், எண்ணக்கரு விரிவடையத் தொடங்க, கருத்து வெளிப்பாடு, ஆக்கம் போன்றனவும் விரிவடையத் தொடங்கின. இதுவரையும் அருபமாக இருந்த தெய்வங்களுக்கு வடிவம் கொடுக்க முனைந்தான். வெவ்வேறு மனிதக் குழுக்களுக்கிடையே வேறுபட்ட தனித்தவமான கருத்து வெளிப்பாடுகளும், ஆக்க முயற்சிகளும் காணப்பட்டன. சமயம் தொடர்பான எண்ணக்கருக்கள் சித்திரத்தின் வளர்ச்சிக்கும், பரவலுக்கும் துணைபுரிந்தன. மேலைத்தேய, கீழைத்தேய கலாசாரங்கள் வேறுபட்டதுபோல, சித்திரம் வேறுபட்டது. கீழைத்தேய சித்திரக் கலையானது இரேகைகளை அடிப்படையாகக் கொண்டதாகவும், மேலைத்தேய சித்திரக் கலையானது ஒளிநிழல் காட்டுதலை அடிப்படையாகக் கொண்டதாகவும் வளர்ச்சியடைந்தது. இவ்வாறு சித்திரக் கலையானது தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்தது எனலாம்.

இச்சித்திரக் கலைகளில் "குழந்தைச் சித்திரமும்" ஒன்றாகும். "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பது போல, குழந்தைகள் பிறந்து, குறிப்பிட்ட காலத்தைத் தொட்டவுடன் சுயமாகக் கோடுகள், கிறுக்கல்கள் மூலம், வரையத் தொடங்குகிறார்கள். இதனை வெறுப்பாக நோக்கும்போதும், பெற்றோர்கள் ஆரம்பத்திலேயே குழந்தையைத் தடுக்கும்போதும், தண்டனைகள் வழங்கும்போதும் அவர்களின் ஆற்றல்களும் திறமைகளும் மழுங்கிப் போவதோடு, சித்திரப் பாடத்தை வெறுப்பது மட்டுமல்லாமல் ஆதரவு வழங்குவதனையும் குறைத்துவிடச் செய்கிறார்கள்.

சித்திரம் என்பது சுயமாக வரையக்கூடிய ஒரு கலை. எமக்கு ஆரம்பத்தில், சிறப்பான பயிற்சிகள் அமையாததன் காரணமாகவும், நல்ல போதனைகள் கிடைக்காததன் காரணமாகவும் எல்லா மாணவர்களின் மனங்களிலும் சித்திரம் கடினமான பாடம் என்ற எண்ணக்கரு வளர்ந்தமையினாலும், சித்திரப் பாடத்தினை இன்று குழந்தைகள் வெறுக்கின்றனர். இந்தவகையில் பார்க்கும்போது, பிள்ளைகள் சித்திரப் பாடத்தினை

வெறுக்கப் பல காரணங்கள் இருந்தபோதும், பிரதான காரணமாகப் பெற்றோர்களின் ஊக்குவிப்பின்மையும், பிள்ளைகள் சித்திரப்பாடம் தொடர்பான அனுகூலங்கள் பற்றி அறியாமையுமே காணப்படுகின்றன.

படம் 1



பிள்ளைகளிடம், நல்ல சிந்தனையையும், நல்ல எண்ணக்கருவையும், அழகியல் உணர்வையும், இரசிக்கும் மனப்பாங்கையும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கையும், தலைமைத்துவப் பொறுப்பையும், பழைமைகளை மதிக்கும் தன்மையையும் இந்தக் கலைப்பாடங்களில் சித்திரப் பாடத்தின் மூலம் ஏற்படுத்த முடிகிறது. மேலும், பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் விருப்பு வெறுப்பிற்கேற்ப நடக்க வேண்டும். அத்தோடு, சித்திரப்பாடம் தொடர்பான உபகரணங்களை வழங்குவதோடு, அவர்களின் ஆர்வத்தினையும் தூண்டுவதோடு அவர்களின் தோள்களைத் தட்டிக்கொடுக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் சித்திரப் பாடத்தில் ஆர்வம்காட்ட நேரிடும்.

சித்திரக்கல்வி என்பது செயற்பாட்டிற்கூடாக, சிறார்களின் படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வதுடன் தன்னம்பிக்கையையும் (Confident), ஆளுமை வளர்ச்சியையும், ஒவ்வொரு பிள்ளையிலும் வளர்க்கின்றது எனக்கூறலாம். எனவே, சிறார்களைக் கையாளுகின்ற ஆசிரியர்கள், அவர்களின் சுதந்திரமான உணர்வு வெளிப்பாட்டுக்கும், செயற்பாட்டுக்கும் நேரான பொறுப்பு வாய்ந்தவர்களாகின்றனர். இது வகுப்பறையில் மட்டுமல்ல, அதற்கு வெளியிலும் பிரதானமாகப் பிள்ளையின் மனதிலும் இடம்பெற்று செயற்பட வேண்டியவர்கள் என்பதையே உணர்த்துகின்றது. எனவே, சித்திரம் வரைவது என்பது ஒருபகுதி நேரம்; உபபாடம்; பிரதானமானது அல்ல என்ற சிந்தனையிலிருந்து ஆசிரியர்கள் விடுபடுவதன் மூலமே குழந்தைகளின் சிறந்த ஆளுமைக்குப் பொறுப்பானவர்களாக முடியும். உண்மையில், ஏனைய விடயங்கள் அனைத்திற்கும் ஒரு நிரந்தரமான, படைப்பாக்கச் செயற்பாட்டு ஊடகமாக ஆசிரியர்களுக்குச் சித்திரம் பயன்படும்.

சித்திரத்தின் மூலம் பிள்ளை அடையும் படைப்பாக்கத்திறன் எல்லாப் பாடங்களையும் கற்றுக்கொள்ள, கற்பிக்கப் பயனுடையதாக அமையும். பார்ப்பதற்கூடாக, கேட்பதற்கூடாக மட்டுமல்லாது பிள்ளை செயற்படுவதற்கூடாகக் கண்டுபிடிக்கும் விடயங்களே கற்றல் என்பதாகக் குறிப்பிடுகின்றனர். இங்கு செயற்படுவதுதான் முக்கியம்; முடிப்பதல்ல. செயற்படும்போது ஏற்படும் அனுபவம் கற்றல் அனுபவம். இதுவே பிள்ளையில் நல்ல மாற்றம் ஏற்படவும் அவர்களை எதிர்கால உலகில் பொருத்தப்பாடுடையவர்களாக வாழவும் கற்றுக் கொடுக்கின்றது.

மழைநீர் தேங்கிய வீதியில் வாகனங்கள் ஓடி, வாகனங்களில் ஓயில் தெளித்து அவ்வெண்ணெய்ப் படிவம் சூரியஒளியில் பல வர்ணங்களையும் பிரதிபலித்துக் காட்டுவதை பள்ளிவிட்டுச் செல்லும் பிள்ளைகள் நன்கு கவனிப்பார்கள். இதனைப் பார்த்துவிட்டு ஆசிரியரிடம் சென்று கூறுவார்கள். மப்பும் மந்தாரமுமான மழைவேளையில் வானில் தோன்றும் வானவில்லைப் பார்த்து பிரமித்துச் சிரிக்கும் குழந்தையை நாம் அவதானித்து இருக்கிறோம். அத்துடன், சூரியன் மலைகளில் தானே மறைகிறான். மலையில்லாத இடத்தில் எப்படி மறைவான் என்ற வினாவுடன் நாடியில் கைவைத்து யோசிக்கும் பிள்ளையையும் நாம் அவதானித்து இருக்கிறோம்.

எங்கள் வீட்டுச் சூழலில் மரங்கள், செடிகள், கொடிகள், பறவைகள், பட்டாம்பூச்சிகள், சிலந்திப்பூச்சிகள் எனப்பல விடயங்களைக் கருத்தூன்றி அவதானிக்கும் பழக்கமும், நேரமும் எமது இயந்திரமான வாழ்வில் விடுபட்டுப் போய்விட்டன. ஆனால், எங்கள் குழந்தைகளுக்கும் அடிப்படையில் கற்றலை இவைதானே வழங்க வேண்டும். எனவே, அவர்களின் அவதானிப்பை ஊக்குவிக்கவும் அதனை வலுப்படுத்திப் படைப்பாக்கத்திறனை வளர்க்கவும் நாம் உதவுவது எவ்வாறு? சில வீடுகளில் சில பெற்றோர்கள் பாடசாலைப் பாடப்புத்தகங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களில் தமது பிள்ளைகள் ஈடுபடுவது கற்றல் அல்ல என்ற

அதீத மனப்பாங்கில் உள்ளனர். அதுவும் சித்திரம் வரைவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகவும் கருதுகின்றனர். "இனிப் பேப்பரையும் வர்ணத்தையும் தொட்டால் கையை முறித்துவிடுவேன்" என ஒருதாய் தனது ஆறு வயதுச் சிறுமியைக் கடிந்து கொள்வதைக் கண்டிருந்தும் நாம் மாறுதல் வேண்டும்.

குழந்தை தனது தாயின் கருவறையிலிருந்து புற உலகிற்கு வந்து விழுந்தவுடனேயே தனது பார்வைப் புலனூடாகச் சூழலை நோக்கத் தொடங்குகின்றது. வெளிச்சம், நிறம் என்பவை அதனது மூளையில் முதன் முதலில் பதிவை ஏற்படுத்திவிட, பிள்ளை கற்றலைத் தொடங்குகின்றது. பிறந்து ஒரு வயது வரையான குழந்தைகளில் கட்புல அசைவை, கண்களின் பிரமிப்பை அவதானித்தால் அக்குழந்தை சூழலிலிருந்து கண்டுபிடிப்பைச் செய்யத் தொடங்கி, தனது படைப்பாக்கத் திறனுக்கும், ஆளுமைக்கும் வலுச்சேர்ப்பதைக் காணமுடியும்.

2வயது தொடக்கம் 4வயது வரையான வயதுக் குழந்தைகளை நோக்கினால், அவர்களது கண்டுபிடிப்பு எல்லாமே வாயுடன் தொடர்புடையதாகவே அமைகின்றன. எதை எடுத்தாலும் பிள்ளை வாயிலேயே வைக்க முனைகிறது. பிள்ளைக்கு நாம் வர்ணக் கிரயோன் சோக்கையும், வெள்ளைத்தாளையும் கொடுத்தால் பிள்ளை முதலில் வர்ணத்தை தனது வாயிலேயே வைக்கின்றது. ஆனால், அதில் எதுவித சுவையும் இல்லை என்பதைக் கண்டுகொள்கின்றது. பின்னர், வர்ணத்தை இங்கும் அங்கும் தேய்த்துப் பார்க்கின்றது. பின்பு பிள்ளை கண்டுபிடிக்கிறது. வர்ணத்தைக் கடதாசியில் தேய்த்தால் அடையாளம் வரும் என்பதைக் கண்டு கொள்கின்றது. உண்மையில் இது ஒரு அடிப்படைக் கண்டுபிடிப்பு. இதுவே கற்றலாகின்றது. எனவே, கற்றல் என்பது வெறுமனே பாடநூல்களுடன் தொடர்புபட்டது என்ற அறியாமை நிலையிலிருந்து நிச்சயம் நாம் வெளிவருதல் வேண்டும்.

சித்திரம் உணர்வுகளின் மொழியாகும். சித்திரம் என்பது உணர்வின் வெளிப்பாடாகும். அது ஒரு மொழியாகும். சிறுவர்களும் சுதந்திரமாகத் தமது உணர்வு மொழியாக சித்திரத்தை வரையப் பயன்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும். சித்திரக் கல்வியியலாளர் விட்டான் லோவின் பீல்ட் (Vikton Lowen field) தனது **ஆக்கத்திறனுடைய மூளை வளர்ச்சி** என்ற நூலில் சிறுவயதில் சித்திரத்தைக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்வதனால் பிள்ளை எதையும் தானாகவே ஆக்கபூர்வமாகச் செய்யக்கூடிய மனிதனாகவும், திறமையுள்ளவர்களாகவும் உருவாகின்றான். அவ்வாறு அல்லாமல் சித்திரத்தை சிறுவயதில் பயிலாமல் எல்லாவற்றையும் கற்றாலும் ஒன்றையும் தானாகவே பிரயோகிக்க முடியாமல் இயலாமல் உளவளங்கள் அற்றவனாய்க் காணப்படுவான். இது நாம் எமது குழந்தைகளுக்குச் செய்யும் மிகக்கொடிய ஒரு விடயமாகவே இருக்கும் எனக் குறிப்பிடுகின்றார்.

போட்டியும் வேகமும் நிரம்பியுள்ள இந்த உலகில், பிள்ளைகளுக்குப் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளுக்கு அப்பால் ரியூசன் வகுப்புக்களும், விசேட கற்றல்களும் அத்தியாவசியமாகியுள்ளன. ஆனால் அவர்களுக்கு நிச்சயம் ஓய்வும் சந்தோஷமும் தேவை. இதை நாம் கருத்தில் கொள்கின்றோமா? இதனை எவ்வாறு பிள்ளைகளுக்கு வழங்க முடியும்?

வாரத்துக்கு ஒன்று, இரண்டுமணி நேரமாவது பிள்ளைகளை ஆக்கத்திறன் வேலைகளில் பெற்றோர் ஈடுபட அனுமதிக்க வேண்டும்; ஈடுபடுத்தல் வேண்டும். அவர்கள் தாங்களாகவே ஆக்கங்களைக் கண்டுபிடித்து செயற்பட வேண்டும். சித்திரத்தை வரைவது, வர்ணம் தீட்டுவது, களிமண் உருவங்களைச் செய்வது, கடதாசி உருக்களைச் செய்வது, துணிகளை வெட்டுவது போன்றவற்றுடன் அவர்கள் விரும்பிய சுயாதீன ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடச் சுதந்திரம் வழங்கப்படுதல் வேண்டும். இதிலே மிக முக்கிய விடயம், நாம் ஏதேனும் கருத்தைக்கூற முனையும்போது எமது உளமுதிர்ச்சி நிலையில் இருந்தே அக்கருத்து வெளிவரும். பிள்ளைக்கு அழகானதாக, விநோதமாகத் தெரிகின்ற ஒரு ஆக்கம் எமக்குப் பொருத்தமற்றதாகவும், அழகற்றதாகவும் தெரியலாம். ஆனால், சிறுவர் சித்திரம் என்பது சிறுவர்களின் உளவயதில் நின்று பார்க்கவேண்டிய ஒரு ஆக்கம் ஆகும் என்பதை எவ்வேளையிலும் நாம் மறக்கலாகாது.

ஒரு அழகான இயற்கைக் காட்சியை ஒரு சிறுவன் வரைந்து கொண்டிருந்தான். அவன் அதிலுள்ள மரங்களுக்கு வர்ணம் தீட்டியபோது, இலைகளைச் சிவப்பு நிறத்தில் தீட்டியுள்ளான். அதனைப் பார்த்த ஆசிரியர், "உனக்கு இலையின் நிறம் பச்சை என்பது தெரியாதா?" எனக் கடுமையாகக் கடிந்து கொண்டார்.

இது சரியானதா? இங்கு ஆசிரியர் தனது உளவயது நிலையில் நின்றே கருத்தைக்கூற முற்பட்டுள்ளார். அது மட்டுமன்றி, அவர் கொண்டிருக்கும் நிறம் பற்றிய கருத்தும் பிழையானதே. நிறம் என்பது, சூரியஒளியின் வேறுபாடுகளுக்கு ஏற்பவே துலங்குகின்றது. மாலை வெயிலில் மஞ்சளாகவும், சிவப்பாகவும், இரவு வேளையில் கறுப்பாகவும், நிலவில் வெளிராகவும் எவ்வாறு அவ்விலை காட்சியளிக்கின்றது என்பதை ஆசிரியர் புரிந்து கொண்டிருந்தாரானால், இது ஒரு பிரச்சினையான இருந்திருக்க மாட்டாது.

இன்னும் ஒரு மாணவன் சித்திரம் ஒன்றை வரைவதை ஆசிரியர் அவதானித்துக் கொண்டிருந்தார். மரங்கள், வீடுகள் என அவன் வரைந்து, வர்ணம் தீட்டிக் கொண்டிருந்தான். இறுதியில், வரைந்த சித்திரத்தின் மீது தண்ணீரை ஊற்றி வரைந்த சித்திரத்தை மங்கலாக மறைந்து போகும்வண்ணம் செய்தான். ஆசிரியருக்கு தூக்கிவாரிப் போட்டது. ஏன் இப்படிச் செய்தாய்? எனக்கேட்டபோது, அவனின் பதில் "அது ஒரு மழைக்காட்சி" என்பதாக இருந்தது. எனவே, சிறுவர்களின் எண்ணங்களும் கற்பிதங்களும் வேறானவை என்பதை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். பிள்ளைகள், தாமாகவே செயற்படட்டும். அவர்களே தாம் வரைந்து செயற்பட்டது என்ன என்று விளக்கட்டும். அவர்களை இயங்கவிடுவோம்.



படம் 2

எனவே, இச்சிறுவர் சித்திரத்தைத் தொகுத்து நோக்குமிடத்து, ஆக்கத்திறனும், சுதந்திரமாகச் செயற்படும் தன்மையும், பிள்ளையின் குணங்கள் பழக்கவழக்கங்களை விருத்தி செய்கின்றது. பிள்ளையின் சிந்தனைகள், உணர்வுகள், அறிவு என்பன நிர்ணயிக்கப்படுகின்றது. இவை பிள்ளையின் விவேகத்தையும், மனவெழுச்சியையும் சமநிலைப்படுத்துகின்றன எனலாம்.

ஆகவே, சிறுவர்களைச் சுயமாக இயங்கவிட்டு விடுவோம். தாமாகவே செயற்படட்டும். அவர்களது செயற்பாடுகள் அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கட்டும். அவர்களே செயற்பட்டது என்ன என்பதை விளங்கிக் கொள்ளட்டும். புதிய புதிய கண்டுபிடிப்புக்களை அவர்களே காணட்டும். தமது உணர்வுகளை எவ்வகையிலேனும் வெளிப்படுத்த முனையட்டும். சுயமான மனிதராக அவர்கள் நிச்சயம் வெளிப்படுவார்கள்.

உசாத்துணை நூல்கள்:-

1. புதிய சித்திரக்கலை - A.S.சற்குணராஜா
2. பல்வேறு கோணங்களில் வரைவது எப்படி? - மணிமேகலைப் பிரசுரம், ய.ஜமரல்
3. தூரிகைத் தூறல்கள் - யா/ தேசிய கல்வியியற் கல்லூரி

## ஓய்வு பெறுகின்றார்



எமது கலாசாலையில் 1972ஆம் ஆண்டு தொடக்கம் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றிவரும் திரு. கந்தையா சோதிலிங்கம் அவர்கள் 27.07.2008இல் தமது சேவைக்காலம் முடிந்து ஓய்வுபெறுகின்றார். அவரது எதிர்காலம் சிறக்கவும். அவர் தமது குடும்பத்தாருடன் சகல நன்மைகளும் பெற்று வாழவும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக் குடும்பம் வாழ்த்துகின்றது.



# தற்காலத்து ஈழத்து இசையின் நிறைகளும் குறைகளும்

செல்வி பதுமினி துரைசிங்கம்,
சங்கீதத்துறை,
2ஆம் வருடம்.

தற்காலத்தில் நமது ஈழத்து இசை எந்த நிலையில் உள்ளது? ஏற்பஒட்டுள்ள முன்னேற்றங்கள் யாவை? இசைத்துறையில் காணப்படும் விரும்பத்தகாத அம்சங்கள் எவை? இசைத்துறையை மேன்மையடையச் செய்ய என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்? என்ற விபரங்களை ஆராய்தல் மிகவும் அவசியம்.

அவ்வகையிலே தற்கால இசையில் காணப்படும் சிறப்பான அம்சங்களை எடுத்துநோக்கின், ஆரம்ப காலங்களில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரிடம் மட்டும் காணப்பட்ட இசை இன்று யாவருக்கும் உரிய ஒரு பொதுச் சொத்தாகக் கருதப்படுகிறது. சாதி, மத வேறுபாடின்றி ஆர்வமுள்ள, ஆற்றல் கொண்ட அனைவரும் இசையை இன்று கற்க முடிகிறது. பாடசாலைக் கலைத்திட்டத்திலும் இசை ஒரு பாடமாகப் புகுத்தப்பட்டு, பயிலப்பட்டு வருகிறது. இதைத்தவிர உயர்தர வகுப்பிலும் இசையை ஒரு பாடமாகப் பயின்று சிறப்புச் சித்தியடைந்தவர்களுக்கு மேலும் இசையில் உயர்பட்டம் வழங்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் இராமநாதன் அக்கடமி மற்றும் மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக் கல்லூரி என்பவற்றில் டிப்ளோமா பயிற்சிநெறியை முடித்த மாணவர்களுக்கு 'இசைக் கலைமாமணி' என்ற பட்டத்தையும் வழங்கி வருகின்றார்கள்.

1931ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வட இலங்கை சங்கீதசபை படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று வாய்ப்பாட்டு, வயலின், புல்லாங்குழல், வீணை, மிருதங்கம், நடனம், நாடகமும் அரங்கியலும், பண்ணிசை எனப்பல துறைகளில் தரம் 1 தொடக்கம் 6 வரை பரீட்சைகள் நடத்தி வருகின்றது. 1991ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியர் தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு ஆற்றுகைப் பரீட்சை ஒன்றையும் நடாத்தி 'கலாவித்தகர்' என்னும் பட்டத்தையும் வழங்கி வருகின்றது.

இசை ஆசிரியருக்குரிய பயிற்சியை வழங்கும் நோக்கில் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பவற்றில் இசை ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இசை ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்கால ஈழத்தின் இசையில் இசைமன்றங்கள் பெரும் பங்காற்றுகின்றன. அவ்வகையில் யாழ் ரசிகரஞ்சன சபா, அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், இளங்கலைஞர் மன்றம், அளவெட்டி இசைக்கலா மன்றம், இசை நடனக் கலைமன்றம், தென்மராட்சி இசைநடனக் கலைமன்றம், திருமறைக் கலாமன்றம், திருகோணமலை தட்சணகான சபை, கண்டி நுண்கலை மன்றம், மட்டக்களப்பு சங்கீதசபை, கொழும்பு சைவமங்கையர் கழகம், கொழும்பு சங்கீதசபை போன்றன குறிப்பிடத்தக்கன. இவ்வற்றினூடாக இசைப்போட்டிகள், கச்சேரிகள் என்பன நடத்தப்பட்டு வருகின்றன.

ஈழத்து இசைக்கலைஞர்கள் பலர் இந்தியா சென்று இசைத்துறையில் பயிற்சிபெற்று இன்று இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றி வருகின்றனர். இன்னும் பலர் வெளிநாடுகளில் சென்று இசைக்கச்சேரிகள் நடத்தி நமது நாட்டிற்குப் பெருமை தேடித்தந்து கொண்டிருக்கிறார்கள். பலர் இசைத்துறையில் முதுதத்துவமாணி, முதுமாணி போன்ற பட்டங்களைப் பெற்று இசையை வளர்த்து வருகின்றனர்.

இவ்வகையில் தற்கால இசையில் பல சிறப்பம்சங்கள் காணப்படினும், குறைகளும் காணப்படுகின்றன. பொதுவில் உண்மையான 'இசை ரசனை மக்களிடத்தில் குறைந்து காணப்படுகிறது. காரணம், பொறுமையாக இசையைக் கேட்டு, அதிலுள்ள அழகான அம்சங்களை ரசிக்கக்கூடிய தன்மை குறைந்துவிட்டது. கற்பனை இசையான இராகம், தானம், பல்லவி, கற்பனாஸ்வரம் என்பன பாடப்படுவதில்லை என்றே கூறலாம். இவற்றில் ஈடுபாடு குறைந்து வந்துள்ளது.

இசை கற்கும் மாணவர்களின் முக்கிய நோக்கம் பரீட்சையில் சித்தியடைவதாகவே உள்ளது. நமது கலைத்திட்டத்திலும் அறிமுறைப்

பாடங்களுக்கே பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் இசையில் அறிமுறைப்பாடங்களில் மாத்திரம் திறமையுடன் செயற்பட்டு, பாடும் திறனில் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் இன்று சங்கீத ஞானம் உள்ள இளம் உள்ளங்களைத்தேட வேண்டியுள்ளது.

புதுமை என்ற பெயரில் இன்றைய சமுதாயம் புதிய நவீன மெட்டுக்களுடன் கூடிய சங்கீதத்தையே விரும்புகின்றது. ஒரு குருவின் வாயால் வரும் சங்கதிகளைக் காதால் கேட்டு எழுதி மனனம் செய்து அப்பியாசித்த காலம் போய், ஒலிப்பதிவு நாடாவில் பதித்து அதையே போட்டுப் போட்டு ஒரு குருவின் துணையின்றிக் கீறல் விழுந்த றெக்கோர்ட் போல் பாடும் திறன் மாணவர் சமூகத்தில் மேலோங்கிவிட்டது. இதனால் குரு சிஷ்ய பரம்பரை அதாவது குருவை மதிக்கும் திறன் இன்று இல்லையென்றே கூறலாம். மேற்கத்திய இசை, சினிமா மோகம் கர்நாடக இசைத்துறையின் தனித்துவத்தைப் பாதிப்படையச் செய்து வருகிறது என்றே கூறவேண்டும். இசைக்கலப்பு ஒரு கலகலப்பை கிளுகிளுப்பை உண்டு பண்ணினாலும், கர்நாடக சங்கீதத்தின் மகத்துவத்தைக் குறைத்து வருவதைக் காணலாம்.

ஈழத்து இசைக் கலைஞர்களில் அனேகமானோர் பட்டங்களைப் பெறுவதுடன், பின்னர் அதற்கேற்ப உத்தியோகங்களைப் பெற்றுக் கவனத்துடன் தங்களது கலைப்பணியை, இசைப்பணியை நிறைவுசெய்து கொள்கின்றனர். ஈழத்திலே தற்காலத்தில் இசை நிகழ்ச்சிகள் நடைபெறுவது அபூர்வமாகவே காணப்படுகிறது.

முற்காலத்தில் மக்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இசை பின்னிப் பிணைந்து காணப்பட்டது. தற்காலத்தில் இவை பின்பற்றப்படுவதில்லை. தேவாரங்கள் பாடுவதற்குக்கூட பலரும் முன்வருவதில்லை. இன்றைய காலகட்டத்தில் பண்ணிசை படும்பாடு மிகவும் வேதனைக்குரியதாகும். தேவாரப் பாடல்களைப் பாடுகின்றபோது எழுத்துப்பிழைகள், பொருட்பிழைகள், உரிய பண்ணில் பாடாது ஒரே பண்ணில் எல்லாவற்றையும் பாடுதல், தமது இஷ்டப்படி பாடுதல் போன்ற பல குறைபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பிடத்தக்க சில ஆலயங்களைத் தவிர ஏனைய ஆலயங்களில் பண்ணிசைக்குரிய இடம் கொடுக்கப்படுவதில்லை.

இவ்வகையிலே தற்கால ஈழத்து இசையின் தரம் குறைவடைந்து வருகின்றது. இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்ய, இசை பயிலுவோர் அதனை முழு ஈடுபாட்டுடன் பயின்று அதன் தரம் குறையாத வகையில் வளர்க்க வேண்டும்.

---

### ஐ.நா. வின் செயலாளர் நாயகங்கள்

1. டிரிக்வி லீ [நோர்வே] - 1946 பெப்ரவரி - 1952 நவெம்பர்
2. டாக்டர் ஹமார்ஷோல்ட் [சுவீடன்] - 1953 ஏப்ரல் - 1961 செப்ரெம்பர்
3. ஊதாண்ட் [மியான்மார்] - 1961 நவெம்பர் - 1971 டிசெம்பர்
4. குர்ட் வால்ட்ஹெய்ம் [ஆஸ்திரியா] - 1972 ஜனவரி - 1982 டிசெம்பர்
5. ஹாவியர் பெரஸ்ரி குவெல்யர் [பெரு] - 1982 ஜனவரி - 1991 டிசெம்பர்
6. பூட்ரஸ் பூட்ரஸ் காலி [எகிப்து] - 1992 ஜனவரி - 1996 டிசம்பர்
7. கோபிஅனான் [கானா] - 1997 ஜனவரி - 2006 டிசம்பர்
8. பான்கீமூன் [தென்கொரியா] - 2007 ஜனவரி -

### உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள்

1966 கோலாலம்பூர் (ஏப்ரல் 16-23)
1968 சென்னை (ஜன 3-10)
1970 பாரீஸ் (யூலை 15-18)
1974 யாழ்ப்பாணம (ஜன 3-9)
1981 மதுரை (ஜன 4-10)
1987 கோலாலம்பூர் (நவ 15-19)
1989 மொரிசியஸ் (டிச 4-8)
1995 தஞ்சாவூர் (ஜன 1-5)



# எமது பிரதேசத்தில் சிக்கன கடன்வழங்கும் நிறுவனத்தின் சமாசம் முதுகெலும்பாக இருக்கிறது.

செல்வி அமுதசுரபி வேலுப்பிள்ளை,
ஆரம்பக் கல்வித்துறை,
2ஆம் வருடம் 'E'.

'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதற்கிணங்க சிக்கனமாக எமது வாழ்க்கையை ஓட்டுவது மனித வாழ்வில் சிறந்த முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாக அமைகின்றது. அந்த வகையில் எமது வாழ்க்கையில் எல்லா நாட்களிலும் வசதியாக வாழமுடியாது. ஏனெனில், நாளுக்கு நாள் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இச்சிக்கல்களில் உதவுவதற்காகச் சில நிறுவனங்கள் கிராமங்களில் இயங்கி வருகின்றன. அவற்றுள் ஐக்கிய நாணயசங்கம், மகளிர் முன்னேற்றச்சங்கம், கிராம அபிவிருத்திச்சங்கம் போன்றவை குறிப்பிடத்தக்கன. ஆனால் இவற்றுள் முக்கியம் பெறுவது ஐக்கிய நாணயச்சங்கம் ஆகும். இச்சங்கத்தின் மூலம் பல ஏழை மக்கள் சிக்கன வாழ்க்கையை நடத்துவதற்கான கடன்களைப் பெற்றுக் குடிசைக் கைத்தொழில்கள் செய்து தமது அன்றாட வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். கிராமத்தில் வாழ்பவர்களில் அநேகர் விவசாயிகளாகவே காணப்படுகின்றனர். எனவே, அவர்களுக்கு அடிக்கடி பணம் தேவைப்படுகிறது. ஆகவே, கடன்வழங்கும் நிறுவனங்களின் மூலமே பணத்தைப் பெற்று விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் பல்வேறு கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் நன்மையடைகின்றனர். இந்தச் சமாசங்கள் மூலம் மக்களிடையே விட்டுக்கொடுப்பு, ஒற்றுமை, புரிந்துணர்வு, கூட்டுறவு போன்ற பண்புகளும் வளர வாய்ப்பேற்படுகிறது.

1982ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து அவற்றை வலுவூட்டி, கிராமியப் பொருளாதார கட்டுமான அமைப்பாக இச்சங்க்ங்களை வழிநடத்தும் நோக்கில் தோற்றம் பெற்றதே யாழ் மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் ஆகும். இச்சமாசம் தனது நோக்கத்தின்பால் கால் நூற்றாண்டுகள் கடந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கூட்டுறவுச் சமாசங்கள் உயரிய நோக்கங்கள் பல கொண்டு இயங்குகின்றன. அவற்றுள் கூட்டுறவே நாட்டுயர்வு, கூடிவாழ்தல் கோடி நன்மை. சுய உதவி, பரஸ்பர உதவி, சிக்கனமே சேமிப்பு, ஒற்றுமை ஐக்கியம் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுதல் போன்றன சிலவாகும்.

"சிக்கனமே சிறந்த செல்வம்" என்ற உணர்வு தமிழ் மக்களுடன் கூடிப்பிறந்த ஒன்றாகும். அதனை மேம்படுத்த சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் சிக்கனத்தைப் பழகவும், சேமிப்பை அதிகரிக்கவும் சேமித்த பணத்தைப் பாதுகாக்கவும் குறைந்த வட்டியில் அபிவிருத்திக் கடன்களைப் பெறவும் செய்கின்றன. இச்சமாசங்களின் சிறப்பியல்புகள் பல காணப்படுகின்றன. அதாவது சட்ட ரீதியான அமைப்பாகக் காணப்படுவதோடு நேரடியான வழிகாட்டல், ஒத்துழைப்பு, வாய்ப்பு, உண்மை கொண்டு எமது பிரதேச நிதியை நாமே பயன்படுத்தவல்ல அமைப்பாகக் காணப்படுகின்றன.

இந்தக் கூட்டுறவுச் சமாசங்களின் தொழிற்பாடுகளில் சேமிப்புத்திட்டங்கள், மரண சகாயத்திட்டம், கடன்வழங்கல் திட்டம், கல்வித்திட்டங்கள், கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் போன்றவை உள்ளடங்குகின்றன. இவற்றினால் சாதாரணமான மக்கள் சிறந்த வாழ்க்கையை மேற்கொள்ள வழிவகுக்குகின்றன. எனவேதான், கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சமூகத்தின் அடிப்படையில் முதுகெலும்பாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரிய மாணவர் மன்ற அறிக்கை (2007 - 2008)

| | |
|---|---|
| காப்பாளர் | :- திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (முதல்வர்) |
| சிரேஷ்ட மாணவத் தலைவர்கள் | :- திரு. நாகச்சந்திரன் செல்வச்சந்திரன் |
| | திருமதி பிரபாஜினி மயிலாஷன் |
| உதவி மாணவத் தலைவர்கள் | :- திரு. செல்லப்பா சிவனேசன் |
| | திரு. சின்னப்பு ஸ்ரீசுதாகரன் |
| | செல்வி பெனிற்றா ஜெயந்தி யோசெப் |
| | திருமதி தேவகி கோபாலச்சந்திரன் |
| இணைச் செயலாளர்கள் | :- திரு. பாலசுந்தரம், ஐங்கரன் |
| | செல்வி ரதனி செல்லையா |
| பொருளாளர் | :- திரு. விசாகப்பெருமாள் ஜெயரூபன் |
| நிதி இணைப்பாளர் | :- செல்வி சுபத்திரா கணபதிப்பிள்ளை |
| வங்கி இணைப்பாளர் | :- திரு. சகாதேவன் ஈஸ்வரன் |

ஆசிரிய மாணவ மன்றமானது கலாசாலையின் பண்பாட்டு விழுமியங்களைப் பேணி நடப்பதற்கும், ஆசிரிய மாணவர்களை நேரியபாதையில் வழிநடத்துவதற்கும், அவர்களின் வசதிவாய்ப்புக்களை மேம்படுத்தவும், இன்பதுன்பங்களில் பங்குபெறவும் உறுதுணைபுரிந்து வருகின்றது. கலாசாலையில் நடைபெறும் ஏனைய மன்றங்களின் நிகழ்ச்சிகள், விழாக்களுக்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் தக்கநேரத்தில் வெகுசிறப்பாக வழங்கி வருகின்றது.

இம்மன்றமானது, நடப்பு வருடத்தில் முன்னாள் முதல்வர் திரு. மு.பரஞ்சோதி அவர்களின் பிரிவுபசார விழா, புதிய ஆசிரிய மாணவருக்கான வரவேற்புவிழா, உலக ஆசிரியர்தின விழா என்பவற்றைச் சிறப்பாக நடத்தியதுடன், ஆசிரிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் சமகாலக் கல்விக் கருத்தரங்குகள், டெங்கு ஒழிப்பு, பெண்ணுரிமை, மருத்துவம் போன்ற கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், இலவச மருத்துவப் பரிசோதனைக்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன், யாழ் போதனா வைத்தியசாலையில் இருமுறை கலாசாலை மாணவர்கள் இரத்ததானம் செய்யவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் ஆசிரிய மாணவர்களின் நன்மை தீமைகளில் பங்குகொண்டமையும் குறிப்பிடத்தக்கது. மன்றத்துக்குத் தேவையான நிதியுதவிகளைத் தந்துதவிய அனைத்து ஆசிரிய மாணவர்களுக்கும், எமது மன்றத்தில் காணப்படும் குறைநிறைகளைச் சுட்டிக்காட்டி எம்மை வழிநடத்திய அதிபர், பிரதிஅதிபர், விரிவுரையாளர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, கலாசாலையின் உயர்விற்கு என்றென்றும் துணைபுரிவோம் என உறுதி கொள்கின்றோம்.

ப.ஐங்கரன், செ.ரதனி
மாணவர்மன்றச் செயலாளர்கள்.

# முத்தமிழ் மன்றம் ஆண்டறிக்கை (2007 - 2008)

| | | |
|---|---|---|
| பெருங்காப்பாளர் | :- | திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி |
| மன்றக்காப்பாளர் | :- | செல்வி விக்னேஸ்வரி கந்தசாமிஐயர் |
| மன்றத்தலைவர் | :- | திரு. செ.வினோத்குமார் |
| இணைத்தலைவர் | :- | திரு. கி.சுபாஸ் |
| | | திரு. கு.மயூரன் |
| மன்றச் செயலாளர் | :- | செல்வி ம.தயாநிதி |
| உபசெயலாளர் | :- | திரு. நி.ஜெகானந்தன் |
| மன்றப் பொருளாளர் | :- | திரு. ச.ஈஸ்வரன் |
| உபபொருளாளர் | :- | செல்வி க.லதா |

*"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"*

முத்தமிழ்க் கலைகளை ஆசிரிய மாணவரிடத்து மேம்படுத்தும் நோக்குடன் செயற்படுகின்ற முத்தமிழ் மன்றமானது இவ்வருடம் சிறந்த முறையில் செயலாற்றிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.

*"பாட்டுத் திறத்தாலே இவ்வையகம் பாலித்திடப்"* பாடிய பாரதிக்கு விழா எடுத்தோம். முத்தமிழ் விழாவினை முன்னிட்டு ஆசிரிய மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக்கேடயங்கள், சான்றிதழ்கள், புத்தகங்கள் என்பவற்றை வழங்கினோம்.

ஆசிரிய மாணவர்களின் நடிப்பாற்றலை வளர்க்கும் வகையில் முத்தமிழ் மன்றத்தினால் நாடகப் பட்டறைச் செயற்பாடு இருநாட்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்பட்டது.

இருநாட்களும் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவிற்கான சகல செயற்பாடுகளையும் தடையின்றி நிறைவேற்ற எமக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிய எமது மன்றக்காப்பாளர் அவர்களுக்கும், சகல வழிகளிலும் மன்றத்தின் வளர்ச்சிக்கு ஒத்தாசை வழங்கிவரும் பெருமதிப்புக்குரிய கலாசாலை முதல்வர் அவர்களுக்கும், பிரதி அதிபர், விரிவுரையாளர்கள் மற்றும் சக ஆசிரிய மாணவர்கள் ஆகியோருக்கும், அத்துடன் எமது மன்றத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் எமது மன்றத்தின் அழைப்பை ஏற்று நடுவர்களாக சிறப்பாகக் கடமையாற்றிய விரிவுரையாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் முத்தமிழ் மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செல்வி ம.தயாநிதி**
**மன்றச் செயலாளர்**



## முத்தமிழ் மன்ற அங்கத்தவர்கள்



## ஆரம்பக்கல்வி மன்ற அங்கத்தவர்கள்



# ஆரம்பக்கல்வி மன்ற அறிக்கை (2007 - 2008)

| | | |
|---|---|---|
| பெரும் காப்பாளர் | :- | திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி |
| மன்றக் காப்பாளர் | :- | திருமதி கலா மகேந்திரன் |
| மன்றத் தலைவர் | :- | திரு. த.பிரபாகரன் |
| உபதலைவர் | :- | திரு. ப.பிரதாபன் |
| மன்றச் செயலாளர் | :- | செல்வி இ.கனிமொழி |
| மன்றப் பொருளாளர் | :- | செல்வி பு.சுதர்சினி |

பிள்ளைகளின் வாழ்வு கல்வியில் தங்கியுள்ளது. அதிலும் ஆரம்பக் கல்வியினூடாகத்தான் வாழ்க்கைக்கான உறுதியான அத்திவாரம் இடப்படுகின்றது. கற்றலினூடாகத்தான் ஒரு பிள்ளையில் நிரந்தரமானதொரு நடத்தை மாற்றத்தினைக் கொண்டு வரலாம். அந்த வகையில் மாணவர்களின் கற்றலுக்கு மூலாதாரமாக விளங்குபவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே. இந்த ஆசிரியர்களை வளப்படுத்தும் களமாக அமைவது எம் ஆரம்பக்கல்வி மன்றமாகும். இம்மன்றமானது, ஆசிரிய மாணவர்களின் பயிற்சிக் காலத்தை பூரணமாக நிறைவு செய்யத்தக்க வகையில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலைகளில் கவின்கலை மற்றும் ஆக்கத்திறன் தொடர்பான செயற்பாடுகளைத் திட்டமிடலும், இத்திட்டத்தை வகுப்பு மட்டத்தில் வருட இறுதியில், தவணை இறுதியில் நடனம், இசை, நாடகம், கைப்பணி போன்ற துறைகள் சார்ந்த செயற்பாடுகள்மூலம் நடைமுறைப்படுத்த முயன்றமையும் குறிப்பிடத்தக்க மன்ற முயற்சிகளாகும். எம்மன்றத்தினால் ஆக்கச் செயற்பாடுகள் தொடர்பாக 28.11.2007 - 30.11.2007வரை சித்திரம் வரைதலுக்கும், 24.04.2008 - 25.04.2008வரை களிமண் ஆக்கம், துணி அலங்காரம் போன்றவற்றுக்கும் செயலமர்வுகள் நடைபெற்றன. இச்செயற்பாடுகளினூடாக ஆசிரிய மாணவர்கள் தமது திறன்களை வளர்த்துக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.

இன்றைய உலகம் நவீன காலத்தின் தேவைக்கேற்ப ஆசிரியர்களிடமிருந்து பல புதுமைகளை எதிர்பார்க்கின்றது. அந்த வகையில் பாடசாலைகளிலும் அதன் சுற்றாடலிலுள்ள வளங்களை இனங்காணவும் பல்வேறு பாடங்கள் தொடர்பான மாற்றம் அடையும் அறிவு பற்றிய விளக்கத்தைப் பெறவும் பாடவிதான அபிவிருத்திக்கான கற்பித்தல் முறையை இனங்காணவும், நவீன உபகரணங்களைக் கையாள அவசியமான திறன்களைப் பெறவும், ஆசிரிய மாணவர்களின் சுய ஆற்றல்கள், திறமைகளை வெளிக்கொணரும் நோக்கிலும் ஆரம்பக்கல்வி மன்றத்தால் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டு 22, 23.05.2008 ஆகிய இருநாட்கள் நடைபெற்றது.

ஆரம்பக்கல்வி மன்றத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் விழாவை ஒட்டி நடைபெறும் போட்டி நிகழ்ச்சிகள் இவ்வாண்டும் நடைபெற்றன. கலைத்திறன் போட்டிகளாக கிராமிய, ஆங்கில அபிநயப் பாடல்கள், தனி, குழு நடனங்கள், பொம்மலாட்டம், சிறுவர் நாடகம், இசைத்திறன் போன்ற பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. அத்துடன் ஆசிரிய மாணவர்களால் வகுப்பு ரீதியாக ஆக்கப்பட்ட பாடல்கள், அனைவரும் பயன்பெறும் வகையில் பாடற் புத்தகமாக இவ்வாண்டும் வெளியிடப்பட்டது.

மேலும், எமது மன்றத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்கும், வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து பல்வேறு வகையில் உதவிய கலாசாலை முதல்வர், பிரதி முதல்வர், எமது மன்றத்தின் காப்பாளர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றியினை மன்றத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ.கனிமொழி
மன்றச்செயலாளர்

# உடலாளர் மன்றம் (2007 - 2008)

| | | |
|---|---|---|
| பெருங்காப்பாளர் | :- | திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி |
| காப்பாளர் | :- | திரு. வே.கா.கணபதிப்பிள்ளை |
| உபகாப்பாளர் | :- | திருமதி அன்பரசி கருணாகரன் |
| | :- | திரு. சரா புவனேஸ்வரன் |
| மெய்வல்லுனர் குழுத்தலைவர்கள் | :- | திரு. சோ.சிவதாசன் |
| | :- | திருமதி மோ.தவநிதி |
| மெய்வல்லுனர் குழு இணைச்செயலாளர்கள் | :- | திரு. ஜெ.ஞானசீலன் |
| | :- | செல்வி ப.ஜெயவதனி |
| பொருளாளர் | :- | திரு. த.அன்பழகன் |
| பெருவிளையாட்டுத் தலைவர்கள் | :- | திரு. சி.இரத்தினஜோதி |
| | :- | செல்வி சி.சுகாசினி |

எமது கலாசாலையில் பயிற்சி பெறுகின்ற ஆசிரிய மாணவர்கள் தமது துறைசார் பயிற்சியுடன் மட்டும் நின்றுவிடாது தமது ஏனைய துறைசார் வாண்மையினையும் விருத்தி செய்யும் பொருட்டு பல்வேறு பயிற்சிகளையும் பெற்று வருகின்றனர். அதில் முதன்மையாக விளங்குவது உடற்கல்வி சார்ந்த பயிற்சியாகும். பாடசாலைகளில் விளையாட்டுத் துறையின் முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு எமது கலாசாலையில் பயில்கின்ற அனைத்து ஆசிரிய மாணவர்களும் உடலியல்சார் பயிற்சியில் ஆர்வத்துடனும் விருப்புடனும் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் எமது உடலாளர் மன்றத்தினால் பல்வேறுபட்ட செயற்திட்டங்கள் நடப்பாண்டில் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

ஆசிரிய மாணவர்கள் தமது உடற்கல்வித் திறனை வளர்த்துக்கொள்ளும் பொருட்டு தினமும் காலையும் மாலையும் பல்வேறுபட்ட விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பயிற்சிகளை எமது உடலாளர் மன்றக் காப்பாளர், உபகாப்பாளர்கள் ஆகியோர் சிறப்பாக நெறிப்படுத்தி வருகின்றனர்.

கடந்த 2007ஆம் ஆண்டு எமது கலாசாலையில் பயிற்சிக்காக இணைந்து கொண்ட புதுமுக மாணவர்களுக்கு சிறந்த முறையில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்த போதிலும் அவர்களுக்கான விளையாட்டு நிகழ்ச்சியினைப் பஞ்ச நிகழ்ச்சியாக ஒழுங்கமைத்து அனைவரும் விளையாட்டுக்களில் பங்குகொள்ளும் வகையில் சிறப்பாக நடாத்தப்பட்டது. பின்னர் 19.02.2008 அன்று கலாசாலையின் அனைத்து ஆசிரிய மாணவர்களும் பங்குகொள்ளும் வகையில் இல்லங்களுக்கு இடையிலான வருடாந்த தடகள மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டியும் மிகவும் சிறந்த முறையில் நடாத்தப்பட்டது.

மேலும், கலாசாலை மட்டத்தில் ஆசிரிய மாணவர்கள் அனைவரும் பங்குகொள்ளக் கூடிய வகையில் கரப்பந்து, மென்பந்து, எறிபந்து, துடுப்பாட்டப் போட்டிகளும் நடாத்தப்பட்டன. அத்துடன் யாவற்றிற்கும் மகுடமாக சிநேகபூர்வ மென்பந்துத் துடுப்பாட்ட நிகழ்வு ஒன்றும் கலாசாலையின் விரிவுரையாளர்கள் அடங்கிய அணிக்கும், மாணவர் அணிக்கும் இடையில் சிறப்பாக நடாத்தப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

நாட்டில் நிலவும் அசாதாரண சூழல் காரணமாக உடலாளர் மன்றப்பயிற்சி நிகழ்வுகள் மந்த நிலைமை அடைந்திருந்தாலும் இயலுமானவரை சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எமது கலாசாலையின் சிறப்பு நிகழ்ச்சிகளில் ஒன்றான மரதன் ஓட்ட நிகழ்வு 2006ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இவ்வாண்டும் நடைபெறவில்லை. எனினும், எமது கலாசாலையின் சிறப்பு நிகழ்ச்சிகளில் ஒன்றாக இந்த ஓட்ட நிகழ்ச்சி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமது உடலாளர் மன்றக் கட்டடமானது பல்வேறு திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையைக் கொண்டிருந்தமையால், அனைத்து ஆசிரிய மாணவர்களும் தம்மால் இயன்ற பண உதவியை அளித்து அக்கட்டடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு 07.04.2008 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதற்கு பண உதவியை அளித்தவர்களையும் பல்வேறு ஒத்தாசைகளைப் புரிந்தவர்களையும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

நிறைவாக எமது உடலாளர் மன்றம் சிறப்பாகச் செயற்பட பல்வேறு வழிகளில் உறுதுணையாய் நிற்கின்ற எமது கலாசாலையின் முதல்வருக்கும், உடலாளர் மன்றக் காப்பாளர், உபகாப்பாளர்களுக்கும், ஏனைய விரிவுரையாளர்களுக்கும், அனைத்து ஆசிரிய மாணவர்களுக்கும், கல்விசாரா ஊழியர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை உடலாளர் மன்றத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உடல் உள ஆரோக்கியத்துக்கும், தனிமனித ஆளுமை விருத்திக்கும் உடற்பயிற்சி உந்து சக்தியாய் விளங்கும்.


**ஜெ.ஞானசீலன்**
**செயலாளர்**


## நுண்கலை மன்ற அங்கத்தவர்கள்



## உடலாளர் மன்ற அங்கத்தவர்கள்







# இந்துமா மன்ற அறிக்கை (2007 - 2008)

| | |
|---|---|
| பெருங்காப்பாளர் | :- திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி |
| காப்பாளர் | :- திருமதி அன்பரசி கருணாகரன் |
| தலைவர் | :- திரு. அ.குகதாசன் |
| உபதலைவர் | :- செல்வி க.சசிலேகா |
| செயலாளர் | :- திரு. இ.வீரவதனன் |
| உபசெயலாளர் | :- செல்வி இ.கடம்பவனவாசினி |
| பொருளாளர் | :- திரு. வே.கணேந்திரன் |

எமது கலாசாலையில் சைவநெறியும், தமிழ்ப்பண்பாடும் மேன்மை பெற்று நிலைத்திட நித்தமும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்துமா மன்றம் சமயப்பணிகளையும், சீரிய வாழ்வியல் பண்புகளையும், பல்திறன் ஆற்றல்களையும் வளர்த்துச் செல்கின்றது. இம்மன்றம் கலாசாலையில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் இலிங்கத்தை மூலமூர்த்தியாகக் கொண்ட சிவத்தலத்தினை பிரதான செயற்பாட்டுத் தலமாக கொண்டமைந்துள்ளது. இத்தலத்தில் நித்திய ஆலயக் கருமங்கள், வெள்ளிக்கிழமைகளில் சமயச் சொற்பொழிவுடன் கூடிய விசேட பூசையும் வழிபாடும், சமயப் பண்டிகைகள், புனித விரதங்கள் தொடர்பான சிறப்பு வழிபாட்டுப் பூசைகள், சமய குரவர்களது குருபூசைகள் என்பன விடுமுறைக் காலங்களிலும் மிகச்சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

ஆலயக் கருவறையும், பிள்ளையார் ஆலயமும் புனருத்தாரணம் செய்யப்பட்டு, மாபிள் பதிக்கப்பட்டு எண்ணெய் விளக்குகள், மின் விளக்குகள் என்பவற்றால் அலங்கரித்துப் புதுப்பொலிவு செய்யப்பட்டு, 2007 ஐப்பசி மாதம் முதன்முறையாகக் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டுள்ளது. அத்துடன் ஆலயச் சூழல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன் பூந்தோட்டம் அமைக்கும் முயற்சியும் இடம்பெறுகின்றது.

மிகப் பிரதானமாக நவராத்திரி விழாவினைச் சிறப்புற நிகழ்த்தும் இந்துமாமன்றம் இம்முறை புதுப்பொலிவுடன் விளங்கிக் கொண்டிருக்கும் சிவாலயத்தில் மிகச்சிறப்பாக விழாவை முன்னெடுத்துச் சென்றதோடு, விஜயதசமிக்கு இருநாள் முன்னதாக வாணிவிழாவைப் பெருங்கலை விழாவாகக் கொண்டாடியுள்ளது. இவ்விழாவுக்கு முன்னதாக கலாசாலை ஆசிரிய மாணவர்களது பல்திறன் ஆற்றல்களையும், சமய அறிவையும், சைவத்தமிழ்ப் பண்பாட்டையும் இனங்கண்டு வளர்த்துச் செல்லத்தக்க வகையிலான பேச்சு, புள்ளிக்கோலம் போடுதல், பூக்கோலம் போடுதல், கழுத்துமாலை கட்டுதல், ஆண்டாள் மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல், பஞ்சபுராணம் ஓதுதல், சகலகலாவல்லி மாலைப்பாடல் பாடுதல் ஆகிய துறைகளில் சைவசமய அறிவுப்போட்டிகள் வைத்து வெற்றியீட்டியோருக்கும், பங்குபற்றியோருக்கும் சான்றிதழ்களை கலைவிழாவில் வைத்து வழங்கப்பட்டது. இவ்விழாவில் ஆசிரிய மாணவன் திரு. செ.வினோத்குமாரினால் வடிவமைக்கப்பட்ட 6அடி உயரமுடைய கலைவாணி திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டு ஊர்வலமாக எடுத்துச்சென்று தற்போது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ஆறுமுகநாவலர் குருபூசையினை இம்முறை நிகழ்த்தியுள்ளதோடு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு கலாசாலைக் குடும்பத்தினரை இம்மன்றத்தினர் அழைத்துச்சென்று, கொடியேற்றம் தொடர்பான பூசையில் பங்களிப்புடன் பங்குபெறச் செய்யப்பட்டது. கடந்த காலத்தைப் போன்று இம்முறையும் இருபாலை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தில் 3ஆம் திருவிழாவினை நடத்தியதோடு மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர், சுந்தரர் குருபூசைகளை மிகச்சிறப்பாக மாகேஸ்வர பூசையுடன் நிகழ்த்தி வருவதுடன் திருவாசக முற்றோதலும் இடம்பெற்று வருகின்றது. சைவத்தையும் தமிழையும் தன்னிரு கண்களாகக் கொண்டு விளங்கும் இந்துமாமன்றம், அவை சமூகத்தில் வளர்ச்சியடைவதற்கு வசதியாக சமூக வைத்தியர்களான ஆசிரிய மாணவர்களை வழிப்படுத்தி வருகின்றது.

இவ்விதமாக அமையும் இம்மன்றத்தின் செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தகுந்த ஆலோசனைகளையும், வழிகாட்டலையும் முன்னெடுத்துவரும் கலாசாலை முதல்வருக்கும், எம்மன்றத்தின் செயலொழுங்குகளை நெறிப்படுத்திவரும் மன்றக் காப்பாளர் அவர்களுக்கும், சகலவிதமான ஒத்தாசைகளையும் நல்கி மன்ற வளர்ச்சியில் துணைபுரியும் விரிவுரையாளர்களுக்கும், எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் தோளோடு தோள்நின்று உதவிகளை நல்கிக் கொண்டிருக்கும் ஆசிரிய மாணவர்களுக்கும் எம்மன்றத்தின் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

கடந்த இரண்டு வருடகாலமாக எம் ஆலயத்தில் அர்ச்சகராகக் கடமைபுரியும் ஆசிரிய மாணவர் திரு. ஸ்ரீ.ஜெகானந்தசர்மா அவர்களது பணியினை நன்றியுடன் நினைத்துக்கொள்ளுகின்றோம். இதேவேளை பிரமாண்டமான கலைவாணித் தாயை வடிவமைத்த சக ஆசிரிய மாணவன் திரு. செ.வினோத்குமார் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

திரு. இ.வீரவதனன்,
மன்றச்செயலாளர்.

# கிறிஸ்தவ மாணவர் மன்றம் (2007 - 2008)

| | | |
|---|---|---|
| பெருங்காப்பாளர் | :- | திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (கலாசாலை முதல்வர்) |
| காப்பாளர் | :- | திரு. வீ.கருணலிங்கம் (விரிவுரையாளர்) |
| | | திரு. எஸ்.அந்தோனிப்பிள்ளை (பகுதிநேர விரிவுரையாளர்) |
| ஆன்மீகக் குரு | :- | அருட்பணியாளர் அருட்பணி த.த.மௌலிஸ் அடிகளார் (மறைக்கல்வி இயக்குநர், யாழ் மறைமாவட்டம்) |
| தலைவர் | :- | யோ.றொஷான் |
| உபதலைவர் | :- | சி.யேசுரட்ணம் |
| இணைத்தலைவர் | :- | சி.வின்சன்ராஜ் |
| செயலாளர் | :- | ஞா.கத்தரீன் றோசாந்தி |
| பொருளாளர் | :- | ம.சாமினி |

"நானே வழியும் உண்மையும் வாழ்வும்" என மொழிந்த ஆண்டவர் இயேசுவின் வழியிலே இருள் அகற்றும் ஒளியாக, உலகிற்குச் சிறந்த வழிகாட்டியாக வாழ, இறைவனால் அழைக்கப்பட்டவர்கள் கிறிஸ்தவ ஆசிரியர்கள். எமது கலாசாலையின் கிறிஸ்தவ மன்றமானது கிறிஸ்தவ மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சியிலே அரும்பணியாற்றி வருகின்றது. மாதத்தில் இரண்டு திருப்பலிகளும், வெள்ளிக்கிழமைகளில் வழிபாடுகளும், சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆசிரிய மாணவர்களின் வழிபாட்டுக்கு உதவியாகத் 'திருப்புகழ்மாலை' என்னும் சிறிய செபநூல் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆலய வழிபாட்டிற்குரிய திருவுடைகள், ஆலயப் பொருட்கள் என்பனவும் வழங்கப்பட்டன. 2ஆம் வருட ஆசிரிய மாணவி திருமதி பி.நிரஞ்சினியின் அன்பளிப்பால் ஆலயத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டது. எமது ஆன்மீக அருட்பணியாளர் மௌலிஸ் அடிகளாரின் வேண்டுகோளுக்கு இணங்க வருடாவருடம் மேற்கொள்ளும் பணியாகிய யாழ் மாவட்ட பரீட்சை வினாத்தாள் தொகுதிகள் எமது மன்ற உறுப்பினர்களால் திருத்திக் கொடுக்கப்பட்டன.

எமது கிறிஸ்தவ மன்ற நிகழச்சிகளில் மிகவும் சிறந்ததான கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா 2007.12.07 அன்று திருப்பலியுடனும் ஏனைய கலை நிகழ்ச்சிகளுடனும் சிறப்பாக நடைபெற்றது. இதற்குப் பிரதம விருந்தினராக அருட்தந்தை மத்தாயஸ் அடிகளாரும் (யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமியத்துறைத் தலைவர்), சிறப்பு விருந்தினராக பொது ஆன்மீக அருட்பணியாளர் யோன் மௌலிஸ் அடிகளாரும், திருநெல்வேலி பங்குத் தந்தை அருட்பணியாளர் சந்திரபோஸ் அடிகளாரும் கலந்து சிறப்பித்தார்கள். அத்துடன் திரு விவிலிய வினாவிடைப் போட்டி நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

வருடாவருடம் எமது கிறிஸ்தவ மன்றத்தால் மேற்கொள்ளப்படும் திரு யாத்திரைப் பயணமாக பருத்தித்துறை தும்பளை ஸ்தலத்திற்கு பயணம் மேற்கொள்ளப்பட்டு திருப்பலியும் தியானமும் நடாத்தப்பட்டது. எமது கிறிஸ்தவ மன்றத்தின் வளர்ச்சிக்கு ஆன்மீக அருட்பணியாளர் யோன் மௌலிஸ் அடிகளார் பல்வேறு வழிகளிலும் ஆற்றிவரும் உதவிக்கு எமது நன்றிகள் அவருக்கு உரித்தாகுக. அத்துடன் எமது மன்ற வளர்ச்சிக்கு உதவிபுரிந்துவரும் பெருங்காப்பாளர், காப்பாளர், விரிவுரையாளர், ஆசிரிய மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். இன்னும் எமது மன்றத்தின் பணிகள் மேன்மேலும் வளர்ச்சியடைந்து உவப்பான முறையில் ஒளிபெற்று வாழ வாழ்த்தி இறையாசிகளை வேண்டுகின்றோம்.

செல்வி ஞா.கத்தரீன் றோசாந்தி
மன்றச் செயலாளர்

## இந்துமாமன்ற அங்கத்தவர்கள்



## கிறிஸ்தவ மன்ற அங்கத்தவர்கள்



# நுண்கலைமன்ற அறிக்கை

| | | |
|---|---|---|
| பெருங் காப்பாளர் | :- | திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (முதல்வர்) |
| காப்பாளர்கள் | :- | திரு. செ.குமாரசாமி (விரிவுரையாளர்) |
| | | திரு. வீ.கருணலிங்கம் (விரிவுரையாளர்) |
| | | திருமதி சாந்தினி சிவநேசன் (விரிவுரையாளர்) |
| தலைவர் | :- | திரு. சி.இராஜேஸ்வரன் |
| செயலாளர் | :- | செல்வி து.பதுமினி |
| பொருளாளர் | :- | செல்வி ச.சுதர்ஷினி |

மனித மனங்களைப் பண்படுத்துவதற்காக இறைவனால் உருவாக்கப்பட்டவையே நுண்கலைகளாகும். இக்கலைகளை வளர்க்கும் வகையில் எமது கலாசாலையில் நுண்கலைமன்றம் செயற்பட்டு வருகிறது. நுண்கலைகளான நடனம், ஓவியம், இசை ஆகிய துறைகளுடன் ஆசிரிய மாணவர்களை உள்ளடக்கி அவ்வத் துறைகளில் துறைதோய்ந்த விரிவுரையாளர்களினால் வழிநடத்திச் செல்லப்படுகின்றது.

எமது கலாசாலையில் நிகழும் ஒவ்வொரு விழாவும் நுண்கலைமன்ற உதவியுடன் சிறப்புற நடத்தப்படுகின்றது. இந்த வகையில் ஒவ்வொரு நிகழ்வுக்கும் உரிய பதாதைகள் எழுதுவது முதல் படங்கள் வரைதல், கோலம் போடுதல், நிறைகுடம் வைத்தல் முதலிய செயற்பாடுகள் வரை எமது மன்றத்தால் நிறைவேற்றப்படுகின்றன. அதுமட்டுமன்றி, தீவகக்கல்வி வலையத்தினாலும், சமூகசேவை நிறுவனங்களாலும் நடத்தப்படும் போட்டிகளுக்கு எமது மன்றத்தினர் நடுவர்களாகப் பணிபுரிந்து சேவையாற்றியதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. எம்மன்றம் நேரடியான செயற்பாட்டினைவிட இணைச்செயற்பாடுகளிலேயே அதிகளவு பங்களிப்பினை ஆற்றிவருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இம்மன்றம் கலாசாலையில் செழித்தோங்கி வளர எமக்கு வழிகாட்டி நிற்கும் அதிபர், பிரதி அதிபர், காப்பளர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோருக்கும், எம்முடன் சகலவழிகளிலும் ஒத்துழைத்துக் கலாசாலையின் மேன்மைக்காகப் பாடுபடும் ஆசிரிய மாணவர்களுக்கும் நுண்கலை மன்றமானது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறது.

து.பதுமினி
மன்றச் செயலாளர்.



## ஓய்வு பெறுகின்றார்

எங்கள் கலாசாலையின் பிரதிஅதிபர் திரு. செ.செந்தில்மணி அவர்கள், தமது சொந்த விருப்பத்தின் பேரில் 01.06.2008முதல் சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார். கடந்த 15 ஆண்டுகாலமாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் மதிப்புக்குரிய விரிவுரையாளராகவும், கடந்த 5 ஆண்டுகள் பிரதிஅதிபராகவும் பணியாற்றிய அவரது எதிர்காலம் சிறப்பாக அமையவும், அவர் தமது குடும்பத்தாருடன் எல்லா நலன்களும்பெற்று நீடூழி வாழவும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகம் வாழ்த்துகிறது.

## ஆரம்பக்கல்வி இரண்டாம் வருடம் 'A'

**இடமிருந்து வலம் (இருப்பவர்கள்)**

1. திருமதி சிவாஜினி சந்திரகுமார் - அராலி வடக்கு, வட்டுக்கோட்டை
2. செல்வி சசிகலா முத்துவேலு - சாவகச்சேரி வடக்கு, கெருடாவில்
3. செல்வி ஜெயந்தி முத்துலிங்கம் - நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை
4. திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்)
5. திருமதி அன்பரசி கருணாகரன் (வகுப்பாசிரியர்)
6. திருமதி கிறிஸ்சாந்தி யூட்ஸ்யோகராஜ் - 11ஆம் வட்டாரம், நெடுந்தீவு
7. செல்வி நவீந்தினி நடேசமூர்த்தி - அன்னமார் கோவிலடி, இணுவில் கிழக்கு
8. திருமதி அஞ்சலின் நிரஞ்சினி அமலநாயகம் - நவாலி தெற்கு, மானிப்பாய்
9. செல்வி சசிகலா சின்னராசா - 6/1, மீனாட்சி அம்மன் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்

**இடமிருந்து வலம் 1ஆம் வரிசை (நிற்பவர்கள்)**

1. செல்வி ஜெயறூபி நல்லையா - வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
2. செல்வி தயாளினி சிறீகந்தராஜா - சந்தை வீதி, சங்கானை.
3. செல்வி குமுதினி பாலகிருஷ்ணன் - கரகத்தாம்புலம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
4. செல்வி நவரத்தின அம்மாள் சிவனருள்காந்தி - நெடிய காடு, வல்வெட்டித்துறை.
5. செல்வி ஆன் ஜெயஷர்மினி பேரின்பநாதன் - ஜோன்ராஜா வீதி, அச்சுவேலி.
6. திருமதி பொற்செல்வி பிறைசூடி - புலோலி தெற்கு, புலோலி.
7. செல்வி கனிமொழி இராசதுரை - திருக்குடும்ப கோயிலடி, மல்வம், உடுவில்.
8. செல்வி சுபத்திரா கணபதிப்பிள்ளை - 228, செம்மணி வீதி, நல்லூர்.
9. திருமதி குமுதினி ஏகாம்பரம் - பெரிய மணல், வலந்தலை, காரைநகர்.
10. திருமதி வத்சலா குணராஜா - 159, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை.

**இடமிருந்து வலம் 2ஆம் வரிசை (நிற்பவர்கள்)**

1. திரு. பத்மநாதன் பிரதாபன் - கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்
2. திரு. இசிதோர் தோமஸ் அஸ்வின் - 6ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு.
3. திரு. குணபாலசிங்கம் மயூரன் - உசன், மிருசுவில்.
4. திரு. இராசதுரை வீரவதனன் - தேவாலய வீதி, சங்கானை.
5. திரு. வேதநாயகம் கணேந்திரன் - அங்களப்பாய், இணுவில் கிழக்கு, இணுவில்.

# ஆரம்பக்கல்வி இரண்டாம் வருடம் 'B'

**இடமிருந்து வலம் (இருப்பவர்கள்)**

1. செல்வி தயாநிதி சங்கரநாராயணா - ஆலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை
2. செல்வி தேவராணி செல்லையா - இல.45, ராணி வீதி, நல்லூர்
3. செல்வி சுதர்ஜினி புஸ்பராஜா - அத்துளு அம்மன் கோவிலடி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
4. திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்)
5. செல்வி விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் (வகுப்பாசிரியர்)
6. திருமதி கவிதா பத்மதாஸ் - ஏழாலை கிழக்கு, ஏழாலை.
7. திருமதி தவவானதி சுதாகர் - கற்கோவளம், பருத்தித்துறை.
8. திருமதி வித்தியா பகீரதன் - சந்தை வீதி, உடுப்பிட்டி.
9. திருமதி கேதீஸ்வரி தனராஜ் - நாவலர் வீதி, மாதகல்.

**1ஆம் வரிசை (நிற்பவர்கள்)**

1. செல்வி ஜெயவதனி பவளகாந்தன் - குறுக்கு வீதி, கரணவாய் மத்தி, கரவெட்டி.
2. செல்வி சாமினி மரியரட்ணம் - தும்பளை வீதி, பருத்தித்துறை.
3. திருமதி உதயபாரதி ஜீவசீலன் - 5ஆம் வட்டாரம், நயினாதீவு.
4. செல்வி பாமினி புலேந்திரன் - பளவத்தை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
5. திருமதி ராகினி உமாசங்கர் - கந்தரோடை, சுன்னாகம்
6. செல்வி விஜயசொரூபி வேலாயுதபிள்ளை - இல.172, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
7. செல்வி தாரணி கணேசமூர்த்தி - நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
8. திருமதி எமரென்சியானா டினேஸ்குமார் - இல.30, தண்ணீர்த் தாங்கிவீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
9. செல்வி மணிமேகலா நடராசா - அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.
10. திருமதி காயத்திரி ஜெயநந்தன் - பிரதேசசபை ஒழுங்கை, மந்திகை, பருத்தித்துறை.
11. திருமதி வாசகி செல்வவேல் - மாரீசன் கூடல், இளவாலை.

**2ஆம் வரிசை (நிற்பவர்கள்)**

1. திரு. சிலுவைராசா வின்சன்ராஜ் - 4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.
2. திரு. நித்தியானந்தக் குருக்கள் ஜெகானந்தன் - முருகமூர்த்தி கோயில்வீதி, சங்கானை.
3. திரு. கணேசராசா ரவீந்திரராசா - 23, புறூடி முன்வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
4. திரு. சிவகுரு இரட்ணஜோதி - கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
5. திரு. நாகச்சந்திரன் செல்வச்சந்திரன் - ஆலடி, ஆனைக்கோட்டை.
6. திரு. அரிச்சந்திரன் குகதாசன் - பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.
7. திரு. சின்னப்பு சிறிசுதாகரன் - இல.100, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

# ஆரம்பக்கல்வி இரண்டாம் வருடம் 'C'

**இடமிருந்து வலம் (இருப்பவர்கள்)**

1. செல்வி ப.சந்தனா - கூவிலடி, புலோலி தெற்கு, புலோலி.
2. திருமதி பி.நிரஞ்சினி - 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
3. திருமதி ந.சந்திரவதனி - இரஜகாரியார் வீதி, மானிப்பாய்.
4. திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்)
5. திருமதி கலா மகேந்திரன் (வகுப்பாசிரியர்)
6. திருமதி கோ.தேவகி - ஆனந்தபவன், அல்வாய்.
7. செல்வி ப.தயாநிதி - நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
8. செல்வி க.சசிலேகா - தோப்பு, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.

**இடமிருந்து வலம் (நிற்பவர்கள் - பெண்கள்)**

1. திருமதி இ.றதீஸ்வரி - கைதடி வடக்கு, கைதடி.
2. செல்வி ச.தர்சினி - அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.
3. செல்வி த.சரோஜினி - கைதடி வடக்கு, கைதடி.
4. செல்வி மு.கீதா - மீசாலை மேற்கு, மீசாலை.
5. செல்வி க.கனிதா - மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.
6. செல்வி சோ.சியாமினி - இன்னாவத்தை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
7. செல்வி ப.குயின்சி - 19/1, றக்காவீதி, சுண்டிக்குளி.
8. திருமதி ஹ.ஹாயத்திரி - கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
9. செல்வி க.சிவச்செல்வி - கைதடி தெற்கு, கைதடி.
10. செல்வி ம.தயாநிதி - சந்தைவீதி, சுன்னாகம்.
11. செல்வி பே.புனிதகௌரி - கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**இடமிருந்து வலம் (நிற்பவர்கள் - ஆண்கள்)**

1. திரு. மு.நடராசா - அம்பனை, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.
2. திரு. ச.ஈஸ்வரன் - 46, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை.
3. திரு. சி.இராஜேஸ்வரன் - 6ஆம் வட்டாரம், நயினாதீவு.
4. திரு. த.அன்பழகன் - 20/1, பாரதிவீதி, கச்சேரி, யாழ்ப்பாணம்.

**படத்தில் இடம்பெறாதோர்**

றஜனி ஸ்ரீஸ்கந்தராஜா - வளலாய், அச்சுவேலி.

# ஆரம்பக்கல்வி இரண்டாம் வருடம் 'D'

**இடமிருந்து வலம் (இருப்பவர்கள்)**

1. செல்வி சுவர்ணா கதிரேசன் - சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
2. செல்வி அனுசியா இராசநாயகம் - ஏழாலை மத்தி, ஏழாலை.
3. செல்வி கடம்பவனவாசினி இரகுப்பிள்ளை - 5ஆம் வட்டாரம், நயினாதீவு.
4. அதிபர் திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்)
5. திரு. வீ.கருணலிங்கம் (வகுப்பாசிரியர்)
6. செல்வி துஸ்யந்தி நடராசா - சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.
7. திருமதி வசந்தி கனகநாயகம் - முதலைக்குழி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.
8. திருமதி அன்ரனிமரியசறினா லோறன்ஸ் - டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

**இடமிருந்து வலம் (நிற்பவர்கள்)**

1. செல்வி குமுதினி முருகையா - நீர்வேலி மத்தி, நீர்வேலி.
2. திருமதி தனலக்ஸ்மி செல்வரத்தினம் - அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
3. திருமதி புனிதமலர் கணேசதாசன் - 7ஆம் வட்டாரம், நயினாதீவு.
4. செல்வி சூரியகலா குலசேகரம் - 5ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
5. செல்வி லிங்கேஸ்வரி மகாதேவன் - 99, செல்வபுரம், வவுனிக்குளம்.
6. செல்வி பிரபாஜினி தவரத்தினம் - அரசடிவீதி, இருபாலை, கோப்பாய்.
7. செல்வி ரதனி செல்லையா - 4/2, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு.
8. செல்வி ஹேமவர்த்தனி நடராசா - பிராமனோடை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
9. செல்வி உஷாந்தினி கணேசு - கனகசபை வீதி, மானிப்பாய்.
10. செல்வி தாரணி தவேஸ்வரன் - 5ஆம் வட்டாரம், நயினாதீவு.
11. திருமதி கலைவதனி நவதீசன் - விடத்தல்பளை, மிருசுவில்.
12. திருமதி பாரதி மகேந்திரன் - தம்மணை, அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
13. செல்வி சுபாஜினி சுகுமார் - சந்தணத்தரை, உடுப்பிட்டி.
14. திரு. சிறில் யேசுரட்ணம் - 4ஆம் கட்டை, கட்டைப்பாலிவீதி, ஆனைக்கோட்டை.
15. திரு. சுந்தரமூர்த்தி திருமூர்த்தி - தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.
16. திரு. செல்வநாதன் வினோத்குமார் - 18/4, சீனியர்வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
17. திரு. சந்தனம் யோசெப் நிக்கலஸ் றொஷான் - உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
18. திரு. யேசுதாசன் தர்மதுரை - 8ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

**படத்தில் இடம்பெறாதோர்**

திருமதி ஜெயரூபி பாஸ்கரன் - மீசாலை வடக்கு, கொடிகாமம்.

# ஆரம்பக்கல்வி இரண்டாம் வருடம் 'E'

**இடமிருந்து வலம் (இருப்பவர்கள்)**

1. செல்வி ஜெயராணி பசுபதி - அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
2. செல்வி லதா கணேஸ்வரன் - பிள்ளையார் கோவிலடி, மாதகல்.
3. செல்வி கத்தரீன் றோசாந்தி ஞானசீலன் - நவாலி வடக்கு, மானிப்பாய்
4. செல்வி சுகாசினி சிவானந்த நடராசா - பொன்னம்பலம் வீதி, அல்வாய் கிழக்கு, அல்வாய்.
5. திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்)
6. திரு. ச.புவனேஸ்வரன் (வகுப்பாசிரியர்)
7. திருமதி மேரிடொறீனா றெஜி புவனேந்திரன் - 203/10, அசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
8. செல்வி சுமித்திரா நடராசா - கனால் வீதி, மாதகல்.
9. செல்வி ஜெஸ்மின் மரியதாஸ் - 2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.
10. திருமதி மேரிகார்மெலிற்றா அந்தோனிப்பிள்ளை - 11ஆம் வட்டாரம், நெடுந்தீவு கிழக்கு, நெடுந்தீவு.

**இடமிருந்துவலம் (நிற்பவர்கள் - பெண்கள்)**

1. செல்வி தயாளினி சின்னையா - நெல்லியோடை அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
2. செல்வி ஆனந்தகலாதர்சினி சிறீபதி - வளவாய் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.
3. செல்வி பெனிற்றா ஜெயந்தி யோசேப் - பெரியவிளான், இளவாலை.
4. செல்வி இந்துவாணி பரமேஸ்வரன் - 56/18, ஆத்திசூடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
5. திருமதி கார்த்திகா கமிலஸ் குணநாதன் - நந்தாவில்வீதி, தாவடி, கொக்குவில்.
6. செல்வி சுஜிதா கனகரத்தினம் - கோட்டைக்காடு, மல்லாகம்.
7. செல்வி அமுதசுரபி வேலுப்பிள்ளை - ஆவரங்கால் மேற்கு, நவக்கிரி.
8. திருமதி நாளினி அருள்லிங்கம் - 29/5, தேவாலய ஒழுங்கை, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
9. செல்வி யூட்ஸ் றொஷானி மனுவேல் - நல்லாயன் வீதி, இளவாலை.
10. செல்வி சகிலா சரவணை - 783/27, மானிப்பாய்வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.
11. செல்வி ஜெகநிதி கந்தசாமி - புத்தூர் வடக்கு, புத்தூர்.
12. திருமதி குமுதினி உதயகுமார் - அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
13. திருமதி மேரி ஜென்சில்டா யூட்ராஜ் - இல.6 2ஆம் குறுக்குத்தெரு குருநகர், யாழ்ப்பாணம்.
14. திருமதி பத்மவதனி ரங்கடம்பநாதன் - தேவாலயவீதி, மூளாய், சுழிபுரம்.

**இடமிருந்து வலம் (நிற்பவர்கள் - ஆண்கள்)**

1. திரு. விசாகப்பெருமாள் ஜெயரூபன் - 2ஆம் வட்டாரம், நயினாதீவு.
2. திரு. சோமசுந்தரம் சிவதாசன் - அரசடி ஒழுங்கை, புலோலி வடக்கு, பருத்தித்துறை.
3. திரு. கிருஸ்ணபிள்ளை சுபாஸ் - அல்வாய் தெற்கு, அல்வாய்.
4. திரு. தங்கராசா பிரபாகரன் - மாதகல் கிழக்கு, மாதகல்.
5. திரு. ஜெகநாதன் ஞானசீலன் - இணுவில் வீதி, மானிப்பாய்.
6. திரு. செல்லப்பா சிவனேசன் - புத்தூர் கிழக்கு, புத்தூர்.

**படத்தில் இடம்பெறாதோர்**

திருமதி தவநிதி மோகனரூபன் - 5ஆம் வட்டாரம், நயினாதீவு.

## 2ஆம் வருடம் நுண்கலைப் பிரிவு

**இடமிருந்து வலம் (இருப்பவர்கள்)**

1. செல்வி துரைசிங்கம் பதுமினி (சங்கீதம்) - காளிகோவிலடி, கோண்டாவில் மேற்கு.
2. திரு. செ.குமாரசாமி (வகுப்பாசிரியர்)
3. திரு. ஆ.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்)
4. திரு. வீ.கருணலிங்கம் (வகுப்பாசிரியர்)
5. திரு. பாலசுந்தரம் ஐங்கரன் (சித்திரம்) - வடலியடைப்பு, பண்டத்தரிப்பு

**இடமிருந்து வலம் (நிற்பவர்கள்)**

1. செல்வி யோன்ரவிராஜ் ஜசிந்தா (நடனம்) - இல.01, களுதாவளை, மட்டக்களப்பு.
2. செல்வி சண்முகானந்தராஜா சுதர்ஷினி (நடனம்) - செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு.
3. செல்வி கிறகோரி மேரிறீதா (மனைப்பொருளியல்) - புளியடி வைரவர் கோயில் வீதி, உடுவில் தெற்கு, சுன்னாகம்.

## ஆரம்பக்கல்வி முதலாம் வருடம்

**இடமிருந்து வலம் (இருப்பவர்கள்)**

1. திருமதி புஸ்பவேணி மணிவண்ணன் - சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
2. திருமதி மஞ்சுளா கேசவன் - பூதர்மடம், நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
3. திரு. சின்னத்துரை ஆனந்தராஜ் - சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடி, நவாலி, மானிப்பாய்.
4. திரு. ஆ.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்)
5. திரு. செ.திருநாவுக்கரசு (வகுப்பாசிரியர்)
6. திரு. இராசரத்தினம் முருகானந்தன் - 19/6, கலைப்புலவர்வீதி, யாழ்ப்பாணம்.
7. திருமதி சுமங்கலி குமாரறூபன் - அழகர்கொல்லை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
8. திருமதி உமாறஞ்சினி வெற்றிவேலுப்பிள்ளை - 5ஆம் வட்டாரம், நயினாதீவு.

**இடமிருந்து வலம் (நிற்பவர்கள்)**

1. திருமதி ஜான்சி சந்திரகுமார் - அளவெட்டி தெற்கு அளவெட்டி.
2. திருமதி ஜெயச்சித்ரா இலங்கேஸ்வரன் - நவாலி தெற்கு, மானிப்பாய்.
3. திருமதி கமலசோதினி ஜீவகன் - சுதுமலை வடக்கு, வெள்ளுவடிவீதி, மானிப்பாய்.
4. திருமதி ரஜனி ரங்கநாதன் - யூனியனடி, இமையாணன், உடுப்பிட்டி.
5. செல்வி றஞ்சினி கந்தசாமி - சிலம்பு புளியடிவீதி, சங்கானை.
6. திருமதி வதனி மயூரன் - பண்ணாகம், சுழிபுரம்.
7. திருமதி கேதீஸ்வரி அன்பரசன் - 4ஆம் வட்டாரம், நயினாதீவு.
8. திருமதி கற்பகராணி தர்மதாஸ் - கலாசாலைவீதி, திருநெல்வேலி.
9. செல்வி கருணைசீலி அலோசியஸ் - 70/2, கொழும்புத்துறைவீதி, பண்டியன்தாழ்வு.
10. செல்வி நர்மதா இராசையா - 239, சென்பெனடிக் றோட், அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
11. செல்வி அமிழ்தினி கந்தசாமி - 3ஆம் வட்டாரம் நயினாதீவு.

மெடி எயிட்ஸ் மருந்தகம்,
641, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
இருபாலைச்சந்தி,
கோப்பாய்.

மெடி எயிட்ஸ் வைத்தியசாலை,
689, பருத்தித்துறைச் சாலை,
முத்திரைச்சந்தை,
நல்லூர்.

## MEDI AID LABORATORY
## CLINICAL PATHOLOGY SERVICE

(Confidential Pathology Profile)

680, Point Pedro Road, Muththiraichanthai,
Nallur.



# MEDI AIDS PHARMACY

Dealers in
Pharmacutical Vetenary Products
Toiletries Cosmetics & Fancy Goods

**644, Point Pedro Road, Nallur, Jaffna.**
**Irupalai Junction, Kopay.**

Tele Link Communication
Nallur, Jaffna.
021 - 222 2183
021 - 222 3106 Fax : No 021 222 3106
Irupalai Junction, Kopay.
021 222 7295

Superior Photostat
646, Point Pedro Road,
Nallur Road,
Irupalai Junction.

எபனி முகவர் தபால் அலுவலகம்,
இருபாலைச்சந்தி,
கோப்பாய்.

EBANY
Agency Post office
Irupalai Junction, Kopay.
021 222 3559

கலைமலருக்கு எமது இனிய வாழ்த்துக்கள்

# சுப்பஸோ வீடியோ அன் டிஜிற்றல் கலர் லாப் ஸ்ரூடியோ





உங்கள் வீட்டில் மங்களகரமான வைபவங்கள் அனைத்தையும்
சிறந்த முறையில் நவீன டிஜிற்றல் தொழில் நுட்பத்துடன்
வீடியோ பிடித்திடவும் அதி நவீன டிஜிற்றல்
கமரா மூலம் போட்டோ பிடித்திடவும், டிஜிற்றல் அல்பம்,
டியூரோ பிறேம், மற்றும் அனைத்து புகைப்பட
தேவைகளும் குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
புகைப்படச்சுருள்களை மலிவாகவும்
உடனுக்குடனும் பெற்றுக் கொள்ளலாம்.





*198/6*, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

T. P:- 0212228443



கலைமலரின் புகழ் திக்கெட்டும் பரவட்டும்

# கட்டைவேலி – நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்





**எமது சங்கச் சேவைகள் :**
**நுகர்ச்சிச் சேவை**
**தரமான நூலக சேவை**
**கிராமிய வங்கிச் சேவை**
**புலமைப்பரிசில் வழங்கல்**
**வாடகைச் சேவைகள்**
**தரமான திரைப்படக்காட்சிக்கூடாக புதிய ரசனையை ஏற்படுத்துதல்**
**எரிபொருள் சேவை**
**விவசாய சேவை**
**நூல்வெளியீடும் விமர்சனங்களும்**
**கூட்டுறவுக் கலாசாரப் பெருமன்றம்**
**“சங்கம் செய்தி” மாதாந்த வெளியீடு.**

தொலைபேசி இலக்கம்
021 226 3263
021 226 4474
021 226 4725

தொலைநகல்
021 226 3263

கரவெட்டி

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்


கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 'கலைமலர்' சஞ்சிகை வெளியீட்டிற்கு

எமது ஆதரவுகள்

# பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

## எமது சங்க தொழிற்பாடுகள்

- நுகர்ச்சிப் பொருள் சேவை
- சுயதொழில் கடன் வழங்கல்
- கிராமிய வங்கி மூலம் சேமிப்பை வளர்த்தல்
- தரமான பாண்சாலை உற்பத்திப் பொருட்கள் தயாரித்தல்
- சுத்தமான நல்லெண்ணெய் தயாரித்தல்
- உழவு இயந்திர சேவை
- தொலைபேசி நிழற்பிரதிச் சேவை



கலைமலருக்கு எமது உளம் கனிந்த

நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக

# லிங்கஜன் றேடர்ஸ்

# LINGAJAN TRADERS

திருமணவிழா, பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் விழா,
அந்தியேட்டிக்கிரியைகள் போன்ற உங்களின் சகல விசேட
வைபவங்களுக்கும் நாளாந்தத் தேவையான பொருட்களையும் தரமான விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

282, HOSPITAL ROAD,
JAFFNA.

லிங்கன் றேடர்ஸ்
282, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

# இலங்கை வங்கியின் சிறுவர் சேமிப்புக் கணக்கு.

## ரண் கெகுளு
## வைப்பு செய்தவர்களுக்கு கிடைக்கும் விசேட தகமைகள்

- கூடுதல் வட்டி. சாதாரண சேமிப்பு வைப்புக்களை விட 1% கூடுதல் வட்டி

- ரூ.500,000 உச்ச வரம்புக்கு காப்புறுதிக் காப்பு பிள்ளையின் சார்பில் வைப்பை ஆரம்பித்தவர் முற்றாக ஊனமடைந்தால் அல்லது மரணமடைந்துவிட்டால் வைப்பில் உள்ள ஆகக் குறைந்த தொகையின் 10 மடங்கு காப்புறுதி கொடுப்பனவாக வழங்கப்படும். (ஒரு பிள்ளைக்கு ரூ.500,000 மற்றும் ஒருவர் ஆரம்பித்த சகல வைப்புகளுக்கு ரூ.1,000,000 உச்சவரம்பு காப்புறுதி காப்பு அவர் 70 வயதாகும் வரை கொடுக்கப்படும்.) அவர் முற்றாக ஊனமடைந்தால் வைப்பில் உள்ள ஆகக் குறைந்த தொகையில் 5 மடங்கு காப்புறுதி கொடுப்பனவாக வழங்கப்படும்.

- ரூ.10,000க்கு புலமைப்பரிசில் வருடம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் ரண்கெகுளு வைப்பை கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு இந்த வாய்ப்பு. (பரீட்சைக்கு தோற்றும் தினத்தில் பிள்ளையின் வைப்பில் ஆகக் குறைந்தது ரூ.2,500 இருத்தல் அவசியம்.)

- விபத்துக்களை அடுத்து வைத்திய காப்புறுதியாக உச்சவரம்பு ரூ.75,000 வழங்கப்படும். பிள்ளை திடீர் விபத்துக்குட்பட்டால் அல்லது காப்புறுதிக் காப்பில் சேர்க்கப்பட்டிருக்கும் 10 நோய்களில் ஏதாவது ஒன்றினால் பாதிக்கப்பட்டிருந்தால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் பின்வரும் தகைமைகளைப் பெற முடியும். பிள்ளை அரசாங்க ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதாயின் நாள் ஒன்றுக்கு ரூ.300 அடிப்படையில் ஆகக் கூடியது 30 நாட்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும். (விபத்து ஏற்பட்ட தினத்திற்கு 6 மாதங்களுக்கு முன்னர் இருந்து தொடர்ந்தும் வைப்பில் ஆகக் குறைந்தது ரூ.5,000 அல்லது அதற்கு கூடுதலான தொகை இருக்க வேண்டும்.)

- நாடெங்கிலும் நடைபெறும் வருடம் 5 ஹப்பனா புலமைப்பரிசில் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு.

- 18 வயதாகும் போது பிள்ளைக்கு விசேட தகமைகளுடன் 18+ இளைஞர் சேமிப்பு வைப்பில் இணைய முடியும்.

காப்புறுதி கொடுப்பனவை பெறுவதற்காக செய்யப்படும் சகல விண்ணப்பங்களையும் குறைந்த பட்சம் 6 மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட கிளைகளுக்கு அறிவிக்க வேண்டும். இந்த வைப்பு தொடர்பான தகமைகள் விதிமுறைகள் ஆகியவற்றில் மாற்றம் செய்தல், புதிய விதிமுறைகளை சேர்ப்பது அல்லது அவற்றில் திருத்தங்களை செய்யும் அதிகாரம் இலங்கை வங்கிக்கு இருக்கிறது.

# Sivan Motor Stores




NSB Pension+



NSB Pension+

தேசிய சேமிப்பு வங்கி
National Savings Bank
NSB

55 வயதைத் தாண்டிய வாழ்வுக்கு

தேசிய சேமிப்பு வங்கி

NSB Pension+

NATIONAL SAVINGS BANK
THIRUNELVELI.

உங்கள் ஓய்வுகால வாழ்க்கையைப் பற்றி நீங்கள் இன்னமும் யோசிக்கவில்லையா? இதுவே அதற்கான தருணம். உங்கள் வயோதிப காலம் வளமாகவும் இன்பகரமாகவும் அமைய வேண்டுமானால் இளமையாகவுள்ள இப்போதே அதற்கான ஏற்பாட்டைத் திட்டமிட வேண்டும்.

55 வயதைத் தாண்டிய பின்னர், நிலையான வருமானம் எதுவும் இல்லாமல் மற்றவர்களுக்குப் பாரமாக இருப்பதைத் தவிர்த்து, மனம் விரும்பியவாறு வாழ உங்களுக்கு உதவக்கூடிய ஓர் அற்புதமான ஓய்வூதியத் திட்டமே தேனுஜ பென்ஷன் பிளஸ். நீங்கள் இத் திட்டத்தில் முதலீடு செய்தால், உறுதியான வருமானம் ஒன்றையும் வேறு பல நன்மைகளையும் பெறுவீர்கள். ஆகவே, உங்கள் வயோதிப கால வாழ்க்கையை உங்கள் விருப்பப்படி அமைத்துக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ முடியும்.



NSB பென்சன் + என்றால் என்ன?
தேசிய சேமிப்பு வங்கியினால் அறிமுகப்படுத்தப்படும், பொதுமக்களுக்கான தனித்துவமான நன்மையைக் கொண்டு வரும் ஓய்வூதியத் திட்டம்
NSB பென்சன் + திட்டத்தில் சேரக்கூடியவர்கள் யார்?
16 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு இலங்கைப்பிரஜையும் பென்சன் + திட்டத்தில் சேரலாம்

NSB பென்சன் + என்றால் என்ன?
- தேசிய சேமிப்பு வங்கியினால் அறிமுகப்படுத்தப்படும், பொதுமக்களுக்கான தனித்துவமான நன்மையைக் கொண்டுவரும் ஓய்வூதியத்திட்டம்.

NSB பென்சன் + திட்டத்தில் சேரக்கூடியவர்கள் யார்?
- 16 வயதிற்குமேற்பட்ட எந்தவொரு இலங்கைப்பிரஜையும் பென்சன்+ திட்டத்தில் சேரலாம்.

NSB பென்சன் + திட்டத்தில் முதலீடுவது எவ்வாறு?
- இது நெகிழ்வான ஒரு திட்டம். உங்கள் வசதிகேற்ப தாங்கள் விரும்பும் எந்த நேரத்திலும் எந்தத் தொகையையும் முதலீடு செய்யலாம்.

மொத்த தொகை பணத்தை நான் முதலிட முடியுமா?
- ஆம் நிச்சயமாக முடியும். போனஸ் அல்லது உபகாரக் கொடுப்பனவு போன்ற மொத்தமாகக் கிடைக்கும் பணம் எதையும் முதலீடு செய்யலாம்.

கலைமலருக்கு எமது வாழ்த்துக்கள்

*Women In need*

**நீங்கள் பாதிப்புக்குள்ளான பெண்களா?**

**அல்லது**

**சிறுவர்களா?**

உங்களின் பிரச்சனைகளை / தேவைகளை எம்முடன் பகிர்ந்து கொள்ளலாம்.

எமது சேவைகள்

* உளவளத்துணை
* உள சமூக மேம்பாடு
* சமூக பொருளாதார ஊக்குவிப்பு
* இலவச சட்ட உதவி
* தற்காலிக புகலிட வசதி
* விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

தொடர்புகளுக்கு
தேவை நாடும் மகளிர் அமைப்பு
37/1, றக்கா லேன், சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 9671

*கலைமலர் சிறப்பாக மலர எமது வாழ்த்துக்கள்*

NHT

**Narayana Hardwares Trader**

**நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகம்**

*T.P:021 222 5390, Fax:021 222 8157*

இல.87, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

No.87, Stanley Road,
Jaffna.

பி.வி.சி பைப்புகள், இணைப்புகள், தரமான காவிகள், குளியலறை இணைப்புகள், சவரைத்தகடுகள், மல்ரி பொன்ட் வகைகள், தரை ஓடுகள் (FLOOR TILES) சுவர் ஓடுகள் (WALL TILES) என்பவற்றை விரும்பிய வகையில் தெரிவு செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**நாராயணா காட்வெயார்ஸ் ரேடர்**

கலைமலர் சஞ்சிகை மேன்மேலும் மணம் பரப்ப வாழ்த்துக்கள்

ஒமெக்ஸ் ஹொட்டேல்

Omax Hotel

372, Hospital Road, Jaffna.
T. P : 9926

கோழிப்புரியாணி, ஆட்டுப்புரியாணி, மீன்புரியாணி, முட்டைப்புரியாணி, மரக்கறிப்புரியாணி, கோழிச்சாப்பாடு, ஆட்டுச்சாப்பாடு, மீன் சாப்பாடு, முட்டைச்சாப்பாடு, மரக்கறிச்சாப்பாடு, இறால்சாப்பாடு, கணவாய்சாப்பாடு, மற்றும் அனைத்துச் சாப்பாடுகளும் இறைச்சி றோள்ஸ், பற்றிஸ், கட்லட், வடை மற்றும் அனைத்து சிற்றுண்டி வகைகளும்

ஐஸ்கிறீம், கிறீம் சர்பத், நெல்லி மென்பானங்கள் போன்றவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஓடர்கள் விசேடமாகக் கவனிக்கப்படும்.

தேவைப்படின் ஓடர்கள் உங்கள் இடங்களுக்கே கொண்டு வந்து விநியோகிக்கப்படும்

கலைமலரின் பெருமை மேன்மேலும் சிறக்கட்டும்

யாழ் நகரில் மக்கள் போற்றும்

மகத்தான ஜவுளிகளின் மனங்கவர் மாளிகை

சிவகணேசன் ரெக்ஸ்




Wholesale & Retail Dealers in Textiles
Specialist in Wedding Sarees

SIVAKANESAN TEXTILES

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

41, Grand Bazaar,
Jaffna, Sri Lanka,
Tel No 2222063

கலைமலருக்கு எமது இனிய வாழ்த்துக்கள்



# நெல்சன்



டிஜிட்டல் வீடியோ அன் போட்டோ,
வீடியோ அன்ட் போட்டோ கிறாபி,
கணினி சார் தொழில்நுட்ப சேவை.
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு
விழாக்கள், கலைவிழாக்கள்
முதலியவற்றைத் தரமான முறையில்
ஒலிப்பதிவு செய்ய நாடவேண்டிய இடம்



T.P:- 0776788207

44/1, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்

ஆசிரிய பயிற்சி கலாசாலையினால் வெளியீடு செய்யப்படும்
"கலைமலர்" சஞ்சிகைக்கு எமது வாழ்த்துக்கள்

மக்களின் சேவையில்
தனக்கென்று தனியான
முத்திரையைப் பதித்து

வடபுலத்து கூட்டுறவுத் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்து வரும்

# யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

இவ்வருடம் சித்திரைப் புத்தாண்டு முதல் தனது சேவையை மேலும் பன்முகப்படுத்துகின்றது.
வாடிக்கையாளர்களின் விருப்பத் தெரிவுக்கேற்ப ஒழுங்குபடுத்தல்களுடன் விதம் விதமான
பண்டங்களின் அணிவகுப்புக்கள்

குறைந்த விலை
உயர்ந்த தர நிர்ணயம்
கவர்ச்சியான காட்சிப்படுத்தல்கள்

இவற்றுடன் இரண்டாவது புதிய உதயமாக

## கூட்டுறவு நகர் சுப்பர் மார்க்கட்

யாழ். பிரதான வீதியில் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்திற்கு முன்புறமுள்ள சிறப்புக் கட்டிடத் தொகுதியில்

பல நூறு படியேறும் சேவையை ஓர் இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள

நீங்களும் விரையுங்கள்...

127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கலைமலருக்கு எமது இனிய வாழ்த்துக்கள்



# நெல்சன்



டிஜிட்டல் வீடியோ அன் போட்டோ,
வீடியோ அன்ட் போட்டோ கிறாபி,
கணினி சார் தொழில்நுட்ப சேவை.
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு
விழாக்கள், கலைவிழாக்கள்
முதலியவற்றைத் தரமான முறையில்
ஒலிப்பதிவு செய்ய நாடவேண்டிய இடம்



T.P:- 0776788207

44/1, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்



ஆசிரிய பயிற்சி கலாசாலையினால் வெளியீடு செய்யப்படும்
"கலைமலர்" சஞ்சிகைக்கு எமது வாழ்த்துக்கள்

மக்களின் சேவையில்
தனக்கென்று தனியான
முத்திரையைப் பதித்து

வடபுலத்து கூட்டுறவுத் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்து வரும்

# யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

இவ்வருடம் சித்திரைப் புத்தாண்டு முதல் தனது சேவையை மேலும் பன்முகப்படுத்துகின்றது.
வாடிக்கையாளர்களின் விருப்புத் தெரிவுக்கேற்ப ஒழுங்குபடுத்தல்களுடன் விதம் விதமான
பண்டங்களின் அணிவகுப்புக்கள்

குறைந்த விலை
உயர்ந்த தர நிர்ணயம்
கவர்ச்சியான காட்சிப்படுத்தல்கள்

இவற்றுடன் இரண்டாவது புதிய உதயமாக

## கூட்டுறவு நகர் சுப்பர் மார்க்கட்

யாழ். பிரதான வீதியில் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்திற்கு முன்புறமுள்ள சிறப்புக் கட்டடத் தொகுதியில்

பல நூறு படியேறுதல் பெறும் சேவையை ஓர் இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள

நீங்களும் விரையுங்கள்...

127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# நிழற்படத்தொகுப்பு - ஓர் அறிமுகம்

இந்த நிழற்படத் தொகுப்பானது குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்டு தமிழ் ஆர்வலர்கள்முன் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வருகின்ற போர்ச் சூழ்நிலைகள் காரணமாக மக்களது அனைத்து ஆவணங்களும் அழிந்துபோய்விட்டன. இருத்தல்நிலை கேள்விக்குரியதாக மாறிவிட்ட பின்னர், காலங்காலமாகக் கட்டிக்காத்து வைத்த பொருட்கள், கலைப்பொக்கிசங்கள், நூல்கள், நிழற்படங்கள், தகவல் திரட்டுக்கள் முதலானவையாவும் இல்லாமற் போய்விட்டன. விரக்தியும், துன்பமும் நிறைந்த வாழ்வில் இவைபற்றிய அக்கறைகளும் மடிந்துவிட்டன. இவற்றைக் கருத்திற்கொண்டுதான், எமது எதிர்காலச் சமூகத்திற்கு உதவும் நோக்கமாக, இந்நிழற்படத் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. கல்வி, கலை சார்ந்த துறையினர் உட்பட பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபடுவோருக்கும் இத்தொகுப்பு உதவுமென நம்புகிறேன்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வருடாந்த வெளியீடான **கலைமலர்** சஞ்சிகையில் இந்நிழற்படத் தொகுப்பினை இணைக்க வேண்டுமெனக் கருதி, அதற்கான முயற்சியில் ஈடுபட்டபோதே, இது எவ்வளவு கடினமான பணி என்பதை உணரமுடிந்தது. பெற்றோர்களது புகைப்படங்களும், இறப்பு – பிறப்பு பற்றிய விபரங்களும் பிள்ளைகளிடம்கூட இல்லாத துரதிஷ்டநிலையை அறியமுடிந்தது. இடப்பெயர்வுகளும், புலப்பெயர்வுகளும், உயிர்களதும் உடைமைகளதும் இழப்புக்களும் பல குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாத சூழ்நிலையை ஏற்படுத்தியதால் ஏற்பட்ட விளைவுகளே இதற்குக் காரணியாகும். பகீரதப் பிரயத்தனத்தின் மத்தியில் கிடைக்கக்கூடிய தகவல்களைக் கொண்டுதான் இந்நிழற்படத் தொகுப்பு வெளிக்கொணரப்பட்டுள்ளது. இத்தொகுப்பானது,

1) அன்னைத்தமிழுக்கு அரும்பணியாற்றி அமரத்துவம் அடைந்த ஈழத்து அறிஞர்கள், புலவர்கள், ஆக்கவிலக்கியப் படைப்பாளிகள் ஆகியோரது நிழற்படங்களையும்
2) சமகால மலையகத் தமிழ் ஆக்கவிலக்கியப் படைப்பாளிகளில் ஒருபகுதியினரது நிழற்படங்களையும்
3) தென்னிந்தியாவில் இசைத்தமிழ் வளர்ச்சிக்குப் பணியாற்றிய முன்னோடிகளான அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோரில் ஒருபகுதியினரது நிழற்படங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது.

இந்த மூன்றுவகை நிழற்படத் தொகுப்புகளும் பூரணமானவை அல்ல. கிடைத்துள்ள நிழற்படங்களையும், தகவல்களையும் மையமாக வைத்தே உருவாக்கப்பட்டது. அடுத்துவரும் ஆண்டுகளில் வெளிவரும் **கலைமலர்** சஞ்சிகைகளில் இம்முறை தவறவிடப்பட்டவர்களின் நிழற்படங்களையும் சேர்த்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படும். இதுபற்றிய தகவல்களை இலக்கிய ஆர்வலர்கள் தந்து உதவிசெய்தல் வேண்டும். இந்நிழற்படத் தொகுப்பானது வெளிவருவதில் எமது கலாசாலையின் அதிபர் காட்டிய கரிசனையும் ஒத்துழைப்பும் போற்றுதற்குரியது. அவரது ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் இத்தகையதொரு நல்ல காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வழிவகுத்துள்ளது. கலாசாலைச் சமூகத்தினர் அனைவரும் இத்தொகுப்பு வெளிவருவதற்கு எனக்குப் பூரண ஒத்துழைப்பை நல்கியுள்ளனர். இவர்களில் ஆசிரிய மாணவர்களின் பங்கு அளப்பரியது.

எம்மத்தியில் வாழ்ந்து மறைந்த சான்றோர்கள், இலக்கியப்படைப்பாளிகள் ஆகியோர் பற்றிய தகவல்களைப் பெறுவதில் இன்றுநாம் பெரும் நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளோம். தகவல் தொழிநுட்பமானது உலகில் பெருவளர்ச்சியுற்றபோதிலும் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் எமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப்பாதுகாப்பதில் நாம் மிகவும் பின்தங்கியுள்ளோம். சமூகம் பற்றிய அக்கறையுணர்வும், எதிர்காலம் பற்றிய தூரநோக்கும் எம்மிடையே வெகுவாகக் குறைந்து வருகின்றது. இந்தத் தொகுப்பானது எமது பண்பாட்டைப் பேணியவர்களையும், பாதுகாத்தவர்களையும் நினைவூட்டத்தக்க விதத்தில் ஒருவித உந்துசக்தியை எம்மவர்களுக்கும் குறிப்பாக கல்விப்புலத்தில் செயற்படுபவர்களுக்கும் அளிக்கும் என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். இனிவரும் காலத்தில் கல்விசார் ஆய்வுகளில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு இத்தொகுப்பானது பெருந்துணை புரியும் என நம்பலாம். இந்த முயற்சியைப் பின்பற்றி மேலும்பலர் வருங்காலத்தில் இதைப்போன்ற முயற்சிகளில் ஈடுபடவேண்டும். இதுவே கலைமலரின் வேணவாவாகும்.

இந்நிழற்படத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளவர்கள் ஏதோ ஒருவகையில் எமது தாய்மொழியாம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குத் தம்மாலான பங்களிப்பை நல்கியிருந்தனர். அத்தகையவர்கள் பல்துறையினர். முதற்பகுதியில் வெளிநாட்டவரான டாக்டர் கிறீனும் இடம்பெற்றுள்ளார். யாழ்ப்பாணத்து மருத்துவத்துறைக்கும் தமிழ்மொழிக்கும் அவரதுபணி அளப்பரியது. பழம்பெரும் எழுத்தாளர் 'சுயா' நல்லையா, பேராசிரியர் சு.தனஞ்செயராசசிங்கம் போன்றவர்களினதும் நிழற்படங்களை இக்குறுகிய காலப்பகுதியில் பெற முடியாதிருந்தமை வேதனைக்குரியதாகும். இரண்டாம் பகுதியில் மலையகத் தமிழ் இலக்கியப் படைப்பாளிகளில் கணிசமானவர்களின் புகைப்படங்களைப் பெயர்களுடன் மட்டும் பதிவு செய்துள்ளோம். சிலரது புகைப்படங்கள் கிடைக்கவில்லை. மூன்றாவது பகுதியில் தமிழிசை வளர்க்கப் பாடுபட்ட முன்னோடிகளான தென்னிந்தியர்கள் சிலரது புகைப்படங்களைப் பெயர்களுடன் மாத்திரம் பதிவுசெய்துள்ளோம். இப்புகைப்படங்களில் பெரும்பாலானவை தமிழிசைச் சங்கத்தின் வெள்ளிவிழா மலரில் (1968) இருந்து பெறப்பட்டவையாகும். ஏறத்தாழ 500 நிழற்படங்களைக் கொண்டதாகவும்' எதிர்காலத்தில் கல்விசார் ஆய்வுகளில் ஈடுபடுவோர்க்குத் துணைநிற்பதாகவும் இத்தொகுப்பு அமைகிறது. 50 ஆண்டுகளுக்கு முந்திய ஒரு சஞ்சிகையின் அல்லது பத்திரிகையின் சிறப்பு மலரினைப் பெறுவதற்கு மிகவும் சிரமப்பட்டு ஒருசிலரிடம் அல்லது ஒரேயொருவரிடம் அப்பிரதியைப் பெறக்கூடிய சூழ்நிலையே தற்போது இங்கு காணப்படுகிறது. சிலவேளைகளில் ஒருவரிடந்தானும் பெறமுடியாத நிலைமையும் உண்டு. எனவே தற்போது நாம் ஆவணப்படுத்தும் இந்த நிழற்படங்கள் இன்னும் அரைநூற்றாண்டு காலமாவது நிலைத்திருக்கும் என்பது எமது நம்பிக்கை. இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றில் இவ்வளவு அதிகமான நிழற்படங்களை உள்ளடக்கிய காத்திரமான முதற் சஞ்சிகை **கலைமலர்** என்பதில் கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகம் பெருமையடைகின்றது. அந்தப் பெருமையிலும் மகிழ்ச்சியிலும் நாமனைவரும் ஒன்றுபட்டு நின்று அன்னைத் தமிழின் வளர்ச்சிக்கு மேலும் மேலும் பணியாற்றுவோமாக.

அன்புடன்,
பண்டிதர், கலாநிதி செ.திருநாவுக்கரசு
தொகுப்பாளர்.

# அன்னைத் தமிழுக்கு அரும்பணியாற்றி அமரத்துவம் அடைந்த ஈழத்து அறிஞர்கள், புலவர்கள், ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் ஆகியோரது நிழற்படத்தொகுப்பு

பகுதி - I



நல்லூர்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
18.12.1822 - 05.12.1879
உரைநடை,கவிதை,பதிப்பு, புராணபடனம்,பிரசங்கம்.



கற்பிட்டி
கா.சைமன் காசிச்செட்டி
21.03.1807 - 05.11.1860
வரலாறு,உரைநடை,கவிதை, பத்திரிகை,மொழிபெயர்ப்பு.



அழுத்கம-பெந்தற (கண்டிமாவட்டம்)
அறிஞர் அ.சித்திலெவ்வை
11.06.1838 - 05.02.1888
உரைநடை,பத்திரிகை



சிறுப்பிட்டி
'இராவ்பகதூர்'
சி.வை.தாமோதரம்பிள்ளை
12.09.1932 - 01.01.1901
உரைநடை,கவிதை,பதிப்பு.



குப்பிழான்
காசிவாசி சி.செந்திநாதையர்
1848ஐப்பசி - 1924வைகாசி
உரைநடை,பதிப்பு.



நல்லூர்
வித்துவசிரோமணி
ந.ச.பொன்னம்பலபிள்ளை
1836சித்திரை - 1902
புராணபடனம்,உரைநடை



நல்லூர்
த.கைலாயபிள்ளை
1855 - 1939
உரைநடை,பதிப்பு



கொழும்பு - முகத்துவாரம்
சேர்.கு.முத்துக்குமாரசுவாமி
1834.01.23 - 04.05.1879
உரைநடை,நாடகம்



மானிப்பாய்
சேர்.பொன்.இராமநாதன்
16.04.1851 - 26.11.1930
உரைநடை.



மானிப்பாய்
சேர்.பொன்.அருணாசலம்
14.09.1853 - 09.01.1924
உரைநடை.



கொழும்பு
கலாயோகி
ஆனந்தஹென்றி குமாரசுவாமி
22.08.1877 - 09.09.1947
உரைநடை,ஆய்வு.



தெல்லிப்பழை
பாவலர் அ.துரையப்பாபிள்ளை
20.10.1872 - 24.06.1929
கவிதை,உரைநடை.



கண்டி - தெல்தோட்டை
அருள்வாக்கி
அப்துல்காதிறுப்புலவர்
30.08.1866 - 23.09.1918
கவிதை.



புலோலி
சதாவதானி
நா.கதிரைவேற்பிள்ளை
03.12.1871 - 26.03.1907
கவிதை,உரைநடை.



காரைதீவு
சுவாமி விபுலானந்த அடிகள்
29.03.1892 - 19.07.1947
உரைநடை,கவிதை,நாடகம், பத்திரிகை,மொழிபெயர்ப்பு



மட்டக்களப்பு - புளியந்தீவு
வித்துவான் ச.பூபாலபிள்ளை
1856 - 1921
உரைநடை,கவிதை

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



மானிப்பாய்
ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை
18.04.1858 - 03.11.1917
வரலாறு,உரைநடை,பதிப்பு.



மல்லாகம்
வி.கனகசபைப்பிள்ளை
25.05.1855 - 22.02.1906
உரைநடை.




நவாலி
ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை
11.10.1820 - 20.02.1895
உரைநடை,கவிதை,பதிப்பு,சிறுகதை



மானிப்பாய் - நவாலி
டானியல்
எல்.கறோல் விசுவநாதபிள்ளை
1820கார்த்திகை - 21.11.1880
உரைநடை.



சுன்னாகம்
அ.குமாரசுவாமிப்புலவர்
18.01.1854 - 09.03.1922
கவிதை,உரைநடை,
மொழிபெயர்ப்பு.



புன்னாலைக்கட்டுவன்
வித்துவசிரோமணி
சி.கணேசையர்
15.04.1878 - 03.11.1958
உரைநடை,கவிதை.



வல்வை
ச.வைத்திலிங்கம்பிள்ளை
1843மாசி - 03.08.1900
உரைநடை.



மானிப்பாய்
சுவாமி ஞானப்பிரகாசர்
30.08.1875 - 22.01.1947
தமிழியல்,ஆய்வு.



மட்டக்களப்பு
கா.அருணாசலதேசிகர்
1888 - 1969
கவிதை,உரைநடை.



மட்டுவில்
க.வேற்பிள்ளை
08.01.1848 - 07.02.1930
கவிதை,உரைநடை.



மட்டுவில்
க.வே.திருஞானசம்பந்தபிள்ளை
1885மார்கழி - 1955
உரைநடை,புனைகதை,நாடகம்,
பத்திரிகை,பதிப்பு.



மட்டுவில் குருகவி
க.வே.மஹாலிங்கசிவம்
1891 - 17.02.1941
கவிதை,உரைநடை.



மட்டக்களப்பு - தாண்டவன்வெளி
வித்துவான் அ.சரவணமுத்தன்
27.03.1890 - 11.07.1930
கவிதை,உரைநடை.



திருகோணமலை
வே.அகிலேசபிள்ளை
26.02.1853 - 01.01.1910
கவிதை,உரைநடை,பதிப்பு.



நவாலியூர்
க.சோமசுந்தரப்புலவர்
10.07.1878 - 11.07.1953
கவிதை,உரைநடை,நாடகம்.



வட்டுக்கோட்டை
முதுதமிழ்ப்புலவர்
மு.நல்லதம்பி
18.09.1896 - 08.05.1951
கவிதை,உரைநடை.


நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



வயாவிளான்
ஆசுகவி க.வேலுப்பிள்ளை
07.03.1860 - 04.07.1944
கவிதை,உரைநடை,
பத்திரிகை,வரலாறு.



தமிழ்நாடு - கரவட்டங்குடி
சு.நவநீதகிருஷ்ணபாரதியார்
01.06.1880 - 1954
கவிதை,உரைநடை,ஆய்வு.



அளவெட்டி
முகாந்திரம் தி.சதாசிவஐயர்
22.09.1882 - 27.11.1950
உரைநடை,கவிதை,பதிப்பு



யாழ்ப்பாணம்
அறிஞர் ஏ.எம்.ஏ.அஸீஸ்
1911 - 1973
உரைநடை,வரலாறு.



தென்புலோலியூர்
க.கந்தமுருகேசனார்
27.04.1902 - 14.06.1965
கவிதை,உரைநடை.



கட்டுவன்
இ.நமசிவாயதேசிகர்
11.11.1915 - 11.09.2000
கவிதை,உரைநடை,ஆய்வு.



மட்டுவில் - பண்டிதமணி
சி.கணபதிப்பிள்ளை
27.06.1899 - 13.03.1986
உரைநடை,கவிதை.



மண்டூர் - புலவர்மணி
ஏ.பெரியதம்பிப்பிள்ளை
18.12.1899 - 02.11.1978
உரைநடை,கவிதை.



ஊர்காவற்றுறை
கலைப்புலவர்
க.நவரத்தினம்
1889 - 1962
உரைநடை,வரலாறு.



பருத்தித்துறை - புலோலி
பேராசிரியர்
க.கணபதிப்பிள்ளை
02.07.1902 - 12.05.1968
உரைநடை,கவிதை,
நாடகம்,பதிப்பு.



கொழும்புத்துறை
பேராசிரியர்
வி.செல்வநாயகம்
07.01.1907 - 1973
கவிதை,உரைநடை.



சென்னை தண்டையார்ப்பேட்டை
தா.பிரான்சிஸ் கிங்ஸ்பரி
(அழகியசுந்தரதேசிகர்)
08.08.1873 - 12.04.1941
உரைநடை,நாடகம்



தெல்லிப்பளை - வீமன்காமம்
பேராசிரியர்
சு.வித்தியானந்தன்
08.05.1924 - 22.01.1989
உரைநடை,நாடகம்,
பதிப்பு,ஆய்வு.



கோலாலம்பூர்
பேராசிரியர் க.கைலாசபதி
05.04.1933 - 06.12.1982
உரைநடை,விமர்சனம்,
ஆய்வு,மொழிபெயர்ப்பு.



ஊர்காவற்றுறை - நெடுந்தீவு
வண.சேவியர்
தனிநாயகம் அடிகள்
02.08.1913 - 01.09.1980
தமிழியல்ஆய்வு,உரைநடை,
சஞ்சிகை,மொழிபெயர்ப்பு.



பருத்தித்துறை - தும்பளை
வண.தாவீதுஅடிகள்
(வண.டேவிட்)
28.06.1907 - 01.06.1981
தமிழியல்ஆய்வு,உரைநடை.

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



மானிப்பாய்
த. ஐசாக் தம்பையா
19.08.1869 - 18.02.1941
மொழிபெயர்ப்பு,உரைநடை



திருகோணமலை
தி.க.கனகசுந்தரம்பிள்ளை
24.08.1863 - 22.06.1922
உரைநடை.




இணுவில்
பொன்.அம்பிகைபாகப்புலவர்
1837ஆவணி - 1902
கவிதை.



மானிப்பாய் - நவாலி
முதலியார் செ.இராசநாயகம்
22.10.1870 - 17.01.1940
வரலாறு,தமிழியல்.



மானிப்பாய்
மு.திருவிளங்கம்
30.04.1859 - 22.02.1922
உரைநடை,பதிப்பு.



கோப்பாய்
''இந்துபோட்'' சு.இராசரத்தினம்
04.07.1884 - 12.03.1970
தமிழியல்.




ஊர்காவற்றுறை - கரம்பொன்
குல.சபாநாதன்
1907 - 02.04.1986
வரலாறு,உரைநடை



நவாலியூர்
ந.சி.கந்தையாபிள்ளை
1893 - 1967
தமிழியல்,வரலாறு,
உரைநடை.



அச்சுவேலி
ச.குமாரசுவாமிக்குருக்கள்
16.11.1886 - 10.03.1971
உரைநடை,கவிதை,பதிப்பு.



புலோலியூர்
சைவப்புலவர் சு.சிவபாதசுந்தரம்
17.01.1878 - 14.08.1953
உரைநடை,கவிதை,பதிப்பு.



கொக்குவில்
த.குமாரசுவாமிப்புலவர்
17.08.1895 - 15.02.1982
கவிதை,உரைநடை.



மருதமுனை
புலவர்மணி,அல்ஹாஜ்
ஆ.மு.ஷரிபுதீன்புலவர்
04.05.1909 - 2001
கவிதை.



நயினாதீவு
வே.க.நாகமணிப்புலவர்
10.12.1891 - 20.07.1933
கவிதை.



வேலணை - சரவணை
ஆ.தில்லைநாதப்புலவர்
18.04.1885 - 05.07.1966
கவிதை.



தமிழ்நாடு - மலையடிக்குறிச்சி
புலவர் சிவன்
கருணாலய பாண்டியனார்
09.08.1903 - 30.06.1976
கவிதை,உரைநடை.



காரைநகர்
மகாவித்துவான்
எப்.எக்ஸ்.சி.நடராசா
21.07.1911 - 1997
உரைநடை,வரலாறு,கவிதை.



பொன்னாலை
வரகவி க.கிருஷ்ணபிள்ளை
10.01.1898 - 1956
கவிதை,நாடகம்.



ஏழாலை இலக்கியகலாநிதி
மு.கந்தையா
19.06.1917 - 10.07.2002
உரைநடை,கவிதை,
சஞ்சிகை,ஆய்வு.



சுன்னாகம் - மருதனார்மடம்
(பிறப்பு : தமிழ்நாடு)
சு.நடேசபிள்ளை
1895 - 1965
உரைநடை,ஆய்வு,கவிதை.



தொல்புரம் புலவர்
நா.சிவபாதசுந்தரனார்
1920 - 1993
உரைநடை,கவிதை.



பருத்தித்துறை - வியாபாரிமூலை
பண்டிதர் பொன்.கிருஷ்ணபிள்ளை
23.10.1903 - 17.12.1976
கவிதை,உரைநடை



நவாலியூர்
பண்டிதர் சோ.இளமுருகனார்
11.06.1908 - 17.12.1975
கவிதை,உரைநடை,
பதிப்பு.




நவாலியூர்
பண்டிதை
பரமேஸ்வரி இளமுருகனார்
1915 - ....
உரைநடை,கவிதை



ஏழாலை
மு.ஞானப்பிரகாசம்
24.12.1911 - 1998
உரைநடை,பதிப்பு.



மல்லாகம்
நம.சிவப்பிரகாசம்
20.03.1906 - 1995ஆகஸ்ட்
உரைநடை,பத்திரிகை.



நவாலியூர்
கலையரசு க.சொர்ணலிங்கம்
1889 - 1982
நாடகம்,உரைநடை.



கட்டைவேலி
பண்டிதர் ஜே.எஸ் ஆழ்வாப்பிள்ளை
07.03.1891 - 17.12.1968
கவிதை,கணிதவியல்.



யாழ்ப்பாணம்
வண.டி.பி.நைல்ஸ்அடிகளார்
1836 - 1915
கவிதை.




அராலி
வித்தகர் ஜே.வி.செல்லையா
1889 - 1947
கவிதை



சாவகச்சேரி
அறிஞர் ஏ.எம்.கே.குமாரசுவாமி
1890 - 1960
கவிதை.



நவாலியூர்
சின்னண்ணன்
வண.ஈ.த.இயேசுசகாயம்
18.07.1918 - 28.12.1970
கவிதை.



பருத்தித்துறை - கரவெட்டி
எம்.வீ.கிருஷ்ணாழ்வார்
1895 - 23.09.1972
கவிதை,நாடகம்.

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



ஏழாலை
சி.வைத்திலிங்கம்
1911 - 1991மே
சிறுகதை,மொழிபெயர்ப்பு



ஏழாலை
இலங்கையர்கோன்
(என்.சிவஞானசுந்தரம்)
06.09.1915 - 15.11.1961
சிறுகதை,நாடகம்,மொழிபெயர்ப்பு



திருநெல்வேலி
சம்பந்தன்
(எஸ்.திருஞானசம்பந்தன்)
20.10.1913 - 07.01.1995
சிறுகதை,கவிதை.



கரம்பொன்
சோ.சிவபாதசுந்தரம்
27.08.1912 - 10.11.2000
சிறுகதை,உரைநடை,
பத்திரிகை




கரம்பொன்
சோ.தியாகராஜா
18.03.1917 - 10.01.1993
சிறுகதை,கவிதை



ஹற்றன் - வட்டகொட
சி.வி.வேலுப்பிள்ளை
14.09.1914 - 19.11.1984
சிறுதை,நாவல்,கவிதை,
சஞ்சிகை,மொழிபெயர்ப்பு



பொன்னாலை
தி.ச.வரதராஜன்
01.07.1924 - 21.12.2006
சிறுகதை,கவிதை,நாவல்,
உரைநடை,சஞ்சிகை,பதிப்பு.



அளவெட்டி
பிறப்பு : மாவிட்டபுரம்
அ.செ.முருகானந்தம்
09.10.1921 - 02.10.1997
சிறுகதை,நாவல்,சஞ்சிகை




சாவகச்சேரி - சரசாலை
இராஜ.அரியரத்தினம்
.... - 25.05.1998
பத்திரிகை,சிறுகதை



புலோப்பளை
கசின்
(க.சிவகுருநாதன்)
1920 - 2003பெப்ரவரி
சிறுகதை.



குரும்பசிட்டி
கனக.செந்திநாதன்
05.11.1916 - 16.11.1977
சிறுகதை,நாவல்,உரைநடை



நாவற்குழி
சு.வே
(சு.வேலுப்பிள்ளை)
24.05.1921 - 22.06.2007
சிறுகதை,உரைநடை.



யாழ்ப்பாணம்
தேவன்(இ.மகாதேவா)
27.09.1924 - 25.12.1982
சிறுகதை,நாவல்,நாடகம்,
மொழிபெயர்ப்பு.



அளவெட்டி
அ.ந.கந்தசாமி
1924 - 11.02.1968
சிறுகதை,நாடகம்,
நாவல்,மொழிபெயர்ப்பு.



கண்டி - அம்பிட்டியவ
கே.கணேஷ்
02.03.1920 - 05.06.2004
சிறுகதை,மொழிபெயர்ப்பு.



மூதூர்
வ.அ.இராசரத்தினம்
05.06.1925 - 2002
சிறுகதை,நாவல்,உரைநடை.



நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



காரைநகர் - கண்டி
அ.நாகலிங்கம்
29.02.1901 - 19.03.1979
நாவல்



ஆவரங்கால்
சொக்கன்
(க.சொக்கலிங்கம்)
02.06.1930 - 10.12.2004
சிறுகதை,நாவல்,கவிதை,
நாடகம்,உரைநடை,மொழிபெயர்ப்பு



ஆனைக்கோட்டை
கே.டானியல்
15.04.1926 - 23.03.1986
நாவல்,சிறுகதை,பத்திரிகை.



அளவெட்டி
கே.வி.நடராஜன்
28.07.1933 - 05.12.2004
சிறுகதை.



கரணவாய்
நா.சோமகாந்தன்
14.01.1934 - 28.04.2006
சிறுகதை,நாவல்.




மலையகம்
எஸ்.என்.எம்.ராமையா
27.01.0931 - 03.09.1990
சிறுகதை.




யாழ்ப்பாணம்
மர்ஹூம் சுபைர் இளங்கீரன்
.... - ....
சிறுகதை,நாவல்,சஞ்சிகை,
பத்திரிகை.



கோப்பாய்
'தகவம்' வ.இராசையா
22.11.1919 - 17.02.2007
சிறுகதை,கவிதை,
உரைநடை,நாடகம்,
குழந்தை இலக்கியம்.



ஆவரங்கால் - பத்தமேனி
'புத்தொளி' ந.சிவபாதம்
05.12.1932 - 30.11.2004
சிறுகதை,கவிதை,உரைநடை.



புங்குடுதீவு
மு.தளையசிங்கம்
20.10.1935 - 1973
நாவல்,சிறுகதை,உரைநடை,
விமர்சனம்.



யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை
ஈழத்துறைவன்
(வை.ஏரம்பமூர்த்தி)
.... - 1980களின் நடுப்பகுதி
சிறுகதை.



உடுப்பிட்டி
அழகு சுப்பிரமணியம்
15.03.1915 - 15.02.1973
சிறுகதை,நாவல்



நாவற்குழி
க.செ.நடராஜன்
21.09.1919 - 17.02.1994
சிறுகதை,உரைநடை.



கண்டுக்குளி
டாக்டர் நந்தி
(செ.சிவஞானசுந்தரம்)
30.03.1928 - 04.06.2005
சிறுகதை,நாவல்,உரைநடை.



யாழ்ப்பாணம்
மு. கனகராஜன்
25.11.1942 - 13.04.1999
சிறுகதை,நாடகம்,நாவல்,
மொழிபெயர்ப்பு.



கொழும்பு
க.நவசோதி
1941 - ...
சிறுகதை,கவிதை.

*நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு*



அளவெட்டி
மஹாகவி
(து.உருத்திரமூர்த்தி)
09.01.1927 - 20.06.1971
கவிதை,நாடகம்,மொழிபெயர்ப்பு



பருத்தித்துறை - வியாபாரிமூலை
யாழ்ப்பாணன்
(வே.சிவக்கொழுந்து)
02.08.1908 - 10.05.1968
கவிதை,உரைநடை.



பெரியநீலாவணை
நீலாவணன்
(க.சின்னத்துரை)
31.06.1931 - 11.01.1975
கவிதை.



நல்லூர்
விடிவெள்ளி
(க.பே.முத்தையா)
31.08.1914 - 26.05.1964
கவிதை.



திருகோணமலை
கிண்ணியா - கொட்டியாபுரம்
அண்ணல்
(எம்.எஸ்.எம்.சாலிஹ்)
08.10.1930 - .....
கவிதை.



உரும்பிராய்
சாரதா
(க.இ.சரவணமுத்து)
1919 - 1998
கவிதை.



அல்லைப்பிட்டி
பா.சத்தியசீலன்
15.06.1938 - 30.06.2001
கவிதை,குழந்தைப்பாடல்கள்



பாண்டிருப்பு
பாண்டியூரன்
(கு.கணபதிப்பிள்ளை)
1935 - 1990
கவிதை.



அரியாலையூர்
வே.ஐயாத்துரை
02.02.1923 - 18.04.1996
கவிதை.



சரவணையூர்
தில்லைச்சிவன்
(தி.சிவசாமி)
05.01.1928 - 26.11.2004
கவிதை,உரைநடை.



ஏறாவூர்
புரட்சிக்கமால்
(ஜனாப்மர்ஹூம் எம்.எம்.சாலிஹ்)
17.07.1928 - 15.03.1996
கவிதை.



மலையகம் - லபுகல
குறிஞ்சி தென்னவன்
12.03.1934 - 19.01.1998
கவிதை.



தெளிவத்தை
தமிழோவியன்
.... - 24.12.2006
கவிதை.



கல்முனை
அன்புமுகைதீன்
1940 - 2003
கவிதை.



சாவகச்சேரி - கல்வயல்
இ.சிவானந்தன்
29.06.1941 - 06.03.1995
கவிதை,உரைநடை,நாடகம்.



திருகோணமலை
பிரமிள்
(தருமு சிவராமு)
20.04.1939 - 06.01.1997
கவிதை.



நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



திருநெல்வேலி
சு.இராசநாயகம்
27.06.1926 - 24.04.1998
சிறுகதை,நாவல்,பதிப்பு.



மட்டக்களப்பு
பித்தன்
(கே.எம்.மீராஷா)
.... - 1997
சிறுகதை.



யாழ்ப்பாணம் - தாழையடி ஒழுங்கை
மு.சபாரத்தினம்
1921 - 1967
சிறுகதை.



ஆனைக்கோட்டை
எஸ்.அகஸ்தியர்
29.08.1926 - 1995 டிசம்பர்
சிறுகதை,நாவல்,உரைநடை.



மாத்தளை - கரவனல்ல
அருணேசர்
(அ.ச.அருணாசலம்)
1905ஜனவரி - 03.05.1986
சிறுகதை,நாவல்.



தமிழ்நாடு
கே.வி.எஸ்.வாஸ்
.... - 30.08.1988
நாவல்,உரைநடை.



வத்துகாமம்
மலைத்தம்பி
(ஐசாக் இராயப்பன்)
27.08.1942 - 05.05.1997
உரைநடை,சிறுகதை.



மாத்தளை
(பிறப்பு - இந்தியா)
ஏ.வி.பி.கோமஸ்
29.06.1932 - 11.09.2004
சிறுகதை,உரைநடை.



புலோலியூர்
கு.பெரியதம்பி
29.08.1919 - 02.01.1987
சிறுகதை,நாவல்.



குரும்பசிட்டி
ஏ.ரி.பொன்னுத்துரை
15.05.1928 - 09.10.2003
நாடகம்



புங்குடுதீவு
நாவேந்தன் (த.திருநாவுக்கரசு)
14.12.1932 - 10.07.200
சிறுகதை,நாடகம்,கவிதை,
பத்திரிகை.



அக்கரைப்பற்று
அ.ஸ.அப்துல் ஸமது
07.09.1929 -
சிறுகதை,கவிதை.



மண்டைதீவு
அங்கையன்
(அ.கைலாசநாதன்)
1942 - 1976
சிறுகதை,நாவல்



மருதமுனை
மருதூர்க்கொத்தன்
1935 - 19.04.2004
சிறுகதை,நாவல்.



கரவெட்டி
செ.கதிர்காமநாதன்
1942 - 01.09.1972
சிறுகதை,மொழிபெயர்ப்பு.



யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை
செ.யோகநாதன்
01.10.1941 - 28.01.2008
சிறுகதை,நாவல்,பத்திரிகை,
சஞ்சிகை.

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



தஞ்சாவூர்
கோ.நடேசையர்
1981 - 07.11.1947
பத்திரிகை,சிறுகதை,
உரைநடை.



குரும்பசிட்டி
"ஈழகேசரி" நா.பொன்னையா
1892 - 21.06.1951
பத்திரிகை,பதிப்பு.



நயினாதீவு
'ஆத்மஜோதி' க.இராமச்சந்திரா
05.11.1896 - 26.04.1976
பத்திரிகை.



நவாலியூர்
சோ.நடராஜன்
10.07.1910 - 28.06.1988
கவிதை,உரைநடை,
மொழிபெயர்ப்பு



அராலி
பேராசிரியர் ஆ.சதாசிவம்
15.02.1926 - 01.07.1988
உரைநடை,பதிப்பு,ஆய்வு.



பாணந்துறை - ஹேனமுல்ல
பேராசிரியர்
எம்.எம்.முஹம்மது உவைஸ்
15.01.1922 - 26.03.1996
உரைநடை,பதிப்பு,ஆய்வு.



நீர்வேலி
பண்டிதர் க.துரைசிங்கம்
12.09.1912 - 24.11.1979
உரைநடை,கவிதை.



நெடுந்தீவு
பண்டிதை
திருமதி சத்தியதேவி துரைசிங்கம்
06.01.1922 - 22.101986
உரைநடை,சொற்பொழிவு.



மண்டூர்
பண்டிதர் வி.சீ.கந்தையா
20.08.1920 - 10.06.1998
வரலாறு,உரைநடை,பதிப்பு.



யாழ்ப்பாணம்
க.சி.குலரத்தினம்
10.10.1916 - 06.02.1994
உரைநடை,வரலாறு,
பத்திரிகை,ஆய்வு.



தென்புலோலியூர்
மு.கணபதிப்பிள்ளை
.... - 28.12.1984
வரலாறு,உரைநடை,ஆய்வு.



அல்வாய் - வதிரி
சைவப்புலவர் சி.வல்லிபுரம்
28.10.1905 - 29.01.1990
கவிதை,உரைநடை.



அளவெட்டி
பண்டிதர் செ.கதிரேசர்பிள்ளை
30.10.1921 - 12.06.1991
கவிதை,உரைநடை.



மட்டுவில்
ச.பொன்னுத்துரை
03.03.1917 - 07.09.1996
கவிதை,உரைநடை.



மட்டக்களப்பு - தேற்றாத்தீவு
ஈழத்துபூராடனார்
(க.தா.செல்வராசகோபால்)
1928 - 2002
கவிதை,உரைநடை.



தளவங்களப்பு
சேந்தன்
(பண்டிதர் சி.கார்த்திகேசு)
02.07.1916 - 28.04.2005
கவிதை

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



வேலணை
வி.கந்தப்பிள்ளை
1840 - 1914
உரை,கவிதை.



காரைநகர்
மு.கார்த்திகேயப்புலவர்
1819 - 1898
கவிதை.



காரைநகர்
த.நாகமுத்துப்புலவர்
20.02.1857 - 18.02.1939
கவிதை.




காரைநகர்
ச.பஞ்சாட்சரக்குருக்கள்
1889 - 1953
கவிதை.




வேலணை
ம.தம்புஉபாத்தியாயர்
1865 - 1943
உரைநடை,கவிதை.



கச்சாய்
சி.சின்னையாப்புலவர்
02.03.1895 - 28.05.1971
கவிதை.



வீரமுனை
சோமசுந்தரதேசிகர்
(போதகர்)
11.08.1885 - 1952
கவிதை.



மட்டக்களப்பு - கோட்டைக்கல்லாறு
சி.குமாரசுவாமிஐயர்
22.12.1879 - 20.04.1947
கவிதை.



மட்டக்களப்பு - செட்டிபாளையம்
இ.கணபதிப்பிள்ளைப்புலவர்
19ஆம் நூ.பிற்பகுதி -
20ஆம் நூ.முற்பகுதி
கவிதை.



மட்டக்களப்பு - செட்டிபாளையம்
க.சின்னவப்புலவர்
1879 - 1962
கவிதை.



யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை
வண.ஜே.எஸ்.கிறிஸ்மஸ்
1828 - 25.12.1904
கவிதை.



காரைநகர்
அலன் ஏபிரகாம்
1865 - 09.07.1922
கவிதை.



வேலணை
பண்டிதை,
செல்வி வேதநாயகி தம்பு
15.07.1912 - 24.02.1994
உரைநடை,கவிதை



வேலணை
பண்டிதர் மா.மாணிக்கம்
17.03.1921 - 27.03.2003
உரைநடை,கவிதை,பதிப்பு.



பொன்னாலை
வித்துவான் க.கி.நடராஜன்
1911 - 1971
உரைநடை,கவிதை.



ஏழாலை
'ஆத்மஜோதி' நா.முத்தையா
25.05.1918 - 08.09.1995
உரைநடை,கவிதை,பதிப்பு,
பத்திரிகை.

*நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு*



வேலணை
'இறைமணி' சி.இராசரத்தினம்
06.07.1916 - 27.10.2006
கவிதை.



திருகோணமலை
ஈழவாணன்
.... - 14.04.1984
கவிதை.



சில்லாலையூர்
ம.செல்வராஜன்
(தான்தோன்றிக்கவிராயர்)
25.01.1933 - 14.10.1995
கவிதை,உரைநடை,நாடகம்,
சஞ்சிகை.



அல்லைப்பிட்டி
பண்டிதர் க.வ.ஆறுமுகம்
1922 - 2002
கவிதை,உரைநடை,நாடகம்.



அல்வாய்
கவிஞர் மு.செல்லையா
07.10.1906 - 09.12.1966
கவிதை.




பருத்தித்துறை
கவிஞர் க.பசுபதி
(யாழ்ப்பாணக்கவிராயர்)
14.07.1925 - 05.07.1965
கவிதை.




யாழ்ப்பாணம்
'மதுரகவி' இ.நாகராஜன்
.... - 1980களில்
கவிதை,சிறுகதை,நாவல்.



அச்சுவேலி
மேர்லி ஜேம்ஸ் துரைராஜா
தம்பிமுத்து
15.08.1915 - 22.06.1983
மொழிபெயர்ப்பு,கவிதை.




..............
கவிஞர் ஈழத்து இரத்தினம்
.............
கவிதை.



யாழ்ப்பாணம் - பாஷையூர்
ஆ.செகராஜசிங்கப்புலவர்
10.10.1915 - 25.06.2005
கவிதை.



வவுனியா
செட்டிகுளம் - இலுப்பைக்குளம்
வன்னியூர்க்கவிராயர்
(சௌந்தரநாயகம்)
04.04.1921 - 29.01.1978
கவிதை,நாவல்,சிறுகதை.




யாழ்ப்பாணம்
யாழ் ஜெயம்
(ம.விக்ரர்)
23.06.1922 - 22.05.2001
கவிதை.




திருகோணமலை
கழகப்புலவர் பெ.பொ.சிவசேகரம்
04.03.1919 - 19.05.1983
கவிதை.



திருகோணமலை
புலவர் சி.சத்தியமூர்த்தி
07.02.1940 - 05.01.1992
கவிதை.



திருகோணமலை
தா.சி.வில்வராசா
.......
கவிதை.



நாவலப்பிட்டி
'சிலோன்'விஜயேந்திரன்
03.01.1946 - 30.08.2004
கவிதை,உரைநடை,பதிப்பு.



'தமிழ்முரசு'
மா.மங்களம்மாள்
19நூ.பிற்பகுதி - 20நூ.முற்பகுதி
பத்திரிகை.



தமிழ்நாடு
எச்.நெல்லையா
1899 - 1941
சிறுகதை,நாவல்.



மலையகம்
'செய்தி' நாகலிங்கம்
.......
பத்திரிகை.



தலகா
எஸ். திருச்செந்தூரன்
30.08.1936 - 31.03.2001
சிறுகதை.



பூண்டுலோயா
தர்மு
(எஸ்.எம்.தர்மலிங்கம்)
.......
சிறுகதை,கவிதை.



யாழ்ப்பாணம் - ஆனைப்பந்தி
துருவன்
(க.பரராஜசிங்கம்)
22.11.1943 - 07.04.1989
சிறுகதை.



யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை
முனியப்பதாசன்
(தா.சண்முகநாதன்)
1944/1945 - ...
சிறுகதை.



தெல்லிப்பளை - வீமன்காமம்
'தமிழருவி' த.சண்முகசுந்தரம்
1925 - 30.07.1986
சிறுகதை,நாடகம்,
நாவல்,கவிதை



யாழ்ப்பாணம்
யாழ்வாணன்
(நா.சண்முகநாதன்)
......
சிறுகதை.



யாழ்ப்பாணம்
செம்பியன் செல்வன்
(ஆ.இராஜகோபால்)
01.01.1942 - 20.05.2005
சிறுகதை,நாவல்,உரைநடை,
நாடகம்.



வதிரி
இராஜஸ்ரீகாந்தன்
30.06.1948 - 20.04.2007
சிறுகதை,மொழிபெயர்ப்பு,
உரைநடை.



யாழ்ப்பாணம் - நாவாந்துறை
டானியல் அன்ரனி
1947 - 1994
சிறுகதை.



ஊர்காவற்றுறை
காவலூர் ஜெகநாதன்
1950 - 1984
சிறுகதை,நாவல்.



யாழ்ப்பாணம்
நா.சுந்தரலிங்கம்
1938 - 03.03.2005
நாடகம்.




கொழும்பு
ஜோர்ச் சந்திரசேகரன்
16.12.1940 - 06.06.2008
நாடகம்,சிறுகதை.



இணுவில்
இரத்தினம்
17.08.1916 - 21.03.1981
நாடகம்,நாட்டியநாடகம்.

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



காரைநகர்
பிறப்பு : வியாபாரிமூலை(பரு)
ஸ்ரீமத் சி.சுப்பிரமணியதேசிகர்
10.09.1885 - 10.03.1970
கவிதை.



மட்டக்களப்பு - ஆரையம்பதி
பண்டிதர் செ.பூபாலபிள்ளை
02.07.1902 - 26.04.1967
கவிதை,உரைநடை.



கோப்பாய் தெற்கு
'வித்தகம்'
ச.கந்தையாபிள்ளை
1880 - 1958
கவிதை, உரைநடை, பத்திரிகை



காரைநகர்
பண்டிதமணி
சு.அருளம்பலவனார்
11.04.1910 - 20.05.1966
கவிதை,உரைநடை.



சுன்னாகம்
கு.அம்பலவாணபிள்ளை
1895 - 1975
கவிதை,உரைநடை.



பருத்தித்துறை - வியாபாரிமூலை
க.ச.அருணந்தி
25.03.1899 - 30.08.1972
உரைநடை,பதிப்பு.



நாவற்குழியூர்
பண்டிதர் வ.நடராசா
11.11.1915 - 17.08.2000
கவிதை,உரைநடை.




வேலணை
க.வேந்தனார்
05.11.1918 - 18.09.1966
கவிதை,உரைநடை.



கோப்பாய்
ச.பஞ்சாட்சரசர்மா
13.11.1916 - 24.09.2003
கவிதை,உரைநடை,
மொழிபெயர்ப்பு,சஞ்சிகை.




மல்லாகம்
ச.அம்பிகைபாகன்
03.05.1908 - 26.01.1986
உரைநடை.



இணுவில்
வித்துவான் இ.திருநாவுக்கரசு
17.03.1923 - 09.07.1996
உரைநடை,கவிதை.



ஊரெழு
க.ந.வேலன்
(இரத்தினவேல்)
07.11.1923 - 03.06.2003
உரைநடை.



உரும்பிராய்
ஆசிரியமணி அருணாசலம் பஞ்சாட்சரம்
13.11.1927 - 02.10.2007
உரைநடை,பதிப்பு.



புங்குடுதீவு
க.சிவராமலிங்கம்பிள்ளை
16.09.1925 - 25.08.2005
உரைநடை.



மீசாலை
அ.பொ.செல்லையா
16.01.1937 - 2006டிசம்பர்
கவிதை,உரைநடை.



சுன்னாகம் - மயிலணி
திருமதி
மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
14.09.1932 - 22.05.2006
உரைநடை.


நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



சுன்னாகம்
கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை
1900 - .....
உரைநடை,கவிதை.



பண்ணாகம்
பண்டிதர் அ.ஆறுமுகம்
16.12.1917 - 08.09.2004
கவிதை,உரைநடை.



மாவிட்டபுரம்
பொ.சங்கரப்பிள்ளை
13.12.1913 - 18.02.1990
உரைநடை,பதிப்பு.



தெல்லிப்பளை
'சிவத்தமிழ்ச்செல்வி'
தங்கம்மா அப்பாக்குட்டி
07.01.1925 - 15.06.2008
கவிதை.உரைநடை,பதிப்பு.



யாழ்ப்பாணம்
ஏ.ஜே.கனகரத்தினா
26.08.1934 - 11.10.2006
மொழிபெயர்ப்பு,உரைநடை,
சிறுகதை.



கொட்டகல
செ.மு.கார்மேகம்
........ - 18.01.2005
பத்திரிகை,சிறுகதை



மலையகம்
இரா சிவலிங்கம்
17.05.1932 - 09.07.1994
உரைநடை,ஆய்வு.



கொழும்பு
எச்.எம்.பி.மொஹிதீன்
31.03.1932 - ....
உரைநடை,விமர்சனம்,
பத்திரிகை.



திருநெல்வேலி
'கலாகேசரி'
ஆ.தம்பித்துரை
05.05.1932 - 1994செப்டெம்பர்
உரைநடை,ஓவியம்.



உடுவில்
'சானா'
சண்முகநாதன்
11.01.1913 - 1979
நாடகம்,சிறுகதை.



...............
எஸ்.எம்.கமால்தீன்
............
உரைநடை,விமர்சனம்.



கரவெட்டி
'சிரித்திரன்'
எஸ்.சிவஞானசுந்தரம்
1924 - 1996
பத்திரிகை,ஓவியம்.



இணுவில்
'மகாவித்துவான்'
ந.வீரமணிஐயர்
06.08.1931 - 07.10.2003
கவிதை,உரைநடை,
நாட்டியநாடகம்.



இணுவில்
'கலாசூரி'
ஆர். சிவகுருநாதன்
07.10.1931 - 2003
பத்திரிகை,உரைநடை.



மட்டக்களப்பு
எஸ்.டி.சிவநாயகம்
02.07.1921 - 25.04.2000
பத்திரிகை,சிறுகதை.



மன்னார்
நாவண்ணன்
(ம.ஞசநாயகம்)
15.03.1947 - 15.04.2006
கவிதை,சிறுகதை,நாவல்.

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



யாழ்ப்பாணம்
வித்துவான்
ந. சுப்பையாப்பிள்ளை
(பிறப்பு : தமிழ்நாடு)
22.01.1900 - 22.01.1978
கவிதை,உரைநடை,ஆய்வு.



வேலணை
புலவர் பொ. ஜெகநாதன்
10.08.1908 - 29.05.1994
கவிதை,உரைநடை,ஆய்வு.



சாவகச்சேரி
மா.பீதாம்பரம்
(பிறப்பு : திருகோணமலை)
09.11.1898 - 05.04.1972
உரைநடை,கவிதை,பதிப்பு.



பொன்னாலை
வித்துவான்
பொன்.முத்துக்குமாரன்
05.05.1920 - 11.12.1989
கவிதை,உரைநடை,பதிப்பு.



யாழ்ப்பாணம் - கொக்குவில்
திருமதி அமிர்தாம்பிகை
சதாசிவம்
...............
உரைநடை.



கொழும்பு
திருமதி மகேஸ்வரி மகாதேவா
.........
உரைநடை,மொழிபெயர்ப்பு



திருகோணமலை
பண்டிதர்
இ.வடிவேல்
09.12.1919 - 2004
கவிதை,உரைநடை.




மாவிட்டபுரம்
பண்டிதர்,கலாநிதி
க.சச்சிதானந்தன்
19.10.1921 - 21.03.2008
கவிதை,உரைநடை,ஆய்வு,
மொழிபெயர்ப்பு,சிறுகதை,நாவல்



மானிப்பாய் - சுதுமலை
பேராசிரியர் ஆ.வி.மயில்வாகனம்
16.11.1906 - 1987ஏப்ரல்
உரைநடை,ஆய்வு,மொழிபெயர்ப்பு.



மானிப்பாய்
பேராசிரியர் அ.சின்னத்தம்பி
1911செப்டெம்பர் - 01.03.1986
உரைநடை,மொழிபெயர்ப்பு.



உடுவில்
ப.சிவானந்தையர்
1915 - 1983
உரைநடை,கவிதை,பதிப்பு



பலாலி
கி.லக்ஷ்மணஐயர்
05.05.1918 - 13.04.1990
உரைநடை,ஆய்வு.



கோப்பாய்
அ.வி.மயில்வாகனம்
29.10.1912 - 19.01.2002
உரைநடை,மொழிபெயர்ப்பு,
பதிப்பு.



அளவெட்டி
சீ.விநாசித்தம்பிப்புலவர்
03.11.1923 - 11.12.2005
கவிதை,உரைநடை.



நயினாதீவு
வித்துவான்
சி.குமாரசுவாமி
26.11.1923 - 08.01.1994
கவிதை,உரைநடை.



கரவெட்டி
பண்டிதர் க.வீரகத்தி
22.10.1922 - 09.10.1996
கவிதை,உரைநடை.


நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



ஹற்றன்
ப.லிங்கதாசன்
16.06.1940 - 1998
கவிதை,சிறுகதை.



யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை
சே.சிவராஜா
28.05.1935 - 15.04.2002
சிறுகதை.



சுன்னாகம் - அம்பனை
ஐயன்னா
(ஐ.இராசரத்தினம்)
04.11.1924 - 1971



நீர்கொழும்பு
அ.முத்துலிங்கம்
.... - 1999
சிறுகதை,நாவல்.



யாழ்ப்பாணம்
துரை.சுப்பிரமணியன்
1940 - 14.07.2001
சிறுகதை,மொழிபெயர்ப்பு.



நெல்லியடி
ஐயாத்துரை நடேசன்
27.08.1954 - 31.05.2004
பத்திரிகை,உரைநடை.



யாழ்ப்பாணம்
யோ.பெனடிக்ற்பாலன்
28.05.1939 - 30.07.1997
சிறுகதை,நாவல்,மொழிபெயர்ப்பு.



யாழ்ப்பாணம் - கலட்டி
து.வைத்திலிங்கம்
19.01.1939 - 28.05.2008
சிறுகதை,நாவல்.



திக்குவெல
எம்.எச்.எம்.ஷம்ஸ்
..... - 15.07.2002
கவிதை,உரைநடை.



அல்வாய்
'சுகணா' சு.கணபதிப்பிள்ளை
24.08.1924 - 24.04.2008
கவிதை,சிறுகதை.



நெல்லியடி
நெல்லை க. பேரன்
18.12.1946 - 15.07.1991
சிறுகதை,நாவல்.



புங்குடுதீவு
நாகேசு தர்மலிங்கம்
14.04.1950 - 29.01.1996
சிறுகதை.



திருகோணமலை
சி.பற்குணம்
1944 - 01.04.1996
சிறுகதை,உரைநடை.



ஊர்காவற்றுறை - சுருவில்
ஜீவா - நாவுக்கரசன்
(கந்தசாமி)
- 1991
கவிதை,சிறுகதை.



முல்லைத்தீவு - வற்றாப்பளை
முல்லையூரான்
(முருகேசு சிவராஜா)
27.03.1955 - 21.04.2006
கவிதை,சிறுகதை.



நாயன்மார்கட்டு
சி.சிவபாலன்
1954 - 22.05.2008
சிறுகதை,கவிதை.

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய
சுவாமிகள்
1918 - 1981
கவிதை,உரைநடை,பிரசங்கம்.



நயினாதீவு
ஆ.இராமுப்பிள்ளைப்புலவர்
(கஸ்தூரி)
19ஆம்நூ.பிற்பகுதி -
20ஆம்நூ.முற்பகுதி
கவிதை.



அச்சுவேலி
ஆ.க.தம்பிமுத்துப்பாகவதர்
15.07.1898 - 30.08.1977
கவிதை,கீர்த்தனை.



வட்டுக்கோட்டை
'மக்கள் கவிமணி'
மு.இராமலிங்கம்
09.10.1908 - 01.08.1974
பதிப்பு,ஆய்வு,நாட்டுப்புறவியல்



நயினாதீவு
செல்வி சௌந்தரம்
சந்தனநங்கை கந்தப்பு
1910 - .....
உரைநடை,தமிழியல்




நீர்வேலி
திருமதி வேதவல்லி கந்தையா
19.09.1920 - 22.03.1978
உரைநடை.



காத்தான்குடி
கவிஞர் அப்துல்காதர்லெப்பை
07.09.1913 - 07.10.1984
கவிதை,மொழிபெயர்ப்பு.




கல்ஹின்னை
கவிஞர் எம்.ஸி.எம்.சுபைர்
27.08.1933 - ....
கவிதை.



ஏறாவூர்
கவிஞர் சௌகத் கமால்
1940 - 2000
கவிதை.



வேலணை - சோழாவத்தை
கவிஞர் முகிலன்
(மு.வ.மாணிக்கவாசகர்)
01.02.1942 - 02.07.1964
கவிதை.



மருதமுனை
மருதூர்க்கனி
.......
கவிதை.



ஆதவன்
(சி.பொன்னம்பலம்)
1917 - 1999
சிறுகதை,கவிதை.



புங்குடுதீவு
சு.வில்வரத்தினம்
07.08.1950 - 09.12.2006
கவிதை.



திருகோணமலை
'கலாவிநோதன்'
சித்தி அமரசிங்கம்
05.11.1937 - 22.01.2007
கவிதை,உரைநடை,பதிப்பு.



தெல்லிப்பளை - அளவெட்டி
செ.நடராசா
14.11.1923 - 19.09.2002
உரைநடை,கவிதை,
பதிப்பு,ஆய்வு,சிறுகதை.



மட்டக்களப்பு
சுபத்திரன்
(க.தங்கவடிவேல்)
16.04.1935 - 30.10.1979
கவிதை.



நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



கொழும்புத்துறை
(பிறப்பு - மாவிட்டபுரம்)
சிவத்திரு யோகர்சுவாமிகள்
(அ.யோகநாதன்,சதாசிவம்,தம்பையா)
29.05.1872 - 1964
கவிதை,உரைநடை,பதிப்பு,பத்திரிகை.



மானிப்பாய்
(பிறப்பு : அமெரிக்கா)
சாமுவேல் ∴பிஸ்க் கிறீன்
10.10.1822 - 28.05.1884
மொழிபெயர்ப்பு,மருத்துவம்.



சங்குவேலி
மு.நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை
1820 - 1889
அகராதி,தமிழியல்,கணிதவியல்.



மானிப்பாய்
ச.ஹென்டி பேரின்பநாயகம்
28.03.1899 - 11.12.1977
பதிப்பு, பத்திரிகை,உரைநடை.



அச்சுவேலி
'வீரகேசரி' சி.செல்லத்துரை
26.02.1925 - 29.04.1982
பத்திரிகை, சிறுகதை.



உரும்பிராய்
செ.தனபாலசிங்கன்
05.03.1924 - 02.04.1976
கவிதை,உரைநடை.



அராலி
செ.சி.பரமேஸ்வரன்(பரணி)
(பிரம்மஸ்ரீ செ.சி.பரமேஸ்வரசர்மா)
11.08.1939 - 14.08.2001
சிறுகதை,கவிதை,குறுநாவல்.



மலையகம்
துரை. விசுவநாதன்
28.02.1931 - 21.12.1998
பதிப்பு.



அளவெட்டி
கணேசன்
(சி.நா.கணேசபண்டிதன்)
... - ...
கவிதை.



கரவைகிழார்
கந்தவனம் கந்தசாமி
23.05.1931 - ....
கவிதை,உரைநடை.



அராலி
நகுலன்
(நா.க.தங்கரத்தினம்)
08.06.1935 - 09.04.1999
சிறுகதை,கவிதை,குறுநாவல்.



ஏழாலை
கே.எம்.வாசகர்
(கே.மாணிக்கவாசகர்)
19.10.1937 - 25.03.1985
நாடகம்.



தீவகம்
மலையகமான்
.... - ....
சிறுகதை



ஏழாலை
நாடோடி
(கே.வி.இராசரத்தினம்)
.... - ....
சிறுகதை



கல்லடி - உப்போடை
ம.லோறன்ஸ்
.... - ....
சிறுகதை.



பருத்தித்துறை
ஞானரதன்
(செ.சச்சிதானந்தசிவம்)
1940 - 18.01.2006
சிறுகதை,திரைப்படம்.

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



ஊர்காவற்றுறை - கரம்பொன்
அருட்கலாநிதி வ.தியோகுப்பிள்ளை
09.04.1917 - 25.04.2003
பதிப்பு,நாட்டுக்கூத்து,உரைநடை.



சுன்னாகம் - உடுவில்
சி.மாணிக்கத்தியாகராசபண்டிதர்
1877 - 1945
கவிதை,உரைநடை.



அல்வாய்
க.சின்னத்தம்பி உபாத்தியாயர்
1864 - 1955
கவிதை,உரைநடை.



கொக்குவில்
சி.இரகுநாதையர்
03.03.1901 - 30.07.1969
சோதிடம்,உரைநடை,கவிதை.



தமிழ்நாடு(பிறப்பு,இறப்பு)
மட்டக்களப்பு,நாவலப்பிட்டி(வாழ்வு)
பரமஹம்ஸதாசன்
(மு.சுப்புராமன்)
... - ...
கவிதை.



மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி
இராஜபாரதி
(வி.கி.இராசதுரை)
... - 1980களில்
கவிதை.



மட்டக்களப்பு
அருள்.செல்வநாயகம்
... - ...
கவிதை,சிறுகதை,நாவல்,
உரைநடை.



புங்குடுதீவு
வி.சி.சண்முகம்
20.11.1931 - 07.06.1992
நாடகம்



யாழ்ப்பாணம்-நாவாந்துறை
'கலைக்கவி'
நீ.எஸ்தாக்கி
02.06.1917 - 24.02.1984
நாட்டுக்கூத்து,நாடகம்.



கச்சாய்
கச்சாயில் இரத்தினம்
... - ...
சிறுகதை,நாவல்.



மலையகம்
பி.டி.ராஜன்
29.12.1912 - 11.06.1987
பத்திரிகை,உரைநடை.



பதுளை
'கலைஒளி'
முத்தையாபிள்ளை
மலையகத்தின் பத்திரிகை முன்னோடி.



இணுவில்
'கலைச்செல்வன்'
ஏ.சுப்பையா
1922 - 1976
இலங்கையில் பரதநாட்டியக்கலை
முன்னோடிகளில் ஒருவர்.



'கீதாஞ்சலி'
வே.க.நல்லையா
1913 - ...
இலங்கையில் பரதநாட்டியக்கலை
முன்னோடிகளில் ஒருவர்.



மாவிட்டபுரம்
'நடிகமணி' வி.வி.வைரமுத்து
1924.02.11 - 09.07.1989
இசைநாடகக்கலை
முன்னோடிகளில் ஒருவர்.



வல்வெட்டித்துறை
டாக்டர் இரா.சிவஅன்பு
04.07.1939 - 2004
கதாப்பிரசங்கக்கலை
முன்னோடிகளில் ஒருவர்



நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு

# இலங்கை மலையகத்தின் சமகாலத் தமிழ் ஆக்கவிலக்கியப் படைப்பாளிகள்


தெளிவத்தை
ஜோசப்


சக்தி.அ.பாலையா


க.ப.சிவம்


சிவபாக்கியம்
குமாரவேல்


ப.ஆப்டீன்


தேவமணி
ர.்.பேல்


அந்தனி
ஜீவா


மு.கு.ஈழக்குமார்


மல்லிகை
சி.குமார்


மலரன்பன்


மு.சிவலிங்கம்


பண்ணாமத்துக்
கவிராயர் (ரஸாக்)


அல் அஸூமத்


கே.கோவிந்தராஜ்


நயீமா சித்திக்


கோகிலம் சுப்பையா

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



அ.இராமன்



ரூபராணி ஜோசப்



எம்.வாமதேவன்



சி.பன்னீர்ச்செல்வம்



மாத்தளை
கார்த்திகேசு



சாரல் நாடன்



மொழிவரதன்



மாத்தளை
பெ.வடிவேல்



எஸ்.எம்.ஹனிபா



தி.ஞானசேகரன்



மாத்தளை சோமு



பரிபூரணன்



பாலா.சங்குப்பிள்ளை



புன்னியாமீன்



மாரிமுத்து சிவகுமார்



குறிஞ்சி இளந்தென்றல்


நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு

# தென்னிந்தியாவில் தமிழிசை வளர்ச்சிக்குப் பணியாற்றிய முன்னோடிகள்



முத்துத்தாண்டவர்



அருட்ஜோதி
இராமலிங்கவள்ளலார்



மாயூரம்
வேதநாயகம்பிள்ளை



டி.இலக்குமணப்பிள்ளை



தவத்திரு
சங்கரதாஸ்சுவாமிகள்




தஞ்சை
வடிவேலு



தஞ்சை
பொன்னையா



சிதம்பரம்
அண்ணாமலைச்
செட்டியார்



டாக்டர்
இராஜா
சர்.மு.அ.முத்தையா
செட்டியார்



டாக்டர்
ரா.சு.சண்முகம்
செட்டியார்



கோடீஸ்வரஐயர்



காயசிகாமணி
முத்தையாபாகவதர்



மகாகவி
சுப்பிரமணியபாரதியார்



மகாவைத்தியநாத
ஐயர்



கவிமணி
தேசிகவிநாயகம்
பிள்ளை



தஞ்சை
க.பொன்னையாபிள்ளை



சுவாமி
விபுலாநந்தஅடிகள்



ஆபிரகாம் பண்டிதர்



சுந்தர
ஓதுவாமூர்த்தி



மன்னார்குடி
இராசகோபால்பிள்ளை

*நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு*


சி.வி.சிடி.வி.
வெங்கடாசலம்
செட்டியார்


கவியோகி
சுத்தானந்த பாரதியார்


நடனமேதை கே.என்.
தண்டாயுதபாணிப்பிள்ளை


வி.பழனிச்சாமி
நாயுடு


நாவலர்
சோமசுந்தர பாரதியார்


கவிஞர்
மீ.ப.சோமு


தமிழறிஞர்
திரு.வி.கலியாணசுந்தரனார்


பண்டிதமணி
மு.கதிரேசஞ்
செட்டியார்


கவிஞர்
உளுந்தூர்ப்பேட்டை
சண்முகம்


நாமக்கல் கவிஞர்
வெ.இராமலிங்கம்
பிள்ளை


ஏ.தாமோதர
முதலியார்


கல்கி
சதாசிவம்


டாக்டர்
எஸ்.தருமாம்பாள்


டாக்டர்
ரா.பி.சேதுப்பிள்ளை


சரவணபவானந்தர்


கீவளுர்
மீனாட்சிசுந்தரம்பிள்ளை


கல்கி
ரா. கிருஷ்ணமூர்த்தி


ம.ப.
பெரியசாமித்தூரன்


நாடகமேதை
பம்பல்
சம்பந்தமுதலியார்


ரசிகமணி
டி.கே.சிதம்பரநாத
முதலியார்


நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



கவிஞர்
கு.சா.கிருஷ்ணமூர்த்தி



அறிஞர்
தெ.பொ.மீனாட்சி
சுந்தரனார்



கவிஞர்
புத்தனேரி
ரா.சுப்பிரமணியம்



டாக்டர்
மு.வரதராசனார்



பாவேந்தர்
பாரதிதாசன்



மதுரை
மாரியப்பசுவாமிகள்



திருமுருக
கிருபானந்தவாரியார்




சிலம்புச்செல்வர்
ம.பொ.சிவஞான
கிராமணியார்



திருவிடை மருதூர்
வீருசாமிப்பிள்ளை



பேராசிரியர்
சாம்பமூர்த்தி ஐயர்



முசிறி
சுப்பிரமணியஐயர்



மதுரை
மணிஐயர்



இசையரசு
எம்.எம்.
தண்டபாணிதேசிகர்



கும்பகோணம்
இராஜமாணிக்கம்
பிள்ளை



நடனமேதை
வழுவூர்
இராமையாப்பிள்ளை



அரியக்குடி
இராமநுசஐயங்கார்



கக்காயி
நடராஜசுந்தரம்



காருக்குறிச்சி
அருணாசலம்



திருவாவடுதுறை
இராசரத்தினம்பிள்ளை



மதுரை
பொன்னுச்சாமிப்
பிள்ளை

*நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு*


ஏ.கே.சி.நடராஜன்
(கிளாரினட்)


திருவீழிமிழலை
சகோதரர்கள்
(நாதஸ்வரம்)


நாமகிரிப்பேட்டை
கிருஷ்ணர்
(நாதஸ்வரம்)


குளிக்கரை
பிள்ளையப்பா
(நாதஸ்வரம்)


திருவெண்காடு
சுப்பிரமணியம்
(நாதஸ்வரம்)


சேக் சின்னமௌலானா
(நாதஸ்வரம்)


வைஜந்திமாலா
(பரதம்)


எம்பார்
விஜயராகவாச்சாரியார்
(கதை)


பத்மிகி, பத்மா
(பரதம்)


சரஸ்வதிபாய்
(கதை)


நாட்டியமேதை
பாலசரஸ்வதி


பந்தணைநல்லூர்
ஜெயலட்சுமி


என்.ரமணி
(புல்லாங்குழல்)


என்.எஸ்.சீனிவாசன்
(புல்லாங்குழல்)


டி.விசுவநாதன்
(புல்லாங்குழல்)


டி.ஆர்.மகாலிங்கம்
(புல்லாங்குழல்)


கே.ஆர்.கணபதி
(புல்லாங்குழல்)


பந்தணைநல்லூர்
சொக்கலிங்கம்பிள்ளை
(நடனம்)


தஞ்சை
க.பொ.
கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை
(நடனம்)


வழுவூர் ஆர்.
சாமராஜ்


நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு


வீணை தனம்மாள்


வீணை
எஸ்.பாலச்சந்தர்


வீணை
சிட்டிபாபு


வீணை
ஜி.என்.தண்டபாணி


வீணை
காரைக்குடி
சாம்பசிவஐயர்


வீணை
மதுரை
சண்முகவடிவு


பந்தணைநல்லூர்
முத்தையாப்பிள்ளை



சேலம்
ஜெயலட்சுமி
(பாட்டு)


வீணை
சி.ஆர்.சாரதா


வீணை
தஞ்சை
க.பொ.சிவானந்தம்


குத்தாலம்
குப்புசாமிப்பிள்ளை


பழநி
முத்தையாபிள்ளை
(மிருதங்கம்)


புதுக்கோட்டை
தட்சணாமூர்த்திப்பிள்ளை
(மிருதங்கம்)


பழநி
சுப்பிரமணியபிள்ளை
(மிருதங்கம்)


வயலின்
திருக்கோடிக்காவல்
கிருஷ்ணய்யர்


மைசூர்
டி.சௌடையா
(வயலின்)


மிருதங்கம்
நாராயணசாமியப்பா


அய்யலூர்
கிருஷ்ணர்
(பாட்டு)


டி.கே.கோவிந்தராவ்
(பாட்டு)


பி.இராஜம்ஐயர்
(பாட்டு)

நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு



மணக்கால் ரங்கராஜன் (பாட்டு)



கே.வி.நாராயணசாமி (பாட்டு)



எம்.கே.கோவிந்தராஜ பாகவதர்



திருவாரூர் நமசிவாயம் (பாட்டு)



டி.எம்.தியாகராஜன் (பாட்டு)



மதுரை கிருஷ்ணன் (பாட்டு)



எம்.எஸ்.சுப்புலட்சுமி (பாட்டு)



எம்.எல்.வசந்தகுமாரி (பாட்டு)



டி.கே.பட்டம்மாள் (பாட்டு)




பிருந்தா,முக்தா (பாட்டு)



பாப்பா வெங்கட்ராமையர் (வயலின்)



லால்குடி ஜெயராமன் (வயலின்)



ஆர்.கே. வெங்கடராமசாஸ்திரி (வயலின்)



மாயவரம் கோவிந்தராஜபிள்ளை (வயலின்)



டி.என்.கிருஷ்ணன் (வயலின்)



நாடகக்காவலர் ஔவை டி.கே.சண்முகம்



கே.பி.சுந்தராம்பாள் (பாட்டு)



சி.என்.வசந்தகோகிலம் (பாட்டு)



டி.வி.ரெத்தினம் (பாட்டு)




ஏ.பி.கோமளா (பாட்டு)



நிழற்படத்தொகுப்பு : கலாநிதி செ.திருநாவுக்கரசு


மறைமலையடிகள்


மூதறிஞர்
ராஜாஜி


அறிஞர்
சி.என்.அண்ணாத்துரை


கலைஞர்
மு.கருணாநிதி


மக்கள் திலகம்
எம்.ஜி.ராமச்சந்திரன்


ஏழிசைமன்னர்
தியாகராஜபாகவதர்


இசைச்சித்தர்
சி.எஸ்.ஜெயராமன்


டி.ஆர்.மகாலிங்கம்


சீர்காழி
எஸ்.கோவிந்தராஜன்


குன்னக்குடி
வைத்தியநாதன்


சூலமங்கலம் சகோதரிகள்
(ராஜலட்சுமி, ஜெயலட்சுமி)


நாட்டியமேதை
கமலா லக்ஷ்மணன்


ஆலத்தூர் சகோதரர்கள்


கலைவாணர்
என்.எஸ்.கிருஷ்ணன்,மதுரம்


இசையறிஞர்
பாவநாசம்சிவன்


பகுத்தறிவுப்பாவலர்
உடுமலை நாராயணகவி


டி.கே.
சுந்தரவாத்தியார்



பேராசிரியர்
லெ.ப.கரு.இராமநாதன்
செட்டியார்



பேராசிரியர்
அன்பு கணபதி



பேராசிரியர்
சி.பாலசுப்ரமணியம்



திரு.
டி.செங்கல்வராய
பிள்ளை



திரு.
டி.பி.மாணிக்கவாசகம்
பிள்ளை



கவிஞர்
கண்ணதாசன்



கவிஞர்
எஸ்.டி.சுந்தரம்



கவிஞர்
சுரபி



கவிஞர்
கா.மு.ஷெரீப்



கவிஞர்
பட்டுக்கோட்டை
கல்யாணசுந்தரம்



கவிஞர்
முகவை
ராஜமாணிக்கம்



கவிஞர்
ச.து.சு.யோகியார்



கவிஞர்
கொத்தமங்கலம் சுப்பு



கவிஞர்
தமிழொளி



கவிஞர்
சுரதா



கவிஞர்
திருச்சி
தியாகராஜன்



கவிஞர்
கு.மா.பாலசுப்பிரமணியம்



கவிஞர்
முடியரசன்



கவிஞர்
பூவை
செங்குட்டுவன்



கவிஞர்
புலமைப்பித்தன்



நிழற்படத்தொகுப்பு : கலைநிதி செ.திருநாவுக்கரசு

# நிழற்படம் பெற இயலாத இலங்கைத் தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள் பட்டியல்

1. சுன்னாகம் முத்துக்குமார கவிராயர் (1780 – 1851)
2. உடுப்பிட்டி அ.சிவசம்புப்புலவர் (1852 – 1910)
3. சுன்னாகம் முருகேசபண்டிதர் (1830 – 1900)
4. வறுத்தலைவிளான் க.மயில்வாகனப்புலவர் (1875 – 1918)
5. அந்தகப்புலவர் புத்தளம் நா.செய்குஅலாவுதீன் (1890 – 1938)
6. நட்டுவச் சுப்பையனாா (19ஆம் நூற்றாண்டு)
7. யாழ்ப்பாணம் அப்துல்லாப்புலவர்
8. யாழ்ப்பாணம் சு.அசனாலெப்பைப்புலவர் (1870 – 1918)
9. நாவலப்பிட்டி அருள்வாக்கி அப்துல் ரகுமான் (1848 – 1920)
10. யாழ்ப்பாணம் சுலைமான் லெப்பைப்புலவர்
11. நீர்வேலி கு.சிற்சபேசன் (1887 – 1959)
12. வடகோவை சு.சபாபதி நாவலர் (1843 – 1903)
13. ஊரெழு சு.சரவணமுத்துப்பிள்ளை (1848 – 1916)
14. ஆ.அம்பலவாண நாவலர் (1855 – 1932)
15. கொக்குவில் ச.சபாரத்தின முதலியார் (1858 – 1922)
16. வேலணை கோ.பேரம்பலப்புலவர் (1859 – 1935)
17. அச்சுவேலி அ.வேன்மயில்வாகனப்புலவர் (1865 – 1912)
18. பன்னாலை வித்துவான் ச.சிவானந்தையர் (1873 – 1916)
19. வண்ணார்பண்ணை நெ.வை.செல்லையா (1878 – 1940)
20. புலோலியூர் பொ.வைத்திலிங்க தேசிகர் (1878 – 1947)
21. முத்துக்குமார ஆச்சார்ய சுவாமிகள் (1883 – 1957)
22. தம்பிலுவில் உ.வில்லியம்பிள்ளை (1891 – 1961)
23. யாழ்ப்பாணம் கவிஞர் எம்.எம்.சுலைமான் லெப்பை (1901 – 1958)
24. நல்லூர் அப்புக்குட்டி ஐயர்
25. புலோலி வ.கணபதிப்பிள்ளை (1845 – 1895)
26. யாழ்ப்பாணம் கணேசபண்டிதர் (1843 – 1881)
27. உடுப்பிட்டி கு.கதிரைவேற்பிள்ளை (1829 – 1904)
28. யாழ்ப்பாணம் குமாரகுலசிங்க முதலியார் (1826 – 1884)
29. கூழங்கைத் தம்பிரான் (1699 – 1795)
30. அச்சுவேலி ச.தம்பிமுத்துப்புலவர் (1857 – 1937)
31. வடகோவை வி.வேலுப்பிள்ளைப்புலவர் (1860 – 1945)
32. கரணவாய் தி.செவ்வந்திநாததேசிகர் (1907 – 1937)
33. அராலி ந.விசுவநாத சாஸ்திரி
34. மாதகல் சு.ஏரம்பையர்
35. வட்டுக்கோட்டை இ.நாகேசுஐயர்
36. நல்லூர் சரவணமுத்துப்புலவர் ( – 1845)
37. மாதகல் மயில்வாகனப்புலவர் (1779 – 1816)
38. யாழ்ப்பாணம் ப.ஃ.துறுத்தீன் புலவர்
39. அராலி முத்துக்குமாருப்புலவர் ( – 1827)
40. சாவகச்சேரி ச.பொன்னம்பலபிள்ளை (1852 – 1918)
41. கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதர் (1864 – 1927)
42. வதிரி சி.தாமோதரம்பிள்ளை (1863 – 1921)
43. புலோலி வ.குமாரசாமிப்புலவர் ( – 1926)
44. நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதர் ( – 1914)
45. சிறுப்பிட்டி சி.வை.சின்னப்பிள்ளை
46. வதிரி சி.நாகலிங்கம்பிள்ளை (1882 – 1952)
47. திருகோணமலை தி.த.சரவணமுத்துப்பிள்ளை (1865 – 1902)
48. மாதகல் வ.கூசைப்பிள்ளை (1877 – 1955)
49. மண்டூர் செ.வினாசித்தம்பி (1887 – 1930)
50. வெலிகம அகமது நெய்னா (டப்பி) ஆலிம்புலவர் (1882 – 1957)
51. நல்லூர் வை.ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் (1829 – 1894)
52. மல்லாகம் ஹெலக் விசுவநாதபிள்ளை (1825 – 1888)
53. ஜி.பி.சவுந்தரநாயகம் (1840 – 1883)
54. மட்டக்களப்பு மொட்டை வேலாப்போடியார் (1805 – 1880)
55. தம்பிலுவில் பண்டிதர் குஞ்சித்தம்பி

| | | |
|---|---|---|
| 56. | மருதமுனை செ.சின்ன ஆலிம் அப்பா | |
| 57. | அக்கரைப்பற்று மீ.சேகுமதாறு சாகிப்புலவர் | |
| 58. | அக்கரைப்பற்று சே.முகம்மது றாபிப்புலவர் | |
| 59. | அட்டாளைச்சேனை அப்துல் றகுமான் ஆலிம்புலவர் | ( – 1850) |
| 60. | அக்கரைப்பற்று மு.ஹாஷீம் ஆலிம் புலவர் | (1887 – ) |
| 61. | கற்கோவளம் (மட்டக்களப்பு) வேதநாயகம் போதகர் | (1865 – ) |
| 62. | கோட்டைமுனை வே.மூத்ததம்பி (வேடப்பிள்ளை) | (1836 – 1906) |
| 63. | "பொலியவிதானை" கோட்டைக்கல்லாறு கார்த்திகேசு | |
| 64. | தாமரைக்கேணி வ.சண்முகச் சட்டம்பியார் | (1831 – 1885) |
| 65. | நீர்வேலி சி.சங்கரபண்டிதர் | (1821 – 1871) |
| 66. | வயாவிளான் பிராஞ்சிசுப்பிள்ளை | ( – 1802) |
| 67. | அச்சுவேலி க.நமச்சிவாயப்புலவர் | (1749 – ) |
| 68. | வட்டுக்கோட்டை முத்துக்குமாரர் | ( – 1779) |
| 69. | இனுவில் சி.சின்னத்தம்பிப்புலவர் | (1760) |
| 70. | நல்லூர் வி.சின்னத்தம்பிப்புலவர் | (1716 – 1780) |
| 71. | வட்டுக்கோட்டை பா.கணபதிஐயர் | (1709 – 1784) |
| 72. | மாவிட்டபுரம் சின்னக்குட்டிப்புலவர் | ( – 1815) |
| 73. | இருபாலை நெ.சேனாதிராச முதலியார் | (1750 – 1840) |
| 74. | நல்லூர் நா.சந்திரசேகர பண்டிதர் | (1785) |
| 75. | மாதோட்டம் கீத்தாம்பிள்ளை | (1798) |
| 76. | திருகோணமலை சு.ஆறுமுகம் | (1806) |
| 77. | நீர்வேலி ச.பீதாம்பரப்புலவர் | (1819) |
| 78. | மானிப்பாய் அ.சுவாமிநாதர் | (1765 – 1824) |
| 79. | நல்லூர் ப.கந்தப்பிள்ளை | (1766 – 1842) |
| 80. | அச்சுவேலி அ.வைத்திநாதச் செட்டியார் | (1753 – 1844) |
| 81. | அளவெட்டி வே.கனகசபைப்புலவர் | (1829 – 1873) |
| 82. | உடுப்பிட்டி க.குமாரசுவாமி முதலியார் | (1791 – 1874) |
| 83. | வண்ணார்பண்ணை சி.விநாயகமூர்த்திச் செட்டியார் | ( – 1876) |
| 84. | உடுப்பிட்டி தா. சின்னத்தம்பி | (1830 – 1878) |
| 85. | நல்லூர் க.பரமானந்தப்புலவர் | |
| 86. | உடுவில் சந்திரசேகர பண்டிதர் (நதானியல்) | (1800 – 1879) |
| 87. | மாவிட்டபுரம் பொன்னம்பலப்பிள்ளை | ( – 1891) |
| 88. | புங்குடுதீவு ப.இராமலிங்கச் சட்டம்பியார் | (1870) |
| 89. | வண்ணை ந.சதாசிவபண்டிதர் | (1887) |
| 90. | சுழிபுரம் திருஞானசம்பந்த உபாத்தியாயர் | (1839 – 1906) |
| 91. | நல்லூர் தி.கயிலாசபிள்ளை | (1857 – 1916) |
| 92. | எருக்கலம்பிட்டி பக்கீர்ப்புலவர் | (1862 – 1917) |
| 93. | வேலணை க.இராமலிங்கம்பிள்ளை | (1868 – 1918) |
| 94. | கொக்குவில் க.கணபதிப்பிள்ளைச் சட்டம்பியார் | (1860 – 1930) |
| 95. | அல்வாய் வே.கணபதிப்பிள்ளை | ( – 1930) |
| 96. | தாவடி சோமாஸ்கந்த பண்டிதர் | ( – 1936) |
| 97. | புலோலி ம.முத்துக்குமாரசாமிக் குருக்கள் | (1853 – 1936) |
| 98. | மல்லாகம் இ.நமச்சிவாயப்புலவர் | (1860 – 1942) |
| 99. | நயினாதீவு ப.கு.சரவணபவன் | (1909 – 1949) |
| 100. | உடுப்பிட்டி சு.ஆறுமுக உபாத்தியாயர் | (1857 – 1955) |
| 101. | கா.அப்பாச்சாமிஐயர் | |
| 102. | நவாலி மு.அப்பாத்துரைப்பிள்ளை | |
| 103. | வட்டுக்கோட்டை நா.சுவாமிசங்கர சுப்பிரமணிய சச்சிதானந்த ராசயோகி | (1864 – 1944) |
| 104. | வட்டுக்கோட்டை க.சிதம்பரநாதன் | (1890 – 1932) |
| 105. | கொக்குவில் சி.சிலம்புநாதபிள்ளை | |
| 106. | வட்டுக்கோட்டை நா.சிவசுப்பிரமணிய சிவாசாரியார் | |
| 107. | புலோலி தா.தியாகராசா | |
| 108. | வண்ணை க.வயித்திலிங்கம்பிள்ளை | |
| 109. | நாவலாசிரியர் இடைக்காடர் | |
| 110. | தெல்லிப்பளை மங்களநாயகம் தம்பையா | |
| 111. | மண்டைதீவு பொன்.குமாரவேற்பிள்ளை | (1908 – 1961) |

# இவர்கள் நன்றிக்குரியவர்கள்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 2007-2008ஆம் ஆண்டுக்குரிய சிறப்பு வெளியீடான "கலைமலர்" சஞ்சிகையின் வெளிவருகைக்குப் பலர் உளப்பூர்வமாக உதவிபுரிந்துள்ளனர்.

இச்சஞ்சிகை மணம் கமழ்வதற்கு ஆசிச்செய்திகளை வழங்கி ஊக்கப்படுத்தியவர்கள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணக் கத்தோலிக்க ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள், ஆசிரிய கலாசாலைகளின் ஆணையாளரும் கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளருமான உயர்திரு. கே.முஹமட்தம்பி ஆகியோர்.

'கலைமல'ரின் உருவாக்கம் சிறப்புற வாழ்த்துரைகளை வழங்கியுதவியவர்கள் யாழ்ப்பாண மாவட்ட அரசஅதிபர் உயர்திரு. கே.கணேஷ், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. வே.செல்வரத்தினம், யாழ்ப்பாணக் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர்.

"கலைமலர்" சிறப்பாக மலர்வதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி உறுதுணையாயிருந்து செயற்பட்டதுடன், வாழ்த்துரையையும் வழங்கியவர் எமது கலாசாலை முதல்வர் திரு. ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்.

'கலைமல'ரானது எல்லாவிதங்களிலும் சிறப்புற அமைவதற்குப் பொருத்தமான ஆற்றுப்படுத்தல்களை மேற்கொண்டு, சகலவிதமான ஒழுங்குகளையும் மேற்பார்வை செய்ததுடன், அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோரது நிழற்படங்களை தேடித் தொகுத்தளிக்கும் முழுப்பொறுப்பையும் ஏற்றுப் பாரிய பங்களிப்பை நல்கியவர் 'கலைமலர்'க் குழுவின் காப்பாளரும், முதுநிலை விரிவுரையாளருமாகிய கலாநிதி, பண்டிதர், செல்லையா திருநாவுக்கரசு அவர்கள்.

இம்மலரை மெருகூட்டும் விதத்தில் ஆலோசனைகளையும், பொருள் நிறைந்த ஆக்கங்களையும் தந்துதவியவர்கள் துணைமுதல்வர் மற்றும் விரிவுரையாளர்கள்.

மலரின் தரத்தினை அதிகரிக்கும் வண்ணம் தமது ஆக்கபூர்வமான எழுத்துக்களால் அழகுசெய்தவர்கள் யா/ திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை அதிபர் சகோதரி நெவிஸ் லடிஸ்லாஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியற்றுறை விரிவுரையாளர் திரு. க.பரந்தாமன் ஆகியோர்.

"கலைமலரில்" இடம்பெற்ற தமிழறிஞர்கள், தமிழ்ப்புலவர்கள், ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் ஆகியோரது நிழற்படங்களைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டபோது யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் பிரதம நூலகரும் உத்தியோகத்தர்களும், நல்லூர், நாச்சிமார் கோவிலடி கிளைநூலகங்களின் பொறுப்பாளர்களும் உத்தியோகத்தர்களும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நூலகர், யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. க.சதாசிவம், துணைநூலகர்

ஜெ.கீ.ஜெயசீலன் ஆகியோரும், பல தனிப்பட்டவர்களும் உதவிபுரிந்துள்ளனர். மயிலங்கூடலூர் பி.நடராஜன், கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி, இளைப்பாறிய அதிபர் செ.சதானந்தன், எழுத்தாளர் அ.ஜேசுராசா, மூதறிஞர் "சிற்பி" சரவணபவன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி மேகநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், அறிஞர் ஆ.சபாரத்தினம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள் செல்வி வி.கந்தசாமிஐயர், சங்கீதபூஷணம் செ.குமாரசுவாமி, ஆசிரியர் றஞ்சன், திரு. குணராஜா, இளைப்பாறிய யாழ்ப்பாணம் மாநகரசபை உத்தியோகத்தர் திரு. கந்தவேள், ஆசிரியர் சிவநேசன், இளைப்பாறிய அதிபர் திரு. திருஞானசம்பந்தபிள்ளை, எழுத்தாளர் மு.இராஜநாயகம், திரு. ஐ.வரதராஜன் ஆகியோர் உட்பட எமது கலாசாலை மாணவர்களும் அரியபணி ஆற்றியுள்ளனர்.

எழுத்தாளர் செங்கையாழியான் க.குணராஜா அவர்கள் தகுந்த ஆலோசனைகளைக் கூறியதுடன், தாம் சேகரித்து வைத்திருந்த ஈழத்தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களின் நிழற்பட இறுவட்டினையும்(CD) தந்து பேருதவி புரிந்துள்ளார். மூத்த எழுத்தாளர் திரு. தெளிவத்தை ஜோசப் அவர்கள் தமது சிரமத்தையும் பொருட்படுத்தாது மலையக எழுத்தாளர்கள் பற்றிய பல்வேறு விபரங்களையும் தந்துதவியுள்ளார். ஆசிரிய மாணவன் திரு. செல்வச்சந்திரன் அவர்கள் இத்தொகுப்பில் இடம்பெறும் நிழற்படங்களின் ஒரு பகுதியினை இறுவட்டில் (CD) பதிவுசெய்து தந்துள்ளார்.


"கலைமலர்" நிறைவுடையதாக அமைவதற்குத் தரமான பல்துறை ஆக்கங்களை அளித்துதவியதோடு பொருளாதார ரீதியிலான சகல பொறுப்புக்களையும் மனமுவந்து ஏற்று நிதியுதவி செய்தவர்கள் எமது கலாசாலை ஆசிரிய மாணவர்கள்.

இம்மலரை அலங்கரிக்கும் நிழற்படங்களை எடுத்து உதவியர்கள் யாழ்ப்பாணம் பஸ்தியான் சந்தி, கண்டிவீதி, பிறிலியன் புகைப்பட நிறுவனத்தினர்.

சமகால இக்கட்டான சூழ்நிலையிலும் மனமுவந்து விளம்பரங்களைத் தந்துதவியர்கள் யாழ்ப்பாண மாவட்ட அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்.

குறுகிய காலத்தினுள் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் இச்சஞ்சிகை சிறப்பான முறையில் வெளிவருவதற்கு அழகாகக் கணினி வடிவமைப்புச் செய்து அச்சிட்டு உதவியவர்கள் யாழ்ப்பாணம், நல்லூர், 676, பருத்தித்துறைவீதி என்னும் முகவரியில் இயங்கும் பிள்ளையார் நேரச்சுப் பதிப்பக உரிமையாளரும் ஊழியர்களும்.

இவர்கள் அனைவருக்கும் எமது ஆசிரிய கலாசாலையின் "கலைமலர்க்குழு" உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது.


கல்வியே கருந்தனம்




யாழ்ப்பாணம் பொதுசன நூலகம்



பிள்ளையார் நேரச்சப் பதிப்பகம், நல்லூர்.